# நம்பினோர் கெடுவதி[illegible]

## (THE VICAR OF WAKEFIELD)

O111,3LGH,V
N48
111677

# நம்பினோர் கெடுவதில்லை

## (THE VICAR OF WAKEFIELD)


*ஆசிரியர் :*

ஆலிவர் கோல்டுஸ்மித்

●

*மொழிபெயர்த்தவர் :*

ஏ. வி. நடேசய்யர்



உரிமையாளர் :

**அகிலம் வெளியீடு**

"அகிலம் அகம்" ஸ்ரீநிவாச நகர்,

திருவானைக்காவல் : *திருச்சிராப்பள்ளி ஜில்லா*

முதல் பதிப்பு அக்டோபர் 1948 (விஜயதசமி)

சகல உரிமைகளும்
மொழிபெயர்த்தவரைச் சேர்ந்தது

O111,3 L61 N, 1
N48

ரூபாய் மூன்றரை
(தபால் செலவு தனி)

**சென்னை சக்தி காரியாலய வெளியீடு**

ARCHIVES LIBRARY
111677

சென்னை சக்தி பிரஸ் லிமிடெட் சாந்தி பிரஸில்
அச்சிடப்பெற்றது

## பதிப்புரை

பல துறைகளில் முயற்சிகள் செய்தால் தான் தமிழ் மொழி வளம் பெறும். பிற நாட்டு நல்லறிஞரின் நூல்களைத் தமிழாக்குவதும் அம்மாதிரி முயற்சிகளில் ஒன்று என்பது நாம் அறிந்ததே. இந்த அரிய நூல் பேரறிஞர் பலரால் பாராட்டப் பெற்றது. ஆதலால்தான் இதைத் தமிழில் மொழி பெயர்த்து வெளியிட்டிருக்கிறோம்.

**பதிப்பாளர்.**

# முகவுரை

விகார் ஆப் வேக்பீல்டு என்னும் கதையை ஆங்கிலத்தில் எழுதியவர் ஆலிவர் கோல்டுஸ்மித். அவர் 1728-ம் வருஷம் நவம்பர் மாதத்தில் அயர்லாந்தில் பிறந்தார். அவர் பதினேழாவது வயதில் டிப்ளின் டிரினிட் கலாசாலைக்கு மேற் படிப்புக்கு அனுப்பப்பட்டார். அங்கே அவர் பி. ஏ. பட்டம் பெற்று எடின்பர்க் சர்வகலாசாலையில் வைத்தியப் பரிக்ஷைக்குப் படித்தார். அங்கிருந்து ஹாலந்தில் இருந்த லைடன் என்னும் சர்வகலாசாலையில் வைத்தியப் படிப்பு தொடர்ந்து படித்துப் பட்டம் பெறுமல் ஐரோப்பா தேசத்திலுள்ள பிளாண்டர், பிரான்ஸ், ஸ்விட்சர்லாந்து, இத்தாலியா தேசங்களில் கால் நடையாய்த் திரிந்து புல்லாங்குழல் வாசித்துக்கொண்டு அங்கங்கேகாலக்ஷேபம்செய்துகொண்டு 1756-ம் வருஷம் திரும்பி இங்கிலாந்து வந்து சேர்ந்தார். அங்கே ஒரு பள்ளிக்கூடத்தில் உதவி உபாத்தியாயராக கொஞ்சநாளிருந்துவிட்டு பிறகு ஆசிரியாக எழுதிச் சம்பாதிக்க ஆரம்பித்தார். அவர் ஜனங்கள் அவாவுடன் வாசிக்கக்கூடிய அநேக வியாசங்கள், கதைகள், நாடகங்கள் எழுதினர். அதில் முக்கியமானவை **விகார் ஆப் வேக் பீல்டு**. இது 1764-ம் வருஷம் எழுதப்பட்டது. இது வெளி வந்ததும் அவருடைய புகழ் பாவிற்று. இந்தப் புஸ்தகம் அன்று தொட்டு இன்று வரையிலும் ஆங்கில பாஷையில் விசேஷமாக வாசிக்கப்பட்ட புஸ்தகங்களில் ஒன்று. இது இங்கிலீஷ் பாஷை உள்ளவரையில் இப்படி வெகுமானிக்கப்பட்டு வருமென்று ஆங்கில நூலாசிரியர்கள் கருதினர்கள். அவர் 1774-ம் வருஷம் காலஞ் சென்றார்.

இந்தப் புஸ்தகம், இந்தியாவில் ஆங்கிலம் படிக்கும் மாணவர்களில் வாசிக்காதவர்கள் கிடையாது. ஆயிரம்தரம் வாசித்தாலும் இன்னொருதரம் வாசிக்கலாமென்று அவாக் கொடுத்துக்கொண்டு வந்திருக்கிறது.



டாக்டர் ப்ரிம்ரோஸும் அவர் மனைவியும்

## முதல் அத்தியாயம்

*வேக்பீல்டு குடும்பத்தைப் பற்றிய விபரங்கள். அந்தக் குடும்பத்தினரின் தோற்றங்களிலும் ஒற்றுமைகளிலும் ஓர் ஒருமைப்பாடு இழையோடி இருக்கிறது.*

ஒரு எளிய மனிதன், மணம் செய்து கொண்டு ஒரு பெரிய குடும்பத்தை நடத்துகிறான். மற்றொருவன், ஏகாங்கியாய் இருந்து கொண்டு எப்பொழுதும் ஜனத்தொகையின் அதிகரிப்பைப்பற்றி மட்டும் பேசிக்கொண்டிருக்கிறான். இதில் முன் சொல்லப்பட்டவன் தன் தேசத்திற்கு அதிகமாக தொண்டுபுரிகிறானென்பது என்னுடைய மாறாத கொள்கை. இவ்வெண்ணத்தினால்தான் நான் புரோகித தீக்ஷையைப் பெற்றுக்கொண்டு ஒரு வருஷம் முடிந்தவுடனே, என்னுடைய விவாகத்தைப்பற்றி சிரத்தையுடன் யோசித்தேன். ஒரு மனைவியைப் பின் கூறப்படும் காரணங்களுக்காகத் தேர்ந்தெடுத்தேன். அவள் தன்னுடைய விவாக முகூர்த்த கௌனை (பாவாடை) தயாரித்ததில், அது நன்றாக உழைக்க வேண்டுமென்பதில் தான் இஷ்டம் வைத்தாளேயன்றி, அது மிருதுவாயும், பளப்பளப்பாயும் இருக்க வேண்டுமென்று நினைக்கவில்லை. அவள் அடக்கமும், விசேஷ மனப்பான்மையும் உள்ளவள். வளர்ப்பிலேவென்றால், அவளைவிட மேன்மையுள்ள நாட்டுப்புறத்துச் சீமாட்டிகள் இருக்க முடியாது. அவள் எந்த இங்கிலீஷ் புஸ்தகத்தையும் அதிகமாக எழுத்துக் கூட்டாமல் வாசித்தாள். ஆனால் ஊறுகாய், வத்தல், சமையல் இவைகள் தயாரிப்பதில் அவளுக்குப் பின்புதான் மற்றவர்கள்.

அவள் குடும்ப பரிபாலனத்தில், தான் ஈடில்லாத சாமர்த்தியமுடையவள் என்று, தன்னைத்தானே புகழ்ந்து கொள்ளுவாள். ஆனால், அவளுடைய சாமர்த்தியங்களினால்,

ங்களுடைய பொருள் அதிகமாக மீந்ததாக என்றைக்கும் நான் கண்டதில்லை.

எது எப்படியிருந்தபோதிலும், நாங்கள் ஒருவரையொருவர் பற்றுதலுடன் நேசித்து வந்தோம்.

வயது போகப்போக எங்களுடைய அன்பும் அதிகரித்தது. உண்மையில், எவ்வித காரணத்தினாலும் மற்றவர்களுடனோ, அல்லது நாங்களே ஒருவரோடொருவரோ கோபித்துக் கொள்ளவேண்டிய தருணம் ஏற்படவில்லை.

ஒரு ரமணீயமான நாட்டில், நன்மை பயக்கும் ஜனங்களின் சமூகத்தில், எங்களுக்கு ஒரு அழகான வீடு இருந்தது. எங்களுடைய வாழ்நாட்களும், பலவித சத்காலக்ஷேபங்களிலோ, நாட்டுப்புறத்துக் குதூகலங்களிலோ, எங்களுடைய பக்கத்திலுள்ள தனவான்களை காண்பதிலோ, அல்லது ஆதரவற்றவர்களுக்கு உதவி புரிவதிலோ கழிக்கப்பட்டன.

திடீரென்று எங்களை அச்சுறுத்தக்கூடிய நிலைகுலையச் செய்யும் மாறுதல்கள் ஒன்றையும் நாங்கள் எப்பொழுதும் எதிர்பார்க்கவேயில்லை.

எங்களால் பொறுக்கமுடியாத கஷ்டங்கள் ஒன்றுமிருந்ததில்லை. எங்களுடைய சஞ்சாரங்களெல்லாம் அடுப்பங்கரைக்கும் வெளியேயுள்ள புல் தரைக்கும் மட்டுமே. நாங்கள் மனக்கோட்டை கட்டுவதெல்லாம் வீட்டிற்குள் இருந்து கொண்டேதான். ரஸ்தாவிற்கு சமீபத்தில் நாங்கள் வசித்ததால், அடிக்கடி வழி நடையாய்ப் போகிறவர்களும், தேசாந்திரிகளும் எங்கள் வீட்டில் கூஸ்பரி மதுவைப் பானம் செய்ய வருவார்கள். ஏனென்றால், எங்களுக்கு அந்த மதுவைத் தயாரிப்பதில் அதிகக் கீர்த்தி உண்டு. அவர்களில் ஒருவராவது, அந்த மதுவில் குற்றங் கண்டு பிடிக்கவில்லை என்று ஒரு சரித்திர ஆசிரியரின் வாக்குமூலத்தைப்போல் நான் சொல்லக் கூடும்.

எங்கள் பந்துக்களில், நாற்பதாவது தலைமுறையினர் கூட வம்ச பரம்பரை ரிஜிஸ்தரை பார்வையிடாமலேயே,



எங்கள் உறவை மறக்காமல், அடிக்கடி எங்களைக்காண வருவார்கள். அவர்களில் சிலர், இப்படி எங்களுடன் சொந்தம் கொண்டாடுவது எங்களுடைய கௌரவத்தை அதிகப்படுத்தவில்லை.

ஏனென்றால், அவர்களில் குருடர், நொண்டிகளுடன் மற்ற அங்க ஹீனர்களும் உண்டு. அவர்கள் எப்படியிருந்தபோதிலும், அவர்கள் ஒரே இரத்த சம்பந்தம் கொண்டிருப்பதால், என்னுடைய மனைவி, எங்களோடு ஒரே மேஜையில் கூட உட்கார்ந்து சாப்பிட வேண்டுமென்று அவர்களை எப்பொழுதும் வற்புறுத்துவாள். ஆகையால், மிகவும் தனவந்தர்களாயில்லாவிட்டாலும், சாதாரணமாய், மிகவும் சந்தோஷத்தோடு கூடிய சிநேகிதர்கள் எங்களுடைய வீட்டில் எப்பொழுதும் இருந்து கொண்டிருந்தார்கள்.

இதுபோலவே, உலகத்தில் எப்பொழுதும் விருந்தினர்கள் எவ்வளவுக்கெவ்வளவு ஏழைகளோ, அவ்வளவுக்கவ்வளவு உபசாரம் செய்யப்படுவதில் அதிக களிப்பை அடைகிறார்கள். இந்த அனுபவம் வாழ்நாள் முழுமையும் சரியென்றே தோன்றும். சில மனிதர்கள் தாமரையின் வர்ணத்தைப் பார்த்தும், சிலர் வண்ணாத்திப்பூச்சியின் இறக்கைகளைப் பார்த்தும் ஆச்சரியத்துடன் திகைக்கிறார்கள். அப்படியே என்னுடைய இயற்கைக் குணம் மானிடரின் திருப்தி வாய்ந்த முகத்தைப் பார்ப்பதில் இச்சை கொள்ளும். ஆனால், எங்களுடைய உறவினர்களில் யாராவது ஒருவன் மிகக் கெட்ட நடத்தை உடையவனைத் தெரிந்தாலும், அல்லது தொந்தரவு கொடுப்பவனாயிருந்தாலும், அல்லது தட்டிக்கழிக்கப்பட வேண்டியவனென்று நாங்கள் நினைத்தாலும், அம் மனிதர்கள் என் வீட்டை விட்டு புறப்படும் பொழுதெல்லாம் நான் ஒரு குதிரைச் சவாரிக்குத் தகுதியான கோட் அல்லது ஒரு ஜோடி பூட்ஸையும், சில சமயங்களில் அற்ப விலையுள்ள குதிரையையும், அவர்களுக்குக் கடனாக அளிப்பேன். அச்சாமான்களை திருப்பிக் கொடுக்க வேண்டிவருமே என்று நினைத்து அவர்கள் எப்பொழுதும் என்னிடம் திரும்பி

வாராமலிருந்தார்கள் என்பதைக் கண்டு நான் திருப்தி அடைந்தேன்.

இந்த உபாயத்தினால் எங்களுக்கு ஒவ்வாத மனிதர்கள் வீட்டிலிருந்து நீக்கப்பட்டார்கள். ஆனாலும், வேக்பீல்டு குடும்பம் வழிப்போக்கர்களையோ, ஏழை பந்துக்களையோ வீட்டை விட்டுத் துரத்தியதேயில்லை. இப்படி அநேக வருஷங்கள் வெகு சந்தோஷத்துடன் வாழ்ந்து வந்தோம். ஆனாலும் தெய்வத்தால் அளிக்கப்படும் நன்மைகளின் குணத்தை விளக்குவதின் பொருட்டு, நாங்கள் சில சமயங்களில் உபத்திரவங்களை அநுபவித்தோம். அவைகளாவன: என்னுடைய பழத்தோட்டம் சிறு பையன்களால் அடிக்கடி திருடப்படுவதுண்டு. என் மனைவி தயாரிக்கும் பால் ஏடுகளை பூனைகளோ, சிறு குழந்தைகளோ திருடுவதுண்டு. நான் கோவிலில் பிரசங்கம் செய்யும் பொழுது, மிக பக்தி ரஸமுள்ள பாகம் வரும் சமயத்தில், ஸ்குயர் தூக்க மயக்கத்திலிருப்பார். அவர் மனைவி கோவிலில் என் மனைவி செய்யும் மரியாதைகளை பிணக்குடன் ஏற்றுக் கொள்ளுவாள். இப்பேர்க்கொத்த எதிர்பாராத சம்பவங்களால் ஏற்படும் மனத் தாங்கல்களில், சீக்கிரத்தில் நாங்களே மனச் சமாதானம் செய்து கொள்வோம். அவ்வச் சமயங்களில், இரண்டு மூன்று நாட்கள் கழிந்ததும், அவை எவ்வளவு தொந்தரவு கொடுத்தன என்பதைப்பற்றி நினைக்க நாங்கள் ஆச்சரியப்படுவோம். என் குழந்தைகள் அடக்கமுள்ள தம்பதிகளுடைய குழந்தைகளானதாலும், செல்லமில்லாமல் வளர்க்கப்பட்டவர்களாதலாலும், அவர்கள் அதற்கேற்றவாறு அவயவங்களில் வழுவில்லாத அமைப்போடும் நோயற்ற தேகத்தை பொருந்தியுள்ளவர்களாயும் இருந்தார்கள். என் குமாரர்கள் வலிமையும், சுறுசுறுப்பும், உள்ளவர்கள்; குமாரத்திகள், அழகும், வனப்பும் வாய்ந்தவர்கள். என்னுடைய முதிர்ந்த வயதில், எனக்கு ஆதரவு அளிக்கக் கூடிய அச் சிறு தொகுதியின் நடுவில் நான் இருக்கும் பொழுது, ஜெர்மன் தேசத்து அரசர் இரண்டாவது ஹென்றி ஜெர்மன் நாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்து வருகையில், மற்றப் பிரபுக்கள் தங்களுடைய



பொக்கிஷங்களோடு அரசனைப் பேட்டிகாண வந்தார்கள். ஆனால், கௌண்ட் ஆபென்ஸ்பர்க், தம்முடைய முப்பத்திரண்டு குழந்தைகளையே, தம்மிடத்திலிருக்கும் மிக விலையுயர்ந்த காணிக்கை யென்று அரசனிடம் சமர்ப்பித்தார். இந்தக் கதையை நான் அடிக்கடி அவ்வச் சமயங்களில் சொல்லாமலிருப்பதில்லை. எனக்கு இருந்தது ஆறு குழந்தைகளென்றாலும், அவ்வண்ணமே நான் என்னுடைய தேசத்திற்கு அவர்கள் ஒரு மிக விலையுயர்ந்த காணிக்கை யென்று கருதி, அவ்வகையில் தேசம் எனக்கு கடமைப் பட்டதென்றும் நினைத்தேன். என்னுடைய மூத்த மகன், பதினாயிரம் பவுன் எங்களுக்கு அளித்த அவனுடைய சிற்றப்பன் பெயரால், ஜார்ஜ் என்று அழைக்கப்பட்டான். என் இரண்டாவது குழந்தை ஒரு பெண். அவளை அவளுடைய அத்தை பெயரால், கிரிஸ்ஸல் என்று அழைக்கலாமென்றிருந்தேன். ஆனால் என்னுடைய மனைவி, அவளை கர்ப்பத்தில் சுமந்துகொண்டிருந்தபொழுது கட்டுக் கதைகள் வாசித்துக்கொண்டிருந்ததால், அவளுக்கு ஒலிவியா என்று பெயர் வைக்க வேண்டுமென்று வற்புறுத்தினாள். பின்னர் ஒரு வருஷத்திற்குள்ளேயே, இன்னொரு பெண் பிறந்தாள். இப்பொழுது, அவள் பெயரையாவது கிரிஸ்ஸல் என்று வைக்கத் தீர்மானித்திருந்தேன். ஆனால் பணம் படைத்த ஒரு சொந்தக்காரி, குழந்தைக்கு செவிலித் தாயாக இருக்க விரும்பியதால், அவளுடைய வேண்டுகோளுக் கிணங்கி, ஸோபியா என்று பெயரிட்டாள். இம் மாதிரி, என் குடும்பத்தில் கதாநாயகிகளின் பெயர்கள் இரண்டு வழங்கப்பட்டன. ஆனால் இவ் விஷயத்தில் எனக்கு யாதொரு பொறுப்பும் இல்லையென்று நான் சத்தியமாகச் சொல்லுவேன். மோஸஸ் என்பவன் எங்களுடைய அடுத்த குழந்தை. பன்னிரண்டு வருஷங்களுக்கு அப்பால், எங்களுக்கு மற்றும் இரண்டு குமாரர்கள் பிறந்தார்கள்.

என்னுடைய சிறுவர் சிறுமிகளை என் பக்கத்தில் பார்க்கும் பொழுதெல்லாம், எனக்குண்டாகும் மன மலர்ச்சியை மறுப்பதில் பிரயோஜனமில்லை. ஆனால் என்னுடைய மனைவியின் சந்தோஷமும், வீண் பெருமையும

என்னுடையதைவிட அதிகம். "நல்லது, மிஸஸ் பிரிம்ரோஸ். இந்த நாடு முழுமையிலும் வசிப்பவர்களில் உனக்குத்தான் மிகவும் அழகான குழந்தைகள் இருக்கின்றன. இதை நம்பு," என்று எங்களைப் பார்க்க வருபவர்கள் சொல்லும்பொழுது, "ஆ, நண்பரே, தெய்வம் அவர்களை சிருஷ்டித்தபடி அவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் ஒழுக்கம் உள்ளவர்களேயாயின், அழகுக்கென்ன? ஏனெனில், அழகுக்குப் பிறந்து வளர்ந்தது அழகாகத்தானிருக்கும்" என்று என் மனைவி பதிலுரைப்பாள். பிறகு தன் பெண்களை தங்கள் கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்ள எச்சரிப்பாள். நான் ஒன்றையும் ஒளிக்காமல் சொல்லுவதென்றால், என் பெண்கள் மிகவும் அழகுவாய்ந்தவர்களே. எப்போதும் வெளித்தோற்றத்தை நான் மிகவும் அல்பமாய்ப் பாராட்டுபவன். இவர்களுடைய அழகைப்பற்றி புகல நான் மறந்திருப்பேன். ஆனால், ஊரில் இவர்களுடைய அழகைப் பற்றி பேசாதவர்கள் கிடையாது. ஒலிவியாவுக்கு இப்பொழுது பதினெட்டு வயதாகிறது; சித்திரம் எழுதுபவர்கள் ஹீப் என்பவளை எப்படி வழக்கமாய் அழகு ததும்ப எழுதுவார்களோ, அபபடி அழகைப் பெற்றிருந்தாள். கபடில்லாதவள்; அவள் அன்னநடையும், காம்பீர்யமும் பெற்றிருந்தாள். ஸோபியாவின் முகலாவண்யங்கள், முதல் பார்வையில் கவனத்தைக் கவராவிட்டாலும், விசேஷமாய் ஒலிவியாவைக்காட்டிலும் மனதைக் கவரச் செய்தது. ஏனென்றால், அவைகள் மிருதுவாயும், அமரிக்கையாயும், வசீகரமாயும் இருந்தன. மூத்தவள் ஒரே பார்வையில் வெற்றி அடைந்தாள்; மற்றவளோ விடா முயற்சியால் மட்டும்தான். பெண்களின் குணம் அங்கலக்ஷணங்களின் அமைப்பைப்போலவே யிருக்கும். என் பெண்களைப் பொறுத்தமட்டிலும் அவை அப்படியே இருந்தன.

ஒலிவியா, சந்தோஷிக்கச்செய்ய வேண்டுமென்கிற அவாக்கொண்டு, அடிக்கடி வேஷம் போடுவாள். ஸோபியா வித்தியாசமாக நினைத்துக்கொள்ளக்கூடாதென்று, லாவண்யங்களை அடக்கிக் கொள்ளுவாள். நான்



விளையாட்டுப் பான்மையிலிருக்கும்பொழுது ஒலிவியா, தன்னுடைய பூரிப்பால் என்னை மகிழச் செய்வாள். மற்றவள், நான் விசாரப்பட்டுக் கொண்டிருக்கும் பொழுது, தன் விவேகத்தால் என்னை மன அமைதிபெறச் செய்வாள். ஆனால் இந்தக் குணாதிசயங்கள் அளவுக்கு மிஞ்சிப் போனதில்லை. அடிக்கடி இருவரும் ஒரு நாள் முழுமையும் தங்களுடைய மனப்பான்மையை ஒருவருக்கொருவர் மாற்றிக்கொண்டு நடிப்பார்கள். கறுப்பு உடையில், என் வசீகர சிகாமணி ஒலிவியா, பேசாமடைந்தையாய் விடுவாள். புது ரிப்பாண்டு கட்டிக் கொண்டவுடன் அவளுடைய தங்கைக்கு என்றுமில்லாத குஷி பிறந்துவிடும். என்னுடைய மூத்த மகன் ஜார்ஜ், ஒரு கல்விச் சார்புள்ள தொழிலில் அமரவேண்டுமென்று நான் கருதியதால், ஆக்ஸ்போர்டு சர்வ கலாசாலையில் பயின்றான். என்னுடைய இரண்டாவது மகன் மோஸஸை வியாபார தொழிலில் ஈடுபடுத்த உத்தேசித்ததால், அவன் வீட்டிலேயே பற்பல தொழில் முறைகளைக் கற்றுக் கொண்டான்.

உலக அநுபவமே இல்லாத என் சிறுவர்களை வர்ணிக்கப்புகுந்திருக்க வேண்டியதில்லை. ஆனால் எல்லோரிடத்திலும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களென்று சொல்லும் படியான ஒரே வித நடை, உடை, பாவனைகள் விளங்கின. சரியாய்ப் புகன்றால், அவர்கள் எல்லோரும் ஒரே விதமான குணாதிசயங்களை உடையவர்கள். எல்லோருமே வித்தியாசமின்றி கருணை, கபடின்மை, எளிமை, நோகாமை இந்தக் குணங்களைப் பெற்றிருந்தார்கள்.

## அத்தியாயம் 2

*தடும்பத்தில் எதிர்பாராத பொருள் நஷ்டம்; பொருள் போனாலும் அது தகுதியுள்ளவர்களின் கர்வத்தை அதிகரிக்கச் செய்வதுதான்.*

என் குடும்பத்தின் பாதுகாப்பின் பொறுப்பு முக்கியமாய் என்னுடைய மனைவி வசம் ஒப்புவிக்கப்பட்டுள்ளது. ஆத்மீகமானவை என்னுடைய முழுப் பார்வையிலேயே இருந்து வந்தன. என் புரோகிதத்தின் வரும்படி ஒரு வருஷத்திற்கு முப்பத்தைந்து பவுன்கள். அவையெல்லாம், எங்கள் பிஷப் ஆதீனத்திலிருக்கும் புரோகிதர்களின் விதவைகள், திக்கற்ற குழந்தைகள் இவர்களின் உதவிக்காக என்னால் முழுமையும் கொடுக்கப்பட்டது. ஏனெனில் எனக்கு சொந்தமான செல்வம் வேண்டியவரையில் இருந்ததால் நான் வரும்படியைப்பற்றி கவலை கொள்ளவில்லை. வெகுமதி இல்லாமல் என்னுடைய கடமைகளைச் செய்வதில் எனக்குள்ளே ஒரு பூரிப்பு. எனக்கு ஒத்தாசைக்காக ஒரு உப புரோகிதரையும் கூட வைத்துக் கொள்ளுவதில்லை யென்று தீர்மானம் செய்து கொண்டேன். என் ஆதீனத்திலுள்ள ஒவ்வொரு மனிதனையும் நேரில் தெரிந்துகொள்ள வேண்டும் என்றும், தம்பதிகளை இச்சை அடக்கும்படியும், தனி வாழ்க்கையி லிருப்பவர்களை மணம்செய்து கொள்ளும்படியும் வேண்டிக் கொண்டும் இருக்கத் தீர்மானித்தேன். ஆகவே, நான் வந்த சில வருஷங்களில் வேக்பீல்டில் மூன்று விநோதமான குறைகள் ஏற்பட்டன என்று வழக்கமாக சொல்லிக் கொள்ளுவதுண்டு ; கர்வமில்லாத புரோகிதர், பத்தினியில்லா வாலிபர்கள், ஆதரிப்பாரில்லாத மதுபானக் கடைகள் ஆகியவை.

விவாகம் செய்து கொள்ளுதல் என்பது நான் பிரசங்கிக்க பிரியப்படும் விஷயங்களில் ஒன்று. அதனால் உண்டாகும் சுகத்தை விளக்க அநேக வியாசங்கள் எழுதி



னேன். ஆனால் அதில் ஒரு குறிப்பிட்ட கொள்கையை நான் விசேஷமாய் ஆதரித்தேன்.

இங்கிலாந்தில் ராஜாங்கம் ஏற்படுத்தியுள்ள கோவில் (சர்ச்சு) ஆதீனத்தில் சேர்ந்த புரோகிதர்கள், மனைவி மரித்த பின்பு, இரண்டாவது விவாகம் செய்து கொள்வது மதக்கொள்கைக்கு விரோதமென்றுகூறி, விஸ்டன் என்பவரோடு நானும் சேர்ந்து போராடினேன். நான் வழுவாத ஏகபத்தினி விரதன் என்று பிறரால் கருதப்படுவதில், என்னை மதிப்புடையவனாக எண்ணினேன். இந்த முக்கிய வாக்குவாதத்தில், அநேக கடினமான புஸ்தகங்கள் எழுதப்பட்டுள்ளன. நான் அந்த வாக்குவாதத்தின் ஆரம்பத்திலேயே அதில் ஈடுபடுத்தப்பட்டேன். நானும் அந்த விஷயத்தைப்பற்றி சில பிரசுரங்கள் அச்சிட்டேன். ஆனால், அவை விற்கப்படவே யில்லை; கொடுத்து வைத்த சில புண்யாத்மாக்களுக்குத்தான் அவைகளை வாசிக்கும் பேறு கிடைத்தது என்று ஆறுதலடைந்தேன். என் சிநேகிதர்களில் சிலர் இந்தக் கொள்கை என்னைக் குறைப்படுத்தும் விஷயம் என்று சொல்லுவார்கள். ஆனால் அந்தோ, என்னைப்போல் அவர்களும் அந்த விஷயத்தில முற்றிலும் ஆலோசனை செய்தவர்களல்ல ; மேலும் அந்த விஷயத்தை எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக யோசிக்கிறேனோ, அவ்வளவுக்கவ்வளவு அது அதிக விசேஷமாகப் புலப்பட்டது. விஸ்டனைக்காட்டிலும் நான் என் கொள்கைகளை வெளிபிடுவதில் ஒருபடி கூடவே போனேன். அவர் தம்முடைய மனைவியை அடக்கம் செய்த கல்லறையின்மேல், அவள் வில்லியம் விஸ்டனுடைய ஒரே மனைவி என்று வரைந்திருக்கிறார். நானும், என்னுடைய மனைவிக்கு, அவள் உயிரோடிருக்கிற பொழுதே அதேமாதிரி ஒரு வாசகம் வரைந்தேன். அதில் அவளுடைய யோசனையையும், குடித்தனக் கட்டுப்பாட்டையும், அடக்கத்தையும் புகழ்ந்தேன். அந்த வாசகம் நன்றாக வரையப்பட்டு, ஒரு அழகுள்ளபடத்தில் அமைக்கப்பட்டு, மடப்பள்ளி அறையில் பொருத்தப்பட்டுள்ளது. அவ்விடத்தில் அது பல உபயோகமான காரியங்களுக்கு அநுகூலமாயிருந்தது. என் மனைவிக்கு, என்னி

டத்தில் அவள் காண்பிக்கவேண்டிய கடமையையும், எனக்கு அவளிடத்திலுள்ள அன்பையும் ஞாபகப்படுத்தியது. அவளுக்குப் புகழ்பெற வேண்டுமென்ற ஒரு உற்சாகத்தை உண்டுபண்ணியது. மேலும், என்றைக்காவது இறப்போம் என்கிற விஷயத்தை அடிக்கடி ஞாபகப்படுத்திக் கொண்டிருந்தது.

விவாகம் என்கிற விஷயத்தை அடிக்கடி பாராட்டுவதினாலேயே, என்னுடைய மூத்த மகன் காலேஜ் படிப்பு முடிந்தவுடனே பக்கத்து ஊரிலுள்ள புரோகிதரின் புத்திரி மேல் தன்னுடைய அபிமானதலைச் செலுத்தினான். அவர் மதத்தில் ஒரு பெரிய ஸ்தானத்தை வகிக்கிறவர்; அவளுக்குப் பெரிய ஸ்திரீதனம் கொடுக்க சௌகரியமுள்ளவர். ஆனால், ஸ்திரீதனம் அவளுக்கிருக்கும் யோக்கியதையில் மிகுந்த குறைவான பாகம். மிஸ் அரபெல்லாவில்மோட் நிரம்பிய அழகுள்ளவள் என்று எல்லோராலும் (ஆனால் என்னுடைய இரு பெண்களைத் தவிர) ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயம். யௌவனம், ஆரோக்கியம் கள்ளங்கபடில்லாத் தன்மை இவைகளெல்லாம் பளிங்கு போல் பிரதிபலிக்கும் அவளுடைய உடற்காந்தியாலும், வயோதிகர்கள் கூட அவளைப் பார்க்கும்பொழுது அசட்டை செய்யவொண்ணமல் சந்தோஷம் கொணட பார்வையாலும் சிகரம் போல் அவளது பெருமை விளங்கியது. நான் என் மகனுக்கு விவாகத்தின் காரணமாய் மிகவும் நிறைந்த பொருள் கொடுக்கக்கூடுமென்று அறிந்ததால் மிஸ்டர் வில்மோட், இந்த விவாகத்திற்கு எதிராயில்லை. ஆகையால், இரண்டு குடும்பங்களுக்கும் ஏற்படப் போகும் சம்பந்தத்தை முன்னோக்கி, வழக்கமாகவுள்ள அன்யோன்யத்தில் காலங் கழித்தோம். கலயாணத்துக்கு முன் தம்பதிகள் ஒருவரையொருவர் நேசிக்கும் நாட்களே, வாழ்நாளில் மிகவும் இனிப்புடையது என்று அறிந்திருந்தால், அந் நாட்களை நீட்டுவதில் எனக்குச் சம்மதமே. ஒவ்வொருநாளும் வெவ்வேறு விநோதங்களிலும், விளையாட்டுக்களிலும் அத் தம்பதிகள் ஒருவருக்கொருவர் கலந்து கொண்டதில் அவர்களுடைய காதல் பெருகிற்று. சாதாரணமாய் விடியற்காலையில்



சங்கீதம் எங்களை தூக்கத்திலிருந்து எழுப்பும். சீதோஷ்ண ஸ்திதி ரம்யமாயிருக்கும் தினங்களில் வேட்டையாடக் குதிரையேறிச் செல்வதுடன், காலை மாலை சாப்பாட்டிற்கு இடைவேளையில் உடை உடுத்துவதிலும், படிப்பதிலும் கழித்தோம். அவர்கள், வழக்கமாய் ஒரு பக்கம் வாசித்தவுடன் கண்ணாடியில் தங்களைப் பார்த்துக்கொள்ளுவார்கள். அப்படிச் செய்வதிலுண்டாகும் தோற்றமானது, அதி சௌந்தரியத்தின் காட்சியேயென்று தத்துவ ஞானிகள்கூட அங்கீகரிப்பார்கள்.

மாலை விருந்தில் என் மனைவி முதல் ஸ்தானத்தை வகித்தாள். ஏனெனில், அவள் எல்லாப் பதார்த்தங்களையும் தானே துண்டம் போட வேண்டுமென்று வற்புறுத்துவாள். அது, அவள் தாயாருடைய வழக்கம் என்று சொல்லுவாள். அச்சமயங்களில், ஒவ்வொரு பாகபக்குவத்தின் சரித்திரத்தையும் உரைத்தாள். சாப்பாட்டின் பிறகு, ஸ்திரீகள் எழுந்து போகாத வண்ணம் நான் சாப்பாட்டு மேஜையைக் கொண்டுபோய்விட உத்தரவிடுவேன். சில சமயங்களில், பாட்டு வாத்தியாரின் உதவியால் மிகவும் ஏற்கும்படியான சங்கீதக்கச்சேரியை சிறு பெண்கள் நடத்துவார்கள். வெளியில் வேடிக்கையாக நடப்பது, டீ அருந்துதல், கிராமநடனங்கள், பகல் வேஷங்கள்—இவைகளால் சீட்டுக்கட்டு விளையாட்டில்லாமலேயே, மற்ற நேரத்தை நேரம் போவது அறியாமலே கழித்தோம். ஏனெனில், நான் எவ்விதமான சூது விளையாட்டையும் கண்டித்தேன். ஆனால், சொக்கட்டான் விளையாடினோம். அதில், நானும் என் சிநேகிதரும் இரண்டணா பந்தயம் வைத்தோம். கடைசியாக, நாங்கள் சேர்ந்து ஆடிய ஆட்டத்தில் ஒரு கெட்ட சகுனம்போல் தோன்றியதை நான் சொல்லாமலிருக்க முடியவில்லை. நான் ஒரு ஆட்டம் ஆட எத்தனித்தேன். ஐந்து தடவை குட்டிச்சாத்தான் பொம்மை, தொண்டு தொட்டு விழுந்தது.

இப்படிச் சில மாதங்கள் கழிந்தன. கடைசியாக, வாலிபவதுவரருக்கு சாந்தி முகூர்த்தம் செய்வதற்கு ஒரு நாள் தீர்மானிக்க சமயம் வந்துவிட்டதென்று கருதினோம். ஏனெனில், அவர்கள் அதைத் தீவிரமாக விரும்புவதாகத்

தோன்றிற்று. விவாகத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் நடக்கும்பொழுது, என் மனைவி அதில் பரபரப்போடு முந்திக் கொள்வதையும், என் பெண்களின் பரிகாசப் பார்வையையும் நான் விஸ்தரிக்க வேண்டிய அவசியமில்லை. உண்மையில் என்னுடைய ஞாபகம் மற்றொரு விஷயத்தில் ஆழ்ந்திருந்தது. நான் நன்கு ஆதரித்த கொள்கையை ஸ்தாபிக்க, ஒரு வியாசத்தை அச்சிட எண்ணி, அதைப் பூர்த்தி செய்து கொண்டிருந்தேன். நான் சொல்வன்மையிலும், காரணங்களை எடுத்துக் காட்டுவதிலும் அதற்கு ஈடில்லாததாக அதைக் கொண்டாடினதால் என்னுடைய பழைய நண்பர், மிஸ்டர் வில்மோட்டுக்கு என்னுடைய பெருமையினால் அதைக் காண்பிக்காமல் இருக்கப் பொறுக்கவில்லை. அவர் அதை ஒப்புக்கொள்ளுவார் என்பதில் நான் சந்தேகம் கொள்ளவில்லை. ஆனால், அவர் அந்தக் கொள்கைக்கு விரோதமான அபிப்ராயத்தில் பலமான பற்றுடையவரென்றும், அதற்குத் தகுந்த காரணமுண்டென்றும் நான்சமயம் தப்பின பிறகுதான் தெரிந்துகொண்டேன். ஏனெனில், அவர் அந்தத் தருணத்தில், நான்காவது தடவை விவாகம் செய்து கொள்ள ஒரு பெண்ணை வரித்துக்கொண்டிருந்தார். இதனால், எதிர்பார்க்கக்கூடியதாகவே கொஞ்சம் சூடாகவே விவாதம் நடந்தது. அது நாங்கள் ஏற்பாடு செய்து கொண்டிருந்த சம்பந்தத்திற்கு தடை செய்யும் போல் தோன்றியது. ஆனால், ஏற்பாடாயிருக்கும் விவாக தினத்திற்கு முந்தியநாள், நாங்கள் இந்த விஷயத்தை விஸ்தாரமாகப் பேசத் தீர்மானித்தோம். இந்த விவாதம் இரண்டு கட்சிகளாலும் சரியான உற்சாகத்துடன் நடத்தப்பட்டது. அவர் என்னை, எங்கள் மதாசாரக் கொள்கைகளுக்கு விரோதமானவனென்று அழுத்தமாய்ச் சொன்னார். நான் அதை மறுத்தேன். அவர் பதிலுரைத்தார். நானும் அதற்குமேல் சொன்னேன். இதற்குள் வாக்குவாதம் மிகவும் உஷ்ணமாயிருக்கையில், என் பந்துக்களில் ஒருவர் என்னை வெளியில் அழைத்து, மிகவும் கவலையோடு என் மகனுடைய விவாகம் நடைபெறும் வரையிலாவது இந்தத் தர்க்கத்தை தள்ளி வைக்கும்படி கவலைகொண்ட முகத்துடன் வேண்டிக்



கொண்டார். "அது எப்படி?" என்று நான் கோபித்துக்கொண்டேன். "சத்தியத்தைக் கைவிடுவதா? தர்க்கத்தில், வேறு வழியில்லாத தருணத்தில் கொண்டு வந்து விடப்பட்டுள்ளார். அவரை மற்றொரு விவாகம் செய்துகொள்ள விடுவதா? நீ, என்னை, 'விவாதம் பண்ணாமல்' இரு என்று சொல்வதைக் காட்டிலும், 'என்னுடைய சொத்துக்களையெல்லாம் இழந்துவிடு' என்று சொல்லலாம்" என்றேன். "உன்னுடைய சொத்துக்கள் இப்பொழுது ஒன்றுமேயில்லை என்று சொல்ல நான் வருத்தப்படுகிறேன்" என்றார் என் சிநேகிதர். "நகரத்தில் எந்த வியாபாரியிடம் உன்னுடைய பணங்கள் எல்லாம் கொடுத்து வைக்கப்பட்டிருந்தனவோ அவர் பாப்பர் மனு கொடுக்கப் பயந்து, நாட்டைவிட்டு வெளியே ஓடிவிட்டார். அவர் விட்டுப்போன சொத்திலிருந்து ஒரு பவுனுக்கு ஒரு ஷில்லிங்குகூட கொடுக்கும்படி நேராதுபோல் தோன்றுகிறது. நான் விவாகம் முடியும் வரையில் இந்த விஷயத்தைச் சொல்லி, உன்னையோ அல்லது உன்னுடைய குடும்பத்தையோ, கலக்கம் செய்ய இஷ்டமில்லாதவனாயிருந்தேன். ஆனால் இப்பொழுது இந்த சங்கதி உன்னுடைய பேச்சின் உஷ்ணத்தை தணிக்கலாம் என்று நினைக்கிறேன். ஏனென்றால், உன்னுடைய சொந்த சௌகரியத்தின் நிமித்தம் உன்னுடைய மகன் அந்த சிறுபெண்ணின் ஸ்திரீதனத்தை தன்வசம் அடையும் வரையிலாவது இந்த விஷயத்தைப்பற்றி உன்னைப் பேசாமலிருக்கும்படி எச்சரிக்கை செய்யுமென்று நான் நம்புகிறேன்" என்று என்னுடைய சொந்தக்காரர் சொன்னார். "நல்லது" என்று பதிலுரைத்தேன். "நீர் சொல்வது உண்மையானாலும், நான் ஒரு பிச்சைக்காரனாகிவிட்டால், அந்த நிலைமை என்னை அயோக்யனாக ஒருபொழுதும் செய்யாது. இந்த நேரமே போய் அங்கே கூடியிருக்கும் ஜனங்களுக்கு என்னுடைய விபத்தை உரைப்பேன். என்னுடைய தர்க்கமோவென்றால், இப்பொழுதே அந்த வயோதிக பிரபுவின் பக்ஷமாக ஏற்கெனவே ஏதாவது விட்டுக்கொடுத்திருந்தவற்றை, நான் இப்பொழுது திரும்ப மறுத்துவிடுகிறேன். அவர் விவாகம் செய்து கொள்வதில், அந்த வார்த்தையின் எவ்விதப்பான்மையி

னும் நான் ஒப்புக்கொள்ள மாட்டேன்" என்றேன். நான் எங்களுடைய துரதிர்ஷ்டத்தின் சம்பவத்தை தெரியப்படுத்தினதும், இரண்டு குடும்பத்தார்களின் வெவ்வேறு விதமான உணர்ச்சிகளைச் சொல்வதில் பிரயோஜனமில்லை. அந்தக் காதலர்கள் படும்பாட்டைப்பார்த்தால், மற்றவர்களின் உணர்ச்சி மிகவும் எளிது. மிஸ்டர் வில்மோட், ஏற்கெனவே இந்தச் சம்பந்தத்தை ரத்து செய்யவேண்டிக் கொள்ளும் தறுவாயில் இருந்தவர் இந்தக் கொடிய சம்பவத்தால் சீக்கிரமாக ஒரு தீர்மானத்திற்கு வந்துவிட்டார். அவருக்கு ஒரு நற்குணம் பூரணமாக அமைந்திருந்தது. அதாவது, ஜாக்கிரதை—அது ஒன்றே ஒன்றுதான் விசேஷமாய் எழுபத்திரண்டாவது வயதில் நம்மிடத்தில் அஞ்சி நிற்கிறது.

## அத்தியாயம் 3

*தேசாந்திரம் போதல்-வாழ்க்கையில் நன்மையைப் பயக்கும் விஷயங்கள் சாதாரணமாக முடிவில் நம்முடைய முயற்சியினாலேயே கைகூடும்.*

எங்களுடைய துர்ப்பாக்கியத்தைப்பற்றின அறிவிப்பு அசூயையினால் ஏற்பட்டதாய் இருக்கலாம்; அல்லது சரிவர அறியப்படாத அவசரச் செய்தியாய் இருக்கலாம். இந்த எண்ணமே என் குடும்பத்திற்கு பாக்கியிருந்த ஒரே ஆதரவு. ஆனால் பட்டணத்திலிருந்த என்னுடைய காரியஸ்தரிடமிருந்து கொஞ்ச காலத்திற்குள் வந்த கடிதம் ஒவ்வொரு விஷயத்தையும் தீர்மானப்படுத்தியது. பொருள் நஷ்டம் என்னைமட்டும தீண்டுவதாயிருந்தால் அது அவ்வளவு கவனிக்கத்தக்கதல்ல. நான் அடைந்த மனவருத்தம் என் குடும்ப க்ஷேமத்தின் பொருட்டே. அவர்கள் சிறுமைப் படுத்தப் படுவார்களானால், அவர்கள் பெறக்கூடிய அந்த அவமதிப்பை யெல்லாம பொருட்படுத்தாம லிருக்கச்செய்யும் தகுந்த படிப்பில்லையே யென்று கவலையுற்றேன். அவர்களுடைய துக்கத்தை நான் அடக்க முயலுவதற்குள் இரண்டு வாரங்கள் கழிந்தன. ஏனெனில் ஆறுவதற்கு முன்தேற்றுதல் துக்கத்தை ஞாபகப்படுத்துவது போலாகும். அதுவரையில் நான் அவர்களைக் காப்பாற்றுவதற்குப் பின்னால் ஏதாவது ஒரு வழியுண்டாவென்ற யோசனையில் ஆழ்ந்திருந்தேன். கடைசியில் வருஷம் ஒன்றுக்கு பதினைந்து பவுன் சம்பளமுள்ள ஒரு சிறிய புரோகித உத்தியோகம் அந்த நாட்டிலேயே எட்டியிருந்த ஒரு ஊரிலிருந்து எனக்கு அளிக்கப்பட்டது. அங்கே என்னுடைய கொள்கைகளை தடங்கலின்றி மேலும் அநுபவிக்கலாம். இந்த ஏற்பாட்டை நான் சந்தோஷத்துடன் ஒப்புக்கொண்டேன். ஒரு சிறு நிலப்பங்கை குத்தகைக்கு எடுத்து சாகுபடி செய்து என்னுடைய வருமானத்தைப் பெருக்கிக்கொள்

ளலாமென்றும் தீர்மானித்தேன். இந்த ஏற்பாட்டுடன் என்னுடைய சொத்தில் சிதறின மீதியை ஒன்றுசேர்ப்பதுதான் அடுத்த கவலை. எல்லாக் கடன்களையும் வசூலித்ததும் கொடுத்ததும்போகப் பதினாலாயிரம் பவுன்கள் கையிருப்பிலிருந்ததில் இப்பொழுது நானூறு பவுன்கள் மட்டுமே மிஞ்சின. ஆகையால் என்னுடைய முக்கிய கவனம் இப்பொழுதுள்ள சௌகரியத்திற்கு ஒத்து என் குடும்பத்தின் மேட்டிமையைக் குறைக்கச்செய்ய வேண்டுமென்பதே. ஏனென்றால், ஈனஸ்திதியில் மேல்பதவிக்கு ஆசைப்படுவதுதான் கஷ்டதிசை. "என் குழந்தைகளே, நமுடைய முன் ஜாக்கிரதையாலும் சற்று முன் சம்பவித்திருக்கிற துர்ப்பாக்கியம் தவிர்க்கக்கூடியதல்ல வென்று உங்களுக்குத் தெரிந்த விஷயம். ஆனால் சமயத்திற்குத் தகுதியான ஏற்பாட்டால், அதனாலுண்டாகும் கொடுமைகளை மிகவும் குறைப்படுத்தலாம். என் அருமைக் குழந்தைகளே, நாம் இப்பொழுது ஏழைகள். நம்முடைய ஊக்கம் நாமிருக்கும் ஏழ்மைத்தன்மைக்கு தகுந்தபடி நடந்து கொள்ள எச்சரிக்கிறது. ஆகையால் எந்த படாடோபங்கள் இருந்தும் அநேகர் துக்கத்தில் மூழ்கடிக்கப்பட்டிருக்கிறார்களோ, அவற்றை மனம் தளராமல் நாம் விட்டு விடுவோம். குறைந்த வசதியிலும் எல்லோருக்கும் மனக்களிப்பைக் கொடுக்கக்கூடிய மன அமைதியைக்கைப்பற்றுவோம். நம்முடைய உதவியின்றி ஏழைகள் களிப்புடன் வாழ்கிறார்கள். நாம் ஏன் அவர்களுடைய உதவியின்றி வாழக் கற்றுக்கொள்ளக் கூடாது? வேண்டாம், என் குழந்தைகளே, இந்த நிமிஷத்திலிருந்து மேன் மக்கள் என்ற வீண் பெருமைகளை யெல்லாம் விட்டுவிடுவோம். நாம் புத்தி உடையவர்களா யிருந்தால், நமக்கு சுகமாக வாழ்வதற்கு வேண்டியவைகளை இன்னும் இருக்கின்றன. பொருளின் குறைவு தோன்றுமிடத் தெல்லாம், மனத் திருப்தியினால் அவ்வப்போது அவற்றைத் தீர்த்துக் கொள்ளுவோம்" என்றேன். என்னுடைய மூத்த மகன் ஒரு வித்வானாகப் பயின்றதால், அவனைப் பட்டணத்திற்கு அனுப்பத் தீர்மானித்தேன். அங்கே, அவனுடைய சாமர்த்தியத்தால், தன்னுடைய காலக்ஷேபத்தையும் நடத்திக் கொண்டு, எங்களுக்கும் உதவலாமென்று



[illegible]. வறுமையிலிருந்து சம்பவிக்கும் பல கொடியதான [illegible] குடும்பத்தைக் [illegible] திருக்கும் [illegible] நாங்கள் முதல் முதலாகப் பிரியப்போகும் நிலைமைக்கு [illegible] தில் வந்தது. என் மகன் முதலில் தன் தாயாரிடமும் [illegible] வர்களிடமும் உத்தரவு பெற்றுக் கொண்டான். அவனை உச்சி முகர்ந்து அவர்கள் கண்ணீரையும் பெருக்கினார்கள். பிறகு என்னை ஆசீர்வதிக்கும்படி கேட்டுக்கொண்டான். நான் மனப் பூர்வமாய் ஆசீர்வாதம் அளித்தேன். அத்துடன் ஐந்து கினியும் கொடுத்தேன். இவைதான் அப்பொழுது அவனுக்குக் கொடுக்கக்கூடிய பிதார்ஜித சொத்து. "என் பிள்ளாய், நீ இப்பொழுது லண்டனுக்குப் பாதசாரியாய்ப் போகப் போகிறாய். உன்னுடைய பிரசித்தபெற்ற மூதாதை ஹூக்கர் உனக்கு முன்னால் இம்மாதிரியே அக்காலத்திற்குப் போனார். அவர் ஓட்டிச் சென்ற அதே குதிரையை எடுத்துக்கொள். இது அவருக்குப் பரோபகாரியான பிஷப் ஜுவல் என்பவரால் கொடுக்கப்பட்டது. இந்தத் தடியையும் இந்தப் புஸ்தகத்தையும் எடுத்துக்கொள். வழிநடையில் உனக்கு ஆதாரமிருக்கும். அதி லுள்ள இந்த இரண்டு வரிகள் ஒரு கோடி பெறும். 'நான் சிறுவனாயிருந்தேன். இப்போது கிழவனாயிருக்கிறேன். இதுவரையில் நன்னடத்தை உள்ளவன் கைவிடப்பட்டதை நான் பார்த்ததில்லை. அவனுடைய சந்ததி ஜீவனத்திற்குப் பிச்சை எடுத்ததில்லை.' நீ பிரயாணம் செய்யும் பொழுது வழி நடையில் இவை உனக்கு ஆதாரமிருக்கட்டும். போய் வா. மகனே, உன் பாக்கியங் [illegible] இருக்கும்போதிலும், வருஷத்திற்கு ஒரு தடவையாவது உன்னை நான் பார்க்க வேண்டும். எப்பொழுதும் [illegible] சத்தியத்தைக் கைவிடாதே. [illegible] வழி அனுப்பினேன். அவன் [illegible] உள்ளவனாதலால், ஒரு [illegible] தன்னந்தனியே [illegible] எனக்கு [illegible] [illegible] முறையில் நடந்து கொள்வானென்பது [illegible].

அவனுடைய புறப்பாடு எங்களுடைய பிரயாணத்தைத் துரிதப்படுத்தியது. சில நாட்கள் கழிந்ததும், இது நடந்தது. மன அமைதியோடு வெகுகாலம் வாழ்ந்த ஊரை விட்டுப் போவதில் பொறுமை யிருந்தும், அடக்க முடியாமல் கண்ணீர் பெருகவிட்டோம். மேலும் இதுவரையில் பத்து மைல்களுக்கு மேல் வீட்டைவிட்டுப் போகாத எங்களுக்கு எழுபது மைல் பிரயாணம் நடுக்கத்தை உண்டு பண்ணியது. ஏழைக் குடிகளும் எங்களைக் கொஞ்ச தூரம் பின்பற்றிக் கதறிக்கொண்டு வந்தார்கள். ஆகையால் அது எங்கள் பய நடுக்கத்தை அதிகரித்தது. முதல் நாள் பிரயாணம் எங்களை, நாங்கள் நோக்கிப்போகும் ஊருக்கு முப்பது மைலுக்குள் உபத்திரவ மில்லாமல் கொண்டுவந்து சேர்த்தது. வழியிலிருந்த வெளிப் பார்வையில்லாத ஒரு சத்திரத்தில் இரவுக்குத் தங்கினோம். அங்கே எங்களுக்கு ஒரு அறை காண்பிக்கப்பட்டது. என்னுடைய வழக்கம் போல் நான் அந்த வீட்டுச் சொந்தக்காரரை எங்களுடன் கூட பானம் அருந்த வேண்டிக்கொண்டேன். அவர் அதற்கு இணங்கினார். ஏனெனில் அவர் பானம் செய்வதினால் மறுநாள் எங்களுக்குக் கொடுக்கும் பில் தொகை அதிகரிக்கும். எப்படியிருந்தபோதிலும் அவர் நாங்கள் போகும் நாட்டின் சகல மக்களையும் அறிந்தவர். விசேஷமாய் என்னுடைய முதலாளியாகப் போகும் அங்கிருந்த ஸ்குயர் தார்ன்ஹில் என்பவரையும் அறிந்தவர். இவர் அந்த இடத்திலிருந்து சில மைல் தூரத்திற்குள் வசிக்கிறார். இந்தக் கனவான் உலகத்தில் உள்ள சுகங்களைத் தவிர மற்ற விஷயங்களை ஒன்றும் கவனியாதவர், முக்கியமாய் பெண்பாலரிடம் விசேஷப் பற்றுள்ளவரென்று சொன்னார். எப்பேர்ப்பட்ட நன்னடத்தை யுள்ளவர்களா யிருந்தாலும் அவருடைய சாதுரியத்திற்கும் விடா முயற்சிக்கும் ஈடுபடாதவர்களில்லை யென்றார். பத்து மைல் விஸ்தீரணத்திலுள்ள குடியானவர்களின் பெண்களில் ஒருத்தியையாவது இவர் வெற்றி கொள்ளாதிருந்ததில்லை; அவர்களில் மோசம் பண்ணப் படாதவர்களுமில்லை என்றார். இந்த விருத்தாந்தம் என் மனத்திற்குக் கொஞ்சம் துன்பத்தைக் கொடுத்தபோதிலும் என் பெண்களிடத்தில் அது வேறுவிதமான உணர்ச்சியை உண்டு



பண்ணிற்று. அவர்களுடைய முகம் தாங்கள் அடையப்போகும் வெற்றியை நினைத்து முகமலர்ச்சி அடைந்தது போலிருந்தன. என் மனைவியின் சந்தோஷத்திற்கும் குறைவில்லை. அவள் அவர்களுடைய வசீகர சக்தியைப் பற்றியும் நன்னடத்தையைப் பற்றியும் சந்தேகப்படவில்லை. நாங்கள் இவ்விதமாக யோசித்துக்கொண்டிருக்கையில் அந்த வீட்டுக்காரி உள்ளே நுழைந்து தன் புருஷனிடம் தங்கள் வீட்டில் இரண்டு நாட்களாய் தங்கியிருக்கும் ஒருவரிடம் கையில் பணமில்லை என்றும், அவரால் கொடுக்கப் படவேண்டிய பணத்திற்கு ஜவாப்புமில்லை என்றும் சொன்னாள். "பணமில்லையா, இது அசாத்தியமானது. நேற்றைக்குத்தானே அவர் நம்மூர் தலையாரிக்கு மூன்று கினிகள் கொடுத்து, நாயைத் திருடியதற்காக ஊர்வலமாகச் சவுக்கு அடி அபராதம் பெற்ற, சண்டையில் காயம்பட்ட, ஒரு சோல்ஜரை மன்னித்துவிடும்படி கேட்டுக் கொண்டார்?" அவர் மனைவி அவள் சொன்னதையே இன்னமும் வற்புறுத்த, அவர் இப்படியோ அப்படியோ அந்த சமாசாரத்தை அறிய வேண்டுமென்று அந்த அறையைவிட்டு வெளிப்போக எத்தனித்துக் கொண்டிருக்கும்பொழுது, அவர் சொன்னபடி அவ்வளவு தாராள புத்தியுள்ளவரிடம் என்னை அறிமுகப் படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். அதற்கு அவர் சம்மதிக்க, சுமார் முப்பது வயதுள்ளவராகவும், சரிகை உதிர்ந்த உடை உடுத்தவருமான ஒரு கனவானைக் காண்பித்தார். அவர் நல்ல வாட்டசாட்டமாக இருந்தார். அவர் முகத்தில் மனோவியாகூலத்தின் குறிகள் தென்பட்டன. அவருடைய பேச்சு கொஞ்சம் சுருக்கமாகவும், இனிமையில்லாததாயும் இருந்தது. அவர் மரியாதை முறைகள் தெரிந்தவராகத் தோன்றவில்லை, அல்லது அவர் அவற்றை மதிப்பவர் போலவும் தோன்றவில்லை. அந்த வீட்டுக்காரர் அறையை விட்டுப்போகவும், இப்படிப்பட்ட நிலைக்கு ஒரு கனவான் ஆளாகி யிருப்பதைப் பார்த்ததில் எனக்குக் கவலை அளித்தது. அவருடைய தற்போதைய தேவையை சமாளிப்பதற்காக என்னுடைய பணப் பையை எடுத்து அவரிடம் கொடுத்தேன். "நான் மனப் பூர்வமாக ஏற்றுக்கொள்ளுகிறேன். ஐயா, நான் கையிலிருந்த எல்லாப்

பணத்தையும் மறதியினுல் சற்றுமுன் கொடுத்து விட்டேன். அதன் மூலம் உம்மைப்போன்ற மனிதர்களும் இன்னும் இருக்கின்ருர்களென்று தெரிந்து கொண்டேன். ஆனல் உம்முடைய பணத்தைப் பெற்றுக் கொள்ளுமுன் நான் இதை எவ்வளவு சீக்கிரம் திருப்பிக் கொடுக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரம் கொடுக்க என் உபகாரியின் பெயரும், வாசஸ்தலமும் தெரியப் படுத்தவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன்" என்று அவர் சொன்னுர். அவர் கேட்டதை நான் அவருக்கு விஸ்தாரமாக எடுத்துரைத்தேன். என்னுடைய பெயரையும் எனக்கு சற்று முன் ஏற்பட்ட துர்ப்பாக்கியத்தையும், எந்த இடத்திற்கு நாங்கள் இப்பொழுது போய்க்கொண்டிருக்கிறோமென்பதையும் சொன்னேன். "நான் எதிர்பார்த்ததைவிட சௌகரியமாகவே இந்த விஷயம் புலப்படுகிறது. ஏனென்ருல் நானும் அந்த வழியேதான் போகின்றேன். இங்கே வெள்ளத்தினுல் இரண்டு நாட்கள் தங்கும்படி ஆயிற்று. நாளை ஆற்றைக் கடக்கலாம் என்று நம்புகிறேன்" என்று அவர் பதிலுரைத்தார். நான் அவர் எங்களுடன்கூட இருந்து போனுல் எனக்குத் திருப்தியை அளிக்குமென்று சொல்ல, என் மனைவியும் குமாரிகளும் அப்படியே கேட்டுக்கொண்டதினுல் இரவு உணவை எங்களுடன் அருந்த சம்மதித்தார். அந்தச் சீமானின் சம்பாஷணை மனதிற்கு களிப்பாயும் பொருளடக்கத்தோடு கூடியுமிருந்ததால், அவர் பேசிக்கொண்டே இருக்க வேண்டுமென்று அவாக்கொண்டேன். ஆனல் தூங்கப் போவதற்குள்ள காலம் வெகுவாகக் கழிந்துவிட்டது. மறுநாள் பிரமங்களுக்குக் கிளப்பாற வேண்டியது அவசியம் அல்லவா? ஆகையால் எல்லோரும் தூங்கப் போய்விட்டோம். மறுநாள் காலை எல்லோரும் ஒன்று சேர்ந்து புறப்பட்டோம். நாங்களெல்லோரும் குதிரைமேல் சவாரி செய்தோம். எங்களுடைய புதிய நண்பர் மிஸ்டர் பர்ச்செல் ரஸ்தாவின் ஓரத்திலுள்ள நடைபாதையிலேயே நடந்து வந்தார். அவர் புன் சிரிப்புடன், நாங்கள் எதிர் கொண்டிருக்கும் குதிரை சவாரி சரியானபடி இல்லையாதலால், அவர் எங்களைப் பின்விட்டு தாம் முன் செல்வது அழகல்லவென்று சொன்னுர். வெள்ளம் இன்னும் அடங்க



வில்லையாதலால் நாங்கள் ஒரு வழித்துணையைக் கூலிக்கு அமர்த்திக்கொண்டோம். அவன் முன்பு சவாரி செய்தான்.

நானும் மிஸ்டர் பர்ச்செல்லும் கடைசியில் வந்தோம். வழிநடைச் சிரமத்தை தத்துவ விசாரணைப் பேச்சில் கொஞ்சம் மறந்தோம். தத்துவ சம்பாஷணையை அவர் மிகவும் தெளிவாக அறிந்தவர்போலக் காணப்பட்டார். ஆனல், எனக்கு மிக்க ஆச்சரியத்தைக் கொடுத்தது என்னவென்ருல், என்னிடம் கடன் வாங்கியவராயிருந்தும்கூட அவர் தம்முடைய கொள்கைகளை ஏதோ என்னுடைய எஜமானன் ஒருவனைப்போலப் பிடிவாதமாய் வற்புறுத்திக்கொண்டிருந்தார். பாதை வழியாகப் போய்க்கொண்டிருக்கும்பொழுது, எங்கள் கண்ணுக்குப் புலப்பட்ட ஆங்காங்கேயுள்ள பலவகை வீடுகளை இவை இன்னருக்குச் சொந்தம் என்று சொல்லிக் கொண்டு வந்தார். அவர் கொஞ்சத் தூரத்திற்கு அப்பால் இருந்த ஒரு பெரிய விசாலமான வீட்டைக் குறிப்பிட்டு, "அது மிஸ்டர் தார்ன்ஹில் என்கிற ஒரு வாலிப கனவானுக்குச் சொந்தமானது. அவர் பெரிய தனவந்தர். ஆனல், அவருடைய செல்வமெல்லாம் அவருடைய சிற்றப்பனர் வில்லியம் தார்ன்ஹில் என்பவரின் உசிவின் தன்மையைப் பொறுத்தே இருக்கிறது. அவர் சிற்றப்பனே, தமக்கு ஏதோ கொஞ்சம் வைத்துக்கொண்டு, தம்முடைய அண்ணன் மகன் மற்ற சொத்துக்களை யெல்லாம் அநுபவிக்கும்படி விட்டுவிட்டார். அவர் பெரும்பாலும் பட்டணத்திலேயேதான் இருப்பார்" என்ருர். "என்ன, என்னுடைய வாலிப முதலாளி அப்படியா? அவருடைய மருமகனு? அவருடைய குணம், பெருந்தன்மை, தனிப்போக்கு எல்லாம் லோகப் பிரசித்தமல்லவா? சர் வில்லியம் தார்ன்ஹில் நம்முடைய ராஜ்யத்தில் மிகவும் பெருந்தன்மை உள்ளவர்களில் ஒருவர். ஆனல், அவர் தம் மனம்போல் நடப்பவர் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அவர் ஒரு பூர்ண பரோபகாரியல்லவா?" என்று நான் சொன்னேன். அதற்கு மிஸ்டர் பர்ச்செல் பதிலுரைத்தார்: "கொஞ்சம் அப்படித்தான்; அளவிற்கு மிஞ்சியே. என்ன இருந்தபோதிலும், சிறுபிராயத்திலேயே

அவர் பரோபகாரத்தை அளவிற்கு மிஞ்சி காட்டினார். ஏனெனில் அவருடைய இந்திரியங்கள் அப்பொழுது சக்தி வாய்ந்தவையாக இருந்தன. அவைகள் எல்லாம் நெறி தவறு வழியில் செலுத்தப்பட்டமையால், கடைசியில் கற்பனையோவென்று சந்தேகிக்கும் அளவிற்கு மிஞ்சி விட்டன. அவர் சிறு பிராயத்தில் ராணுவப் பயிற்சியில் அவாக் கொண்டார்; அப்படியே இலக்கியக் கல்விப் பயிற்சியிலும். சீக்கிரத்தில் இராணுவத்தில் பிரபலமடைந்தார். படிப்பாளிகள் கூட்டத்திலும் அவருக்குக் கொஞ்சம் மதிப்பு இருந்தது. கீர்த்தியைக் கோருபவர்களிடம் தற்புகழ்ச்சி எப்போதும் பின் தொடர்கிறது. ஏனெனில் அப்பேர்ப்பட்ட மனிதர்களுக்குத்தான் தற்புகழ்ச்சியில் அதிக சந்தோஷம். அவரை ஜனங்கள் கூட்டம் கூட்டமாகச் சுற்றினார்கள். அவர்கள், தங்கள் நடத்தையின் ஒரு அம்சத்தை மாத்திரம் அவருக்குக் காண்பித்தார்கள். அவர் தம்முடைய சர்வ ஜனோபகாரத்தினால், சகலத்தில் கருத்தை நழுவவிட்டார். மனிதப் பிறப்பையெல்லாம் நேசித்தார். ஐசுவரிய மிகுதியால், உலகில் மோசக்காரர்கள் உண்டு என்பதைக்கூட தெரிந்து கொள்வதற்கு அவருக்கு இடமில்லை. வைத்தியர்கள், தேகத்தைத் தொட்டால்கூட வலி பொறுக்கமாட்டாத வியாதி ஒன்று உண்டு என்று சொல்லுகிறார்கள். அப்படி சில மனிதர்கள் தங்கள் தேகத்தில் அநுபவித்த வியாதியை, இந்தப் பிரபு தம் மனத்தில் அநுபவித்தார். மிகவும் சாதாரணமான சிறு கஷ்டமும்—அது நிஜமானாலும், கற்பனையானாலும் சரி—இவருடைய மனதில் ஊடுருவிப் பாய்ந்தது. அவருடைய ஆத்மா மற்றவர்களின் கஷ்டத்தால் மனோவேதனைப்பட்டு தத்தளித்தது. இப்படிக் கஷ்டங்களை விடுவிப்பதில் மனமுவந்து இவருடைய ஒத்தாசையை விரும்புவோர் பலர், என்பதைப்பற்றி கொஞ்சங்கூட ஐயமில்லை. இவருடைய அளவிற்கு மிஞ்சிய ஈகை, இவருடைய பொருளைக் குறைத்ததே அன்றி இவருடைய நற்குணத்தைக் குறைக்கவில்லை. உண்மையில், ஐசுவரியம் குறைவு படுவதாகத் தோன்றத் தோன்ற, அவருடைய நற்குணம் அதிகரித்தது. ஏழ்மை அடைய அடைய, செலவில் கட்டுப்பாடு குறைந்தது. அவர் புத்திசாலி போல் பேசினாலும், அவ-



ருடைய நடவடிக்கைகளெல்லாம் மூடத்தன்மையாக இருந்தன. மேலும், யாசிப்பவர்களால் சூழப்பட்டு, கேட்பவர்களுடைய தேவையைப் பூர்த்திசெய்ய முடியாமல் பணம் கொடுப்பதற்குப் பதிலாக வாக்குறுதிகள் கொடுத்தார். அவரால் அவ்வளவுதான் அப்பொழுது செய்ய முடிந்தது. ஏனெனில் இல்லையென்று சொல்லி ஒருவனையும் புண்படுத்தத் தீர்மானமில்லாதவராயிருந்தார். இக்காரணத்தால் இல்லாதவருடைய கூட்டம் இவரைச் சுற்றிக் கொண்டே இருந்தது. ஆனால், இவர் அவர்களுக்கு உபகாரம் செய்ய விரும்பினார். அவர்களுக்கு திருப்தி அளிக்க முடியாதென்பது நிச்சயம். இவர்கள் அவரை நம்பி, கொஞ்ச காலம் சுற்றிக்கொண்டிருந்தார்கள். பிறகு அவர்கள் நிந்தித்தும், இகழ்ந்தும், இவரைவிட்டு அகன்றார்கள். ஆனால் இவர் நிந்தைக்குப் பாத்திரமானவரே. பிறரால் இவர் எவ்வளவு நிந்திக்கப்பட்டாரோ அவ்வளவு தம்மைத்தாமே இகழ்ந்து கொண்டார். அவர்களுடைய புகழ்ச்சியிலேயே அவர் மனப்பான்மையை வைத்திருந்தார். அவை நீங்கியவுடனே, அவர் தம்முடைய சுபாவ மனோதர்மத்தின் மகிழ்ச்சியில் திருப்தி அடையவில்லை. ஏனெனில் முன்பு அதை அவர் மதிக்கக் கற்றுக் கொள்ளவில்லை. உலகம் அப்பொழுது அவருக்கு மாறுபாட்டுடன் தோன்றியது. அவருடைய சிநேகிதர்கள், இதுவரையில் இவரை வீணாகப் புகழ்ந்தவர்கள், இப்பொழுது இவருடைய நடத்தையை ஆமோதிப்பதுடன் நிறுத்திவிட்டார்கள். அப்படி ஆமோதித்தவர்கள்கூட, சீக்கிரத்தில் அவருக்கு புத்திமதி புகட்ட ஆரம்பித்தார்கள். அதைக் கேட்காவிட்டால், அவர்களுடைய நிந்தைக்கு ஆளானார். கடைசியில் தம்மிடத்தில் லாபமடைந்தவர்கள், தமக்கு ஈடுபட்டிருந்தபோதிலும், அவர்களுடைய சிநேகம் மதிக்கத்தக்கதல்லவென்று தெரிந்து கொண்டார். இப்பொழுது தான், மற்றொருவனுடைய உள்ளத்தைக் கவருவதற்காக ஒருவன் தன்னுடைய உள்ளன்பைமட்டுமே அளித்தல் வேண்டும் என்று அவர் அறிந்துகொண்டார். நான் இப்பொழுது கண்டுகொண்டதென்னவென்றால்—ஓகோ, நான் என்ன சொல்லப் போகிறேனென்பதை மறந்துவிட்டேன்—முடிவில் அவர்

தம்மைத்தாமே கௌரவித்துக்கொள்ள எத்தனித்தார். தம்முடைய இழந்த செல்வத்தைப் பெற சில யோசனைகள் செய்தார். இதற்காக, அவர் தம்மிஷ்டப்படி யெல்லாம் ஐரோப்பா முழுவதும் கால் நடையாகவே பிரயாணம் செய்தார். அவருக்கு இப்பொழுது முப்பது வயதுகூட ஆகாவிட்டாலும், அவருடைய பொருள்களோ எப்பொழுதுமில்லாத பெருக்கத்தை அடைந்திருக்கின்றன. இப்பொழுது அவருடைய தானதர்மங்கள் முன்னைவிட தாராள மதிக்கவையாகவும் இருக்கின்றன. ஆனால் இப்பொழுதும் அவர் பரம ரஸிகர் என்கிற பான்மையை விடாமலிருக்கிறார். அவர் தமக்குத் தோன்றிய வழியில் நன்மை செய்வதில் மிகுந்த களிப்பை அடைகிறார்."

பர்கெல் சொல்லிக் கொண்டு வந்த விருத்தாந்தத்தில் நான் பரிபூரணமாக ஆழ்ந்துவிட்டேன். அப்பொழுது நான் எதிர்ப்புறமாகக்கூட எட்டிப் பார்க்கவில்லை. அந்தச் சமயத்தில் திடீரென்று என் குடும்பத்தாரின் கூக்குரலைக் கேட்டு நாங்கள் திடுக்கிட்டோம். திரும்பிப் பார்க்கையில், வேகமாக ஓடும் நடு ஆற்றில், என்னுடைய கடைசி மகள் குதிரையினின்றும் தள்ளப்பட்டு, வெள்ளத்தில் தத்தளிக்கிறதைப் பார்த்தேன். அவள் இரண்டு தடவை மூழ்கியும், அவளுக்கு உடனே ஒத்தாசைக்குப் போகும்படி என்னை நான் விடுவித்துக் கொள்ள முடியவில்லை. என்னுடைய மனக் கலக்கத்தால் அவளைப்போய் விடுவிப்பதற்குள்ள பொறுமைகூட இல்லாதபடி, நான் அவ்வளவு திடுக்கிட்டிருந்தேன். என் சிநேகிதன் அவளுடைய ஆபத்தைப் பார்த்து, உடனே அவளை விடுவிப்பதற்காக ஜலத்தில் குதித்திருக்காவிட்டால், அவள் சந்தேகமில்லாமல் செத்துப்போயிருக்க வேண்டியதுதான். அவளைக் கொஞ்சம் சிரமத்தோடு எதிர்க் கரைக்கு பத்திரமாகக் கொண்டுபோய்ச் சேர்த்தார். கொஞ்சம் மேலே ஆற்றைக் கடந்து, என் குடும்பத்தைச் சேர்ந்த மற்றவர்களும் அபாயமின்றி போய்ச் சேர்ந்தார்கள். அங்கே என் பெண்ணுடையவும் எங்களுடையவும் நன்றியை அவருக்குத் தெரிவித்தோம். அவளுடைய நன்றி யறிவைக் கூறவும் முடியுமா? அதை மனத்திலே அனுமானித்துக் கொள்ளத்தான் வேண்டும்.



அவள் தன்னைக் காப்பாற்றியவருக்கு வாய்ச்சொல்லை விட, கண் பார்வையினால் தன் நன்றியைத் தெரிவித்தாள். பின்னும் அவருடைய உதவியை எதிர்பார்ப்பவளைப் போல், அவருடைய கைமேல் சாய்ந்து கொண்டு வந்தாள். என் மனைவியும் தன் வீட்டில் எப்பொழுதாவது ஒருநாள் இப்பொழுது செய்த உதவிக்குக் கைம்மாறு செய்யும் சந்தோஷத்தை அடைவோம் என்று சொன்னாள். இப்படி நாங்கள் எல்லோரும் சேர்ந்து அடுத்த சத்திரத்தில் சிற்றுண்டி பண்ணிக்கொண்டு, பிறகு அங்கேயே சாப்பிட்டோம். அதன் பின், மிஸ்டர் பர்கெல் வேறு இடத்திற்குப் போகிறபடியால், எங்களிடம் விடைபெற்றுக் கொண்டு சென்றார். நாங்களும் எங்களுடைய பிரயாணத்தைத் தொடர்ந்தோம். என் மனைவி அவர் போகும் தருணத்தில் அவரை வெகுவாகப் பாராட்டினாள். அவருக்கு மட்டும் எங்களுடைய குடும்பத்தில் சம்பந்தம் பண்ணிக் கொள்ளுவதற்குள்ள பிறப்பும், அந்தஸ்தும, பொருளும் இருக்குமானால், அவரைவிட்டு மற்றொருவனை சீக்கிரமாக நிச்சயித்துவிடமாட்டே னென்றாள். அவள் இப்படி உணர்ச்சிப் பிரவாகத்துடன் பேசுவதைக் கேட்டு புன்னகை செய்தேன். ஆனால், இப்படிப்பட்ட ஆபத்தில்லாத மனப்பால் குடித்தலால் ஏற்படும் அதிக சந்தோஷத்தில் நான் எப்பொழுதும் அதிருப்தி கொள்வதில்லை.

## அத்தியாயம் 4

*மிகவும் சொல்பமான ஐசுவரியம் சந்தோஷத்தைக் கொடுக்கலாம் என்பதற்கு அத்தாக்ஷி. அது தனத்தால் வருவதில்லை; ஆனால், தேக அமைப்பால் வருகிறது.*

எங்களுடைய நூதன வீடு தங்கள் நிலங்களைத் தாங்களே உழுது பயிரிடும் குடியானவர்களின் குடியிருப்பை ஒட்டி இருந்தது. அவர்கள் தனம் தரித்திரம் இவ்விரண்டையும் ஒரேமாதிரி அறியாதவர்கள். அவர்களுக்கு ஜீவனத்திற்கு வேண்டிய எல்லா சௌகரியங்களும் அவர்களிருக்கும் இடத்திலேயே கிடைக்கப்பெற்றன. ஆகையால் நகரங்களுக்கோ, பட்டணங்களுக்கோ, ஜீவனத்திற்கு அவசியமில்லாத அதிகப்படி சாமான்களைத் தேடிக்கொண்டு அவர்கள் போவதில்லை. நாகரிக நடை உடை பாவனைகளிலிருந்து எட்டியிருந்த போதிலும், அவர்கள் புராதனமான எளிய நடவடிக்கைகளை இன்னமும் கைக்கொண்டு ஒழுகி வந்தார்கள். இயற்கையான வாழ்க்கையில் கணிசமாய் இருந்ததால், அடக்கம் என்பது ஒரு நன்னடத்தை என்று தெரிந்துகொள்ள அவர்களுக்கு சந்தர்ப்பமில்லை. வேலை செய்யவேண்டிய நாட்களில் முக மலர்ச்சியோடு வேலை செய்தார்கள். ஆனால் திருவிழா நாட்களை மட்டுமே, இன்பங்களில் ஈடுபட்டு ஓய்வுநாளாகக் கொண்டாடினார்கள். அவர்கள் கிறிஸ்துமஸ் பஜனை செய்து வந்தார்கள். வாலண்டைன் தினத்தில் நிஜக் காதல் முடிச்சை ஒருவருக்கொருவர் அனுப்பிக்கொண்டார்கள். ஷ்ரோவ் டைட் நாட்களில் அடை தட்டித் தின்றார்கள். ஏப்ரல் முதல் தேதியன்று தங்களுடைய புத்திசாலித்தனத்தைக் காண்பித்து உரையாடிக்கொண்டிருந்தார்கள். மைக்கல்மாஸ் மாலையில் சிரத்தையோடு பருப்புடன் கூடிய கொட்டைகளை உடைத்தார்கள். எங்களுடைய வரவு முன்கூட்டி அறிவிக்கப்பட்டிருந்தது. ஊரி



லுள்ள யாவரும் தங்களுடைய புரோகிதரைச் சந்திப்பதற்கு, மிக பளபளப்பான உடையை உடுத்திக்கொண்டு, நாயனமும், தபேலாவும் வாசிக்கச் செய்துகொண்டு வந்தார்கள். எங்களை வரவேற்பதற்காக, ஒரு விருந்து ஏற்பாடு செய்திருந்தார்கள். நாங்கள் குதூகலத்துடன் அதை ஏற்றுக்கொண்டோம். பேச்சு சாதுர்யம் இல்லாத சமயங்களில் குதூகலச் சிரிப்பால் சம்பாஷணையைச் சமனப்படுத்தினோம்.

எங்களுடைய சிறிய விடுதியோ ஒரு சாய்வான மலைக்குன்றின் அடிவாரத்திலிருந்தது. வீட்டின் பின்புறத்தில் ஒரு அழகிய தோப்பு அதை சூழ்ந்துகொண்டிருந்தது. அதன் முன்னால் சலசலவென்று சப்திக்கும் ஒரு ஆறும், ஒருபக்கத்தில் ஒரு புல் மைதானமும், இன்னொரு பக்கத்தில் ஒரு பசுமையான தரையும் இருந்தன. என்னுடைய நிலம் இருபது ஏக்கர் விஸ்தீர்ணமுள்ள மிகவும் செழிப்பான பூமி. எனக்கு முன் அதை அநுபவித்து வந்தவருக்கு நன்கொடையாக நான் நூறு பவுன் கொடுத்தேன். எங்களுடைய வாசத்திற்காக ஏற்படுத்தப்பட்ட சிறிய மறைப்புக்களின் ரமணீயம் இன்றியமையாதது. எல் மரமும் வேலி போல் வளர்க்கப்பட்ட புல் வரிசைகளும் சொல்ல முடியாத வனப்பைத் தந்தன. என் வீட்டிற்கு மேல் மாடி கிடையாது. கூரையால் வேயப்பட்டதால் மிகவும் அடக்கமுள்ள இடமாக விளங்கிற்று. உட்புறம் சுவர்கள் நேர்த்தியாக வெள்ளையடிக்கப்பெற்றிருந்தன. என் பெண்கள், அவர்களே வரைந்த படங்களால், சுவர்களை அலங்கரிப்பதாக ஏற்றுக்கொண்டார்கள். ஒரே அறையில் சமையல் செய்துகொண்டு, அதையே கூடமாக வைத்துக்கொண்டோம். அதனால் அது அதிக கணகணப்போடு இருந்தது. மேலும் அதை எவ்வளவு சுத்தமாக வைத்துக்கொள்ள முடியுமோ அவ்வளவு சுத்தமாக வைத்துக்கொண்டோம். சட்டிகள், தாலங்கள், தாமிரம், பித்தளைகளெல்லாம் நன்கு தேய்க்கப்பட்டு அலமாரிகளில் பளபளப்பாக, வரிசையாக வைக்கப்பட்டிருந்தன. பார்ப்பதற்கு கண்ணுக்கு குளிர்ச்சியாயிருந்தன. இதற்கு மேல் விலையுள்ள பாத்திரங்களை

விரும்பவில்லை. இதைத் தவிர மற்ற மூன்று அறைகளிருந்தன. ஒன்றை நானும் என் மனைவியும், எங்கள் உள்ளுக்குள்ளடங்கிய அறையை என் இரண்டு பெண்களும், மற்றொன்றை இரண்டு படுக்கைகளோடு மற்றக் குழந்தைகளும் உபயோகித்து வந்தோம்.

இந்தச்சிறிய குடியரசுக்கு நான் சட்டம் செய்பவன். பின்வருமாறு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. சூரியோதயத்திற்குள் நாங்கள் எல்லோரும் பொது அறையில் கூடுவோம். அங்கே கணப்பில் நாங்கள் வருமுன்னரே எங்கள் வேலைக்காரன் தீ போட்டு வைப்பான். முதலில் நாங்கள் ஒருவருக்கொருவர் தகுந்தபடி ஆசி கூறிக் கொள்ளுவோம். ஏனெனில் சரியாகக் கொண்டு வரப்பட்ட குடும்பத்தைக் குறிக்க சில ஏற்பாடான மரியாதைகளை அநுசரிக்க வேண்டுமென்பது என் கொள்கை. அப்படியில்லாவிடில், சுதந்திரம் ஒருவருக்கொருவருள்ள நட்பைப் போக்குகிறது. பிறகு காலை தொடங்கிய இன்னொரு நாள் வாழ்வை அளித்த கடவுளுக்கு நன்றியைச் செலுத்தித் தொழுவோம். இந்தக் கடமையைச் செலுத்தியபின், நானும் என்னுடைய மகனும் வெளிப் புறப்பட்டு எங்களுக்கு வழக்கமான விவசாயத்தை நடத்தினோம். என் மனைவியும் பெண்களும் காலை உணவைத் தயாரிப்பார்கள். அந்த உணவு எப்பொழுதும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் தயாராய் இருக்கும்.

இந்தச் சாப்பாட்டிற்கு அரை மணி அளித்தேன். பகல் சாப்பாட்டிற்கு ஒரு மணி நேரம். அந்தச் சமயத்தில் என் மனைவியும் பெண்களும் சரசமாகப்பேசிக் களித்துக்கொண்டிருப்பார்கள். நானும் என் மகனும் தத்துவ விஷயங்களைப் பேசிக்கொண்டிருப்போம். சூரியோதயத்தோடு எழுந்திருப்பவர்களாதலால் சூரிய அஸ்தமனத்திற்குமேல் எங்களுடைய அலுவல்களை எப்பொழுதும் செய்வதில்லை. எங்களை எதிர்பார்க்கும் எங்களுடைய வீட்டிற்குத் திரும்புவோம். அங்கே எங்களைப் புன் சிரிப்புடன் வரவழைத்து, சுத்தமான சமயலறையும் ஹிதமாயுள்ள கணப்பும் எங்களை வரவேற்கத் தயாரித்து வைக்கப்பட்டிருக்கும்.



விருந்தாளிகளும் இல்லாமலில்லை. சில சமயங்களில் எங்கள் பக்கத்திலுள்ள வாயாடிக்காரனாகிய பிளாம்பரோ என்ற விவசாயியும் அநேகமாய்க் குருட்டு நாயனக்காரனும் எங்களை விசாரிக்க வருவார்கள். கூஸ்பரி மது தயாரிப்பதில் எங்களுக்குத் தெரிந்த பக்குவமும் எங்களுக்கு அதிலுள்ள புகழும் போகவில்லை. அந்த மதுவை அவர்கள் பானம் செய்வார்கள். இவர்களெல்லாம் கபடமற்றவர்கள். அநேக விதமாய் இவர்கள் தங்களுடைய வாயினால் எங்களைப் பயன் படுத்துவார்கள். ஏனெனில் ஒருவர் நாயனம் வாசிப்பார். மற்றொருவர் மனதிற்குச் சாந்தியை உண்டாக்கும் குறவஞ்சிகளைப் பாடுவர்—அதாவது ஆர்ம்ஸ்டிராங் கல்பனை செயத ஒரு பாட்டை இந்த நல்ல மனிதர்களில் யாராவது ஒருவர் பாட ஆரம்பித்தால் மற்றொருவர் "லாஸ்ட் குட் நைட்" (கடைசி வந்தனம்) அல்லது பார்பாரா ஆலன் என்பவளுடைய "குரூரம்" முதலிய சுகமான பாடல்களைப் பாடுவர். இபபடியாக அவர்கள் உடன் இருப்பது சந்தோஷமாக இருக்கும். காலையில் முதலில் ஆரம்பித்ததுபோலவே இரவையும் முடிப்போம். என்னுடைய சிறு பிள்ளைகள் அன்றைக்குக் குறிப்பிடப்பட்ட நல்ல வாக்கியங்களை அப்பொழுது படிக்க வேண்டும் என்று ஏற்பாடு. அவர்களில் எவன் கணீரென்று தெளிவாய், மிகவும் நன்றாய் வாசிக்கிறானோ அவனுக்கு, அடுத்த ஞாயிற்றுக்கிழமை ஏழைகளுக்குதவும் உண்டியில் போட, அரைப்பென்னி அளிக்கப்படும்.

ஞாயிற்றுக்கிழமை வந்தால், அது எங்களுக்கு ஒரு உல்லாசமான நாளாயிருக்கும். என்னுடைய உணவு சம்பந்தமான சட்ட திட்டங்களெல்லாம் அன்று பறந்து போய்விடும். கர்வத்தை நீக்கவேண்டுமென்ற என்னுடைய போதனையினால் என் பெண்களுடைய வீண் கர்வத்தைப் போக்கடித்தாய்விட்டதென்று எவ்வளவு மனப்பால் நான் குடித்தாலும், இன்னும் அவர்கள் முன்போலவே ரகசியத்தில் ஆடம்பரம் செய்துகொள்ள மிகவும் அவாக்கொண்டிருந்தார்கள். அவர்கள் இன்னும்கூட லேஸ், ரிப்பண்டுகள், மணிகள், வளைகள் இவைகளில் பிரியம் வைத்திருந்தார்கள். என்னுடைய மனைவி அவளுடைய

சிவப்பு மேலாக்கு மீது இன்னும் ஆசை வைத்திருந்தான். ஏனெனில் நான் அது அவளுக்குப் பொருத்தமாயிருக்கிறது என்று சொல்லியிருந்தேன். முதல் ஞாயிற்றுக்கிழமையிலேயே அவர்களுடைய நடவடிக்கைகள் என்னைத் துன்புறுத்தின.

முதல்நாள் இரவிலேயே நான், என் பெண்களை சீக்கிரமாகவே உடை உடுத்திக்கொண்டு தயாராய் இருக்கும்படி தெரிவித்திருந்தேன். ஏனெனில், கோவிலில் கூடும் மற்ற ஜனங்கள் வருவதற்கு தகுந்த காலத்திற்கு முன்னே, நான் போய்ச் சேருவதில் எனக்குப் பிரியம். அவர்கள் என்னுடைய எச்சரிக்கையை சொன்னபடி நிறைவேற்றினார்கள். ஆனால் நாங்கள் காலைச் சாப்பாட்டுக்குக் கூடும் பொழுது என் மனைவியும் பெண்களும் பழையமாதிரியுள்ள வைபவத்தோடு உடை உடுத்திக் கொண்டிருந்தார்கள். கூந்தலுக்கு போமேடு வாசனை தடவிக்கொண்டும், முகத்திற்கு இஷ்டம்போல் பவுடர் பூசிக்கொண்டும், அவர்களுடைய ஆடைகளின் பின்தொங்கும் வரிசைகளை தொங்காமல் இழுத்து சுருக்கிக் கட்டிக்கொண்டும் இருந்தனர். இதனால் நடக்கும்போது ஒவ்வொருதடவையும் சலசலப்பு ஏற்பட்டுக் கொண்டிருந்தது. அவர்களுடைய கர்வத்தைப் பார்த்து எனக்குப் புன் சிரிப்பு வாராமலில்லை. முக்கியமாய் என் மனைவியைப் பார்த்தே புன்னகை செய்தேன். ஏனென்றால் பாக்கிப் பேர்களைவிட அவளே சந்தர்ப்பத்திற்கேற்றவாறு நல்லமாதிரியாக நடப்பாள் என்று எதிர்பார்த்தேன். இந்தத் தருணத்தில் நான் என்ன செய்யக்கூடும்? ஆகையால் என் மகனைக் கூப்பிட்டு வெகு கம்பீரமாகக் கோச் வண்டி ஒன்றை ஏற்பாடுசெய்யச் சொன்னேன். என் பெண்கள் என்னுடைய உத்தரவைப் பார்த்து அதிசயித்தார்கள். ஆனால் நான் முன்னைவிட அதிக வினயத்துடன் மறுபடியும் அப்படியே சொன்னேன். உடனே என் மனைவி, "இது உண்மைதானா? என் பிரியரே, எங்களைப் பரிகாசம் பண்ணுகிறீர்களா? நாங்கள் கால்நடையாக மிகவும் நன்றாகச் செல்ல முடியும். இப்பொழுது எங்களை ஏற்றிச்செல்ல கோச் வண்டி வேண்டாம்" என்று உரைத்தான். "குழந்தாய், நீ என்னைச் சரிவரத்



தெரிந்து கொள்ளவில்லை. நமக்குக் கோச் வண்டி வேண்டியதுதான். ஏனெனில் நாம் இந்த பாணியில் கோவிலுக்கு நடந்துபோனால் ஊரிலுள்ள குழந்தைகள் நம் பின்னால் ஓடிவந்து கைதட்டிச் சத்தமிடும்" என்று சொன்னேன். "அதுவும் அப்படியா? என் சார்லஸ், தம் குழந்தைகள் பரிசுத்தமாயும் அழகாயும் தம் பக்கத்தில் வளைய வருவதைப் பார்க்க பிரியப்படுவார்களென்றல்லவோ நினைத்தேன்" என்றாள் என் மனைவி. "நீங்கள் இஷ்டப்பட்டவரையில் பரிசுத்தமாயிருக்கலாம். அதனால் நான் உங்களிடத்தில் அதிகப் பிரியம் வைப்பேன். ஆனால் இவையெல்லாம் பரிசுத்தமல்ல; மான ஹீனமல்லவா? இந்தக் குலுக்கும் கலர்களும் பார்டர்களும் நம்மைப்பார்த்து அயலாரின் மனைவிமார் வெறுக்கும்படி செய்யுமல்லவா? வேண்டாம், என் குழந்தைகளே, அந்தக் கவுன்களை சாதாரணமான உடைகள்போல் வெட்டித் தைத்துவிடலாம். ஏனெனில் உயர் வாழ்க்கை நடத்த விரும்பும் பொருளில்லாதவர்களுக்கு ஆடம்பரம் தகவேதகாது. இவ்வளவு தொங்கலும் மடக்கலும் பணக்காரர்களுக்கே தகுமோவென்றும் தெரியவில்லை. ஏனெனில் நிதானமாகக் கணக்கிட்டுப் பார்த்தாலும், ஏழை ஜனங்களின் நிர்வாணத் தன்மையை வீணர்களின் மடிப்புவைத்துத் தைக்கும் துணியைக்கொண்டே மூடிவிடலாம்." என்றேன்.

இந்தக் கண்டனம் அவர்களிடத்தில் தகுந்த மாறுதலை உண்டு பண்ணிற்று. மிகவும் அமைதியோடு அவர்கள் உடனே உடையை மாற்றிக்கொள்ளப் போனார்கள். மறுநாள் என் பெண்கள் தங்களுடைய வேண்டுகோளின்பேரிலேயே என்னுடைய சிறு குழந்தைகள் டிக், பில் இவர்களுக்கு, ஞாயிற்றுக்கிழமை கோவிலுக்குப் போகும்பொழுது போட்டுக் கொள்ளும் வெயிஸ்ட் கோட் செய்வதற்காக தங்கள் உடையில் தொங்கல் துணியை எல்லாம் வெட்டிக்கொண்டிருந்தார்கள். அதைப் பார்க்க எனக்கு மிகவும் சந்தோஷம் உண்டாயிற்று. அதில் இன்னும் என்ன விசேஷமென்றால், கவுன்கள் அப்படி வெட்டப்பட்டபின், அவர்களுக்கு முன்னைவிட நன்றாக அமைந்து விட்டன.

# அத்தியாயம் 5

*ஒரு புதிய நண்பர்களின் வரவேற்பு. நாம் எந்த விஷயத்தை மிக்க ஆசையுடன் எதிர்பார்க்கிறோமோ அது வழக்கத்தில் நீங்லக விளைவிக்கிறது.*

என் வீட்டிலிருந்து கொஞ்ச தூரத்தில், எனக்கு முன்பிருந்தவர், ஹாதார்ன், ஹனிஸகில் என்று சொல்லப்படும் கொடிகளை வளர்த்து, அவற்றால் மறைக்கப்பட்ட ஒரு மேடை போட்டிருந்தார். இங்கே தினசரி கால நிலை மனோகரமாக இருக்கும்பொழுது, எங்கள் அலுவல்களை சீக்கிரத்தில் முடித்துக்கொண்டு, நாங்கள் அவ்வப்பொழுதெல்லாம் அங்கே கூடி உட்கார்ந்துகொண்டு, சாயங்கால அமைதியில் விஸ்தாரமான காட்டு வளப்பத்தைக் கண்ணுற்றுக் களிப்போம். இங்கேயே தேயிலை பானமும் அருந்துவோம். அதையும் சமயா சமயங்களில், ஒரு விருந்தாக ஏற்படுத்திக் கொண்டதால், அச்சமயங்கள் ஒரு புதிய குதூகலத்தை உண்டுபண்ணிற்று. அது சொல்லவொண்ணா பரபரப்போடும் சிரத்தையோடும் தயாரிக்கப் பட்டது. எப்பொழுதுமே, என் சிறிய குழந்தைகள் எங்களுக்குக் குறிப்பிட்ட வாசகங்களை வாசிப்பார்கள். நாங்கள் சாப்பிட்ட பிறகு, அவர்களுக்கு சரிவர கொடுக்கப்பட்டது. சில சமயங்களில், எங்களுடைய களிப்பிற்கு பலவிதமான ரசங்கள் கொடுக்க, என் பெண்கள் பிடில் வாசிப்பார்கள். அவர்கள் அப்படி ஒரு கோஷ்டியாய் வாசிக்கும்பொழுது நானும் என் மனைவியும் சரிவான வயல்புறங்களில் உலாவிக்கொண்டிருப்போம். அவற்றின் பக்கங்களில், நீலப் பூக்களும் மஞ்சள் பூக்களும் பூத்திருக்கும். அப்படி நடந்து போகும் பொழுது, களிப்புடன் எங்கள் குழந்தைகளைப்பற்றி பேசிக்கொண்டும், ஆரோக்கியத்தையும் மனச் சாந்தியையும் அதிகரிக்கச் செய்யும் காற்றை நுகர்ந்துகொண்டும் நடப்போம்.



இவ்விதமாக, வாழ்க்கையில் எப்படிப்பட்ட நிலைமையும், அவை அவற்றிற்குத் தகுந்தவாறு இன்பங்களை ஊட்டுமென்று கண்டுகொண்டோம். தினமும் காலை நேரம், நாங்கள் எங்களுடைய வேலையைத் தொடர்ந்து செய்ய, எங்களை எழுப்பிவிடும். மாலை நேரமோ, எங்கள் வேலைக்குப் பிரதியாக கவலையற்ற சந்தோஷத்தைக் கொணர்ந்து அளிக்கும்.

இலையுதிர்கால ஆரம்பச் சமயம். அப்பொழுது ஒரு விடுமுறை நாள். அந்நாட்களை உழைப்பிலிருந்து இளைப்பாறும் விடுமுறை நாட்களாக வைத்துக்கொண்டேன். என் குடும்பத்தை வழக்கம்போல் விளையாடும் மேடைக்குக் கூட்டிச் சென்றிருந்தேன். எங்களுடைய வாலிப இசைமணிகள் தங்கள் கோஷ்டி கானத்தை வழக்கம் போல் ஆரம்பித்தார்கள். இப்படி நாங்கள் நேரத்தைப் போக்கும் பொழுது, உட்கார்ந்திருக்கும் இடத்திலிருந்து இருபது அடிக்குள் ஒரு மான் பக்கத்தில் துள்ளிக்கொண்டு போவதைப் பார்த்தோம். அதன் பெருமூச்சைப் பார்த்தால் அது வேடனால் பின்தொடரப்பட்டதாகத் தெரிந்தது. அந்தப் பிராணியின் கஷ்ட நிலையை நாங்கள் கவனிப்பதற்குள், வேட்டை நாய்களும் குதிரை சவாரிகளும், பின்னால் கொஞ்ச தூரத்தில் வியாபித்துக்கொண்டு வருவதைப் பார்த்தோம். மான் வந்த அதே அடிச் சுவட்டிலேயே, அவர்கள் வந்தார்கள். நான் என் குடும்பத்தினரோடு உடனே திரும்பிவிட எத்தனித்தேன். ஆனால் புதுமையினாலோ, அல்லது ஆச்சரியத்தாலோ, அல்லது வேறு ஏதாவது புலப்படக்கூடாத காரணத்தினாலோ, என் மனைவியும் பெண்களும் உட்கார்ந்திருந்த இடத்தை விட்டு நகரவில்லை. முன் வரிசையில், குதிரையில் வரும் வேடர்கள் எங்களை வெகு வேகமாகத் தாண்டிச் சென்றார்கள். அவர்களுக்குப் பின்னால் நாலைந்து பேர்கள் அவர்களைப் போல் அவசரமாகவே பின்தொடர்ந்து போனார்கள். கடைசியில் ஒரு வாலிப கனவான் மற்றவர்களைவிட அதிக கௌரவமான தோற்றத்துடன், எங்கள் முன் தோன்றினர். எங்களைக் கொஞ்ச நேரம் உற்றுப் பார்த்து, வேட்டையைப் பின்தொடராது, சட்டென நின்றுவிட்டார். பக்கத்தில்

வந்துகொண்டிருந்த ஒரு சேவகனிடம் தன் குதிரையைக் கொடுத்துவிட்டு, ஒன்றையும் மதிக்காத மேல் நோக்கின பார்வையோடு அவர் எங்களை அணுகினார். அவர் முன் அறிவிக்கப்பட வேண்டுமென்கிற மரியாதையைக் கவனிக்காதவர்போல் தோன்றியது. ஆனால் அன்புடன் வரவேற்பு தனக்குக் கிடைக்கும் என்கிற தீர்மானத்துடன், என் பெண்களுக்கு வந்தனமளிக்க ஆரம்பித்தார். சிறு பிராயத்திலேயே அப்படிப்பட்ட தப்பை அசட்டை செய்ய அவர்கள் கற்றிருந்தார்கள். அதனால் என் பெண்களால் நிராகரிக்கப்பட்டதும், அவர் தன் பெயர் தார்ன்ஹில் என்று தெரிவித்துக் கொண்டார். எங்களைச்சுற்றிலுமுள்ள விஸ்தாரமான நிலங்களுக்கெல்லாம் சொந்தக்காரர் என்றும் சொன்னார். அக்காரணத்தினால் மறுபடியும் என் குடும்பத்தின் ஸ்திரீ வர்க்கத்தை வணங்கக் கோரினார். தனத்தினுடையவும் நல்ல உடையினுடையவும் மதிப்பால் அவரை இரண்டாவது தடவை மறுதளிக்கக்கூடவில்லை. அவருடைய பேச்சு மமதையுடனிருந்த போதிலும் சகஜமாயிருந்ததால் நாங்கள் சீக்கிரத்தில் பழக்கமுள்ளவர்கள் போல் ஆனோம். பக்கத்தில் சங்கீத வாத்யங்கள் இருப்பதைப் பார்த்து, ஒரு பாட்டுப் பாட வேண்டிக் கொண்டார். எனக்கு அவ்வளவு ஸ்தான பேதமுள்ள பழக்கங்களில் இஷ்டப்படாததால் நான் அவர்கள் சம்மதிக்காதிருக்கும்படி என் பெண்களுக்கு கண் ஜாடை காட்டினேன். ஆனால் என்னுடைய குறிப்பு அவளுடைய தாயாரின் குறிப்பில் ரத்து செய்யப்படவே, அவர்கள் சந்தோஷத்துடன் ட்ரைடனுடைய பாட்டுக்களில் பிரசித்தமான ஒருபாட்டைப் பாடினார்கள். மிஸ்டர் தார்ன்ஹில் அவர்கள் பாடுவதையும் எடுக்கப்பட்ட பாட்டையும் விசேஷமாக ஆமோதித்ததாகத் தோன்றியது.

அப்புறம், அவரே பிடிலை எடுத்துக்கொண்டு, தாமே வாசித்தார். ஆனால் மிகவும் அசிரத்தையுடன் பாடினார். அப்படியிருந்தும் என் மூத்த பெண் அவர் ஏற்கனவே கூறின ஆசிலை வட்டி சேர்த்து திருப்பிக் கூறினாள். அவருடைய குரல் தம்முடைய சங்கீத உபாத்தியாயருடையதைவிட கணீரென்று இருந்ததாகச் சொன்னாள். இந்



வெகுமானத்திற்கு, அவர் வந்தனமளித்தார். அதை அவள் தலை அசைப்பால் அங்கீகரித்தாள். அவர் அவளுடைய ரசிக பாவத்தையும் புகழ்ந்தார். அவள் அவருடைய புத்தி சாதுர்யத்தை கொண்டாடினாள். ஒருவருக்கொருவர் ஆயுள்பரியந்தம் பழகியிருந்தாலும், அவர்களுக்குள் அதைவிட அதிகமான நட்பு ஏற்பட்டிராது. இதற்குள் புத்ரிகளினிடத்தில் வாத்ஸல்யமுடைய தாயும், தானும் அச் சந்தோஷத்தில் மூழ்கி, தங்கள் முதலாளியை தங்கள் வீட்டிற்கு வந்து அவள் செய்யும் கூஸ்பரி மதுவில் ஒரு கிளாஸ் பானம் செய்ய வேண்டுமென்று வற்புறுத்தினாள். என் குடும்பத்தார் எல்லோரும் அவரைத் திருப்தி செய்வதிலேயே ஈடுபட்டிருந்தார்கள். என் பெண்கள் மிகவும் நூதனமானவை என்று தாங்கள் கருதிய சமாச்சாரங்களைப் பேசி, அவரைக் களிப்பிக்க முயன்றார்கள். மோஸஸ் அதற்கு விரோதமாக புராதன இலக்கியங்களிலிருந்து, ஒன்றிரண்டு கேள்விகள் கேட்டான். அதைக் கண்டு எல்லோரும் சிரித்தார்கள். என் சிறுவர்களும் சுறுசுறுப்பில் பின்வாங்கவில்லை. அவர்கள் புதிதாய் வந்தவரை சுற்றிக் கொண்டு குலாவினார்கள். அவர்கள் வந்தவருடைய உடையிலிருக்கும சரிகைகளை தங்கள் அழுக்கு விரல்களால் தொட்டும் அவருடைய சட்டைப்பை மூடு துணிகளை, அதில் என்ன இருக்கிறதென்று பார்க்கத் தூக்கியும் கொண்டிருந்ததைத் தடுக்க நான் என்ன பிரயத்தனம் செய்தும், அவர்களைத் தொடாமலிருக்கச் செய்ய முடியவில்லை. மாலை நேரம் அணுகவே, அவர் உத்தரவு பெற்றுச் சென்றார். ஆனால் போவதற்கு முன், தம்முடைய வரவை மறுபடியும் செலுத்த, உத்தரவு பெற்றுக் கொண்டார். அவர் எங்கள் முதலாளியாகையால், நாங்கள் வெகு சீக்கிரத்தில் சம்மதித்தோம். அவர் போனவுடன் என் மனைவி அன்று நடந்த வைபவங்களைப்பற்றிப் பேச ஒரு ஆலோசனை சபை கூட்டினாள். அவள் இது எங்களுக்கு மிகவும் பாக்கியத்தைக் கொடுக்கக் கூடிய ஒரு சம்பவமென்றாள். ஏனென்றால் அன்று நடந்த விஷயத்தைக் காட்டிலும் மிகவும் எதிர்பாராத சம்பவங்கள் உலக மார்க்கத்தில் நடைபெற்றிருக்கின்றன. மறுபடியும் நாங்கள் மிகவும் பெரிய மனிதர்களோடு சரிசமமாகப் பாராட்டப்படும் காலம்

திரும்பி வரும் என்று அவள் எதிர்பார்த்தாள். ஸ்ரீமதிரிங்கவர்கள் இருவரும் பெரிய தனவான்களை விவாகம் செய்துகொள்ளலாம் என்றால், தன்னுடைய குழந்தைகளுக்கு மட்டும் ஏன் அப்படி ஒன்றும் கிடைக்காமல் போகவேண்டுமென்று கூறினாள். இந்தக் கடைசி உதாரணம் எனக்காகச் சொல்லப்பட்டதால் நான் அப்படிச் சம்பவம் கூடுவதற்கு ஒரு முகாந்திரமும் தெரியவில்லை என்று சொன்னேன். "ஏன் மிஸ்டர் ஸிம்கின்ஸ்க்கு லாட்டரியில் பதினாயிரம் பவுன் பிரைஸ் கிடைக்க வேண்டும்; நமக்கு பிளாங்கியாய்ப் போக வேண்டும்?" என்றேன். "நான் மறுக்கிறேன்—சார்லஸ், இப்படித்தான் நீர் என்னையும் என் பெண்களையும் நாங்கள் உற்சாகமாயிருக்கும் சமயங்களில் மட்டம் தட்டுகிறீர். ஸோபியா, நீ சொல், என் கண்மணி, நம்முடைய புது வரவைப்பற்றி நீ என்ன நினைக்கிறாய்? அவர் மிகவும் நல்ல சுபாவமுடையவரென்று உனக்குத் தோன்றவில்லையா?" என்று என் மனைவி கூக்குரலிட்டாள். "சந்தேகமில்லாமல்" என்று அவள் பதிலளித்தாள். "அவர் ஒவ்வொரு விஷயத்தைப் பற்றியும் எவ்வளவோ சொல்லுவதற்கு சாமர்த்தியமுடையவரென்று நினைக்கிறேன். எப்பொழுதும் அவருக்கு சந்தேகம் வருவதில்லை. ஒரு விஷயம் எவ்வளவு அற்பமோ அதற்குத் தகுந்தவாறு அதிகமாய்ப் பேசுகிறார்." "ஆம்" என்று ஒலிவியா சொன்னாள். "ஆடவனுக்குரிய எல்லா அம்சங்களும் அவரிடத்தில் பொருந்தியுள்ளன. ஆனால் என் மட்டிலும் அவரை எனக்கு அவ்வளவு பிடிக்கவில்லை. அவர் மிகவும் அதிகப் பிரசங்கி. மிகவும் சொந்தம் கொண்டாடுகிறார். ஆனால் பிடில் எடுத்தாரோ கர்ண கடூரம்." இந்த இரண்டு பேச்சுகளுக்கும் நேர் முரணாக நான் அர்த்தம் செய்து கொண்டேன். இதனால் ஸோபியா அவரை உள்ளத்தில் எவ்வளவு இழிவாக நினைத்தாளோ அவ்வளவு ஒலிவியா மனப்பான்மையில் அவரை நன்கு பாராட்டினாள் என்று அறிந்தேன். நான் சொன்னதாவது: "அவரைப் பற்றி உங்களுடைய அபிப்ராயங்கள் எப்படியிருந்தபோதிலும், உண்மையை உரைப்பின், அவர் என்னுடைய நல்ல அபிப்ராயத்தை அடையவில்லை. அந்தஸ்து வித்தியாசமுள்ள சிநேகிதம் எப்போதும் கசப்பில் வந்து முடியும்.



அவர் எவ்வளவு சகஜமாயிருந்தபோதிலும், அவருக்கும் நமக்குமுள்ள தூரம் எவ்வளவென்று நன்றாக உணர்ந்திருந்தாரென்றுதான் நான் நினைத்தேன். நாம் நமக்கு சமமான ஸ்திதியில் உள்ள சிநேகிதர்களுடன் நிறுத்திக் கொள்வதே போதுமானது. உலகத்தில் எப்படியாவது பொருள் தேடுவதே தொழிலாக உள்ளவனைக் காட்டிலும் இகழ்ச்சியான நடத்தையுடையவன் வேறு கிடையாது. அப்படியே சம்பந்தத்தில் பொருள் தேடும் ஸ்திரிகளும் ஏன் நிந்திக்கப்படமாட்டார்களென்பதற்கும் எனக்கு ஒரு காரணமும் தோன்றவில்லை. ஆகையால் அவருடைய எண்ணம் மரியாதை தவறாதிருந்தாலும், மிகவும் விரோதமின்றி பார்ப்பவர்களுக்குக்கூட நாம பரிகாசத்திற்கிடமாவோம். ஆனால் அவருடைய எண்ணம் விபரீதமாயிருந்தால், அதை நினைக்கக்கூட எனக்கு நடுக்கம் உண்டாகிறது. நிஜத்தில், எனக்கு என்னுடைய மக்களின் நடவடிக்கைகளில் ஒருவித ஐயமுமில்லை. ஆனால் அவருடைய நடத்தையில் கொஞ்சம் பயமிருக்கிறது" என்று சொல்லி முடித்தேன். மேலும் சொல்லிக்கொண்டிருப்பேன். ஆனால் அந்த ஸ்குயரிடமிருந்து ஒரு வேலைக்காரன் வந்தவுடன் நிறுத்திவிட்டேன். அவர் தம்முடைய வணக்கத்துடன் மான் மாமிசத்தில் ஒரு பெரிய துண்டத்தை அவன் மூலம் அனுப்பி சில நாள் கழித்து எங்கள் வீட்டில் பகல் உண்டிக்கு வருவதாக வாக்களித்து அனுப்பினார். நான் சொல்லக்கூடியது எவ்வளவு இருந்தாலும் அதனால் தடைபடக்கூடியதைவிட இந்த சமயோஜித வெகுமானம் அதைக் காட்டிலும் பலமாக அவர் பக்ஷம் பேசிற்று. ஆகையால் நான் மேலே ஒன்றும் சொல்லாமலே இருந்தேன். வழியிலுள்ள பயத்தை எடுத்துக் காட்டியாய் விட்டது. இனிமேல் அதைத் தவிர்த்துக்கொள்ள அவர்களுடைய புத்திமதிக்கு விட்டுவிட வேண்டியதுதானே? எப்போதும் காவல்வைத்து காப்பாற்றப்பட வேண்டிய நன்னடத்தை பாதுகாப்புக்குரிய விஷயமல்ல.

# அத்தியாயம் 6

## நாட்டுப்புற வாசமும் அதன் ஆனந்தமும்

முன் சொல்லப்பட்ட ஆட்சேபணையை நாங்கள் கொஞ்சம் உஷ்ணத்தோடு மேல் நடத்திக்கொண் டிருந்தமையால், அப்பொழுது ஒரு சமரசம் ஏற்படுத்தவேண்டி நாங்கள் எல்லோரும் அந்த மான் மாமிசத்தின் ஒரு பாகத்தை அன்றிரவு உணவிற்கு வைத்துக்கொள்ளுவதென்று தீர்மானித்தோம். என் பெண்கள் அந்த வேலையை உற்சாகத்துடன் ஏற்றுக்கொண்டார்கள். "இந்த சுகபோஜனத்தில் கலந்துகொள்ள நமக்கு ஒரு அன்னியரோ அல்லது பக்கத்து வீட்டுக்காரர்களோ இல்லையென்று நான் வருந்துகின்றேன். இப்பேர்ப்பட்ட விருந்துகள் அதிதிகளோடு சாப்பிட்டால் இரட்டிப்பு ருசி கொடுக்கும்" என்று சொன்னேன். "என்னை பகவான் ஆசிர்வதிக்க வேண்டும். இங்கே வருகிறவர் நம்முடைய நல்ல நண்பர் மிஸ்டர் பர்ச்செல். அவர் நம்முடைய ஸோபியாவை பிழைக்க வைத்தார். மேலும் உங்களைத் தர்க்கத்தில் அநேகமாய் தோல்வி அடையச் செய்தார் அல்லவா?" என்றாள், என் மனைவி. "என்னையா தர்க்கத்தில் மடக்குவது? குழந்தாய், உனக்கு அதைப்பற்றி ஒன்றும் தெரியாது. என் கண்மணியே, என்னை அப்படிச் செய்யக் கூடியவர்கள் ஒருவருமில்லை என்று நினைக்கிறேன். கூஸ்பரி கூட்டு பண்ணுவதில் உன் சாமர்த்தியத்தை நான் எப்பொழுதும் சந்தேகத்ததில்லை. ஆகையால் தர்க்க சங்கதிகளை என்னிடம் விட்டுவிடு" என்று நான் உரக்கக் கூவினேன். நான் பேசிக்கொண் டிருக்கும்பொழுதே, எளிய மிஸ்டர் பர்ச்செல் வீட்டில் நுழைந்தார். எல்லோரும் அவருக்கு நல்வரவு கூறி மனப்பூர்வமாய் கைகுலுக்கினார்கள். குழந்தை டிக்கும் கூட, சொல்லாமலே ஒரு நாற்காலியை அவர் உட்காருவதற்கு இழுத்துப் போட்டான்.



நான் அந்த ஏழை மனிதனுடைய சிநேகத்தில் இரண்டு காரணங்களினால் சந்தோஷித்தேன். ஏனென்றால் அவர் என் சிநேகிதத்தை விரும்பினார் என்று நான் அறிவேன். மேலும் அவர் தம்மால் இயன்ற மட்டும் உபகாரமா யிருக்கிறாரென்றதாலும் இப் பிரதேசத்தில் அவரை, நன்மை பயக்காத வாலிப நிலையிலுள்ள ஒரு ஏழை கனவான் என்று சொல்வார்கள். ஆனால் அவருக்கு வயது முப்பதுகூட ஆகவில்லை. ஒவ்வொரு சமயங்களில் அவர் மிகவும் சாமர்த்தியத்தோடு பேசுவார். பொதுவாக அவருக்கு குழந்தைகளுடன் பழகுவதில் மிகவும் சந்தோஷம். குழந்தைகளைக் குற்றமற்ற சிறு மனிதர்கள் என்று அவர் சொல்லுவார். அவர் அவர்களுக்கு நாட்டுப் பாடல்கள் பாடுவதிலும், கதைகள் சொல்லுவதிலும், பெயர் பெற்றவரென்று நான் அறிந்தேன். அவர்களுக்குக் கொடுக்க ஏதாவது தம்முடைய சட்டைப்பையில் ஏதோ ஒரு இஞ்சிமுரப்பா அல்லது அரை அணா ஊதல் முதலியவை இல்லாமல் வெளிக்கிளம்ப மாட்டார். அவர் வழக்கமாய் எங்கள் ஊர்ப்புறத்தில் வருஷத்திற்கு ஒரு தடவை வந்து சில நாட்களைக் கழிப்பார். அவர் ஆங்காங்குள்ளவர்களின் ஆதரவால் காலங்கழித்து வந்தார்.

அவர் எங்களுடன் இரவுச் சாப்பாட்டுக்கு உட்கார்ந்தார். என் மனைவியும் அவள் பக்குவம் செய்த கூஸ்பரி மதுவை வேண்டிய மட்டும் வழங்கினாள். கதை சொல்ல ஆரம்பமாயிற்று. அவர் பழைய கவிதைகளைப் பாடினார். பிறகு குழந்தைகளுக்கு "பக் ஆப் வீவர் லாண்டு" என்பவனுடைய கதை, "பொறுமையுள்ள கிரிஸல்" என்னும் பெண்மணியினுடைய சரிதம், கியாட்ஸின் என்பவனுடைய வீரப்பிரதாபக் கதைகள், பிறகு அழகுவாய்ந்த ரோஸமாண்டு என்பவளின் "பூங்கொத்து மண்டபம்" என்ற கதை, இவைகளை எல்லாம் சொன்னார். எப்பொழுதும் இரவில் பதினொரு மணிக்குக் கூவுகிற எங்கள் கோழி, அப்பொழுது தூங்க நேரமாயிற்றென்று தெரிவித்தது. ஆனால் வந்திருக்கும் அந்நியருக்கு எங்கே இரவுஜாகைக்கு வசதி செய்வதென்கிற, ஒரு எதிர்பாராத சங்கடம் ஏற்பட்டது. எங்களுடைய படுக்கைகளெல்லாம் அவரவர்க

ளுக்கு ஏற்கெனவே ஏற்பாடாய் விட்டன. பக்கத்திலுள்ள மதுக்கடைக்கு அவரை அனுப்பவேண்டுமென்றாலும், பொழுதாகி விட்டது. இந்த நெருக்கடியில் குழந்தை டிக், தன் சகோதரன் மோஸஸ் தன்னுடைய படுக்கையில் ஒண்டிப் படுத்துக்கொள்ள தனக்கு இடம் கொடுத்தால், அவருக்குத் தன்னுடைய படுக்கையைத் தருவதாகச் சொன்னான். "என்னுடைய தமக்கைகள் தங்கள் படுக்கையில் எனக்கு இடம் கொடுத்தால் என்னுடைய படுக்கையை மிஸ்டர் பர்க்கெல்லுக்குக் கொடுப்பேன்" என்று குழந்தை பில் சொன்னான். "என் அருமைக் குழந்தைகளே, மிகவும் சந்தோஷம். வந்தவர்களை உபசரிப்பது கிறிஸ்தவக் கடமைகளில் முதன்மையானது. மிருகம் தன்னுடைய இருப்பிடத்திற்குப் போகிறது. பறவை தன்னுடைய கூட்டிற்குப் போகிறது. ஆனால், கதியில்லா மனிதன் தன்னைப் போன்றுள்ள மனிதர்களிடமேதான் புகலிடத்தைத் தேடிக்கொள்ள வேண்டும். இந்த உலகத்தைக் காப்பாற்ற வந்த கடவுளே, இவ்வுலகத்திலுள்ள அந்நியர்களிலும் அந்நியராக இருந்தார். அவருக்குக் குடியிருக்க வீடில்லை. மனிதர்களிடம் ஏதாவது உபகார குணம் எஞ்சியிருக்கிறதாவென்று பார்ப்பதற்காகவே அப்படியிருக்க இச்சை வைத்தார் போலும்! டிபோரா, என் பிரியே, அந்தக் குழந்தைகள் ஒவ்வொருவருக்கும் ஒரு பிடி சர்க்கரை கொடு. டிக்குக்கு கொடுப்பது அதிகமாக இருக்கட்டும். ஏனெனில் அவன் தான், முதலில் உபசரிக்க முன் வந்தவன்" என்று என் மனைவியிடம் கூறினேன்.

காலையில், சீக்கிரமாகவே, என் குடும்பத்தாரெல்லோரையும் வெளியே அழைத்துச் சென்று அறுத்த கதிர் கொஞ்சம் மேலே புல் மண்டியிருப்பதால் அதைச் சேமிப்பதில் உதவி புரியும்படி சொன்னேன். எங்கள் விருந்தாளியும் தாமும் இவ்வேலையில் உதவி புரிவதாகச் சொன்னார். அவரையும் எங்களுடன் சேர்த்துக்கொண்டோம். எங்களுடைய வேலை கஷ்டமில்லாமல் நடந்தது. காற்றடிக்கும் திசைக்கு எதிர்த் திசையில் அரிவாளைப் போட்டோம். நான் முன்னின்று அறுத்தேன். மற்றவர்கள் வரிசையாய்ப் பின் தொடர்ந்தார்கள். மிஸ்டர் பர்க்கெல் என்



மகள் ஸோபியாவிற்குக் கொடுக்கப்பட்ட வேலையில் அவளுக்கு ஒத்தாசை புரியும் விமரிசையை நான் இடையில் கவனிக்காமலிருக்க முடியவில்லை. அவர் தமக்குக் கொடுக்கப்பட்ட வேலையை முடித்துவிட்டு, அவளுடைய வேலையில் தாமும்கூடச் சேர்ந்துகொண்டார். இருவரும் ஒருவருக்கொருவர் அன்யோன்யமாய்ப் பேசிக்கொண்டிருந்தனர். ஆனால் ஸோபியாவின் புத்திசாலித்தனத்தைப் பற்றி எனக்கு இருந்த மதிப்பினாலும், அவள் அந்தஸ்துள்ள புருஷனை அடைய வேண்டுமென்ற அவாவை நான் நன்கு அறிந்திருந்ததாலும், அவளுக்கு தனத்தை இழந்த ஒருமனிதனிடமிருந்து நான் எவ்விதபயமும் ஏற்படும் என எதிர்பார்க்கவில்லை. அன்று வேலைமுடிந்ததும், மிஸ்டர் பர்க்கெல் முன் இரவு போலவே உணவிற்கு அழைக்கப்பட்டார். ஆனால் மற்றொரு வீட்டில் அக் குழந்தைக்கு ஒரு ஊதல் வாங்கிக்கொண்டு போவதாயும், அங்கேயே படுக்கப் போகவேண்டியவராதலாலும்; அவர் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. அவர் போனவுடன், சாப்பிடும்பொழுது, எங்களுடைய சம்பாஷணை, சற்று முன் போன துர்ப்பாக்கியமுள்ள விருந்தாளியைப் பற்றி நடைபெற்றது. "யௌவனத்தில் அசட்டையினாலும் துர் நடத்தைகளாலும் சம்பவிக்கும் கஷ்டங்களுக்கு, அந்தப் பரிதாபநிலையிலுள்ள சற்று முன் நம்முடைய விருந்தாளியாயிருந்தவர், ஒரு பலத்த திருஷ்டாந்தமல்லவா? அவர் எக்காரணத்தாலும் புத்தியற்றவரில்லை. ஆகையால், அது அவருடைய முன் மூடத்தனத்தை விசேஷமாகக் கண்டிக்கிறது. பரிதாபமான திக்கற்ற மனிதன். அவரால் ஒரு காலத்தில், உத்ஸாகப்படுத்தப்பட்டு, ஏவப்பட்டு, அவருடன் ஆடிப்பாடி புகழ்ந்தவர்கள், இப்போது எங்கே போய்விட்டார்கள்? ஒருவேளை அவருடைய வீண் செலவால் இப்பொழுது அவர்கள் பெருத்த செல்வம் படைத்து தாசிகள் வீடு போயிருக்கிறார்களா? அப்பொழுது இவரைப் புகழ்ந்தார்கள். இப்பொழுது கூட்டிக்கொடுப்பவர்களை சிலாகிக்கிறார்கள். முன்பு அவருடைய பேச்சில் ஆனந்தக் கண்ணீர் விட்டார்கள். இப்பொழுது அவை அவருடைய புத்தியீனத்தை சுட்டிக் காட்டுகிறவைகளாயின. இவர் இப்பொழுது ஏழை. ஏழ்மைத் தன்மை

ஒரு சமயம் அவருக்குத் தகுந்த ஊதியமா யிருக்கலாம்.
ஏனெனில், யாருக்கும் உபயோகமா யிருக்கும் சாமர்த்
தியமும அவரிடத்திலில்லை. தன் சுவாதந்திர்ய சம்ரக்ஷணை
யிலிருக்க உத்ஸாகமுமில்லை'' என்று சொன்னேன்.
சில உள்ளந்தரங்கமான காரணங்களாலே தூண்டப்
பட்டு, கொஞ்சம் கடுமையாய் இந்த அபிப்ராயங்
களை வெளியிட்டேன். அதை ஸோபியா லேசாக
மறுத்தாள். "அப்பா, அவருடைய முன் நடவடிக்கை
எப்படி இருந்த போதிலும், தற்கால நிலை, அவரை
நிந்தைக்கு ஆளாக்காமல், தவிர்க்கச் செய்யவேண்டும்.
அவருடைய தற்கால ஏழ்மைத்தனமே அவருடைய குற்
றங்களுக்குத் தண்டனைகளாகும். பகவான் கோபத்தினால்
கொடுத்த சவுக்கடியின் தீவிரத்தைத தாங்கிவரும் மனிதன்
மேல், நாம் காரணமின்றி, ஒரு அடிகூட அடிக்கக்கூடா
தென்று அப்பா சொல்லிக் கேட்டிருக்கிறேன்.'' "ஸோபி,
நீ சொல்வது சரி; ஒரு பழங்காலக் கவி அப்படிப்பட்ட தீய
செயலை சாதுர்யமாக எடுத்துக் காண்பிக்கிறார்'' என்று
மோஸஸ் சொல்லத் தொடங்கினான். "மார்சியஸ் என்ப
வனின் தோலை ஒருவன் முழுமையும் உரித்துவிட்ட பிறகு
ஒரு நாட்டுப்புறத்தான் அவனை மறுபடியும் உரிக்கப்பிரயத்
தனப் பட்டான் என்று கதை சொல்லுகிறது. இந்த
பரிதாபமான மனிதனின் நிலைமை அப்பா சொல்வது
போல், அவ்வளவு கெடுதலானது என்று நான் சொல்ல
முடியாது. பிறருடைய மனோபாவத்தை, அவர்களுடைய
ஸ்தானத்தில் நாம் இருந்தால் என்ன நினைப்போம, என்
பதை வைத்துக்கொண்டு நாம் தீர்மானிக்கக் கூடாது.
மோல் என்ற மிருகத்தின் இருப்பிடம் எவ்வளவு இருட்
டாக நமக்குத்தோன்றியபோதிலும், தனக்கு அந்த அறை
கள் போதுமான வெளிச்சத்துடன் இருக்கிறதாக அது
நினைக்கிறது. நிஜமாகப் பேசினால், இந்த மனிதனுடைய
புத்தி அவருடைய ஸ்தானத்திற்குத் தகுந்தவாறே இருக்
கிறது என்று தோன்றுகிறது. ஏனெனில், அவர் இன்
றைக்கு உங்களுடன் பேசும்பொழுது, அவர்மாதிரி
வேறொருவரையும், இதுவரையில் உற்சாகத்துடன் பேசக்
கேட்டதில்லை'' என்று மோஸஸ் முடித்தான். இவை ஒரு
விதமான முன்யோசனையுடன் சொல்லப்படாவிட்டாலும்,



அவை அவளுடைய முகத்தில் ஒரு மலர்ச்சியை உண்டு
பண்ணிற்று. அதை, அவள் சிரிப்பவள் போல், மறைக்க
முயன்றாள். மேலும் அவர் பேச்சையெல்லாம் தான்
கொஞ்சங்கூட மதிக்கவில்லை யென்றாள்; ஆனால் அவர்
முன் காலத்தில் ஒரு மிகக் கண்யமான கனவானாய் இருந்
திருக்க வேண்டுமென்று தான் நினைத்ததாக ஸோபியா
சொன்னாள். அவள் தன்னிடத்தில் சந்தேகம் கொள்ளாம
லிருக்கச் செய்த முயற்சியின் பரபரப்பும், அவளது முக
மலர்ச்சியும், அவளுடைய மனப்பான்மையின் சின்னங்
களே; அவற்றை நான் என் மனதிற்குள் ஒப்பவில்லை.
ஆனால் என் சந்தேகங்களை வெளியிடாமல் தடுத்தேன்.

மறுநாள் எங்கள் முதலாளி வருவார் என்றெதிர்
பார்க்கப்பட்டதால்,என்மனைவி மான் இறைச்சி துவையல்
செய்யப் போய்விட்டாள். மோஸஸ் வாசித்துக்கொண்
டிருந்தான்.நான் சிறுவர்களுக்கு பாடம்சொல்லிக்கொண்
டிருந்தேன். என் பெண்களும் மற்றவர்களைப் போல்
சுறுசுறுப்பாய் இருப்பதாகத் தோன்றியது. அவர்கள்
அடுப்பின் மேல் ஏதோ ஒன்றை வெகுநேரம் பக்குவம்
பண்ணிக்கொண் டிருந்ததை நான் கவனித்தேன். முதலில்
நான் அவர்கள் தங்கள் தாய்க்கு ஒத்தாசை புரிந்துகொண்
டிருக்கிறதாக உத்தேசித்தேன். ஆனால் குழந்தை டிக்
அவர்கள் தங்கள் முகத்தில் பூசிக்கொள்ள ஒரு திராவகம்
செய்துகொண் டிருப்பதாக எனக்குக் காதோடு தெரிவித்
தான். எனக்கு சுபாவத்திலேயே முகத்திராவகங்கள்
மேல் வெறுப்பு. ஏனென்றால் முகத்தினுடைய நிறத்தை
சீர்திருத்த வேண்டியிருக்க, அவை அதைக் கெடுத்து விடு
கின்றன என்று நான் அறிவேன். ஆகையால் என்
நாற்காலியை மெள்ள நகர்த்திக்கொண்டே அடுப்பு
வரையில் போய், நெருப்புத் தூண்டியை எடுத்து அதற்கு
பழுது பார்க்க வேண்டும்போல் பாவித்து, அந்த திராவக
மனைத்தையும், தலை கீழாக, எதிர் பாராமல் நடந்துவிட்
டாற்போல், சாய்த்துவிட்டேன். அதற்குப் பிறகு, அவர்
களுக்கு மறுதடவை அதைத் தயார் செய்ய நேரமில்லை,

## அத்தியாயம் 7

*ஒரு பட்டணத்து ரஸிகனின் வர்ணனை. முழு முட்டாளும் ஒருபொழுது இருபொழுதுக்கு ரஸிகனாக இருக்கக் கற்றுக்கொள்ளலாம்.*

எங்களுடைய வாலிப முதலாளிக்கு நாங்கள் விருந்தளிக்கப்போகும் காலை வந்ததும், பார்வைக்கு, அவருக்கு திருப்திகரமாக இருக்கும்பொருட்டு, என்னென்ன பதார்த்தங்கள் செலவு செய்யப்பட்டன என்பதைப்பற்றி சுலபமாக அனுமானிக்கலாம். என் மனைவியும் பெண்களும் தங்களுடைய சாதுர்யத்தை எவ்வளவு தூரம், வான்கோழி சிறகு விரித்தாடினால் போல், விஸ்தரிக்க முடியுமோ, அப்படிச் செய்தார்கள் என்று நான் சொல்லவே வேண்டியதில்லை. மிஸ்டர் தார்ன்ஹில் இரண்டு சிநேகிதர்களோடும், தம்முடைய பக்க பலமான (சாப்லேன்) ஸ்தாபன புரோகிதரோடும் வந்தார். அவருடைய பரிவாரங்களை அவர், கௌரவமாக, பக்கத்திலுள்ள மதுக்கடைக்கு அனுப்பிவிட்டார். ஆனால் என் மனைவி தனது மன மகிழ்ச்சியின் மகத்துவத்தால், அவர்கள் எல்லோருக்கும் விருந்தளிப்பதாகக் கட்டாயப்படுத்தினாள். இது இப்படியிருக்கும்பொழுது, இக் காரணத்தால் எங்களுக்கு பிறகு மூன்று வாரங்களுக்கு போஜன பதார்த்தங்கள் குன்றிவிட்டன. முந்திய நாள் மிஸ்டர் பர்க்கெல் சமிக்ஞையால், என் மகன் ஜார்ஜ் முன்னதாக விவாகம் செய்வதாக ஏற்பாடாயிருந்த மிஸ் வில்மோட் என்பவளை இவர் விவாகம் செய்துகொள்ள சில பேச்சுகள் நடந்துகொண்டிருக்கின்றன என்று தெரிவித்திருந்தார். இந்த சமாச்சாரம் இவருடைய வரவேற்பின் மனமகிழ்ச்சியை கொஞ்சம் குறைத்தது. ஆனால், ஒரு சந்தர்ப்பத்தினால், எங்களுடைய குழப்பம் ஒருவாறு நிவர்த்தி செய்யப்பட்டது. ஏனெனில், அக்



கூட்டத்திலுள்ள ஒருவர் அவளுடைய பெயரைக் குறிப்பிடவே, அப்பொழுது மிஸ்டர் தார்ன்ஹில் தெய்வத்தின் மேல் ஆணையிட்டு, அந்தப் பயங்கரத்தை அழகென்று சொல்வதைவிட முட்டாள்தனமான சங்கதி வேறொன்றும் கண்டதில்லை என்று கூறினார். பின்னும் "ஸெயிண்ட்டன்ஸ்டன் கோவில் கடிகாரத்தின் கீழுள்ள விளக்கின் வெளிச்சத்தில், ஒரு மனைவியை தான் தேர்ந்தெடுத்தால் தனக்கு எவ்வளவு சந்தோஷமுண்டோ, அப்படியே இவ்விஷயத்திலும்; இல்லாவிடில் குரூபி என்று என்னைத் தள்ளிவிடுங்கள்" என்று சொல்லிச் சிரித்தார். நாங்களும் சிரித்தோம். செல்வர்களுடைய வேடிக்கைப் பேச்சுக்கள் எப்பொழுதும் ஒப்புக்கொள்ளப் பட்டவை. ஒலிவியா கூட அவரிடத்தில் தமாஷான பேச்சுக்களுக்கு ஒப்வே இல்லை என்று அவர் கேட்கும்படியாக எங்களிடம் காதோடு சொன்னாள்.

விருந்து முடிந்ததும், நான் வழக்கம்போல் கோவில் என்று ஆசி கூறினேன். இதற்காக அவருடன் வந்த சாப்லேன் வந்தனம் அளித்து கோவில் அவருடைய அன்பிற்குப் பாத்திரமான ஒரே காதலி என்று சொன்னார். "வா அப்பா இங்கே, பிராங்க், உண்மையாய் எங்களிடம் சொல்லு, உன்னுடைய தற்கால காதலி கோவில். அவள் வெள்ளைத்துணி உடுத்து ஒரு பக்கத்திலும், மற்றப் பக்கத்தில மிஸ் ஸோபியா வெள்ளைத்துணி யில்லாமலும் இருந்தால், உனக்கு யார் வேண்டும்?" என்று ஸ்குயர் தம்முடைய சகஜமான ஒளிவு மறைவு இல்லாத தோரணையில் பேசினார். சாப்லன் அதற்கு "இருவருமேதான்" என்று பதில் கூறினார். "அதுதான் சரி, பிராங்க், ஒரு அழகான பெண் சிருஷ்டியிலுள்ள எல்லா மத ஆதீன சூழ்ச்சியின் விலையாவாள். இல்லாவிடில், நான் சாப்பிடும் கிளாஸ் (மது) என் மூச்சை அடைக்கட்டும். தானம், தந்திரம் எல்லாமே ஒரு தலைவலி; எல்லாம், மூளையைப் புரட்டும் ஒரு மோசம். நான் இதை நிரூபிக்கிறேன்" என்று ஸ்குயர் சொன்னார். என் மகன் மோஸஸ் சொன்னான்: "நீர் அப்படிச் செய்வீரென்று விரும்புகிறேன். நான் உமக்கு சரியான பதில் அளிக்க முடியுமென்று நினைக்

கிறேன்." "மிகவும் நல்லது ஐயா," என்று ஸ்குயர் உரக்கச் சொல்லி சுருட்டுப் புகையை உடனே அவன்மேல் விட்டு மற்றவர்களைப் பார்த்துக் கண் சிமிட்டினார். "நீ அந்த விஷயத்தில் உஷ்ணமில்லாமல் பதில் சொல்வதாயிருந்தால், நான் உன்னுடைய போட்டியைக் கௌரவிக்கத் தயாராக இருக்கிறேன். முதலில், இந்த விஷயத்தை சாம்யங்களை மட்டும் சொல்லி நடத்தவேண்டுமா, அல்லது பதிலுக்குப் பதில் மட்டும் சொல்லி நடத்த வேண்டுமா?" என்றார் தார்ன்ஹில். "இவ்விஷயத்தில் காரணங்களுடன் நடத்தப்படவேண்டும் என்பது என் கருத்து" என்று மோஸஸ் கூவினான். இந்த விவாதத்தை நடத்த அவனை விட்டதில் அவன் மிகவும் சந்தோஷமடைந்தான். தார்ன்ஹில் சொன்னார் "மேலும் நல்லது. ஆரம்பிக்க முதலில் உள்ளவை எல்லாம் உள்ளனவென்று நீ மறுக்க மாட்டாயென்று நம்புகிறேன். இதை நீ ஒப்புக்கொள்ளாவிட்டால் நான் மேலே சொல்வதற்கொன்றுமில்லை." மோஸஸ் பதிலுரைத்தான்: "ஏன், நான் அதை ஒப்புக்கொள்ளலாம் என்று நினைக்கிறேன். அதை வைத்துக் கொண்டு எவ்வளவு முடியுமோ அவ்வளவு பார்க்கிறேன்." "நானும் அப்படியே தான் நம்புகிறேன். ஒரு பின்னம் பூர்ணத்தைவிட சிறியது என்பதை ஒப்புக் கொள்ளுகிறாயா?" என்று மற்றவர் சொன்னார். "நான் அதையும ஒப்புக்கொள்ளுகிறேன்.' அப்படிச் செய்வது சரி, நியாயம்." "ஒரு திரிகோணத்தின் மூன்று கோணங்களும் சேர்ந்து இரண்டு நேர் கோணங்களுக்கு ஈடென்பதை நீர் மறுக்க மாட்டீர் என்று நம்புகிறேன்" என்று ஸ்குயர் கூவினார். "அதைவிடத் தெளிவான விஷயம் வேறொன்றுமில்லையே" என்று மற்றவன் சொல்லி, தன் வழக்கம் போல பெருமையோடு ஏறிட்டு சுற்றும் முற்றும் பார்த்தான். "மிகவும் நல்லது. பூர்வ பீடிகைகளெல்லாம் இப்படித் தீர்மானிக்கப்பட்ட பிறகு, நான் மேலே சொல்ல வேண்டியதைச் சொல்லுகிறேன். வெவ்வேறு ஜீவாத்மாக்கள் ஒரே தொடர்பாய் சம்பவித்து பரஸ்பரம் சேர்க்கையுடைய துவந்துவங்களாய்த் தொடுக்கப்படுவதால், சாதாரணமாய் ஒரு புதிர் போடும்படியான வாய்மைத் தொடர் ஏற்படுகிறது. இதனால் அநேகமாய்



ஆத்மார்த்தத்தின் விசேஷம் பூர்வ பீடிகையில் இரண்டாவதான வகுப்புப் பிரிவிற்கு இணைக்கலாம்" என்று தார்ன்ஹில் வெகு வேகமாய்ச் சொன்னார். "நில்லும் நில்லும், நான் அதை ஒப்புக்கொள்ளமாட்டேன். நான் இப்பேர்ப்பட்ட நாஸ்திகக் கொள்கைகளுக்கு பதில் சொல்லாமல் ஒப்புக்கொள்ள முடியுமென்று நீர் நினைக்கிறீரோ?" என்று மோஸஸ் கூவினான்.

"என்ன" என்று ஸ்குயர் மிக்க உஷ்ணத்தோடு பதில் சொன்னார். "ஒப்புக்கொள்ள முடியாதா? எனக்கு ஒரு வெட்ட வெளிச்சமான கேள்விக்குப் பதில் சொல். பந்துக்கள் பந்தம் உடையவர்கள் என்று அரிஸ்டாட்டில் கூறியது சரியென்று நினைக்கிறீரா?" "சந்தேகமில்லாமல்" என்று மற்றவன் சொன்னான். "அப்படியானால் சரி, நான் சொல்லப் போவதற்கு நேரே பதில் சொல்லு. இரண்டு பீடிகைகளில், முதல் பீடிகை நாம் கவனிக்கப் போவதில், தோலிருக்கத் துடைத்து முழுங்கியா? அல்லது முழு மோசமா? எப்படி உனக்குத் தோன்றுகிறது? உன் காரணங்களைச் சொல்லு. நேராகப் பதில் சொல்லு" என்று ஸ்குயர் உரக்கக் கூவினார். "உம்முடைய விவாதத்தின் தாத்பரியமே சரியாகப் புரியவில்லை என்று நான் மறுக்கிறேன். ஆனால் ஒரு கேள்வியாக அவைகளை அமைத்தால், நான் அதற்கு ஒரு பதில் கொடுக்க முடியுமென்று நினைக்கிறேன்" என்றான் மோஸஸ். "அடே அப்பா. நான் உன்னுடைய மிகவும் வணக்கமுடைய சேவகன். உனக்குப் பதிலும் அதோடு புத்தியும் அளிக்க வேண்டும் போலிருக்கிறது. முடியாது ஐயா, அவ்விஷயத்தில் நான் உம்மோடு சமாளிக்கிறது கஷ்டம் என்று மறுக்கிறேன்" என்றார் ஸ்குயர். இப்பேச்சினால் பரிதாபமான மோஸஸைக் கண்டு சிரிப்பு உண்டாயிற்று. களித்துக்கொண்டிருக்கும் கூட்டத்தில் துக்ககரமான முகம் அவனது ஒன்றுதான். மேலும் அன்றைய விருந்து முடியும் வரையில் அதற்கு மேல் அவன் ஒரு அக்ஷரம்கூடப் பேசவில்லை.

ஆனால் இவையெல்லாம் எனக்கு சந்தோஷத்தைக் கொடுக்காவிட்டாலும், ஒலிவியாவினிடத்தில் மிகவும்

வேறு விதமான உணர்ச்சியை உண்டு பண்ணின. இதெல்லாம் ஞாபகசக்தியைக் காட்டும் விஷயம். வேறொன்றுமில்லை. அப்படியிருந்தபோதிலும், அவள் சாதுர்யமாய்ப் பேசப்பட்ட விஷயம் என்று தப்பு எண்ணங்கொண்டாள். அதனாலே, அவரை மிகவும் மதிக்கத் தகுந்த ஒரு கனவானாக அவள் நினைத்தாள். நல்ல தேக அமைப்பு, தகுந்த ஆடை, செல்வம், இதெல்லாம் பலமாக ஒன்றுகூடி அந்த மனிதனிடத்தில் இருக்கின்றன என்று தெரிந்தவர்கள் அவனை சுலபமாக மன்னித்துவிடுவார்கள். மிஸ்டர் தார்ன்ஹில் உண்மையில் விஷய ஞானமில்லாதவராயிருந்தும், சுகமாகப் பேசினார். சம்பாஷணைகளில் எடுக்கப்பட்ட சாதாரண விஷயங்களில், தடங்கலில்லாமல் தெளிவாய்ப் பேசக் கூடியவர். ஒலிவியா, தான் அன்னியர் முன்னால், எப்படி அமைப்புடன் தோன்ற வேண்டுமென்பதைக் கற்றறிந்தவள். அதற்கு ஒரு தனியான மதிப்புவைக்கக் கற்பிக்கப்பட்டுள்ளவள். அப்படியே பிறரிடத்திலும் அதற்கு அதே மதிப்பு வைக்கவும் கற்றுணர்ந்தவள். ஆகையால், இப்படிப்பட்ட குணாதிசயங்கள் உள்ளவர் அவளுடைய மனதைக் கவருவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

அவர் போனபின்பு நாங்கள் எங்களுடைய வாலிப முதலாளியின் சாமர்த்தியங்களைப் பற்றி பேசினோம். அவர் தம்முடைய பார்வையையும் பேச்சையும் ஒலிவியாவினிடத்தில் செலுத்தினதால், அவளைக் குறித்தே எங்கள் விருந்தினராக வரக் கருதினாரென்று எங்களுக்கு இனிமேல் சந்தேகமில்லை. இந்தச் சந்தர்ப்பத்தில், அவளுடைய சகோதரனும் சகோதரியும் வேடிக்கையாய் அவளைப் பரிகாசம் செய்ததில், அவளுக்கு அதிகக் கோபம் உண்டாகவில்லை. டிவோராகூட, அன்று நடந்த வைபவத்தில் ஈடுபட்டிருந்ததாகத் தோன்றிற்று. அவள் மகள் அன்று வெற்றிபெற்றதைத் தானே அதை அடைந்தது போல் புகழ்ந்து கொண்டாடினாள்.

"இங்கே பாரும், அன்பே, நம்முடைய முதலாளியின் எண்ணங்களை ஆதரிக்க, நானேதான், என் பெண்களைத் தூண்டினேன் என்று சொல்லுவேன்.



எனக்கு எப்போதும் பெரிய ஹோதாவில் இருக்க விருப்பமுண்டு. இப்பொழுது அந்த ஆசை வைத்தது சரியென்று புலப்படவில்லையா? இந்த விஷயம் எப்படி முடியுமென்று யார் அறிவார்கள்?" "ஏ, அதை யார் அறிவார்கள்? அதுவும் சரிதான்" என்று துக்கக் குரலோடு பதில் சொன்னேன். "நான் சம்பந்தப்பட்ட வரையில், எனக்கு இது வெகுவாகப் பிடிக்கவில்லை. செல்வமும் பொய்க் காதலுமுடைய இந்தப் பிரபுவைக் காட்டிலும் சத்திய சந்தனான ஒரு ஏழையிடத்தில், நான் மிகவும் சந்தோஷமுடையவனாகவே இருந்திருப்பேன். ஏனென்றால், இது நிச்சயம், நான் சந்தேகப்படுகிறபடி அவர் இருந்தால், சுயநலம் கருதும் மனோபாவமுடைய நாஸ்திகன் என் குழந்தைகளில் ஒன்றையும் அடையான்."

"இது நிச்சயம் அப்பா" என்றான் மோஸஸ். "நீங்கள் இவ் விஷயத்தில் மிகக் கடுமையாயிருக்கிறீர்கள். ஒரு மனிதன் நினைப்பதற்கெல்லாமா கடவுள் அவனைத் தண்டிக்கிறார்? அவன் செய்யும் செயலுக்கு மட்டுமேதானே? ஒவ்வொரு மனிதனுக்கும் அடக்க சக்தியில்லாமலே ஆயிரம் கெட்ட எண்ணங்கள் தோன்றுகின்றன. பதவி விஷயத்தில் இஷ்டம் போல் பேசுவது இவருக்கு சுபாவமாக இருக்கலாம். ஆகையால் அவருடைய எண்ணங்களெல்லாம் தப்பென்று வைத்துக்கொண்டாலும் அவர் அவற்றை அங்கீகாரம் செய்வது அவற்றில் அவாவினால் இல்லாமல் சுபாவத்தினால் மட்டுமே இருப்பதால், அவரை நாம் அவருடைய குற்றங்களுக்காக கண்டனம் செய்வது எப்படியிருக்கிறதென்றால் மதில் சுவரில்லாத நகரத்தின் பரிபாலகனை, படையெடுக்கும் சத்துருவுக்கு இடங்கொடுத்தானென்று குற்றம் சாற்றுவதைப் போலாகும்.

"என் மகளே, நீ சொல்லுவது உண்மை" என்று நான் சொன்னேன். ஆனால் பரிபாலகன் சத்துருவை அங்கே வரவழைத்தால், அவன் நியாயமாய்க் குற்றவாளியாகிறான். தப்பு வழிகளைத் தழுவுவோர் எவரோ அவர்களுடைய விஷயமும் எப்பொழுதும் இப்படியே தான். துன்மார்க்கம் என்று அதைத் தெளிவுப்படுத்தும் திருஷ்டிகோசரமான விஷயங்களை மனிதர்கள் அறிந்தும் அவற்

# அத்தியாயம் 8

*ஒருவித பிரயோஜனத்தையும் காண்பிக்காத*
*காதல் பின் மிக்க லாபத்தைக் கொடுக்கலாம்.*

மறு நாள் காலை, மிஸ்டர் பர்க்கெல், மறுபடியும் எங்களிருப்பிடத்திற்கு வந்தார். நான் சில காரணங்களால், அவர் அடிக்கடி வருவதில் பிரியப்படவில்லை. இருந்தாலும், அவருக்கு என் கணப்பின் ஆதரவையும், என் சிநேகத்தையும் மறுக்க எனக்கு இஷ்டமில்லை. உண்மையில் அவருடைய உழைப்பு, அவருக்காக நாங்கள் செய்யும் விருந்திற்கு மேல், திருப்பி பலனை அளித்தது. ஏனென்றால், அவர் சுறுசுறுப்பாய் எங்களோடு உழைப்பார். வயலிலோ, அல்லது போரடியிலோ எப்போழுதும் முன்னிற்பார். மேலும், அவர் எப்பொழுதும் வேடிக்கையாய்ப் பேசி, எங்களுடைய சிரமத்தைக் குறையும்படி செய்வார். அவர் மொத்தத்தில். எல்லோரையும் போலில்லாமல், தனிப் போக்குள்ளவர். இருந்தபோதிலும், யுக்தி புத்தி யுள்ளவரானதால், நான் அவரை நேசித்தேன். பரிகாசம் செய்தேன். பரிதாபமும் பட்டேன். அவரிடத்தில் எனக்கு ஒரே ஒரு அருவருப்பு என்னவென்றால், அவர் என் பெண்ணிடத்தில் நேசம் வைத்திருப்பதைக் காண்பித்துவிட்டார். வேடிக்கையாக அவர் அவளை தன் சிறிய மனைவி என்பார். ஒவ்வொரு பெண்ணுக்கும் ரிப்பன் சுருள் வாங்கிக் கொண்டு வருவார். ஆனால், அவளுக்கு மட்டும் மிகவும் அழகானது.

எனக்கு அது எப்படியென்று ஒன்றும் புரியவில்லை. ஆனால் ஒவ்வொரு நாளும், மேன்மேலும் எங்களிடத்தில் அவருடைய பிரியம் அதிகரித்தது. அவருடைய புத்திக் கூர்மை தெளிவடைந்தது. அவருடைய கபடமில்லாத நடத்தையில், மேதாவியான புத்தியுடையவராக எண்ணிக் கொண்டு, ஒரு உயர்ந்த ஹோதாவை ஏற்க ஆரம்பித்தார்.



நாங்கள் வயலிலும் சாப்பிடுவோம். சாதாரணமான உணவைச் சுற்றி உட்கார்ந்து கொண்டு சாப்பிடுவோம். அல்லது சாய்ந்துகொண்டு அருந்துவோம். எங்களுடைய சாப்பாட்டுத் துணியை வைக்கோலின் மேல் பரப்புவோம். மிஸ்டர் பர்க்கெல் எங்கள் சாப்பாட்டிற்கு ஆநந்தத்தை அளித்தார். எங்களுடைய களிப்பை அதிகரிக்க இரண்டு தூக்கணாங்குருவிகள் எதிர்த்த இரண்டு புதர்களில் உட்கார்ந்துகொண்டு ஒன்றுக்கொன்று குலாவிக் கொண்டிருந்தன.

வழக்கமாய் வரும் கௌதாரி வந்து எங்கள் கைகளிலிருந்து துணுக்குகளை கொத்திக் கொண்டு போயிற்று. அங்கே ஒவ்வொரு சப்தமும் அமைதியின் எதிரொலி போல் தோன்றியது. "நான் இங்கே உட்காரும் போதெல்லாம் மிஸ்டர் கே அவ்வளவு இனிப்பாய் வர்ணித்திருக்கும் இரண்டு காதலர்கள் ஒவ்வொருவருடைய கரத்தில் மற்றவர் இறந்து வீழ்த்தப்பட்ட கதையை நினைக்காமலிருக்க முடியவில்லை. அக் கதையின் வர்ணனையில் ஏதோ ஒரு சோக ரஸமிருப்பதால் நூறுதடவை வாசித்தும் ஒவ்வொரு தடவையும் ஒரு நூதனமான சந்தோஷத்துடன் வாசிக்கிறேன்" என்று ஸோபியா சொன்னாள். அதற்கு மோஸஸ் சொன்னான்:

"என்னுடைய அபிப்பிராயத்தில் அந்த வர்ணனையில் மிகவும் சோபையுடைய செய்யுட்கள் ஒவித் செய்த 'ஆஸிஸ்கலேஷியா இருவரும்' என்கிற நூலில் உள்ளவைகளை விட கீழ்ப்பட்டனவே. ரோம் தேசத்துக் கவி ஒவித் ஒன்றுக்கொன்று வித்தியாசத்தைக் காண்பிக்கிறதில் நன்றாய் அறிந்திருக்கிறார். அந்த வித்தியாச பாவத்தை சாமர்த்தியத்துடன் உபயோகித்தால் அதில் சோகத்தினுடைய எல்லா பலமும் வைக்கப்பட்டிருக்கிறது" என்றான் மோஸஸ். மிஸ்டர் பர்க்கெல் கூறினார்: "நீ குறிக்கும் இரண்டு கவிகளும் தங்களுடைய இசைகளில் எல்லா பாகங்களிலும் வர்ணனையைச் சுமத்தி இருவரும் தங்கள் தங்கள் நாடுகளில் ஒரு தப்பான இயக்கத்தை உண்டு பண்ணினார்கள். அவர்களுடைய தோஷங்களை அற்ப அறிவுடையவர்கள் மிகச் சுலபமாக பற்றி நடந்தார்கள். இங்கிலீஷ் செய்

யுள்களும்; ரோமாபுரி ராஜ்யத்தின் கடைசிக் காலத்தில் போல், இப்பொழுது கதையுமில்லாமல், காரணமுமில்லாமல், செழிப்பான காட்சிகளின் வர்ணனைகளின் தொகுதிகளே யன்றி வேறில்லை. காதில் சப்தத்தை உண்டு பண்ணுகிற சொல்லடங்கிய தொகுதியே ஒழிய, தாத்பரியம் கிடையாது. அம்மணீ, ஆனால் ஒரு வேளை பிறரை இப்படி நிந்திக்கும்பொழுது அவர்களுக்குப் பதில்சொல்ல ஒரு சந்தர்ப்பம் கொடுகக வேண்டியது நியாயம் என்று நீங்கள் நினைக்கலாம். நான் இந்தச் சொட்டைச்சொல் சொன்னதின் காரணம் இங்கே இப்பொழுது ஒரு நாட்டுப் பாடலைப் பாடலாமென்றே. அதில் என்ன தோஷமிருப்பினும் நான் மேலே சொன்ன பிழைகள் இல்லை.''

இந்தப் பாட்டு வாசிக்கப்படும்பொழுது ஸோபியா தன்னுடைய ஆமோதிப்பில் கொஞ்சம் வாத்ஸல்யத்தையும் கலந்தாற்போல் தோன்றிற்று. ஆனால், எங்களுடைய அமைதி பக்கத்தில் கேட்ட துப்பாக்கி சப்தத்தினால் சீக்கிரத்தில் கலைக்கப்பட்டது. உடனே பின்னால், தான் கொன்ற வேட்டை மிருகத்தை எடுக்கப் புதரிலிருந்து அதைத் தள்ளிக்கொண்டு வருகிற ஒரு மனிதன் காணப்பட்டான். இந்த வேட்டைககாரன் ஸ்குயரின் வீட்டுப் புரோகிதர். அவர்தான் எங்களுக்கு இனிமையாகக் களிப்பூட்டிக் கொண்டிருந்த தூக்கணாங் குருவிகளில் ஒன்றைச் சுட்டவர். அவ்வளவு பெரிய சப்தம் சமீபமாகக் கேட்டமையால் என் பெண்களுக்குத் திகிலை உண்டாக்கியது. ஸோபியா கிலியினால் மிஸ்டர் பர்க்கெல்லினுடைய கரங்களில் ஆதரவுக்காகச் சாய்ந்தாள் என்பதை நான் கவனித்தேன். அந்தச் சீமான் எங்களுக்குத் திகில் உண்டாக்கியதற்காக மன்னிப்புக் கேட்டுக்கொண்டார். நாங்கள் இவ்வளவு சமீபத்தில் இருக்கிறோமென்று அவருக்குத் தெரியாதென்று உறுதியோடு சொன்னார். அவர் அதன் மேல் என்னுடைய கடைசிப் பெண் பக்கத்தில் உட்கார்ந்து ஒரு வீரன் போல், தாம் காலையில் வேட்டையாடிக் கொன்றவற்றை அளித்தார். அவள் அதை மறுக்கப்போகையில், அவளுடைய தாயார் ஒரு ரகசியப் பார்வையால், அவள் தான் மறுத்ததைத் திருத்திக்



கொள்ள மனங்கொண்டு, அவர் மரியாதையோடு கொடுத்ததைக் கொஞ்சம் மனமில்லாமல் ஏற்றுக் கொண்டாள். என் மனைவி வழக்கம்போல் தன்னுடைய கர்வத்தை காது மேல் காதுவைத்துத் தெரியப்படுத்தினாள். ஸோபி சாப்லனை (புரோகிதனை) வசப்படுத்தி விட்டாள். எப்படி அவள் தமக்கை ஸ்குயரை வசப்படுத்தினாளோ அப்படியே வசப்படுத்திவிட்டதாகச் சொன்னாள். இருந்தபோதிலும் நான் அவளுடைய அபிமானம் வேறொரு பக்கத்தில் வைக்கப்பட்டிருக்கிறதென்று அநேக அனுமானங்களைக்கொண்டு சந்தேகித்தேன். சாப்லன் அங்கு வந்த காரணம், மிஸ்டர் தார்ன்ஹில் சங்கீதமும் சிற்றுண்டியும் ஏற்பாடு செய்திருக்கிறார் என்பதையும் அன்று இரவில் எங்கள் வீட்டுப் புல் தரைக்கு முன்னால் நிலவிலே வாலிபச் சீமாட்டிகளுக்காக பால் நாட்டியத்துக்கும் ஏற்பாடு செய்ய விரும்பும் தம் உத்தேசத்தையும் எங்களுக்குத் தெரிவிக்கும் பொருட்டே. அவர் மேலும் சொன்னார்: ''இந்தச் சமாச்சாரத்தை உங்களுக்கு முதலில் நானே தெரிவிக்க வேண்டுமென்று விரும்பி வந்ததின் காரணத்தையும் நான் மறைக்காமல் சொல்லுகிறேன். இந்தச் செய்தியை உங்களுக்குத் தெரிவித்ததற்குப் பிரதிப் பிரயோஜனமாக நாட்டியத்தில் ஸோபியாவின் கரத்தைப் பற்றி அவளுக்கு ஜோடியாக ஆடுவதற்குரிய கௌரவம் எனக்கு அளிக்கப்படும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.''

அதற்கு என் பெண் ''உங்களுக்குக் கௌரவம் அது என்று நீங்கள் கருதினால், நான் அதற்குச் சொல்ல ஒரு ஆக்ஷேபணையும் இல்லை'' என்றாள். ஆனால் இங்கே ஒரு கனவான் இருக்கிறார் என்று மிஸ்டர் பர்க்கெல் பக்கம் பார்த்துக்கொண்டு, மேலுரைத்தாள்: ''அவர் என்னுடன் இன்று செய்த வேலைகளில் நட்புப் புரிந்தார். இன்று நடக்கப்போகும் களிப்புகளில் சேர்ந்துகொள்ளுவதற்கு அவருக்கு உரிமை உண்டு'' என்றாள். மிஸ்டர் பர்க்கெல் அவளுடைய எண்ணங்களுக்காக அவளுக்கு வந்தனமளித்து, அவளை அன்று நாட்டியத்திற்கு சாப்லனுக்கே அளித்துவிட்டதாகவும், தாம் ஐந்து மைல் தூரமுள்ள இடத்

தில் ஒரு சாகுபடி கண்டு முதல் கூட்டுச் சாப்பாட்டுக்கு அழைக்கப்பட்டிருப்பதால் அங்கே போகவேண்டுமென்றும் சொன்னார். அவருடைய மறுப்பு எனக்குக் கொஞ்சம் அபூர்வமாகப்பட்டது. மேலும் புத்திக் கூர்மையுள்ள என் கடைசிப் பெண் எப்படி பொருளிழந்த ஒரு மனிதனை, அவனைக் காட்டிலும் உயர்ந்த ஸ்திதியை அடையக்கூடிய மற்றொருவனை நிராகரித்து, அநுகூலிக்கப் பார்க்கிறாளென்று எனக்குப் புலப்படவில்லை. ஆனால் மனிதர்கள் எப்படிப் பெண்களிடத்தில் உள்ள குணாதிசயங்களைக் கண்டுபிடிப்பதில் மிகவும் சமர்த்தர்களோ, அப்படியே பெண்களும் நம்மைப்பற்றி மிகவும் சரியான அபிப்பிராயத்தை அநேகமாய் அடைகிறார்கள்.

ஆண்பால் பெண்பால் இருவர்களும் ஒருவருக்கொருவர் மற்றவர் நடத்தைகளை ரகசியத்தில் கண்டுபிடிப்பதற்காக ஏற்பட்டவர்களோவென்று தோன்றுகிறது. ஒருவர்மேல் ஒருவர் சர்ச்சை செய்வதற்காகவே வெவ்வேறுவிதமான சக்தியைக் கொடுக்கப்பட்டவர்களாயிருக்கிறார்கள் என்று எனக்குத் தோன்றியது.

# அத்தியாயம் 9

*மிகவும் அந்தஸ்துள்ள இரண்டு சீமாட்டிகள் வரவேற்கப்படுகிறார்கள். விசேஷமான உடைகள் எப்பொழுதும் விசேஷமாகப் போஷிக்கப்பட்டவர்களென்றே தோற்றத்தைக் கொடுக்கிறதல்லவா?*

மிஸ்டர் பர்ச்செல் உத்திரவு பெற்றுக்கொண்டதும் ஸோபியா சாப்லனோடு நடிக்க ஒப்புக்கொண்ட உடனேயே, என்னுடைய சிறுவர்கள், ஸ்குயர் கூட்டமாய் வந்திருக்கிறாரென்று ஓடி வந்து சொன்னார்கள். நாங்கள் வீடு திரும்பியவுடன், எங்கள் முதலாளி, இரண்டு பக்கத்திற்கும் இரண்டு கனவான்களோடும், விலையுயர்ந்த உடையுடுத்த இரண்டு சிறிய சீமாட்டிகளோடும் வந்திருந்ததைப் பார்த்தோம். அவர்களை அவர், நகரத்திலிருந்து வந்திருக்கும் மிகவும் பெரிய அந்தஸ்துடையவர்களென்றும், தற்கால நடையுடை பாவனை மற்றுமுள்ள நாகரிகத்தில் முதன்மையானவர்களென்றும், எங்களுக்கு அறிவித்தார். வரப்பட்ட எல்லோருக்கும் போதுமான நாற்காலிகள் அப்பொழுது எங்கள் கைவசமில்லை. ஆனால் மிஸ்டர் தார்ன்ஹில் உடனே, ஒவ்வொரு கனவானும் ஒவ்வொரு சீமாட்டியின் மடியில் உட்காருவதென்று சொன்னார். என் மனைவி மறுக்க வேண்டாமென்று எச்சரிக்கை காட்டியும், நான் இதைக் கொஞ்சம்கூட ஒப்புக்கொள்ளவில்லை. மோஸஸை அதன் மேல் இரண்டு நாற்காலிகள் கடனாக வாங்கி வரும்படி அனுப்பினேன். நாங்கள் எங்களுக்குள் நாட்டுப்புறத்து நாட்டியத்திற்கு ஜோடி சேர்க்க இரண்டு பெண்கள் குறைவாக இருந்ததால், இரண்டு கனவான்கள் இரண்டு தோழிகள் சம்பாதிக்க அவனோடு கூடப் போனார்கள். நாற்காலிகளும் தோழிகளும் உடனே வந்து சேர்ந்தன. கனவான்கள் என் பக்கத்தியர், சிகப்பு பின்னல் கொண்டைகளை பறக்கவிட்டுக்கொண்டிருந்த பிலாம்பரோவின் முகமலர்ச்சி

யுள்ள இரண்டு பெண்களோடு, திரும்பி வந்தார்கள். ஆனால், ஒரு எதிர்பாராத சங்கடத்தைப் பற்றி யோசிக்கவில்லை. அதாவது, மிஸ் பிலாம்பரோக்கள் அவ்வூரில் மிகவும் சாமர்த்தியமான நடிகையென்று கருதப்பட்டாலும், ஜிக் என்றதையும், தலைகீழ் சுற்றையும் அப்பழுக்கின்றி தெரிந்திருந்தபோதிலும், அவர்கள் நாட்டுப்புறத்து நாட்டியத்தை கொஞ்சங்கூட அறியாதவர்கள். இது முதலில் எங்களுக்குக் குழப்பத்தை உண்டுபண்ணிற்று. ஆனால், அவர்கள் கொஞ்சம் முன்னும் பின்னும் தள்ளி இழுத்துக் காட்டிவிட்ட பிறகு, அவர்களும் கடைசியாக குதூகலத்தோடு நடித்தார்கள். எங்களுடைய சங்கீதத்திற்கு இரண்டு பிடில்களும் ஒரு நாயனமும் ஒரு கொம்பும் சேர்க்கப்பட்டன.

சந்திரன் களங்கமில்லாமல் பிரகாசித்தான். மிஸ்டர் தார்ன்ஹில்லும் என் மூத்த பெண்ணும், எல்லோருக்கும் மிக்க மகிழ்ச்சியை உண்டுபண்ணு பால் நாட்டியத்தை ஆரம்பித்து வைத்தார்கள். ஏனெனில், பக்கத்திலுள்ள ஜனங்கள் நடைபெறுவதைக் கேள்விப்பட்டு, கூட்டங் கூட்டமாய் சுற்றிக்கொண்டார்கள். என் பெண், மிக வனப்போடும், சுறுசுறுப்போடும் நடிப்பதைப் பார்த்து, என் மனைவி தன்னுடைய கர்வத்தை அடக்கமுடியவில்லை. அந்தச் சின்ன வாண்டு அவ்வளவு நன்றாய் நடித்தபோதிலும், எல்லா நடையையும் தன்னிடத்திலிருந்து திருடப்பட்டனவே யென்று தீர்மானமாக என்னிடம் சொன்னாள். நகரத்திலிருந்து வந்த சீமாட்டிகள், நளின நடையாக நடிக்க மிக்க பிரயத்தனப்பட்டும் அவர்களால் முடியவில்லை. அவர்கள் நீந்தினார்கள், தத்தினார்கள் களைத்துப் போய் குந்துப் பிடித்தார்கள். இதெல்லாம் பிரயோஜனப்படவில்லை. பார்ப்பவர்கள் நிஜமாக அவைகள் நன்றாக இருந்தன வென்று வாக்களித்தார்கள். ஆனால் அடுத்த வீட்டு மிஸ் பிலாம்பரோ, மிஸ் லிவியின் கால் நடை, சங்கீதத்திற்கு அதின் எதிரொலிபோல் ஒத்து இருந்த தென்றாள். நடிப்பு ஒரு மணிநேரம் நடைபெற்ற பின்பு, இரண்டு சீமாட்டிகளும் சளி பிடிக்குமென்று பயந்து பால் ஆட்டத்தை நிறுத்த முயன்றார்கள். அவரில் ஒருத்தி



இந்தச் சந்தர்ப்பத்தில், தன்னுடைய அபிப்பிராயத்தை மிகவும் நாகரிக மில்லாத விதமாய், அப்பொழுது பேசினாளென்று நான் எண்ணினேன். ஏனென்றால் அவள், "உயிருடனிருக்கும் ஜின்கோவின் மேல் ஆணை. நான் ஒரு வேர்வைக் களஞ்சியமாய் ஆகிவிட்டேன்" என்று உரைத்தாள். நாங்கள் வீட்டிற்குள் திரும்பினதும், மிஸ்டர் தார்ன்ஹில் தம்முடன் கொண்டுவர ஏற்பாடு செய்த மிகவும் நேர்த்தியான குளிர்ந்த இரவு உண்டி தயாராய் வைத்து இருப்பதைப் பார்த்தோம். அப்பொழுது சம்பாஷணை முன்னைவிடக் கொஞ்சம் அமைதியாகவே இருந்தது. இரண்டு சீமாட்டிகளும் என் பெண்களை அவர்கள் இருக்கிற இடம் தெரியாமலே செய்து விட்டார்கள். ஏனெனில் அவர்கள் பெரிய தோரணையிலுள்ள மனிதர்களையும், உயர்நிலை வாழ்க்கையையும் பற்றியே, பேசிக்கொண்டிருந்தார்கள். அத்துடன் மற்ற நாகரிகமான தற்காலப் பேச்சும் அதாவது, வரைச் சித்திரங்கள், நாகரிகம், ஷேக்ஸ்பியர், பாடும் கண்ணாடிகள் மற்றுமுள்ளவைகளே. அவர்கள் தவறுதலாக, ஒரு தடவை இரண்டு தடவை சத்தியம் வைத்துப் பேசினதில், எங்களுக்கு அதிருப்தி உண்டாயிற்று. ஆனால் அப்பேச்சு அவர்கள் மேன்மக்கள் என்பதற்கு இன்றியமையாத அறிகுறியே என்று தோன்றிற்று. (சத்தியமாக என்று சொல்லிப் பேசுவது மிகவும் அநாகரிகமென கருதப்படுவதாக அப்பால் தெரிந்து கொண்டேன்) இருந்த போதிலும், அவர்களுடைய உயர்ந்த உடைகள், அவர்களுடைய சம்பாஷணையிலுள்ள கொச்சை மொழிகளை, போர்த்திவிட்டது. என் பெண்கள் அவர்களுடைய மேலான நடவடிக்கைகளை பொறாமையுடன் நோக்கினார்கள். ஏதாவது அவர்களிடத்தில் சரிவரக் காணப்படாவிட்டால், அது சற்றும் வழுவில்லா உயர்தர போஷகத்தின் விசேஷத்தினாலென்று சொல்லப்பட்டது. ஆனால், அந்தச் சீமாட்டிகள் சிறுபான்மையரிடத்தில் காண்பித்த கண்யம், அவர்களுடைய மற்ற குணநிசயங்களைவிட, இன்னும் மேலாகத் தோன்றியது. அவர்களில் ஒருவள் சொன்னாள்: "ஒலிவியா உலகத்தைக் கொஞ்சம் கூடுதலாகப் பார்த்திருந்தால் அவளை அது மிகவும் சீர்தூக்கிவிடும்" என்றாள். அதன் பிறகு, மற்றொரு

ருத்தி "பட்டணத்தில் ஒரு குளிர்காலம் தன்னுடைய குட்டி ஸோபியா இருந்தால், அவளை வேறு மனுஷியாக்கிவிடு"மென்றாள். என் மனைவி அவ்விரண்டையும் குதூகலத்தோடு ஒத்துக்கொண்டு சொன்னாள்: "தன் பெண்களுக்கு ஒரு குளிர்கால அனுபோகத் தேர்ச்சி கொடுக்கவேண்டுமென்பதைப்போல் வேறு எதையும் அவர்கள் விஷயத்தில் அவ்வளவு தீவிரமாக தான் விரும்பவில்லை" என்றாள். இதற்கெல்லாம் நான், "அவர்களுடைய வளர்ப்பு ஏற்கனவே அவர்களுடைய ஐச்வர்யத்திற்கு மேற்பட்டதாக இருந்துகொண்டிருக்கிறது. இன்னும் நயம் சேர்ந்தால், அவர்களுடைய வறுமையை அவர்கள் ஏளனம் செய்யும்படி நேரிடும். மேலும் அவர்களுக்கு உரிமையில்லாத சுக அனுபவங்களில் அவா ஏற்படும்" என்று பதில் சொல்லாமல் இருக்க முடியவில்லை. "எவ்வளவோ பிறருக்கு கொடுக்க சக்தியுள்ள அவர்களுக்கு என்ன சுக அனுபவங்கள்தான் உரிமையில்லை" என்று தார்ன்ஹில் கூவி மேலும் சொன்னார். "என்னைப்பற்றியவரையில், என்னுடைய ஐச்வரியம் கொஞ்சம் மிகுதியே. அன்பு, ஸ்வாதந்திரியம், சுகானுபவம் இவைகளே என்னுடைய கொள்கைகள். ஆனால் என்னைச் சபியுங்கள்; என்னுடைய ரமணீயமான ஒலிவியாவுக்கு திருப்தி கொடுக்குமானால், அது அவளதுதான். நான் கேட்கும் பிரதிப்பிரயோஜனம் என்னவென்றால், நான் கொடுக்கும் சொத்தோடு என்னையும் சேர்த்துப் பெற்றுக்கொள்ள வேண்டியதே" என்றார்.

நான் உலக நடவடிக்கை அவ்வளவு தெரியாதவனல்ல. ஹோதாவிலுள்ளவர்கள், மனத்தினால் மிகவும் இழிவான ஏற்பாட்டின் மனச் சூழ்ச்சியை மறைப்பதற்கான ஒரு ஸாகஸப் பேச்சு இது என்று எனக்குப் புலப்படாமலில்லை. ஆனால் என் கோபத்தை நான் அடக்க முயன்றேன். நான் சொன்னேன்: "ஐயா, நீர் இப்பொழுது உம்முடைய வரவினால் கௌரவப்படுத்திய குடும்பம், நீர் கௌரவம் எவ்வளவு பாராட்டுவீரோ, அதில் அவ்வளவு ஜாக்கிரதையாகவே போஷிக்கப்பட்டு வந்திருக்கிறார்கள். அதைக் கெடுக்க எவ்விதப் பிரயத்தனங்களும் மிகவும் கொடுமையான சம்பவங்களை உண்டு



பண்ணலாம். கௌரவம்தான் ஐயா இப்பொழுது எங்களுக்குள்ள பாக்கியிருக்கும் ஒரே ஐச்வரியம். அந்தக் கடைசித் தனத்தின் விஷயத்தில் நாங்கள் மிகவும் ஜாக்கிரதையாகவேதான் இருக்கவேண்டியது" என்று முடித்தேன். நான் உடனே இவ்வளவு மனக் கொதிப்போடு பேசியதற்கு வருத்தமடைந்தேன். உடனே வாலிப கனவானும் என்னுடைய கையை இழுத்துப் பிடித்துக்கொண்டு என்னுடைய மனோதர்மத்தை மிகவும் மெச்சினேன். ஆனால் என்னுடைய சந்தேகத்தை ஒப்புக்கொள்ள மாட்டேன் என்று சத்தியம் செய்தார். "நீர் இப்பொழுது தெரியப்படுத்தின மர்மத்திற்கு நான் அப்பேர்க்கொத்த எண்ணம் என் மனதில் கொஞ்சம்கூட கிடையாது என்று மறுக்கிறேன். இல்லை, மனதை கவரக்கூடியவை, யாவற்றிற்கும் உடன்படாமல், அவைகளோடு எதிர்த்துப் போராடும் கற்பு எனக்குப் பிடித்தமில்லை. ஏனென்றால் நான் வரிக்கும் பெண்களையெல்லாம் நேருக்கு நேரே பேசித்தான் பகிரங்கமாய்க் கோருவேன்" என்றார்.

இரண்டு சீமாட்டிகளும், மற்ற சங்கதிகளைப்பற்றி தெரியாதவர்கள்போல் காண்பித்து கடைசியாக பேசப்பட்ட வரம்பில்லாத பேச்சில் மிகவும் அதிருப்தி அடைந்தவர்கள் போலிருந்தார்கள். அவர்கள் கற்பைபற்றி, மிகவும் ஜாக்கிரதையானதும் வினயத்தோடுகூடிய சம்பாஷணையை ஆரம்பித்தார்கள். இதில் என் மனைவியும் தார்ன்ஹில்லும் சாப்லன்னும் நானும், சேர்ந்துகொண்டோம். ஸ்குயரும் தாம் வரம்பில்லாமல் முன் பேசியதற்கு, தானே தன்னுடைய வருத்தத்தை தெரிவிக்கும்படி செய்யப்பட்டார். நாங்கள் அடக்கத்தின் சுகத்தைப்பற்றியும் குற்றமில்லா மனத்தின் சூரிய வெளிச்சம்போலுள்ள பிரகாசத்தைப்பற்றியும் பேசினோம். நான் இந்த சம்பாஷணையில் மிகவும் திருப்தியடைந்து, என் சிறு குழந்தைகளெல்லாம்கூட வழக்கத்திற்கு அதிகமான நேரம் இப்பேர்க்கொத்த மிக உயர்ந்த சம்பாஷணையைக் கேட்டு தெளிவடையும் பொருட்டு நிறுத்தி வைக்கப்பட்டார்கள். மிஸ்டர் தார்ன்ஹில் எனக்கும் ஒரு படி மேலேயே போனார். அவர் எல்லோரும் சேர்ந்து தெய்வ பிரார்த்தனை செய்

வதில் ஏதாவது எனக்கு ஆக்ஷேபனை உண்டா என்று கேட்டார். நான் சந்தோஷத்தோடு அந்த எண்ணத்தை ஆமோதித்தேன். இப்படியெல்லாம் இரவு மிகவும் சுகமான வழியில் கழிக்கப்பட்டு கடைசியாக கூடியிருப்பவர்கள் திரும்புவதைப்பற்றி யோசித்தார்கள். சீமாட்டிகளுக்கு என் பெண்களைவிட்டுப் பிரிய மனமேயில்லை. அவர்களிடத்தில் ஒரு விசேஷமான அன்பு கொண்டுவிட்டார்கள். அவர்களை வீட்டிற்குப் போகும் வழிப் பேச்சுக்கு வரவேண்டுமென்ற வேண்டுகோளில் சேர்த்துக் கொண்டார்கள். ஸ்குயரும் அதை ஆமோதித்தார். என் மனைவியும் தன்னுடைய பிரியத்தையும் சேர்த்து சமர்ப்பித்தாள். என் பெண்களும் தாங்கள் போக இஷ்டப்படுகிறவர்கள்போல் என்னை நோக்கினார்கள். இந்த இக்கட்டில் நான் இரண்டு மூன்று சாக்குப் போக்குகளைச் சொன்னேன். ஆனால் அவைகளை என் பெண்கள் ஆமோதிக்கவில்லை. ஆகையால் கடைசியில் நான் தீவிரமாய் மறுக்கும்படி ஆய்விட்டது. இதனால் என் குடும்பத்தில் மறுநாள் முழுவதும் தொங்கவிட்ட முகமும் குறைபதிலும் சம்பவித்தது.

## அத்தியாயம் 10

*என் குடும்பம் தங்களைவிட மேலானோரோடு சமமாக இருக்க முயலுகிறது. ஏழை மக்கள் தங்களுடைய ஸ்திதியைக் காட்டிலும் மேன்மையாக தோன்ற முயல்வதினால் ஏற்படும் கஷ்ட நிஷ்டூரங்கள்.*

தொடர்ந்த கடுமையான போதனைகள் அடக்கத்தைப் பற்றியும் எழ்மையைப் பற்றியும், திருப்தியுடனிருப்பதைப்பற்றியும் நான் தொடர்ந்து கடுமையாகக் கூறிவந்த போதனைகள் யாவும் கட்டோடு அசட்டை பண்ணப்பட்டன. எங்களைவிட மேலோராக இருந்தவர்களை சற்று முன்பு எங்களுக்கு அளிக்கப்பட்ட அந்தஸ்தின் காரணமாக என்னால் வேருடன் பிடுங்காத, வீழ்த்தாட்டி விடப்பட்ட கர்வமானது பின்பு தலை தூக்கிற்று. எங்கள் ஜன்னல்கள் முன்போல் கழுத்திற்கும் முகத்திற்கும் பூசும் வாசனைத் திரவங்களால் நிரப்பப்பட்டன. வெளியில் போனால், சூரியன் தோலுக்கு சத்துருவாக இருக்கிறது என்று நடுங்கினார்கள். வீட்டுக்குள் அடுப்பின் நெருப்பு தோலின் வர்ணத்தை, மாற்றிவிடுமென்று பயந்தார்கள். காலையில் சீக்கிரம் படுக்கையிலிருந்து எழுந்திருந்தால் தன் பெண்களின் கண்கள் கெட்டுப் போகுமென்று என் மனைவி சொன்னாள். சாப்பாட்டுக்குப் பிறகு வேலை செய்தால் அவர்கள் மூக்கு சிவந்துவிடுமென்றாள். அவர்கள் ஒன்றும் செய்யாமலிருக்கும் பொழுது அவர்கள் கைகள் எவ்வளவு வெண்மையாகத் தோன்றுகின்றனவோ அப்படி மற்ற வேளைகளில் இல்லையென்றான். ஆகையால் ஜார்ஜினுடைய சட்டைகளைப் பூர்த்தி செய்து முடிப்பதற்கு பதிலாக, அவர்கள் இப்பொழுது தங்களுடைய பழைய முகவலைகளைப் புதுப்பித்துக்கொண்டும், தங்கள் கை உறைகளைப் பதன் படுத்திக்கொண்டும் இருந்தார்கள். ஏழையான மிஸ். பிளாம்பரோக்கள் இதுகாறும் அவர்களுடைய

இனிய தோழிகளாயிருந்தவர்கள், இப்பொழுது இழிவான சகவாசங்களென்று தள்ளப்பட்டார்கள். அவர்களுடைய பேச்செல்லாம் பெரிய அந்தஸ்தைப் பற்றியும், பெரிய தோரணையில் வசிப்பவர்களைப் பற்றியுமே இருந்தது. சித்திரங்களைப் பற்றியும் தற்கால நாகரிகத்தைப் பற்றியும் ஷேக்ஸ்பியரைப் பற்றியும் ஜலதரங்கப் பீங்கான்களைப் பற்றியுமே பேசினார்கள். இவற்றை யெல்லாம் பொறுத்துக்கொண் டிருப்போம்; ஆனால் ஒரு குறி சொல்லும் லம்பாடிப் பெண் வந்து, எங்களை ஸ்வர்க்கத்தில் கொண்டுபோய் வைத்துவிட்டாள். வெயிலில் அலைந்து கறுத்த குறத்தி ஒருத்தி வந்தாள். அவள் வந்த மாத்திரத்தில் என் பெண்கள் தம் கையில் வெள்ளியால் கோடு கிழிப்பதற்காக ஆளுக்கொரு ஷில்லிங் கொடுக்க வேண்டினார்கள்.

உண்மையில் நான் எப்பொழுதும் ஞானியாய் இருப்பதிலே அலுத்துப் போய்விட்டேன். அதனால் அவர்களுடைய வேண்டுகோளை மறுக்க மனமில்லாமல் இருந்தேன். ஏனென்றால், அவர்கள் சந்தோஷத்தோடு இருப்பதைப் பார்க்க விரும்பினேன். நான் அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு ஷில்லிங் கொடுத்தேன். அதனால் குடும்பத்தின் கௌரவத்தை நிலைநாட்டிக் கொண்டிருப்பதற்காக அவர்கள் பணமில்லாமல் வெளியே போகக்கூடாது. அவர்களும் அப்படிப் போனதில்லை என்றே நான் சொல்லுவேன். ஏனெனில், என்னுடைய மனைவி எப்பொழுதும் ஒவ்வொருவரு' சட்டைப் பையில் வைத்துக்கொள்வதற்காக ஒரு கினியை மனமகிழ்ந்து கொடுப்பாள், ஆனால் அதை எப்பொழுதும் மாற்றங் கூடாதென்று கண்டிப்பாகக் கட்டளை யிட்டிருந்தாள். அவர்கள் குறிகாரியிடம் கொஞ்ச நேரம் தனியாக அமர்ந்து இருந்துவிட்டுத் திரும்பி வரும்பொழுது அவர்களுடைய பார்வையிலிருந்து ஏதோ மகத்தான பதவியை அவர்கள் எதிர்பார்க்கலாம் என்று அவள் சொல்லியிருக்கிறாள் எனத் தெரிந்துகொண்டேன். "நல்லது, என் பெண்மணிகாள், உங்களுக்கு என்ன நடந்தது? லிவி சொல்லு பார்ப்போம். குறிகாரி உங்களுக்கு ஒரு சல்லி



பெறும் சமாசாரமாவது சொன்னாளா?" என்று கேட்டேன். "நான் ஒப்புக்கொள்ளமாட்டேன் அப்பா. அவள், சரியான வழியில்லாத யாரைப் பற்றியோ பேசுகிறாள். ஏனென்றால், அவள் நான் பன்னிரண்டு மாதத்திற்குள்ளாகவே ஒரு ஸ்குயரை மணம் செய்து கொள்வேனென்று தீர்க்கமாய் உரைத்தாள்" என்றாள் என் பெண். "நல்லது இப்பொழுது, ஸோபி, என் குழந்தாய், உனக்கு எப்போப்பட்ட கணவன் கிடைக்கப் போகிறான்?" என்று கேட்டேன். "அப்பா, என் தமக்கை ஸ்குயரை மணம் செய்துகொண்டதும் அதை அடுத்து சீக்கிரமாக எனக்கு ஒரு பிரபு கிடைப்பாராம்." "ஆஹா உங்களுடைய இரண்டு ஷில்லிங்குக்கு இவ்வளவு தானா கிடைக்கப் போகிறது? இரண்டு ஷில்லிங்குக்கு ஒரு பிரபுவும் ஸ்குயரும்தானா? நீங்கள் முட்டாள்கள். நான் உங்களுக்கு அதில் பாதிப் பணத்திற்கே, ஒரு ராஜகுமாரனும் ஒரு நவாப்பும் கிடைப்பார்கள் என்று சொல்லி யிருப்பேன்."

அவர்களுடைய இந்த விசித்திர புத்தியோ வென்றால் மிகவும் கெடுதலாகப் பயன்பட்டது. நாங்கள் எங்களுடைய கிரக பலனால் ஏதோ ஒரு உயர்ந்த பதவியை அடையப் போகிறவர்கள் என்று நினைக்க ஆரம்பித்தோம். பின்னால் வரப்போகும் மேம்பாட்டை முன்கூட்டியே எதிர்பார்க்கத் தொடங்கிவிட்டோம். ஆயிரம் தடவைகள் சொல்லப்பட்டதானாலும் அதையே நான் மற்றொருதரம் சொல்லுகிறேன். நமது வாழ்நாளில் வரப்போகும் நற்காலத்தை எதிர்பார்ப்பதில் உண்டாகும் சந்தோஷம், காரியம் கைகூடினபின் அடையும் சந்தோஷத்தைவிட, அதிகம். முதல் சொன்னதில், நாம் நம்முடைய ருசிக்குத் தகுந்தவாறு மனப்பாலைக் குடிக்கிறோம். காரியம் கைகூடியபின், அதில் உள்ளது போல் சம்பவிக்கிறது. நம்முடைய திருப்திக்காக, நாம் மனப்பால் குடித்துக் கொண்டிருந்த மனப்பான்மையை காரியம் கைகூடிய பின்னர் திருப்புவதென்பது நடைபெறாத காரியம். நாங்கள் எங்களுடைய ஸ்திதி மறுபடியும் மேலே உயருவதாக எண்ணினோம். நாங்களிருக்கும் ஊரெல்லாம்

ங்குயர் என் பெண் மேல் காதல் கொண்டிருக்கிறாரென்று ஒரே வார்த்தையாகச் சொன்னதால், அவளும் அவரிடம் அப்படியே காதல் கொண்டாள். ஏனென்றால், அவர்கள் அப்படிப் பேசுவதினால் அவள் அந்தக் காதலினால் தூண்டப்பட்டாள். இந்த சுகமான சொற்ப காலத்தில், உலகத்தில் மிகவும் அதிர்ஷ்டமான சொப்பனங்கள் எத்தனை உண்டோ, அத்தனையும் என் மனைவிக்குத் தோன்றின. அதை அவள் அன்றன்று காலை விழித்ததும் மிகவும் பக்தி சிரத்தையுடன் நடந்தது நடந்தபடியே சொல்ல மறக்கமாட்டாள். ஓர் இரவில் சவப் பெட்டியையும் சிலுவைபோல குறுக்காக வைக்கப்பட்ட எலும்புகளையும் கண்டாள். அவை சீக்கிரத்தில் நடக்கப்போகும் விவாகத்தின் அறிகுறி. மற்றொரு நாள் அவள் தன் குமாரிகளின் சட்டைப்பைகளிலெல்லாம் பைசாக்கள் நிறைந்ததாகக் கண்டாள். அது கூடிய சீக்கிரத்தில் பொன் கொழிக்கப் போகிறது என்பதற்கு நிச்சயமான அறிகுறி. என் பெண்களுக்கும் நல்ல சகுனங்களே சம்பவித்தன. அவர்கள் அதிசயமான முத்தங்கள் கொடுக்கப் பட்டதாக சொப்பனம் கண்டார்கள். மெழுகு வர்த்தியில் மோதிரம் கோத்திருக்கக் கண்டார்கள். பணப்பைகள் நெருப்பிலிருந்து குதித்தன. ஒவ்வொரு தேத்தண்ணீர் கிண்ணத்தின் அடியிலும் உண்மைக்காதல் முடிச்சுகள் கண்டு பிடிக்கப்பட்டன. வாரத்தின் கடைசியில் எங்களுக்கு பட்டணத்து சீமாட்டிகளிடமிருந்து ஒரு கடிதம் கிடைத்தது.

அதில் அவர்கள் தங்களுடைய ஆசியைக் கூறி, வரும் ஞாயிற்றுக்கிழமை கோவிலில் எங்களுடைய குடும்பம் முழுவதையும் பார்க்க எதிர்பார்க்கிறோமென்று எழுதியிருந்தார்கள். இதன் காரணமாகக் காலையெல்லாம் என் மனைவியும் பெண்களும் நெருங்கின யோசனையில் ஆழ்ந்திருந்தார்கள். அவ்வப்பொழுது என் பக்கம் தங்கள் பார்வையைச் செலுத்தினார்கள். அதிலிருந்து அவர்கள் ஏதோ ஒரு வெளிப்படுத்தக்கூடாத சூழ்ச்சியில் ஆழ்ந்திருக்கிறார்களென்று எனக்கு புலப்பட்டது. உண்மையில் நான், அவர்கள் மறுநாளன்று தேஜோமயமாகத் தோன்ற



வேண்டு மென்று ஏதோ ஒரு முட்டாள்தனமான ஏற்பாட்டைத் தயார் செய்து கொண்டிருக்கிறார்களென்று, தீவிர சந்தேகத்தைக் கொண்டேன்.

சாயங்காலம், அவர்கள் தங்களுடைய ஏற்பாடுகளை மிகவும் கட்டுப்பாடான வழியில் நடத்த ஆரம்பித்தார்கள், என் மனைவி என்னை முற்றுகைபோடும் காரியத்தை ஏற்றுக் கொண்டாள். தேயிலை பானம் பண்ணினபிறகு, நான் மகிழ்ச்சியுடன் இருப்பதைப் பார்த்து அவள் இப்படி ஆரம்பித்தாள்: "சார்லஸ், என் பிரியரே, நாளைக்கு கோவிலில் உத்தமமான சத்சங்கம் வந்து சேரும் என்று நான் நினைக்கிறேன்." "ஒரு வேளை நாம் எதிர்பார்க்கலாம். என் அன்பே, அதைப்பற்றி நீ மனத்தாங்கல் கொள்ள வேண்டாம். அவர்கள் வந்தாலும் சரி, வராவிட்டாலும் சரி, ஒரு நல்ல பிரசங்கம் நடத்தத் தயாராயிருக்கிறேன்" என்று பதிலுரைத்தேன். "அதுதான் நானும் எதிர்பார்த்தது, பிரியரே, நாம் அங்கே எவ்வளவு நேர்த்தியாய்த் தோற்றலாமோ அவ்வாறு செய்ய வேண்டு மென்று நினைக்கிறேன். ஏனெனில் என்ன நடக்குமோ, யார் சொல்லக்கூடும்" என்று அவள் பதிலுரைத்தாள். "உன்னுடைய ஜாக்கிரதை மிகவும் புகழத்தக்கது. நேர்த்தியான நடத்தையும், கோவில் தரிசனமும், இவைதான் எனக்கு குதூகலத்தைக் கொடுக்கின்றன. நாம் பக்தியோடும், அடக்கமாகவும், திருப்தி உடையவர்களாகவும், வினயத்தோடும் இருக்க வேண்டு" மென்று சொன்னேன். "ஆம், அது எனக்குத் தெரியும். ஆனால் என் தாத்பரியமென்னவென்றால், நாம் அங்கே எவ்வளவு தகுந்த பாணிப்போடு போக முடியுமோ, அப்படிச்செய்யவேண்டும். நாம் அண்டையிலிருக்கும் சட்டி சுரண்டிகளைப் போலவே இருக்கக்கூடாது" என்று கூவினாள். "நீ சொல்வது முற்றிலும் சரியே, என் அன்பே, நானும் அப்பேர்ப்பட்ட ஏற்பாட்டைத்தான் சொல்லுவோமென்றிருந்தேன். அங்கே போக வேண்டிய ஒழுங்கு எப்படியென்றால், எவ்வளவு சீக்கிரமாகப் போகமுடியுமோ அப்படிச் செய்வதுதான். ஏனென்றால், துதி ஆரம்பிப்பதற்கு முன் தியானத்திற்கு நேரம் வேண்டுமல்லவா?" என்றேன் "ப்பூ. சார்லஸ்,

அதெல்லாம் மிகவும் வாஸ்தவந்தான். ஆனால் நான் வேண்டியதெல்லாம் அவையல்ல. நான் நினைப்பதென்னவென்றால், நாம் அங்கே கனவான்களைப் போல் போகவேண்டுமென்பதுதான். கோவில் இரண்டு மைலுக்கு அப்பாலிருக்கிறதென்று உமக்குத் தெரியும். என் பெண்கள் கால்நடையாய் காற்றடித்ததனால் புழுதிபட்டு, நடப்பதினால் முகம் சிவந்து போய், கோவிலில் புகுந்து அவர்கள் இடத்திற்கு அவ்விதம்போக எனக்கு இஷ்டமில்லை. அவர்கள் அப்பொழுது, ஒரு பந்தயத்தில் கெலித்தவர்களைப்போல் வேர்த்து விறுவிறுத்து தோன்றப்படுவார்கள். ஆகையால், நான் அதற்கு ஆக்ஷேபிக்கிறேன். இப்பொழுது என்னுடைய பிரியரே, என் உத்தேசம் இதுதான்—நம்மிடத்தில் இரண்டு உழவுக் குதிரைகளிருக்கின்றன. ஒன்று, குதிரைக் குட்டியாய் நம்முடைய வீட்டில் இந்த ஒன்பது வருஷம் இருந்திருக்கிறது. அதனுடைய தோழன் ப்ளாக் பெர்ரி. இது ஒரு மாதமாய் ஒரு வீட்டு வேலையும் செய்யவில்லை. இரண்டும கொழுதது சோம்பேறிகளாய் இருக்கின்றன. அதெல்லாம் நம்மைப்போல் ஏன் கொஞ்சம் அலுவல் செய்யக் கூடாது? நான் சொல்வதைக் கேளும். மோஸஸ் அவற்றைக் கொஞ்சம் பாணிப்புச் செய்ததும், அவை மிகவும் பளபளப்புள்ளவையாகத் தோன்றும்.'' "அப்பேர்க்கொத்த கேவலமான வாகனத்தைக் காட்டிலும் கால்நடை இருபது மடங்கு அதிக கௌரமுள்ளது'' என்று இந்த ஏற்பாட்டை நான் ஆக்ஷேபித்தேன். ஏனெனில், ப்ளாக் பெர்ரிக்கு ஒரே கண். குதிரைக் குட்டிக்கு வால் கிடையாது. அவை சவாரிசெய்து பழக்கப்பட்டவையல்ல. ஆனால் ஒரு நூறு விதம் கோனஷ்டைகள் செய்யும். மேலும் வீட்டில், சேணமும் பின் பக்கம் உட்கார மெத்தையும் ஒன்றுதான் இருக்கிறது. இந்த ஆக்ஷேபணைகள் எல்லாம் திரஸ்கரிக்கப்பட்டன. ஆகையால் நான் சம்மதிக்கும்படி ஏற்பட்டது. மறுநாட் காலை அவர்கள் புறப்படுவதற்குத் தேவையான சாமான்களைச் சேகரிப்பதில் மிகவும் சுறுசுறுப்பாய் இருப்பதைக் கவனித்தேன். ஆனால் அதற்கு கால தாமதமாகுமென்று உணர்ந்து நான் கோவிலுக்கு முன்னதாகவே நடந்து போனேன்.



அவர்கள் சீக்கிரமாக பின் வருவதாக வாக்களித்தார்கள். அவர்கள் வருவார்களென்று நான் ஒரு மணி நேரம் என் வாசிக்கும் மேஜையில் எதிர் பார்த்திருந்தேன். ஆனால் எதிர் பார்த்தபடி வராததினால், நான் ஆராதனையை ஆரம்பிக்கும்படி நேர்ந்தது. முடியும் வரையில் வராததால், மனத்திற்கு கொஞ்சம் கவலை யேற்பட்டது. ஆயினும் முடித்துவிட்டேன். எல்லாம் முடிந்தும் அதுவரையில் என் குடும்பத்தைக் காணாததால் எனக்குக் கவலை அதிகமாயிற்று. ஆகையால் நான் குதிரைச் சவாரி செய்யும் ரஸ்தாவில் தேடிக்கொண்டே திரும்பினேன். அந்த வழி என் வீட்டிற்கு ஐந்து மைல் தூரம். கால் நடை இரண்டு மைல்தான். நான் வீட்டை நோக்கி பாதி வழி வந்தபின்னர்தான் அந்த ஊர்வலம் மெள்ள மெள்ளக் கோவிலைக் குறித்து வந்துகொண்டிருப்பதைப் பார்த்தேன்.

என் மகன், என் மனைவி, இரண்டு குழந்தைகள் ஆகியோர் ஒரு குதிரைமேல் உட்கார்ந்திருந்தார்கள். என் இரண்டு பெண்களும் மற்றக் குதிரைமேல் உட்கார்ந்திருந்தார்கள். காலதாமதமானதற்குக் காரணத்தைக் கோபத்துடன் கேட்டேன். ஆனால் உடனே அவர்களுடைய பார்வையிலிருந்து ரஸ்தாவில் ஆயிரம் துர்ச் சம்பவங்களுக்கு உட்பட்டார்களென்று தெரிந்துகொண்டேன். முதலில் குதிரைகள் வீட்டுக் கதவண்டையிலிருந்து வெளியேவர மறுத்துவிட்டன. மிஸ்டர் பர்ச்கெல் அதன் மேல் தம் தடியால் அவற்றை அடித்து இருநூறு கஜம் வரையில் போகும்படி கருணை புரிந்தார். அதற்கு பிறகு என் மனைவி உட்கார்ந்திருந்த மெத்தையின் வார்கள் அறுந்துபோயின. அதை சீர்திருத்த அங்கேயே நிற்கும்படி நேர்ந்தது. அதன் பிற்பாடு குதிரைகளில் ஒன்று நகராமல் நிற்க எத்தனம் பண்ணிற்று. அதை அடித்தும் தட்டிக்கொடுத்தும் மேலேபோகச் செய்வதற்குப்பயன்படவில்லை. நான் அவர்களைக் கண்டுபிடித்தபொழுது, அந்தக் கஷ்டத்திலிருந்து அப்பொழுதுதான் விடுவித்துக்கொண்டிருந்தார்கள். ஆனால் வேறு ஒரு கெடுதலும் சம்பவிக்கவில்லை என்று அறிந்துகொண்டேன். இந்த சம்பவத்தின் காரணமாய்ப்

பின்னால் எனக்கு அவர்கள்மேல் அநேக வெற்றிக்கு ஆஸ்பதம் ஏற்பட்டது. அப்படியே என் பெண்களுக்கும அதிக அடக்கத்தைப் புகட்டியது. அதனால் அவர்களுடைய அப்போதுள்ள ஏமாற்றம் எனக்கு மிக்க துக்கத்தைக் கொடுக்கவில்லை.

## அத்தியாயம் 11

*என் குடும்பம் தலைதூக்கிநிற்க வேண்டுமென்று இன்னும் தீர்மானிக்கிறது.*

மைக்கல் மாஸ் ஈவ் திருநாள் மறுநாள் சம்பவிக்கவே, பக்கத்து பிலாம்பரோவின் வீட்டில் கொட்டைகளை சுடுவதற்கும், சூழ்ச்சியுள்ள வேடிக்கைகளில் ஈடுபடுவதற்கும், நாங்கள அழைக்கப்பட்டோம. ஏற்கெனவே, எங்களுக்கு ஏற்பட்ட அவமானங்கள் எங்களைக் கொஞ்சம் அடக்கியது. இல்லாவிடில், நாங்கள் அந்த வரவழைப்பை உதாசினத்தோடு மறுத்திருக்கலாம். இருந்தபோதிலும், கொஞ்சம் சந்தோஷமாயிருக்க உடன்பட்டோம். எங்கள் சத்திய சந்தனான பக்கத்தானுடைய கோழிகளும் குஞ்சுகளும் நேர்த்தியாக இருந்தன. ஆட்டுக்குட்டியின் மயிர், என் மனைவி தன் அபிப்பிராயத்தில் மிகவும் உயர்ந்தது என்றாள். அவள் அவ் விஷயத்தில் பழக்கமுள்ளவள். ஆனால் அவர் கதை சொல்லும்விதம் உண்மையில் அவ்வளவு நன்றாயில்லை. அவை மிகவும் நீண்டதாயும் மிக சாரமில்லாமலுமிருந்தன. அவை எல்லாமே அவனுடைய பிரதாபங்களைப் பற்றியவையே. ஏற்கெனவே பத்துத் தடவைகள் நாங்கள் அவற்றை கேட்டுச்சிரித்திருக்கிறோம். அப்படியிருந்தும் இன்னும் ஒருதரம் நாங்கள் அவற்றைக் கேட்டு சிரிக்க சம்மதித்தோம். மிஸ்டர் பர்க்கெல்லும் அந்தக் கூட்டத்தில் ஒருவர். அவர் எப்பொழுதும் கெடுதியில்லாத சில வேடிக்கைகள் நடைபெறுவதில் அவாவுள்ளவர். அவர் சிறுவர்களையும் சிறுமிகளையும் கண்ணாமூச்சி ரேரே என்னும் விளையாட்டில் ஆரம்பித்துவிட்டார். என் மனைவியும் அந்த வேடிக்கையில் சேரத் தூண்டப்பட்டாள். அவள் இன்னும் அவ்வளவு கிழமாகவில்லையென்று நினைக்க, நான் சந்தோஷமடைந்தேன். இப்பொழுது அதை நானும் என் பக்கத்தில் இருப்பவர்களும் பார்த்துக்கொண்டிருந்தோம். ஒவ்வொரு பந்தயத்திலும் நாங்கள் சிரித்

தோம். நாங்கள் சிறுவர்களாயிருக்கும்பொழுது எங்களுக்
கிருந்த சாமர்த்தியத்தைப்பற்றி புகழ்ந்து பேசிக்கொண்
டோம். சூடான காக்குல்ஸ பின்னர் வழங்கபபட்டன.
கேள்விகளும் அவற்றிற்குப் பதிலுத்தரங்களும் பின்
தொடர்ந்தன. கடைசியாக அவர்கள் கால் சடாவை
வேட்டையாட ஆரம்பித்தார்கள். ஒவ்வொரு மனிதனும்
இந்தப் புராதன விளையாட்டைப்பற்றி அறிந்திருக்கமாட்
டார்கள். ஆகையால் இதைப்பற்றி சொல்லவேண்டி
யிருக்கிறது. இந்த விளையாட்டில் சேர்ந்துகொண்ட எல்
லோரும் ஒரு வட்டமாக நிற்பார்கள். அதில் ஒருவன்
மாத்திரம் நடுவில் நிற்பான். சுற்றி நிற்பவர்கள் ஒரு
ஜோட்டைப் பின்புறமாக ஒருவருக்கொருவர் செவு
ராட்டினத்தில் போல உயரே வீசி எறிவார்கள்.
நடுவில் நிற்கிறவன் அதைப் பிடிக்கவேண்டும். நடுவில்
நிற்கிறவனுக்கு எல்லோரையும் ஒரே தடவையில்
பார்க்க முடியாததால், அந்த விளையாட்டின் மிக்க
வன்மையென்னவென்றால், அந்த ஜோட்டின் அடிப்புறத்
தால் நடுவிலிருக்கும் பூமானையோ பெண்ணையோ அவர்
களால் தடுத்துக் கொள்ள முடியாத பக்கத்தில் ஒரு
தட்டுத்தட்டுவது வழக்கம். இந்த மாதிரி என் மூத்த
மகன் நடுவில் அகப்பட்டுக்கொண்டு, ஜோட்டடி பட்டு
வேர்த்து விறுவிறுத்து, நாடி யெல்லாம் விழுந்து, 'ஒழுங்
காய் விளையாடுங்கள்' என்று உரத்த குரலில் கதற ஆரம்
பித்தான். அந்தக் குரல் ஒரு நாட்டியப் பெண்ணையும்
கூட செவிடாக்கிவிடக் கூடியது. அப்பொழுது குழப்பத்
துக்கு மேல் குழப்பம். இரண்டு நண்பர்கள் உள்ளே
வந்தார்கள். எங்களுடைய இரண்டு பட்டணத்து நண்பர்
களைத் தவிர யார் வருவார்கள்? லேடி ப்லார்னி, மிஸ் கரோ
லினா, வில்ஹெல்மினா, அமீலியா ஸ்கேக்ஸ், அவர்களே.
இந்தப் புதிய அவமானத்தை விஸ்தரிக்க வேண்டியதில்லை.
—பிராணன் போனால்தான் என்ன?—எப்பேர்பட்ட
பெரிய ஹோதாவிலுள்ள சீமாட்டிகளால் இந்தப் பட்டி
காட்டுப் பான்மையில் பார்க்கப்படுவது! பிலாம்பரோ
வின் ஏற்பாட்டால் இப்பேர்கொத்த காட்டுமிராண்டித்
தனமான விளையாட்டைத் தவிர வேறு என்ன நன்மை
பிறக்கக்கூடும்? ஆச்சரியத்தினால் கல்லாக்கப்பட்டவர்



களைப் போல், கொஞ்ச நேரம் பூமியில் பதித்தவர்களைப்
போல் நின்று விட்டோம்.

அந்த இரண்டு சீமாட்டிகளும் எங்களைப் பார்ப்பதற்கு
எங்கள் வீட்டிற்குப் போயிருந்தார்கள். வீட்டிலிருந்து
வெளியே போயிருந்ததைக் கண்டு எங்களைத் தேடிக்
கொண்டு அங்கே வந்தார்கள். ஏனெனில், அவர்கள் எந்த
துர்ச்சம்பவத்தால் நாங்கள் முதல் நாள் கோவிலுக்கு வர
முடியாமல் செய்விக்கப் பட்டோமென்று தெரிந்து
கொள்ள மனக்கவலைப் பட்டார்கள். ஒலிவியா தான்
அதற்குச்சமாதானம் சொல்லுவதாக ஒப்புக்கொண்டாள்.
எல்லாச் சமாச்சாரத்தையும் கீழ் வரும் வார்த்தைகளால்
தெரியப்படுத்திக் கொண்டாள். "நாங்கள் எங்கள் குதிரை
களிலிருந்து தள்ளிவிடப்பட்டோம்" இந்தச் சமாச்சாரத்
தைக் கேட்டு அந்தச் சீமாட்டிகள் மிகவும் வருத்தப்
பட்டார்கள். ஆனால் குடும்பத்தில் ஒருவருக்கும் காயம்
ஏற்படவில்லை என்று கேள்வியுற்று, அவர்கள் மிகச்
சந்தோஷத்தை அடைந்தார்கள். நாங்கள் நிகிலினால்
சாவடைந்தவர்கள் போல் ஆனோம் என்று கேள்வியுற,
அவர்கள் அதிகமான துக்கத்தை அடைந்தார்கள். பிறகு
நாங்கள் ஒரு நல்ல இரவைக் கழித்தோமென்று கேட்க,
அவர்கள் அதன்மேல் அதிகச் சந்தோஷத்தை அடைந்தார்
கள். என் பெண்களிடத்தில் அவர்களுக்கு இருந்த மரி
யாதை அளவு கடந்தது. ஏற்கெனவே என் பெண்கள்
மேல் அவர்களுடைய பிரியம் மகிழ்ச்சியைத் தந்தது.
ஆனால் இப்பொழுது அவை ஆரவாரம் செய்தன. அவர்
கள் தங்களுக்கு இடைவிடா நட்பு ஏற்பட வேண்டு
மென்று தங்களுடைய விருப்பத்தைத் தெரிவித்தார்கள்.
லேடி ப்லார்னி ஒலிவியாவிடத்தில் தனியான பிரியம்
வைத்திருந்தாள். மிஸ் கரோலினா வில்ஹெல்மினா அமீ
லியா ஸ்கெக்ஸ் (நான் அவளுடைய முழுப்பெயரையும்
சொல்ல ஆசைப் படுகிறேன்) அவளுடைய தங்கையிடத்
தில் அதிக அபிமானம் வைத்தாள். அவர்கள் தங்கள்
இருவருக்குள்ளேயே சம்பாஷணை நடத்திக் கொண்டிருந்
தார்கள். என் பெண்களோ அவர்களுடைய உன்னத
மான வளர்ப்பில் அதிசயமடைந்து ஒன்றும் பேசாமல்

உட்கார்ந்திருந்தார்கள். ஆனால் இதை வாசிப்பவர்கள் ஒவ்வொருவரும அவர்கள் எவ்வளவு ஏழையாயிருந்தாலும், மேன்மக்களுடைய சம்பாஷணைகளைக் கேட்க விரும்புவார்கள்; பிரபுக்கள், சீமாட்டிகள், அரசனின் சன்மானம் பெற்ற தளகர்த்தர்கள் இவர்களுடைய வாழ்க்கைச் சம்பவங்களைக் கேட்க பிரியப்படுவார்கள். ஆகையால், இப்பொழுது நடைபெற்ற சம்பாஷணையின் கடைசிப்பாகத்தை நடந்ததுபோல் சொல்ல,நான் உத்தரவு கேட்கிறேன். "அந்த சமாச்சாரத்தைப்பற்றி எனக்குத் தெரிந்ததெல்லாம் இவ்வளவுதான்" என்று மிஸ் ஸ்கெக்ஸ் கூவினாள். "அது உண்மையாயிருக்கலாம், இல்லாமலுமிருக்கலாம். ஆனால் சீமாட்டிகளே, உங்களிடத்தில், நான் ஊர்ஜிதமாய்ச் சொல்லுவேன். அங்கே கூடியிருந்தவர்களெல்லாம் ஸ்தம்பித்துப் போனார்கள். கனம் பிரபுவோ, பல ரகங்களில் தோன்றினார். கனம் சீமாட்டி மூர்ச்சையடைந்தாள். ஆனால் ஸர் டாம்கின், தம் கத்தியை உருவிக்கொண்டு தம்முடைய தேகத்தில் இரத்த முள்ளளவும் அவள் தம்முடையவள்தான் என்று ஆணையிட்டார்.

"நல்லது" என்று பியாஸ் பெருமாட்டி சொன்னாள். "இதை நான் சொல்லக்கூடும். டச்சஸ் பெருமாட்டி அந்த சங்கதியைப்பற்றி ஒரு வார்த்தைகூட என்னிடம் சொல்லவில்லை. மகிமை தங்கிய அவள் என்னிடமிருந்து எதையும் ரகசியமாக வைத்துக் கொள்ளுவதில்லை. இதை நீங்கள் நடப்பென்றே வைத்துக் கொள்ளலாம். மறுநாள் காலையில் கனம் ட்யூக் தம்முடைய அறைகாப்பாளனுக்கு "ஜர்னிகன், ஜர்னிகன், ஜர்னிகன், என்னுடைய கார்டர்களைக் கொண்டுவா" என்று மூன்று தடவை கூவினார். முன்னமே நான் மிஸ்டர் பர்க்கெல்லின் மரியாதைத் தவறான நடத்தையைப் பற்றி சொல்லியிருக்க வேண்டும்.

அவர் இந்த சம்பாஷணை நடக்கும்பொழுது கணப்புக்குப் பக்கமாக முகத்தை திருப்பிக்கொண்டு ஒவ்வொரு வாக்கியம் முடிந்ததும் (ப்வட்ஜ்) "பதர்", என்று கத்தினார். அந்தச் சொல் எங்கள் எல்லோருக்கும் சலிப்பை



உண்டாக்கியது. அதனால் சம்பாஷணையின் அதிகரிக்கும்
ஆர்வத்தை கொஞ்சம் அடக்கிற்று.
"இதைத்தவிர என் பிரியமுள்ள ஸ்கெக்ஸ்" என்று
நம்முடைய பியாஸ் பேச்சைத் தொடர்ந்தாள். "டாக்டர்
பர்டாக் அந்த சம்பவத்தைப் பற்றி தொடுத்த செய்யுளில்,
இதைப்பற்றி ஒன்றுமேயில்லையே!—பதர்!—"
"அதைக் கேட்கத்தான் ஆச்சரியப்படுகிறேன்.
ஏனெனில் அவர் தம்முடைய சொந்தக் களிப்பிற்காகவே
அவற்றை எழுதுவதால், அவர் ஒன்றையும் தள்ளிவிடுகிற
தில்லை. ஆனால் நம் பெருமாட்டி அதை எனக்கு காண்
பிக்க கருணை கொள்ளுவளா?—பதர்!—
"என் அன்புள்ள பிராணியே," என்று என் பெரு
மாட்டி பதில் சொன்னார். "அப்படிப்பட்ட விஷயங்களை
நான் என்னிடத்தில் தூக்கிக்கொண்டு வளைய வருகிறே
னென்று நினைக்கிறாயா? ஆனால் அவை மிகவும் அழ
கானவை. அதில் சந்தேகமில்லை. ஏனெனில், அவற்றின்
பரிசீலனைகளில் கொஞ்சம் தெரிந்தவளென்று நான்
நினைத்துக்கொண் டிருக்கிறேன். எது பிடிக்குமென்றுவது
எனக்குத் தெரிந்துகொள்ளும் சக்தியுண்டு. உண்மையில்
டாக்டர் பர்டாக்கின் துக்கடாச் செய்யுள்களை நான் எப்
பொழுதும் இலாக்கியமாக நினைக்கிறேன். ஏனெனில்
அவரும் ஹானோவர் ஸ்குயரில் இருக்கும் நம்முடைய பிரிய
முள்ள கௌண்டஸ் பெருமாட்டியும் எழுதுவதைத் தவிர
மற்றவை இவ்வுலகில் மிகவும் கீழ்த்தரமானவை. கொஞ்
சம்கூட பெரிய வாழ்க்கைகளைப் பற்றி இல்லை—பதர்—"
"நம் பெருமாட்டி தம்முடைய, லேடிஸ் மாகஸின்
பத்திரிகையில் தாங்களே எழுதும் சங்கதிகளை இந்த கண்ட
னத்தில் சேர்க்கக்கூடாது. அதில் ஏழைகளைப் பற்றி
ஒன்றுமில்லை என்று நீங்கள் ஒப்புக் கொள்வீர்களென்று
நம்புகிறேன். ஆனால் இனிமேல் அந்தவிடத்திலிருந்து
ஒன்றும் எதிர் பார்க்கிறதற்கில்லை என்று நான் உத்தேசித்
திருக்கிறேன்"—பதர்—
"ஏன், என் அன்பே" என்று பெருமாட்டி சொன்
னாள். "எனக்கு வாசிக்கும் தோழி, காப்டன் ரோச் என்
பவரை விவாகம் செய்துகொள்ள, என்னை விட்டுப் போம்

விட்டாள். என்னுடைய பங்கப்பட்ட கண்கள் என்னை ஒன்றும் எழுதவிடாது. கொஞ்ச நாளாய் வேறொரு ஒத்தாசைக்காகப் பார்த்துக்கொண்டிருக்கிறேன். சரியானவளைக் கண்டுபிடிப்பது சுலபமான காரியமல்ல. நன்றாக வளர்க்கப்பட்டு, நல்ல நடத்தையுடன், வாசித்தும், எழுதியும், கோஷ்டியில் சரிவர நடந்து கொள்ளும் பெண்ணுக்கு முப்பது பவுன் ஒரு வருஷத்திற்கு நிச்சயமாய் ஒரு சொல்ப சம்பளம் அல்லவா? பட்டணங்களில் கொடுக்கப்படும் நன்னடத்தைப் பத்திரங்களோ—ஒன்றைப் பற்றிக்கூட விச்வாஸிக்கத் தக்கவையல்ல—பதர்—"

"அதை நான் அனுபவத்தில் அறிவேன்" என்று மிஸ் ஸ்கெக்ஸ் கூறினாள். "ஏனெனில் மூன்று தோழிப் பெண்கள்தான் இந்த ஆறு மாதத்தில் நான் நியமித்ததில், ஒருத்தி, ஒரு நாளில் ஒருமணி நேரம்கூட சரியான அலுவல் செய்ய மறுத்துவிட்டாள். மற்றொருத்தி, வருஷத்திற்கு இருபத்தி ஐந்து கினி மிகவும் கொஞ்சமான ஊதியமென்று கருதினாள். மூன்றாமவளை நானே தள்ளி விடும்படி ஆய்விட்டது. ஏனெனில் அவள் சாப்லனோடு ரகசிய நடவடிக்கைகள் வைத்திருந்ததாக எனக்குச் சந்தேகம் தோன்றிற்று. நன்னடத்தைக்கு, என் பிரியமுள்ள பெருமாட்டி ப்ளார்னியே, நன்னடத்தைக்கு, எவ்வளவு ஊதியம்தான் கொடுக்கக்கூடாது! ஆனால் அது எங்கே கிடைக்கப் போகிறது?—பதர்—"

என் மனைவி, வெகு நேரம், இந்த சம்பாஷணையை வெகு கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தாள். ஆனால் கடைசியில் சொல்லப்பட்டவற்றால் விசேஷமாய்க் கவரப்பட்டாள். முப்பது பவுனும் இருபத்தி ஐந்து கினியும் ஒரு வருஷத்திற்கு என்றால், இங்கிலாந்து பணத்தில் ஐம்பத்தி ஆறு பவுனும் ஐந்து ஷில்லிங்கும் ஆகின்றன. இவை முழுவதும் யாருக்கு வேண்டுமென்று கூவுகிறார்கள். நம்முடைய குடும்பத்திலேயே அவற்றை இருத்திக் கொள்ளலாமே. அவள் ஒரு சமயம் என்னுடைய அங்கீகாரத்திற்காக என் முகக் குறியை கவனித்தாள். உண்மையில் அப்படிப்பட்ட இரண்டு பதவிகள் எங்களுடைய இரண்டு பெண்களுக்கும் அச்சுப்



போல் பொருந்தியிருக்குமென்று என்னுடைய அபிப்பிராயம். மேலும் இந்த ஸ்குயர் என் மூத்த பெண்ணிடத்தில் அந்தரங்கக் காதலுடையவராயிருந்தால் அவளை அப்படிப்பட்ட பதவிக்கு ஒவ்வொருவிதத்திலும் தகுதியுள்ளவளாகச் செய்வதற்கு அதே வழி. என் மனைவி சிபார்சு செய்வதற்கு மனிதர்களில்லையே யென்றதனாலேயே அப்படிப்பட்ட சௌகரியங்களை இழக்கக்கூடாதென்று தீர்மானம் கொண்டாள். ஆகையால் எங்கள் குடும்பத்தின் பெருமையைப்பற்றிப் பேசலானாள்.

"கனம் பெருமாட்டி, இப்பொழுது நான் முன்வந்து பேசுவதை மன்னிப்பீர்களென்று நம்புகிறேன். நாங்கள் அப்படிப்பட்ட நன்மைகளை எதிர்பார்க்க முகாந்திரமில்லை. இருந்தபோதிலும், என் குழந்தைகளை உலகத்தில் முன்னுக்குக் கொண்டுவர இச்சிப்பது சகஜமே. நான் தைரியமாகச் சொல்லுவேன். என்னுடைய இரண்டு பெண்களும் ஏறக்குறைய நல்ல படிப்புள்ளவர்கள். சாமர்த்தியசாலிகள். எது எப்படியிருந்த போதிலும், நாட்டுப்புறத்தில் இவர்களைவிட மேலாக ஒருவரையும் காண்பிக்க முடியாது. அவர்கள் வாசிப்பார்கள், எழுதுவார்கள். கணக்குப் போடுவார்கள். அவர்கள் ஊசியின் விஷயங்களை அறிந்துள்ளவர்கள். பெரும் தையல், குறுக்கு, மடிப்புத் தையல் எல்லா விதமான சாதாரண வேலைகளும் தெரியும். அவர்கள் துணிபோடுவார்கள். சுரிகை வைத்துத் தைப்பார்கள். ஓரத்தில் சுருக்கம் வைத்துத் தைப்பார்கள். சங்கீதமும் கொஞ்சம் தெரியும். சிறு பிராயமுள்ள பெண்களைத் தயார் செய்ய வல்லவர்கள். காட்கட் என்னும் காப்பு நூலில் வேலை செய்யத் தெரியும். என்னுடைய மூத்த பெண் காகிதம் வெட்டுவாள். என்னுடைய கடைசிப்பெண் சீட்டுக் கட்டுகளிலிருந்து யோகபலன்கள் சொல்லுவதில் மிகவும் அழகானவழியைக் கற்றிருக்கிறாள்—பதர்—"

ஏறக்குறையாகவுள்ள இந்தப் பிரசாரத்திற்குப் பிறகு, இரண்டு சீமாட்டிகளும் சந்தேகம் கொண்டவர்கள் போலும், பெரிய விஷயமென்று காண்பிப்பவர்கள் போலும், சில நிமிஷங்கள் வாய்திறவாமல் ஒருவரையொரு

-வர் பார்த்துக் கொண்டார்கள். கடைசியில் மிஸ் கரோலினா வில்ஹெல்மினா அமிலியா ஸ்கெக்ஸ், என்னுடைய மிகச் சொல்பமான பழக்கத்திலிருந்து இந்தச் சிறு சீமாட்டிகளைப் பற்றி நான் கொண்ட அபிப்பிராயம், அவர்கள் அப்பேர்க்கொத்த வேலைகளுக்கு மிகவும் தகுதியானவர்களாகத் தோன்றுகிறது'' என்று சொல்ல மனம் உவந்தாள்.

என் மனைவியைப் பார்த்து, "ஆனால் இம்மாதிரியான விஷயங்களில் நடத்தைகளை ஊன்றுக் கவனிக்க வேண்டியது அவசியம். இதைவிட ஒருவருக்கொருவர் அதிகமாக அறிந்திருக்க வேண்டும்.'' என்றாள். மேலும் சொன்னாள்: "இல்லை, அம்மா நான் கொஞ்சம்கூட சிறு சீமாட்டிகளுடைய நடத்தையைப் பற்றியோ, கவனத்தைப் பறறியோ, யுக்தி புத்தியைப் பற்றியோ, சந்தேகப்படவில்லை. ஆனால் இந்த விஷயங்களிலெல்லாம் ஒருவித கோட்பாடு உண்டு. அம்மா, ஒரு கோட்பாடு உண்டு—பதர்—"

என் மனைவி அவளுடைய சந்தேகங்களை மிகவும் ஒப்புக்கொண்டு, தானுமே அவ்வித சந்தேகம் கொள்வது மிகவும் சகஜமென்றாள். அவளைத் தன்னுடைய எல்லா பக்கத்து வீட்டுக்காரர்களிடமும் நன்னடத்தையைப் பற்றி விசாரித்துக் கொள்ளலாமென்றாள். ஆனால் நம்முடைய பியரஸ் அவசியமில்லையென்று அதைத் தள்ளி விட்டாள். தன்னுடைய சொந்தக்காரரான தார்ன்ஹில்லின் சிபார்சு போதுமென்று சொன்னாள். அதன் பிற்பாடு, நாங்கள் எங்கள் வேண்டுகோளை நிறுத்திக் கொண்டோம்.

## அத்தியாயம் 12

*பாக்கியமானது வேக் பீல்டு குடும்பத்தை இன்னும் சிறுமைப்படுத்த உத்தேசித்திருப்பது போல் தோன்றியது. அனுபவிக்கும் கஷ்டங்களைக் காட்டிலும் அவமானம் மிகவும் கஷ்டமானது.*

நாங்கள் வீட்டிற்குத் திரும்பினதும், இனி மேல் வெற்றிபெற வேண்டிய யோசனைகளில் இரவு கழிக்கப்பட்டது. என் இரண்டு பெண்களில் யாருக்கு மிகச் சிறந்த வாசமும் நல்ல சமூகங்களைப் பார்ப்பதற்கு விசேஷ சந்தர்ப்பங்களும் கிடைக்கலாமென்று அநுமானிப்பதில் டிபோரா கூர்மையான புத்தியைச் செலுத்தினாள். எங்களை நியமிப்பதற்குள்ள ஒரே இடையூறு எப்படி ஸ்குயர் தார்ன்ஹில்லின் சிபார்சைப் பெறுவதென்பதுதான். ஆனால் அவர் இது வரையில் எங்களிடம் தம்முடைய சிநேகத்திற்கு அநேக அறிகுறிகள் காண்பித்திருக்கிறார். இப்பொழுது அதைப்பற்றி சந்தேகிக்க இடமில்லை. படுத்துக்கொண்ட பிறகு கூட என் மனைவி அதே விஷயத்தைப் பேசிக்கொண்டிருந்தாள். "நல்லது, உண்மையில், என் பிரியமுள்ள சார்லஸ், நமக்குள்ளே யிருக்கட்டும். இன்றைப் பொழுதை நன்மை பயக்கும் நாளாகச் செய்து விட்டோம்''. நான் இன்னது சொல்வதென்று தெரியாமல் "பரவாயில்லை,'' என்றேன். "ஏன், பரவாயில்லை? நான் மிகவும் நல்லது என்று நினைக்கிறேன்'' என்றாள். "நம்முடைய பெண்கள் நாகரிகத்தில் பழக்கம் ஏற்பட்டதாய் நினைப்போம். லண்டனில் தான் இந்த உலகத்திற்குள் எப்படிப்பட்ட கணவன் வேண்டுமென்றாலும் கிடைக்கக் கூடிய இடம் என்று எனக்கு உறுதிமொழி கிடைத்திருக்கிறது. மேலும், என் பிரியரே, ஒவ்வொரு நாளும் மிகவும் எதிர்பாராத விஷயங்கள் சம்பவிக்கின்றன. உயர்தர சீமாட்டிகளே என் பெண்களிடத்தில் அவ்வளவு மதிப்பு வைக்கும்பொழுது, உயர்தர சீமான்கள் எப்படி யிருக்க

மாட்டார்கள். நான் லேடி ப்ளார்னியிடம் மிகவும் இஷ்டம் கொண்டிருக்கிறேன். எவ்வளவு பூர்ண ஆதரவு எப்படியிருந்த போதிலும், மிஸ் கரோலினா வில்ஹெல்மினா ஸ்கெக்ஸை என்னுடைய குளிர்ந்த மனதில் நினைக்கிறேன். அவர்கள் பட்டணத்தில் உள்ள வேலைகளைப் பற்றிப் பேச ஆரம்பித்ததும், நான் உடனே அவர்களை எப்படி மாட்டிவிட்டேனென்று நீர்தான் பார்த்தீரே, என் அன்பே! நீர்தான் சொல்லும். என் குழந்தைகளுக்காகத்தான் அவ்வளவு செய்தேனென்று நீர் நினைக்கவில்லையா?'' என்றாள் மனைவி. ''ஆ, இதே நாளில், மூன்றாவது மாதத்தில், அவர்கள் அதனால் முன்னேறியிருக்க தெய்வம் அருள் செய்யட்டும்'' என்று இந்தச் சங்கதியைப்பற்றி என்ன அபிப்பிராயம் கொள்வதென்று தெரியாமல் சொன்னேன். என் மனைவி என்னுடைய முன் யோசனையைப் பற்றி அறியும் பொருட்டு நான் வழக்கமாகக் கூறும் மொழிகளில் இது ஒன்று. ஏனெனில் என் பெண்கள் முன்னேறிவிட்டால், அப்பொழுது என்னுடைய பிரார்த்தனை நிறைவேறினதாகும். ஆனால், ஏதாவது விபரீதம் நடந்தாலோ, அது வருங்காலத்தை முன் தெரிவித்த அறிகுறியாகும். இந்த சம்பாஷணைகளெல்லாம் வேறொரு யோசனைக்குப் பூர்வ பீடிகையாகவே இருந்தது. நான் அவ்வளவு தூரம் வருமென்று அஞ்சினேன்.

அதென்னவென்றால், நாங்கள் எங்கள் அந்தஸ்தைக் கொஞ்சம் மேலாக காண்பிக்க வேண்டிய காரணத்தால், குதிரைக் குட்டியும் வயதாகிவிட்டதால், பக்கத்து ஊர் சந்தையில் அதை விற்று, ஒருவர், அல்லது சமயங்களில், இருவரை ஏற்றிக் கொள்ளக்கூடிய ஒரு குதிரையை வாங்குவது தகுதி. இதனால் கோவிலுக்கோ அல்லது மற்றொருவரைப் பார்ப்பதற்கோ போவதென்றாலும், சுமாரான அந்தஸ்துள்ளவர்கள் போல் போகலாம். நான் முதலில் இதை வெகுவாய் எதிர்த்தேன். ஆனால், அது பலத்தோடு ஸ்தாபிக்கப்பட்டது. எப்படியிருந்த போதிலும், என்னுடைய பேச்சு தளரவே, என்னை எதிர்ப்பவர்கள் பலமடைந்தார்கள். கடைசியில் அதைக் கொடுத்துவிடுவதென்று தீர்மானிக்கப்பட்டது.



சந்தை மறுநாள் கூடுவதால், நானே போகலாமென்று எண்ணினேன். ஆனால் என் மனைவி எனக்கு ஜலதோஷமென்ற காரணங்களைக்காட்டி, என்னை வீட்டிலிருந்து வெளியே அனுப்ப எவ்விதத்திலும் ஒப்புக்கொள்ளவில்லை. ''இல்லை, என் பிரியரே, நம்முடைய மகன் மோஸஸ் ஜாக்கிரதையுள்ள பையன். மிகவும் லாபகரமான வழியில் வாங்கவும் விற்கவும் செய்வான். உமக்குத் தெரியாதா? நமக்கு லாபகரமான வியாபாரங்களெல்லாம் அவனால் செய்யப்பட்டவையல்லவா? அவன் எப்பொழுதும் ஓங்கிப் பேசுவான். பேரம் பேசுவான். லாபம் கிடைக்கும்வரையில் எதிராளியைக் களைப்புறச் செய்கிறான்'' என்று சொன்னாள். நானும் என் மகனுடைய ஜாக்கிரதையில் கொஞ்சம் நம்பிக்கையுள்ளவனாதலால், இந்தப் பொறுப்பை அவனிடத்தில் ஒப்புவிக்கச் சம்மதித்தேன். மறுநாட் காலை, அவனுடைய தமக்கைகள் மோஸஸ்ஸை சந்தைக்கு அனுப்ப ஏற்பாடுகள் செய்வதில் மிகச் சுறுசுறுப்பாயிருப்பதை நான் கவனித்தேன். தலை வாருவதும் சட்டைப் பொத்தான்களைத் துடைப்பதும், தலைத் தொப்பியை ஊசிகுத்தி மடக்குவதுமாக இருந்தார்கள். அலங்கரிப்பு முடிந்த பிறகு, நாங்கள் கடைசியில் அவனைக் குதிரையில் ஏறினவனாகக் கண்டு களித்தோம். அவன் ஒரு ஜாதிக்காய்ப் பெட்டியை வீட்டுச் சாமான்கள் வாங்கிக்கொண்டு வருவதற்காகத் தனக்கு முன்னால் வைத்துக்கொண்டிருந்தான். அவன் இடி, மின்னல் என்று பெயரிடப்பட்ட துணியில் தைக்கப்பட்ட ஒரு கோட்டைப் போட்டுக்கொண்டிருந்தான். அவனுக்கு அது கொஞ்சம் குட்டையாயிருந்தாலும், அது ஒருவாறு பொருந்தியிருந்ததால் அது தள்ளிவிடக் கூடியதாக இல்லை. அவனுடைய உள் சட்டை கோழிக்குஞ்சு பச்சை வர்ணமுள்ளது. அவனுடைய தமக்கைகள் அகன்ற கறுப்பு ரிபாண்ட் ஒன்றால் தலை மயிரைக் கட்டியிருந்தார்கள்.

நாங்கள் எல்லோரும் வாசல் படியிலிருந்து அநேக அடிகள் பின் தொடர்ந்தோம். போய்க்கொண்டிருந்தவனைப் பார்க்க முடிந்தவரையில் பார்த்துக்கொண்டு

கின்று "நல்ல பாக்கியம், நல்ல பாக்கியம்" என்று அவன் பின்னால் கூவினோம்.

அவன் போன உடனேயே, மிஸ்டர் தார்ன்ஹில்லின் பட்லர் வந்து, எங்களுடைய நல்ல பாக்கியத்தைப் புகழ்ந்து கொண்டு, அவனுடைய வாலிப எஜமான் எங்களுடைய பெயரை மிகவும் ஆதரவோடு சொல்லுவதைத் தான் பின்புறம் இருந்து கேட்டதாகச் சொன்னான். நல்ல பாக்கியம் துணையில்லாமல் வரக்கூடாதென்று தீர்மானித்தது போலும். அதே குடும்பத்திலிருந்து இன்னொரு காலாள் உடனே வந்து அந்த இரண்டு சீமாட்டிகளும் மிஸ்டர் தார்ன்ஹில்லிடமிருந்து எங்களைப்பற்றி திருப்திகரமான விருத்தாந்தம் கிடைத்திருப்பதாயும், இன்னும் சில விசாரணைகள் செய்தபிறகு, அவர்கள் பூர்த்தியான திருப்தியடைய எதிர்பார்ப்பதாகவும், ஒரு கடிதம் என் பெண்களுக்குக் கொண்டு வந்தான். "என்ன ஆச்சரியம்! எனக்கு இப்பொழுதுதான் புலப்படுகிறது. பெரிய மனுஷ்யாளுடைய குடும்பங்களில் நுழைந்து கொள்ளுவது சுலபமான காரியமல்ல. ஆனால் ஒருதரம் உள்ளே புகுந்துவிட்டால், மோஸஸ் சொல்லுவது போல், அதன் பிறகு தூங்கிப் போய்விடலாம்." இந்தப் பரிகாசப் பேச்சை, அவன் தான் புத்திசாலித் தனமாய் சொன்னோம் என்கிற தாத்பரியத்தை, என் பெண்களும் ஆமோதிப்பது போல், சந்தோஷத்துடன் குலுங்கச் சிரித்தார்கள். கொண்டு வரப்பட்ட கடிதத்தில், அவளுடைய சந்தோஷம் சொல்ல முடியாது. அவள் உடனே தன் கையை சட்டைப் பைக்குள் போட்டு வந்த ஆளுக்கு, ஏழு பென்னியும் ஒரு அரைப் பென்னியும் இனாம் கொடுத்தாள். அன்றைக்கு நாங்கள் சிநேகிதர்களைச் சந்திக்கும் நாள். இதன் பின் வந்தவர் மிஸ்டர் பர்க்கெல். அவர் சந்தையிலிருந்து வந்தார். என் சிறு குழந்தைகள் ஒவ்வொருவருக்கும் ஒரு பென்னி விலையுள்ள இஞ்சி ரொட்டி வாங்கிக்கொண்டு வந்தார். என் மனைவி அவற்றை ஏற்றுக்கொண்டு குழந்தைகளுக்கு வைத்திருந்து ஒவ்வொரு சமயத்தில் ஒரு அக்ஷரம் வீதம் கொடுப்பதாக ஒப்புக்கொண்டாள்.

என் பெண்களுக்கும் இரண்டு பெட்டி வாங்கிக் கொண்டு வந்தார். அதில் அவர்கள் மெழுகு, பொடி,



வெட்டுத் துண்டுகள், கிடைக்கும் பொழுது, பணமும் வைத்துக் கொள்ளலாம். என் மனைவி எப்பொழுதும் வீசல் தோல் பர்ஸில் இச்சையுள்ளவள். ஏனெனில் அது மிகவும் பாக்கியமுள்ளதாகக் கருதப்படுகிறது. இது ஒரு பக்கம். நாங்கள் பர்க்கெலிடம், அவருடைய கடைசியாக நேர்ந்த மரியாதைத் தப்பான நடவடிக்கைகள் கொஞ்சம் திருப்தியில்லாமலிருந்தும், அவரிடத்தில் பிரியம் வைத்திருந்தோம். எங்களுடைய சந்தோஷத்தை அவரிடம் இப்பொழுது சொல்லாமலிருக்க முடியவில்லை. அவருடைய அபிப்பிராயத்தைக் கேட்டோம். நாங்கள் பிறர் சொல்லும் நற்போதனையை ஒரு பொழுதும் கேட்டு அதன்படி நடக்காவிட்டாலும், அதைக் கேட்டறியத் தயாராயிருந்தோம். அவர் அந்த இரண்டு சீமாட்டிகளிடமிருந்து வந்த கடிதத்தை வாசித்ததும் தம் தலையை அசைத்தார். பிறகு, இப்படிப்பட்ட விஷயம் அதிகக் கவலையோடு பரிசீலனை செய்யப்பட வேண்டுமென்றார். இந்தச் சந்தேகமுள்ள எண்ணம் என் மனைவிக்கு மிகவும் பிரியமில்லாமலிருந்தது. "நீர் என் பெண்கள் விஷயத்தில் விரோதமாயிருப்பீரென்பதில் எனக்கு சந்தேகமில்லை. உமக்கு வேண்டியதற்கதிகமாகவே ஜாக்கிரதையிருக்கிறது. எப்படியிருந்தபோதிலும், எங்களுக்கு யோசனை கேட்க வேண்டிவரும்பொழுது தங்களுடைய விஷயத்தில் அதைப் பிரயோஜனப்படுத்திக்கொண்டவரிடம் கேட்கலாமென்று உத்தேசம்" என்றான்." "அம்மணி, என் நடவடிக்கைகளெப்படியிருந்தாலும், இப்பொழுது கவனிக்கவேண்டியது அது அல்ல. ஏனெனில புத்திமதியை என் விஷயத்தில் பிரயோஜனப்படுத்திக் கொள்ளாவிட்டாலும், யார் அதை உபயோகித்துக் கொள்ளுவார்களோ அவர்களுக்குக் கொடுக்க கடமைப்பட்டிருக்கிறேன்" என்று அவர் பதிலுரைத்தார். இந்தப் பதிலுக்குச் சூடான பதில் கொடுக்கலாமென்றும், சரியான முகாந்திரங்கள் கிடைக்காவிட்டால், நிந்தனையாகப் பேச ஹேதுவாகுமென்றும் பயந்து நான் பேச்சை மாற்றினேன். "நம் மகன் சந்தையில் ஏன் இவ்வளவு நேரம் தாமதித்திருக்கிறான்? இப்பொழுது இரவு ஆரம்பிக்கும் நேரம்" என்று ஆச்சரியப்படுவது போல் பேசினேன். "நம்முடைய பையனைப்பற்றி ஏன் கவலை?

இதை நிச்சயமாய் வைத்துக்கொள்ளும். அவனுக்குத் தான் என்ன பண்ணிக்கொண்டிருக்கிறோமென்று கவனமுண்டு. அவனுக்கு பானைக்கும் பானைக்கும் வித்தியாசம் தெரியும் என்று நான் நிச்சயமாகச் சொல்லுவேன். அவன் வாங்கியிருக்கும் சாமான்களைப் பார்த்தால், யாரையும் பிரமிக்கச் செய்யும். நான் அதைப்பற்றி, நல்ல கதை சொல்லுகிறேன் கேளும். அதைக் கேட்டால் உமக்கு சிரித்து வயிறு வெடித்துப் போகும். ஆனால் நான் உயிரோடுதான் இருக்கிறேனா? மோஸஸ் அதோ வருகிறானே, குதிரையைக் காணோம். பெட்டியை முதுகில் தூக்கிக்கொண்டு வருகிறான்" என்றாள் என் மனைவி. அவள் பேசிக்கொண்டிருக்கும் பொழுதே, மோஸஸ் மெல்ல மெல்ல நடந்துகொண்டு ஜாதிக்காய் பெட்டியைத் தூக்க முடியாமல் வேர்த்து விறு விறுத்தவண்ணம் வந்தான். ஒரு நாடோடி வர்த்தகன் போல் தோல் வாரினால் தோளோடு பெட்டியைக் கட்டிக்கொண்டிருந்தான். "வா, வா, மோஸஸ், நல்லது குழந்தாய், எங்களுக்குச் சந்தையிலிருந்து என்ன கொண்டு வந்திருக்கிறாய்?" "நான்தான் சந்தையிலிருந்து வந்திருக்கிறேனே." என்று மோஸஸ் ஒரு கள்ளப் பார்வையோடு பெட்டியை உடுப்பு மேஜைமேல் வைத்துவிட்டுச் சொன்னான்.

"ஏய் மோஸஸ், அதுதான் தெரிகிறது. ஆனால் குதிரை எங்கே?" என்று என் மனைவி கேட்டாள். "அதை நான் மூன்று பவுன் ஐந்து ஷில்லிங்கு இரண்டு பென்சுக்கு விற்றுவிட்டேன்" என்றான் மோஸஸ். "அப்படிச் சொல்லு, நல்ல பிள்ளை நீ, அவற்றைத் தட்டிவிட்டுவருவாயென்று எனக்குத் தெரியும். நமக்குள்ளே இருக்கட்டும். மூன்று பவுன் ஐந்து ஷில்லிங்கு இரண்டு பென்ஸ் அவ்வளவு மோசமானது என்று சொல்லமாட்டேன். சரி அதைக் கொடு பார்ப்போம்" என்றாள் என் மனைவி. "நான் பணம் ஒன்றும் கொண்டு வரவில்லை. அவை யெல்லாவற்றையும் நயமான ஒரு விஷயத்தில் போட்டிருக்கிறேன். இதோ பாருங்கள்" என்று ஒரு முடிச்சை தன் மேலிருந்து கழற்றி எடுத்தான். "இங்கே அவை இருக்கின்றன. இருபது பச்சை மூக்குக் கண்ணாடி-



கள். வெள்ளி உச்சம் பச்சைக் கூடுகள்" என்றான். "இருபது மூக்குக் கண்ணாடிகளா?" என்று தீனஸ்வரத்தில் என் மனைவி திருப்பிச் சொன்னாள். "குதிரைக் குட்டியை கொடுத்துவிட்டு இருபது உதவாத பச்சை மூக்குக் கண்ணாடிகளை மட்டுமா கொண்டு வந்திருக்கிறாய்?" என்றாள். "என் அன்பான தாயே, என் வக்கணையைக் கேட்கமாட்டேனென்கிறாய்! கொள்ளை மலிவாக அவற்றை நான் வாங்கினேன். இல்லாவிட்டால் நான் வாங்கியிருப்பேனா? வெள்ளிக்கம்பிகள் மட்டுமே ஒட்டிக்கு இரட்டியாய் விற்குமே!" என்று என் பையன் சொன்னான். "வெள்ளிக் கம்பிகளை குப்பையில் எறி" என்று என் மனைவி கோபாவேசத்தில் கத்தினாள். "உருக்கு வெள்ளி ஒரு அவுன்ஸ் ஐந்து ஷில்லிங்கு. இவை பாதி விலைக்கு மேல் விற்காது என்று நான் சத்தியமாய் சொல்லுவேன்" என்றாள்.

"கம்பிகளை விற்பதைப் பற்றி நீ கவலைப்படாதே. இதோ தெரிகிறதே, இவை தாம்பரம். வெள்ளி மூலாம் பூசினது. ஆறு பென்ஸ் கூடப் பெறாது" என்று நான் சொன்னேன். "என்ன! வெள்ளியில்லையா? கம்பி, வெள்ளியில்லையா?" என்றாள் என் மனைவி. "இல்லை. உன் குழம்புச் சட்டி எவ்வளவு வெள்ளியோ, அவ்வளவு வெள்ளிதான் இது" என்று நான் சொன்னேன். "என்னவென்றால் நம்முடைய குதிரைக் குட்டியை இப்பொழுது இழந்தோம். பதிலாக இருபது பச்சை மூக்குக் கண்ணாடிகள் கிடைத்திருக்கின்றன. தாமிரக் கம்பி பச்சைத் தோல்கூடு இந்த ஓட்டை உடைசலைக் குப்பையில் போடு. களிமண் மண்டையை ஏமாற்றிவிட்டார்கள். எதிராளி யாரென சரிவரத் தெரிந்து கொண்டிருக்க வேண்டாமா?" என்றாள் என் மனைவி. "இந்தா, என் அன்பே, அந்த விஷயத்தில் நீ சொல்வது தப்பு. அவன் சரிவரத் தெரிந்துகொள்ள, அவர்களை இன்னாரென்று தெரிந்தால் தானே?" என்றேன் நான். "தெய்வமே இந்த முட்டாளை என்ன செய்தால் தேவலை? எனக்காகவா இப்பேர்கொத்த லொடலொட்டையைக் கொண்டு வருவது? என் கையில் கொடுத்தால் நான்

அவற்றை அடுப்பிலே போடுவேன்" என்றாள் அவள். "இப்பவும் நீ சொல்வது தவறு. என் அன்பே, அவை தாமிரமாயிருந்தாலென்ன? நாம் அவற்றை வைத்துக் கொள்ளுவோம். ஒன்றுமில்லாதிருப்பதற்கு தாமிர மூக்குக் கண்ணாடிகள் தேவலை" என்றேன்.

இதற்குள் பரிதாப நிலையிலுள்ள மோஸஸ் தான் ஏமாற்றப்பட்டதை அறிந்தான். அவன் அப்பொழுது தான் தன்னுடைய நடை உடையிலிருந்து சுலபமாய் ஏமாற்றி விடப்படலாமென்று கவனித்து ஒரு கண்குத்திப் பாம்பு போல் தேடும் ஒரு மோசக்காரனால் சரியாக ஏமாற்றப்பட்டோமென்று தெரிந்து கொண்டான். பிறகு எவ்விதமாய் ஏமாற்றினானென்று நான் கேட்டேன். அவன் "குதிரையை விற்று விட்டு, இன்னொரு குதிரை வாங்கத் தேடிக் கொண்டிருந்தேன். ஒரு தெய்வ பக்தியுள்ள மனிதனைப் போல் ஒருவன், விற்பதற்கு ஒரு குதிரைவைத்திருப்பதாகச் சொல்லி, என்னை அவன் கூடாரத்திற்குக் கூட்டிச் சென்றான். இங்கே மிக உயர்ந்த உடை உடுத்து மற்றொருவனிருந்தான். அவன் இவற்றின் பேரில் இருபது பவுன் கடன் கேட்டு தனக்கு பணம் வேண்டும்; அதன் விலையின் மூன்றில் ஒன்றுக்கு விற்று விடுவதாகச் சொன்னான். முதல் மனிதன் எனக்கு கண்பனாகை பாசாங்கு பண்ணி, என்னை அதை வாங்கும்படி காதோடு சொன்னான். அப்பேர்கொத்த நல்ல வியாபாரத்தை விடாதே என்று எச்சரிக்கை செய்தான். நான் மிஸ்டர் பிலாம்பரோவைக் கூப்பிட்டேன். அவரிடமும் என்னிடம் பேசியது போல் நேர்த்தியாய்ப் பேசினார்கள். ஆகையால் கடைசியில் இரண்டு க்ரோஸ் எங்களிருவரையும் ஆளுக்குப் பாதியாய் வாங்கிக் கொள்ளும்படி தூண்டப்பட்டோம்."

# அத்தியாயம் 13

*மிஸ்டர் பர்க்செல் ஒரு சத்துருவாகக் கண்டு கொள்ளப்பட்டார். ஏனெனில் மனதிற்கு ஒவ்வாத புத்திமதி கொடுக்கத் தைரியம் கொண்டார்.*

என் குடும்பம் இப்பொழுது நாகரிகமாக இருக்க பல முயற்சிகள் செய்தாய்விட்டது. ஆனால் எதிர் பார்க்காத சில விபரீத சம்பவங்கள், ஒவ்வொன்றையும் அவ்வப்பொழுதே தட்டிவிட்டன. ஒவ்வொரு ஏமாற்றத்திலும், எவ்வளவுக்கெவ்வளவு ஒவ்வொன்றும் அவர்களுடைய ஆதுரத்தை வீண் செய்ததோ, அவ்வளவுக்கவ்வளவு அவர்களுடைய நல்லறிவைப் பயன்படுத்த அவ்வவ் வேமாற்றங்களை உபயோகிக்க முயன்றேன்.

"கவனித்துப் பாருங்கள். என் குழந்தைகளே, நம்மைக் காட்டிலும் முன்னணியிலிருக்கிறவர்களுடனே சமானமாக இருக்கிறதாக உலகத்தை ஏமாற்றுவதில், என்ன லாபம் அடைந்தோம்? ஏழைகள் தனவந்தர்களுடன் மட்டும் சேர்க்கை வைத்துக்கொண்டால், அவர்களால் திரஸ்காரம் பண்ணப்பட்ட ஏழைகள், இவர்களை வெறுக்கிறார்கள். ஒட்டிக்கொள்ளும் தனவந்தர்களோ, இவர்களை இகழ்கிறார்கள். சமமில்லாத கூட்டுறவு எப்பொழுதும் அவர்களில் கீழ்ப்பட்டவருக்கு தீங்கை விளைவிக்கும். அச் சேர்க்கையால் சம்பவிக்கும் சுகங்களை தனவந்தர்களும், துக்கங்களை கீழ்ப்பட்டவர்களும் அனுபவிக்கிறார்கள். வா இங்கே, டிக், என் குழந்தாய். எல்லோருடைய நன்மைக்காக இன்று நீ வாசித்துக்கொண்டிருந்த கதையைத் திருப்பிச் சொல்லு." என் குழந்தை கதையைச் சொன்னான்.

"முன்னொரு காலத்தில், ஒரு உயரமான பலிஷ்டனும் ஒரு சித்திரக்குள்ளனும், சிநேகிதர்களாக இருந்து, எப்பொழுதும் ஒன்று சேர்ந்து வசித்தார்கள். அவர்கள் ஒரு

வரையொருவர் எப்பொழுதும் விட்டுக் கொடுப்பதில்லையென்று ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டு, தங்களுடைய சாமர்த்தியங்களைக் காட்ட ஆஸ்பதம் தேடிக்கொண்டு சென்றார்கள். இரண்டு துருக்கியரோடு அவர்கள் முதல் முதல் சண்டை போட்டார்கள். குள்ளன் மிகவும் தைரியமாய் எதிரிகளில் ஒருவன்மேல் மிகவும் பலமாக அடித்தான். அது அந்த துருக்கியனை ஒன்றும் செய்யவில்லை. ஆனால் அந்த துருக்கியன் தன் கத்தியை உயரத் தூக்கி, ஏழைக் குள்ளனின் கையை துண்டித்து விழுந்துவிடுமோ என்று கருதும் அளவுக்கு வெட்டினான். குள்ளன் அச் சமயத்தில் அபாயமான ஸ்திதியில் இருந்தான். ஆனால் பலிஷ்டன் அவனுடைய உதவிக்கு வந்து, கொஞ்ச நேரத்தில் இரண்டு துருக்கியர்களையும் பூமியில் சவமாக்கி வீழ்த்தினான்.

“குள்ளன் கோபத்தால், இறந்து போனவனுடைய தலையைத் துண்டித்தான். பிறகு, அவர்கள் மற்றொரு சம்பவத்தைத் தேடிச் சென்றார்கள். கதறிக் கொண்டிருக்கும் ஒரு பெண்ணை, ரத்தக்களை கொண்ட மூன்று குட்டிச் சாத்தான்கள் தூக்கிக் கொண்டு போவதைப் பார்த்தார்கள். முன்போல் குள்ளன் அவ்வளவு கடூரமாயில்லை. இருந்தாலும் முதல் அடி அவன்தான் அடித்தான். ஆனால் பதில் கொடுக்கப்பட்ட அடியினால் குள்ளனுடைய கண் தெறித்து விழுந்தது. பலிஷ்டன் அவர்களை உடனே எதிர்க்க அவர்கள் ஓடிவிட்டார்கள். ஓடாவிட்டால் ஒவ்வொருவனையும் சந்தேகமில்லாமல் கொன்றிருப்பான். இந்த வெற்றிக்கு அவர்கள் இருவரும் மிகவும் சந்தோஷித்தார்கள். அந்தப் பெண் அவர்களிடமிருந்து விடுவிக்கப்பட்டு பலிஷ்டனிடத்தில் காதல் கொண்டு, அவனை மணம் செய்து கொண்டாள். அவர்கள் வெகுதூரம் பிரயாணம் செய்தார்கள். எவ்வளவு தூரம் என்று சொல்ல இயலாது. கடைசியில் அவர்கள், திருடர்களின் கூட்டம் ஒன்றைக் கண்டார்கள். பலிஷ்டன் முதல் முதலாக இப்பொழுது முந்திக் கொண்டான். குள்ளனோ மிகவும் பின்வாங்கவில்லை. சண்டை கடூரமாய் நீடித்து நடந்தது. பலிஷ்டனால் எதிர்க்கப்பட்ட எல்லோரும் கீழே வீழ்த்தப்பட்டார்கள்.



ஆனால் குள்ளனோ, ஒரு தடவைக்கு மேல் கொல்லப்படும்படியான தருணத்திலிருந்தான். கடைசியில் ஜயமோ, இந்த இரண்டு சிநேகிதர்களுக்குத்தான் கிடைத்தது. ஆனால் குள்ளன் தன் காலையிழந்தான். இது வரையில் குள்ளன் ஒரு கை, ஒரு கண், ஒரு கால் இழந்தான். ஆனால் பலிஷ்டனோ ஒரு காயம்கூட படாமலிருந்தான். இது முடிந்ததும் அவன் தன் குள்ள சிநேகிதனிடம் கூறினான்: “என்ன சின்ன வீரனே, இது கீர்த்தியைக் கொடுக்கும் விளையாட்டல்லவா? நாம் இன்னும் ஒரு தடவை ஜயம் பெறக் கோருவோம். அப்பொழுது நாம் அழியாப் புகழை அடைவோம்.” “இல்லை” என்று இதற்குள் ஊக்கம் தெளிந்த குள்ளன் கத்தினான். “இல்லை, எனக்கு போதும்; நான் இனிமேல் சண்டைபோடமாட்டேன். ஏனெனில், ஒவ்வொரு சண்டையிலும் உனக்கு எல்லாப் புகழும், வெற்றியும், கிடைத்திருக்கிறது. ஆனால் அடியெல்லாம் என்மேல் விழுகிறது.” நான் இந்தக் கதையின் நீதியை எடுத்துச் சொல்லப் போகும் தருணத்தில், என்னுடைய கவனம் என் பெண்கள் பட்டணத்திற்குப் போக உத்தேசித்திருக்கும் விஷயத்தைப்பற்றி என் மனைவிக்கும் மிஸ்டர் பர்க்கெலுக்கும் உஷ்ணமான விவாதம் நடந்து கொண்டிருந்ததில் இழுக்கப்பட்டது. என் மனைவி மிகவும் அழுத்தமாக அதிலிருந்து உண்டாகும் நன்மைகளைப் போற்றிப் பேசினாள். மிஸ்டர் பர்க்கெல் அதற்கு எதிராக மிக ஆர்வத்தோடு அவளை அதிலிருந்து திருப்ப முயன்றார். நானோ பொதுவாயிருந்தேன். அவர் அப்பொழுது செய்த மறுப்புகளெல்லாம், அன்று காலையில் மிக நிந்தையுடன் ஏற்றுக் கொள்ளப்பட்ட புத்திமதியின் தொடர்பாகத் தோன்றியது. வாக்குவாதம் மிக அதிகமாக வளர்ந்தது. பரிதாப நிலைமையிலுள்ள டிபோரா, காரணங்களைப் பலமாய்க் கூறாமல், உரக்கப் பேசினாள். கடைசியாக, தோல்வியடையும் தருணத்தில் இரைச்சல் போட்டு தப்புவிக்கும் படியாயிற்று. அவளுடைய வாக்குவாதத்தின் முடிவோ, எங்களுக்கெல்லாம் மிகவும் அதிருப்தியாயிருந்தது.

எது புத்திமதி யென்று சொல்லுகிறார்களோ அதற்கு அவர்கள் ரகசியமான காரணங்களைக் கொண்டுதான்

சொல்லுகிறார்கள். அவர்களில் சிலரை அறிந்திருக்கிறேன் என்று அவள் சொன்னாள். ஆனால் அவளைப் பொறுத்த மட்டில் அவர்கள் தன் வீட்டிற்கு இனிமேல் வராமலிருக்க வேண்டுமென்று இஷ்டப்படுவதாகச் சொன்னாள். பர்க்கெல் கூறினார்: "அம்மணி, அந்தரங்கக் காரணங்கள் என்பதைப் பற்றி நீங்கள் சொல்லுவது சரி. எனக்கு அந்தரங்கக் காரணங்கள் இருக்கின்றன. அவற்றைச் சொல்வதற்கு முடியாமலிருக்கிறேன். ஏனெனில் நான் ஒளிக்காமல் சொல்லக்கூடிய காரணங்களுக்கு நீங்கள் சரியான பதில் கொடுக்க முடியவில்லை. ஆனால் நான் இங்கே அடிக்கடி வருவது துன்பத்தை விளைவிக்கிறதாகத் தெரிந்து கொண்டேன். ஆகையால், நான் இப்பொழுது போக உத்தரவு பெற்றுக்கொள்ளுகிறேன். இந்தப் பிரதேசத்தை விட்டு வெளியே போகும் பொழுது, இன்னொரு தரம் கடைசியாக உத்தரவு பெற்றுக்கொள்ள ஒருகால் வரலாம்" என்று சொல்லிக் கொண்டு அவருடைய தொப்பியை யெடுத்தார். அவர் மிகவும் அடக்கமாய் கூறினது என் மனைவியின் கோபத்தை மூட்டியது.

ஸோபியா தன் பார்வையால் அவருடைய அவசரத்தைக் கண்டிக்கிறது போல் முயன்றும், அவர் செல்வதை நிறுத்த முடியவில்லை. அவர் போன பிறகு, நாங்கள் எல்லோரும் சில நிமிஷங்களுக்குக் குழப்பத்தோடு ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டோம். என் மனைவி, இதற்கு தானே காரணமென்று அறிந்துகொண்டு, தன்னுடைய கவலையைப் புன் சிரிப்பாலும் குற்றமில்லாத ஒரு பாணிப்பாலும், மறைக்க முயன்றாள். நான் இதைக் கண்டிக்க வேண்டுமென்று நினைத்தேன். "என்ன பெண்ணே, இப்படித்தானா நாம் அன்னியர்களிடம் செய்வது? இமாதிரியாகவா அவர்களுடைய நன்மைகளை நாம் மறுதளிக்கிறது? என் பிரியே, உன் வாயிலிருந்து எக்காலத்திலும் நழுவின வார்த்தைகளில், இவைதான் மிகவும் கொடியவை. எனக்கு மிகவும் திருப்தியில்லாதது இதுவே என்று நீ நிச்சயமாய்த் தெரிந்து கொள்" என்று உரக்கச் சொன்னேன், "ஏன் அவன் என்னை இப்படிக் கோபமூட்டினான்? அவனுடைய புத்திமதியின் உட் காரணங்



கள் எனக்கு நன்றாகத் தெரியும். அவன் என் பெண்கள் பட்டணம் போவதைத் தடுக்க எண்ணினான். ஏனெனில் என்னுடைய கடைசிப் பெண்ணின் தோழமை இங்கே வீட்டில் கிடைக்குமென்ற எண்ணம்தான். அது எப்படியிருந்தாலும் ஹீன ஜீவனம் பண்ணும் அப்பேர்க்கொத்த மனிதனைவிட மேம்பட்ட தோழமை அவள் தேடிக் கொள்ளட்டும்" என்றாள் என் மனைவி.

"ஹீன ஜீவனமுள்ளவன் என்று அவனை சொல்லுகிறாய். என் பிரியே, அநேகமாய் இந்த மனிதனின் குணத்தை நாம் சரிவர அறிந்திருக்கமாட்டோம். ஏனெனில் சிற்சில சமயங்களில் நான் அறிந்த வரையில் அவன் மிகவும் கடைந்தெடுத்த கனவானாகவே புலப்பட்டது. நீ சொல்லு, சோபியா, என் பெண்ணே, அவன் தன் பிரியத்தைக் காட்ட ரகசியமான அடையாளங்கள் எப்பொழுதாவது கொடுத்ததுண்டா?" என்று நான் கேட்டேன். "என்னுடன், அவருடைய சம்பாஷணைகள் எப்பொழுதும் கண்ணியமாகவும் அடக்கமாகவும் களிப்பாகவுமிருந்தன. மற்ற சங்கதிகளொன்றுமில்லை. இல்லவே யில்லை. ஏழை மனிதனிடத்தில் குணம் இருப்பதாக ஒத்துக்கொள்ளும் பெண்ணை அவர் எப்பொழுதும் கண்டதில்லை யென்று ஏதோ ஒரு தடவை மட்டும் சொன்னது ஞாபகத்திற்கு வருகிறது" என்று என் மகள் பதிலுரைத்தாள். "துர்பாக்கியர்களுக்கும் சோம்பேறிகளுக்குமே இது ஒரு சகஜமான பேச்சு. ஆனால் நீ அப்பேர்க்கொத்த மனிதர்களைச் சரிவர அறிந்து கொள்வதற்கு உனக்குத் தெரியுமென்று நான் நம்புகிறேன். தன்னுடைய சொந்த விஷயங்களில் அவ்வளவு கருத்தில்லாத மனிதனிடமிருந்து சௌக்கியத்தை எதிர் பார்ப்பவர்கள் பைத்தியக்காரர்களே. நானும் உன் தாயாரும் உனக்கு அதைவிட மேலான வாழ்க்கையை எதிர்பார்க்க ஏற்பாடு செய்திருக்கிறோம். அடுத்த குளிர் காலத்தில் நீ பட்டணத்தில் வசிக்கும்படி நேரும். அப்பொழுது உனக்கு இவரைவிட மேலானவரை வரிக்கச் சந்தர்ப்பங்கள் ஏற்படும்" என்று நான் சொன்னேன்.

இந்தச் சமயத்தில் ஸோபியாவின் மனப்பான்மை எவ்விதமாயிருந்ததென்பதை தீர்மானிக்க நான் அருகு-

னல்ல. வெகு ஆபத்துக்கள் எந்த விருந்தாளியிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டனவோ, அந்த விருந்தாளி நீங்கி விட்டாரென்று அந்தரங்கத்தில் எனக்கும் மகிழ்ச்சியில்லாமலில்லை. அதிதி பூஜையில் விபரீதம் ஏற்பட்டதில் என் மனச்சாக்ஷி கொஞ்சம் உறுத்தியது. ஆனால் நான் அந்தக் கண்டகனை இரண்டு மூன்று குயுக்திகளால் சட்டென மடக்கிவிட்டேன். அவ்வண்ணமே எனக்குத் திருப்தியும் என் மனதிற்கு சமாதானமும் பண்ணிக் கொண்டேன். தப்பு இயற்றப்பட்ட பிறகு, மனச்சாக்ஷியால் உண்டாக்கப்படும் அனுதாபங்கள் சீக்கிரத்தில் சமனமடைவிக்கப்படுகின்றன. மனச்சாக்ஷியே ஒரு பயங்காளி. எந்தத் தப்புகளை அது செய்யப்படுவதினின்றும் மறுக்க வல்லமையற்றதோ, அவை பற்றி குற்றஞ் சாட்ட அதற்கு சாதாரணமாக முகாந்திரம் ஏற்படுத்திக் கொள்ள வல்லமையில்லை.

## அத்தியாயம் 14

*நூதன விபரீதங்கள், துன்பமெனத் தோன்றும் சம்பவங்கள், நிஜமான நன்மைகள் என்பதற்கு ஒரு திருஷ்டாந்தம்.*

மிஸ்டர் தார்ன்ஹில் அன்பு கூர்ந்து, பட்டணத்தில் அவர்களுடைய நடபடையைத் தானே கவனிப்பதாக ஏற்றுக் கொண்டு, கடித மூலம அவை பற்றித் தெரிவிப்பதாகச் சொன்னதால், பட்டணத்திற்கு என் பெண்களுடைய பிரயாணம் இப்பொழுது தீர்மானிக்கப்பட்டது. ஆனால் அவர்கள் அங்கே வசிக்கும் பான்மை, பின்னால் அவர்களுக்கு எதிர்பார்க்கப்படும் அந்தஸ்திற்குத் தகுந்ததாக இருக்கவேண்டியது அவசியம் என்று கருதப்பட்டது. அது செலவில்லாமல் முடியக் கூடாத காரியம். நாங்கள் எல்லோரும் அதன் மேல் எந்த மிகச் சுலபமான வழியில் பணத்திற்கு ஏற்பாடு பண்ணலாமென்று யோசித்தோம். அதை நேரான பாஷையில் புகலுவதென்றால் எதை நாம் மிக அசௌகரியமில்லாமல் இப்பொழுது விற்று பணமாக்கலாம், என்றுதான். சீக்கிரத்தல் தீர்மானத்திற்கு வந்தோம். கையிலிருக்கும் குதிரை தனக்கு ஜோடியில்லாத காரணத்தால் கலப்பைக்குக் கொஞ்சம்கூட பிரயோஜனமில்லை யென்றும், ஒரு கண்ணில்லாததால் அப்படியே சவாரிக்கும் தகுதியல்லவென்றும் புலப்பட்டது. ஆகையால் மேலே சொல்லப்பட்ட காரியத்திற்காக அடுத்த ஊர் சந்தையில் அதை விற்றுவிடுவதென்று தீர்மானிக்கப்பட்டது. என்னுடைய ஆயுளில் இதுதான் நான் செய்யப்போகும் முதல் வியாபாரம். இருந்தாலும் காரியத்தை சமார்த்தியத்துடன் நடத்துவோமென்ற தைரியமுண்டு. ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய சொந்த சாமார்த்தியத்தைப் பற்றி என்ன அபிப்பிராயம் கொள்ளுகிறானோ, அதற்கு அளவுகோல் அவன் வைக்கும் ஸகவாஸங்களே. என்னுடைய பழக்கங்க

ளெல்லாம் என் குடும்பத்திற்குள்ளேயே விசேஷமா
யிருந்ததால், என்னுடைய லௌகிக சாமர்த்தியத்தைப்
பற்றி பாதகமான எண்ணங்கள் நான் கொள்ளவில்லை.
இருந்தபோதிலும், மறுநாட் காலையில் நான் வாசற்படியி
லிருந்து கொஞ்ச தூரம் போனபிறகு என் மனைவி நான்
பார்வைக்கு அப்பால் போகுமுன் என்னைத் திரும்பக்
கூப்பிட்டு, சர்வ ஜாக்கிரதையா யிருக்கும்படி காதோடு
காது வைத்துச் சொன்னாள்.

நான் சந்தைக்கு வந்ததும், வழக்கம்போல்,
குதிரையை எல்லா விதமான நடையிலும் நடத்திக்
காட்டினேன். ஆனால் கொஞ்ச நாழிகைக்கு அதைக்
கேட்பவர்கள் ஒருவருமில்லை. கடைசியாக ஒரு குதிரைக்
கசாரி சமீபத்தில் வந்து, குதிரையை வெகுநேரம் சுற்றிச்
சுற்றிப் பார்வையிட்டு, அதற்கு கண் ஒன்றில்லையென்று
தெரிந்துகொண்டு, ஒன்றும் சொல்லாமல் போய்விட்
டான். இரண்டாவது மனிதன் அதற்குக் காலில் வாதக்
கட்டு இருக்கிறது என்று பார்த்து, சும்மாவே வீட்டிற்கு
ஓட்டிக்கொண்டு போகச் சொன்னாலும், அவன் அதை
வேண்டாமென்றான். மூன்றாம் மனிதன் பார்த்து, அதற்கு
ஒரு வாயுக் கட்டு இருக்கிறது என்று சொல்லி பணம்
கொடுப்பதைப் பற்றி ஒன்றும் பேசவில்லை. நான்காமவன்
அதன் கண்ணைப் பார்த்து அதற்குள்ளே பூச்சி கூடு
வைத்திருக்கிறதென்றான். ஐந்தாவது மனிதன், பொட்டை,
சப்பை, பூச்சி வைத்த குதிரையை, நாய்க்கு மாமிசமாக
வெட்டிப்போட மட்டும் தகுதியுள்ள குதிரையை, வைத்துக்
கொண்டு சந்தையில் என்ன மண்ணாங்கட்டி செய்ய
முடியுமென்று ஆச்சரியப்பட்டான். இதற்குள் எனக்கே
அந்தப் பரிதாபகரமான பிராணியின் பேரில் மிகவும் மனப்
பூர்வமான வெறுப்பு உண்டாயிற்று. விலை கூறவரும்
ஒவ்வொருவனும் கிட்டவரும் பொழுது, நான் வெட்கத்தி
னால் பீடிக்கப்பட்டேன். ஏனெனில், அந்த ஆட்கள்
சொன்ன தெல்லாவற்றிலும் முழுமையும் நம்பிக்கை
வைக்காவிட்டாலும், பலர் ஒரேமாதிரிச் சொன்னதில்
அவர்கள் சரியாகத்தான் சொல்லியிருக்க வேண்டு
மென்று நினைத்தேன். செயிண்ட கிரகரி நற்செயல்களைத்
தீர்மானிப்பதில், அவ்வபிப்பிராயமே கூறியுள்ளார்.



இந்தக் குழப்பமான சந்தர்ப்பத்திலிருக்கும் பொழுது
என் மத வகுப்பைச் சேர்ந்த புரோகிதர், ஒரு பழைய
நண்பர், அவரும் சந்தையில் ஒரு அலுவலுள்ளவராய் வரக்
கண்டேன். அவர், என்னுடன் கைகுலுக்கி, ஒரு பொது
சாப்பாட்டுக் கடைக்குப் போய் எந்தப் பானம் கிடைத்
தாலும் அதில் ஒரு கிளாஸ் சாப்பிட அழைத்தார். நான்
உடனே சம்மதித்தேன். ஒரு பானக் கடையில் நுழைந்து,
நாங்கள் பின்புறத்திலுள்ள ஒரு அறைக்குக் கூட்டிப்
போகப்பட்டோம். அங்கே சாத்வீகரான ஒரு கிழவர்
மட்டுமே உட்கார்ந்து, வாசித்துக் கொண்டிருக்கும்
பெரிய புத்தகத்தில் ஆழ்ந்த மனத்தோடு அதைப் பார்த்துக்
கொண்டிருந்தார். என் ஆயுள்நாளில் என் மனதை
அவ்வளவு வசீகரம் செய்யும் ஒரு உருவத்தை நான் முன்பு
பார்த்ததில்லை. வெள்ளி போல நரைத்த சுருட்டை மயிர்
கள், அவருடைய புருவத்தை பூஜிதமாக மூடிக் கொண்
டிருந்தன. அவருடைய இளமைத் தோற்றத்தோடுள்ள
முதிர்ந்த வயது, அவருடைய சுகாதாரத்தினாலும் காருண்
யத்தினாலும் அடையப்பட்டதாகப் புலப்பட்டது. ஆனா
லும் அவர் அங்கிருந்ததினால், எங்களுடைய சம்பாஷணை
நிறுத்தப்படவில்லை. என் சிநேகிதரும் நானும் பரஸ்பரம்
ஒவ்வொருவருடைய யோக க்ஷேமத்தின் வெவ்வேறு
மாறுதல்களைப்பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். விஸ்
டன் பெயரோடு சம்பந்தப்பட்ட விவாதங்கள், என்னால்
கடைசியில் விடுவிக்கப்பட்ட வியாசம், ஆர்சடீகனின்
பதில், எனக்கு அளிக்கப்பட்ட கொரடா அடி, இவற்றைப்
பற்றிப் பேசினோம். ஆனால் எங்களுடைய கவனம் சீக்கி
ரத்தில் ஒரு வாலிபன் வரவே, அவனிடத்தில் செலுத்தப்
பட்டது. அவன் அறையில் நுழைந்ததும், ஏதோ ஒரு
விஷயம் மரியாதையுடன் தணிந்த குரலில் அந்த முதுமை
நிறைந்த அன்னியரிடம் சொன்னான். அந்தக் கிழவர் பதில்
சொன்னார்: "என் குழந்தாய், ஒரு விதமான மன்னிப்பும்
கேட்டுக் கொள்ள வேண்டாம். நன்மை புரிவது சகல
ஜீவராசிகளுக்கும் நாம் செய்ய வேண்டிய கடமை.
இதை வாங்கிக்கொள். இது இன்னும் அதிகமாகவே
யிருக்கலாமென்று இச்சைப்படுகிறேன். ஆனால் ஐந்து
பவுன் உன் கஷ்டத்தை நிவர்த்திக்கும். ஆகையால்

"நீ எடுத்துக்கொள்" அடக்கமுள்ள வாலிபன் நன்றிக் கண்ணீர் வடித்தான். ஆனால் அவன் நன்றி என்னுடைய நன்றிக்கு சமமாகாது. அந்த இரக்கமுள்ள கிழவருடைய கொடையினால் எனக்கு உண்டான களிப்பு, அவரை என்னுடைய கைகளினால் தழுவி அணைத்துக்கொள்ளத் தூண்டியது. அவர் வாசித்துக்கொண்டேயிருந்தார். நாங்களும் எங்களுடைய சம்பாஷணையைத் தொடர்ந்தோம். கொஞ்ச நேரத்திற்கெல்லாம், என் சிநேகிதர் சந்தையில் தமக்கு ஒரு அலுவல் இருப்பதை நினைத்துக்கொண்டு, சீக்கிரம் போய்விட்டு வருவதாகச் சொன்னார். போகும்பொழுது டாக்டர் பிரிம்ரோஸின் பேட்டி எவ்வளவு கிடைக்கக் கூடுமோ, அவ்வளவு அனுபவிக்க எப்பொழுதும் சித்தமாயிருக்கிறேனென்று சொலலக் கேட்டு, அந்த வயோதிகர் என்னைக் கொஞ்ச நேரம் உற்றுப் பார்த்ததாகத் தோன்றியது. என் சினேகிதர் போனதும், அவர் மதத்திற்கு முக்கிய ஆதாரமாகவிருக்கும், அந்த ஆணவமுள்ள ஏகபத்தினி விரதர், மகானான பிரிம்ரோஸுக்குத் தாங்கள் ஏதாவது ஒரு வழியில் சொந்தமானவராவென்று மிக்க வணக்கத்துடன் கேட்டார். எனக்கு அச்சமயத்தில் உண்டான நிஜ ஆனந்தத்தைப் போல் எப்பொழுதும் உண்டானதில்லை.. "ஐயா, நீர் ஒரு நல்ல மனிதர் என்பதற்கு ஐயமில்லை. உம்மைப் போலுள்ளவர்களின் புகழ்ச்சி என் மனத்தில் ஏற்கெனவே உம்முடைய தாராள குணம் உண்டுபண்ணிய சந்தோஷத்தை அதிகரித்தது. ஐயா, உமக்கு முன்னால் நிற்பவர்தான் உமக்குப் பெரியாரென்று சொல்ல மனம் உவந்ததே. அந்த டாக்டர் பிரிம்ரோஸ், ஏகபத்தினிவிரதர். எவர் எவ்வளவோ காலமாய்த் தற்கால பலதாரக் கொள்கையை எதிர்த்தாரோ அந்த பாக்கியரான புரோகிதரை நீர் இங்கே பார்க்கிறீர். அந்த எதிர்ப்பில் ஜயம் பெற்றேனென்று சொல்லிக் கொள்ளுவதற்கு எனக்கு அருகதையில்லை." என்று நான் கூறினேன். பய பக்தியால் கவரப்பட்டவராய் அந்த அன்னியர் கூறினார் : "நான் உம்முடன் சகஜமாகப் பேசிவிட்டேன். ஆனால் தெரிந்துகொளள விரும்பும் என்னுடைய ஆவலை நீர் மன்னிக்க வேண்டும்." நான் மிகவும்



வணங்கிக் கேட்டுக்கொள்ளுகிறேன்." அவர் கையை இழுத்துக் குலுக்கிக்கொணடு நான் சொன்னேன்: "ஐயா, நீர் சகஜமாயிருந்தால் எனக்கு ஒருவிதமான சலிப்பும் இல்லை. என்னுடைய மதிப்பை ஏற்கெனவே நீர் அடைந்தவராகிறீர். இப்பொழுது என்னுடைய நட்பையும் ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்." "அப்படியென்றால் நான் நன்றியுடன் உம்முடைய வேண்டுகோளை ஏற்றுக்கொள்ளுகிறேன். அசைக்கவொண்ணா ஆஸ்திகமார்க்கக் கீர்த்திஸ்தம்பமே!" என்று என் கையைப் பிசைந்துகொண்டு சொன்னார். "நான் என் முன் பார்க்கிறேனே" என்று சொல்லுமுன் நான் அவர் சொல்லப் போவதைத் தடுத்தேன். நான் ஒரு ஆசிரியராக தற்புகழ்ச்சியை அளவுக்குமேல் பெற்றுக்கொள்ளத் தயாராயிருந்தபோதிலும், என்னுடைய அடக்கம் அதற்குமேல் அங்கீகரிக்க விடவில்லை.

எப்படியிருந்தபோதிலும், கட்டுக் கதையிலும் இரண்டு காதலர்கள் எங்களைப்போல் அவ்வளவு தக்ஷணமே பலமான சிநேகத்தை அடைந்திருக்க முடியாது. நாங்கள் பல விஷயங்களைப்பற்றிப் பேசினோம். முதலில் அவரை, வித்தை அவ்வளவு இல்லாவிட்டாலும், பக்திமானென்று மதித்தேன். மனித பூர்வமான கொள்கைகளையெல்லாம் பதரென இகழ்ந்தாரென்று நினைத்தேன். இருந்தபோதிலும் இது அவரிடத்திலுள்ள மதிப்பில் கொஞ்சம் கூட குறைக்கவில்லை. ஏனெனில் நான் சில காலமாய் எனக்குள்ளேயே அந்த மாதிரி அபிப்பிராயம் கொள்ள ஆரம்பித்தேன். ஆகையால் உலகமே பொதுவில், தெய்வாதீனத்தால் திட்டப்பட்ட மதக் கொள்கைகளில் கண்டிக்கும்படியான அசிரத்தை ஏற்பட்டு, மனிதர்கள் மனம் போனபடியெல்லாம் மனோபாவங்களைக் கைக் கொள்ளுகிறார்களென்று அச்சமயததில் நான் சொன்னேன். அவரும் தம்முடைய எல்லாப் படிப்பையும் காண்பிக்க இந்தத் தருணத்திற்கு பத்திரப்படுத்தி வைத்தவர் போல பதில் சொன்னார். "அப்படியே ஐயா, அப்படியே ஐயா, இந்த உலகம் அதனுடைய க்ஷீண நிலையிலிருக்கிறது. இருந்தாலும் இந்த உலகத்தின் ரக்ஷிப்போ, அல்லது உலகத்தின்

சிருஷ்டியோ, இரண்டுமே எல்லாக் காலங்களிலும் தத்துவ ஞானிகளுக்குப் புதிர் போட்டிருக்கின்றன. உலக சிருஷ்டியைப் பற்றி எத்தனை விதமான அபிப்பிராயங்கள் பின்னல் போல் விடுவிக்கப்பட்டில்லை! சான்கோனியாதன், மானிதோ, பிரோசஸ், ஒசல்லஸ் லுகானஸ் இவர்களெல்லாம் வீணாக அதில் பிரயத்தனப்பட்டார்கள். கடைசியில் சொல்லப்பட்டவர் இந்த வார்த்தைகளைச் சொன்னார்: 'Anarch on Ara kai atelutain to Pan' (லத்தீன்) அதன் தாத்பரிய மென்னவென்றால், எல்லா வஸ்துக்களுக்கும் ஆதியுமில்லை; அந்தமுமில்லை. செயுகாடன் ஆசர் நாளில் வாழ்ந்த மான்தியோவும்— (ஆசர் என்பது சிரியாவில் உபயோகிக்கப்படும் வார்த்தை; அது அவ்வூர் அரசர்களுக்கு பெயரில் கடைசி வார்த்தையாக வழக்கத்தில் உபயோகப்படுத்தப் படுகிறது. தெக்லெட் பேயால்—ஆசர், நாபன் ஆசர் என்பதுபோல்) நான் சொல்வதென்னவென்றால், அவர் அதைப் போல தப்பான ஒரு கொள்கையை விக்யாபித்தார். அதன் தாத்பரிய மென்னவென்றால் புஸ்தகங்கள் உலகத்தைப் புகட்டாது. ஆகையால் அவர் தத்வங்களைக் கண்டு பிடிக்க எத்தனித்தார். ஆனால் நான் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளுகிறேன். கேட்கப்பட்ட கேள்வியிலிருந்து நான் எங்கேயோ போய்க்கொண்டிருக்கிறேன். அவர் வாஸ்தவமாகவே அப்படித்தான் போய்க் கொண்டிருந்தார். நான் பேசிக்கொண்டிருந்த சங்கதிகளுக்கும் உலக சிருஷ்டிக்கும் என்ன சம்பந்தமென்று நானும் உண்மையில் அறிய முடியவில்லை. ஆனால் அவர் ஒரு படிப்பாளி என்று தெரிவிக்க அவ்வளவு போதுமானது. இப்பொழுது அவரை இன்னும் விசேஷமாக வணங்கினேன். ஆகையால், உரைகல்லில் வைத்து உரைத்துப் பார்ப்போமென்கிற எண்ணம் எனக்கு உதித்தது. ஆனால் அவர் வெற்றிக்காகப் பாடுபட்டால் குற்றம் ஏற்படுமேயென்று அதில் பாடுபடவில்லை. நான் அவருடன் வாதித்து ஏதாவது ஒரு விஷயம் சொல்லி அவரை மறுதளிக்க எதிர்பார்க்கும் பொழுதெல்லாம் அவர் புன்சிரிப்புடன் தலையை ஆட்டி மௌனமாயிருப்பார். ஆகையால் அவர் சொல்ல இஷ்டப்பட்டால் எவ்வளவோ சொல்லக் கூடுமென்று



நான் நினைத்தேன். இப்படி எங்கள் பேச்சு அறியாமலே புராதன விஷயங்களிலிருந்து சந்தைக்கு வந்த காரியங்களைப் பற்றிப் பேச நேர்ந்தது. நான் குதிரை விற்க வந்தேனென்று சொன்னேன். மிகவும் எதிர்பாராத அதிருஷ்டமல்லவா? அவரும் அவருடைய குடியானவன் ஒருவனுக்கு குதிரை ஒன்று வாங்க வந்திருக்கிறார்! என் குதிரை உடனே தருவிக்கப்பட்டது. நேர்த்தியான வழியில் நாங்கள் ஒரு மத்யஸ்தமான தீர்மானத்திற்கு வந்தோம். எனக்குப் பணம் கொடுக்க வேண்டியதைத் தவிர வேறு அலுவலில்லை. அவர் உடனே முப்பது பவுன் நோட் கடிதாசை எடுத்து என்னை மாற்றச் சொன்னார். நான் அதற்கு சில்லரை கொடுக்க முடியவில்லை. அவருடைய காலாளைக் கூப்பிட்டு உத்திரவிட்டார். அவன் மிகவும் நேர்த்தியான ஒரு பூர்ண சேவக உடையில் வந்தான். "இந்தா, அப்ரஹாம், போய், இதற்குத் தங்க நாணயம் வாங்கிக் கொண்டு வா. நீ இதற்குப் பக்கத்திலிருக்கும் ஜாக் வண்டனிடமிருந்தாவது அல்லது எங்கேயாவது ஏற்பாடு செய்," அந்தப் பேர்வழி போனவுடன் அவர் மனதில் சோகம் உண்டாகும்படி வெள்ளியின் குறைவைப்பற்றிக் கண்டனம் செய்தார். நானும் தங்கத்தின் மிகக் குறைவைப் பற்றிச் சொல்லி வருத்தப்பட்டு, அவர் சொன்னதை ஆமோதித்தேன். அப்ரஹாம் திரும்பி வருவதற்குள் நாணயங்களுக்கு இப்பொழுது உள்ள கஷ்டம் போல் எப்பொழுதும் இருந்ததில்லை என்று இருவரும் ஒப்புக் கொண்டோம்.

அப்ரஹாம் திரும்பி வந்து சந்தை முழுவதிலும் கேட்டும் நோட்டை மாற்ற முடியவில்லை. தான், அதற்கு அரைகிரௌன் வட்டமாகக் கொடுப்பதாகச் சொல்லியும் பிரயோஜனப்படவில்லை என்றான். இது எங்களுக்கு ஒரு பெரிய ஏமாற்றமாக இருந்தது. ஆனால் வயோதிக சீமான் கொஞ்சம் யோசித்து "என் கிராமத்திலுள்ள ஸாலமன் பிலாம்பரோ என்ற ஒருவரைத் தெரியுமா?" என்று கேட்டார். அவர் என் அடுத்த வீட்டுக்காரர் என்று சொன்னதும் "அது அப்படியானால், நாம் இந்தக் காரியத்தை முடிக்கலாமென்று நம்புகிறேன். உமக்குப்பார்வை

O111, 3L3H, V



பிட்ட உடனே கொடுக்கும்படி அவருக்கு ஒரு கடிதம் தருகிறேன். நான் உம்மிடத்தில் சொல்லுகிறேன் கேளும். அவனிருக்கும் ஐந்து மைல் விஸ்தீரணத்திலுள்ள என்ன மனிதனை யிருந்தாலும் ஆதரிப்பதில் அவனுக்கு ஈடில்லை.

சத்யவாதி சாலமனுக்கும் எனக்கும் அநேக வருஷங்களாகப் பழக்க முண்டு. நான் அவனை எப்பொழுதும் மூன்று கோல் தாண்டுவதில் ஜயித்திருக்கிறேன். ஆனால் அவன் ஒத்தைக் காலில் எனக்கு முன் நடக்கக் கூடியவன்." எனக்கு என் பக்கத்தியானின் 'பேரில் கொடுத்த கடிதம் பணம் போலவே நான் அவனுடைய நாணயத்தைப்பற்றித் தகுந்தபடி அறிந்திருந்தேன். கடிதம் கையெழுத்துப் போட்டு என் கையில் கொடுக்கப்பட்டது. வயோதிக சீமான் மிஸ்டர் ஜென்கின்ஸன், அவர் மனிதன் அப்ரஹாம், என் குதிரை கிழ ப்ளாக்பெர்ரி, இவர்கள் ஒருவரோடொருவர் திருப்தியடைந்து வேகமாகப் புறப்பட்டுப் போனார்கள்.

கொஞ்ச நாழிகை ஆனதும், நான் யோசிக்கையில், அறியாத மனிதனிடமிருந்து ஒரு உண்டி கடிதம் பெற்றுக் கொண்டது தவறுதல் என்று தோன்றியது. ஆகையால் ஜாக்கிரதையாய் வாங்கிக் கொண்டவர் பின் சென்று, குதிரையைத் திருப்பிக் கொண்டு வருவோமென்று தீர்மானித்தேன். ஆனால் அதற்குக் காலம் தவறிவிட்டது. ஆகையால் நான் நேரே வீட்டை நோக்கி எவ்வளவு வேகமாய்ப் போய் என் சிநேகிதனிடம் உண்டியைப் பணமாக மாற்ற முடியுமோ, அப்படிச் செய்வதென்று தீர்மானித்துச் சென்றேன். நான் என் குற்றமற்ற அயலானை அவன் வாசல் கதவண்டை குழாய் வைத்துக்கொண்டு புகையருந்திக் கொண்டிருக்கக் கண்டேன். அவனிடம் அவன் பேரில் பணம் பெற ஒரு கடித மிருக்கிறதென்று தெரிவித்தேன். அவன் இரண்டு தடவை கடிதத்தைத் திருப்பி திருப்பி வாசித்தான். "நீ அந்த பெயரை வாசிக்கக் கூடுமென்று நினைக்கிறேன். இப்ராஹீம் ஜென்கின்ஸன்" என்று கூவினேன். "ஆம், பெயர் தெளிவாய் எழுதியிருக்கிறது. அந்தக் கனவானையும் எனக்குத் தெரியும். இந்த ஆகாயத்தின் கீழ் அவன் எல்லோரையும்விட பெரிய



N48

போக்கிரி. இந்த அயோக்கியன்தான் எங்களுக்கு மூக்குக் கண்ணாடி விற்றவன். அவன் ஒரு பக்திமானாகத் தோன்றும மனிதன் அல்லவா? நரைமயிர், சட்டைப் பைகளுக்கு மூடுதல் கிடையாது. அவன் கற்ற வித்தையை சரமாரியாகப் பேசவில்லையா? கிரேக்கரைப்பற்றியும் உலக ரக்ஷிப்பைப்பற்றியும் உலகத்தைப் பற்றியும்?" என்று பதில் சொன்னான்.

நான் அதற்குப் பதிலாக ஒரு பெருமூச்சு விட்டுக் கொண்டு அடித்தொண்டையிலிருந்து குமுறினேன். "ஏ, அவனுக்கு அந்தவிதப் படிப்புத்தான் உண்டு. எப்பொழுதாவது ஒரு படிப்பாளியைக் கூட்டத்தில் கண்டால், உடனே அந்தப் பேச்சை பேசிவிடுவான். ஆனால் அந்த அயோக்கியனை எனக்குத் தெரியும். அவனை இன்னும் பிடிக்காமல் விடப்போகிறதில்லை" என்று அதற்கு அவர் பதிலுரைத்தார்.

நான் ஏற்கெனவே தக்கவாறு ஏமாற்றம் அடைந்தாலும், எனக்கு எல்லாவற்றையும்விடப் பெரிய பயம், நான் எப்படி என் மனைவியையும் பெண்களையும் பார்த்து, இந்த விஷயத்தைச் சொல்லுவதென்றுதான். பள்ளிக்கூடத்திலிருந்து ஒரு காலிப் பையன் திரும்பவும் தன் உபாத்தியாயர் முகத்தைப் பார்க்கப் பயந்து, பள்ளிக்குப் போகப் பயப்படுவதைவிட, நான் என் வீட்டிற்குச் செல்ல பயப்பட்டேன். அவர்களுடைய கோபத்தை எதிர் பார்த்து, நானே முன்னேயே கோபாவேசத்தோடு போவதென்று தீர்மானித்தேன். ஆனால், ஐயோ! வீட்டில் நுழைந்ததும் என் குடும்பம் சண்டை செய்யும்படியான மனோபாவத்திலில்லை. என் மனைவியும் பெண்களும் கண்ணும் கண்ணீருமாய் இருந்தார்கள். மிஸ்டர் தார்ன்ஹில் அன்றைக்கு அங்கே வந்து, அவர்களிடம் பட்டணத்திற்குப் போகும் பிரயாணம் முற்றிலும் [illegible] என்று தெரிவித்திருக்கிறார். இரண்டு [illegible]கள் பக்கத்திலிருக்கும் அருமை [illegible] சிலரிடமிருந்து எங்களைப்பற்றி கெட்ட தகவல்கள் கேள்விப்பட்டு, அன்றைக்கு லண்டனுக்குப் புறப்பட்டுப் போய்விட்டார்கள். என்ன விஷயம் சொல்லப்பட்டதென்றோ அல்லது சொன்ன

111677

வர் யாவரென்றோ, அவர் கண்டுபிடிக்க முடியவில்லை என்றார். ஆனால் அவை யாதாயினும், சொன்னவர்கள் யாராயிருந்தாலும், அவர் தம்முடைய நட்பையும் பாதுகாப்பையும் எங்கள் குடும்பத்திற்கு எப்பொழுதும்போல் காண்பிப்பதாக உறுதி கூறினாராம்.

ஆகையால் நான் ஏமாந்ததை அமைதியுடன் ஏற்றுக்கொண்டார்கள். ஏனெனில், அவர்களுடைய சொந்த ஏமாற்றத்தின் அதிகத்தால் என்னுடையதை பொருட்படுத்தவில்லை. எங்களைப்போல் கள்ளம் கபடில்லாத குடும்பத்தின் நடத்தையை அவதூறாகப் பேசக்கூடிய பதர்கள் யாவரென்று எங்களுக்குப் புரியவில்லை. எங்களுடைய சிறுமையே பொறாமைக்குக் காரணமாகாது. ஒருவருக்கும் நாங்கள் தீங்கியற்றி அவர்களைப் புண்படுத்தியதுமில்லை. ஆகையால் அவர் யாவரென்று எங்கள் மனம் குழம்பியது.

# அத்தியாயம் 15

*மிஸ்டர் பர்க்கெல்லின் மோசமெல்லாம் உடனே கண்டுபிடிக்கப்பட்டது. அளவுக்கு மிஞ்சின ஜாக்கிரதையின் அனர்த்தம்.*

அன்று சாயங்காலமும் மறுநாள் கொஞ்ச நேரமும், எங்களுடைய சத்துருக்கள் யாவரென்று கண்டுபிடிப்பதின் முயற்சியில் வீணாகக் கழிக்கப்பட்டன. பக்கத்திலுள்ள குடும்பங்களில் ஒன்றுகூட எங்களுடைய சந்தேகத்திற்குப் பாத்திரமாகவில்லை. நாங்கள் ஒவ்வொருவரும் அவர்களுக்கு மட்டுமே விசேஷமாய் தெரிந்த காரணங்களால், அந்த அபிப்பிராயம் வைத்தோம். நாங்கள் இவ்விதமான குழப்பத்திலிருக்கும்பொழுது, எங்கள் சிறு பையன்களில் ஒருவன் வெளியில் விளையாடிக்கொண்டிருக்கையில் புல் தரையில் கண்டெடுக்கப்பட்ட ஒரு கடிதப் பையைக் கொண்டுவந்தான்.

அதை நாங்கள் மிஸ்டர் பர்க்கெல்லிடம் பார்த்திருந்ததால், அது மிஸ்டர் பர்க்கெல்லைச்சேர்ந்தது என்று உடனே தெரிந்துகொண்டோம். அதைத் திறந்து பார்த்ததும் அதில் பற்பல விஷயங்களைப்பற்றி சில குறிப்புகள் இருந்தன. ஆனால் எங்களுடைய கவனத்தை முக்கியமாய் இழுத்தது என்னவென்றால், அரக்கு முத்திரை வைத்த ஒரு கடிதம். அதின்மேல் இப்படி வரைந்திருந்தது: "தார்ன்ஹில் மாளிகையிலிருக்கும் இரண்டு சீமாட்டிகளுக்கு அனுப்பவேண்டிய கடிதத்தின் நகல்." உடனே அவரே இழிவாகக் கோள் சொன்னவரென்று புலப்பட்டது. நாங்கள் அந்தக் கடிதத்தை அரக்கை உடைத்துப் பார்க்கக்கூடாதாவென்று யோசித்தோம்; நான் கூடாதென்றேன். ஆனால் ஸோபியா மனிதர்கள் எல்லோரிலும் அவர் அப்பேர்கொத்த இழிவான குற்றத்திற்கு ஆளாக மாட்டாரென்று சொன்னாள். அது வாசிக்கப்பட

வேண்டுமென்று வற்புறுத்தினாள். மற்றவர்கள் இதை ஆமோதித்தார்கள். அவர்களுடைய ஏகோபித்த வேண்டுகோளின் பேரில் நான் பின்வருமாறு அதை வாசித்தேன்: "சீமாட்டிகளே, இதைக் கொண்டுவருகிறவன் இன்னாரிடமிருந்து இது வருகிறதென்று உங்களுக்கு நம்பிக்கை உண்டாகும்படி செய்வான். அவன், எதில்லாவிட்டாலும், கபடறியாதவரின் நண்பன். அது கெடுக்கப்படுவதை தடுப்பதற்குத் தயாராயிருப்பவர். எனக்கு உண்மையென்று சொல்லப்பட்டதென்னவென்றால், நீங்கள் இரண்டு சிறு பெண்களைப் பட்டணத்திற்கு துணைகள் என்ற பெயரோடு கூட்டிப்போக உத்தேசித்திருக்கிறீர்களாம். அவர்களைப் பற்றி எனக்குக் கொஞ்சம் தெரியும். நான், கபடில்லாதவர்களை ஏமாற்றுவதற்கோ அல்லது கற்பு கெடுவதென்பதற்கோ, இடம் கொடுக்க இஷ்டப்படாததால், அப்பேர்க்கொத்தவர் விவகாரம்கொடிய வினைகளில் கொண்டுபோய் விடும் என்பது என்னுடைய அபிப்பிராயமென்று தெரிவிக்கிறேன். கெட்ட பெயருடையவர்களையோ, நடத்தை தவறினவர்களையோ கடினமாக நடத்துவது எப்பொழுதும் என்னுடைய வழக்கமல்ல. நடத்தை தவறுதலில் கொண்டுவிடுமென்கிற கோரிக்கை அதில் இல்லாவிடில், நான் என்னுடைய அபிப்பிராயத்தை இந்த மாதிரியாய்ச் சொல்லவோ, அல்லது கெட்ட நடவடிக்கையை, இப்படிக் கண்டிக்கவோ இறங்கியிருக்கமாட்டேன். ஆகையால் ஒரு சிநேகிதனுடைய எச்சரிக்கையை ஏற்றுக்கொள். எங்கே அமைதியும் குற்றமின்மையும் இவ்வளவு நாள் குடிகொண்டிருந்ததோ, அந்த ஒதுக்குப்புறங்களில் கூட துன்மார்க்க தீச் செயல்களை கொண்டுவந்துவிடுவதினால், மேல் தொடரும் தண்டனைகளைத் தீவிரமாய் யோசனைசெய்யுங்கள்."

எங்களுடைய சந்தேகம் இப்பொழுது அற்றுப்போயிற்று. இந்தக் கடிதத்தில் வாஸ்தவமாகவே இரண்டு தரப்புக்கும் பொருந்தக்கூடியவை சில இருக்கின்றன. அதிலுள்ள கண்டனங்கள் யாருக்கு எழுதப்பட்டனவோ அவர்களைக் குறித்தாலும் குறிக்கலாம்; எங்களைக் குறித்தாலும் குறிக்கலாம். ஆனால், அதிலுள்ள அருமையான எண்



ணம் எங்களுக்குப் புலப்பட்டது. ஆகையால் நாங்கள் அதற்குமேல் போகவில்லை. என் மனைவி என்னைக் கடைசிவரையில் கேட்கப் பொறுக்கவில்லை. எழுதினவரைப்பற்றி அடங்காக் கோபத்தோடு திட்டினாள். ஒலிவியாவும் அப்படியே கடுமையாயிருந்தாள். ஸோபியா அவருடைய சிறுதன்மையை நினைக்க மிகவும் ஆச்சரியமடைந்தாள். என்னைப் பற்றியோவெனில் முகாந்திரமில்லாமல் செய்நன்றிக்கு விரோதம் செய்தலில் எனக்குத் தெரிந்தவரையில் இவ்வளவு மிகவும் கெட்ட நடவடிக்கையைப் பார்த்ததில்லை. என்னுடைய கடைசிப் பெண்ணை கிராமத்திலேயே நிறுத்தி வைத்திருந்தால், தனக்கு அடிக்கடி அவளை சந்திக்க சந்தர்ப்பங்கள் ஏற்படுமென்ற எண்ணத்தினால்தான் இப்படி செய்திருக்க வேண்டும். அல்லது வேறொரு காரணமும் எனக்குப் புலப்படவில்லை. இவ்வாறு நாங்கள் எவ்விதத்தில் பதிலுக்குப் பதில் செய்யலாமென்று சிந்தித்துக்கொண்டிருக்கையில் எங்களுடைய இன்னொரு சிறு பையன் மிஸ்டர் பர்ச்செல் வயலின் மற்றொரு பக்கத்தின் வழியாக வந்துகொண்டிருக்கிறாரென்று சொல்ல ஓடிவந்தான். சமீபத்தில் தீங்கியற்றப்பட்டதாலுண்டான மனத்துன்பம் ஒரு பக்கம். மறுதளித்து பழிவாங்க சமீபித்துவிட்டதினாலுண்டான சந்தோஷம் மற்றப் பக்கம். இவற்றின் சிக்கலான எண்ணங்களை அனுமானிக்கலாமேயொழிய அவற்றை விவரிப்பது சாத்தியமில்லை. எங்களுடைய எண்ணங்களெல்லாம் அவரை நன்றிகெட்டதற்கு நிந்தையோடு விட்டுவிடுவதென்ற உத்தேசம் மட்டுமே. ஆனால் அது அவர் மனத்தைத் தீவிரமாய்ப் பிளக்கும்படி செய்வதென்று தீர்மானித்தோம்.

இதற்காக அவரை எங்கள் வழக்கம்போலுள்ள புன்சிரிப்புடன் வரவேற்பது, வழக்கத்தைவிட அதிகமான அன்புடன் முதலில் பேசுவது, அவரைக் கொஞ்சம் களிக்கச்செய்வது, பிறகு புகழ்ச்சியாய் மன அமைதியுடன் நடுவில், ஒரு பூகம்பம்போல் அவரைத் தாக்கி, அவருடைய இழிவான நடத்தையைக் குறிப்பிட்டுக் காட்டி, அவரை வெட்கததில் ஆழ்த்துவதென்று தீர்மானிக்கப்பட்டது. என் மனைவி இந்தக் காரியத்தை தானே செய்வதாக ஏற்றுக்

கொண்டாள். உண்மையில், அப்பேர்க்கொத்த விஷயங்களில், அவளுக்குக் கொஞ்சம் சாமர்த்தியம் உண்டு. நாங்கள் அவர் கிட்டி வருகிறதைப் பார்த்தோம். அவர் உள்ளே வந்ததும் ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு அதில் உட்கார்ந்தார். "என்ன சுகமான தினம் மிஸ்டர் பர்க்கெல்." "மிகவும் சுகமான தினம் டாக்டர். ஆனால் என் பயிர்கள் இளம்பி யிருப்பதால் கொஞ்சம் மழை பெய்யலாமென்று நம்புகிறேன்." "உம்முடைய கொப்புகளா இளம்பி யிருக்கிறது" என்று என் மனைவி கொல்லென்று சிரித்து கொஞ்சம் வேடிக்கையில் பிராயப் பட்டதற்காக மன்னிக்கும்படி கேட்டுக்கொண்டாள். "பிரியமுள்ள அம்மணி, என் மனப் பூர்வமாய் நான் உங்களை மன்னிக்கிறேன். ஏனெனில் நீர் சொல்லாவிட்டால், நான் அதை ஒரு விளையாட்டாக எண்ணியிருக்க மாட்டேனென்று நான் மறுத்துச் சொல்லுகிறேன்." "ஒருவேளை இல்லையோ, ஐயா" என்று என் மனைவி எங்களைக் கண் அடித்துப் பேசினாள். "ஆனாலும் எத்தனை விளையாட்டுப் பேச்சுக்கள் ஒரு அவுன்ஸ் அளவாகுமென்று நீர் சொல்ல முடியுமென்று நான் தைரியமாகச் சொல்லுவேன்" என்றாள் என் மனைவி. "அம்மணி, நீங்கள் வேடிக்கை அடங்கிய ஒரு புஸ்தகம் இன்று காலையில் வாசித்திருக்க வேண்டும். ஒரு அவுன்ஸ் வேடிக்கை என்பது ஒரு மிகவும் நல்ல வார்த்தை. ஆனாலும் அம்மணி, நான் அதைக் காட்டிலும் அரை அவுன்ஸ் நல்லறிவு இருப்பதைப் பார்க்க விரும்புகிறேன்" என்று பர்க்கெல் பதிலளித்தார். "நீர் பார்க்கக்கூடுமென்று நான் நம்புகிறேன்" என்று என் மனைவி எங்களுடன் புன்சிரிப்புச் சிரித்துக்கொண்டு சொன்னாள். ஆனால் அப்பொழுது சிரித்த சிரிப்புகள் அவளைக் குறித்ததே. மேலும் சொன்னாள்: "ஆனால் நான் சில மனிதர்களைப் பார்த்திருக்கிறேன். கொஞ்சங்கூட புத்தியில்லாத மனிதர்கள் புத்தி யிருப்பவர்கள்போல் காண்பித்துக் கொள்ளுகிறார்கள்." "அப்படியே, புத்தியில்லாமலிருந்தும், புத்திசாலிகளாக எண்ணும் மோட்டிகளை நீர் அறிந்திருக்கலாம், சந்தேகமில்லை" என்று அவளுடைய எதிராளி உரைத்தார். நான் என் மனைவி இந்த விவகாரத்தில் கொஞ்சங்கூட வெற்றி பெறப் போவதில்லை



யென்று, சீக்கிரம் கண்டுகொண்டேன். ஆகையால் நானே அவரை அதிகக் கடுமையான வழியில் கையாளுவதென்று தீர்மானித்தேன். "நுட்பமும் புத்தியும் நன்னடத்தையும் இல்லாவிட்டால் அவை புல்லுக்குச் சமானம். அதுதான் ஒவ்வொரு குணத்திற்கும் உயர்வு கொடுக்கிறது. வித்தையில்லா குடியானவன் குற்றமற்றிருந்தால் அவன் அநேக குற்றங்களோடு கூடிய தத்துவ சாஸ்திரிகளுக்கு மேல். ஏனெனில் இரக்கமில்லாதவனிடத்தில் வீரியமும் மேதாவித்தனமும் இருந்தென்ன பயன்? (போப வெண்பா) "சத்தியமுள்ள மனிதன், பகவத் சிருஷ்டியில் மிகவும் மேன்மையானது" என்றேன். போப்பின் அந்த சகஜமான வெண்பா ஒரு அதிபுத்தியுள்ள அந்த மனிதனிடத்தில் மிகவும் தகாதென்றும், தன்னுடைய உயர்வை தானே குறைத்துக் கொண்டானென்றும், நான் அந்த அபிப்பிராயத்தை எப்பொழுதும் கைக்கொண்டிருக்கிறேன் என்றும் மிஸ்டர் பர்க்கெல் சொன்னார். மேலும், "புஸ்தகங்களுடைய புகழ் வழுவில்லாமையினாலல்ல; ஆனால் அதிலுள்ள சொற்பொழிவின் உயர்வினால். அப்படியே மனிதர்களும் அவர்களுடைய குற்றங் குறைகளினாலன்றி குணத்தின் அதிசயத்தாலே மதிக்கப்பட வேண்டும்."

"ஒருக்கால் நீர் சொல்வது போலுள்ள வக்கிர மனிதர்கள் சிலர் விசேஷக் குணங்களுடனும், சில பலமான தோஷங்கள் சேர்க்கப்பட்டும், இருக்கலாம். ஆனால் என்னுடைய வாழ்நாளில் அனுபவத்தில் நான் அப்பேர்க்கொத்த மனிதன் ஒருவன்கூட இருப்பதாகப் பார்த்ததில்லை. அதன் நேர்விரோதமாக எங்கே புத்தி விலாசமாக இருக்கிறதோ, அங்கே குணாதிசயங்களும் நன்றா யிருக்கிறதை நான் எப்பொழுதும் பார்த்திருக்கிறேன். உண்மையில், இந்த விஷயத்தில் சிருஷ்டியும் நமக்கு சாதகமாகவே யிருக்கிறது. ஏனெனில், ஹிருதயம் கெடுதலா யிருப்பவரிடம், புத்தியும் பலஹீனத்தை அடைந்து விடுகிறது. கெடுதல் செய்ய எண்ணமிருப்பினும், அப்படிச் செய்வதற்கான சக்தியை அவனிடம் குறைத்து விடுகிறது. இந்த ஏற்பாடு மற்றப் பிராணிகளிடத்திலும் பொருந்தும்.

சின்ன புழு ஜாதி ஏமாற்றல், கொடுமை, பயங்காளித் தனம் இவற்றை எப்பொழுதும் உடைத்தாயிருக்கின்றன. ஆனால் பலத்தோடும் பராக்கிரமத்தோடும் கூடியவை பெருந் தன்மையாகவும் தைரியமாகவும் அமரிக்கை யுள்ளவையாகவு மிருக்கின்றன'' என்று அவர் பதிலுரைத்தார்.

“இந்த வர்ணனையைக் கேட்க நன்றாக இருக்கிறது. இருந்தாலும், இப்பொழுதே புத்தியும் ஹிருதயமும் மிகவும் இழிவான விரோத பாவத்தைக் கொண்டிருக்கிற ஒரு மனிதனைக் காண்பிப்பது சுலபம்” என்று சொல்லி என் பார்வையை அவன் பேரில் அசையாமல் செலுத்தினேன். மேலும் குரலை உயர்த்திக்கொண்டு சொன்னேன் :

“நான் ஜாக்கிரதையா யிருக்கிறேனென்ற போலி எண்ணத்தின் மத்தியில அவனைக் கண்டுபிடிக்க இந்தச் சந்தர்ப்ப மேற்பட்டதென்று நான் சந்தோஷப்படுகிறேன். உனக்கு இந்தப் பாக்கெட் புஸ்தகத்தைத் தெரியுமா, ஐயா?” “ஆம் ஐயா, அந்த பாக்கெட் புஸ்தகம் என்னுடையது. நீர் அதைக் கண்டுபிடித்ததில் நான் சந்தோஷமடைகிறேன்.” “இந்தக் கடிதம் உமக்குத் தெரியுமா? கொஞ்சமும் தயங்காதே, மனிதனே, ஆனால் என் முகத்தைத் தீவிரமாய்ப் பார். நான் கேட்கிறேன். இந்தக் கடிதம் உமக்குத் தெரியுமா?” “அந்தக் கடிதமா. ஆம், நான்தான் அந்தக் கடிதத்தை எழுதினேன்” என்று பதில் சொன்னான். “நீ எப்படி இவ்வளவு அயோக்யதனமாய், இவ்வளவு நன்றி யில்லாமல், இந்தக் கடிதத்தை எழுதத் தைரியம் கொண்டாய்?” என்று கேட்டேன். “நீ இபபடி இவ்வளவு இதழ்வாய் இந்தக்கடிதத்தை உடைத்து எரிக்கத் தைரியங்கொண்டாய்?” என்று அவன் இணையில்லாகர்வத்துடன் பதில் சொன்னான். “நான் உங்களையெல்லாம் இதற்காக தூக்குத்தண்டனை விதிக்கச் செய்யக் கூடுமென்று தெரியாதா? நான் செய்யவேண்டியதெல்லாம் அடுத்த விசாரணைக் கோர்ட்டில் நீங்கள் என்னுடைய பாக்கெட் புஸ்தகத்தின் பூட்டை உடைத்ததாய் குற்றம் சாட்டி நான் சத்தியம் செய்யவேண்டியதுதான். உங்கள் எல்லோரையும் உங்கள் வாசற்படியிலேயே தூக்கில்



போட்டுவிடுவார்கள்.” இந்த எதிர்பாராத அவமரியாதையான மிரட்டல் என் கோபத்தை அடக்க முடியாதபடி கிளப்பியது. “நன்றி கெட்ட பதரே, இங்கே விட்டுப் போ. இனிமேல் என் வீட்டை உன்னுடைய இழிவான நடத்தையால் தீண்டாதே. போ, இனிமேல் உன்னை நான் மறுபடி பார்க்கப் போவதில்லை. என் வாயிலினின்றும் போ. உனக்கு நான் கொடுக்க விரும்பிய ஒரே தண்டனை உன்னுடைய திடுக்கென்று கிளப்பப்பட்ட மனச் சாக்ஷியே. அது உன்னைப் போதுமளவு தொந்திரவு செய்யும்” என்று சொல்லி நான் அவனிடத்தில் அவனுடைய பாக்கெட் புஸ்தகத்தை விட்டெறிந்தேன். அவன் அதைப் புன்சிரிப்போடு எடுததுக்கொண்டு மிக அமைதியோடு புஸ்தகத்தின் மூடியை பொருத்திக் கொண்டு அவனுடைய மனத்தில் சந்தேகமிலலாத பெருந்தோரணையோடு எங்களுக்கு மிகவும் ஆச்சரியத்தை உண்டுபண்ணிக்கொண்டு வெளிக் கிளம்பினான். என் மனைவி எதுவும் அவன் கோபத்தை கிளப்பவில்லையே என்றாள். அப்படியே அவனுடைய மோசடியினால் அவன் வெட்கப்பட்டதாகவும் தெரியவில்லையே யென்றும் விசேஷமான கோபத்துடன் சொன்னாள். “என் பிரியே, கெட்ட மனிதர்களுக்கு வெட்கமே கிடையாதென்று நாம் ஆச்சரியப்பட வேண்டியதில்லை. அவர்கள் நன்மை செய்வதில் கண்டுபிடிக்கப்பட்டால் வெட்கப்படுவார்கள். ஆனால் அவர்களுடைய கெட்ட நடத்தைகளில் புகழ்ச்சி யடைவார்கள்.” என்று நான் எங்களிடம் மிகவும அதிகமாக மூட்டப்பட்ட கோபத்தைத் தணிக்கவேண்டிச் சொன்னேன். கட்டுக்கதை சொல்லுகிறது, “குற்றமும் வெட்கமும் முதலில் சிநேகமா யிருந்தார்கள். அவர்கள் செய்யப் புறப்பட்ட பிரயாணத்தில் ஒருவரையொருவர் பிரியாமலிருந்தார்கள். ஆனால் அவர்களுடைய சேர்க்கை சீக்கிரத்தில் ஒருவருக்கொருவர் ஒத்துக்கொள்ளாததாயும், இடையூறாயும் காணப்பட்டது. குற்றம் வெட்கத்திற்கு அடிக்கடி சஞ்சலத்தை உண்டாக்கிற்று. வெட்கம், குற்றம் ரகசியமாய்ச் செய்த புகழ்ச்சியை யெல்லாம் அடிக்கடி வெளிப்படுத்தியது. வெகுநாள் மனஸ்தாபத்தின் பேரில், அவர்கள் கடைசியில் ஒருவரை யொருவர்

எப்பொழுதும் சந்திப்பதில்லை யென்று பிரியத் தீர்மானித்தார்கள். குற்றம் தைரியமாய் தனிமையில் முன் சென்றது. தண்டிப்பவனை முன் சென்றுகொண்டிருந்த விதியைப் பின்பற்றியது. ஆனால் வெட்கம் பயந்த சுபாவமுடையதால், திரும்பிவந்து பிரயாண ஆரம்பத்தில் விட்டு விடப்பட்ட நன்னடத்தையோடு சேர்ந்து கொண்டது. ஆகையால் என் குழந்தைகளே, மனிதர்கள் கொஞ்ச காலம் பாபத்தில் ஈடுபட்டு சென்றபிறகு, வெட்கம், அவர்களைத் துறந்து, மறுபடியும் ஏதாவது கொஞ்சம் மீதியிருக்கும் நற்குணங்களை, முடிந்தால் வழுவ, விசுவாசிக்கத் திரும்புகிறது.

## அத்தியாயம் 16

*என் குடும்பம் சூழ்ச்சியைக் கைக்கொள்ளுகிறது; அது பின்னும் வலுத்த சூழ்ச்சிகளால் மறுக்கப்படுகிறது.*

ஸோபியாவின் எண்ணங்கள் எப்படியிருந்தபோதிலும், மற்றவர்கள் மிஸ்டர் பர்க்கெல்லின் வராமையில் எங்கள் முதலாளியினுடைய சமூகத்தால் சுலபமாய் ஆறுதலடைந்தார்கள். முதலாளியின் வருகை, இப்பொழுது முன்னைவிட அடிக்கடியும் நீடித்ததாகவுமிருந்தது. அவர் ஏற்பாடு செய்திருந்தபடி, என் பெண்களுக்கு பட்டணத்தின் காட்சிகளை பெறச் செய்வதில் ஏமாற்றமடைந்திருந்த போதிலும், எங்களுடைய அடக்கமான வாழ்க்கைக்கு அனுகுணமுள்ள சுலபமான வேடிக்கைகளும், விளையாட்டுகளும் நடைபெற, அவர் வாய்க்கும் சமயங்களி லெல்லாம் ஏற்பாடுகள் செய்துகொண்டிருந்தார்.

அவர் வழக்கமாய் காலையில் வருவார். நானும் என் மகனும் வெளி வேலைகளைக் கவனிக்கப் போய்விடுவோம். அவர் வீட்டில் குடும்பத்தோடு உட்கார்ந்திருந்து, பட்டணத்தின் ஒவ்வொரு பாகத்தையும் அவர் நன்கு அறிந்திருந்ததால், அவற்றை வர்ணித்துக் கொண்டு, அவர்களைக் களிக்கச் செய்வார். நாடக சாலைகளில் சுற்றுப்புறத்தில் வழங்கப்படும் எல்லாக் கொச்சை வார்த்தைகளையும அவர் ஒப்பிப்பார். பிரபலமான விதூஷகர்களின் ரஸமான பேச்சுக்களை யெல்லாம் வேடிக்கைப் புஸ்தகங்களில் சேர்க்கப்படு முன்னரே அவர், ஞாபகத்தில் வைத்திருந்தார். பேசும் நேரம் போக மற்றச் சமயங்களில், என் பெண்களுக்கு, விளையாட்டில், பிக்கட் என்பதைக் கற்றுக் கொடுத்தார். சில சமயங்களில், என் சிறு பையன்களை முஷ்டி யுத்தம் செய்ய விடுவார். அது அந்தப் பையன்களை

கூறு கூறுப்பாக்குமென்றார். ஆனால் அவரை மருமகனை அடையலாமென்ற நம்பிக்கையால் அவருடைய குறைகளெல்லாம் ஒரு மாதிரியாக எங்கள் கண்ணுக்குப் புலப்படவில்லை. என் மனைவி அவரைக் கட்டுப் படுத்த, ஆயிரம் சூழ்ச்சிகள் செய்தாளென்று நான் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். அதைக் கண்ணியமாக உரைத்தால், தன் மகளின் சாமர்த்தியத்தைத் தூக்கிக் காட்ட எவ்வளவு தந்திரங்கள் செய்ய முடியுமோ அவ்வளவும் செய்தாள். டீ குடிக்கும்பொழுது பணியாரங்கள் நறுக்கு முறுக்கென்று இருந்தால் அவை ஒலிவியாவினால் செய்யப்பட்டவையே. கூஸ்பரிமது நன்றாக இறக்கப்பட்டிருந்தால் அவளால் கூஸ்பரிகள் பொறுக்கப்பட்டன. அவளுடைய விரல்கள் ஊறுகாய்களுக்கு ஒரு விசேஷமான பச்சை நிறம் கொடுத்தன. பால் பாயசம் பண்ணுவதில் அவளுடைய அபிப்பிராயம் போல் சாமான்கள் சேர்க்கப்பட்டன. பிறகு அந்த பரிதாபமான ஸ்திரீ, சில சமயங்களில், ஸ்குயரிடம் அவரும் ஒலிவியாவும் அச்சுப் போல் ஒரே அமைப்பு என்று சொல்லி இருவரையும் சேர்ந்து நிற்கச் சொல்லி யார் உயரத்தில் அதிகமென்று பார்ப்பாள். இந்த வகையான தந்திரங்களெல்லாம், அவள் ஒருவராலும் கண்டு பிடிக்க முடியாதென்று நினைத்தாலும், யாவருக்கும் கண்ணாடி போல் புலப்பட்டன. அவை எங்கள் எஜமானுக்கு மிகவும் சந்தோஷத்தை யளித்தன. அவர் தம்முடைய காதலின் அறிகுறிகளைத் தினம தினம் புதிது புதிதாய்க் காண்பித்தார். அவையெல்லாம் மணம் செய்து கொள்ள வேண்டுமென்கிற பேச்சில், இன்னும் கொண்டு வந்து விடாவிட்டாலும், நாங்கள் அதற்கும் இதற்கும் வித்தியாசமில்லை என்று நினைத்தோம். அவருடைய தாமதம சில சமயங்களில் அவருடைய சுபாவமான லஜ்ஜையினாலென்று எண்ணப்பட்டது. சில சமயம் அவருடைய சிற்றப்பனைக் கோபிக்கச் செய்யுமோ என்ற பயத்தினாலிருக்கலாமென்று எண்ணப்பட்டது. எப்படியிருந்தபோதிலும் இதன் பின்னோடு நடந்த ஒரு சம்பவம் அவர் எங்கள் குடும்பத்தில் ஒருவராக வரவேண்டுமென்ற எண்ணம் வைத்திருக்கிறாரென்று சந்தேகமில்லாமல் தெரிவித்தது. என் மனைவி அதை சர்வ நிச்சயமான உறுதி மொழியாகக்கூட எண்ணினாள்.



என் மனைவியும் பெண்களும் அடுத்த வீட்டு பலாம்பரோவின் வீட்டிற்கு மறுதளிப்பிற்காக போயிருந்த பொழுது, அந்தக் குடும்பத்தில் நாட்டுப்புறத்தில் சஞ்சாரம் செய்து, பதினைந்து ஷில்லிங்கு வீதம் படமெடுக்கும ஒருவர் சமீபத்தில் அவர்களுடைய குடும்பத்தின் படங்களை வரைந்ததாகக் கேள்விப்பட்டார்கள். அந்தக் குடும்பத்திற்கும் எங்களுக்கும் வெகு நாளாகவே நாகரிக விஷயங்களில் ஒருவிதமான போட்டியிருந்ததால், அவர்கள் எங்களுக்கு ஒரு அடி முன் வைத்ததில் எங்களுக்குப் பய நடுக்கமுண்டாயிற்று.

நான் என்ன சொல்லியும், நான் மிகவும் சொன்னேன், எங்களுடைய படங்களும் வரையப்பட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. நான் என்ன செய்யக்கூடும்? படம் எழுதுபவரை ஏற்பாடு செய்து படத்தில் உட்காரும் நேர்த்தியால், அவர்களைவிட எங்களுடைய மேலான விதரணைகளைக் காண்பிப்பதென்று தீர்மானித்தோம். அடுத்த வீட்டில் உள்ளவர்கள் ஏழு பேர்கள். அவர்கள் ஏழு ஆரஞ்சுடன் வரையப்பட்டார்கள். அது மிகவும் ஒப்புக்கொள்ளக் கூடிய தோற்றமல்ல. வாழ்க்கையில், பல ரகங்கள் காண்பிக்க வேண்டாமா? அந்த மாதிரி உலகத்தில் வர்ணச் சேர்க்கையும் கிடையாது. நாங்கள் இன்னும் மிகப் பார்வையான வழியில், ஏதாவது இசைக்கப்பட வேண்டுமென்று இஷ்டப்பட்டோம். அநேக யோசனைகளுக்குப் பிற்பாடு கடைசியாக சரித்திரத்தில் வழங்கி வரும் மனிதர்களாக வரையப்பட்டு, எல்லோரும் ஒரு குடும்பத் தொகுதியாக உட்காருகிறதென்று ஒரு தீர்மானத்திற்கு வந்தோம். இது மிகவும் எளிதாயிருக்கும். ஏனெனில் ஒரு பலகையில் எல்லாவற்றையும் சேர்த்து எழுதி விடலாம். அது எவ்வகையிலும் மிகப் பார்வையுள்ளதாக இருக்கும். ஏனெனில் பகுத்தறிவுள்ள எல்லாக் குடும்பங்களும் இப்பொழுது இம்மாதிரி வரையப்படுகின்றன. எங்களை ஒத்த ஒரு சரித்திரக் கூட்டம் உடனே ஞாபகத்திற்கு வாரதினால், நாங்கள் ஒவ்வொருவரும் தனித் தனியான சரித்திர புருஷர்களாக வரையப்படுவதென்று ஒப்புக் கொண்டோம்.

என் மனைவி ரதியாக வரையப்பட வேண்டுமென்று இஷ்டப்பட்டாள். வரைகிறவரை அவளுடைய உடலிலும் தலை மயிரிலும் வைரங்கள் வரைவதில் செட்டு இல்லாமல் இருக்கும்படி கேட்டுக் கொண்டோம். அவளுடைய இரண்டு சின்னக் குழந்தைகளும் அவள் பக்கத்தில் மன்மதக் குழந்தைகளாக வரையப்பட்டார்கள். நான் என்னுடைய கவுனோடும் அரைக் கச்சையோடும் அவளுக்கு விஸ்டோனியன் தர்க்கத்தைப் பற்றி எழுதிய என்னுடைய புஸ்தகங்களைப் பரிசு கொடுப்பது போல் வரையப்பட்டது. ஒலிவியாவைப் புஷ்பங்களடர்ந்த மேட்டில் உட்கார்ந்திருக்கும் அமசான் தேசத்தும் பெண் பிள்ளையாக வரைகிறது. அதற்கு அவளை, தங்கச் சரிகை நிரம்பக் கரையுள்ள பச்சை வெல்வெட்டின் உடுப்பைப்போட்டு, கையில் ஒரு தோல் வார் சாட்டையோடு காண்பிப்பது. ஸோபியாவை, ஒரு ஆட்டு மந்தை மேய்க்கிறவளாக வரைந்து (வரைகிறவர் எவ்வளவு ஆடு விலை கொடுக்காமல் போட முடியுமோ அவ்வளவு ஆட்டுடன் காண்பிப்பது). மோஸஸை ஒரு தொப்பியுடனும் வெள்ளை இறக்கையுடனும் தயாரிப்பது. எங்களுடைய மனோபாவம் ஸ்குயரை வெகுவாகக் களிக்கச் செய்து ஒலிவியாவின் பாதத்தில் மகா அலெக்ஸாண்டர் (Alexander the Great) என்பவரைப் போல் உட்கார்ந்து குடும்பத்தில் ஒருவராக தம்மையும் சேர்த்துக் கொள்ள வேண்டிக் கொண்டார். இது எங்களெல்லோராலும் அவர் எங்கள் குடும்பத்தினராக வரவேண்டும் என்ற இச்சைக்கு அறிகுறியாகக் கருதப்பட்டது. நாங்களும் அவருடைய வேண்டுகோளைத் தள்ள முடியவில்லை. வரைகிறவர் அதன் மேல் வேலை செய்ய ஏற்படுத்தப்பட்டார். அவரும் ஊக்கத்தோடும் சுறுசுறுப்போடும் வேலை செய்ததால் நாலு நாளைக்குக் குறைவாகவே முழுமையும் முடிக்கப்பட்டது. அந்தச் சித்திரம் பெரிதாக யிருந்தது. அவர் வர்ணங்களை குறைத்துப் போடவில்லையென்று ஒப்புக் கொள்ளவேண்டும். அதற்கு என் மனைவி அதிகமாகப் புகழ்ந்தாள். நாங்கள் எல்லோரும் பூராவாக அவருடைய வேலையில் திருப்தியடைந்தோம். ஆனால் அதில் ஒரு துர்ப்பாக்கியமான சம்பவம் எங்கள் ஒருவருக்கும் அந்தப்



படம் முடிகிறவரையில் தோன்றாமல், இப்பொழுது எங்களுக்கு பயத்தை உண்டுபண்ணிற்று. அது வீட்டில் ஒரு பக்கத்திலும் மாட்ட முடியாதபடி அவ்வளவு பெரிதாக இருந்தது. நாங்கள் எல்லோரும் அவ்வளவு அவசியமான விஷயத்தை எப்படிக் கவனிக்காமலிருந்தோம் என்று புலப்படவில்லை. ஆனால் இது நிச்சயமாகச் சொல்லுவேன் நாங்கள் எல்லோரும் மிகவும் கவனமில்லாதிருந்தோம். ஆகையால் இந்தப் படம் எதிர் பாராதபடி எங்களுடைய வீணான தற்புகழ்ச்சியைத் திருப்தி செய்யாமல் மிகவும் மனச்சஞ்சல முண்டாகும்படி அதை சமையல் சுவரின் மேல சாய்த்து வைக்கப்பட்டது. அங்கே துணியை விரித்து சித்திரம் வரையப்பட்டது. அது ஒரு கதவின் வழியாகப் போக இயலாதபடி அவ்வளவு பெரிதாயிருந்தது. இது பக்கத்திலுள்ளவர்களுக்கெல்லாம் கேலிக்கு இடமாயிற்று. ஒருவன் நகர்த்த முடியாதபடி பெரிதாயிருந்த ராபின்ஸன் குரூஸோவின் நீளப் படகுக்குச் சமானமென்றான். மற்றொருவன் அது கண்ணாடி பாட்டிலிலிருக்கும் சுற்றுக் கம்பிபோலிருக்கிறது என்றான். சிலர் அதை எப்படி வெளியே கொண்டுவருவதென்று ஆச்சரியப் பட்டார்கள். ஆனால் இன்னும் சிலர் அது எபபடி உள்ளே நுழைந்ததென்று பிரமித்தார்கள்.

ஆனால் அது சிலரால் இகழப்பட்டபோதிலும், கடைசியாக மிகக் கெட்ட எண்ணங்களை அநேகருக்கு உண்டுபண்ணிற்று. ஸ்குயரின் படம் எங்களுடன் சேர்ந்திருப்பது எங்களுக்குகௌரவமானதால், அது பிறருடைய அசூயையைக் கிளப்பிற்று. மானக்கேடு விளைவிக்கும் வதந்திகள் எங்களைக் குறித்து பரவ ஆரம்பித்தன. எங்களுடைய சத்துருக்கள் எங்களைப்பற்றி என்னசொல்லுகிறார்களென்று சொல்லி சிலர் எங்களுடைய சிநேகிதர் போல் வந்து, எங்களுடைய மனச் சமாதானத்தை இடைவிடாமல் கெடுத்துக் கொண்டிருந்தார்கள். இந்தத் தகவல்களெல்லாம் தகுந்த ஆணவத்தோடு எப்பொழுதும் தவிர்க்கப்பட்டன. ஆனால் கெடுதல் வதந்தி, அதை மறுப்பதினால் எப்பொழுதும் பலமடைகிறது. ஆகையால் நாங்கள் எங்களுடைய சத்துருக்களின் நிந்தையைத்

தவிர்ப்பதற்கு ஒருவருக்கொருவர் இன்னொரு தடவை யோசனையில் ஆழ்ந்தோம். கடைசியாக ஒரு தீர்மானத்திற்கு வந்தோம். ஆனால் அதில் மிகவும் சூசனைகள் கலக்கப் பட்டதால், எனக்கு முழுமையான திருப்தி கொடுக்கவில்லை. அது இம்முறையாகத் தீர்மானிக்கப்பட்டது. எங்களுடைய முக்கிய கருத்து, மிஸ்டர் தார்ன்ஹில்லினுடைய சலுகை எவ்வளவு தூரம் கௌரவமானது என்று கண்டுபிடிக்க வேண்டுமென்பதுதான். என் மனைவி அவருடன் பேச்சுக் கொடுத்து அவருடைய எண்ணத்தை அறிவதாக ஏற்றுக் கொண்டாள். அவரை முதலில் தன்னுடைய மூத்தமகளுக்கு ஒரு புருஷன் தேடுவதில் அவருடைய அபிப்பிராயத்தை கேட்பது போல் பேசுகிறது. இதைப் புகலுவதில், இவ்விஷயத்தில் அவருடைய மனோபாவத்தை வெளியிடச் செய்ய முடியாமல் போனால், பிறகு அவருக்கு எதிராளி இருப்பதாகக்காண்பித்துப் பயப்படச் செய்வதாகத் தீர்மானிக்கப்பட்டது. இந்தக் கடைசி முறைக்கு நான் முதலில் என்னுடைய அங்கீகாரத்தைக் கொடுக்கவில்லை. இந்தச் சமயத்தில் அவருக்குப் போட்டியாகப் போற்றப்படும் மனிதனை, அவர் ஒலிவியாவை தானே ஏற்றுக் கொண்டு அதை தவிர்க்காவிட்டால், ஒலிவியா அந்த மனிதனை விவாகம் செய்து கொள்வதாக எனக்கு மிகவும் உண்மையாக வாக்களித்ததின் பேரில் நான் ஒப்புக்கொண்டேன். இந்தச் சூழ்ச்சி இவ்விதமாக உத்தேசம் பண்ணப்பட்டது. நான் அதை வலிமையாய் எதிர்க்காவிட்டாலும், முழுமையும் ஒப்புக் கொள்ளவில்லை.

அடுத்த தடவை மிஸ்டர் தார்ன்ஹில் எங்களைப் பார்க்க வந்த சமயத்தில், அவர் எதிரில் என் பெண்கள் வராமலிருக்க ஏற்பாடு செய்துகொண்டார்கள். ஏனெனில், அவர்களுடைய தாயார் தன்னுடைய உத்தேசத்தை நடத்துவிக்கத் தருணம் கொடுக்கவே இப்படிச் செய்தார்கள். ஆனால் அவர்கள் அங்கிருந்து எல்லா சம்பாஷணைகளையும் கேட்கக்கூடிய பக்கத்து அறையில் இருந்தார்கள். என் மனைவி சாமர்த்தியமாய், மிஸ் பிளாம்பரோவின் ஒருத்தி மிஸ்டர் ஸ்பாங்கர் என்பவரில் ஒரு நல்ல கணவனை



அடைவாள் · போலிருக்கிறதென்று சொல்லி எங்கள் சமாசாரத்தை ஆரம்பித்தான். இதை ஸ்குயர் ஒப்புக் கொண்டதின்மேல் அவள் "யாரொருவருக்கு மிகுந்த ஐசுவர்யமிருக்கிறதோ, அவர்களுக்கு நல்ல கணவன் கிடைப்பது எப்பொழுதும் நிச்சயம். ஆனால் ஒன்று மில்லாப் பெண்களை தெய்வம்தான் காப்பாற்ற வேண்டும். அழகிருந்தால் என்ன பிரயோஜனம்? சுபகலம் பாராட் டும் இந்தக் காலத்தில், எல்லா நற்குணங்களும், உலகத்தி லுள்ள எல்லா விதமான பொருத்தங்களும இருந்தால் தானென்ன, அவள் எப்படியிருக்கிறா ளென்பதல்ல, அவளிடம் என்ன இருக்கிறதென்றுதான் கூச்சலெல் லாம்" என்று தொடர்ந்து சொன்னாள்.

"அம்மணி, உங்களுடைய அபிப்பிராயத்தின் நியா யத்தையும், அப்படியே அதனுடைய நூதனத்தையும், நான் மிகவும் மெச்சுகிறேன். நான் அரசனாயிருந்தால், இது வேறு விதமாக இருக்கும். அப்பொழுது உண்மை யில் பணமில்லாப் பெண்களுக்கு சேர்த்தியான காலமா யிருக்கும். இங்கே யிருக்கும் நம்முடைய இரண்டு சீமாட்டி களும் முதல் முதலில் கவனிக்கப்படுவார்கள்" என்று அவர் பதில் சொன்னார்.

"ஓஹோ! ஐயா, நீர் தமாஷாகப் பேச சந்தோ ஷிக்கிறீர். ஆனால் நான் ஒரு ராணியாக இருந் தால், அப்பொழுது என் மூத்த மகளுக்குக் கண வனை எங்கே தேடுவது என்று எனக்குத் தெரியும். இப்பொழுது அந்த விஷயத்தைப் பற்றி நீர் என் மனத்தில் ஒரு எண்ணத்தைத் தூண்டிவிட்டதால், மிஸ் டர் தார்ன்ஹில், அவளுக்குத் தகுந்த கணவனை உமக்குத் தெரிந்த யாராவது ஒருவனை நீர் சிபார்சு செய்ய முடியுமா? அவளுக்கு இப்பொழுது வயது பத்தொன்பது; நல்ல வளர்ச்சி; நன்றாகப் படிப்பிக்கப் பட்டிருக்கிறாள்; என் னுடைய வணக்கமுள்ள அபிப்பிராய மென்னவென்றால், அவளுக்கு எந்தக் குணநிசயத்திலும் குறைவுகிடையாது" என்றாள் என் மனைவி.

"அம்மணி, நான் அவளுக்குத் தகுந்த கணவனைப் பொறுக்குவதா யிருந்தால், ஒரு தேவ கன்னிகையை சந்

தோஷப் படுத்தக்கூடிய மனிதனும், கலைகள் ஒவ்வொன்றிலும் தேர்ச்சி யடைந்தவனுமான ஒருவனைத் தேடிப்பிடிப்பேன். அவன் பொருள், ரஸிகத்துவம், சத்தியம், இவ்வளவும் வாய்த்தவனாகவும், ஜாக்கிரதை யுள்ளவனாகவும் இருக்கவேண்டும். அப்பேர்க்கொத்த மனிதன், அமமணி, என்னுடைய அபிப்பிராயத்தில் அவளுக்குத் தகுந்த கணவனாவான்" என்று அவர் பதிலுரைததார். "சரி, ஐயா, உமக்கு அப்பேர்க்கொத்த மனிதனைத் தெரியுமா?" என்று கேட்டாள் அவள். "தெரியாது, அம்மணி, அவளுக்குத் தகுந்த கணவனைக் காண்பது முடியாத விஷயம். ஒரு மனிதன் அவளைத் தன்னுடையதாக வைத்துக்கொள்வதற்கு முடியாத ஒரு மகத்தான ஐசுவரியம். அவள் ஒரு தெய்வம். சத்தியமாக எனக்குத் தோன்றுகிறதைச் சொல்லுகிறேன். அவள் ஒரு தேவ கன்னிகை" என்று அவர் சொன்னார்.

"ஆ! மிஸ்டர் தார்ன்ஹில், நீர் என் இப்படி ஒன்றுமறியாப் பெண்ணை வீணாகப் புகழ்ந்து பேசுகிறீர்? ஆனால் உம்முடைய குத்தகைக்காரர்களில், ஒருவருக்கு அவளை விவாகம் செய்து கொடுப்பதாய் நாங்கள் உத்தேசித்திருக்கிறோம். அவனுடைய தாய் கொஞ்சக் காலத்திற்குமுன் இறந்து போனாள். அவனுக்கு ஒரு காரியஸ்தன் வேண்டியிருக்கிறது. நான் யாரைப்பற்றிச் சொல்லுகிறேனோ அவனை உங்களுக்குத் தெரியும. வேளாளன்—வில்லியம்ஸ்—பெருந்தன்மையுள்ள மனிதன்—மிஸ்டர் தார்ன்ஹில்! அவளுக்கு நல்ல சாப்பாடு போடக்கூடியவன். அவன் அநேக தடவைகளில் அவளைக் கோரியிருக்கிறான். (இதுவும் உண்மைதான்) ஆனால் ஐயா, நாங்கள் ஏற்பாடு செய்திருப்பவனிடத்தில், உங்களுடைய ஆமோதிப்பைக் கோருகிறோம்" என்று முடித்தாள். "எப்படி, அம்மணி, என்னுடைய ஆமோதிப்பா? அந்த மனிதனைப்பற்றிய என்னுடைய ஆமோதிப்பு! ஒரு காலத்திலுமில்லை. என்ன, அவ்வளவு அழகு, குணம், நடத்தையை அந்த வாசனையே தெரியாத ஒரு ஜடத்திற்கா அர்ப்பணம்? என்னை மன்னிக்கவேண்டும். அப்பேர்க்கொத்த அநியாயத்திற்கு நான் எப்பொழுதும் ஒப்புக் கொள்ளமாட்-



டேன். அதற்கு, எனக்குக் காரணங்களுண்டு" என்று பதிலுரைத்தார். "அப்படியே இருக்கட்டும் ஐயா, உமக்குக் காரணங்களிருந்தால் அது வேறொரு விஷயம். ஆனால் அந்தக் காரணங்களைத் தெரிந்துக்கொள்ள விரும்புகிறேன்" என்று டிபோரா சொன்னாள். "மன்னிக்க வேண்டும், அம்மணி, அவை புலப்படுத்த முடியாத அவ்வளவு ஆழத்திலிருக்கின்றன" என்று மார்பில் கையை வைத்துக்கொண்டு சொன்னார். "அவை அங்கேயே புதைத்துவைக்கப் பட்டிருக்கின்றன" என்றார்.

அவன் போன பிற்பாடு, எல்லோரும் சேர்ந்து யோசித்ததில், இந்த நேர்த்தியான அபிப்பிராயங்களால் என்ன புலப்படுத்துகிறதென்று சொல்ல முடியவில்லை. ஒலிவியா மிகவும் உயர்ந்த காதலுக்கு அவை அனுகுணமென்று கருதினாள். ஆனால் நான்மட்டும் அவ்வளவு நம்பிக்கையுடனில்லை. அவை ஆசையை வெகுவாகத் தெரியப்புடுத்தினவே யொழிய, தாம்பத்யத்தை விரும்பினதாகத் தெரியப் படுத்தவில்லை என்று எனக்கு ஏறக்குறைய நிதர்சனமாகப் புலப்பட்டது. ஆனால் அவை எதைக் குறிப்பிட்டபோதிலும், வேளாள வில்லியம்ஸினுடைய வேண்டுகோளை அங்கீகரிப்பதென்று தீர்மானிக்கப் பட்டது. அவன் இந்தப் பக்கத்திற்கு நாங்கள் வந்தது முதற்கொண்டு என் மகளுக்காகத் தன் வேண்டுகோளைச் சமர்ப்பித்துக் கொண்டிருந்தான்.

## அத்தியாயம் 17

*நீடித்துள்ள சுகமான தப்பாசையின் வலிமையைத் தவிர்க்க நற்குணங்களில் ஒன்றினாலும்கூட முடியவில்லை.*

நான் என் குழந்தையின் உண்மையான க்ஷேமத்தைக் கருதினதால், மிஸ்டர் வில்லியம்ஸினுடைய விடா முயற்சி என்னைக் களிப்புறச் செய்தது. அவனோ சௌகரியமான ஸ்திதியுள்ளவன். ஜாக்கிரதையும், நிஜ நட்புமுடையவன். அணைந்துபோன அவனுடைய காதலை மூட்ட, கொஞ்சம் தூண்டுதலிருந்தால் போதுமானது.

இப்படியிருக்க, ஒரு இரண்டு தினங்களில், அவனும் மிஸ்டர் தார்ன்ஹில்லும் எங்கள் வீட்டில் சந்தித்தார்கள். கொஞ்ச நேரம், ஒருவரையொருவர் கோபக் கண்ணோடு ஏற இறங்கப் பார்த்துக்கொண்டார்கள். ஆனால் வில்லியம்ஸ் தன் முதலாளிக்கு குத்தகைப் பாக்கி கொடுக்க வேண்டியதில்லை. ஆகையால் அவருடைய கோபத்தைக் கொஞ்சம்கூட கவனிக்கவில்லை.

ஒலிவியாவைப் பற்றினமட்டில் நாணக் காதலி வேஷம் சரியாகப் போட்டாள். அதை நடிப்பென்று சொல்லுவோமென்றால் அது அவளுடைய சுபாவம். தன் புதிய காதலன்மீது தன்னுடைய கருணையையெல்லாம் பொழிவதுபோல் பாசாங்கு செய்தாள். மிஸ்டர் தார்ன்ஹில் இந்த வித்தியாசத்தினால் மிகவும் மன மிழந்ததாகத் தோன்றினார். உடனே எதையோ யோசிப்பவர் போல், அவர் போக உத்திரவு கேட்டுக் கொண்டார். ஆனால் அவர் எனக்குத் தோன்றியபடி, அவ்வளவு துன்பத்தில் இருந்தால் ஏன் அவர் அப்படி இருக்கவேண்டுமென்று எனக்குப் புலப்படவில்லை.

ஏனெனில், தம்முடைய உண்மைக் காதலை தெரியப் படுத்தி, அவர் எவ்வளவோ சுலபமாய் அந்தத் துன்பத்தை



நீக்கிக் கொள்ளலாமல்லவா? அது அவருடைய சக்தியில் இருந்தது. ஆனால் அவர் எவ்வளவு மனச் சஞ்சலம் அடைந்ததாகத் தோன்றினாலும், ஒலிவியாவின் துன்பம் மிகவும் அதிகமாக இருக்கிறதென்று எளிதில் தெரிந்து கொள்ளலாம். அவளுடைய இரு காதலர்களும், அநேக தடவைகள் சந்தித்தார்கள். ஒவ்வொரு சந்திப்பின் பிறகும், அவள் வழக்கமாக தனியான ஒரு அறைக்குள் போய் அங்கே துக்கத்தில் ஆழ்ந்திருப்பாள். அப்பேர்க்கொத்த நிலைமையில், ஒரு மாலையில், அவள் கொஞ்ச நேரம் போலிக் களிப்பில் இருந்ததின் பிறகு பார்த்தேன். "என் குழந்தாய்! மிஸ்டர் தார்ன்ஹில்லினுடைய அன்பில் நீ வைத்த நம்பிக்கையெல்லாம் ஒரு கனவைப் போலவேயென்று உனக்கு இப்பொழுது தெரியவருகிறது. ஒளிவு மறைவில்லாமல் தெரிவிப்பதால் உன்னைத் தமக்குச் சொந்தமாக்கிக்கொள்ள தம்முடைய வசத்திலிருக்கிறதென்று அவர் அறிந்தபோதிலும், எல்லாவிதத்திலும் அவருக்குக் கீழ்ப்பட்ட ஒருவன் தமக்குப் போட்டியாகவிருக்க அவர் ஏற்றுக்கொள்ளுகிறார்" என்று நான் சொன்னேன். "ஆம் அப்பா, ஆனால் இந்தமாதிரி காலதாமதம் செய்வதற்கு அவருக்குக் காரணங்களிருக்கின்றன. அப்படி இருக்கின்றனவென்று எனக்குத் தெரியும். அவருடைய பார்வையும் பேச்சும், அவருடைய மனத்தின் உண்மையைத் தெரிவிக்கிறது. அதனால் அவர் நிஜமான மதிப்பு என்னிடத்தில் வைத்திருக்கிறாரென்ற நம்பிக்கையை ஊட்டுகிறது. கொஞ்ச காலத்திற்குள் அவருடைய எண்ணத்தின் பெருந்தன்மை புலப்படுமென்று நம்புகிறேன். அப்பொழுது அவரைப்பற்றிய என் அபிப்பிராயம் உங்களுடையதைவிட நியாயமானதென்று நீங்களே உணர்வீர்கள்" என்று ஒலிவியா சொன்னாள். "ஒலிவியா, என் தங்கமே, அவரை ஒரு உறுதிமொழி கூறும்படியான சந்தர்ப்பத்தில் கொண்டுவந்து விடவேண்டி செய்யப்பட்ட ஒவ்வொரு சூழ்ச்சியும் உன்னாலேயே பிரேரேபிக்கப்பட்டுள்ளது. அதற்கு வேண்டிய பிரயத்தனங்களும் உன்னாலேயே செய்யப்பட்டன. அதில் கொஞ்சம்கூட நான் தலையிட்டதாக நீ சொல்லமுடியாது. ஆனால் நீ தகுதியில்லாத இடத்தில் காதல்வைத்து, யதார்த்தமான

அவன் எதிரியை ஏமாற்றுவதற்கு நான் எப்பொழுதும் காரண பூதமாயிருப்பேனென்று நீ நினைத்துக்கொண்டிருக்கக்கூடாது. உன்னைப் பாராட்டுகிறாரென்று நீ நினைத்துக்கொண்டிருக்கிறாயே. அவருடைய மனப்பான்மையைத் தெரிவிக்க எவ்வளவு காலம் வேண்டுமென்று சொல்லுகிறாயோ அதற்கு நான் சம்மதிக்கிறேன். ஆனால் அந்தக் குறித்த காலம் சென்றபின், அவர் அப்பொழுது இந்த விஷயத்தைக் கவனிக்காமலிருந்தால், உண்மையான மிஸ்டர் வில்லியம்ஸினுடைய விடா முயற்சிக்காக அவருக்கு மறுதளிக்க வேண்டுமென்று நான் சந்தேகமின்றி வற்புறுத்துவேன். இதுவரையில், நான் வாழ்நாளில், எந்த நன்னடத்தையைக் கைக்கொண்டிருக்கிறேனோ, அது என்னை இப்படி நடந்துகொள்ள வேண்டுமென்று வற்புறுத்துகிறது. உன்னிடத்தில் நான் தகப்பனென்று வைத்துள்ள பிரியம் என்னுடைய சகஜமான நன்னடத்தையை எப்பொழுதும் வழுவச் செய்யாது. ஆகையால், ஒரு நாளைக் குறிப்பிடு. அதை உனக்கு எவ்வளவு எட்டிப்போட வேண்டுமென்றாலும் போட்டுக்கொள். இதற்கு இடையில் மிஸ்டர் தார்ன்ஹில்லிடம் உன்னை வேறொருவனுக்குக் கொடுப்பதாக உத்தேசம் பண்ணியிருக்கும் சரியான காலத்தைத் தெரியப்படுத்தக் கவனம் செலுத்து. அவர் உன்னை உண்மையில் நேசித்தால், அவருடைய நற்புத்தியே, அவருக்கு உன்னை எப்பொழுதும் இழந்துவிடாமலிருக்க ஒரே ஒரு வழிதான் உண்டு என்று உடனே எடுத்துக்காட்டும்'' என்று நான் முடித்தேன். இந்த உடன்பாட்டை அவள் முழுமையும் சரி என்று நினைக்காமலிருக்க முடியாததால், உடனே அதை ஏற்றுக் கொண்டாள். மற்றவர் பிறகும் கவனியாமல் போனால், அவள் மிஸ்டர் வில்லியம்ஸை மணம் செய்து கொள்வதாக தம்முடைய மிகவும் ஊர்ஜிதமான வாக்குத்தத்தத்தை மறுபடியும் கொடுத்தாள்.

அடுத்த சந்தர்ப்பத்தில், மிஸ்டர் தார்ன்ஹில்லின் முன்னிலையிலேயே, அடுத்த மாதம் அதே தினத்தில் அவருடைய எதிராளியோடு ஒலிவியாவின் ருது சாந்திக் கலியாண முகூர்த்தம் வைக்கப்பட்டது. அப்பேர்க்



கொத்த சுறுசுறுப்பான காரியங்கள் மிஸ்டர் தார்ன்ஹில்லின் கவலையை இரட்டித்ததாகத் தோன்றியது. ஆனால் ஒலிவியா உண்மையில் எப்படி அதை ஏற்றுக் கொண்டாள் என்ற விஷயத்தில் எனக்குக் கொஞ்சம் மனச்சஞ்சலம் உண்டாயிற்று. அவளுடைய சுயநலத்திற்கும் காதலுக்கும் விரோதமாய் ஏற்பட்டுள்ள இந்த மனச்சஞ்சலத்தில் அவளுடைய சுறுசுறுப்பு அவளை விட்டு அகன்றது. தனிமையாயிருக்க ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் வேண்டினாள். அவற்றைக் கண்ணீர் வடிப்பதில் கழித்தாள். ஒரு வாரம் சென்றது. ஆனால் மிஸ்டர் தார்ன்ஹில் முகூர்த்தத்தை நிறுத்த ஒரு பிரயத்தனமும் செய்யவில்லை. அடுத்த வாரமும் அவர் விடா முயற்சியாயிருந்தார். ஆனால் அவருடைய எண்ணங்களை வெளிவிடவில்லை. மூன்றாம் வாரம் அவர் எங்கள் வீட்டிற்கு வருவதை முழுமையும் விட்டுவிட்டார். நான் நினைத்தது போல் என் மகள் எவ்விதமான கவலையையும் கொள்ளாமல், அவள் யோசனையில் ஆழ்ந்த ஒரு அமைதியில் இருந்தாள். அதை நான் ஒய்வினாலென்று எண்ணினேன். என்னைப்பற்றிய மட்டில், நான் உண்மையில் என் குழந்தைக்கு எப்பொழுதும் அன்ன வஸ்திரத்திற்குக் குறைவில்லாமலும், வாழ்நாளை எப்பொழுதும் போல் அமைதியாகக் கழிக்க ஒரு ஏற்பாடாகிறதென்று நினைத்து மிகவும் சந்தோஷப்பட்டேன். வெளி டாம்பீகத்திற்குப் பதிலாக, நிஜ சுகத்தை விரும்பியதற்காக, நான் அவளுடைய மன உறுதியை அடிக்கடி கொண்டாடினேன்.

அவளுடைய ருது சாந்தி கலியாணத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்ட நாளிலிருந்து நாலு நாட்களுக்குள்ளேயே, என்னுடைய சிறு பான்மையான குடும்பம் இரவின் மனோகரமான கணப்பைச் சுற்றி உட்கார்ந்துகொண்டு, பழங் கதைகளெல்லாம் சொல்லிக் கொண்டும், பின் வருவனவற்றிற்கு ஏற்பாடு செய்துகொண்டிருந்தோம். ஆயிரம் ஏற்பாடுகளை யோசிப்பதில் ஆழ்ந்திருந்தோம். அதில் ஏதாவது முட்டாள்தனமென்று புலப்பட்டால் அதைக் கண்டு நகைத்தோம். "நல்லது மோஸஸ் நம்முடைய குடும்பத்தில் சீக்கிரத்தில் ஒரு விவாகம் நடக்கப்

போகிறது. காரியங்களைப்பற்றியும் பொது விஷயங்களைப் பற்றியும் உன்னுடைய அபிப்பிராயமென்ன?" என்று நான் கேட்டேன். "அப்பா, என் அபிப்பிராயமென்னவென்றால்: எல்லா சங்கதிகளும் மிகவும் நன்றாகவே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இப்பொழுதுதான் நான் நினைத்துக் கொண்டிருந்தேன், தமக்கை ஒலிவியா வேளாள வில்லியம்ஸுக்கு விவாகமானவுடன், நாம் ஒன்றும் கொடுக்காமலே, ஸிடார் ஆலையும், பாகு காய்ச்சும் கொப்பரையையும் கடன் வாங்கிக் கொள்ளலாம் என்று." "மோஸஸ், அதை அப்படியே செய்யலாம். நம்முடைய உற்சாகத்தைக் கிளப்ப 'மரணமும் நம்முடைய சீமாட்டியும்' என்கிற பாட்டை அவன் நமக்குப் பாடுவான்" என்றேன். "அவன் நம்முடைய டிக்குக்கு அதைப் பாடம் கற்றுக் கொடுத்திருக்கிறான். அவன் ஏறக்குறைய சரியாகவே அதைப் பாடுவான்" என்று மோஸஸ் சொன்னான். "அவன் அப்படிச் செய்கிறானா? அப்படியானால் நாம் கேட்போம். பையன் டிக் எங்கே? அவன் அதைத் தைரியமாய்ப் பாடட்டும்" என்று சொன்னேன். "என் சகோதரன் டிக் இப்பொழுதான் அக்காள் லிவியுடன் வெளியே போனான். ஆனால மிஸ்டர் வில்லியம்ஸ் எனக்கு இரண்டு பாட்டுக்கள் கற்றுக்கொடுத்திருக்கிறார். நான் அதை உங்களுக்காகப் பாடுகிறேன். அப்பா எந்தப் பாட்டை நீங்கள் பாடச் சொல்லுகிறீர்கள்? 'சாகும் அன்னப்பக்ஷி'யா, அல்லது 'பைத்தியம் பிடித்த நாயின் மரணத்தைப்பற்றிய புலம்ப'லா," என்று என்னுடைய கடைசிக் குழந்தை பில் கேட்டான். "புலம்பலே, குழந்தாய் சந்தேகமில்லாமலே," என்று சொன்னேன். "நான் அதை இன்னும் கேட்டதில்லை, டிபோரா, என் பிராணப்பிரியே, உனக்குத் தெரியும. துக்கப் பாட்டுக்கள் நெஞ்சை அடைக்கும். நம்முடைய சந்தோஷத்தை நிலைநிறுத்துவதற்குச் சிறந்த கூஸ்பரி மது ஒரு குப்பி கொண்டுவா. நான் எல்லாவிதமான புலம்பல்களையெல்லாம் சமீபத்தில் கேட்டுக் கேட்டு, கண்ணீர் வடித்து, இப்பொழுது சுறுசுறுப்புக் கொடுக்கும் பானமில்லாமல் இது என்னை அமுக்கிவிடும். ஸோபி, என் அன்பே, உன்னுடைய பிடிலை எடுத்துக் கொண்டு பையனோடுகூடச் சேர்ந்து கொஞ்சம் வாசி.



புலம்பலைப் பில் பாடினான்.

"ஒரு மிகவும் நல்ல பையன் பில், நான் சத்தியமாய்ச் சொல்லுகிறேன். புலம்பல் நிஜமாகவே மிகவும் சோகமாகவே யிருந்தது. வாருங்கள், என் குழந்தைகாள், இந்த பானம, பில்லினுடைய சௌக்கியத்திற்காக, அவன் ஒரு நாள் பிஷப் பதவிக்கு வருவானாக." "மனப்பூர்வமாய் நானும் ஆமோதிக்கிறேன்" என்றாள் என் மனைவி. அவன் பாடுவதுபோல் அவ்வளவு நன்றாகப் பிரசங்கம் செய்தால் அவனைப்பற்றி எனக்குச் சந்தேகமில்லை. அவன் தாய் வழியில் எல்லோரும் விசேஷமாய் நன்றாய்ப்பாடுவார்கள். எங்கள் ஊர்களில் ஒரு வழக்கமான வார்த்தை என்னவென்றால், பௌன் கின்ஸாப் குடும்பத்தினர் நடக்கும் பொழுது நேர் பார்த்து நடவார்கள். ஹக்கின்ஸ் குடும்பத்தினர் ஒரு மெழுகுவர்த்தியை அணைக்க முடியாது. க்ரோகிராம குடும்பத்தில் பாடத்தெரியாதவர் கிடையாது. மார்ஜோராம்ஸ்களில் கதை சொல்லத் தெரியாதவர்கள் கிடையாது" என்றாள் என் மனைவி. "என்ன இருந்த போதிலும, சாதாரணமாக ஒரே வரியில் நம்மைப் பிரமிக்கச் செய்கிறவைகளை விடவும், மிகவும் நேர்த்தியான தற்கால செய்யுட்களை விடவும், மிகவும் பச்சையான நாட்டுப் பாடல்கள் என்னை சந்தோஷிப்பிக்கின்றன. இவற்றை நாம் வெறுக்கிறோம். அதே சமயத்தில் அதைப் புகழவும் செய்கிறோம். மோஸஸ் உன் சகோதரனுக்குப் பானத்தைக் கொடு. இந்தப் புலம்பல்களைக் கவனம் செய்யும் கவிதைகளின் முக்கிய தோஷமென்னவென்றால், ஊக்கமுள்ள ஜனங்களுக்கு மிகவும் சொற்பமான மனத்துன்பம் விளைவிக்கும் துக்கத்திற்கு, அவர்கள் பெருமூச்சு விட்டு வெகுவாக சோகம் கொள்வார்கள். ஒரு சீமாட்டி தன்னுடைய போர்த்துணியையோ, விசிறியையோ அல்லது அவள் சீராட்டும் நாயையோ இழந்துவிட்டால், இதற்காக மூடர்களான கவிஞர்கள், அவள் வீட்டிற்குப் போய் அந்த கஷ்டத்தைக் கவியாகப் பாடுகிறார்கள்" என்று நான் சொன்னேன்.

"உயர்ந்த செய்யுட்களில் அந்த மனோபாவமிருக்கலாம்" என்று மோஸஸ் சொன்னான். "ஆனால் நாம்

கேட்கும் ரேன்லா பாட்டுக்கள் எல்லாம் நடைமுறையிலுள்ள விஷயங்களே. அவை யெல்லாம் ஒரே அச்சில் வார்க்கப்பட்டவை போலிருக்கின்றன. காலின் என்பவன், டாலி என்பவளை சந்திக்கிறான். அவர்கள் இருவரும் ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அவன் அவளுக்கு தலை மயிரில் வைத்துக்கொள்ள ஒரு சாமான் சந்தையில் வாங்கிக் கொடுத்தான். அவள் அவனுக்கு ஒரு பூச்செண்டு கொடுத்தாள். அதன் பிறகு அவர்கள் சேர்ந்து கோவிலுக்குப் போகிறார்கள். அங்கே அவர்கள் சிறிய கன்னிகைகளும் பையன்களும் எவ்வளவு சீக்கிரமாய் செய்து கொள்ள முடியுமோ அப்படி மணம் செய்துகொள்ளவேண்டுமென்று நல்ல புத்திமதி சொல்லப் பட்டார்கள்." "மிகவும் நல்ல புத்திமதியே" என்றேன் நான். "அந்த இடத்தில்போல் இவ்வுலகில் மற்ற எந்த இடத்திலும் புத்திமதி அவ்வளவு பொருத்தமாய்க் கொடுக்க முடியாதென்று நான் கேள்விப்படுகிறேன். ஏனென்றால் அது நம்மை விவாகம் செய்ய வற்புறுத்துவதோடு, அது ஒரு மனைவியையும் தேடிக்கொடுக்கிறது. நிச்சயமாய் என் குழந்தாய், அது ஒரு மிகவும் சிறந்த வியாபாரஸ்தலமாயிருக்க வேண்டும். ஏனெனில் நமக்கு வேண்டுவதென்ன வென்று சொல்லி அத்துடன் வேண்டியவற்றையும் அளிக்கிறது."

"ஆம், ஐயா, என்று மோஸஸ் சொன்னான்." எனக்குத் தெரிந்தவரையில், மனைவிகள் விற்கப்படும் அப்பேர்க்கொத்த சந்தைகள் ஐரோப்பாவில் இரண்டு உண்டு. ரேன்லா, இங்கிலாந்து தேசத்தில்; போண்டாரபியா, ஸ்பெயின் தேசத்தில். ஸ்பெயின் தேசத்தில் சந்தை வருஷத்திற் கொருதரம். ஆனால் நம்முடைய இங்கிலாந்திலோ, மனைவிகள் ஒவ்வொரு இரவிலும் விற்கப்படுவார்கள்." "நீ சொல்லுவது சரி, என் குழந்தாய்" என்று அவன் தாயார் சொன்னாள். "புராதன இங்கிலாந்துதான் இந்த உலகத்தில் புருஷர்களுக்கு மனைவி கிடைக்கக்கூடிய ஒரே ஒரு நாடாக இருக்கிறது." "அப்படியே கணவர்களை மேய்க்கிற மனைவிகளும்" என்று நான் குறுக்கே சொன்னேன். "வெளியூரில் இது ஒரு பழமொழி. சமுத்திரத்



தின் வழியே (இங்கிலாந்து தீபகற்பத்திற்கு) ஒரு பாலம் கட்டப்பட்டால், (ஐரோப்பா) கண்டத்திலுள்ள சீமாட்டிகளெல்லாம் நம்மிடமிருந்து கற்றுக்கொள்ள வருவார்கள். ஏனெனில் ஐரோப்பாவில் நம்முடைய நாட்டில்போல் அப்பேர்க்கொத்த மனைவிகள் கிடையாது. ஆனால் நாம் இன்னொரு குப்பி மது சாப்பிடுவோம், என் பிராணநாயகீ, டிபோரா. ஏ, மோஸஸ்! ஒரு நல்ல பாட்டுப் பாடு. நமக்கு இப்படி சமாதானம், ஆரோக்கியம், வேண்டிய அளவு பொருள் முதலியவற்றை அளித்த தெய்வத்திற்கு நாம் எவ்வளவு நன்றியுள்ளவர்களாக இருக்கக் கூடாது! நான் எல்லாப் பெரிய அரசனை விட இப்பொழுது சுகசாலியாக இருக்கிறதாகக் கருதுகிறேன்." அவனுக்கு இப்பேர்க்கொத்த மடப்பள்ளி அரவமும், இந்தமாதிரி களிக்கும் முகங்களும் ஏது? ஆம், டிபோரா, நாம் இப்பொழுது வயோதிகர்களாயிருக்கின்றோம். ஆனால் நம்முடைய வாழ்நாளின் அஸ்தமன சமயத்தில், சுகமாகவேயிருப்போம். நாம் அழுக்கில்லாத வம்ச பரம்பரையிலிருந்து உதித்தோம். நமக்குப் பிற்காலத்தில் நல்ல ஒழுக்கமுள்ள சந்ததிகளின் தொகுதியை நாம் பின்பற்றச் செய்வோம். நம்முடைய ஜீவ தசை வரையிலும், அவர்கள் நமக்கு ஆதரவாயிருப்பார்கள். நமக்கு இங்கே சந்தோஷத்தை ஊட்டுவார்கள். நமக்குப் பிற்காலம் அவர்கள் நம்முடைய கௌரவத்தை அழுக்குப்படாமல் அவர்களுடைய சந்ததிகளுக்குக் கையொப்பம் செய்வார்கள். என பிள்ளாய் இங்கே வா. நாங்கள் உன் பாட்டிற்குக் காத்துக்கொண்டிருக்கிறோம். நாம் ஒரு கோஷ்டியாகச் செய்து கொள்வோம். ஆனால் என் செல்வ ஒலிவியா எங்கே? கோஷ்டி கானத்தில் அந்தச் சின்ன அப்ஸரஸின் குரல் எப்பொழுதும் மிக இனிமையானது." நான் பேசிக்கொண்டிருக்கும் பொழுது டிக் ஓட்டமாய் உள்ளே ஓடிவந்தான். "ஏ அப்பா, அப்பா! அவள் நம்மிடமிருந்து போய் விட்டாள். என் சகோதரி லிவி, நம்மிடமிருந்து இனி வாராமல் போய்விட்டாள்." "போய் விட்டாளா, குழந்தாய்!" "ஆம், அவள் இரண்டு கனவான்களுடன் ஒரு தபால் கோச் வண்டியில் போய்விட்டாள். அதில் ஒருவர் அவளை முத்தமிட்டார். அவர்

அவளுக்காகத் தம் உயிரைக் கொடுப்பேனென்று சொன்னார். அவள் மிகவும் அழுதாள். திரும்பி வர இச்சைப் பட்டாள். ஆனால் அவர் அவளை மறுபடியும் சமாதானப் படுத்தினார். அவள் அந்த வண்டிக்குள் போய்ச் சொன்னாள்: "ஐயோ பரிதவிக்கத் தகுந்த என் தந்தை நான் கெட்டுப்போய் விட்டேனென்றால் என்னபண்ணுவார்?" "இங்கே வாருங்கள், என் குழந்தைகளே, நீங்கள் எங்கேயாவது போய்க் கஷ்டப்படுங்கள். ஏனெனில், இனிமேல், நாம் ஒரு மணி நேரம் கூடச் சகிக்க முடியாது. ஐயோ, தெய்வத்தின் அகாதியான உக்கிரம் அவன் பேரிலும் அவனைச்சேர்ந்தவர்கள் பேரிலும் வந்து இறங்கட்டும். இப்படியா என் குழந்தையைத் திருடிக்கொண்டுபோவது? நிச்சயமாய் அது செய்யும். நான் ஸ்வர்க்கத்திற்கு தயார் பண்ணிக்கொண்டிருந்த என்னுடைய மதுரமான ஒன்றுமறியாத குழந்தையை எடுத்துக்கொண்டுபோனால், என்ன சத்தியம் என்னுடைய குழந்தையிடத்திலிருந்தது? ஆனால் நமக்கு இவ்வுலகத்தின் கண் எல்லா சுகமும இத்தோடு போய்விட்டது. போங்கள், என் குழந்தைகாள் போங்கள். கஷ்டப்படுங்கள். அபக்யாதி அடையுங்கள். என் மனது உள்ளே ஒடிந்து விட்டது" என்று கத்தினேன். "அப்பா இதுதானா உம்முடைய பொறுமை? என்றான் மோளன். "பொறுமை, குழந்தை, ஆம், எனக்குப் பொறுமை யிருக்கிறது என்று அவன் பார்க்கப்போகிறான். என்னுடைய துப்பாக்கிகளைக் கொண்டுவா—நான் அந்த மோசக்காரனை தூக்கிக் கொண்டு போவேன். அவன் இவ்வுலகில் எங்கிருந்தாலும் சரி, நான் அவனைத தூக்கிக்கொண்டு தேடுவேன். நான் கிழவன், ஆனாலும் நான் அவனை இன்னமும் கொட்டககூடுமென்று அவன் அறிவான்—அயோக்கியன்—மோசக்கார அயோக்கியன்—இதற்குள் நான் என்னுடைய துப்பாக்கிகளிடம் போய்ச் சேர்ந்தேன். அப்பொழுது பரிதாபமான என் மனைவி—அவளுக்கு என்னவ்வளவு கோபம் வரவில்லை—

என்னைத் தன் கைகளினால் பிடித்துக் கொண்டாள். "என்னுடைய மிகப் பிரியமுள்ள கணவரே, என் மிக்க



பிரியமுள்ள கணவரே" உம்முடைய வயதான கைகளுக்கு இப்பொழுது பைபிள் ஒன்றுதான் சரியான ஆயுதம். அதைத் திறந்து, என் அன்பே-நம்முடைய சோகத்தை அடக்கும் முறையில் அதிலிருந்து வாசியும். அவனோ நம்மைக் கொடூரமாய் மோசம் செய்து விட்டான்." என் பையன் உடனே சொன்னான்: "அப்படியேதான், ஐயா, உங்கள் கோபமோ மிகவும் கடூரமாயிருக்கிறது. உங்களுக்குத தகுந்ததல்ல. நீங்கள் என் தாயாருக்கு ஆதரவு சொல்ல வேண்டியவர்களா யிருந்தும், அவளுடைய துன்பத்தை அதிகரிக்கச் செய்கிறீர்கள். உங்கள் பெரும் சத்துருவை இப்படி சபிக்கிறது, உங்களுக்கும் உங்களுடைய சாத்வீக உத்தியோகத்திற்கும தகுதி யல்ல. அவன் அயோக்கியனாயிருந்த போதிலும் நீங்கள் அவனை சபித்திருக்கக்கூடாது." "அவனை நான் சபிக்கவில்லையே நான் சபித்தேனா?" "உண்மையிலே ஐயா, நீங்கள் சபித்தீர்கள்." "அப்படியானால் தெய்வம என்னையும் அவனையும் மன்னிக்க வேண்டும். என் பிள்ளாய், இப்பொழுது தான் தெரிகிறது. நம்முடைய சத்துருவை ஆசீர்வதிக்க வேண்டுமென்று நமக்கு முதலில் போதித்தவர் மானுஷீகக் கருணைக்கும் மேற்பட்டவர்.

அவர் நமக்குச் செய்திருக்கும் நன்மைக் கெல்லாம் அவருடைய திருநாமத்தைப் போற்றுவோம். அப்படி எவற்றை நம்மிடமிருந்து அவர் எடுத்துக் கொண்டாரோ, அதற்கும் அப்படியே போற்றுவோம். ஆனால் அது அல்ல—எவ்வளவோ வருஷங்களாய் கண்ணீர் விடாத இந்த கிழட்டுக் கண்களி லிருந்து கண்ணீர் வடிக்கச் செய்யும் துக்கம் சிறியதல்ல. என் குழந்தை-என்னுடைய செல்வத்தை வீணாக்குகிற தென்றால், அவனுக்கு மனக் குழப்பம்—தெய்வமே என்னை மன்னிக்கவும். நான் என்ன சொல்லப் புகுந்தேன்—நீங்கள் எல்லாம் அறிவீர்கள்—என் அன்பே—எவ்வளவு நன்மையா யிருந்தாள்—இந்தக் கெட்ட நேரம் வரையில், அவளுடைய கவனமெல்லாம் நம்மைக் களிக்கச் செய்வதிலேயே. அவள் இறந்து போயிருக்கக் கூடாதா! ஆனால் அவள் போய் விட்டாள்—நம்முடைய குடும்பத்தின் கௌரவம் நீண்

டப்பட்டது. நான் இந்த உலகத்தை விட்டு வேறு உலகங்களில் சுகத்தைத தேடவேண்டும். ஆனால் என் குழந்தாய், நீ அவர்கள் போவதைப் பார்த்தாயா? ஒருவேளை அவன் அவளைப் பலவந்தமாகக் கூட்டிப் போனானோ? அவன் அவளைப் பலவந்தப்படுத்தியிருந்தால் அவள் இன்னமும் சுத்தமாயிருக்கலாம். "ஆஹா, இல்லை ஐயா, அவர் அவளுக்கு முத்தம் மட்டும் கொடுத்தார். அவளைத் தம்முடைய தேவதை என்று அழைத்தார். அவள் மிகவும் அழுதாள். அவருடைய கரத்தில் சாய்ந்து கொண்டாள். அவர்கள் வெகு வேகமாக ஓட்டிக் கொண்டு போனார்கள்" என்றான் என் குழந்தை. "அவள் ஒரு நன்றி கெட்ட ஜென்மம்" என்றாள் என் மனைவி. துக்கத்தினால் அவளால் பேசக் கூட முடியவில்லை. "நம்மை இப்படியா நடத்துவது? அவள் தன்னுடைய காதலில் கொஞ்சம் கூட கட்டுப்பாடு எப்பொழுதும் செலுத்தியதில்லை. இந்தக் கெட்ட தட்டுவாணி, தன்னுடைய பெற்றோர்களை இழிவாகவிட்டு விட்டுப் போய் விட்டாள். அதற்கு ஒரு முகாந்திரமுமில்லை. இப்படி இந்த நரை கிழத்தை உயிர் துறக்கச் செய்வதா? நானும் சீக்கிரத்தில் அப்படியே போக வேண்டியது தான்" இந்த மாதிரி எங்களுடைய நிஜமான துர்ப்பாக்கியத்தில், முதல் இரவு கொடுமையாய் குற்றம் சாட்டுவதிலும், அடிபபடையில்லா மனம் நிம்மதியினாலும், அதிகப் பேச்சினாலும், கழிக்கப்பட்டது. என்ன இருந்த போதிலும் எங்களை மோசம் செய்தவனை எங்கிருந்தாலும் கண்டு பிடித்து அவனுடைய இழிவுத் தன்மையைச் சுட்டிக் காட்டி, நிந்திப்பதென்று தீர்மானித்தேன். மறுநாள் காலை உண்டியில் எங்களுடைய நிராகரிக்கப்பட்ட குழந்தை வழக்கம் போல் இல்லாமலிருந்ததால், பரிதவித்தோம். அவள் எங்களெல்லோருக்கும் ஆண்மையையும் உற்சாகத்தையும் உண்டாக்குவது வழக்கம். முன் போல் என் மனைவி அவளைத் தூஷிப்பதால் தன் மனதைச் சாந்தப்படுத்த முயன்றாள். "நம்முடைய குடும்பத்தில் மிகவும் நிந்திக்கத் தக்க வழு, இனிமேல் இந்தக் கபடில்லாத வீட்டிற்குள் புகுந்து நம்முடைய புகழைக் கெடுக்கவேண்டாம். அவளை நான் என் பெண் என்று இனிமேல் கூப்பிடமாட்டேன்; முடியாது; அந்தத் தட்டுவாணி அவளை இழுத்துக்கொண்டு



போன அயோக்கியனோடு இருக்கட்டும். அவள் நமக்கு அவமானத்தைக் கொண்டுவரலாம். ஆனால் அவள் இனிமேல் நம்மை ஏமாற்ற முடியாது" என்று என் மனைவி கதறினாள்.

"மனைவியே, அப்படிக் கடினமாகப் பேசாதே. அவளுடைய குற்றத்தை நிராகரிப்பதில் நான் உன்னைப்போல் அவ்வளவு அதிகமாகவேதான். இருந்தாலும், இந்த வீடும், இந்த மனதும் மனமாறுதலடைந்து, பரிதாபமாய்த் திரும்பும் பாபியை, எப்பொழுதும் ஏற்றுக் கொள்வதற்குத் திறந்தேயிருக்கும். அவளுடைய தப்புவழியிலிருந்து எவ்வளவு சீக்கிரமாய் திரும்புவாளோ, அவ்வளவுக் கவ்வளவு அதிகமாக வரவேற்றுக் கொள்ளப்படுவாள். முதல் தடவையில் மிகத் தேர்ச்சியுள்ளவர்களும் தவறக் கூடும். மனிதச் சூழ்ச்சி மனதை மாறுபடச் செய்யலாம். புதுமை தன்னுடைய லாவண்யத்தை அதிகரித்துக் காட்டக்கூடும். முதல்குற்றம் கபடில்லாமையினால் சம்பவிக்கிறது. அதற்கு மேல், மற்ற ஒவ்வொன்றும் குற்றத்தினால் சம்பவிக்கின்றன. ஆம், அந்த நிராகரிக்கப்பட்ட ஜீவனுக்கு பதினாயிரம் துர்நடத்தையால் பீடிக்கப்பட்ட போதிலும், இந்த மனத்திலும் இந்த வீட்டிலும் வரவேற்பு உண்டு. நான் இன்னமும் அவளுடைய மதுரமான பேச்சைக் கேட்பேன். அவளுடைய மனதில் குற்றத்திலிருந்து மாறுதலிருந்தால், அவளை இன்னமும் என் மார்பில் அணைத்துக் கொள்ளுவேன். என் பிள்ளாய், கொண்டுவா இங்கே என் பைபிளையும், என் தடியையும். எங்கேயிருந்தாலும் அவளை நான் பின்தொடர்வேன். அவளை நான் அவமானத்திலிருந்து காப்பாற்ற முடியா விட்டாலும் கெட்ட நடவடிக்கையை இனிமேல் செய்யாமல் தவிர்க்கலாம்,

## அத்தியாயம் 18

*கெட்டுப் போன குழந்தையை நன்னடத்தைக்குத் திருப்ப ஒரு தகப்பனாரின் பிரயாணம்.*

என் குழந்தை தன் சகோதரியை தபால் வண்டியில் ஏற்றி விட்ட சீமானின் ரூபத்தை விஸ்தரிக்க முடியா விட்டாலும், என்னுடைய சந்தேகங்கள் முழுமையும் எங்களுடைய வாலிப முதலாளியின் பேரில்தான் விழுந்தன. அப்பேர்ப்பட்ட சூழ்ச்சிகளுக்கு அவருடைய நடவடிக்கை ஈடுபட்டது என்று மிகவும் நன்றாகத் தெரிந்த விஷயம். ஆகையால் நான் தார்ன்ஹில்லின் அரண்மனைக்கு என்னுடைய நடையைச் செலுத்தினேன். அவரை நிந்தித்து, முடியுமானால், என் பெண்ணைத் திரும்பக் கொண்டு வரலாமென்று போனேன். அவருடைய இடத்தை நான் அடைவதற்குள் என்னுடைய கோவிலின் நபர்களில் ஒருவர் என்னைச் சந்தித்தார். அவர் ஒரு தபால் வண்டியில் என் பெண்ணைப்போல் தோன்றிய ஒரு சீமாட்டியைப் பார்த்ததாகவும், அவளுடன் ஒரு கனவான் போய்க் கொண்டிருந்ததாகவும், அவர்கள் மிகவும் வேகமாய் ஓட்டிக் கொண்டு போனதாகவும் சொன்னார். அந்தக் கனவானுடைய தோற்றத்தை எனக்கு அவர் சொன்னதிலிருந்து, அவர் மிஸ்டர் பர்ச்செல்லாயிருக்க வேண்டுமென்று நான் ஊகிக்க வேண்டியதாயிருந்தது. இந்தத் தகவல் எனக்கு எவ்விதத்திலும் திருப்தி கொடுக்கவில்லை. ஆகையால் நான் வாலிப ஸ்குயர் வீட்டிற்குச் சென்றேன். அப்பொழுது அதிகாலையாயிருந்தபோதிலும், அவரை உடனே பார்க்க வேண்டுமென்று வற்புறுத்தினேன். அவர் உடனே சகஜமான நடையில் மிகவும் பழக்கப்பட்ட மாதிரியில் என்னைச் சந்தித்தார். என்னுடைய பெண் ஒரு புருஷனோடு ஓடிவிட்டதைக் கேட்க முழுமையும் ஆச்சரியப் படுபவர்போலிருந்தார். அந்த விஷயத்தைப்பற்றி தமக்கு



சத்தமாய் ஒன்றும் தெரியாதென்று தம் ஆணை மேல்
சொன்னார். ஆகையால் நான் முன் கொண்டிருந்த
சந்தேகத்தை இப்பொழுது கண்டித்து, அதை மிஸ்டர்
பர்ச்செல்லின்மீது மட்டும் திருப்பினேன். அப்பொழுது
அவளுடன் அவன் கடைசி காலத்தில் அநேக தனிப்பட்ட
சம்பாஷணைகள் நடத்தியதை நான் ஞாபகப்படுத்திக்
கொண்டேன். ஆனால் இன்னொரு சாக்ஷி கிடைத்ததில்,
அவனுடைய மோசத்தைச் சந்தேகிக்க இடமில்லாமல்
போயிற்று. அவன் பர்ச்செல்லும் என் பெண்ணும்
முப்பது மைல் தூரத்திலுள்ள வெல்ஸ் என்னும் இடத்திற்கு
சோரகப் போயிருக்கிறார்களென்றும், அங்கே அநேக
கோஷ்டிகள் போயிருப்பதாயும் சொன்னான். சரியானபடி
யோசிக்காமல் அவசரத்துடன் நினைத்தபடி செய்வதற்கு
மிகத் தயாராயிருக்கும் மனப்பான்மை யுடையவனாகி,
எனக்குக் கொடுக்கப்பட்ட இந்தத் தகவல்கள் என்னைத்
தப்பான வழியில் நடாத்தும்பொருட்டு என்னுடைய வழி
யில் அதற்காகவே வைக்கப்பட்ட மனிதர்கள் அந்தத்
தகவல்களை கொடுத்திருக்கக் கூடாதாவென்று நான்
கொஞ்சம்கூட யோசிக்கவில்லை. ஆகையால் என் பெண்ணை
யும் அவளை ஏமாற்றினதாக நினைத்துக்கொண்டிருக்கும்
மனிதனையும், அங்கே தொடரத் தீர்மானித்தேன். நான்
பொறுப்போடு நடந்து சென்றேன். வழியில் பலபேர்களைக்
கேட்டு விசாரித்தேன். ஆனால் நகரம் சேரும் வரையில் ஒரு
தகவலும் கிடைக்கவில்லை. அங்கே ஸ்குயர் வீட்டில
பார்த்த ஒரு மனிதன் குதிரைச் சவாரியில் போய்க்
கொண்டிருந்தான். அவனைச் சந்தித்துக் கேட்டேன்.
அவன் 'இன்னும் முப்பது மைலுக்கப்பால் குதிரைப் பந்
தயம் நடக்கிறது. அங்கே போனால் அவர்களைப் பிடிக்க
முயலலா'மென்றான். ஏனெனில் அவன் முதல் இரவு
அவர்கள் அங்கே நடித்ததைப் பார்த்ததாகச் சொன்னான்.
மேலும் அங்கே கூடியிருந்தவர்களெல்லோரும், என்
பெண்ணின் நடிப்பில் மகிழ்ச்சியடைந்தார்களென்றும்
சொன்னான். மறுநாள் அதிகாலையில், நான் குதிரைப்பந்
தயத்தைக் குறித்து நடக்கலானேன். சாயங்காலம் நாலு
மணி சுமாருக்கு நான் பந்தயச்சாலையை அடைந்தேன்.
அந்தக் கூட்டம் மிகவும் சோபையோடிருந்தது. எல்லோ

ரும் ஒரே முகமாக களிப்பையே தேடுவதில் ஈடுபட்டிருந்தார்கள். நான் மிஸ்டர் பர்க்கெல்லை கொஞ்ச தூரத்துக்கப்பால் பார்த்ததாக நினைத்தேன். ஆனால் அவன் என்னைச் சந்திக்க நடுங்கியவன்போல் நான் கிட்ட வரும் சமயத்தில் அவன் கூடத்தில் மறைந்தான். அவனை அதன் பிறகு பார்க்க முடியவில்லை.

நான் இப்பொழுது ஆலோசிக்கலானேன். இனிமேல் அவர்களை நீடித்துப் பின் தொடருவது பிரயோஜனமற்றதென்று கருதினேன். என் கபடில்லாத குடும்பத்திற்குத் திரும்பிப் போவதாகத் தீர்மானித்தேன். அவர்களோ என்னுடைய உதவியைக் கருதியிருக்கிறார்கள். ஆனால் என் மனக்குழப்பமும் நான் அடைந்த சிரமமும் காய்ச்சலைக் கொண்டு வந்து விட்டது. அந்தப் பந்தயசாலையை விடுமுன்னரே காய்ச்சலுடைய அறிகுறியை நான் உணர்ந்தேன். நான் என் வீட்டிலிருந்து எழுபது மைலுக்குமேல் வந்துவிட்ட படியால், இந்தக் காய்ச்சல் மற்றொரு எதிர்பாராத விபத்து. இருந்த போதிலும் ரஸ்தாவின் பக்கத்திலிருந்த ஒரு பானக்கடைக்குள் போய் இளைப்பாறினேன். இந்த இடம் ஏழைகளுக்கும் செட்டுக்காரர்களுக்கும் வழக்கமாய் தங்குமிடம். அங்கே நான் என் உபாதையின் முடிவை பொறுமையாக எதிர்பார்த்துக்கொண்டு தங்கியிருந்தேன். நான் இங்கே ஏறக்குறைய மூன்று வாரங்கள் உபத்திரவப் பட்டுக் கொண்டிருந்தேன். ஆனால் கடைசியில் என்னுடைய வசதிக்காகக் கொடுக்க வேண்டிய பணம் கையிலில்லாவிட்டாலும் என்னுடைய சரீரம் குணமடைந்தது. பணம் கையிலில்லாததினால் உண்டான மனக் கவலை ஒன்றே காய்ச்சலைத் திருப்பியிருக்கலாம். ஆனால் ஒரு யாத்திரிகர் கொஞ்சம் வழி நடை சிற்றுண்டி எடுத்துக் கொள்ளத் தங்கியவர் எனக்கு வேண்டிய பணம் கொடுத்து உதவினார். அந்த மனிதர் வேறொருவருமல்லர். குழந்தைகளுக்கு அநேக சிறிய புத்தகங்களை எழுதியிருக்கும் பரோபகார புத்தக வியாபாரி. அவர் செயின்ட் பால் கதிட்ரல் கோவில் முற்றத்தில் விற்பனை புத்தகக் கடை வைத்திருக்கிறவர். அவர் தம்



மைக் குழந்தைகளின் நண்பன் என்று சொல்லிக் கொள்ளுவார். ஆனால் அவர் எல்லா மனிதர்களுக்குமே நண்பர். அவர் வந்ததுதான் தாமதம். உடனே போக வேண்டி பரபரப்பாயிருந்தார். ஏனெனில் அவர் மிகவும் அவசியமான விஷயங்களில் ஈடுபட்டவர். அப்பொழுது அவர் நிதர்சனமாக மிஸ்டர் தாமஸ் டிரிப் என்பவருடைய சரித்திரத்திற்கு வேண்டிய விஷயங்களைத் தொகுத்துக் கொண்டிருந்தார். நான் உடனே இந்தப் பரோபகாரியின் சிவந்த பருவுள்ள முகத்தை ஞாபகப்படுத்திக் கொண்டேன். ஏனெனில் அப்பொழுதுள்ள பல பத்தினிக் கொள்கையுள்ளவர்களின் மேல் எனக்காக சில புஸ்தகங்கள் பிரசுரித்திருந்தார். நான் திரும்பியதும் கொடுப்பதாக சில நாணயங்கள் அவரிடமிருந்து கடன் வாங்கினேன். அந்தச் சத்திரத்தை விட்டதும் நான் இன்னும் பலஹீனத்தோடிருந்தால் நாளுக்குப் பத்து மைல் வீதம் சுலபமான நடையில் வீட்டிற்குத் திரும்புவதாகத் தீர்மானித்தேன். என்னுடைய தேகாரோக்கியமும் வழக்கமான மனச்சாந்தியும் ஏறக்குறைய திரும்பி விட்டன. இப்பொழுது என்னைத் திருத்தும் கருணைக் கடவுளுக்கு, பிடிவாதமாக என் முகத்தைத் திருப்பிக்கொள்ளச் செய்த என் கர்வத்தை நிந்தித்தேன். எந்தக் கஷ்டநிஷ்டூரங்களும், ஒரு மனிதன் அதை அனுபவிக்கிறவரையில், அவனுடைய பொறுமையினால் அவை சகிக்க முடியாதவையா வென்று கொஞ்சம்கூட அவன் அறியமாட்டான். மேற்பதவியை அடைய இச்சிக்கும் மனிதனுக்கு கீழிருந்து பார்க்கும் பொழுது, அப்பதவிகள் வசீகரமாய்ப் புலப்படுகின்றன. அது போலவே, நம்முடைய சுகானுபவத்தின சிகரத்திலிருந்து நாம் தள்ளப்படும் பொழுது, கீழே நோக்கப்படும் துக்கசாகரம் முதலில் விளங்காமலும், மனக்கிலேசத்தை உண்டுபண்ணுவதாயும் தோன்றும். ஆனால் கவனமுள்ள மனதிற்கு, அதனுடைய களிப்பிற்கு ஏதாவது கிடைக்குமாவென்று தேடும்பொழுது, நாம் கீழே சறுக்கப்படும் சமயத்திலும், தன்னை உற்சாகப் படுத்துவதற்கும் சந்தோஷப்படுத்துவதற்கும் சில விஷயங்கள் தோன்றலாம். மேலும் மிகவும். கலக்கமுள்ள சம்பவங்களை நாம் சமீபிக்கும்பொழுது,

அவை தெளிவைக் கொடுப்பவைபோல் தோற்றும். மனக் கண், எப்பேர்க்கொத்த கஷ்ட சம்பவங்களிலும், அதற்குத் தகுதியுள்ள பார்வையை அடைகிறது.

நான் இப்பொழுது திரும்பப் புறப்பட்டுச் சென்றேன். கொஞ்சம் தூரத்தில் ஒரு சாமான் வண்டிபோல் தோன்றியது. அதை வேகமாய் போய்ப் பிடிக்கத் தீர்மானித்தேன். ஆனால் அதை அணுகிய பிறகு, அது ஒரு நாடோடி டிராமாக் கம்பெனி வண்டியென்று தெரிந்துகொண்டேன். அது அவர்களுடைய சித்திரத் திரைகளையும், மற்ற நாடக வரிசைகளையும், பக்கத்துக் கிராமத்தில் அவற்றைக் காண்பிப்பதற்காக, எடுத்துக் கொண்டு போகப்பட்டுள்ளது.

வண்டியில், அதை ஓட்டுகிறவரும், நாடகக் கம்பெனிக்காரரில் ஒருவரும் இருந்தார்கள். பாக்கி நடிகர்கள் மறுநாள் வருவதாகவும் கேள்விப்பட்டேன். "ரஸ்தாவில் நல்ல கூட்டுறவு, பாதையைக் குறுக்கிவிடும்" என்று பழமொழி கூறுவதுண்டு. ஆகையால் நான் அந்த எளிய நடிகனோடு பேச்சில் அமர்ந்தேன். ஒரு காலத்தில் நான் நாடகத்தில் நடிக்கும் சக்தி வாய்ந்தவனாயிருந்ததால், என்னுடைய வழக்கமான சுலப நடையில் அவ்விஷயங்களைப்பற்றிப் பேசினேன். தற்காலத்தின் நாடக இயலைக் கொஞ்சமும் நான் அறிந்திராததால், அப்பொழுது நாடகக் கவிகளில் எவரெவர் ஜனங்களால் ஆதரிக்கப்பட்டவர்களென்று நான் கேட்டேன். டிரைடன், ஓட்வே இவர்கள், அவர்கள் காலத்திலிருந்ததுபோல் இக்காலத்தில் அவர்களுக்குச் சமானமானவர்கள் யாவரென்று கேட்டேன். அதற்கு அந்த நடிகன் "நான் நினைக்கிறேன், ஐயா, இப்பொழுதுள்ள நாடகக் கவிகள் நீங்கள் சொல்லும் கவிகளோடு இணைத்துச் சொல்லப்பட்டால், சிலர்கூடத் தாங்கள் அதனால் கௌரவிக்கப்பட்டதாக நினைக்கமாட்டார்கள். டிரைடன், ரோவ் இவர்களுடைய வழிகள் இப்பொழுது மிகவும் எடுபடாது. நம்முடைய தற்கால வாசனைகள் நூறு வருஷத்திற்குமுன் விஷயமாயிருந்தவைகளில் வைக்கப்பட்டுள்ளன. ப்ளெட்சர், பென் ஜான்ஸன், அப்படியே ஷேக்ஸ்பியருடைய



எல்லா நாடகங்களும். இவைதான் இப்பொழுது ஆதரிக்கப்படுகின்றன." "எப்படி?" என்றேன் நான். "இந்தத் தற்காலத்தவர் அந்தப் புராதன பாஷையில் ஈடுபட்டிருப்பது சாத்தியமா? அவர்களுடைய வேடிக்கைப் பேச்சுக்கள் இக் காலத்தில் வழங்கப்படுவன வல்லவே! நீர் சொல்லும் நாடகங்களில் உள்ளவர்களெல்லாருடைய நடை உடை பாவனைகளெல்லாம் மிதத்திற்கு மிஞ்சினவையல்லவா?" "ஐயா, பொது ஜனங்கள் பாஷையைப்பற்றியாவது, வேடிக்கைப் பேச்சுக்களையாவது, நடை உடை பாவனைகளைப் பற்றியாவது, கொஞ்சம்கூட கவனிப்பதில்லை. அது அவர்களுடைய ஜோலியுமல்ல. ஏனெனில், அவர்கள் அங்கே தமாஷ் அனுபவிக்கப் போகிறார்கள். பென் ஜான்ஸன், அல்லது ஷேக்ஸ்பியர் நாடகத்தின் பெயரைச் சொல்லி, அதில் கோக்கப்படும் ஒரு மூக வேஷத்தைப் பார்த்து சந்தோஷத்தை அடைகிறார்கள்" என்றான் என் தோழன். "அது அப்படியானால், நம்முடைய தற்கால நாடகக் கவிகள், ஷேக்ஸ்பியரைப் பின்பற்றுகிறார்களே ஒழிய இயற்கைக்கு ஒத்துப்போகிறதில்லையென்று எனக்குத் தோன்றுகிறது" என்றேன். "உண்மையை உரைப்பின் அவர்கள் எதையும் பின்பற்றுவதாக எனக்குத் தெரியவில்லை. அப்படியே பொது ஜனங்களும் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டுமென்றும் எதிர்பார்க்கவில்லை. நாடக இசையின் அமைப்பினாலில்லை. ஆனால் புது விஷயங்களை அடிக்கடி கொண்டு வந்து விடுவதிலும் வெவ்வேறு விதமான ரஸங்களைச் சேர்ப்பதும்தான், கரகோஷத்தை உண்டுபண்ணுகிறது. நாடகம் முழுவதிலும் ஒரு விகடமுமில்லாத ஒரு கவிதையை பொது ஜனங்கள் தோள் சுருக்கி வெருட்டியடித்தார்கள். இன்னொரு கவிதையில், கவி, ஒரு தண்ணீர்த் தொட்டியின் வலிப்பு வந்ததை அதில் சேர்த்துத் தொகுத்து அதைக் காப்பாற்றினார். இல்லை, ஐயா, கான்கிரீவ், பார்குஹர், அவர்களுடைய இலக்கியங்களில், இப்பொழுதிருக்கும் மனப்பான்மைக்கு அதிகமாக அதில் புத்திமதி வைக்கப்பட்டிருக்கின்றது. அவற்றைவிட நம்முடைய தற்கால பாஷை மிக சுலபமான நடையில் இருக்கின்றது. இதற்குள் நாடோடிக் கம்பெனியாரின் சாமான்கள் கிராமத்

தில் வந்து சேர்ந்தன. கிராமவாசிகள் எங்கள் வரவைப் பற்றி ஆச்சரிக்கப்பட்டவர்கள் போல் எங்களைப் பார்வையிட கூடியிருந்தார்கள். ஏனெனில் இந்த விஷயத்தைக் குறிப்பிட்டு என் சிநேகிதன் நாடக மேடையைக் காட்டிலும், வெளியே சஞ்சரிக்கும்பொழுது, எப்பொழுதும் அதிகமான ஜனங்கள் தங்களைப் பார்க்க வருவார்களென்றான். நான் அப்பேர்க்கொத்த கோஷ்டியில் சேர்ந்திருப்பதின் அஸம்பாவிதத்தை முதலில் நினைக்கவில்லை. பின் ஒரு வெட்டிக் கூட்டம் என்னைச் சுற்றி இருப்பதைப் பார்த்து, நான் முதலில் தென்பட்ட பானக்கடையில் எவ்வளவு சீக்கிரமாய் ஓடி ஒளியமுடியுமோ அவ்வளவு சீக்கிரம் போனேன். ஒரு பொது அறையைக் காண்பிக்கப்பட்டு நான் அங்கே மிகவும் நல்ல உடை உடுத்த ஒருவரால் எதிர்ப்படப்பட்டு, அவர் என்னை அந்தக் கம்பெனியின் வாஸ்தவமான சாப்லனா, அல்லது நாடகத்தில் அந்த வேஷம் மட்டும் பூண்டு ஆடப் போகிறவராவென்று கேட்டனர். நான் உண்மையை உரைத்தேன். அந்தக் கம்பெனிக்கும் எனக்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாதென்று சொன்ன பிறகு, அவர் என்னையும நடிகரையும் பஞ்ச் மது ஒரு செப்பு தருவித்து, அதில் கலந்து கொள்ளும்படி கண்ணியத்துடன் வேண்டிக் கொண்டார். பானம் செய்யும்பொழுது, அவர் தற்கால அரசியலை மிக விசுவாஸத்துடனும் கருத்துடனும் விவாதித்தார். நான் என் மனத்தில் அவரை பார்லிமெண்டைச் சேர்ந்த ஒரு அங்கத்தினருக்குக் குறைவில்லாத அந்தஸ்துள்ளவராக இருக்க வேண்டுமென்று தீர்மானித்தேன். ஆனால் நான் அவ்வீட்டில் இரவுச் சாப்பாட்டிற்கு என்ன தயாராகுமென்று கேட்டதற்கு, அவர் நானும் நடிகரும் அவருடைய வீட்டில் தம்மோடு சாப்பிட வேண்டுமென்ற போதே, என்னுடைய மேற்கூறிய உத்தேசங்கள் ஏறக்குறைய உறுதி செய்யப்பட்டன. அவருடைய வேண்டுகோளை கொஞ்சம் வற்புறுத்தின பிறகு நாங்கள் ஒப்புக்கொள்ளும்படி செய்யப்பட்டோம்.

# அத்தியாயம் 19

*தற்கால அரசாங்கத்தில் அதிருப்தி கொண்டவரும் நம்முடைய சுதந்திரத்தின் குறைவை எதிர்பார்ப்பவருமான மனித வர்ணனை.*

நாங்கள் விருந்திற்கு அழைக்கப்பட்ட வீடு அந்தக் கிராமத்திலிருந்து கொஞ்ச தூரத்திலிருந்ததால், எங்களை அழைப்பித்தவர் கோச் வண்டி தயாரா யில்லாததால், எங்களைக் கால்நடையாகக் கூட்டிக்கொண்டு போவதாகச் சொன்னார். அந்தப் பிரதேசத்தில், நான் பார்த்திருக்கும் மிக சுப்பிரமான மாளிகைகளில் ஒன்றுக்கு நாங்கள் சீக்கிரத்தில் வந்து சேர்ந்தோம். எங்களுக்குத் தங்கும்படி காண்பிக்கப்பட்ட அறை முற்றிலும மேன்மையாயும, புது மாதிரியாயுமிருந்தது. அவர் எங்கள் உண்டியைத் தயார் செய்ய உத்தரவு கொடுக்கப்போனார். நடிகர் கண்ணைச் சிமிட்டிக்கொண்டு, நாங்கள் பூராவாக பாக்கியசாலிகளென்று சொன்னார். எங்களுடைய போஷகர் சீக்கிரத்தில் திரும்பி வந்தார். ஒரு மேன்மையான இரவு உண்டி கொண்டுவரப்பட்டது. இரண்டு மூன்று சீமாட்டிகள் தளர்ந்த வஸ்திரம் உடுத்திக்கொண்டு, எங்களுக்கு அறிமுகப்படுத்தப் பட்டார்கள். சம்பாஷணையும் கொஞ்சம் விறு விறுப்புடன் ஆரம்பித்தது. ஆனால் அரசியலைப் பற்றிய விஷயங்களைத்தான் எங்கள் போஷகர் முக்கியமாக விவரித்தார். ஏனெனில், அவர் சுவாதந்திரியம் ஒரே சமயத்தில் தமக்கு உற்ஸாகத்தையும், பயங்கரத்தையும் கொடுக்கிறதென்றார். துணி எடுக்கப்பட்ட பிறகு, அவர் என்னை மானிட்டர் பத்திரிகையின் கடைசி இதழ் பார்த்தீர்களா வென்று கேட்டார். அதற்கு இல்லையென்று சொன்னதின் பேரில் "என்ன! ஆடிட்டர் பத்திரிகையைக் கூட இல்லையென்று உத்தேசிக்கிறேன்" என்றார். "இரண்டையும இல்லை ஐயா" என்று பதிலுரைத்தேன். "இது நூதனமானது, மிகவும் நூதனம்"

என்று என் விருந்தளிப்பவர் சொன்னார். "நான் இப்பொழுது பிரசுரமாகும் எல்லா அரசியல் பத்திரிகைகளையும் வாசிக்கிறேன். டெயிலி, பப்ளிக், லெட்ஜர், கிரானிக்ள், லண்டன் ஈவினிங், ஒயிட் ஹால் ஈவினிங், பதினொரு மாகஸீன்கள், இரண்டு ரிவியூக்கள், அவை ஒன்றுக்கொன்று விரோதமா யிருந்தபோதிலும், நான் அவை எல்லாவற்றையும் நேசிக்கிறேன். சுவாதந்திரியம் ஐயா, சுவாதந்திரியம். இது பிரிட்டானியரின் பெருமை. கார்ன்வாலில் எனக்குச் சொந்தமான எல்லா நிலக்கரிச் சுரங்கங்களின் ஆணை மேல், நான் அதனுடைய ரக்ஷகர்களைப் பாராட்டுகிறேன்.' 'அப்படியானால், நீர் அரசனையும் போற்றுகிறீரென்று நம்பப்படுகிறது'' என்று நான் சொன்னேன். "ஆம் அவர் நாம் என்ன செய்யவேண்டும் என்பதைச் செய்தால்—ஆனால் அவர் சில காலமாக செய்து கொண்டிருக்கிறபடி செய்துகொண்டு போனால்—நான் அவருடைய சங்கதிகளைப் பற்றி இனிமேல் கவலை கொள்ளமாட்டேன். நான் ஒன்றும் பேசுவதில்லை. நான் சிந்திக்கிறது மட்டுந்தான். சில விஷயங்களை அதிக நேர்த்தியாக நான் நடத்தியிருக்கக் கூடும். போதுமான யோசனை சொல்பவர்கள் இருந்ததாக எனக்குத் தோன்றவில்லை. எத்தனை பேர் யோசனை சொல்வதற்கு இருந்தாலும், எவரெவர் யோசனை சொல்வதற்கு சம்மதிக்கிறார்களோ, அவர்களோடு யோசிக்கவேண்டும். அப்பொழுது விவகாரங்களெல்லாம் உத்தேசம்போல் வேறொரு மாதிரி நடந்திருக்கவேண்டும்'' என்று விருந்தளிப்பவர் சொன்னார். "நான் அப்படிப்பட்ட வலுவில்சொல்லும் யோசனைக்காரர்களை கழுவேற்ற விரும்புகிறேன். நம்முடைய ராஜாங்கம் பலஹீனமடையும் போது அதைப் பலப்படுத்த உதவி செய்ய வேண்டியது ஒவ்வொரு சத்தியசந்தர்களுடைய கடமை. அதென்னவென்றால், அந்த தேவதாம்சமான ராஜரீக சக்தி கொஞ்ச வருஷங்களாக நாளுக்கு நாள் க்ஷீணத்தை அடைந்துவருகிறது. ராஜ்ய நிர்வாகத்தில் அதற்கு சரியான பங்கு இல்லாமல் போய்க்கொண்டிருக்கிறது. ஆனால் இந்த ஞான சூன்யங்கள் இன்னும் சுவாதந்திரியம் என்ற அதே கூச்சலைப் போட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஏதாவது செல்வாக்கிருந்தால், அதைக் கீழே போய்க்கொண்டிருக்கும் தாரில் இழிவாகப் போடுகிறார்கள்'' என்று நான் சொன்னேன்.



"எப்படி நான் உயிருடனிருந்து, இவ்வளவு இழிவாகவும், இவ்வளவு சுயநலத்தைப பாராட்டும் சுவாதந்திரியத்தின் சத்துருவையும், பிரஜைகளைத் துன்புறுத்தும் அரசநிர்வாகியைப் பார்க்கவும் நேரிட்டது? சுவாதந்திரியம், அது தெய்வத்தினுடைய திவ்ய கொடை, பிரிட்டானியரின் அப்பேர்க்கொத்த பெருமை வாய்ந்த பங்கீடு'' என்று ஒரு சீமாட்டி சொன்னாள். "இந்த நாளில், அடிமைத்தனத்திற்காகக் கக்ஷி பேசுவதற்கு யாராவது ஒருவர் இருக்கக் காண்பது சாத்தியமான விஷயமா? பிரிட்டானியரின் பங்கீட்டை ஹீனமாய்க் கெடுத்து விடுவதற்குத் தயாராயிருக்கும் மனிதர் யாரேனுமுண்டோ? ஐயா, அவ்வளவு இழிவானவர் யாராவதுயிருக்க முடியுமா?'' என்று எங்கள் விருந்தளிப்பவர் சொன்னார். "இல்லை, ஐயா,'' என்று பதிலுரைத்தேன். "நான் சுதந்திரத்திற்கு ஈடுபட்டவன். அது தெய்வங்களுடைய இயற்கை யல்லவோ. புகழ் பெற்ற சுதந்திரமே, தற்கால பிரசங்கங்களுக்கெல்லாம் ஜீவனே, எல்லா மனிதரும் அரசர்களாக இருக்கவேண்டுமென்று நான் இஷ்டப்படுகிறேன். நானும் ஒரு அரசனாயிருக்க விரும்புகிறேன். நாம் எல்லோரும் சுபாவமாக அரசியலுக்கே சமமான உரிமை யுடையவர்கள். நாம் எல்லோரும் சிருஷ்டியின் ஆரம்ப காலத்தில், சமமான அந்தஸ்து உள்ளவர்களா யிருந்தோம். இதுதான் என்னுடைய அபிப்பிராயம். மூன் புலெவல் லேர்ஸ் என்று சொல்லப்படும் ஒரு சதநியத்தைக் கடைப்பிடிக்கும் கக்ஷியினுடைய கொள்கை யாகவும் இருந்தது. அவர்கள் எல்லோரும் சமமான சுதந்திரமுள்ளவர்களாக விருக்கும் ஒரு ஜாதியை ஏற்படுத்த முயன்றார்கள். ஆனால் அந்தோ, அது எப்பொழுதும் பயன்படாது. ஏனெனில், அவர்களில் சிலர் மிக்க பலமுள்ளவர்களா யிருந்தார்கள். சிலர் மற்றவரை விட தந்திரசாலிகளா யிருந்தார்கள். இவர்கள் காலக்கிரமத்தில், மற்றவர்களுக்கு நாயகர்களாக ஆனார்கள். குதிரைப் பாகன் எவ்வண்ணமாக உங்கள் குதிரைகளை சவாரி செய்கிறான். ஏனெனில்

அவன் அவற்றை விடத் தந்திரசாலி. அப்படியே அவனை விட அதிக பலமுள்ளவனோ, அல்லது அதிக தந்திரமுள்ளவனோ, ஒருவன் இவன் கழுத்தில் காலக்கிரமத்தில் உட்காருவான். அது காரணம் பற்றி, மனிதர்கள் உடன்பட வேண்டுமென்று ஏற்பட்டிருக்கிறது. சிலர் அதிகாரம் வகிக்கப் பிறக்கிறார்கள். மற்றவர்கள் அவர்கள் சொற்படி நடக்கப் பிறக்கிறார்கள், ஆகையால், கேள்வி என்னவென்றால் கொடிய மன்னர்கள இருக்க வேண்டியிருப்பதால், அவர்களை நம்மோடு ஒரே வீட்டில் வைத்திருப்பது நலமா? அல்லது அதே கிராமத்திலா? அல்லது கொஞ்ச தூரத்திற் கப்பாலா? முக்கிய பட்டணத்திலா? என்றுதான்.'' இப்பொழுது, ஐயா, என்னைப் பற்றின வரையில், நான் இயற்கையில் கொடிய அரசனின் முகத்தைப் பார்க்க இஷ்டபடாததினால், எவ்வளவு தூரத்தில் என்னிடமிருந்து அவர் எட்டி வசிப்பாரோ, அவ்வளவுக்கவ்வளவு நான் சந்தோஷிப்பேன். மனிதர்களில் பெரும்பாலரும் என்னைப் போல் எண்ண முடையவர்கள். ஏகோபித்து, ஒரு அரசனை உண்டாக்கி யிருக்கிறார்கள். அவரைத் தேர்ந்தெடுப்பதில் கொடிய மன்னரின் எண்ணிக்கை உடனே குறைந்து விடுகிறது. அப்படியே கொடுங்கோன்மை, ஜன சங்கத்தின் பெரும்பாலரிடமிருந்து எட்டி வைக்கக் கூடிய தூரத்தில் தள்ளி வைக்கப் படுகிறது. இப்பொழுது உன்னதமான ஸ்தானத்தை வகிப்போர், ஒரு கொடுங்கோல் மன்னனைத் தேர்ந்தெடுக்குமுன், அவர்களும் கொடுங்கோல் செலுத்தி வந்தார்கள். ஆகையால் தங்களுக்கு மேல் ஒரு அதிகாரியின் நியமனத்திற்கு இயற்கையில் விரோத பாவமுடையவர்களாகிறார்கள். அவ்வதிகாரியின் பளுவெல்லாம அவருக்குக் கீழ் அதிகார வர்க்கங்களின் மேல் மிகக் கடுமையாக வைக்கப்படுகிறது. ஆகையால் அந்தஸ்துள்ளவர்களின் கோரிக்கை என்னவென்றால், ராஜாவின் அதிகாரத்தை எவ்வளவுக்கெவ்வளவு குறைக்க முடியுமோ அப்படிச் செய்வதே. ஏனெனில் எது அதிலிருந்து பிடுங்கப் படுகிறதோ அது சுபாவத்தில் தங்களிடம் திரும்பி வந்து சேருகிறது. அரசியலில் அவர்கள் அதற்காகச் செய்ய வேண்டியவை யெல்லாம் என்ன



வென்றால், ஒரே கொடுங்கோல் மன்னனுடைய அதிகாரத்தை சுரங்கம் வைத்து, அதைப் பலஹீனப் படுத்துவது தான். அதிலிருந்து அவர்களுடைய ஆதி காலத்திய அதிகாரம் திரும்பி அடையப் படுகிறது இப்பொழுது தனிகர்களெல்லாம் அப்படி மனமுவந்தாலும் சரி, அல்லது சட்டதிட்டங்கள் அந்த நிமித்தமாக அமுலுக்குக் கொண்டு வரப்பட்டாலும் சரி, அல்லது ராஜாங்கமே அப்பேர்க் கொத்த நிலையில் க்ஷீணித்து விடலாம். இவை யெல்லாம் ஒன்று சேர்ந்து, ராஜரீகத்தை சுரங்கம் வைத்து அழுக்குவதில் ஈடுபடுகின்றன. ஏனெனில், உதாரணமாக, ராஜபக்தியுடைய அலுவல்கள் தனத்தை சிலரிடமே குவிக்க ஆதரவாக இருக்கின்றன. அந்த வழியே, தனிகர்களை அதற்கு மேல் பெரிய தனிகர்களாக ஆக்குகின்றன. அதிலிருந்து, அவர்களுக்கு இன்னும் உயர் பதவியை அடைய விருப்பம் அதிகரிக்கிறது. தற்காலம் போல், உள்ளூர் கைத்தொழிலிலிருந்து கிடைப்பதைவிட, ஏற்றுமதி இறக்குமதியுள்ள வெளியூர் வியாபாரத்தில் அதிக தனம் பெருகுகிறதென்றால், சிலரிடம் தனக் குவியல் அவசியமாக ஏற்படுகிறது. ஏனெனில், வெளியூர் வியாபாரம் லாபம் உண்டாகும் வண்ணம், தனிகர்களாலேயே மட்டும் நடத்த முடியும். அப்படியே, உள்ளூர் கைத்தொழிலிலிருந்து பெருகும் ஊதியங்களும், அத்துடன் அவர்களையே சேருகின்றன. ஆகையால் தனிகர்களுக்கு நம்மூரில் பொருள் சேகரிக்க இரண்டு வகைகள் உண்டு. ஏழைகளுக்கோவென்றால் ஒன்றே ஒன்றுதான். இக்காரணம்பற்றி, பொருள், எல்லா வியாபாரமுள்ள தேசங்களில் குவியலாய் சிலரிடம் சேருகின்றன. அப்படிப்பட்ட தனிகர்கள், இதுவரையில் காலக்கிரமத்தில், பிரபுஸ்தானத்தை அடைந்திருக்கிறார்கள். அப்படி, ஒரு நாட்டிலுள்ள சட்டங்களே கூட, பொருள் குவியலுக்கு உதவியாயிருக்கின்றன. இக்காரணங்களினால், ஏழை, பணக்காரர், இவர்களை ஒன்றாகச் சேர்க்கும் இயற்கை ஒற்றுமைகள் கூட தகர்க்கப்படுகின்றன. தனிகர்கள், தனிகர்களையே விவாகம் செய்துகொள்வதென்று ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. பொருளில்லாக் குற்றத்தால் மட்டும் விவேகிகள், தங்கள் தேசத்திற்கு ராஜீய மந்திராலோசனை

அங்கத்தினர்களாக ஊழியம் புரிய யோக்கியதை இல்லையென்று தள்ளப்படுகிறார்கள். ஆகையால், தனமே புத்திசாலிகளின் கோரிக்கையாக ஏற்படுத்தப் படுகின்றது. இவ்வழிகளிலும், இம்மாதிரியான வழிகளாலும், தனம் குவியுமென்று நான் சொல்லுகிறேன். இப்பொழுது தனக் குவியலுள்ளவர்கள், வாழ்க்கையின் அவசியங்களையும், அவற்றின் இன்பங்களையும அடையப் பெற்று, அவர்களுடைய பொருளின் மிகுதியை, அதிகாரம் பெறும் சாதனங்களை விலைக்கு வாங்குவதைத் தவிர, வேறு வழிகளில் உபயோகிக்க அறியார். அதென்னவென்றால், அதை வேறு விதமாகக் காட்டுவதென்றால், ஔதாரிகளுடையவும் சூதாடிகளுடையவும் சுவாதந்திரியத்தை விலைக்கி வாங்கி, அவர்களை தன்னாயகத்திற்கு கீழ்ப் படுத்திக் கொள்ளுகிறார்கள். அபபடியே, உணவிற்காக சதா காலமும் கஷ்டப்படும் துர்ப்பாக்கியத்தை அடைந்த மனிதர்களுடைய சுவாதந்திரியத்தையும் பற்றிக்கொள்ளுகிறார்கள். இப்படி அதிகப் பொருளுடைய ஒவ்வொரு மனிதனும், வழக்கத்தில் மிகவும் ஏழ்மைப்பட்ட ஜன சமூகத்தை, தன் ஆதிக்கத்தில் வைத்துக் கொள்ளுகிறான். குவிந்த தனத்தில் சம்பவிக்கும் ராஜ்ய தந்திரத்தை, தத்துவ சாஸ்திரி டிகார்டே சொல்லியிருக்கும் சித்தாந்தத்திற்கு ஒப்பிடலாம். ஒவ்வொரு ஜோதி மண்டலமும், தன்னைச் சுற்றும் சிறிய ஜோதி மண்டலங்களை உடைத்தாயிருப்பது போல், யார் ஒரு பெரிய மனிதனுடைய சுழலில் சுற்றிக் கொண்டிருப்பதற்கு சம்மதிக்கிறார்களோ, அவர்கள் அடிமைத்தனத்திற்கு ஈடுபட்ட மனிதர்களாயிருக்க வேண்டும். அவர்கள் மனித வர்க்கத்தின் மஷ்டுக்களே. அவர்களுடைய ஆத்மாவும், படிப்பும், சேவகா விருத்திக்கு ஈடுபடும்படியான வகையில் தயாரிக்கப் பட்டிருக்க வேண்டும். அவர்களுக்கு, சுதந்திரம் என்பதைப்பற்றி, பேரைத் தவிர மற்றொன்றும் தெரியாது. ஆனால், தனிகர்களுடைய செல்வாக்கின் சக்கரத்தில் அகப்படாமல் இருப்பவர்களின் தொகை இன்னம் அதிகமாகவே யிருக்கவேண்டும். அவர்கள் அதிகத் தனிகர்களுக்கும், சர்வ சாதாரண ஜனங்களுக்கும் நடுவே யுள்ளவர்களே. அவர்கள், பக்கத்திலிருக்கும் பலவானுக்குள்பட வேண்டாதபடியுள்ள



போதுமான பொருளுடையவர்களாகவும், அப்படியே கொடுங்கோல் செலுத்தத் தாங்களே முயலவேண்டிய அவ்வளவு பொருள் இல்லாதவர்களாயு மிருக்கிறவர்களே. இந்த நடுநிலைமையிலுள்ள மனிதவர்க்கத்தில்தான், வழக்கமாய், எல்லாவிதமான கலைகளும், புத்திகோசரமும், ஜன சமூக நன்னடத்தைகளும் காணப்படுகின்றன. இந்த சமூகத்தினர் மட்டுமே, சுதந்திரத்தின் உண்மைக் காப்பாளராகக்கோரப்படுகின்றனர். அவர்களையே, பொது ஜனங்களென்று, சொல்லலாம். அந்த நடுநிலையிலுள்ள ஜன சமூகமும, ராஜாங்கத்தில் எல்லாச் செல்வாக்கையும் இழக்கும்படி நேரலாம். அதனுடைய சொல்லும், ஒரு மாதிரி பக்கிகளுடைய கூச்சலில் மூழ்கி, மறைந்து போகலாம். ஏனெனில், அரசியல் நிர்ணய சபை ஏற்படுத்திய பொழுது, ராஜாங்க விஷயங்களில் கலந்துகொள்ள, எவ்வளவு பொருளிருக்க வேண்டுமென்று கருதப் பட்டதோ, அதில் பத்தி லொன்றாக இப்பொழுதிருந்தால், பக்கிக் கூட்டங்களில் ஜாஸ்தியான நபர்கள் ராஜாங்கப் பொறுப்பில் கலந்து கொள்ளுவார்களென்பது சித்தாந்தம். அவர்கள், எப்பொழுதும் பெரியவர்களுடைய சூழலை நாடிக் கொண்டு, பெரியவர்கள் எப்படிப் போகச் சொல்லுகிறார்களோ, அப்படிப் போவார்கள். அப்பேர்கொத்த நாட்டில், நடுத்தரமான மனிதர்கள் செய்யக்கூடியதென்னவென்றால், ஒரு முக்கிய அதிகாரியின் சுதந்திரத்தையும் மரியாதைகளையும் மிக வைதீக சிரத்தையோடு கூடின ஜாக்கிரதையுடன் காப்பாற்ற வேண்டும். ஏனெனில், அவர் தனிகர்களின் அதிகாரத்தைப் பிளக்கிறார். பெரிய மனிதர்களை, தங்களுக்குக் கீழிருக்கும மத்திய அந்தஸ்துள்ளவரின் மேல், பதின்மடங்கு பாரத்தோடு நசுக்காமல் தடுக்கிறார். மத்திய அந்தஸ்துள்ளவர்களை, ஒரு பட்டணத்திற்கு உவமானமாகச் சொல்லலாம். அதை, தனிகர்கள் முற்றுகை போடுகிறார்கள். அவ்வூருக்கு அந்த முக்கிய அதிகாரி வெளியூரிலிருந்து விடுவிப்பதற்கு ஓடி வந்து கொண்டிருக்கின்றார். முற்றுகை போடுகிறவர்கள், தங்கள்மேல் விழும் சத்துருவைக் கண்டு நடுங்கும்பொழுது, பட்டணத்திலுள்ளவர்களுக்கு மிகவும் தாராளமான உடன்படிக்கைகள் செய்வது சகஜமல்லவா? பேச்சு

களினால், அவர்களை திருப்திசெய்வதும் அப்படியே அவர்களுக்கு சமுதாய நன்மைகள் அமைத்துக் களிப்படையச் செய்வதுமுண்டு. ஆனால், அவர்கள், பின்னிருக்கும் முக்கிய அதிகாரியை, தீர்மானமாக முறியடித்துவிட்டால், பட்டணத்தின் சுவர்கள் அதிலுள்ள குடிகளுக்கு ஒரு அற்பமான ரக்ஷையாகும். அவர்கள், அப்பொழுது என்ன எதிர்பார்க்கக் கூடுமென்பது, நம்முடைய பார்வையை, ஹாலந்து, ஜீனேவா, அல்லது வெனிஸ் நகரங்களுக்குச் செலுத்தினால் தெரியும். அங்கேயெல்லாம், ஏழைகள் சட்டங்களால் ஆளப்படுகிறார்கள். சட்டங்களையே தனிகர்கள் ஆளுகிறார்கள். ஆகையால் நான் ராஜ அரசாட்சியையே, தெய்வீகமான ராஜ அரசாட்சியையே கோருகிறேன். அதற்காக, உயிரைக் கொடுக்கத் தயாராயிருக்கிறேன். ஏனெனில் மனிதர்களிடம், ஏதாவது ஒன்று தெய்வீகமாக இருப்பதென்றால், அது அபிஷேகம் செய்யப்பட்ட, ஜனங்களின் சர்வாதிகாரியான அரசன். அவருடைய அதிகாரத்தின் குறைவு ஒவ்வொன்றும், போர் சம்பவித்த காலத்திலும், சமாதானமாயிருக்கும் காலத்திலும், ஜனங்களுடைய உண்மையான சுவாதந்திரியத்தின் குறைவே. சுவாதந்திரியம், தேசாபிமானம், பிரிட்டானியர்கள் என்ற சப்தங்களெல்லாம், ஏற்கனவே, அதிக விபத்தைச் செய்திருக்கின்றன. சுயேச்சையில் நடுபட்ட உண்மைப் புதல்வர்கள், அவர்கள், இதற்கும் மேல் விபத்து செய்யாமல் தடுப்பார்களென்று எண்ணப்படுகிறது. என் ஆயுட் காலத்தில், இப்பேர்க்கொத்த சுவாதந்திரியத்தின் ரக்ஷகர்கள் என்று போற்றிக்கொள்ளும் அநேக போலிகளை அறிந்திருக்கிறேன். ஆனாலும், அவர்கள் மனோபாவத்திலும், அவர்கள் குடும்ப விஷயங்களிலும். கொடுங்கோன்மையில்லாத ஒருவனும் என் ஞாபகத்திற்கு வரவில்லை" என்னுடைய ஆர்வத்தினால், இந்தப் பிரசங்கம், மரியாதையின் வரம்பு மீறி நீண்டு விட்டதாக, நான் அறிந்தேன். ஆனால், எனக்கு விருந்தளிப்பவருக்கு பொறுக்க முடியவில்லை. அவர் அடிக்கடி அதை நிறுத்தப் பிரயத்தனப்பட்டார். இதற்குமேல், அவர் தாங்கமுடியாமல் போய்விட்டார். "என்ன, அப்படியானால் நான் இதுவரையில் புரோகிதர் உடுப்பில் ஒரு ஜெஸூட்டுக்கு விருந்



தளித்துக் கொண்டிருக்கிறேன். ஆனால் கார்னவாலிலுள்ள எல்லாக் கரிச் சுரங்கங்களின் பெயரால், அவர் உடனே ஓடிப்போக வேண்டியது. இல்லாவிடில், என் பெயர் வில்கின்ஸன் இல்லை" என்று கத்தினார். நான் கொஞ்சம் அதிகமாய்ப் பேசிவிட்டதாக உணர்ந்தேன். உஷ்ணத்தோடு பேசினதற்காக மன்னிப்புக் கேட்டேன். "மன்னிப்பா!" என்று கோபத்தில் திரும்பினார். "அப்பேர்க்கொத்த கொள்கைகளுக்குப் பதினாயிரம் மன்னிப்புத் தேவை. என்ன, சுவாதந்திரியம், சொத்துக்கள், இவைகளை விட்டுவிடுவதா? கெஸட்டியர் சொல்லுவது போல், பாதக்குறடு கட்டைகளை, காலில் மாட்டிக்கொள்வதின்பொருட்டு, நாம் கீழே படுத்துக்கொள்ள வேண்டியதுதானா? ஐயா, இதை விட ஹீனமான மரியாதைகள் உமக்குச் செய்யப் படாதிருக்கும் பொருட்டு நீர் உடனே இந்த வீட்டை விட்டுப் போய்விட வேண்டுமென்பது என் கட்டளை. ஐயா நான் அதை வற்புறுத்துகிறேன்." நான் என்னுடைய மறுப்பை மறுபடியும் சொல்லுகிற சமயத்தில், நாங்கள் ஒரு காலாள் சேவகன் கதவைத் தட்டுகிறதைக் கேட்டோம். இரண்டு சீமாட்டிகளும் உரக்கக் கூவினார்கள். "சாவு எப்படி நிச்சயமோ அப்படி நம்முடைய எஜமானனும் எஜமானியும் திரும்பி வந்துவிட்டார்கள்." எனக்கு விருந்தளித்தவர் இந்த நேரமெல்லாம் பட்லரென்று தெரியவந்தது. தன் எஜமானன் ஊரில்லாதிருந்தபொழுது, தன்னை ஒரு ஆளாகக் காண்பித்துக் கொள்ள வேண்டுமென்ற இச்சையோடு, கொஞ்சநேரம் அந்தக் கனவானைப் போலவே இருக்க விரும்பினான். அவன் அந்நாட்டுப்புற கனவான்கள் பெரும்பாலரைப் போலவே, அவ்வளவு நன்றாக ராஜீய சங்கதிகளைப் பேசினான். ஆனால், அந்தக் கனவானும், அவர் மனைவியும் புகுந்ததில், என் மனக்குழப்பம் நிகரில்லாமலிருந்தது. எங்கள் கூட்டத்தையும், நல்ல களிப்பையும் பார்க்க, அவர்களுடைய ஆச்சரியம் அதிகமாகவிருந்தது. "கனவான்களே, என் மனைவியும் நானும் உங்களுடைய மிகவும் வணக்கமுள்ள நண்பர்கள். ஆனால் இது நாங்கள் எதிர்பார்க்காத ஒரு கருணை. ஆகையால் நாங்கள் இதற்குக் கைமாறு எப்படி அளிப்பதென்று

தெரியாமல் தத்தளிக்கிறோம்" என்று அந்த வீட்டு ஜெ சொந்தக்காரர் எனக்கும் என் சிநேகிதருக்கும் சொன்னார். அவர்களுக்கு, எங்களுடைய வரவு எவ்வளவு எதிர்பாராததாக இருந்த போதிலும், அவர்களுடைய வருகை, அதைவிட எங்களுக்கு அதிகமானதென்று நான் நிச்சயமாய்க் கூறுவேன். அங்கே என்னுடைய வரவின் முகாந்திரத்தைப்பற்றிச் சொல்ல அச்சங்கொண்டு, நான் ஒன்றும் பேசாமலிருந்தேன்.

அவர்களுடன், அப்பொழுது மற்றொருவர் உள்ளே நுழைந்தார். அவர் என்னுடைய அன்பு கூர்ந்த மிஸ் அரபெல்லா வில்மோட் தவிர வேறொருவருமில்லையென்று கண்டுகொண்டேன். அவளை ஒரு சமயத்தில் என்னுடைய மகன் ஜார்ஜிக்கு விவாகம் செய்து கொடுப்பதாக ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால், ஏற்கனவே சொல்லியிருக்கிறபடி அது ரத்தாகிவிட்டது. அவள் என்னைப் பார்த்தவுடனே, விசேஷ சந்தோஷத்தோடு ஓடிவந்து என் கரங்களில் வரவேற்கப்பட்டாள். 'என் பிரியமுள்ள ஐயா, இங்கே உங்களுடைய வரவைச் சற்றுகூட எதிர்பார்க்கவில்லையே. எந்த எதிர்பாராத சம்பவத்தினால், நாங்கள் உங்களுடைய வரவிற்கு ஈடுபட்டிருக்கிறோம். என்னுடைய மாமாவும், மாமியும், குணசீலரான டாக்டர் ப்ரிம் ரோஸ், தங்களுடைய அதிதியாயிருக்கிறாரென்று தெரிந்தால், ஆனந்தப் பூரிப்படைவார்கள் என்பதில் ஐயமில்லை" என்று அவள் சொன்னாள். என் பெயரைச் சொல்லக் கேட்டதுமே அந்த வயோதிக கனவானும் சீமாட்டியும் என் பக்கம் மரியாதையுடன் திரும்பி, மிக அன்பு கூர்ந்த அழைப்போடு என்னை வரவேற்றார்கள். நான் அங்கே எந்த அழைப்பினால் அவர்கள் வீட்டிற்கு வந்திருக்கிறேனென்பதைச் சொல்லக் கேட்டு புன்னகை கொண்டார்கள். அந்த பட்லரை முதலில் தள்ளிவிட உத்தேசித்தவர்கள், என்னுடைய வேண்டுகோளினால், அவனை மன்னித்து விட்டார்கள்.

மிஸ்டர் ஆர்னால்டும் அவர் மனைவியும் அந்த வீட்டுக்குச் சொந்தக்காரர்கள். கொஞ்சநாள், நான அங்கேயே தாமதிக்கும்படி என்னை அவர்கள் வேண்டிக்கொண்டார்



கள். அவர்களுடைய மருமகளும், என்னுடைய கவர்ச்சி நிறைந்த சிஷ்யையும் அந்த வேண்டுகோளில் சேர்ந்து கொண்டாள். அவளுடைய புத்தி கல்பனை, கொஞ்சம் அளவு, என்னுடைய சிக்ஷையில் நடந்தபடியால் நான் அவர்கள் வேண்டுகோளுக்குச் சம்மதித்தேன். அன்று இரவு, நன்றாக அமைக்கப்பட்ட அறை ஒன்று எனக்குக் கொடுக்கப்பட்டது. மறு நாள் விடியற்காலையில், மிஸ் வில்மோட், தற்கால முறையில் அலங்கரிக்கப்பட்ட தோட்டத்தில் என்னுடன் கூட காலாற நடக்கக் கோரினாள். கொஞ்சநேரம் அந்த இடத்தின் வனப்புகளை காண்பித்த பிறகு, அவள் கவலையினால் கேட்கப்பட்டதுபோ லிராத முறையில், கடைசியாக என்னுடைய மகன் ஜார்ஜிடமிருந்து கேள்வியுற்றோமா வென்று விசாரித்தாள். "ஐயோ, அம்மணி, அவன் இங்கிருந்து போய், ஏறக்குறைய மூன்று வருடங்கள் ஆகின்றன. எனக்காவது, தன் சிநேகிதர்களுக்காவது அவன் இது வரையில் எழுதினதில்லை. அவன், இப்பொழுது, எங்கே இருக்கிறானென்று, எனக்குத் தெரியாது. ஒருவேளை அவனை இனிமேல் பார்க்காமலே இருக்கலாம். அப்படியே சுகானுபவத்தையும் பார்க்காமலே யிருக்கலாம். இல்லை, என் பிரியமுள்ள பெண்மணி, வேக்பீல்டில், எங்களுடைய கணப்பைச் சுற்றி உட்கார்ந்துகொண்டு, ஒரு காலத்தில் அனுபவித்த அந்தச் சுகமான காலங்களை இனிமேல் நாங்கள் பார்க்கப் போவதில்லை. என்னுடைய சிறிய குடும்பம், வெகு சீக்கிரத்தில் குலைந்து கொண்டிருக்கிறது. தாரித்திரியத்தால் எங்களுக்கு வறுமையோடு அபகீர்த்தியும் சம்பவித்திருக்கிறது" என்று சொன்னேன்.

நல்ல சுபாவமுடைய அந்தப் பெண், இந்தத் தகவல்களைக் கேட்டதும் கண்ணீர் வடித்தாள். ஆனால், அவள் மிகவும் நுட்பமான மனோபாவமுடையவளாதலால், நான் எங்களுடைய கஷ்டங்களைப்பற்றி, அதைவிட அதிகமான விவரங்கள் கொடுக்கவில்லை. இருந்தபோதிலும், அவளுடைய காதலின், காலக்ஷேபமும், ஒரு விதமான மாறுதலையும் செய்யவில்லையென்பதைப் பார்க்க, எனக்கு ஆறுதலைக் கொடுத்தது. நாங்கள் அவள் இருக்கும் பிர

தேசத்தை விட்ட பிறகு, அவள் பல வரன்களை வேண்டாமென்று தள்ளிவிட்டதாகவும் தெரிந்துகொண்டேன்.

அந்த இடத்தில், விஸ்தாரமான சீர்திருத்தங்கள் நடைபெற்ற சில ஸ்தலங்களை எனக்குச் சுற்றிக் காண்பித்துக் கொண்டு பல நடைபாதைகளையும், சவுக்கண்டிகளையும், அப்படியே காண்பித்துக்கொண்டு, அதே சமயங்களில் ஒவ்வொரு பிரஸ்தாபத்திலிருந்தும், என் மகளைப்பற்றிய புதுக் கேள்விகளுக்கு ஆஸ்பதத்தை உண்டு பண்ணிக் கொண்டு போனாள். இந்தமாதிரி, நாங்கள் காலை நேரத்தைக் கழித்தோம். எங்களை, மத்தியானச் சாப்பாட்டிற்கு அழைக்கும் மணிச்சத்தத்தைக் கேட்டு, தோட்டத்திலிருந்து திரும்பினோம். அங்கே முன் சொல்லப்பட்ட நாடோடி நாடகக் கம்பெனி மானேஜரைப் பார்த்தோம். அவர் அன்று மாலை ஆடப்போகும் ப்வேர் பெனிடண்ட் (Fair Penitent) என்ற நாடகத்திற்கு டிக்கட்டுகள் விற்க வந்திருந்தார். ஹொரேஷியோ என்பவருடைய ஸ்தானத்தில், நாடகத்தில இதுவரை நடிக்காத ஒரு சிறிய கனவான் நடிக்கப் போகிறாரென்று சொன்னார். புது நடிகரை அவர் வெகுவாகப் புகழ்கிறவர் என்று தெரிந்தது.

இதற்கு முன், அவரிடத்தில் போல் ஒருவரிடத்தும் அவ்வளவு முதன்மையாக வரக்கூடிய நடை உடை பாவனைகளைப் பார்த்ததில்லை என்று ஊர்ஜிதமாகச் சொன்னான். நாடக மேடையில் நடிப்பது, ஒருநாளில் கற்றுக் கொள்ளக்கூடிய வித்தையல்லவென்று சொன்னார். ஆனால், இந்தக் கனவான் நாடகமேடையில் நடிப்பதற்குப் பிறந்தவர்போல் தோன்றுகிறது. அவருடைய குரல், அவருடைய உருவம், அவருடைய நடை உடை பாவனைகளெல்லாம் மிக்க மெச்சத் தக்கவைகள். நாங்கள் எங்களுடைய பிரயாணத்தில் எதிர்பாராமல் அவரைக் கண்டுபிடித்தோம். இந்தப் பேரேபனை எங்களுடைய ஆவலைக் கொஞ்சம் தூண்டிற்று. சீமாட்டிகளுடைய வேண்டுகோளால், நான் [illegible]ன்பற்றிச் சென்றேன். நாடகசாலை, ஒரு கொட்டிலைத் தவிர வேறொன்றுமில்லை. நான் கூடப் போயிருக்கும் ஜனங்



கள், அவ்வூரில் சந்தேகமில்லாமல் முக்கியமானவர்கள் ஆதலால், நாங்கள் மிக்க மரியாதையுடன் வரவழைக்கப் பட்டோம். நாடகப் பந்தலின் முன் அங்கத்தில், இடம் கொடுக்கப்பட்டோம். அங்கே உட்கார்ந்து கொண்டு, எப்பொழுது ஹோரேஷியோ என்பவர் நாடகமேடைக்கு வரப்போகிறாரென்று வெகு ஆவலோடு எதிர்பார்த்தோம். அந்தப் புது நடிகர் கடைசியாகத் தோன்றினார். நான் அவன் என்னுடைய துர்பாக்கியமடைந்த மகனென்று கண்டுகொண்டதும் பெற்றோர்கள் என்னுடைய மனோபாவத்தை தங்களுடையதுடன் உற்றுப்பார்க்கக் கோருகிறேன். அவன் ஆரம்பிக்கும சமயத்தில் கூட்டத்தை நோக்கினான். அங்கே, மிஸ் வில்மோட்டையும் என்னையும் கண்டுகொண்டான். உடனே பேசாமலும் அசையாமலும் நின்றுவிட்டான்.

படுதாவின் பின்புறத்திலிருக்கும் நடிகர்கள், இந்தத் தாமதத்தை இயற்கைக் கோழைத்தனத்தினாலென்று சொல்லி, அவனை உத்ஸாகப்படுத்தினார்கள். ஆனால், அவன் மேலே தொடராமல், கண்ணீர் பெருக்க ஆரம்பித்தான். மேடையிலிருந்து பின்புறம் போய்விட்டான். இந்தச் சமயத்தில், என்னுடைய மனப்பான்மை இன்னவிதமாயிருந்ததென்று எனக்குத் தெரியாது. ஏனெனில் அலைகள் ஒன்றின்பின் ஒன்றாக, சொல்லமுடியாத வேகமாய் உதித்துக் கொண்டிருந்தன. ஆனால் நான் இந்தச் சமாதானமில்லாத பகற் சொப்பனத்திலிருந்து சீக்கிரத்தில் எழுப்பப்பட்டேன். மிஸ் வில்மோட், மெலிந்த தட்டுத் தடுமாறும் குரலுடன், என்னை தன் மாமன் வீட்டிற்குத் திருப்பி அழைத்துச் செல்லும்படி வேண்டினாள். வீட்டையடைந்ததும், இந்த எதிர்பாராத சம்பவங்களை அறியாத மிஸ்டர் ஆர்னால்டுக்கு, புதிய நடிகர் என்னுடைய மகனென்று தெரிவிக்கப்பட்டது. அவர் தன்னுடைய குதிரை வண்டியை அனுப்பி, அவனை வரும்படி அழைத்தார். அவன் திரும்பியும் நாடக மேடையில் போக பிடிவாதமாய் மறுத்ததினால், நடிகர்கள் வேறொருவனை அவனுக்குப் பதிலாக நியமித்தார்கள்.

நாங்கள் அவனை சீக்கிரம் எங்களுடன் வரவேற்றுக் கொண்டோம். மிஸ்டர் ஆர்னால்டு அவனுக்கு மிகவும்

அன்புள்ள வரவேற்பைச் செய்தார். நான் அவளை வழக்கம் போலுள்ள ஆர்வத்துடன் வரவழைத்தேன். எனக்குப் பொய் கோபம் காட்டுவதில் சாமர்த்தியம் கிடையாது. மிஸ் வில்மோட்டின் வரவேற்பில், அவளை ஒருவேளை கவனிக்காதவள் போல் தோன்றினாள். இருந்தாலும், அவள் மூடுமதியாக இருக்க, அப்படிச் செய்தாளென்று ஊகித்தேன். அவள் மனத்தின் குழப்பம் இன்னமும் அடங்கியதாகத் தெரியவில்லை. ஆனால் அவள், தன் சந்தோஷத்திற்கு அறிகுறியான பல அர்த்தமில்லாத மழலைச் சொற்களைப் புகன்றாள். பிறகு தானே, என்னவோ அர்த்தமில்லாமல் பேசிவிட்டதாக உரக்கச் சிரித்தாள். அடிக்கடி, நிலைக் கண்ணாடியில் தன்னைப் பார்த்துக்கொண்டாள். பார்த்துக்கொண்டதில், தனக்கு மனதைக் கவரும் அழகு இன்னமும் இருக்கிறதென்று சந்தோஷப்பட்டாள். என்ன பதில் சொல்லப்படுகிறதென்பதைக் கவனிக்காமலே அடிக்கடி கேள்விகளைக் கேட்டாள்.

## அத்தியாயம் 20

*விவேகமுள்ள ஒரு காலி, நூதன அனுபோகங்களை சந்துஷ்டி அடையாமல் தொடர்ந்ததின் சரித்திரம்.*

நாங்கள் சாப்பிட்ட பிறகு, மிஸ்ஸஸ் ஆர்னல்டு, என் மகனுடைய சாமான்களை எடுத்துவர, தன் காலாட்களில் இருவரை அனுப்பலாமாவென்று கேட்டான். அதை, அவன் முதலில் மறுக்க முயன்றான். ஆனால் அவள் தன் வேண்டுகோளை மீண்டும் வற்புறுத்த, தனக்கு இவ்வுலகில் தன்னுடையதென்று சொல்லிக்கொள்ளக் கூடிய ஜங்கம சொத்துக்கள், ஒரு தடியும் பையுமேயென்று, அவன் அவளுக்குப் பதிலுரைக்கும்படி ஆயிற்று. “ஏன், ஏய், என் மகனே, என்னை விட்டுப் பிரியும்பொழுது நீ ஏழையாகவே சென்றாய். ஏழையாகவே திரும்ப வந்திருக்கிறாய் என்று தெரிகிறது. இருந்தாலும், நீ உலகத்தைப் பெரும்பாலும் பார்த்திருப்பாயென்பதில் எனக்குச் சந்தேகமில்லை” என்று நான் சொன்னேன்.

“அப்படியே, ஐயா, ஆனால் பொருளை இச்சித்து, அதற்கு முயற்சி பண்ணிக்கொண்டிருந்தால், அது அதை அடைவதின் வழியல்ல. நிஜமாக நான் கொஞ்ச காலமாய் அப்படிச் செய்வதை விட்டுவிட்டேன்” என்று என் மகன் பதிலுரைத்தான். “உன்னுடைய பிரயத்தனங்களின் வரலாறுகள் விநோதமாயிருக்குமென்று நினைக்கிறேன். ஐயா, என்னுடைய மருமகளிடமிருந்து நான் அவைகளின் முதல் அங்கத்தை அடிக்கடி சொல்லக் கேட்டிருக்கிறேன். ஆனால் இந்தக் கோஷ்டி மற்றவைகளையும் சொல்லும்படி உன்னை சம்மதிக்கச் செய்தால் நாங்கள் இதற்காகவும் நன்றி செலுத்தக் கடமையுற்றிருப்போம்” என்று மிஸஸ் ஆர்னல்டு சொன்னாள். “அம்மணி நீர் அதைச் செவியுறுவதினால்

அடையக் கூடும் சந்தோஷம், நான் அவைகளைத் திரும்பச் சொல்வதின் வீண் பெருமையின் பாதி அளவு கூட இருக்காதென்று நான் உறுதியாய்ச் சொல்லுவேன். இருந்தாலும் அந்தப் பிரஸ்தாபத்தின் முழுமையிலும் வீர, தீர சம்பவங்கள் ஒன்று கூட சொல்லுவதற்கில்லை." ஏனெனில், நான் சொல்லப் போகிற சங்கதிகள், நான் பார்த்தவைகளே அன்றி, நான் செய்தவைகள் ஒன்றுமில்லை. என் ஆயுளில், முதல் துர்ப்பாக்கியம் உங்களுக்கெல்லாம் தெரியும். அது மிகவும் பெரியது. ஆனால், அது மனத் தொந்தரவைக் கொடுத்ததே ஒழிய, என்னை முழுகச் செய்யவில்லை. வரப்போகும் நன்மைகளில் நம்பிக்கை வைப்பதில், மற்றெவரும் அவ்வளவு சாமர்த்திய முடையவரென்று நான் எண்ணவில்லை. சிலவேளைகளில் நற்பாக்கியம் அவ்வளவு அநுகூலிக்க வில்லையென்பதால், மற்றச் சமயங்களில், அதை அதிகமாய் எதிர்பார்க்கலானேன். இப்பொழுது, நான் பர்க்கிய சக்கரத்தின் அடிப்படையிலிருப்பதால், இனிமேல் எனக்கு என்ன சம்பவித்தாலும் நான் உயரத் தூக்கப்பட வேண்டியவனே ஒழிய, என்னை இன்னமும் கீழே தள்ள அவகாசமில்லை. மேற்கூறிய நம்பிக்கையோடு, நான் ஊரிலிருந்து லண்டனை நோக்கி ஒரு சுகமான காலை நேரத்தில் புறப்பட்டேன். என்ன வருமோ என்பதைப்பற்றி நான் கவலை கொள்ளவில்லை. ரஸ்தாவில் சுற்றிப் பறந்துகொண்டிருந்த பறவைகளைப் போல், மனக் களிப்புடன் சென்றேன். போகும்பொழுது, லண்டன் நகரம் எல்லாவித சாமர்த்தியங்களுமுடைய, கீர்த்தியும், லாபமும் அடையக்கூடிய பெரிய வியாபார ஸ்தலமென்று கருதி, ஆறுதல் கொண்டேன்.

நான் பட்டணத்தை அடைந்ததும், ஐயா, என்னுடைய முதல் கவலை உங்களுடைய சிபார்சுக் கடிதத்தை நம்முடைய பந்துவினிடம் சமர்ப்பிப்பதே. அவரும் என்னைவிட அதிக சௌகரியத்தில் இருந்ததாகப் புலப்படவில்லை. என்னுடைய முதல் பிரயத்தனம் உங்களுக்குத் தெரியும். ஒரு பள்ளிக்கூடத்தில் உதவி உபாத்தியாயராக வேண்டுமென்று, அதற்கு, அவருடைய அபிப்பிராயத்தைக் கேட்டேன். நம்முடைய உறவினர், அந்த உத்தே-



சத்தை உண்மையான கேலிச் சிரிப்புடன் வரவேற்றார். "ஏய், உண்மையில், உனக்கு மிகவும் அழகான இந்தப் பிழைப்பு குறிக்கப்பட்டிருக்கிறது. பிள்ளைகளுக்கு சாப்பாடு போட்டு வித்தை கற்பிக்கப்படும் ஒரு பள்ளிக்கூடத்தில், உபாத்தியாயராக இருந்தேன். உபத்திரவமில்லாமல், ஒரு கழுத்து ஆபரணத்தின் கருவியால் உயிர் துறக்கலாம். அதைவிட நியூகேட் சிறையில், ஒரு சின்ன வாயிற் காப்போனாக இருக்க, நான் விரும்புகிறேன். நான், காலையில் சீக்கிரம் படுக்கையிலிருந்து எழுந்திருக்க வேண்டும். கடைசியாக, இரவில் உறங்கச் செல்ல வேண்டும். எனக்கு மேற்பதவியிலிருக்கும் உபாத்தியாயரால், நான் மிரட்டப்பட்டேன். என்னுடைய அவலக்ஷணமான முகத்திற்காக உபாத்தியாயினியால் நான் வெறுக்கப்பட்டேன். பையன்களாலும் தொந்திரவு கொடுக்கப்பட்டேன். வெளியே போய் வரவேண்டுமென்றால், கௌரவத்துடன் உத்திரவு கொடுக்கப்படுவதில்லை. ஆனால் பள்ளிக்கூட வேலைக்குத் தகுதி உள்ளவனென்று நீ தீர்மானம் பண்ணிக்கொண்டாயா. உன்னை சில கேள்விகள் கேட்கிறேன். இந்தத் தொழிலுக்குப் பயிற்சிப் பள்ளிக்கூடத்தில் வேலை பார்த்திருக்கிறாயா? "இல்லை ஐயா" என்றேன். அப்படியானால் நீ பள்ளிக்கூடத்திற்கு லாயக்கில்லை. நீ பையன்களுடைய தலைமயிரைச் சீவி பங்கிடு பண்ணுவாயா? "இல்லை, ஐயா," அப்படியானால் நீ பள்ளிக்கூடத்திற்கு லாயக்கில்லை. உனக்குப பெரியம்மை போட்டிருக்கா? "இல்லை, ஐயா." அப்படியானால் நீ பள்ளிக்கூடத்திற்கு லாயக்கில்லை. மூன்று பேர்களாக நீ ஒரு படுக்கையில் படுத்துக் கொள்ளுவாயா? "இல்லை, ஐயா." அப்படியானால் நீ பள்ளிக்கூடத்திற்கு கூடவே கூடாது. உனக்கு நல்ல பசியுண்டா. "உண்டு ஐயா." அப்படியானால் எவ்விதத்திலும் நீ பள்ளிக்கூடத்திறகு லாயக்கில்லை, இல்லவே யில்லை. ஐயா, உனக்கு ஒரு சுலபமான பிழைப்பு வேண்டுமென்று தேடினால், இரும்பு வெட்டியின் சக்கரத்தைச் சுழற்றும் வேலையில் ஏழு வருஷத்திற்கு அமர்ந்துகொள். ஆனால், எவ்விதத்திலும் பள்ளிக்கூடத்தைத் தவிர்த்துக்கொள. நல்லது, இங்கே வா, நீயோ ஒரு திமிருள்ள வாலிபன். கொஞ்சம்

படிப்புமிருக்கிறது. என் மாதிரி புஸ்தகம் எழுதும் ஒரு ஆசிரியனாகிறதைப்பற்றி என்ன நினைக்கிறாய். மேதாவியான ஆசிரியர்கள் இந்தத் தொழிலில் சாப்பாட்டுக்குக் கூட ஊதியம் கிடைக்கப் பெறாது கஷ்டப்பட்டிருந்ததாக, நீ புஸ்தகங்களில் வாசித்திருப்பாய். அதற்குச் சந்தேகமில்லை. ஆனால் இப்பொழுது, மிகவும் மட்டிப் பசங்கள், நாற்பது பேர், இந்தப் பட்டிணத்தில் அந்தத் தொழிலில் ஏராளமான பொருள் சம்பாதித்து, சௌகரியமாயிருக்கிறார்கள். நான் உனக்கு அவர்களைக் காண்பிக்கிறேன். எல்லோரும் யதார்த்தவாதிகள். ஜட்கா குதிரைகள் போல், மெள்ள மெள்ள, நிற்காமல் போகிறவர்கள். அவர்கள் சண்டை சச்சரவில்லாமலும், பிரகாச மில்லாமலும் வாழ்க்கையை நடத்துகிறார்கள். சரித்திரம், ராஜீயம், இவைகளைப்பற்றி எழுதுகிறார்கள். அதற்காக, புகழப்படுகிறார்கள். அவர்கள் ஆரம்பத்தில் சக்கிலித் தொழிலில் அமர்ந்திருந்தால் ஆயுள் முழுமையும் செருப்பும் பழுது பார்க்கக் கூடியவர்களே யொழிய, ஒரு நாளும் அவைகளைச் செய்திருக்க மாட்டார்கள் என்றார்.

உதவி உபாத்தியாயருக்கு அதிகக்கௌரவம் வைக்கப் படவில்லை யென்று அறிந்து கொண்டு, அவருடைய ஏற்பாட்டை ஒப்புக் கொண்டேன். இலக்கியத்திற்கு பரிபூரண மரியாதை வைத்திருந்ததால். நான் கிரப் தெருவிலுள்ள புராதன குருவை வணக்கத்தோடு தொழுதேன். எனக்கு முன், டிரைடன், ஓட்வே போன பாதையில் நான் போனால், எனக்குக் கீர்த்தி உண்டாகுமென்று நினைத்தேன். நான் இந்தப் பிரதேசத்தின் தேவதையை எல்லா மேதாவிச் செயலுக்கும் மூலகாரணமாகக் கருதினேன். உலகத்தின் அனுபவம் நமக்கு நல்ல மதி அளிப்பினும், அவள் நியமித்த தாரித்திரியம், மேதாவித்தனத்திற்குச் சிவிலித்தாய் என்று நான் கருதினேன். இவ்வித யோசனைகளினால் மனப் பூரிப்புடன், என் வேலையை ஆரம்பித்தேன். ஒவ்வொரு முக்கிய சங்கதிகளும், அவைகளுடைய விசேஷத் தன்மையை ஸ்தாபிப்பதால் பிரசுரமாயிருந்ததே ஒழிய, அவைகளைக் கோண வழியில் மறுத்துச் சொல்லி, பிறகு அவைகளுக்குச் சமாதானம் சொல்லி,



ஸ்தாபிக்கப்படவில்லை யென்று நான் கருதினேன். ஆகையால், இதுவரையில், எழுதப்படாத நடையில், முழுமையும் நூதனமான முறையில், ஒரு புஸ்தகம் எழுதத் தீர்மானித்தேன். ஆகையால், புத்தி நுட்பத்துடன், மூன்று கோணக்கக்ஷிகளை வரம்பு கட்டித் தயாரித்தேன். அவைகள் உண்மையல்ல; ஆனால் அவைகள் நூதனமானவை, சத்தியமென்னும் ரத்தினங்கள், ஏற்கனவே அநேகரால் எவ்வளவோ தடவை வழங்கப்பட்டன. ஆகையால், அவைகளில் எனக்கு ஒன்றும் பாக்கி வைக்கவில்லை. ஆனால் தூரப் பார்வைக்கு அவைகளைப்போல தோற்றமுடைய சில பிரகாசமான சங்கதிகள் மட்டும் எனக்குக் கிடைத்தன. ஓ சக்தியுள்ள தெய்வங்களே! நீங்களே பார்த்திருப்பீர்கள். நான் எழுதும் பொழுது என் பேனாவின் முனையில், என்ன எண்ணாத மகத்துவம் ஊடுருவி நின்றது. எனக்கு அதைப்பற்றி ஐயமேயில்லை. உலகத்தின்கண் உள்ள எல்லா வித்வான்களும் என்னுடைய சித்தாந்தங்களை எதிர்க்க சந்தேகமில்லாமல் கிளம்புவார்கள். ஆனால் அத்தருணத்தில் அந்த உலகத்திலுள்ள எல்லா வித்வத் கோஷ்டிகளையும் எதிர்க்க நான் தயாராயிருந்தேன். மனத் தீர்மானத்துடன் முள்ளம் பன்றி போல் என் பேனாவை ஒவ்வொரு எதிரியின்பேரிலும் எய்து கொண்டு நான் உட்கார்ந்திருந்தேன்.

"நன்கு உரைத்தாய், என் குழந்தாய்" என்று நான் சொன்னேன். "எந்த விஷயத்தைப்பற்றி நீ விவரித்தாய்? ஏக பத்னி விரதத்தின் கௌரவத்தைப் பற்றி நீ ஒன்றும் சொல்லாமல் போகவில்லையே. ஆனால் நான் குறுக்கு வெட்டுகிறேன். மேலே சொல் உன்னுடைய கொனஷ்டை வாதங்களை நீ வெளிப்படுத்தினாயா. அப்படியானால், வித்வத் கோஷ்டி, உன்னுடைய குதர்க்கங்களுக்கு என்ன பதில் சொல்லிற்று?" என்றேன். "ஐயா, வித்வத் கோஷ்டி என் குதர்க்கங்களுக்கு ஒன்றும் சொல்லவில்லை. ஒன்றுமே இல்லை, ஐயா, அவர்களில் ஒவ்வொருவரும் தங்களுடைய சிநேகிதர்களையும், தங்களையும் புகழ்ந்து கொள்வதிலும், தங்கள் சத்துருக்களை நிந்திப்பதிலுமே கவனமுற்றிருந்தார்கள். என் துர் அதிர்ஷ்டத்திற் கேற்றாப்போல்,

அந்த இரண்டு வகைகளில் நான் ஒன்றிலும் சேர்க்கப்படாததால், நான் மிகவும் கொடுமையான பராமரிப்பை அடைந்தேன். அதாவது அவர்கள் என்னைக் கவனிக்கவேயில்லை.

“நான் ஒரு நாள் ஒரு காப்பி ஹோட்டலில் அந்த குதர்க்கங்களின் பராமரிப்பைப்பற்றி சிந்தித்துக் கொண்டிருக்கையில், ஒரு குட்டை மனிதன் அந்த அறைக்கு வர நேர்ந்தது. அவன் எனக்கு எதிராக உட்கார்ந்தான். சில முன் பீடிகைகளுக்கப்புறம் என்னை ஒரு படிப்பாளியென்று தெரிந்துகொண்டு, நான் பிரசுரிக்க உத்தேசித்திருக்கும் ஒரு கதையை எடுத்துக்காட்டி, தான் பிரோபர்டியஸ் என்னும் நூலைப்பற்றி புதிதாய் பிரசுரிக்கப் போவதாகவும் அதில் ஒரு புஸ்தகம் வாங்க ஒப்புக்கொள்ள என்னைக் கெஞ்சினார். இந்த வேண்டுகோளுக்கு என்னிடத்தில் பணமில்லை என்று சொல்லும்படியாயிற்று. இந்த அந்தரங்க சமாசாரத்தைச் சொன்னவுடன், அவன் என்னை என்னுடைய உத்தேசங்கள் என்னவென்று கேட்கும்படி நேர்ந்தது. என் கையிருப்பு எவ்வளவோ அவ்வளவுதான் நான் எதிர் பார்ப்பவைகளுமென்று அறிந்துகொண்டு சொன்னான். “இந்தப் பட்டிணத்தைப்பற்றி நீ ஒன்றும் அறிந்துகொள்ளவில்லை என்பதை நான் தெரிந்துகொண்டேன். நான் அதைப்பற்றிக் கொஞ்சம் உனக்குத் தெரிவிக்கிறேன்.

நான் வைத்திருக்கும் இந்த நகல்களைப் பார். இந்த நகல்களை வைத்துக் கொண்டே நான் சென்ற பன்னிரெண்டு வருஷங்களாக மிக சுக ஜீவனம் செய்துகொண்டிருக்கிறேன். ஒரு பிரபு தன்னுடைய சஞ்சாரங்களினின்றும், திரும்பிவந்தாலும் சரி, ஒரு நீக்ரோ ஜமைக்காவிலிருந்து வந்தாலும் சரி, ஒரு பிரபுவின் விதவை தன்னுடைய கிராமத்திலிருந்து பட்டிணத்திற்கு வந்தாலும் சரி நான் உடனே வசூலுக்கு ஆரம்பிப்பேன், முதலில் அவர்களைப் புகழ்வதால் அவர்களுடைய மனதைக் கவருவேன். உடனே என்னுடைய நகல்களைச் சமர்ப்பித்து என் உத்தேசங்களை அவர்கள் மனதில் புகச் செய்வேன். முதல் தடவையிலேயே அவர்கள் சுலபமாய்ப் பணம்



கொடுத்தால், அவர்கள் பெயரில் முகவுரை எழுத மறுபடியும் ஒரு காணிக்கை வேண்டுவேன். அவர்கள் அதற்கு மிசைந்தால, தலைப்பில் அவர்களுடைய கொடியின் மர்மத்தை வரைய, இன்னொரு தடவை அவர்களை இழுத்துப் பார்ப்பேன். இம்மாதிரி நான் வீண்பெருமையால் ஜீவனம் செய்கிறேன். அதைப் பார்த்து நானே பரிகசிக்கிறேன். ஆனால் நமக்குள்ளிருககட்டும். நான் இப்பொழுது அளவுக்கு மிஞ்சி அறியப் பட்டவன். உன்னுடைய சேவகத்தை கொஞ்சம் நான் கடன் வாங்க அவாக் கொண்டிருக்கிறேன். அந்தஸ்துள்ள ஒரு பிரபு இத்தாலிய தேசத்திலிருந்து இப்பொழுதுதான் திரும்பி வந்திருக்கிறார். என்னுடைய முகம் அவர் வாசல் காப்போனுக்கு பரிச்சயம். ஆனால் நீ இந்த செய்யுள் பிரதியைக் கொண்டுவருவாயாகில், என் உயிர்மேல் சத்தியம், நீ ஜெயம் பெறுவாய். அப்பொழுது நாமிருவரும் கொள்ளையைப் பங்கிட்டுக் கொள்வோம்.’”

“தெய்வம் நமக்கு அனுக்கிரகம் செய்ய வேண்டும். ஜார்ஜ், இதுதானா கவிகளுடைய பிழைப்பு? புத்தியுடைய அவர்கள் இப்பொழுது இம்மாதிரி பிச்சையெடுக்க முன் வருகிறார்களா? அவர்களுடைய தொழிலை இப்படி இழிவாக்கி வயிற்றுப் பிழைப்புக்காக ஹீனமான மானிடத்துதி வியாபாரம் செய்ய வேண்டுமா?” என்று நான் சொன்னேன்.

“அப்படியல்ல, ஐயா, உண்மையான கவி எப்பொழுதும் அவ்வளவு ஹீனமாய்ப் போகமாட்டார். ஏனெனில் எங்கு மேதாவித் தனம் இருக்கிறதோ அங்கே கௌரவமுண்டு. நான் இப்பொழுது விஸ்தரிக்கும் மனிதர்கள் கவி பாடுவதில் பக்கிகளே. உண்மையான கவி புகழுக்காக எவ்விதக் கஷ்டங்களோடும் போராடுகிறானையால், அப்படியே அவன் நிந்தைக்கும் பயந்தவன். ரக்ஷிக்கப்படத் தகாதவர்களே அதைக் கெஞ்சிக் கேட்கத்துணிகிறார்கள், அப்பேர்க்கொத்த அவமானங்களுக்கு உன்படுவதற்கு இசையாத கர்வமுள்ள மனத்தையுடையவனாய் இருந்த போதிலும், நான் இன்னொரு தடவை புகழுக்காக பிரயத்தனம் செய்வதற்கு மிகவும் சொல்

யமான செளகரியத்தை உடையவனாகி, ஒரு நடுக்கட்டுப் பாதையில் போகும் படியாய் நேர்ந்தது. அதினால் நான் காலக்ஷேபத்திற்காக எழுதி சம்பாதிக்க லானேன். வெறும விடாமுயற்சி மட்டும் நிச்சயமாய் ஊதியமளிக்கும். ஆனால் அப்பேர்க்கொத்த தொழிலுக்கு நான் தகுதியுள்ளவனாக உணரவில்லை. நான் வருங்காலத்துப் புகழுக்கு இச்சை யுள்ளவனாகி, அந்த அவா என்னால் அடக்க முடியாமலிருந்தது. ஆகையால் ஊதியத்தை உடனே அளிக்கும் சாமான்யமான இலக்கியங்களின் வெவ்வேறு பகுதிகளை எழுதி, அதிக லாபத்தை அடையக் கூடிய நேரங்களில், சுருக்கமாயுள்ள மிகவும் சிலாக்கியமான கிரந்தங்கள் எழுதுவதில் பொழுதைப்போக்கினேன். என்னுடைய வியாசங்கள் வழக்கமாக பிரசுரிக்கப்படும் பலவற்றின் நடுவே, அறியப்படாமலும், கவனிக்கப்படாமலும் தோன்றின. பொது மக்கள் என்னுடைய எளிய தெளிவான நடையையும், தொகுப்பின் அவயவப் பொருத்தத்தையும் கவனிப்பதைக் காட்டிலும், மிகவும் முக்கியமான தங்கள் அலுவல்களில் ஈடுபட்டிருந்தார்கள். பக்கத்துக்கு மேல் பக்கம் மறைவில் போடப்பட்டன. என்னுடைய வியாசங்கள், சுவாதந்திரியம், கீழ்நாட்டுக் கதைகள், பைத்தியம் பிடித்த நாய்கடிக்கு நிவர்த்திகள் இவைகளைப் பற்றியுள்ள வியாசங்களின் நடுவே மறைந்துள்ளன. பைலெளடாஸ், பைலோதீஸ், பைலீதிராஸ், பைலான்திரோபஸ் இவர்கள் எல்லோரும் என்னை விட நன்றாக எழுதினார்கள். ஏனென்றால் அவர்கள் என்னை விட வேகமாய் எழுதினார்கள்.

இப்பொழுது நான் அக்காரணம் பற்றி என்னைப் போல் ஏமாற்ற மடைந்த எழுத்தாளிகளைத் தவிர மற்றவர்களுடன் சேருவதில்லை. அவர்களோ வென்றால், ஒருவரையொருவர் புகழ்ந்து கொள்ளுகிறது, வருத்தப் படுகிறது, நிந்திக்கிறது-இப்படிக் காலம் கழித்தார்கள். ஒவ்வொரு பிரபல ஆசிரியர்களுடைய இலக்கியங்களில் எங்களுக்குள்ள திருப்தி அவர்களுடைய யோக்யதைக்கு எதிரிடையான அளவிலேயே இருந்தது. பிறரிடமிருந்த மேதாவித்தனம் எனக்கு திருப்தி கொடுக்கவில்லை. என்



துர்ப்பாக்கியமான குதர்க்கங்கள் அந்தவிதமான களிப்பை முழுமையும் வற்றச் செய்துவிட்டது. நான் திருப்தியோடு வாசிக்கவோ எழுதவோ முடியாமல் போயிற்று. ஏனெனில், பிறனிடத்தில் இன்றியமையா சாமர்த்தியம் எனக்கு துவேஷத்தை உண்டு பண்ணிற்று. எழுதி ஜீவிப்பதே என் தொழில். மீளுவதற்கு வழிதெரியாமல் மன இருளில் குளம்புபவனாய், நான் ஒரு நாள் ஸெயின்ட் ஜேம்ஸ் நந்தவனத்தில் ஒரு பெஞ்சுமேல் உட்கார்ந்திருந்தேன். உயர் பதவியிலுள்ள ஒரு வாலிபக் கனவான் சர்வகலாசாலையில் என்னை நன்கு அறிந்த சகபாடி ஒருவர் என்னை அணுகினார். கொஞ்சம தயக்கத்தோடு ஒருவரையொருவர் வந்தனம் செய்து கொண்டோம். அவ்வளவு கேவலமான நடை உடை பாவனை உடைய என்னைத் தெரிந்து கொள்வதற்கு கொஞ்சம் வெட்கப்பட்டவராய், அவர் என்னை மறந்து விடுவாரென்று நான் பயந்தேன். ஆனால் என்னுடைய சந்தேகங்கள் சீக்கிரம் நீங்கின. ஏனெனில் நெட்தார்ன்ஹில் ஹிருதயத்தில் மிகவும் நல்ல எண்ணமுடைய ஒரு மனிதன்.”

“என்ன சொன்னாய், ஜார்ஜ், தார்ன்ஹில் அவன் பெயரல்லவா; நிச்சயமாய் என் முதலாளியைத்தவிர அவன் வேறில்லை.” என்று நான் குறுக்கிட்டேன் அதன் மேல் மிஸஸ் ஆர்னால்டு சொன்னாள்: “என்னை ஆசீர்வதியுங்கள். மிஸ்டர் தார்ன்ஹில். உங்களுக்கு அவ்வளவு சமீபத்திலுள்ளவனா? அவன் வெகு நாளாய் எங்கள் குடும்பத்திற்கு ஒரு சிநேகிதன். நாங்கள் அவனிடமிருந்து வரவை சீக்கிரம் எதிர்பார்க்கிறோம.”

“என் சிநேகிதனுடைய முதல் கவலை, அவனுடைய சொந்த துணிகளிலிருந்து நேர்த்தியான ஒரு ஸூட்டை எனக்குக் கொடுத்து என்னுடைய நடை, உடை பாவனையை மாற்றச்செய்தான். பிறகு அவனுடன் கூட சாப்பிடுவதற்கு அழைக்கப்பட்டேன், என்னுடைய பதவி என்னவென்றால் அவனுடைய சிநேகிதன் என்கிறது ஒரு பாதி; அவன் கையாளென்பது மற்றொரு பாதி. என்னுடைய வேலையென்னவென்றால், அவன் ஏலம்போடும் இடங்களுக்குப் போகும்பொழுது, நான் அவனுடனிருக்க

வேண்டியது. அவன் படத்திற்காக உட்காரும்பொழுது, அவனை உத்சாகப்படுத்திக் கொண்டிருக்கிறது. அவனுடைய கோச்வண்டியில் காலியிருக்கும்பொழுது, நான் அவன் இடது பக்கம் உட்காரவேண்டியது. அவனுக்கு வேடிக்கையில் மனம் சென்றபொழுது, டாட்டரிங் ஷிப் என்று சொல்லப்படும் விளையாட்டில், அவனுக்கு நான் ஒத்தாசை புரியவேண்டும். இதைத்தவிர எனக்கு வேறு சில அலுவல்கள் இருபது வரையில் இருந்தன. சொல்லப்படாமலே) நான் அநேக சின்னக் காரியங்களைச் செய்ய வேண்டியது. கார்க் ஸ்குருவை எப்பொழுதும் கையில் வைத்திருக்கவேண்டும். பொட்லருடைய குழந்தைகளுக்கு தெய்வப்பிதாவாய் நிற்கவேண்டியது. கட்டளை யிட்ட பொழுதெல்லாம் பாடவேண்டியது. எப்பொழுதும் தமாஷாயிருக்கவேண்டியது. எப்பொழுதும் அடக்கமாயிருக்க வேண்டும்.

முடியுமானால் நான் எப்பொழுதும் சந்தோஷமாயிருக்கவேண்டும்.

“இந்த கௌரவமான உத்தியோகத்தில் அமர்த்தியிருந்த போதிலும், எனக்கு எதிரியில்லாமலில்லை. கப்பற் படையில் காப்டன் வேலைபார்த்த ஒருவர் இந்த வேலைக்கு உருவெடுத்து வந்தவர்போல் இருந்தார். அவர் என போஷகர் என்மேல் வைத்துள்ள பிரியத்தில் குறுக்கிட்டான். அவனுடைய தாயார், தன்மையுள்ள ஒருவரிடத்தில் வண்ணாத்தி வேலை பார்த்து வந்தவள். ஆகையால் இளமையிலேயே அவனுக்கு பெரிய கனவான்களின் சிநேகம், பெண்பிள்ளைகளை கூட்டிக் கொடுப்பது, இந்த விஷயங்களில் ருசியுள்ளவன். இந்தமனிதன், பிரபுக்களுடைய பரிச்சயத்தை சம்பாதிப்பதை, தன்னுடைய வாழ்நாள் பயிற்சியாகக் கொண்டார். அவர்களில் பலபோரால் அவனது மூடத்தனத்திற்காக அவன் தள்ளப்பட்ட போதிலும், அவனைப்போலுள்ள அநேக மூட கனவான்கள் அவனுடைய பழக்கவழக்கங்களுக்கு சம்மதித்திருந்தார்கள். யஜமானை தோத்திரம் பண்ணுவதே தொழிலானபடியால், அவன் அதை எவ்வளவு நயமாய்ச் செய்யலாமோ அப்படிச் செய்து வந்தான். ஆனால் அவை



னால் அசம்பாவிதமாகவும் முரட்டுத்தனமாகவும் செய்யப்பட்டது. ஒவ்வொருநாளும் என் போஷகருக்கு ஆத்மஸ்தோத்திரத்தில் அவா ஜாஸ்தியாகஆக, ஒவ்வொரு சமயமும் அவருடைய குற்றங்களை நான் அதிகமாக அறிய அறிய, எனக்கு அவரை அப்படிப்புகழ மனமில்லாமல் போய்க்கொண்டே யிருந்தது. இப்படி நான் காப்டனுக்கு அந்த வேலையை விட்டு விடவேண்டியது போலிருந்த தருணத்தில் என்னுடைய நண்பன் என் ஒத்தாசையைக் கருதினான். எதிராளியுடைய தங்கையை இவர் கெடுதலாய் நடத்தியதற்காக இவர் அந்த எதிராளியோடு சண்டை போடுவதற்கு தன்னுடைய ஸ்தானத்தில் என்னை நியமித்தார். அதற்கு நான் சட்டென்று ஒப்புக் கொண்டேன். என்னுடைய அந்த நடத்தையில் நீங்கள் அதிருப்தி கொண்டிருக்கிறீர்களென்று நான் அறிந்து கொண்டேன். ஆனாலும் சிநேகத்திற்கு அது தவிர்க்க முடியாதகடனாதலால், நான் மறுக்க முடியவில்லை. நான் அந்தக் காரியத்தை ஏற்றுக்கொண்டு, என் எதிரியை நிராயுதபாணியாக்கினேன். கூடிய சீக்கிரத்தில் அந்த சீமாட்டி பட்டணத்திலுள்ள பொது ஸ்திரீகளில் ஒருத்தி யென்று தெரிந்துகொண்டு களிப்புற்றேன். அந்தமனிதன், அவளுக்குத் தொந்தரவு கொடுத்துக் கொண்டு மோசடியாய் ஜீவித்துக் கொண்டிருப்பவன். இந்த உபகாரத்திற்கு மன ஒப்பின வார்த்தைகளால் நன்றி செலுத்தப் பட்டது. ஆனால் என் சிநேகிதன் பட்டிணத்தை விட்டு சில நாட்களில் போவதாயிருந்தால், அவருக்கு வேறு வழியில் எனக்கு உபகாரம் செய்ய முடியாமல், தன் சித்தப்பன் ஸர் வில்லியம் தார்ன்ஹில் என்பவருக்கும் ராஜாங்கத்தில் உத்யோகம் வகிக்கும் மற்றொரு மிக உயர்ந்த பதவியிலுள்ள கனவானுக்கும் சிபார்சுக் கடிதங்கள் கொடுத்தார். அவர் போன பிறகு, என்னுடைய முதல் கவனம் அவருடைய சித்தப்பனிடம் அந்த சிபார்சு கடிதத்தைக் கொண்டுபோவதே. அவர் எல்லா விதமான நன்னடக்கைக்கும் உலகப் பிரசித்தியுடையவர். ஆனால் நியாயமாய் நடப்பவர். நான் அவருடைய வேலைக்காரர்களினால் அதிக உபசாரப் புன்னகையுடன் வரவேற்கப்பட்டேன். ஏனெனில் வாயிற் காப்போனின் பார்வைகளே, யஜ

மானின் கருணையை எப்பொழுதும் வெளிப்படுத்துகிறது. ஒரு மகத்தான அறைக்குள் காண்பிக்கப்பட்டு அங்கே கொஞ்ச நேரத்திற் கெல்லாம் ஸர் வில்லியம் என்னைப் பார்க்க வந்தார். நான் என்னுடைய காரியத்தைச் சொல்லி, அந்தக் கடிதத்தையும் கொடுத்தேன். அவர் அதை வாசித்துப் பார்த்து கொஞ்ச நிமிஷங்கள் யோசனை செய்து “கேட்கிறேன் ஐயா. அவன் இவ்வளவு பிரசிம்ஸையான சிபார்சு செய்வதற்குரிய காரியம் என் பந்துவுக்கு நீ என்ன செய்தாய். ஆனால் உன்னுடைய சாமர்த்தியத்தை நான் அனுமானிக்கிறேன். அவனுக்காக நீ சண்டை போட்டிருப்பா யென்று நான் உத்தேசிக்கிறேன். ஆகையால் அவனுடைய கெட்ட நடவடிக்கைகளுக்குக் காரண பூதமாயிருந்ததற்காக என்னிடமிருந்து ஒரு பரிசு எதிர் பார்க்கிறாயா? நான் தற்காலம் மறுப்பது உன் குற்றத்திற்கு கொஞ்சம் தண்டனையாக இருக்குமென்று நான் விரும்புகிறேன். மனப்பூர்வமாய் விரும்புகிறேன். இனிமேல் அது உன்னுடைய மன மாறுதலுக்கு கொஞ்சம் ஆஸ்பதத்தை உண்டு பண்ணலாம். என்றார். இந்தக் கண்டனத்தை நான் பொறுமையுடன் ஏற்றுக் கொண்டேன். ஏனெனில் அது நியாயமானதென்று நான் உணர்ந்தேன். அதினால் என்னுடைய முழு எதிர்பார்ப்பெல்லாம் இப்பொழுது அந்தப் பெரிய மனுஷனுக்குக் கொடுக்கப்பட்ட கடிதத்தில் வைக்கப்பட்டது. பிரபுக்களுடைய வீட்டுத் தாழ்வறைகள் எப்பொழுதும் யாசிப்பவர்களால் சூழப்பட்டிருக்கிற படியால், எல்லோரும் ஏதாவது ஒரு சூழ்ச்சியான வேண்டுகோளுடன் உள்ளே போகத் தயாரா யிருந்தார்கள். நான் உள்ளே ஏற்கப்படுவது சுலபமான விஷயமாகத் தோன்றவில்லை. இருந்தபோதிலும், என் கையிலிருந்த இவ் வுலகில் என்னுடையதென்று சொல்லக்கூடிய பொருளில் பாதியை வேலைக்காரர்களுக்கு லஞ்சமாகக் கொடுத்து, நான் ஒரு விசாலமான அறைக்குள் கடைசியாகக் காண்பிக்கப்பட்டேன். நான் கொண்டுவந்த கடிதம் அந்த பிரபுவின் பார்வைக்காக முந்தியே, அனுப்பப்பட்டிருந்தது. நான் கவலையுடன் பதிலை எதிர்பார்க்கும் நேரத்தில், சுற்றுப்புறத்தை யெல்லாம் கவனித்துப்



பார்க்க அதிக நேரமிருந்தது. ஒவ்வொன்றும் மகத்தானதாயும், சரியான ஏற்பாட்டோடு கூடியதாயு மிருந்தது. சித்திரங்கள் மர ஆஸனங்கள், மூலாம் பூசப்பட்டவைகள், எல்லாம் எனக்கு பயத்தை உண்டாக்கி, அசையாமலிருக்கச் செய்தது. சொந்தக்கார னிடத்திலுள்ள என்னுடைய மதிப்பை உயர்த்தியது. ஆஹா, இவ்வளவுக்கும் சொந்தக்காரர் எவ்வளவு மிகப் பெரியவரா யிருக்க வேண்டும். எவர் தன்னுடைய மூளையில் ராஜாங்கத்தினுடைய அலுவல்களை யெல்லாம் வகிக்கிறாரோ, எவருடைய வீடு ராஜ்யத்தின் பாதி ஐச்வர்யத்தை தெரியப்படுத்துகிறதோ, நிச்சயமாய் அவருடைய மேதாவித்தனம் மதிக்க முடியாதது என்று நான் எனக்குள்ளேயே யோசிக்கலானேன். இந்தப் பயங்கரமான தோற்றத்திலிருக்கும்பொழுது, கால் நடைச் சத்தத்துடன் ஒருவர் முன் வருவதைக் கேட்டேன். ஆஹா அந்தப் பெரிய மனிதன் இவரே! இல்லை, அது அறை வேலைக்காரியே. மற்றொரு அடிச் சத்தம் அதன் பிறகு கேட்டது. அவராய்த்தா னிருக்கவேண்டும். இல்லை. இது அந்தப் பெரிய மனிதனின அறை வேலைக்காரன். கடைசியில் பிரபுவே அவருடைய தரிசனத்தை அளித்தார். “நீ இந்தக் கடிதம் கொண்டு வந்தவனா” என்று கேட்டார். நான் ஒரு வணக்கத்தினால் பதிலுரைத்தேன். “இதிலிருந்து நான் தெரிந்துகொண்ட தென்னவென்றால் அது எப்படி-” என்று சொல்லத் தொடங்கினார். அந்தச் சமயத்தில் ஒரு வேலைக்காரன் ஒரு (பார்ப்பவர்) சீட்டு ஒன்றை சமர்ப்பித்தான். அவர் உடனே வேறு ஒரு வார்த்தையும் சொல்லாமல் அறையை விட்டு வெளியே போனார். என்னை என்னுடைய சந்தோஷத்தை நானே நிர்ப்பந்தமில்லாமல் அனுபவிக்கும்படி விட்டுவிட்டார். அவரை அதற்கு மேல் பார்க்க முடியவில்லை. ஒரு காலாள் பிரபு வாசலிலிருக்கும் கோச்சு வண்டிக்குப் போய்க்கொண்டிருக்கா ரென்று சொன்னான். நான் உடனே பின் தொடர்ந்தேன். என்னைப் போல் சொந்தக் காரியமாய் யாசிக்க வந்த மூன்று நான்கு பேர்களோடு நானும் சேர்ந்து வேண்டிக் கூவினோம். ஆனால் பிரபு நாங்கள் பின் தொடர முடியா வண்ணம் வெகு வேகமாய்ப் போய்க் கொண்டிருந்தார்.

அவருடைய கோச் வண்டிக் கதவை பெரும் நடையாகப் போய் அடைந்த சமயம் நான் ஏதாவது பதிலுண்டா வென்று கூச்சல் போட்டேன். அதற்குள் அவர் வண்டிக்குள் போய்விட்டார். அங்கிருந்து ஒரு பதில் உரைத்தார். அதில் பாதிதான் நான் கேட்டேன். மறு பாதி வண்டிச் சக்கரங்கள் உருளும் ஓசையால் கேட்க முடியவில்லை. நான் கொஞ்ச நேரம் என் கழுத்தை நீட்டிக் கொண்டு அந்த கீர்த்தியுடைய வார்த்தைகளைப் பிடித்துக் கவனித்துக்கொண்டிருப்பவனுடைய பாவனையில் நின்றேன். சுற்றிப் பார்த்தேன். பிரபுவின் வீட்டு வாசற்படியில் நான் ஒருவன் மட்டும் நிற்கிறதாகக் கண்டு கொண்டேன்.

இதற்குள் என்னுடைய பொறுமை முழுமையும் இழந்தேன். நான் அடைந்த கணக்கில்லாத அவமானங்களால் நொந்துபோய் என்னை எங்கேயாவது கொண்டுபோய் மடித்திட தயாராயிருந்தேன். என்னை ஏற்றுக்கொள்ளும் மடுவைத்தான் காணோம். சிருஷ்டியில் என்னை தள்ளபபடுபவைகளோடு சேர்த்து வைக்கப்படும் இழிவான பதார்த்தங்களில் ஒன்றாக அமைக்கப்பட்டுள்ளவனென்று நானே கருதினேன். அப்படியே ஒருவராலும் பார்க்கப்படாமல் அழிந்துபோக வேண்டியவனென்று கருதினேன். என்னிடத்தில் அரை கினி மட்டுமிருந்தது. அதை பாக்ய லெக்ஷ்மியே என்னை விட்டு நழுவி விடக்கூடாதென்று கருதினேன். இதை ஊர்ஜிதப்படுத்திக் கொள்வதற்காக நான் உடனே போய் அதை செலவு செய்து விடுவதென்று நிச்சயித்தேன். பின்பு வருவது வரட்டும். நான் இந்தத் தீர்மானத்துடன் போய்க் கொண்டிருக்கும் பொழுது மிஸ்டர் கிரிஸ்புனுடைய ஆபீஸ் என்னை வருந்தி அழைத்தது. என்னை உபசரிப்பது போல் மனதைக் கவரும்படி திறந்து வைக்கப் பட்டிருந்தது. இந்த ஆபீஸில் மிஸ்டர் கிரிஸ்ப் கனம் பொருந்திய மெஜஸ்டியினுடைய பிரஜைகளுக்கெல்லாம் தாராளமாக வருஷத்திற்கு முப்பது பவுன் கொடுப்பதாக வாத்ஸல்யத்துடன் சொல்லுகிறார். இதற்குப் பதில், செய்ய வேண்டிய தென்னவென்றால் அவர்களுடைய சுவாதந்-



திரியத்தை ஆயுள் முழுமையும் அவரிடத்தில் ஒப்படைத்து, அமெரிக்காவுக்கு அடிமைகளாக அனுப்பப்படுவதற்கு அவர்கள் ஒப்புக்கொள்ள வேண்டும். நான் என்னுடைய பயங்களை வேறு கதியில்லாமல் அங்கே தீர்த்துக் கொள்வதற்கு சௌகரியமான இடமென்று சந்தோஷித்தேன். உடனே அந்தக் குகைக்குள் ஒரு துறவியின் மனோபாவத்துடன் நுழைந்தேன். ஏனெனில் அது ஒரு குகைபோல் தோன்றியது. இங்கே சில ஏழை ஜனங்களைப் பார்த்தேன். அவர்களெல்லாம் என்னைப் போல் வசதியுள்ளவர்களே. அவர்கள் மிஸ்டர் கிரிஸ்பின் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். அதில் இங்கிலீஷ்காரர்களுடைய அவசரத்தின் நிஜ ஸ்வரூபத்தைக் காண்பித்தார்கள். பொருள் சௌகரியக் குறைவாயிருந்தும், ஒவ்வொரு கட்டுக்கடங்காத ஆத்மாவும் பாக்ய லக்ஷ்மியின் கொடுமையைத் தங்கள் தங்கள் ஹிருதயத்திலேயே பலாத்காரமாய்த் திருப்பினார்கள். ஆனால் மிஸ்டர் கிரிஸ்ப் கடைசியாக வந்து சேர்ந்தார். எங்களுடைய முணுமுணுப்பு அடங்கிற்று. அவர் என்னை ஒரு விசேஷமான அங்கீகாரத்தோடு உற்றுப் பார்த்தார். உண்மையில் அப்பொழுது ஒரு மாசமாய் புன்சிரிப்போடு என்னுடன் பேசியவரில் அவர் முதல்வர். சில கேள்விகளுக்குப் பிறகு நான் இந்த உலகில் எவ்விதமான தொழிலுக்கும் தகுதியுடையவனென்று கண்டுகொண்டார். அவர் எனக்கு எப்படி மிகத்தகுதியான வழியில்தான் ஏற்பாடு செய்யக்கூடுமென்று கொஞ்ச நேரம் ஆலோசித்தார். அவர் அதைக் கண்டுபிடித்த மாதிரி, நாசில் தட்டிக்கொண்டு, அப்பொழுது பென்சில்வேனியா புரோகிதர் கூட்டத்திலிருந்து சிக்காஸா இந்தியர்களுக்கு ஒரு தூதகோஷ்டி அனுப்புவதாக உத்தேசிக்கப்பட்டிருப்பதால், என்னை அதற்குக் காரியதரிசியாக நியமனம் செய்ய தன்னுடைய செல்வாக்கை உபயோகிப்பதாகத் தீர்மானித்தார். என் மனதிற்கு அவர் பொய் பேசுகிறாரென்று தெரியும். ஆனால் அவருடைய வாக்குத்தத்தம் எனக்கு சந்தோஷத்தைக் கொடுத்தது. ஏனெனில் அந்த வார்த்தை உச்சரிக்கப்பட்டதில் கொஞ்சம் மகத்தானதாய் அது தோன்றியது. நான் மனம் தளராது என்னுடைய அரை கினியை

மாற்றினேன். அதில் ஒரு பாதி அவனுடைய முப்பதினாயிரம் பவுன் சொத்தைப் பெருக்குவதற்குச் சேர்ந்தது. மற்றப் பாதியை வைத்துக்கொண்டு அடுத்த மதுபானக் கடைக்குப் போய் அங்கே அவனைவிட அதிக சந்தோஷத்தை அனுபவிக்கத் தீர்மானித்தேன்.

நான் இந்தத் தீர்மானத்துடன் வெளியே போகும் பொழுது, எனக்கு முன்னமே கொஞ்சம் பழக்கமுள்ள ஒரு கப்பல் காப்டன் என்னை வாயிற்கதவண்டை சந்தித்தார். அவர் ஒரு கிண்ணம் பஞ்ச் ரஸம் சாப்பிட என்னுடன் கூட இருப்பதற்குச் சம்மதித்தார். என்னுடைய ஸ்திதியை நான் எப்பொழுதும் மறைப்பதில்லையாதலால், ஆபீஸ் வைத்துக்கொண்டிருக்கிறவருடைய வார்த்தைகளை நம்புவதில் நான் நாசமடையும் தருணத்தில் இருப்பதாக அவர் தீர்மானமாய்ச் சொன்னார். ஏனெனில் அவர் என்னை தோட்டங்களுக்கு விற்க ஏற்பாடு செய்கிறார். "ஆனால் அதை விட சீக்கிரமாய் நீ கப்பல் யாத்திரையால் மிக சுலபமாக கௌரவமான வழியில் பிழைக்கலாமென்று நான் நினைக்கிறேன். என்னுடைய வார்த்தையைக் கேள். என் கப்பல் நாளைக்கு அம்ஸ்டர்டாம் போகப் போகிறது. அதில் நீ ஒரு பிரயாணியாகச் சென்றால் என்ன? அங்கே இறங்கினவுடன் நீ செய்ய வேண்டியதெல்லாம் என்னவென்றால், டச்சுக்காரர்களுக்கு இங்கிலீஷ் பாஷை கற்றுக் கொடுப்பதுதான், உனக்கு சிஷர்களும் அத்துடன் வேண்டிய பணமும், கிடைக்கும். இதற்குள் உனக்கு இங்கிலீஷ் பாஷை புரியுமென்று நம்புகிறேன். இல்லாவிடில் சாத்தான் இதில் இருக்கிறான்" என்றான் அவன்.

நான் அவனுக்கு அதைப் பற்றி நம்பிக்கையுடன் வாக்களித்தேன். ஆனால் டச்சுக்காரர்கள், இங்கிலீஷ் கற்றுக் கொள்ள விருப்பமுள்ளவர்களாயிருப்பார்களாவென்று ஒரு சந்தேகம் கொண்டேன். அவன் சத்தியம் செய்து, அவர்கள் பித்துப் பிடித்தவர்கள் போல் அதில் அவ்வளவு ஆசை கொண்டவர்களென்று ஆழ்ந்து உரைத்தான். அவன் அப்படிச் சொன்னதின் பேரில், நான் அந்த யோசனைக்குச் சம்மதித்தேன். அவனுடன் மறுநாள் ஹாலந்தில் டச்சுக்காரர்களுக்கு இங்கிலீஷ் பாஷை கற்றுக்



கொடுக்க கப்பலேறினேன். என்னிடத்தில் இருந்த கைச்சாமான்களில் பாதியைக் கொண்டு கப்பலில் போக கட்டணம் செலுத்தி, அம்ஸ்டர்டாமின் முக்கிய தெருவுகள் ஒன்றில் நான் ஆகாயத்திலிருந்து குதித்தவன் போல் இருக்கக் கண்டேன். இந்தச் சமயத்தில் நான் கற்பிக்காமல் கொஞ்ச நேரத்தைக் கூட கழிக்க இஷ்டப்படவில்லை. நான் சந்தித்தவர்களில் லாபகரமாகத் தோன்றிய இரண்டு மூன்று பேர்களுடன் என்னைத் தெரிவித்துக் கொண்டேன். ஆனால் நாங்கள் பரஸ்பரம் தெரியப்படுத்திக் கொள்வது அசாத்தியமாகிவிட்டது. அந்த நிமிஷம் வரையில் நான் டச்சுக்காரர்களுக்கு இங்கிலீஷ் சொல்லிக் கொடுக்க வேண்டுமானால், அவர்கள் எனக்கு முதல்முதல் டச்சு பாஷையை சொல்லிக் கொடுக்கவேண்டுமென்பதையே நினைக்கவில்லை. எப்படி சகஜமாய்ப் புலப்படக் கூடிய ஆக்ஷேபத்தை நான் கவனியாமல் இருந்தேனென்று எனக்கு மிக்க ஆச்சரியத்தை உண்டுபண்ணிற்று. ஆனால் இது நிச்சயம், நான் அதைப் பற்றி நினைக்கவேயில்லை.

"இந்த ஏற்பாடு அப்படி சிதறவே, நான் அநேகமாய் மறுபடி இங்கிலாந்திற்குக் கப்பலேறி திரும்பிப் போக கொஞ்சம் எண்ணம் கொண்டேன். லோவெயின் என்ற ஊரிலிருந்து திரும்பிவந்து ஒரு ஐரிஷ் மாணாக்கனோடு சம்பாஷிக்கும் பொழுது, இலக்கியநூல் விஷயங்களைப் பற்றி பேசினோம். இப்பேச்சின் மத்தியில் இதைத் தெரிவிக்கக் கோருகிறேன். நான் அப்பேர்கொத்த விஷயங்களை பேசும் பொழுது என்னுடைய வாழ்வுச் சௌகரியங்களின் குறைவை மறப்பேன். அந்தச் சர்வகலாசாலை முழுமையிலும் கிரீக் பாஷை அறிந்தவர்கள் இருவர் கூட இல்லையென்று தெரிந்து கொண்டேன். இது எனக்கு ஆச்சரியமாகத் தோன்றியது. நான் உடனே லோவெயினுக்கு புறப்பட்டுப் போவதாகத் தீர்மானித்தேன். அங்கே கிரீக் சொல்லிக்கொடுத்து பிழைக்கலாமென்று கருதினேன். இந்தத் தீர்மானத்தில் என்னுடைய சிநேகிதப் பையன் தைரியப்படுத்தினான். அதனால் ஒரு ஐசுவரியம் கிடைக்குமென்று அவன் சில ஹேஷ்யங்களைச் சொன்னான்.

"நான் மறுநாட்காலை தைரியத்துடன் புறப்பட்டேன். ஒவ்வொரு நாளும் என்னுடைய கைவசமுள்ள மூட்டையின் பாரம் ஈசாப்பும் அவனுடைய ரொட்டிக் கூடையையும்போல் குறைந்து கொண்டே வந்தது. ஏனெனில் நான் போய்க் கொண்டிருக்கும் பொழுது, அங்கங்கே தங்குவதற்காக டச்சுக்காரர்களுக்கு அவைகளைப் பணத்திற்குப பதிலாகக் கொடுத்தேன். லோவெயினுக்கு வந்தவுடன் நான் கீழ்ப்படியிலுள்ள உபாத்தியாயர்களுக்கு இழிவாக தண்டம் சமர்ப்பிக்கப் போகிறதில்லையென்று தீர்மானித்தேன். ஆனால் நேரே பிரின்ஸிபாலிடம் என்னுடைய யோக்யதையைத் தெரிவித்துக் கொண்டேன். நான் போனவுடன் வரவேற்கப்பட்டேன். கிரீக் பாஷையில் உபாத்தியாயராக இருக்க என் அபிப்பிராயத்தை அவரிடம் சொன்னேன். அது அந்த சர்வகலா சாலையில் தேவை யென்று கேள்விப்பட்டதாகச் சொன்னேன். முதலில் பிரின்ஸ்பால் என்னுடைய சாமர்த்தியத்தைப்பற்றி சந்தேகம் கொண்டார். ஆனால் அவருக்கு மனத் திருப்தி யுண்டாகும்படி எந்த கிரீக் கவிகளிலிருந்தாலும் அந்த இலக்கியத்திலிருந்து ஒரு பாகத்தை அவர் குறிப்பிடும் முறையில் லாட்டின் பாஷையில் மொழி பெயர்ப்பு செய்கிறேனென்றேன். என்னுடைய சமர்ப்பணத்தை மிகவும் சிரத்தையோடு கூடியதாகப் பார்த்து அவர் என்னிடம் மேல் வருமாறு உரைத்தார். வாலிபரே, என்னை நீ பார்த்துக்கொள். நான் கிரீக்கற்றுக்கொள்ளவேயில்லை. அது எனக்கு இல்லாமலிருக்கும் குறையை எப்பொழுதாவது நான் உணர்ந்ததில்லை. கிரீக் இல்லாமலே ஒரு டாக்டர் பட்டத்தின் குல்லாவும் கவுனும் போட்டுக் கொண்டிருக்கிறேன். கிரீக் இல்லாமலே எனக்கு ஒரு வருஷத்திற்கு பதினாயிரம் ப்ளாரின் சம்பளம் அளிக்கப் படுகிறது. கிரீக் இல்லாமலே நான் புஷ்டியாய் சாப்பிடுறேன். குறுக்கிச் சொல்லின், எனக்கு கிரீக் தெரியாததால் அதில் எதாவது குணமிருக்குமென்று நான் நம்பவில்லை" நானே வீட்டிலிருந்து வெகுதூரம் வந்துவிட்டதால் எனக்கு ஊர் திரும்பும் யோசனையில்லை. ஆகையால் நான் மேலே போகத் தீர்மானித்தேன். எனக்கு சங்கீதத்தில் கொஞ்சம் ஞானமுண்டு. நல்ல சாரீரமும் உண்டு.



ஒரு காலத்தில் எனக்கு மனக்களிப்பிற்காகத் தெரிந்துகொண்டதை இப்பொழுது வயிறு வளர்ப்பிற்காக உபயோகப் படுத்திக்கொண்டேன். நான் ஜீவகாருண்யமுள்ள ப்ளாண்டர்ஸ் குடியானவர்களிடம் போனேன். பரெஞ்சுக்காரர்களிடமும் மிக மனக்களிப்போடு இருக்கும்படியாக அவ்வளவு ஏழ்மையுடையவர்களிடமும் போனேன். ஏனெனில் எவ்வளவுக் கெவ்வளவு வறுமையிருக்கிறதோ, அவ்வளவுக் கவ்வளவு மன நிம்மதியோடு இருக்கக் கண்டேன். இரவு ஆரம்பித்ததும், ஒரு வேலை செய்து பிழைப்பவன் வீட்டை நெருங்கினால் மிகக் களிப்பையூட்டும் என்னுடைய மெட்டுகளில் ஒன்றைப் பாடினேன. அதனால் இராவுக்குத் தங்குமிடமும் மறுநாள் சாப்பாடும் கிடைத்தன. நாகரீகமுள்ள ஜனங்களிடம் பாட ஒரு தடவை இரண்டு தடவை முயற்சித்தேன். அவர்கள் எப்பொழுதும் என்னுடைய பாட்டை இழிவாக நினைத்து ஒரு சல்லிக் காசு கூட கொடுப்பதில்லை. இது எனக்கு மிகவும் ஆச்சரியத்தை விளைவித்தது. ஏனெனில் நான் சௌகரியமாயிருந்த நாட்களில், பாடுவதில் எனக்கு ஒரு சந்தோஷம். அப்படி ஒரு கோஷ்டியில் பாடினபொழுது என்னுடைய பாட்டு அவர்களை ஆனந்த சாகரத்தில் அழுத்தியது. முக்கியமாக பெண்மணிகளையே. ஆனால் இப்பொழுது இதுவே என் ஜீவனத்திற்குள்ள ஒரே வழியானதால் அதை அப்பேர்க்கொத்தவர்கள் இகழ்ச்சியுடன் ஏற்கிறார்கள். இதனால் என்ன தெரிந்து கொண்டேனென்றால் ஒரு மனிதன் தன் காலக்ஷேபத்தின் நிமித்தம் உபயோகிக்கும் வித்தைகளை உலகம் மட்டாகவே மதிக்கிறது. இம்மாதிரியே நான் பாரிஸ் நகரத்திற்குப் போனேன். எனக்கு எவ்விதமான உத்தேசமும் இல்லை. ஊரை மட்டும் பார்த்துவிட்டு பிறகு அதற்கப்பால் உள்ள ஊர்களுக்குப் போவதாக எண்ணம் கொண்டேன். பாரிஸ் நகரத்திலுள்ள ஜனங்கள் அன்னிய தேசத்தார்களில் புத்தியுள்ளவர்களைக் காட்டிலும பணமுள்ளவர்களை அதிகப் பிரியத்துடன் வரவேற்கிறார்கள். எனக்கு அவ்விரண்டும் அதிகமிருக்கிறதென்று சொல்ல முடியாததால் நான் அதிகப் பிரியத்தைச் சம்பாதிக்கவில்லை. நாலைந்து நாட்கள் ஊரைச் சுற்றிப் பார்த்துவிட்டு பெரிய மாளிகைகளின் வெளிப்-

புறத்தைப் பார்த்துவிட்டு, இந்தப் பணப்பேய் பிடித்த ஊரைவிட்டுப் புறப்பட ஏற்பாடு செய்துகொண்டு முக்கியமான தெருக்களில் ஒன்றில் போய்க்கொண்டிருக்கும் பொழுது, முதலில் எனக்கு சிபார்சுக் கடிதம் கொடுத்தனுப்பிய நம்முடைய உறவினரை அங்கே சந்தித்தேன். இந்தச் சந்திப்பு எனக்கு மிகவும் குணமாக இருந்தது. அவருக்கும் அது அப்பிரியத்தைக் கொடுக்கவில்லையென்று நம்புகிறேன். அவர் நான் என்ன விஷயமாக பாரிஸுக்கு வந்திருக்கிறேனென்று கேட்டார். எதற்காக அவர் அங்கே வந்திருக்கிறார் என்பதைப்பற்றியும் தெரிவித்தார். சித்திரப்படங்கள், சன்மான பதக்கங்கள், உள்ளடங்கிய சித்திரப்பதுமைகள், பழைய கலைவஸ்துக்களில் எல்லாவிதமும் இவைகளை சேகரிப்பதற்கு வந்திருப்பதாகச் சொன்னார். லண்டனில் ஒரு சிமானுக்கு நூதனமாக ஒரு பெரிய ஐசுவரியத்திற்கு உரிமை வந்திருக்கிறதாகவும், உடனே ரஸிகத்தன்மை உண்டாகி, அவர் இவரை இம்மாதிரி பொருள்கள் சேகரித்துக்கொண்டு வரும்படி அனுப்பியதாகவும் சொன்னார். அவர் இதற்கு முன் தானாகவே இப்பேர்க்கொத்த விஷயங்கள் தனக்கு ஒன்றுமே தெரியாதென்று என்னிடம் பல தடவைகளில் சொல்லியிருந்தார். இந்த உத்யோகத்திற்கு அவர் நியமனம் செய்யப்பட்டதைப்பற்றி நான் மிக்க ஆச்சரியம் கொண்டேன். எப்படி அவர் இவ்வளவு சீக்கிரத்தில் அமைப்பு பரிசீலனம் பண்ணும் வித்தை கற்றுக்கொண்டாரென்று நான் கேட்டேன். அவர் அதைப்போல் சுலபமானது வேறொன்றுமில்லையென்றார். அதனுடைய முழுமர்மம் இரண்டு கொள்கைகளை வரம்பு மீறாமல் தழுவுவதில்தான் இருக்கிறது என்றார். முதலில் எப்பொழுதும் அந்தச் சித்திரம் வரைந்தவர் கொஞ்சம் அதிக பரிசிரமம் எடுத்துக் கொண்டிருந்தால் அதைவிட நன்றாக இருந்திருக்கலாமென்று கூற வேண்டும். மற்றது, பீடர் பெருகிளேனின் சித்திரங்களைப் புகழ்வது. ஆனால் முன்னொருதடவை உனக்கு நூலாசிரியராய் எப்படி ஆவதென்று கற்றுக்கொடுத்தேன். இப்பொழுது பாரிஸில் சித்திரப்படங்கள் எப்படி வாங்குவதென்று உனக்கு நான் கற்பிக்க ஏற்றுக் கொள்ளுகிறேன் என்றார் அவர்.



இந்தத் தீர்மானத்தை நான் வெகு சீக்கிரமாய் ஒத்துக்கொண்டேன். ஏனெனில் அதனால் பிழைக்கலாமென்று. இப்பொழுது என்னுடைய ஆர்வமெல்லாம் பிழைப்புக் கிடைக்க வேண்டுமென்பதே. ஆகையால் அவர் தங்கியிருக்கும் இடத்திற்குப் போய் என் உடைகளை அவருடைய உதவியால் சீர்திருத்திக்கொண்டேன். கொஞ்சகாலம் சென்றபின் இங்கிலீஷ் பிரபுக்கள் வாங்கக்கூடிய சித்திரப்பட ஏலத்திற்கெல்லாம் அவருடன் கூடபோனேன். சமூகத்தின் முன் அணியில் இருக்கும் ஜனங்களுடன் இவர் அதிகப் பழக்கமாயிருப்பதைப் பார்த்ததில் நான் மிக ஆச்சரியமடைந்தேன். படம் பதக்கம் இவைகளைப்பற்றி ஏதோ வரம்பு பிசகாத ரஸிக சிரோன்மணியிடத்தில் போல், அவர்கள் இவருடைய தீர்மானத்திற்கு எதையும் விட்டு விட்டார்கள். அச்சமயங்களில் அவர் என்னுடைய உதவியையும் தக்கபடி உபயோகப்படுத்திக்கொண்டார். ஏனெனில் அவருடைய அபிப்பிராயம் கேட்கப்பட்டவுடன் அவர் மிக சிரத்தையோடு என்னை அப்புறம் கூட்டிக்கொண்டு போய்க் கேட்பார். தோளை அசைப்பார். உண்மையைக் கண்டு பிடித்தவர்போல் பார்ப்பார். திரும்பிப்போய், அந்தக் கூட்டத்தில் அப்பேர்க்கொத்த பெரிய விஷயத்தில் நான் ஒரு அபிப்பிராயமும் கொடுக்க முடியாதென்று சொல்லிவிடுவார். ஆனாலும் சில காலங்களில் ஒவ்வொரு விஷயத்தில் கொஞ்சம ஆதரிக்கக் கூடிய தீர்மானத்தைச் சொல்லுவார். ஒரு படத்தின் வர்ணம் பளபளப்பாய் இல்லை என்று சொல்லிவிட்டு மிக்க தைரியத்துடன் பக்கத்தில் அகஸ்மாத்தாய்க் கிடந்த ப்ரௌன் வார்னிஷ் படிந்த ஒரு ப்ருஷ்ஷை எடுத்து அக்கூட்டத்தின் நடுவில் மிக அமைதியாய் அதை படத்தின்மேல் தடவி இது வர்ணத்தை சீர்திருத்த வில்லையா என்று கேட்டதை நான் பார்த்துக் கொண்டிருந்தேன். அது ஞாபகத்திற்கு வருகிறது.

அவர் பாரிஸில் தன்னுடைய காரியத்தை முடித்துக் கொண்டதும் திரும்பிப்போனார். போகும் பொழுது உயர்ந்த பதவியிலிருக்கும் அநேகரிடம் என்னை யாத்திரைக்கு பிள்ளைகளுடன் உதவிக்காக அனுப்புவதற்குத்-

தகுதியுள்ளவரென்று பலமான சிபார்சு செய்தார். கொஞ்ச நாள் சென்றதும், அந்த முறையில் நான் ஒரு கனவானால் நியமனம் செய்யப்பட்டேன். அவர் தன் பாதுகாப்பிலிருக்கும் ஒரு பையனை பாரிஸுக்கு கூட்டிக் கொண்டு வந்து, அங்கிருந்து, ஐரோப்பா முழுமையும் அவனை சுற்றுப்பிரயாணம் செய்வதற்கு ஏற்பாடு செய்ய வந்திருந்தார்.

அந்த வாலிப கனவானுக்கு நான் மேல் பார்வைக்காக நியமிக்கப்பட்டேன். ஆனால் எனக்கு ஒரு நிபந்தனை விதிக்கப்பட்டது. அந்தப் பையன் எப்பொழுதும் தன்னைத்தானே பார்த்துக் கொள்ளும்படி விட்டுவிட வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். என்னுடைய மாணாக்கன் உண்மையில் பண விஷயங்களில் என்னைவிட அதிகமாகக் கற்றிருந்தான். இரண்டு லக்ஷம் பவுன் உள்ள ஆஸ்திக்கு அவன் வாரிசு, அது வெஸ்ட் இன்டீஸ் தீவிலுள்ள ஒரு சித்தப்பனால் எழுதி வைக்கப்பட்டது. அவனுடைய கார்டியன்கள் அவனுக்கு அந்த ஆஸ்தியை ஆளத் தெரிய வேண்டிய விஷயத்தில் ஒரு அட்டார்னியிடம் வேலை கற்க நியமித்திருந்தார்கள். ஆகையால் பொருளாசை என்பது அவனைக் கைக் கொண்டிருந்தது. வழியில் அவன் கேட்ட கேள்விகளெல்லாம் எவ்வளவு பணம் வழிச் செலவில் மீக்க முடியுமென்றுதான். எந்த மாதிரியில் பிரயாணம் செய்தால் மிகவும் குறைந்த செலவாகும். எந்த சாமான் வாங்கினால் லண்டனில் மறுபடியும் விற்றால் அதில் லாபமுண்டாகும். செலவில்லாமல் வழியில் பார்க்கக் கூடிய காக்ஷிகளை அவன் பார்க்கத் தயாராயிருந்தான். ஆனால் எவைகள் கட்டணம் கட்டிப்பார்க்க வேண்டியவைகளோ, அவைகள் பார்க்கத் தக்கவையல்லவென்று தனக்குத் தெரியுமென்று அவன் வழக்கமாய் உறுதியுடன் சொன்னான். பிரயாணம் செய்வதில், எவ்வளவு அதிசயமானபடி செலவு செய்ய வேண்டியிருக்கிறதென்று சொல்லாமல், ஒரு பில்லையும் அவன் தீர்க்க மாட்டான். இத்தனையும், அவனுக்கு வயது இருபத்தி ஒன்று ஆவதற்குள்ளேயே. லெக்ஹார்னில் வந்தபிறகு நாங்கள் துறை முகத்தையும்



கப்பலையும் பார்க்க நடையாகப் போனோம். அங்கே இங்கிலாந்துக்கு திரும்பிப்போக கப்பல் மார்க்கமாக என்ன செலவாகுமென்று விசாரித்தான். நில மார்க்கம் போவதின் செலவோடு கவனித்தால் அது கொஞ்சம்தான் ஆகுமென்று அவன் சொல்லப்பட்டான். அவனுக்கு அந்த லாப உணர்ச்சியைத் தடுக்கமுடியவில்லை. ஆகையால் எனக்குக் கொடுக்கவேண்டிய சம்பளத்தில் ஒரு சிறு பாகத்தை மட்டும் கொடுத்துவிட்டு, என்னிடம் சொல்லிக் கொண்டு ஒரே ஒரு வேலைக்காரனுடன் லண்டனுக்குக் கப்பலில் புறப்பட்டான்.

ஆகையால் நான் இப்பொழுது மறுபடியும் பரந்த உலகத்தின்கண் உறைவிடமில்லாமல் விடப்பட்டேன். ஆனால் அப்படியிருப்பது எனக்கு வழக்கமாய்விட்டது. இருந்தபோதிலும் இந்த தேசத்தில் ஒவ்வொரு குடியானவனும் என்னைவிட சிறந்த பாடகனாயிருந்ததால் என்னுடைய சங்கீதத் திறமையை எதற்கும் பிரயோஜனப்படுத்த முடியவில்லை. ஆனால் இதற்குள் வேறொரு கலை நான் கற்றிருந்தேன். அது என்னுடைய நோக்கத்திற்குப் போதுமானதாயிருந்தது. இதென்னவெனில், தர்க்கம் செய்வதில் ஒரு சாமர்த்தியம். எல்லா அன்னிய தேச சர்வகலாசாலைகளிலும், மத ஏற்பாடுள்ள மடங்களிலும் சிற்சில நாட்களில் ஒவ்வொரு தற்காலிக நாஸ்திகக் கொள்கையை எதிர்ப்பதற்காக தத்துவ சபைகள் ஏற்படுத்தப்பட்டன. அதற்காக நாஸ்திக வாதத்தை எதிர்ப்பதில் ஏதாவது சாமர்த்தியம் காண்பித்தால், அவனுக்கு பண வெகுமானம், சாப்பாடு, ஒரு இரவு தங்குவதற்கு வசதி அளிக்கப் பெற்றான். இம்மாதிரி தர்க்கம் செய்து நான் இங்கிலாந்திற்கு என் வழியைத் தேடிக்கொண்டு வந்தேன். ஒரு நகரத்திலிருந்து மற்றொரு நகரத்திற்கு கால்நடையாய்ப் போனேன். மனிதர்களை கொஞ்சம் நெருங்கியே கவனித்தேன். அப்படிச் சொல்லக்கூடுமாகில் படத்தின் இருபுறக் காக்ஷியையும் உற்று நோக்கினேன். நான் சொல்ல வேண்டிய அபிப்பிராயங்கள் மிகவும் சொற்பம். ஏழைகளுக்கு நன்றாக ஜீவிக்க அரச ஸாம்ராஜ்யமே மிகவும் மெச்சக்கூடிய அரசியல். பணமுள்ளவர்களுக்கோ

பிரஜா சம்மேளன அரசாக்ஷி, சாதாரணமாக ஒவ்வொரு தேசத்திலும் தனத்தையே வேறு பெயரிட்டு சுதந்திரமென்று வழங்குகிறார்கள். எவனும் ஜன சமூகத்தில் தன்னுடைய இஷ்டத்திற்குக்கட்டுப்பட்டு சிலர் ஜீவனம்செய்ய வேண்டுமென்று விரும்பாமலிருக்கும்படி அவ்வளவு சுவாதந்திரியத்தை நாடும் மனிதனைப் பார்த்ததில்லை.

இங்கிலாந்தில் வந்து இறங்கினவுடன் உங்களை முதலில் வந்து பார்த்து என்னுடைய மரியாதையை சமர்ப்பிக்க எண்ணினேன். பிற்பாடு, வெளியூருக்குப் புறப்பட்டுப் போகும் முதல் போர் படையில் என் இஷ்டத்துடன் சேருவதென்று நினைத்தேன். ஆனால் வந்துகொண்டிருக்கும் வழியில் ஒரு பழைய சிநேகிதனைக் கண்டதும் என்னுடைய தீர்மானங்கள் மாறிவிட்டன. அவர் ஒரு ஹாஸ்ய நாடகக் கம்பெனியைச் சேர்ந்தவரென்று தெரிந்தது. அவர்கள் நாட்டுப்புறங்களில் கோடை காலக்ஷேபமாக ஆடப்போய்க்கொண்டிருந்தார்கள். அந்தக் கூட்டத்தில் நான் ஒரு நடியாகவிருக்க அவர்களில் அதிக ஆக்ஷேபணையில்லாமலிருந்தது. இருந்த போதிலும் நான் செய்யவிரும்பிய முயற்சியின் கடினத்தைப்பற்றி எனக்கு எச்சரிக்கை செய்தார்கள். அதாவது பொதுஜனக்கூட்டம் அநேக சிரஸுள்ள ராக்ஷஸனை ஒத்தது. யார் யார் மிகவும் கூர்மையான புத்தியுடையவர்களோ, அவர்கள் தான் அதற்கு திருப்தி செய்ய முடியும். நாடகத்தில் ஆடுவதென்பது ஒரு நாளில் கற்றுக்கொள்ளமுடியாது. நூற்றுக்கணக்கான வருஷங்களாக வழங்கி வருகிறதும் நாடகத்திற்கே ஏற்பட்டதாயுமுள்ள பாரம்பரியமான ஒய்யாரநடை, கண் சிமிட்டல், தோளாட்டம் இவைகள் இல்லாமல், அவர்களைக் களிக்கச் செய்ய முடியாது. இன்னொரு சங்கடமென்னவென்றால், எனக்கு எந்த வேஷத்தைப் போடுவதென்பது. எல்லோருமே அவர் அவர்களுக்கு பழக்கமான வேஷங்களில் தேர்ந்தவர்கள். ஆகையால் என்னை ஒரு வேஷத்திலிருந்து மற்றொன்றாகத் தள்ளப்பட்டு கடைசியில் ஹொரேஷியோவாக நடிக்கத் தீர்மானிக்கப்பட்டது. அதில் நடிப்பதை இங்கே இருக்கிறவர்கள்-க்ஷேமச்செயலாய் என்னை நடிக்காமல் நிறுத்திவிட்டார்கள்.

# அத்தியாயம் 21

*துன்மார்க்கத்தில் ஈடுபட்டவரின் சிநேகம் கொஞ்சகாலம் மட்டுமே நடைபெறும்; ஒருவருக்கொருவர் திருப்தியளிக்கிறவரையில்தான்.*

என் மகனுடைய விருத்தாந்தம் ஒரே சமயத்தில் சொல்ல முடியாதபடி அவ்வளவு அதிகமாக இருந்தது. முதல் பாகம் அந்த இரவில் ஆரம்பிக்கப்பட்டது. மற்றது மறுநாள் சாப்பாட்டிற்கு பிறகு. அப்பொழுது வாசற்படியில் மிஸ்டர் தார்ன்ஹில்லின் சாமான்களின் வரவு எல்லோருடைய சந்தோஷத்திலும் கொஞ்சம் தடங்கல் செய்தது. அந்தப் பட்லர் அந்தக்குடும்பத்தில் இப்பொழுது எனக்கு சிநேகமாய் விட்டான். காதோடு அவன் என்னிடத்தில் அந்த ஸ்குயர் மிஸ் வில்மோட்டிடம் ஏற்கெனவே கொஞ்சம் நெருங்கி தன்னுடைய தாம்பத்ய எண்ணங்களைக் கூறியிருக்கிறார். அவளுடைய மாமனும் மாமியும் அந்த வரனை மிகவும் சிலாக்கியமாய்க் கருதுவதாகத் தெரிகிறதென்றான். மிஸ்டர் தார்ன்ஹில் நுழைந்ததும் என்னையும் என் மகனையும் பார்த்து கொஞ்சம் திகைத்துப் பின்வாங்கினான். ஆனால் நான் அதை உடனே எதிர்பாராததின் காரணத்தினாலேயே அன்றி அதிருப்தியினால் உண்டாகவில்லை என்று நினைத்தேன். இருந்த போதிலும் நாங்கள் அவரை வந்தனமளிக்க முன் சென்றதும், அவர் எங்களுடைய வந்தனத்தை மிக பூரிப்புடனும் கபடில்லா மனத்தோடும் திருப்பி அளித்தார். கொஞ்ச நேரத்தில் அவருடைய சேர்க்கை பொதுவாயுள்ள கொந்தளிப்பைக் கொஞ்சம் அதிகரித்தது.

தேத்தண்ணீர் பானம் செய்தவுடன், அவர் என்னை தனியாகக் கூப்பிட்டு என் மகனைப்பற்றி விசாரித்தார். என்னுடைய தேடுதல் பிரயோஜனப்படவில்லையென்று தெரிவித்ததும் அவர் மிக ஆச்சரியத்தை அடைந்தார்.

அவரும் அதற்குப்பின், அடிக்கடி என் குடும்பத்தில்
உள்ள மற்றவர்களைச் சாந்தப்படுத்துவதற்காக என்
வீட்டிற்குப் போனதாகவும், அவர்களெல்லாரும் சௌக்
கியமாயிருக்கிறதாகவும் சொன்னார். பிறகு என் மகளின்
துர்ப்பாக்கியத்தை மிஸ் வில்மோட்டினிடமாவது என்
மகனிடமாவது தெரியப் படுத்தினேனாவென்று அவர்
என்னைக் கேட்டார். அவர்களிடம் சொல்லவில்லை
யென்றதின்மேல், அவர் என்னுடைய முன்யோசனையை
யும் ஜாக்கிரதையையும் மெச்சினார். அப்படியே அதை
எவ்விதத்திலாவது, ரகசியமாக வைத்திருக்கும்படி
இஷ்டப்பட்டார். "ஏனெனில் நமக்கு மிகவும் இஷ்டமா
யிருக்கிற இடத்திலும் அது நம்முடைய சொந்த அப
கீர்த்தியை தெரியப் படுத்திக் கொள்வது போலாகும்.
ஒரு சமயம் மிஸ் விலி நாம் எல்லோரும் நினைக்கிறதுபோல்
அவ்வளவு குற்றமுடையவளா யிருக்கலாம்" என்றார்
அவர். இங்கே நாங்கள் ஒரு வேலைக்காரனால் குறுக்கிடப்
பட்டோம். அவன் ஸ்குயரை நாட்டுப்புறத்து நடிப்பில்
சேர, வேண்டுகோளுடன் அழைக்க வந்தான். அவர்
என்னிடம் விட்டுப்போனபிறகுதான் என்னுடைய
விஷயங்களில் அவர் எடுத்துக்கொண்ட கவலையைப்பற்றி
நான் மிகச் சந்தோஷமுடையவனாகினேன். மிஸ் வில்
மோட்டிடம் அவருடைய பேச்சு வார்த்தைகளெல்லாம்
வெளிப்படையா யிருந்ததால் ஒருவரும் அவர்கள் இருவ
ருக்குமுள்ள காதலைப்பற்றி சந்தேகப்படவில்லை. ஆனாலும்
அவள் பூர்ண களிப்புடன் இருந்ததாக எனக்குப் புலப்பட
வில்லை. அவளுடைய மாமியின் வேண்டுகோளுக்
கிணங்கியே ஒழிய, தன்னுடைய சொந்த இச்சை
யினாலல்ல. அவள் அவற்றை ஏற்றுக்கொண்டிருந்தாள்.
அவள் என் துர்பாக்கியனான மகன் மீது கொஞ்சம்
அன்பான பார்வையோடு வீக்ஷண்யத்தை வீசியதாகப்
பார்க்க, நான் சந்தோஷமடைந்தேன். மற்றவர் அவ
ருடைய பொருளினாலும் இடைவிடா கவனத்தினாலும்
இதைப் பெறமுடியவில்லை. பார்வைக்கு, மிஸ்டர் தார்ன்
ஹில் அமைதியுடனிருந்தார். அது எனக்கு மிக்க ஆச்சரி
யத்தைக் கொடுத்தது. மிஸ்டர் ஆர்னல்டுவினுடைய
வற்புறுத்தலினால் நாங்கள் இப்பொழுது இங்கே ஒரு



வாரம் இருந்துவிட்டோம். ஆனால் ஒவ்வொரு நாளும்
மிஸ் வில்மோட் என் மகனிடத்தில் அதிக அன்பை
நாளுக்குநாள் காட்டக்காட்ட, மிஸ்டர் தார்ன்ஹில்லுக்கு
என மகனிடத்தில் அதற்குத் தகுதியான அதிக சிநேகம்
வளர்ந்தது.

எங்கள் குடும்பத்தின் க்ஷேமத்திற்காக தன்னுடைய
செல்வாக்கை உபயோகப் படுத்துவதாக மிகவும் அன்பு
கூர்ந்த மொழிகளால் முன்னமேயே அவர் சொல்லிக்
கொண்டு வந்திருந்தார். இப்பொழுது அவர் அன்பு
கூர்ந்த வார்த்தைகளில் மட்டுமே நிற்கவில்லை. என்றைக்கு
நான் என் வீட்டுக்குப் புறப்படுவதாக உத்தேசித்திருந்
தேனோ அன்று காலை மிஸ்டர் தார்ன்ஹில் என்னிடம்
நிஜக் களிப்போடு வந்து தம் சிநேகிதன் ஜார்ஜுக்கு ஒரு
உபகாரம் செய்ததாகச் சொன்னார். இது என்னவென்
றால், வெஸ்ட் இண்டீஸ் என்ற தீவுகளுக்குப் புறப்பட்டுப்
போகும் ஒரு பட்டாளத்தில் ஒரு ஆரம்ப ஆபீஸர் வேலை
அவருக்குத் தாம் வாங்கிக் கொடுத்ததாகச் சொன்னார்.
அதற்குச் செலுத்தவேண்டிய மூந்நூறு பவுனுக்குத் தம்
முடைய சிபாரிசின்மேல் இருநூறு பவுன் ரத்து செய்யப்
பட்டு பாக்கி நூறு பவுன் கொடுத்தால் போதுமென்று
சொன்னார். "இந்தச் சின்ன உபகாரத்திற்காக தமக்கு
வேறொரு மறுகளிப்பு வேண்டுவதில்லை. தம்முடைய சிநே
கிதனுக்கு உபகாரம் செய்தோமென்கிற களிப்பு மட்டும்
போது"மென்று சொன்னார். "கொடுக்கப் படவேண்டிய
நூறு பவுனை நீங்கள் இப்பொழுது ஏற்பாடு செய்து
கொடுக்க முடியாவிட்டால் நான் என் கையிலிருந்து
கொடுக்கிறேன். நீங்கள் உங்களுக்கு சௌகரியமான
பொழுது கொடுக்கலாம்" என்றார். இந்த உபகாரத்திற்
காக எங்களுக்கு வந்தனமளிக்கப் போதுமான வார்த்தை
கள் நாவில் எழவில்லை. அவர் கேட்காமலே நான் பணத்
திற்காக ஒரு பாண்டு எழுதிக்கொடுத்தேன். நான் அதைத்
திருப்பிக் கொடுப்பதில்லை யென்கிற எண்ணமிருந்தால்,
எவ்வளவு செய்நன்றி சமர்ப்பிக்க வேண்டுமோ அவ்
வளவு செய்தேன். ஜார்ஜ் அவனுடைய நல் மனதுடைய
போஷகரின் நியமனத்தின்பேரில் தன்னுடைய உத்யோ

கத்தைப் பெறுவதற்கு மறுநாள் நகரத்திற்குப் போக உத்தேசித்தான். அவனிடம் அவர் சீக்கிரப்படுத்துவது சமயோசிதமென்று கருதினார். ஏனெனில் இந்தச் சந்தர்ப்பத்தில் வேறொருவன் இவனைவிட அதிகமான சௌகரியத்துடன் யாசித்தால் அந்த உத்தியோகத்தை அவனுக்கு அளித்து விடலாமென்று எண்ணினார். ஆகையால் மறுநாட் காலை, நம்முடைய வாலிப தளகர்த்தர் தாம் புறப்படுவதற்காக அதிகாலையிலேயே தயாராயிருந்தார். அங்கே இருந்தவர்களில் அவன் மட்டும் இந்த விஷயத்தினால் மனச்சஞ்சலப் படாமலிருந்தான். தான் அனுபவிக்கப் போகும் சிரமத்தினாலோ, அபாயங்களினாலோ, அல்லது தான் விட்டுப் போகும் சிநேகிதர்களினாலோ, அல்லது தன் காதலியாலுமே (ஏனெனில் மிஸ் வில்மோட் உண்மையில் இவனை நேசித்தாள்) எவ்விதத்தாலும், அவனுடைய உற்சாகம் குறைய வில்லை. அவன் மற்றவர்களிடம் விடை பெற்றுக்கொண்ட பிறகுதான், என் கையிலிருந்த எல்லாவற்றையும் அவனிடம் கொடுத்தேன். அதாவது என்னுடைய ஆசீர்வாதத்தையே. "இப்பொழுது என் குழந்தாய், நீ உன்னுடைய தேசத்திற்காக யுத்தத்தில் அமரப் போகிறாய். உன்னுடைய வீரப் பெருந்தாதை எப்படி தம்முடைய அரசனுக்காக சண்டை போட்டார் என்பதை ஞாபகப் படுத்திக்கொள். அந்தக் காலத்தில் பிரிட்டனில் ராஜ விஸ்வாஸமென்பது ஒரு நற்குணம். போய் வா, என் குழந்தாய், அவருடைய துர்பாக்கியத்தைத் தவிர மற்ற விஷயங்களில் அவரைப் பின்பற்றி நட (லார்ட் பால்க்லாண்டோடு கொல்லப் படுவது ஒரு துர்பாக்கியமானால்) போய் வா, என் குழந்தாய். நீ இறந்தால் தூர தேசத்திலிருந்தாலும், கவனிப்பில்லாமல் வெளியில் காயத்துடன் போடப் பட்டாலும், இறக்கும் பொழுது உன்னை நேசித்தவர்கள் பக்கத்திலிருந்து அழாவிட்டாலும், புதைக்கப் படாத தளகர்த்தரின் தலையில் பெய்யும் பனித்துளிகளே பகவானால் மிகவும் போற்றப் பட்ட கண்ணீர்கள்."

மறுநாட் காலையில் நான் எனக்கு இவ்வளவு நான் அதிதி கைங்கர்யம் செய்த அந்த உத்கிருஷ்ட



மான குடும்பத்தினரின் உத்தரவைப் பெற்றுக் கொண்டு புறப்பட்டேன். மிஸ்டர் தார்ன்ஹில்லுக்கு கடைசியில் செய்த பொருளுதவிக்காக செய்த நன்றியை பலவிதத்தில் புகன்றேன். ஏராளமான பொருள், செவ்வெனப் போஷிக்கப்படுதல், இவ்விரண்டும் அளிக்கக்கூடிய எல்லா விதமான சுகானுபவங்களை அனுபவித்துக் கொண்டிருக்கும் அவர்களிடமிருந்து நான் விடை பெற்றுக் கொண்டு வீட்டை நோக்கித் திரும்பினேன். என் மகளை இனிமேல் எங்கே காணப்போகிறேமோ, இல்லையோ என்கிற ஏமாற்றத்தால் பகவானுக்கு அவளை மன்னித்துக் காப்பாற்றும்படியாக சோகப் பெருமூச்சு விட்டுக் கொண்டு போனேன். பலஹீனத்தால், நான் சவாரி செய்ய ஒரு குதிரையை வாடகைக்கு வாங்கிக்கொண்டு இப்பொழுது என் வீட்டிற்கு இருபது மைல் தூரத்திற்குள் வந்து விட்டேன். இவ்வுலகில் மற்றெல்லாவற்றைக் காட்டிலும் நான் அதிகமாய்ப் பாராட்டும் என் குடும்பத்தை சீக்கிரம் பார்க்கப் போகிறேனென்ற நம்பிக்கையால் கொஞ்சம் ஆஸ்வாஸமடைந்தேன். இரவு வந்தவுடன் ரஸ்தாவின் பக்கத்திலுள்ள ஒரு சிறிய பொதுத் தங்குமிடத்தில் நான் தங்கினேன். ஒயின் பானம் செய்யும் பொழுது சம்பாஷணைக்காக வீட்டுக் காரரையும் அழைத்தேன். அந்த வீட்டில் சிறந்த அறையாகிய அவருடைய சமயல் கட்டில் அடுப்புப் பக்கத்தில் உட்கார்ந்தோம். மற்ற விஷயங்களோடு வாலிப ஸ்குயர், தார்ன்ஹில் இவர்களைப் பற்றிப் பேசினோம். அவருடைய சிற்றப்பன் ஸர் வில்லியம் சிற்சில சமயங்களில் நாட்டுப் புறங்களுக்கு வருவதுண்டு. அவர் எவ்வளவு அன்புடன் பாராட்டப் படுகிறாரோ அவ்வளவு இவர் துவேஷிக்கப் படுவதாய் அந்த வீட்டுக்காரர் சொன்னார். அவர் யார் தம்மை அவரவர்கள் வீட்டிற்கு அழைத்து ஆதரிக்கிறார்களோ அந்த வீட்டுப் பெண்களை மோசம் செய்வதே தம்முடைய முழுத் தொழிலாக வைத்துக்கொண்டிருக்கிறாரென்று மேலும் சொன்னார். இரண்டு மூன்று வாரம் அவர்களை வைத்திருந்து பிறகு பிரயோஜனம் ஒன்றும் செய்யாமல் துரத்திவிடுகிறார். அவர்களும் உலகத்தாரால் தள்ளிவிடப் படுவார்கள். நாங்கள் இம்மாதிரி பேசிக்

கொண்டிருக்கும்பொழுது அவருடைய மனைவி சில்லறை மாற்றப்போயிருந்தவள் திரும்பி வந்தாள். தன் கணவன் தானில்லாமல் களித்துக்கொண்டிருக்கிறாரென்பதைப் பார்த்து அவள் அவரை அங்கே என்ன செய்து கொண்டிருக்கிறீர்களென்று கோபத்தோடு கேட்டாள். அவளை முகத்திலடிக்கிறாற்போல் அவர் அவளுடைய சுகத்திற்காக வேண்டி ஒரு வாய் பானம் பண்ணினார். "மிஸ்டர் ஸைமண்ட்ஸ் நீர் என்னை மிக்க கொடுமையாக நடத்துகிறீர். நான் இனிமேல் அதைப் பொறுக்கமுடியாது. இங்கே முக்கால்வாசி வேலையை நான் செய்யும்படி விட்டுவிடுகிறீர். பாக்கி கால்வாசி செய்யாமல் பாக்கியிருக்கிறது. நீர் ஒன்றும் செய்வதில்லை. வரும் வாடகைக்காரருடன் நாள் முழுவதும் குடித்துக் கொண்டேயிருக்கிறது தான் வேலை. எனக்குக் காய்ச்சல் வந்து நீருவதாயிருந்தாலும் நான் ஒரு முட்டை பானம், ஒரு சொட்டுக்கூட தொடுவதில்லை" என்றாள். அவளுக்கு என்னவேண்டுமென்பதை நான் அப்பொழுதே அறிந்தேன். உடனே ஒரு கிளாஸ் ஊற்றினேன். அவள் அதை வணக்கத்துடன் வாங்கி என்னுடைய நற்சுகத்திற்கென்று குடித்தாள். "ஐயா நான் மதுபானத்தை இச்சித்துக் கோபம் கொள்ளவில்லை. ஆனால் வீட்டில், அறியாமல் எல்லாம் நஷ்டமாகும்பொழுது, இவ்விதமான நடத்தையை நான் பொறுக்கமுடியாது" என்று சொன்னாள். "வழக்கக்காரர்களோ, அவ்வப்பொழுது வருகிறவர்களோ, பணத்திற்காகத் தொந்தரவு செய்யப்பட வேண்டுமென்றால், அந்தப் பொறுப்பெல்லாம் என் தலையில்; அவர்களைப் பின் தொடர்வதென்றால், அவர் அதை செய்வதை விட அந்தக் கிளாஸைத் தின்றுவிடுவார். இப்பொழுது அங்கே மாடிமேல் ஒரு சிறு பெண்மணி இங்கே இருப்பிடம் தேடி வந்திருக்கிறாள். அவள் அதிக மரியாதை காட்டுவதிலிருந்து அவளிடத்தில் பணம் ஏதாவது இருப்பதாக நான் நம்பவில்லை. அவள் பணம் கொடுப்பதில் மிகவும் தாமதம் பண்ணுகிறாள். அவளை அதைப்பற்றி ஞாபகப்படுத்த விரும்புகிறேன்" என்று மேலும் சொன்னாள். "அவளை ஏன் ஞாபகப்படுத்த வேண்டும். அவள் மென்னக் கொடுப்பவளென்றால் நிச்சயமாகக் கொடுப்பாள்"



என்றார் வீட்டுக்காரர். "அது எனக்குத் தெரியாது. ஆனால் அவள் இங்கே இரண்டு வாரமாயிருக்கிறாளென்று மட்டும் தெரியும். அவளுடைய பணத்தின் ஒரு கிராஸைக் கூட இன்னும் நான் பார்க்கவில்லை" என்றாள் அவர் மனைவி. "எல்லாம் ஒரே தடவையில் மொத்தமாகக் கொடுக்கப்படும் என்று நினைக்கிறேன் என் பிரியே" என்றார் அவள் கணவன். "மொத்தமாகவா, எப்படியாவது நமக்கு அது கிடைக்குமென்று நம்புகிறேன். அது இன்றைக்கே கிடைக்கப்பட வேண்டும். அல்லது அவள் வெளியே தள்ளப்படுவாள் எல்லா சங்காத்தத்தோடும் வெளியே தள்ளப்படுவாள். இது நிச்சயம்" என்றாள். "என் பிரியே, இதைக் கவனிக்கவேண்டும். அவள் ஒரு சீமாட்டி. அவளை இதைவிட மரியாதையாய் நடத்த வேண்டும்" என்றார் அவள புருஷன். "அதைப்பற்றி என்ன? அவள் சீமாட்டியாயிருந்தாலென்ன, பெருமாட்டியாயிருந்தாலென்ன? அவள் ஒரு அர்த்த சந்திரத்தோடு வெளியேற வேண்டியதுதான். பெரிய மனுஷத்தனம் எங்கே அவைகள் சமாளிக்கப் படுகின்றனவோ, அங்கே அவைகள் நல்ல பதார்த்தங்கள்தான். ஆனால் என்னைப்பற்றின மட்டும் 'ஹாரோ' அடையாளமுள்ள ஹோட்டலில் அவர்களிடம் மிக்க நன்மை நான் கண்டதில்லை" என்று சொல்லிக்கொண்டே அவள் சமையலறையிலிருந்து, போகப்பட்ட ஒரு குறுகிய மாடிப் படிக்கட்டில் ஏறி, மேலேயிருக்கும ஒரு அறைக்குள் போனாள். அவளுடைய பேச்சின் தொனியிலிருந்தும், அவளுடைய வசவின் குரூரத்திலிருந்தும், குடியிருப்பவளிடமிருந்து பணம் கிடைத்ததாகத் தெரியவில்லை என்று சீக்கிரத்தில் கண்டு கொண்டேன். அவளுடைய எதிர்ப்பை நான் தெளிவாகக் கேட்டேன், "போ, நான் சொல்லுகிறேன், இந்த நிமிஷமே சாமானைத் தூக்கிக்கொண்டு போ. ஊர் சுற்றி, ஏ, நாணயமற்றவளே, தட்டுவாணி, இல்லாவிடில் நான் உன்மேல் ஒரு அடையாளம் செய்வேன். அதனால் உனக்கு மூன்று மாதம் சுகக்கேடு ஏற்படும். என்ன, ஏ ஓடுகாலி, இங்கே வந்து ஒரு சாதுவினுடைய வீட்டில், ஒரு சல்லித் துட்டு கூட கையில் கோடு கிழித்துக் கொள்ளக்கூட இல்லாமல், நுழைந்தாய். நான் சொல்லுகிறேன், வா இங்கே."

அந்த யாத்ரீகப் பெண் சொன்னாள். "ஐயோ அம்மா,
என்மேல் இரக்கம் கொள். பரிதாபமாக தள்ளப்பட்ட
ஒரு ஜீவனிடத்தில் ஒரு இரவுக்கு மட்டும் தயை செய்.
சாவு சீக்கிரம் பாக்கியை சரிப்படுத்திவிடும்." நான்
உடனே என்னுடைய பரிதாபமாக கெடுக்கப்பட்ட
குழந்தை ஒலிவியாவின் குரலாக அறிந்து கொண்டேன்.
நான் அவளை விடுவிக்கப் பாய்ந்தேன். அப்பொழுது அந்த
ஸ்திரீ அவளை மயிரைப் பிடித்து இழுத்துக்கொண்டு வருகி
றாள். என்னுடைய இரண்டு கரத்தினாலும் நான் எங்கள்
பிரியத்திற்குப் பாத்திரமான, அந்த ஆதாரவற்று மோசம்
போன பெண்ணைப் பிடித்துக் கொண்டேன். "உன்
வரவை எதிர்பார்க்கிறோம். என்ன இருந்தாலும் உனக்கு
நல் வரவே. இழக்கப்பட்ட என் மணியே, என் செல்வமே,
உன் பரிதவிக்கத்தக்க கிழத்தகப்பனின் மார்பில் அடைக்
கலமாக, வா. துன்மார்க்கிகள் உன்னைத்தள்ளிவிட்டாலும்,
இந்த உலகில் உன்னை எப்பொழுதும விட்டுவிடாமலிருக்
கக்கூடியவர் இன்னும் ஒருவர் இருக்கிறார். நீ பதினாயிரம்
குற்றங்கள் செய்ததாகச் சொல்லப்பட்டாலும் அவர்
அவற்றை யெல்லாம் மன்னித்து விடுவார்" என்றேன்.

"ஓ, என் பிரியமுள்ள"...........சில நிமிஷங்களுக்கு
அவள் வேறொன்றும் சொல்ல முடியவில்லை. "என்
னுடைய...என்னுடைய...என்னுடைய மிகப் பிரிய
முள்ள சாந்தமுடைய அப்பா! தெய்வங்கள் இதற்கு
மேல் கருணையுடனிருக்க முடியுமா? நான் எப்படி இவ்
வளவு அன்பிற்குப் பாத்திரமாகிறேன்! அந்த அயோக்கி
யன்...அவனையும் என்னையும் நான் வெறுக்கிறேன். இவ்
வளவு குணத்திற்கு நான் ஒரு எச்சாக ஆகிவிட்டேன்.
நீங்கள் என்னை மன்னிக்கக் கூடாது. உங்களால், முடியா
தென்று எனக்குத் தெரியும்." "ஆம், என் குழந்தாய், என்
மனப்பூர்வமாய் நான் உன்னை மன்னிக்கிறேன். நீ செய்
ததைத் தப்பென்று ஒப்புக்கொண்டால் போதும். அப்
பொழுது நாம் சந்தோஷமாக இருக்கலாம். நாம் இன்
னும் அநேக சௌகரியமான நாட்களைப் பார்ப்போம்,
என் ஒலிவியா" என்றேன். "ஆஹா, எப்பொழுதுமில்லை.
ஐயா, எப்பொழுதுமில்லை. என்னுடைய வீணாய்ப்போன



வாழ்வின் பாக்கிக் காலம் வெளியே அபகீர்த்தியும் வீட்
டில் அவமானமும்தான். ஆனால், ஐயோ, அப்பா! நீங்கள்
மிகவும் இளைத்து வெளுத்து இருக்கிறீர்களே. என்னைப்
போல் ஒருத்தி உங்களுக்கு அவ்வளவு மனத்தாங்கல்
கொடுக்கக்கூடுமா? நிஜமாக என்னுடைய குற்றத்தின்
சோகத்தைப் பாராட்டாமலிருக்க உங்களுக்கு எவ்வ
ளவோ விவேகம் உண்டு." "நம்முடைய விவேகம், வாலி
பஸ்திரியே..." என்று சொல்லுமுன் "என் அப்பா, இப்
படிப்பட்ட ஆதாவில்லாத பெயர்? அப்படிப்பட்ட கடுமை
யான சொல்லால், என்னை நீங்கள் எப்பொழுதாவது கூப்
பிட்டது இது முதல் தடவையே" என்று சொன்னாள்.
"நான் மன்னிப்புக் கேட்டுக்கொள்ளுகிறேன் என் செல்
வமே" என்றேன். "நான் சொல்லப் புகுந்த தென்ன
வென்றால், இடையூறு வருங்காலத்தில், விவேகம் மட்டான
எதிர்ப்பைத்தான் செய்யும். ஆனால் அது கடைசியில்
வெற்றி யடையும்."

வீட்டுக்காரி இப்பொழுது திரும்பி வந்து, எங்களுக்கு
அதைவிட கௌரவமான இடம் தேவையாவென்று கேட்
டாள். நான் சம்மதித்ததின்பேரில், அங்கே கூச்சமில்லா
மல் பேசக்கூடிய ஒரு அறை காண்பிக்கப் பட்டோம்.
நாங்கள் கொஞ்ச நேரம் மனச்சாந்தியடையும் மட்டும்
பேசிய பிறகு, நான் அவளுடைய தற்சமய நிராதரவற்ற
நிலைமைக்கு, எப்படி படிப்படியாய் கொண்டுபோய் விடப்
பட்டாய் என்ற சில விருத்தாந்தங்களைக் கேட்காமலிருக்க
முடியவில்லை. "அந்த அயோக்கியன் ஐயா, நாங்கள் சந்
தித்த நாளிலிருந்தே, எனக்கு ரகசியத்தில் கௌரவமான
எண்ணங்களைப் பாராட்டிக்கொண்டு வந்தார்" என்றாள்.

"அயோக்கியன்தான் உண்மையில். ஆனாலும் எப்படி
மிஸ்டர் பார்க்கெல் போல் உள்ளவர் அவருடைய புத்திக்
கூர்மையும் ஸ்பூரிக்கும் மரியாதையோடும் கூட, இப்பேர்ப்
பட்ட தீர்மானமான ஈனச் செயலைச் செய்யக் கூடு
மென்றும், ஒரு குடும்பத்தில் அதைக் கெடுத்துவிடும் எண்
ணத்துடன் நுழையக் கூடுமென்பதைப் பற்றியும் சிந்திக்க
எனக்குக் கொஞ்சம் ஆச்சரியத்தை உண்டுபண்ணுகிறது"
என்றேன்.

"என் அன்புள்ள அப்பா! நீங்கள் நடக்கக்கூடாத
ஒரு தவறுதலான எண்ணத்தில் அகப்பட்டுக் கொண்டு
சுழலுகிறீர்கள். மிஸ்டர் பார்க்கெல் என்னை ஏமாற்ற ஒரு
பொழுதும் முற்பட்டதில்லை. அதற்குப் பதிலாக, அவர்,
மிஸ்டர் தார்ன்ஹில்லின் சூழ்ச்சியிலிருந்து, என்னை ரகசிய
மாக சந்தர்ப்பம் வாய்ந்த போதெல்லாம் எச்சரிக்கை
செய்தார். தார்ன்ஹில்லோ, அவர் சொன்னதைவிட மிகக்
கொடியவரென்று இப்பொழுதுதான் தெரிந்து கொண்
டேன்". "மிஸ்டர் தார்ன்ஹில், அவரா!" என்று
கேட்டேன். "ஆம் ஐயா, மிஸ்டர் தார்ன்ஹில்லே என்னை
ஏமாற்றி இழுத்துக்கொண்டு போனார். அவரே அந்தச்
'சீமாட்டி'களென்று அழைத்த இரண்டு பெண்களை ஏற்
பாடு செய்தது. அவர்களோ உண்மையில் பட்டணத்தி
லுள்ள கெட்டுப்போன ஸ்திரீகள். இரக்கமில்லாதவர்கள்.
என்னை லண்டனுக்கு சூழ்ச்சியாய்க் கூட்டிக் கொண்டு
போக நியமிக்கப் பட்டவர்கள். அவர்களுடைய தந்திரம்
மிஸ்டர் பார்க்கெல்லின் கடிதத்தினாலில்லாவிடில் பழு
தில்லாமல் நிறைவேறியிருக்கும். மிஸ்டர் பார்க்கெல் தன
னுடைய நிந்தைகளை மட்டுமே அவர்களிடம் சமர்ப்பித்
தார். அவைகள் நம்மைப்பற்றியவை என்று நாம் நினைத்
துக் கொண்டிருந்தோம். அவர் அவர்களுடைய எண்
ணத்தை தவிர்க்கும்படியான அவ்வளவு செல்வாக்கு எப்
படி இருந்ததென்பது இன்னும் எனக்குப் புரியாமலே
யிருக்கிறது. ஆனால் அவர் எப்பொழுதும் நம்முடைய அத்
யந்தமான சிநேகிதரென்று எனக்கு நிச்சயமான நம்
பிக்கை இருக்கிறது" என்றாள்.

"நீ சொல்வது எனக்கு ஆச்சரியத்தை உண்டு
பண்ணுகிறது. என் கண்மணியே" என்றேன் நான்.
"ஆனால் இப்பொழுதுதான் நான் மிஸ்டர் தார்ன்ஹில்லின்
இழிவான நடத்தையில் முதன் முதலாகக் கொண்ட சந்
தேகம் சரியான முகாந்திரத்தின் மேல்தான் கொள்ளப்
பட்டதென்று நன்கு விளங்குகிறது. ஆனால் அவர்
அசைக்க வொண்ணா அந்தஸ்தில் நம்மை வெல்லலாம்.
ஏனெனில் அவரோ தனவந்தர். நாமோ ஏழை. ஆனால்
எனக்குச் சொல், குழந்தாய், உன்னுடைய அப்பேர்க்



கொத்த படிப்பையும் உன்னைப்போலுள்ள அப்பேர்க்
கொத்த தன்மையும் இவைகளுடைய வாசனைகளெல்லாம்
துடைத்து விடும்படியான மனக்கவர்ச்சி சாமான்யமாய்
இருந்திருக்காது என்பது திண்ணம்."

"நீங்கள் சொல்வது சரியே ஐயா, எவர் வெற்றி
யடைந்ததெல்லாம் கூடி நான் அவரை சந்தோஷிக்கச்
செய்ய வேண்டுமென்ற என்னுடைய ஒரே அவாவினால்
மட்டுமே தவிர வேறில்லை. என்னுடைய நன்மையைப்
பற்றி நான் நினைக்கவேயில்லை. போப் இனத்தைச் சேர்ந்த
ஒரு புரோகிதரால் ரகசியத்தில் பண்ணிவைக்கப்பட்ட
எங்களுடைய விவாகக் கிரியை ஒரு விதத்திலும் கட்டுப்
படுத்தாதென்று எனக்குத் தெரியும். அவருடைய கண்
யத்தைத்தவிர வேறொன்றிலும் நம்பிக்கை வைக்கக் கூடி
யவை யல்லவென்று எனக்குத் தெரியும்." "என்ன நீ
உண்மையில் ஒரு புரோகிதனால், தீக்ஷை பெற்றவரால்,
விவாகம் செய்துவைக்கப் பட்டனையா?" என்று நான்
குறுக்கிட்டேன். "அப்படியே, ஐயா, நாங்கள் செய்து
வைக்கப்பட்டோம். ஆனால் நாங்கள் இருவரும் அவர்
பெயரை வெளியிடாமலிருப்பதாகச் சத்தியம் செய்
தோம்." "அப்படியானால் என் குழந்தாய், என்னுடைய
கரத்திற்கு வா. முன்னைவிட ஆயிரம் மடங்கு வரவேற்க்
கப்பட்டாய். ஏனெனில், நீ எல்லா முகாந்திரத்தாலும்
விஷயத்தினாலும், அவருடைய மனைவி, மானிடச் சட்டங்க
ளெல்லாம் வைரத்தினால் எழுதப்பட்டாலும், அந்த தெய்
வீகமான பிணைப்பின் பலத்தைக் குறைக்க முடியாது."

"ஐயோ, அப்பா, அவனுடைய போக்கிரித் தன
மெல்லாம் உங்களுக்கு முழுமையும் தெரியாது. அதே
புரோகிதனாலேயே ஆறு அல்லது எட்டு மனைவிகளுக்கு
இப்படியே விவாகம் செய்துவைத்து அவர்களையும் என்
னைப் போலவே ஏமாற்றித் தள்ளியும் விட்டுவிட்டார்."

"அவர் அப்படிச் செய்தாரா? அப்படியானால்
அந்தப் புரோகிதனை தூக்கிலேற்ற வேண்டும். நாளைக்கே
அவனைப்பற்றி நீ புகார் செய்ய வேண்டியது" என்றேன்
நான். "ஆனால் ஐயா, நான் ரகசியமாய் வைத்துக்
கொள்ள சத்தியம் செய்திருக்கும்பொழுது அப்படிச்

செய்வது சரியா?" என்று அவள் பதிலுரைத்தாள். "என் கண்மணியே, அப்பேர்க்கொத்த வாக்குத்தத்தம் செய்திருந்தால் நான் அதை உடைக்க மாட்டேன். உன்னையும் அப்படிச் செய்யச் சொல்ல மாட்டேன். அது பொது ஜனங்களுக்கு நன்மையாயிருந்த போதிலும், நீ அவரைப் பற்றி சாக்ஷியம் சொல்லக்கூடாது. எல்லா மனுஷ்ய ஏற்பாடுகளிலும் ஒரு சிறு கெடுதி பெரிய நலத்தை உண்டு பண்ணுமானால், அது செய்யப்படுகிறது. ராஜீயத்தில் ஒரு ராஜாங்கத்தைப் பெறுவதற்காக ஒரு மாகாணத்தைக் கொடுத்து விடலாம். வைத்திய முறையில் உயிரைக் காப்பாற்ற ஒரு அவயத்தை சேதித்து விடலாம். ஆனால் மதக் கொள்கையில் சட்டம் எழுதப்பட்டிருக்கிறது. முறிக்கத்தகாதது. அதாவது எப்பொழுதும் கெடுதி செய்யக்கூடாது. இந்தச் சட்டம் என் குழந்தாய் சரியானது. இல்லாவிடில் அதிக செளகர்யம் பெற ஒரு சிறு கெடுதி செய்தோமானால் அது சந்தேகமில்லாமல் குற்றமே. அதிலிருந்து வழுவும் ஏதோ ஒரு செளகரியத்திற்காக செய்யப்பட்ட குற்றமாகும். செளகரியம் எதிர்பார்த்தபடி நிச்சயமாய் வரும். குற்றம் செய்ததற்கும் செளகரியம் பெறுவதற்கு முள்ள இடைக் காலத்தில் குற்றம் சாட்டப்படலாம். அப்பொழுது நாம் செய்த குற்றங்களுக்குப் பதில் சொல்லும்படி ஏற்படும். அத்துடன் மானிடரின் செய்கைக ளெல்லாம் முடிந்துவிடுகின்றன. நீ பேசுவதின் நடுவில் நான் உன்னை மடக்குகிறேன். நீ மறுபடியும் சொல்லலாம், என் கண்ணே," என்றேன்.

"கூட்டிக் கொண்டு போன காலையிலேயே அவருடைய விசுவாஸத்திலிருந்து நான் ஒன்றும் எதிர்பார்க்க முடியாதென்று கண்டு கொண்டேன். அன்று காலையிலேயே அவர் என்னைப்போல்எமாற்றப்பட்ட பரிதாபமான நிலையிலிருக்கும் இரண்டு ஸ்திரீகளிடம் என்னைப் பரிச்சயம் செய்துவிட்டார். அவர்களோ வேசித்தனத்தில் சம்மதத்துடன் இருந்து வந்தார்கள். நான் அவரை மிகவும் ஆர்வத்தோடு நேசித்ததால் அவருடைய நேசத்திற்குப் பாத்திரமாக மற்றவர்களிருக்க நான் பொறுக்கவில்லை. என்னுடைய அப கீர்த்தியை வேடிக்கைக் கொந்த



ளிப்பில் மறக்க முயன்றேன். இந்த எண்ணத்தோடு நான் நடித்தேன்; உடுத்தினேன்; பேசினேன்; ஆனால் அப்படியும் சந்தோஷமில்லாம லிருந்தேன். அங்கே வந்திருந்த சில சீமான்கள் என்னுடைய செளந்தரியத்தின் வசீகரத்தைப் பற்றி ஒவ்வொரு நிமிஷமும் என்னிடம் சொன்னார்கள். இது என்னுடைய துக்கத்தை அதிகரித்தது. ஏனெனில் அந்த சக்தியை எல்லாம் நான் வீணாகச் செலவழித்து விட்டேன். இப்படி ஒவ்வொரு நாளும் நான் மேன் மேலும் மனோவியாதி பிடித்தவளாக ஆகவே, அவர் மேன் மேலும் என்னை நிந்திக்கலானார். கடைசியில் அந்த மிருகம் ஒரு கெட்டுப் போன பாரனட்டு பிரபுவுக்கு என்னை அளிக்கத் தைரியம் கொண்டார். இந்த அவமதிப்பு என்னை எப்படிப் புண் படுத்தியதென்று நான் சொல்லவும் வேண்டுமா? இந்த ஏற்பாட்டுக்கு என்னுடைய பதில், நான் மனமிழந்த தருணத்தில் கொடுக்கப்பட்டது. நான் தனியாய்ப் போய்விடுகிறேனென்றேன். நான் புறப்பட்டுக்கொண் டிருக்கும்பொழுது எனக்கு ஒரு பணப்பையைக் கொடுத்தார். நான் அதை அவரிடத்தில் ஆக்ரோஷத்தோடு விட்டெறிந்தேன். கோபாவேசத்தில் அவரிடமிருந்து திடீரென்று கிளம்பினேன். அச்சமயத்தில் என் கால நிலையின் குரூரத்தை நினைக்க அவகாசமில்லை. ஆனால் உடனே என்னைச் சுற்றிப் பார்த்தேன். இவ்வுலகில் எனக்கு நான் வேண்டுகோள் செய்யக்கூடும் ஒரு சிநேகிதனில்லாமல் ஒரு கெட்ட இழிவான குற்றவாளியாக நானே அறிந்து கொண்டேன். அந்தச் சமயத்தில் ஒரு அஞ்சல் கோச் வண்டி போகக் கண்டு, நான் அதில் ஏறிக்கொண்டேன். என்னுடைய ஒரே கருத்து அப்பொழுது என்ன வென்றால், நான் இழிவாகக் கருதிய, நான் பார்க்கச் சகியாத பாவியிடமிருந்து எட்டிய இடத்திற்குப் போய்விட வேண்டுமென்ற உத்தேசமே. நான் இங்கே இறக்கிவிடப்பட்டேன். வந்த முதற் கொண்டு என்னுடைய சொந்தக் கவலையும், இந்த ஸ்திரீயின் கொடுமையுமே எனக்குத் தோழிகளாக இருந்தன. என் தாயோடும், தங்கையோடும் நான் கழித்த சுகமான நேரங்களெல்லாம் இப்பொழுது என் துன்பத்தை அதிகரிக்கின்றன. அவர்களுடைய கஷ்டங்களோ

அதிகம். ஆனால் என்னுடையதோ அவர்களுடையதை விட மிக்க அதிகம். ஏனெனில் என்னுடையதில் குற்றம் அவமானம் இரண்டும் கலந்துள்ளன" என்றாள்.

"என் குழந்தாய், பொறுமையாயிரு. விஷயங்கள் இனிமேல் இதைவிட நன்மையாகவே இருக்கலாமென்று நம்புகிறேன். இன்றிரவு கொஞ்சம் இளைப்பாறு. நாளைக்கு உன்னை வீட்டிற்குக் கூட்டிக் கொண்டுபோய் உன் தாயாரிடத்திலும் குடும்பத்தின் மற்றவர்களிடத்திலும் உன்னை சேர்ப்பிக்கிறேன். அவர்கள் உன்னை அன்பாக வரவேற்பார்கள். பரிதாப நிலையிலுள்ள ஸ்திரீ, இது அவள் மனதைப் பிளந்துவிட்டது. ஆனால் ஒலிவியா, அவள் உன்னை இன்னமும் நேசிக்கிறாள். இதை மறந்து விடுவாள்."

# அத்தியாயம் 22

*ஹிருதயத்தில் அன்பிருந்தால் குற்றங்கள் எளிதில் மன்னிக்கப்படுகின்றன.*

மறுநாட் காலை என் மகளை என்பின் உட்கார்த்தி வைத்துக்கொண்டு வீட்டிற்குத் திரும்பப் புறப்பட்டேன். நாங்கள் போய்க்கொண்டிருக்கும்பொழுது, அவளுடைய துக்கங்களையும், பயங்களையும் எல்லாவித முகாந்திரங்களினாலும், அமைதியாக்க முயன்றேன். அவளுடைய தீங்கிழைக்கப்பட்ட தாயின் முன் தோன்றுவதற்கு, தைரியத்தைப் புகட்டிக் கொண்டு போனேன். நாங்கள் போய்க்கொண்டிருந்த அழகான பிரதேசத்தின் வனப்பை பார்த்து ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தெய்வம், மனிதர்கள் ஒருவருக்கொருவர் இருப்பதைக் காட்டிலும், எப்படி நம்மிடத்தில் அதிக கருணையுள்ளதாக இருக்கிறதென்றும், இயற்கையில் சம்பவிக்கும் கஷ்ட நிஷ்டூரங்கள் மிகவும் குறைவு என்றும், நிரூபித்தேன். நான் அவளிடத்தில் வைத்திருக்கும் அன்பில் ஒருவிதமான மாறுதலும் அவள் பார்க்க நேரிடாதென்று அவளைத் தைரியப் படுத்தினேன். என் வாழ்நாள் உள்ளவரையில் (அதுவோ நீடித்திருக்கலாம்) அவள் தனக்கு ரக்ஷகனும் குருவும் இருக்கிறாரென்று தீர்மானத்துடனிருக்கலாமென்றும் சொன்னேன். உலக நிந்தைகளை அசட்டை செய்யத் தைரியப்படுத்தினேன். ஆதரவற்றவர்களுக்கு, புஸ்தகங்களே குற்றங்கூறாத இனிமையான நண்பர்களென்றும் காண்பித்தேன். வாழ்க்கையில் அவை நமக்கு சுகானுபவத்தை விரும்பச்செய்ய முடியாவிட்டாலும், அதில் சம்பவிக்கும் கஷ்ட நிஷ்டூரங்களை பொறுத்துக் கொள்ளும்படியாவது கற்பிக்கும் என்று சொன்னேன்.

நாங்கள் சவாரி செய்த வாடகைக் குதிரையை என் வீட்டிலிருந்து ஐந்து மைல் தூரத்தில் வழியிலுள்ள ஒரு

சத்திரத்தில் இரவுக்கு விட்டு வைத்து என் மகனை வரவேற்
பதற்கு என் குடும்பத்தைத் தயார் செய்வதின் நிமித்தம்
அவனையும் அந்தச் சத்திரத்திலேயே விட்டு விட்டேன்.
நான் மறுநாட் காலையில் சீக்கிரமாகவே, என் மகள்
ஸோபியாவையும் கூட்டிக்கொண்டு, அவனை அழைத்துக்
கொண்டுபோகத் திரும்பி வருவதாகத் தீர்மானித்தேன்.
நான் உத்தேசித்திருந்த இடத்திற்கு வருமுன் இரவு சம்ப
வித்தது. இருந்த போதிலும், அவனை ஒரு சௌகரிய
மான அறையில் நியமித்து, அந்த வீட்டு எஜமானியை
அவளுக்குச் சரியான ஆகாரம் தயார் செய்யச் சொல்லி,
நான் ஒலிவியாவை முத்தமிட்டு விட்டு, வீட்டை நோக்கிச்
சென்றேன். இப்பொழுது அமரிக்கையான என் வீட்டை
நெருங்க நெருங்க, புதிது புதிதான சந்தோஷ உணர்ச்சி
கள் என் மனதில் தோன்றின. தன்னுடைய கூட்டி
லிருந்து விரட்டப்பட்ட ஒரு பட்சிபோல், என்னுடைய
அன்பின் அதிசயங்கள், என் அவசரத்திற்கு முன் ஓடி,
அனுபவிக்கப்போகும் ஆனந்தக் காட்சியுடன் என்னு
டைய சிறிய கணப்பொன்றை சுற்றிச் சுற்றி வந்தன.
நான் சொல்ல நினைத்த அநேக இன்ப மொழிகளை ஞாபகப்
படுத்திக்கொண்டு, நான் பெறப்போகும் வரவேற்பை
எதிர் பார்த்துக்கொண்டே சென்றேன். ஏற்கனவே,
நான் என் மனைவியின் குளிர்ந்த ஆலிங்கனத்தை நுகர்ந்
தேன். என் சிறிய குழந்தைகளின் சந்தோஷத்தை நினைத்
துப் புன்சிரிப்புக் கொண்டேன். நான் மெதுவாகவே
நடந்ததால், இரவு சீக்கிரம் குறைந்துகொண்டு வந்தது.
பகலில் வேலை செய்த உழைப்பாளிகளெல்லாம், களைப்
பாற, தூங்கப் போய்விட்டார்கள். ஒவ்வொரு குடிசை
யிலும் விளக்குகள் அணைந்துபோய்விட்டன. கோழியின்
ஆழ்ந்த கொக்கரிப்பும், கூப்பிடு தூரத்தில் கேட்கும் நீள
வாயுள்ள காவல் நாயின் சப்தமும் தவிர வேறொன்றும்
கேட்கவில்லை. நான் என்னுடைய சுகம் கொடுக்கும்
சிறிய வீட்டை நெருங்கினேன். அவ்விடத்திற்கு ஒரு பர்
லாங்குக்குள் என்னுடைய விசுவாஸமுள்ள நாய் என்னை
வரவேற்க ஓடிவந்தது.

நான் என் வீட்டின் கதவைத் தட்டியபொழுது நடு
நிசியாயிருக்கலாம். எல்லாம் அமைதியாயும் நிசப்தமாயு



யிருந்தது. என் ஹிருதயம் சொல்ல முடியாத ஆனந்தத்
தோடு பொங்கிற்று. அப்பொழுது ஹா, என்ன ஆச்
சரியம்! என் வீட்டை அக்னி ஜுவாலை சூழ்ந்த
மயமாய்க் கிளம்பக் கண்டேன். ஒவ்வொரு தூப்பும்
நெருப்பினால் சிவந்திருந்தது. நான் உரக்க, தேகாத்யந்
தம் அதிர்ச்சியோடு, கூக்குரலிட்டேன். அப்படியே முன்
வாசலில் நினைவு தவறி விழுந்துவிட்டேன். இது தூங்கிக்
கொண்டிருந்த என் மகனை திடுக்கிடச்செய்தது. அவன்
தீயைப் பார்த்து உடனே என் மனைவியையும் மகளையும்
எழுப்பினான். எல்லோரும் துணியை எறிந்துவிட்டு, பயத்
தினால் திசை தெரியாமல் ஓடி வந்தார்கள். அவர்களுடைய
துக்கக் கூக்குரலால் எனக்கு உணர்ச்சி வந்துவிட்டது.
ஆனால் நான் விழித்துக்கொண்டது புதிதான பயங்கரத்
தோற்றத்தை பார்வையிடவே. தீ இதற்குள் வீட்டின்
கூரையில் பிடித்துக் கொண்டது. ஒரு பக்கமாய்க்
கீழே விழ ஆரம்பித்தது. என் குடும்பமோ நெஞ்சடைத்த
துக்கத்துடன் அந்தச் சுடரைப் பார்த்துக் களிப்பவர்
போல் பார்த்துக்கொண்டிருந்தார்கள். நான் அவர்களை
யும் அதையும் மாறி மாறிப் பார்த்துக்கொண்டிருந்தேன்.
கடைசியில் என்னுடைய சிறுவர்களுக்காக சுற்றி சுற்றிப்
பார்த்தேன். ஆனால் அவர்கள் தென்படவில்லை. "ஐயோ,
துர்ப்பாக்கியமே எங்கே என் சிறுவர்கள்?" என்று கதறி
னேன். அவர்கள் நெருப்பில் அகப்பட்டு இறந்துபோய்
விட்டார்கள். நானும் இறக்கிறேன் என்று என் மனைவி
அமைதியோடு சொன்னாள். அந்த நிமிஷத்தில் நான் என்
குழந்தைகளுடைய சத்தத்தைக் கேட்டேன். அப்பொழுது
தான் அவர்கள் தீயினால் எழுப்பப்பட்டார்கள். எதுவும்
அப்பொழுது என்னை நிறுத்தியிருக்கமுடியாது. "எங்கே,
எங்கே, என் குழந்தைகள்" என்று கத்திக்கொண்டு
தீயின் நடுவே ஓடினேன். அவர்கள் அகப்பட்டுக்கொண்ட
அறையின் கதவை உடைத்தேன். "எங்கே என் சிறு
குழந்தைகள்" என்று கத்தினேன். "இங்கே, அன்புள்ள
அப்பா, இங்கே நாங்கள் இருக்கிறோம்" என்று அவர்
கள் சேர்ந்து கத்தினார்கள். அப்பொழுது தீ அவர்கள்
படுத்திருந்த படுக்கையில் பிடிக்க ஆரம்பித்தது. அவர்கள்
இருவரையும் என் கைகளில் வாரிக்கொண்டு, தீயின்

வழியே எவ்வளவு வேகமாய்ப்போக முடியுமோ அவ்வளவு வேகமாய்த் தூக்கிக்கொண்டு வந்தேன். நான் வெளியில் வந்த உடனே, கூரை விழுந்துவிட்டது. "இப்பொழுது தீ எரியட்டும். என்னுடைய சொத்துக்களெல்லாம் நாசமாகட்டும். இங்கே இருக்கிறார்கள். என்னுடைய பொக்கிஷத்தைக் காப்பாற்றிவிட்டேன். இதோ என் பிரியே, இதுவே நம்முடைய பொக்கிஷம் நாம் இன்னும் சுகமாயிருக்கலாம். "நாங்கள் எங்களுடைய சிறிய செல்வங்களை ஆயிரம் தடவை முத்தமிட்டோம். அவர்கள் எங்கள் கழுத்தைத் தழுவிக்கொண்டு எங்களுடைய சந்தோஷத்தில் கலந்து கொண்டார்கள். அவர்களுடைய தாயோ சிரிப்பதும் அழுவதுமாய் இருந்தாள். நான் இப்பொழுது தீ எரிவதை ஒன்றும் செய்யாமல் பார்த்துக்கொண்டிருந்தேன். கொஞ்ச நேரம் சென்றபின் என்னுடைய ஒரு கை தோள்வரையில் கொடூரமாய் வெந்திருந்ததென்று கவனிக்க ஆரம்பித்தேன். ஆகையால், என் மகனுக்கு எங்கள் சொத்தைக் காப்பாற்றுவதற்கோ, அல்லது தீ எங்கள் தானியத்திற்கு பரவாமலிருக்கவோ, நான் உதவிபுரிய சக்தியற்றவனாயிருந்தேன். இதற்குள் எங்கள் பக்கத்து வீட்டுக்காரர்கள் திகிலடைந்து, எங்களுக்கு உதவிசெய்ய ஓடி வந்தார்கள். அவர்கள் செய்யக்கூடியதெல்லாம், எங்களைப் போல், நாசத்தைப் பார்த்துக்கொண்டிருப்பதுதான். என்னுடைய சாமான்கள், என் குமாரத்திகளின் விவாகத்திற்காக பிரத்தியேகமாக வைத்திருந்த கரன்ஸி நோட்டுக்கள் உள்பட முழுமையும் எரிந்து சாம்பலாய்ப் போயின. சமையல் அறையில் சில காகிதங்களுடன் இருந்த ஒரு பெட்டி, இன்னும் இரண்டு மூன்று ப்ரயோஜனமில்லாத சாமான்கள் மாத்திரம் காப்பாற்றப்பட்டன. அவற்றை என் மகன் ஆரம்பத்திலேயே கொண்டு வந்து விட்டான். பக்கத்தியார்கள், அவர்களால் இயன்ற மட்டும் எங்கள் கஷ்டத்தைத் தீர்க்க உதவி புரிந்தார்கள். அவர்கள் எங்களுக்கு துணி கொண்டுவந்து கொடுத்தார்கள், எங்களுடைய ஒரு வெளி விடுதிக்கு சமையல் பாத்திரங்கள் கொண்டுவந்து கொடுத்தார்கள். பொழுது விடிந்ததும், எங்களுக்கு வேறொரு வீடு எவ்வளவு



ஹீனமாயிருந்தபோதிலும் குடியிருக்கிறதற்கென்று கிடைத்தது. எனக்கு சத்திய சந்தனான பக்கத்து வீட்டுக்காரனும் அவனுடைய குழந்தைகளும் எங்களுக்கு இன்றியமையாததைக் கொண்டு வந்து கொடுப்பதில் கொஞ்சமேனும் குறைந்த சிரத்தையுடையவர்களாயில்லை. அப்படியே எங்களுக்கு என்ன ஆதரவு வேண்டுமோ அதைச் சொல்லாமல் அவர்களே பச்சாதாபத்தினால் தோன்றியதைச் செய்தார்கள்.

என்னுடைய குடும்பத்தின் நடுக்கங்கள் கொஞ்சம் அமைதி அடைந்தவுடன், நான் திரும்பி வருவதற்கு இவ்வளவு நாள் ஆய்விட்டதின் காரணத்தைத் தெரிந்துகொள்ள ஆவலுற்றவர்களாயிருந்தார்கள். எல்லா சமாசாரத்தையும் சொல்லி, இழந்துபோனவளின் வரவேற்புக்காக நான் அவர்களைத் தயார் செய்தேன். இப்பொழுது எங்களுக்கு அவளுடன் பங்கிட்டுக்கொள்வதற்கு வறுமையைத் தவிர வேறொன்றுமில்லாவிட்டாலும், நான் அவளுக்கு எங்களிடம் இருக்கக்கூடிய வரவேற்பைச் செய்ய இஷ்டப்பட்டேன். இந்த ஏற்பாடுகூட மிகவும் சிரமமுள்ளதாயிருந்திருக்கலாம். ஆனால் நாங்கள் சமீபத்தில அடைந்த கஷ்டம் என் மனைவியின் கர்வத்தை அடக்கிவிட்டது. இன்னமும் அதைவிட கடும்படியான கஷ்டங்களினால் அது மழுங்கி விட்டது. என்னுடைய பரிதாபமான குழந்தையைக் கூட்டிக்கொண்டு வர என் கை மிகவும் துன்புறுத்தியதால் நான் போக முடியவில்லை. என் மகனையும் மகளையும் அனுப்பினேன். அவர்கள் சீக்கிரத்தில் பரிதாபமான ஸ்திதியிலிருக்கும் குற்றவாளியைக் கைலாகு கொடுத்துத் தாங்கிக்கொண்டு திரும்பி வந்து சேர்ந்தார்கள். அவள் தன் தாயாரை முகங்கொடுத்துப் பார்க்கத் தைரியமில்லாமலிருந்தாள். நான் என்ன சொல்லியும் என் மனைவி முழு சமாதானத்திற்கு வரவில்லை. ஏனெனில் பெண்கள், பெண்களின் குற்றத்திற்கு ஆண்களைவிட அதிகமான ரோஷத்தை அடைகிறார்கள். "ஆ, அம்மணி அவ்வளவு தகத்திலிருந்து விட்டு, இப்பொழுது நீ வருகிற இடம் மிகவும் ஏழ்மையானது. என் மகள் ஸோபியும் நானும் உயர் பதவிபி

லுள்ள மனிதர்களுடைய கோஷ்டியில்மட்டுமே சேர்க்கை கொள்ளும் ஜனங்களுக்கு என்ன உபசாரம் செய்ய முடியும். ஆம் மிஸ் லிலி, உன்னுடைய பரிதாபப்பட வேண்டிய தகப்பனாரும் நானும், கடைசியாக மிகவும் கஷ்டப்பட்டிருக்கிறோம். ஆனால். தெய்வம் உன்னை மன்னிக்குமென்று நம்புகிறேன்" என்று அவள் தாயார் சொன்னாள். இந்த வரவேற்பில் துக்க ரஹிதமான குற்றவாளி வெளுத்து நடுக்கமெடுத்து நின்றாள். அவளுக்குப் பேசவும் முடியவில்லை, அழவும் முடியவில்லை. ஆனால் எனக்கு அவளுடைய சங்கடத்தைப் பார்த்துக்கொண்டு சும்மா இருக்க இஷ்டமில்லை. ஆகையால் என் குரலிலும் தோரணையிலும் கொஞ்சம் கோபத்தைக் காட்டிக்கொண்டு சொன்னேன். (அப்பேர்க்கொத்த பேச்சும் பார்வையும் எப்பொழுதும் உடனே கீழ்ப்படுதலை உண்டு பண்ணிற்று.) "பெண்ணே, என்னுடைய வார்த்தைகள் எல்லாப் பொழுதுக்குமே ஏற்கும்படி இப்பொழுது கவனிக்கப் படட்டும். நான் இங்கே ஒரு பரிதபிக்கத்தக்க, மோசம்போன, தேசாந்திரியைத் திரும்பக் கூட்டிக்கொண்டு வந்திருக்கிறேன். அவள் சன்மார்க்கத்திற்குத் திரும்புவதற்கு நம்முடைய வழக்கம்போலுள்ள பிரியத்தைக் காண்பிக்க வேண்டியது. உலக வாழ்க்கையிலுள்ள நிஜமான கஷ்ட நிஷ்டூரங்கள் இப்பொழுதுதான் நமக்கு விரைவாய் வந்துகொண்டிருக்கின்றன. ஆகையால் நம்மில் ஒருவருக்கொருவர் சச்சரவு செய்வதினால் அவைகளை அதிகரிக்க வேண்டாம். நாம் ஒருவருக்கொருவர் மனம் ஒப்பி வாழ்ந்தால், நாம் இன்னம் திருப்தியோடு வாழலாம். நம்மில் ஒருவருக்கொருவர் மனம் கோணாமல் நடந்து கொண்டால் நிந்திக்கும் உலகத்தை நாம் குடும்பத்தின் ஆள் கட்டுடன் வெளியில் நிறுத்தி வைக்கலாம். நல்வழி திரும்பியவருக்கு தெய்வத்தின் ஒத்தாசை எதிர்பார்க்கப் படுகிறது. நாமும் அவ்வழியே கடைப்பிடித்து நடப்போம். நமக்கு சொல்லப்பட்டிருக்கிறது என்னவென்றால், நல்வழி திரும்பும் ஒரு பாபியிடத்தில், இடைவிடா நன்னெறியிலிருக்கும் மற்ற தொண்ணூற்று ஒன்பது மனிதர்களிடத்தில்விட, அவனிடத்தில் தெய்வம் அதிக சந்தோஷம் அடைகிறது. இதுவும் நியாயமான



முறையே. ஏனெனில் படுகுழிக்கு உருண்டு போகும் ஒரு மனிதன், நடுவில் ஒரு தீர்மான புத்தியோடு இன்னம் கீழ் போகாது நின்று விட்டால், நூறு சன்மார்க்கச் செய்கைகளில் உபயோகிக்கும் பிரயத்தனத்தைக் காட்டிலும், அதில் அதிக நன் முயற்சி செய்யப்பட்டிருக்க வேண்டுமல்லவா" என்று சொன்னேன்.

## அத்தியாயம் 23

*குற்றவாளிகளைத் தவிர மற்றவர்கள் நீடித்தும் முழுமையும் துக்கப்படுகிறவர்களாக மாட்டார்கள்.*

எங்களுடைய தற்கால இருப்பிடத்தை எவ்வளவு செளகரியமாகச் செய்து கொள்ள முடியுமோ அப்படிச் செய்யக் கொஞ்சம் விடா முயற்சி வேண்டியதாயிருந்தது. நாங்கள் மறுபடியும் எப்பொழுதும் போலவே மன நிம்மதியை அனுபவிக்கத் தகுதியுள்ளவர்களாக ஆனோம். எங்களுடைய வழக்கமான வேலைகளில் என் மகனுக்கு என் கையின் உபாதியால் நான் ஒத்தாசை செய்ய முடியாமல், காப்பாற்றப்பட்ட சில புஸ்தகங்களிலிருந்து என் குடும்பத்திற்கு பாடம் வாசித்துக் கொண்டிருந்தேன். எந்தப் புஸ்தகங்கள் மனதைக் களிக்கச் செய்து மனோபாவத்தைச் சாந்தப்படுத்துகிறதோ, அப்பேர்க்கொத்த புஸ்தகங்களை விசேஷமாய்ப் படித்துக் காட்டினேன். எங்களுடைய நன்மை வாய்ந்த பக்கத்து வீட்டினர்களும் ஒவ்வொரு நாளும் மிகப் பிரியமான ஆறுதலோடு வந்தார்கள். என்னுடைய பழைய கட்டிடத்தை திரும்பிக் கட்டுவதில் எல்லோரும் சேர்ந்து ஒத்தாசை புரிய ஒரு நாளை ஏற்பாடு செய்தார்கள். சத்தியசந்தனான வேளாள வில்லியம்ஸ் அவர்களில் கடைசியில்லை. ஆனால் அவன் பூர்ண மனத்தோடு தன்னுடைய சிநேகத்தை சமர்ப்பித்தான். அவன் என் மகளிடத்தில் தன்னுடைய வேண்டுகோளை மறுபடியும் சமர்ப்பித்திருப்பான். ஆனால் அவள் அதை நிராகரித்த மாதிரியில், அவனை மறுபடியும் வேண்டிக் கொள்ள எவ்விதத்திலும் ஒவ்வாதிருந்தான். அவளுடைய துக்கம் நீடித்ததாகவே இருந்தது. அவள் ஒருத்தியே, எங்களுடைய சிறிய கூட்டத்தில் ஒரு வாரத்தில் பழைய குதூகலத்தை அடையவில்லை. அவள் தன்னைத்தானே மதித்துக் கொள்ளும் உணர்ச்சியை உண்டுபண்ணும், நாணமறியாத கன்னிப் பருவத்தின் அறியாமையை இழந்துவிட்டாள்.



அத்துடன் பிறரைச் சந்தோஷப்படுத்திக் கொள்ளும் உற்சாகமும் போய்விட்டது. கவலை அவள் மனதில் பலமாய்க் குடிகொண்டது. அவளுடைய அழகும் சரீரத்துடன் கெட ஆரம்பித்தது. தன்னைத் தானே கவனிக்காமலிருப்பது இன்னும் அதைக் குறைக்க ஹேதுவாயிற்று. ஒவ்வொரு அன்பான மொழி அவள் தங்கைக்கு வழங்கப்பட்டதெல்லாம் அவளுடையமனதில் ஊடுருவிப்பாய்ந்தது. கண்ணீர் ததும்பிற்று. ஒரு தீய செயல் நிவர்த்திக்கப்பட்டாலும், அது இருந்த இடத்தில் மற்றவைகளை எப்பொழுதும் விளைவிக்கின்றது. ஆகையால், அவளுடைய முன் செய்யப்பட்ட குற்றம், தான் செய்தது தப்பு என்று உணர்ந்ததால், அது மனதிலிருந்து துறக்கப்பட்ட போதிலும், அதன் பின்னால் பொறாமையையும் ஆற்றாமையையும், வைத்துவிட்டுப் போயின. ஆயிரம் விதத்தில் அவள் கவலையைக் குறைக்க முயன்றேன். அவளிடத்தில் உள்ள கவலையால் என்னுடைய சொந்த புண்ணின் வலியைக்கூட மதிக்கவில்லை. அவளுக்காக சரித்திரத்தில் நல்ல ஞாபக சக்தியாலும், கொஞ்சம் படித்தும், யுக்தமானதென்று தேர்ந்தெடுக்கப்பட்ட விநோத வாசகங்களை ஒன்று சேர்த்துக் கொடுத்தேன். "நம்முடைய சுகம் என கண்மணியே நம்முடைய தோற்றத்திற்கு அகப்படாமல் ஆயிரம் எதிர்பாராத வழியில் செய்விக்கவல்ல தெய்வத்தின் சக்தியில் மட்டும்தான் இருக்கிறது. இதை நிரூபிக்கத் திருஷ்டாந்தம் வேண்டுமானால் நான் உனக்கு ஒரு கதை சொல்லுகிறேன். குழந்தாய், அந்தக் கதை நம் நாட்டிலுள்ள ஒரு மிக்க விநயமுள்ளதாகவும், இருந்தாலும் சில சமயங்களில் கட்டுக் கதைபோல் எழுதும், சரித்திர ஆசிரியரால் சொல்லப்பட்டது. என்று சொல்லிகீழ் வரும கதையைச் சொன்னேன் :

'மாடில்டா என்பவள், முதல்தரமுள்ள நீயோபாலிட்டன் பிரபு ஒருவருக்கு, சிறு வயதிலேயே விவாகம் செய்து கொடுக்கப்பட்டாள். பதினைந்து வயதில் தாயாராகவும் விதவையாகவும் ஆனாள். ஒருநாள் அவள் தன் குழந்தைப் பையனை விளையாட்டுக் காண்பித்துக் கொண்டு வால்டர்னோ நதியில் அளாவி நிற்கும் தன் வீட்டின் ஒரு

அறையின் ஜன்னலில் வந்து நின்று கொண்டிருந்தாள். அந்தக் குழந்தை திடீரென்று கிளம்பி, அவளுடைய கைகளிலிருந்து கீழே ஓடும் வெள்ளத்தில் குதித்தது. அந்தத் தாய் அச்சமயத்தில் உண்டான ஆச்சரியத்தால் குழம்பிப் போய் அவனைக் காப்பாற்ற முயன்று, அவன் பின்னால் தானும் குதித்தாள். ஆனால் குழந்தையைக் காப்பாற்ற முடியாமல், தானே மிக்க சிரமத்துடன் எதிர்க்கரைக்குப் போய் தப்பித்துக் கொண்டாள். அவ்விடத்தில், அப்பொழுது சில பிரஞ்சு பட்டாளத்தார் அங்குள்ள ஊர்களைக் களவாடிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் இவளை தங்கள் கைதியாக்கினார்கள்.

அப்பொழுது பிரஞ்சு தேசத்திற்கும் இத்தாலியா தேசத்திற்கும் மிகவும் ஜீவகாருண்ய மற்ற கடும் போர் நடந்துகொண்டிருந்தது. அவர்கள், உடனே க்குரூரத்தினாலும் காம வெறியினாலும் தூண்டப்பட்டு, இரண்டு முடிவான சங்கதிகளைச் செய்வதாகத் தீர்மானித்தார்கள். ஆனால் இந்த இழிவான தீர்மானத்தை ஒரு வாலிப ஆபீஸர் எதிர்த்தார். அப்பொழுது அவர்கள் வெகு துரிதமாய் பின்வாங்க வேண்டியிருந்தும், அவளைத் தமக்குப் பின்னால் குதிரையில் ஏற்றிக் கொண்டு தீங்கில்லாமல் தம்முடைய சொந்த நகரத்திற்கு அவளைக் கொண்டு வந்தார். அவளுடைய அழகு முதலில் அவருடைய கண்ணைக் கவர்ந்தது. அவளுடைய குணம் கூடிய சீக்கிரத்தில் அவருடைய மனதையும் கவர்ந்தது. அவர்கள் விவாகம் செய்து கொண்டார்கள். அவன் மஹோன்னத பதவிகளை அடைந்தான். அவர்கள் வெகு காலம் சேர்ந்து வாழ்ந்தார்கள். மிகவும் சுகமாயிருந்தார்கள். ஆனால் ஒரு தளகர்த்தனுடைய சுகம் அழிவற்றதென்று எப்பவும் சொல்ல முடியாது. அநேக வருஷங்களுக்கு பிற்பாடு அவன் பாதுகாப்பிலுள்ள சைனியம் தோல்வி அடைந்து, அவன் தன் மனைவியோடு தான் வசித்து வந்த பட்டணத்தில் பதுங்கிக் கொள்ளும்படி நேர்ந்தது. இங்கே அவர்கள் முற்றுகை போட்டார்கள். கடைசியில் அந்த நகரம் பிடிக்கபபட்டது. பிரஞ்சுக்காரர்களும் இத்தாலி தேசத்தாரும ஒருவர் மேலொருவர் அப்பொழுது இழைத்த தீங்கைவிட அதிக



மான அநேக திருஷ்டாந்தங்கள் எந்தத் தேச சரித்திரத்திலும் பார்க்க முடியாது. இந்தச் சமயத்தில், ஜயித்தவர்களால் எல்லா பிரஞ்சுக் கைதிகளையும் கொன்றுவிடுவதென்று தீர்மானிக்கப்பட்டது. ஆனால் விசேஷமாய், நிர்ப்பாக்கியமுடைய மாடில்டாவின் புருஷனே, அந்த முற்றுகையை நீடித்து நடத்தியதற்கு முக்கியமான காரணம். அவர்களுடைய தீர்மானங்களோ வழக்கமாய் உத்தேசம் பண்ணின உடனுக்குடனேயே நிறைவேற்றப்பட்டன. கைதியான தளகர்த்தர் கொண்டு போகப்பட்டார். கொலையாளி கத்தியை வைத்துக் கொண்டு தயாராயிருந்தான். பார்த்துக் கொண்டிருக்கும் ஜனங்கள் இருட்டடைந்த மனத்தோடு ஒன்றும் பேசாமல் மரண வெட்டை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

நியாயாதிபதியாக அக்கிராசனம் வகித்த சேனாபதி சமிக்ஞை காட்டும் வரையில் அது தடைபட்டு நின்றது. சஞ்சலமும், எதிர்பார்ப்புமுள்ள இந்த இடை நேரத்தில் மாடில்டா தன் கணவனும் ரக்ஷகனுமான அவரிடம் கடைசி வாக்களிப்புப் பெற்றுப் போக வந்தாள். அவள் தன்னுடைய நிராதாரவுற்ற நிலைமையையும், விதியின் கொடுமையால் வால்டர்னோ நதியில் அகால மரணமடையாது காப்பாற்றப்பட்டு இப்பொழுது அதைவிட அதிகமான துக்கத்திற்கெல்லாம் ஆளாகியதையும் நொந்து கொண்டாள். வாலிப வயதுள்ள சேனாதிபதி அவளுடைய துக்கத்தைக் கண்டு வருத்தமுற்றான். அவன் தனக்கு முன்னாலேற்பட்ட ஆபத்துக்களைச் சொல்லும் போது, இன்னம் பலமான மனத் தத்தளிப்போடு கேட்டான். அவன் அவளுடைய மகன். அவன் குழந்தையாயிருந்தபொழுது, அவனுக்காக அவளுக்கு அவ்வளவு ஆபத்து சம்பவித்தது. உடனே அவன் அவளை தன்னுடைய தாயென்று அங்கீகரித்து, அவள் பாதத்தில் விழுந்தான். மற்றவை சுலபமாய் உத்தேசிக்கப்படலாம். கைதி விடுதலையானான். அன்பு, சிநேகம், கடமை இவைகள் சேர்ந்து, இந்தப் பூவுலகில் அளிக்கக் கூடிய சுகம் அங்கே ஒன்றுசேர்ந்தது.

இந்தப் பிரகாரம் என் மகளை நான் சந்தோஷிப்பிக்க பிரயத்தனப்படுவேன். ஆனால் அவள் வேறு யோசனைக

ளோடு கேட்பாள். ஏனெனில், அவளுடைய சொந்த துர்ப்பாக்கியங்கள், அவள் முன் பிறருக்குச் செலுத்திய மன ஆறுதலை யெல்லாம், இப்பொழுது முழுமையும் இழுத்துக் கொண்டன. அவளுக்கு ஒன்றும் சமாதானத்தைக் கொடுக்கவில்லை. பிறர் சமூகத்தில் அவள் நிந்தைக்கு பயந்தாள். தனிமையில் அவள் கவலையை மட்டும் அடைந்தாள். அவளுடைய பரிதாபமான நிலையின் தோற்றம் அப்படி யிருக்கையில், மிஸ்டர் தார்ன்ஹில் மிஸ் வில்மோட்டை விவாகம் செய்து கொள்ளப் போவதாக சில சமாசாரங்கள் எங்களுக்குக் கிடைத்தது. அவனிடத்தில் அவளுக்கு நிஜமான காதல் உண்டென்று நான் எப்பொழுதும் சந்தேகித்தேன். ஆனால அவர் ஒவ்வொரு சமயத்திலும், அவளுடைய அழகையும் ஐசுவரியத்தையும் இகழ்ச்சியுடன் என் முன் கூறியிருந்தார். இந்தச் சமாசாரமோ ஒலிவியாவின் மனத துன்பத்தை அதிகரித்தது. ஏனெனில் அப்பேர்க்கொத்த பகிரங்கமான விசுவாஸத்தின் பிளவு அவள் தைரியத்தால் தாங்கக் கூடாமலிருந்தது. ஆனால் நான் இந்தப் பிரஸ்தாபத்தைவிட அதிக நிச்சயமான தகவலை அறிந்துகொள்ளத் தீர்மானித்தேன். முடியுமானால் அவருடைய ஏற்பாடுகளின் முடிவைத் தடுக்க வேண்டும். உடனே வயோதிக மிஸ்டர் வில்மோட்டின் இருப்பிடத்திற்கு என் மகனை அனுப்பி சமாசாரத்தின் உண்மையைத் தெரிந்து கொள்ளச் சொன்னேன். மிஸ் வில்மோட்டுக்கு மிஸ்டர் தார்ன்ஹில் எங்கள் குடும்பத்தில் எப்படி நடந்து கொண்டா ரென்பதைப்பற்றி ஒரு கடிதம் எழுதிக் கொடுத்து அவளிடம் சமர்ப்பிக்கச் சொன்னேன். என் சொல்படி என் மகன் சென்று மூன்று நாளில் திரும்பி வந்து, தகவல் கிடைத்தது உண்மையே யென்று சொன்னான்.

மிஸ்டர் தார்ன்ஹில்லும் மிஸ் வில்மோட்டும் நாட்டுப் புறங்களில் சுற்றுப் பிரயாணம் போயிருப்பதாகவும், ஆகையால் கடிதத்தை நேரில் கொடுக்க முடியவில்லை யென்றும், வந்ததும் கொடுக்கும்படி வைத்துவிட்டு வந்ததாகவும் சொன்னான். அவர்கள் முன் ஞாயிற்றுக்கிழமை கோவிலுக்கு சேர்ந்து வந்ததாகவும், அன்றைக்கு ஆறு சிறுமிகள் மிஸ் வில்மோட்டுடன் பக்க பலமாக வந்ததாக



வும், அப்படியே ஆறு கனவான்கள் அவர்களுடன் கூட வந்ததாகவும், அவர்கள் மிகவும் பிரமிக்கத் தக்க அவ்வளவு வைபவத்தில் வந்ததாகவும், இன்னும் சில நாட்களில் விவாகம் நடக்கப் போவதாகவும் சொன்னான். வரப் போகும் அவருடைய ருதுசாந்திக் கலியாணம் அந்த நாடெங்கும் களிப்பை ஊட்டி யிருக்கிறதென்றும், பல வருஷங்களாக அந்த இடங்களில் பார்க்கப்படாத அவ்வளவு உயர்ந்த பரிவாரங்களோடும் விமர்சனத்தோடும் அவர்கள் வழக்கமாக ஒன்று சேர்ந்து குதிரை சவாரி செய்துகொண்டு போவதாகவும் சொன்னான். அந்த இரண்டு குடும்பத்தைச் சேர்ந்த எல்லா சிநேகிதர்களும் அங்கே வந்திருக்கிறார்கள். முக்கியமாய் ஸ்குயரின் சித்தப்பன் ஸர் வில்லியம் தார்ன்ஹில், அவரோ இன்றியமையா நற்குணம் வாய்ந்தவர்.

மேலும் என் மகன் விருந்தும் களிப்பும் ஏராளமாய் நடந்துகொண் டிருக்கின்றன வென்று சொன்னான். அந்த நாட்டில் எல்லோரும் சிறிய மணப் பெண்ணின் அழகையும் வரனின் நேர்த்தியான உருவத்தையும் மெச்சி இருவரும் ஒருவருக் கொருவர் மிகவும அன்புடன் நேசிக்கிறார்களென்றும் கேள்விப் பட்டதாகச் சொன்னான். மிஸ்டர் தார்ன்ஹில் இவ்வுலகில் மிகவும் சுகசாலிகளில் அவர் ஒருவரென்று தான் நினைக்காம லிருக்க முடியவில்லை என்றான்.

“ஏன் அவர் இருக்கக் கூடுமானால் இருக்கட்டும்” என்று நான் சொன்னேன். “ஆனால் என் மகனே, இந்த வைக்கோல் தாளால் செய்யப்பட்ட படுக்கையைப் பார். இந்த மண் சுவர்களையும், இந்தக் கொதிக்கும் தரையையும் பார். என்னுடைய அருமந்த தேகம் தீயால் காயமடைந்திருக்கிறது. என் குழந்தைக ளெல்லாம், சாப்பாட்டிற்கு கூவுகிறார்கள். என் குழந்தாய், இந்த வைபோகத்தை அனுபவிக்க நீயும் வீட்டிற்குத் திரும்பிவந்திருக்கிறாய், ஆனால் இங்கே இந்த இடத்திலே ஒரு ஆயிரம் உலகத்திற்குப் பதிலாக இந்த ஸதிதியை பரிவர்த்தனை செய்துகொள்ள இஷ்டப்படாத மனிதனை இங்கே பார்க்கிறாய். ஓ என் குழந்தைகாள், நீங்கள் உங்கள் மனதுடன் உறவாடத் தெரிந்து கொள்வீர்களாகில், எப்பேர்க்கொத்த

கௌரவமான நண்பர்களாக, நீங்கள் அதை செய்விக்க அறிந்தால், நீங்கள் பதர்களுடைய வைபவத்தையும் வனப்பையும் ஒரு பொருட்டாகக் கருதமாட்டீர்கள். ஏறக்குறைய எல்லா மனிதருமே, இந்த வாழ்க்கையை ஒரு பிரயாணமென்று கருத அறிவிக்கப்பட் டிருக்கிறார்கள். தாங்களும் பிரயாணிகளென்றே. இந்த உதாரணமானது இன்னம் தெளிவாகச் சொல்லப்படலாம். எப்படியென்றால் நற்குண முடையவர்கள் சுகமாகவும், மனத்தளர்ச்சியில்லாமல் வீட்டை நோக்கிப் போகும் பிரயாணிகளைப் போல் இருக்கிறார்கள். துர்க்குணிகளோ, ஊரைவிட்டு ஓட்டப்பட்ட பிரயாணிகளைப் போல் அவ்வப்பொழுது சுகிக்கிறார்கள்.

இந்தப் புதிய விபத்தினால் பிரக்ஞையை இழந்த என் பரிதாபமுள்ள மகளிடத்தில் உண்டான பச்சாதாபமும், நான் மேலும் சொல்லக் கூடியவைகளை நிறுத்திவிட்டது. அவள் தாயாரை அவளுக்குப் பணிவிடை செய்யச் சொன்னேன். கொஞ்ச நேரத்திற் கெல்லாம் அவளுக்கு ஞாபகம் வந்தது. இந்தச் சமயத்திலிருந்து, அவள் முன்னைவிட சாந்தமாகத் தோன்றினாள். புது விதமான மன நிம்மதியை அடைந்தாளென்று நான் எண்ணினேன். ஆனால் தோற்றங்கள் என்னை மோசம் செய்தன. ஏனெனில் அவளுடைய மனச் சாந்தியின் காரணம் கோபாவேசத்தின் மிகுதியால் களைப்படைந் திருந்ததனாலேயே. சாப்பாட்டுப் பொருள்கள் என்னுடைய கருணை கூர்ந்த சிஷ்ய கோடிகளினாலே ஏராளமாய் அனுப்பப்பட்டன. அவை குடும்பத்தில் மற்றவர்களுக்கு புதிதான களிப்பை ஊட்டிற்று. நானும் அவர்களை மறுபடியும் கவலையில்லாமல் முன்போல் ஓடியாடிக் கொண்டு களிப்பதைப் பார்க்க, எனக்கு அதிருப்தி உண்டாகவில்லை. பிடிவாதமான துக்கத்தைப் பாராட்டுவதற்காக, அவர்கள் களிப்பை அடக்குவது அநீதியா யிருக்கும். அல்லது அவர்கள் உணராத துக்கத்தை அவர்களிடம் சுமத்துவதும் அப்படியே. இப்படியாக மறுபடியும், கதை கேட்க ஆரம்பித்து விட்டார்கள். பாட்டுப் பாட ஒருவருக் கொருவர் கேட்டுக் கொண்டார்கள். எங்களுடைய சிறிய வாசஸ்தலத்தில், மறுபடியும் மனக் களிப்பு விஜயம் செய்ய மனம் உவந்தது.

## அத்தியாயம் 24

புதிதான துயரங்கள்.

மறுநாட் காலை சூரியன், அந்த பருவகாலத்திற்கு விசேஷமான உஷ்ணத்தோடு உதயமாயிற்று. ஆகையால் நாங்கள் ஹனிஸக்கில் கொடி படர்ந்திருக்கும் துறையில் கூடி காலைச் சாப்பாட்டை அங்கே வைத்துக்கொள்ள ஒப்புக்கொண்டோம். நாங்கள் உட்கார்ந்திருக்கும் பொழுது, என்னுடைய கடைசிப் பெண் என்னுடைய வேண்டுகோளின்பேரில் பக்கத்திலுள்ள மரங்களின் ரமணீய கோஷத்துடன் தன்னுடைய குரலையும் சேர்த்துப் பாடினாள். இந்த இடத்தில்தான் எங்கள் பரிதாபமான ஒலிவியா தன்னை வஞ்சித்தவனை முதலில் சந்தித்தாள். ஒவ்வொரு தோற்றமும் அவளுடைய துக்கத்தை ஞாபகப் படுத்திக்கொண் டிருந்தது. சந்தோஷ விஷயங்களினாலோ, அல்லது மனத்தை ஒருமைப்படுத்தும் சங்கீதத்தினாலோ, தூண்டப்படும் துக்கம் மனதைச் சுடாமல் சாந்தப்படுத்துகிறது. அவள் தர்யாரும் அந்தத் தருணத்தில் களிப்புடன் கூடிய சோகத்தை அடைந்தாள்; அழுதாள், தன் மகளை எப்பொழுதும் போல் நேசித்தாள். "பாடு என் நேர்த்தியான ஒலிவியா" என்றாள். "உன் அப்பா கேட்க மிகப் பிரியப்படும் அந்த துக்ககரமான துக்கடாப் பாட்டை பாடு. உன் தங்கை ஸோபி ஏற்கெனவே எங்களைக் களிப்பித்திருக்கிறாள். பாடு, குழந்தாய் உன்னுடைய வயதான தகப்பனைக் களிக்கச்செய்யும்." அவள் மிகவும் அற்புதமான சோக ரஸத்துடன் பாடினாள். அது என் மனதை இரக்கமுறச் செய்தது.

### பாட்டு 1

அவள் கடைசிச் செய்யுளை முடித்துக்கொண் டிருக்கும் பொழுது, அதில் துக்கத்தினால், அவள் குரல் தடைப்பட்டது. அதிலிருந்து அதிசயமான மிருதுவான தொனி

ஏற்பட்டது. அப்பொழுது, மிஸ்டர் தார்ன்ஹில்லின் தூரத்தில் வருகிற விருதுகளின் தோற்றம் எங்கள் எல்லோரையும் திகில் அடையச் செய்தது. ஆனால் விசேஷமாய் என் மூத்த மகளின் மனக் குழப்பத்தை அதிகரித்தது. அவள் தன்னை மோசம் செய்தவனைப் பார்க்காமலிருக்க விரும்பி, தன் தங்கையோடு வீட்டிற்குத் திரும்பினாள். சில நிமிஷங்களில், தன் வண்டியிலிருந்து அவர் இறங்கினார். நான், அப்பொழுது உட்கார்ந்திருக்கும் இடத்திற்கு வந்து அவனுடைய எப்பொழுதுமுள்ள சகஜமானவழியில், என்னுடைய சௌக்கியத்தைப் பற்றி விசாரித்தார். "ஐயா, உம்முடைய தற்கால அமைதி உன் நடத்தையின் இழிவான தன்மையை அதிகரிக்கச் செய்கிறது. என் முன்னிலையில் இப்படி நீ வருவதற்கு தைரியம் கொண்டாய். கர்வத்தை நான் தண்டிக்கக் கூடிய காலம் முன் இருந்தது. ஆனால் இப்பொழுது உனக்கு அபாயம் ஒன்றுமில்லை. ஏனெனில் வயோதிகம் என்னுடைய ஆசாபாசங்களையெல்லாம் பலஹீனப்படுத்தி விட்டது. என்னுடைய தொழிலும் அவைகளை அடக்குகின்றன" என்று பதிலுரைத்தேன். "நான் சத்தியமாய்ச் சொல்லுகிறேன்; என் பிரியமுள்ள ஐயாவே, இதையெல்லாம் பார்க்க, எனக்கு ஆச்சரியம் உண்டாகிறது. இதெல்லாம் எதைக் குறிப்பிடுகின்றனவென்றும் எனக்குப் புலப்படவில்லை. உங்கள் மகள், ஊர் சுற்றிப் பார்க்க கொஞ்ச நாளைக்கு முன் என்னுடன்கூட வந்ததில், குற்றமானது ஏதாவது உண்டென்று நீங்கள் நினைக்கவில்லையென்று நான் நம்புகிறேன்" என்று பதிலுரைத்தான்.

"போ" என்று சொன்னேன். "நீ ஒரு ஹீனப் பயல். மட்டு மரியாதையில்லாத ஹீனன். ஒவ்வொரு விதத்திலும் நீ ஒரு பொய்யன். ஆனால் உன்னுடைய சின்னத்தனம் என் கோபத்திலிருந்து உன்னைக் காப்பாற்றுகிறது. இருந்தாலும் ஐயா, நான் இதைப் பொறுக்கமுடியாத ஒரு குடும்பத்தில் பிறந்தவன். இழிவான நீ, தற்கால இந்திரிய விகாரத்தைத் தீர்த்துக் கொள்ளுவதற்காக, ஒரு பரிதாபமுள்ள பிராணியை



அவள் ஆயுள் முழுமையும் துக்ககரமாகப் பண்ணிவிட்டாய். நன்னடத்தையே ஆஸ்தியாக உடைய ஒரு குடும்பத்திற்கு அபக்யாதி கொண்டு வந்துவிட்டாய்."

"அவளோ, நீரோ, துக்கப்படுவோமென்று தீர்மானித்தால், நான் என்ன செய்யக்கூடும். ஆனால் நீங்கள் இன்னம் சுகமாக இருக்கலாம். என்னைப்பற்றி என்ன அபிப்பிராயம் நீர் கொண்டிருந்தாலும் அதற்கு வேண்டுவதைச் சார்ப்பிக்க எப்பொழுதும் நான் தயாராயிருப்பவனாகக் காண்பீர். நாம் அவளை வேறொருவனுக்கு கொஞ்ச காலத்தில் மணம் செய்து கொடுத்துவிடலாம். அதைவிட இன்னும் மேலாக, அவள் தன்னுடைய காதலனையும் கூட வைத்துக் கொள்ளலாம். ஏனெனில் நான் அவளிடத்தில் உண்மையான பிரியத்தை எப்பொழுதும் பாராட்டுவேனென்று நான் ஊர்ஜிதமாகச் சொல்லுகிறேன்" என்றுரைத்தான்.

இந்த நூதன இழிவான தீர்மானத்தைக் கேட்க என்னுடைய ராக த்வேஷங்களெல்லாம் நடு நடுங்கிற்று. பிறர் இயற்றும் துன்பங்களிலும் மனது அநேகமாய் அமைதியை அடைந்தாயிருக்கலாம். ஆனால் இழிவான போக்கிரித்தனம் ஆத்மாவின் உட்புகுந்து எக்கோத்திலும் கோபாவேசத்தைத் தூண்டும். "என் முன் வாராதே, ஏ பாம்பே, இங்கே நீ நின்றுகொண்டு என்னைத் தீண்டிக் கொண்டிருக்காதே. என்னுடைய வீர மகன் வீட்டிலிருந்தால், அவன் இதைப் பொறுக்கமாட்டான். ஆனால் நான் வயதானவன். பலஹீனன். எல்லா விதத்திலும் கேடடைந்தவன்" என்று சொன்னேன்.

"நான் உத்தேசித்த விதத்தைவிட இன்னும் கடினமாகப் பேச என்னைத் தூண்டுவதில் நீர் குறியாயிருக்கிறீரென்று எனக்குப் புலப்படுகிறது. என்னுடைய சிநேகத்தால் என்ன வரக்கூடுமென்று நான் சொல்லியாயிற்று. என்னுடைய கோபத்தை சம்பாதித்ததால், அதிலிருந்து என்ன கெடுதிகள் சம்பவிக்குமென்று தெரியப்படுத்துவது ஒழுங்கு முறை தவறினது. என்னுடைய வக்கீல் பேருக்கு நீர் கடைசியாகக் கொடுத்த பாண்டு மாற்றப்பட்டிருக்கிறது. அவர் கடுமையாகக் கோபிக்

கிறார். நான் அந்தப் பணத்தைக் கொடுத்தாலொழிய எப்படி சட்ட நடவடிக்கையை நிறுத்த முடியுமென்று எனக்குத் தெரியவில்லை. நடக்கப் போகும் என் விவாகத்தை உத்தேசித்து கடைசியாக சில செலவுகள் பண்ணிவிட்டதால் அது என்னால் கொடுக்கப்பட முடியாது. மேலும், என் காரியஸ்தன் குத்தகைப் பணத்திற்காக விரட்ட வேண்டுமென்று சொல்லிக்கொண்டிருக்கிறான். அவன் செய்யவேண்டியது அவனுக்குத் தெரியும். ஏனெனில் அப்பேர்க்கொத்த சங்கதிகளில் நான் கவலை எடுத்துக் கொள்ளுவதில்லை. இருந்தபோதிலும், நான் உமக்கு உதவி புரிவதில் ஈடுபட்டவனாய் இருப்பேன். மிஸ் வில்மோட்டுடன் சீக்கிரத்தில் தெய்வத்தின் கிருபையை முன்னிட்டு நடக்கப்போகும் விவாகத்திற்கு, உம்மையும் உம்முடைய மகளையும் வரும்படி அழைக்கிறேன். என்னுடைய மனோரஞ்சித அரபெல்லா கூட இந்த வேண்டுகோளை விடுத்திருக்கிறாள். அதை நீர் மறக்க மாட்டீரென்று நம்புகிறேன்" என்றான் அவன்.

"மிஸ்டர் தார்ன்ஹில், ஒரேதடவையாய் கேட்டுக் கொள். என் பெண்ணைத்தவிர வேறொருத்தியையும் நீ விவாகம் செய்து கொள்வதிற்கு நான் சம்மதியேன். உன்னுடைய சிநேகத்தால் என்னை சிம்மாஸனத்திற்கு ஏற்ற முடியுமானாலும் சரி, அல்லது உன்னுடைய கோபம் என்னைப் படுகுழியில் சாகத் தள்ளினாலும சரி, இவ்விரண்டையும், நான் அலக்ஷியம் செய்கிறேன். நீ என்னை ஏற்கெனவே துக்ககரமாகவும், சீர்திருத்தப் படுத்த முடியாமலும், மோசம் செய்துவிட்டாய். உன்னுடைய கௌரவத்தில் என் மனதை நம்பிக்கை வைக்கச்செய்தேன். அதை இழிவென்று கண்டுகொண்டேன். ஆகையால் என்னிடமிருந்து இனிமேல் சிநேகத்தை எதிர்பார்க்காதே, போ, உனக்கு என்ன பாக்கியம் அடையவேண்டுமோ, அதை அடை. அழகு, பொருள், ஆரோக்கியம், களிப்பு இவைகளை அடை. எனனிடத்திலோ, இல்லாமை, அபகீர்த்தி, வியாதி, துக்கம், இவைகளை விட்டு விட்டு நீ போ. நான் சிறுமைப்படுத்தப்பட்டபோதிலும், என்னுடைய மனது அதன் கௌரவத்தை இன்னும் ஸ்தாபிக்கும்.



உனக்கு என்னுடைய மன்னிப்பைத் தந்தபோதிலும், நீ எப்பொழுதும் என்னால் நிந்திக்கப்படுவாய்" என்றேன்.

"அப்படியானால், இந்த மரியாதைத் தவறின் பலன்களை நீர் உணருவீர். இது நிச்சயம். கூடிய சீக்கிரத்தில் பார்க்கலாம். நானோ, நீயா, மிகவும் நிராகரிக்கப்படத் தகுந்த வஸ்து" என்று பதிலுரைத்து விட்டு அவன் திடீரென்று போய்விட்டான்.

என் மனைவியும் மகனும், இந்தச் சந்திப்பின்பொழுது அங்கிருந்தார்கள். அவர்கள் பயத்தினால் நடுக்கமடைந்ததாகத் தோன்றிற்று. என் பெண்களும் அவன் போய்விட்டதைத் தெரிந்து, வெளியே வந்தார்கள். அவர்களுக்கு எங்கள் இருவருடைய சம்பாஷணையின் முடிவு கேட்டுச் சொல்லப்பட்டது. கேட்டதும் அவர்களுக்கும் மற்றவர்களைப்போல் நடுக்கம் கொடுத்தது. ஆனால் நானோவென்றால், அவனுடைய ஆக்ரோஷத்தின் முடிந்தவரையிலுள்ள கெடுதியை மதிக்கவில்லை. அவன் ஏற்கெனவே முதல் அடியை அடித்துவிட்டான். நான் அவனுடைய ஒவ்வொரு நூதன ஏற்பாடுகளையும் எதிர்க்கத் தயாராயிருந்தேன். யுத்தத்தில் ஒரு ஆயுதம் எப்படி விட்டெறியப்பட்டாலும், சத்துருவைத் தாக்குவதற்குள்ள ஒரு முனையை முன்காட்டி நிற்பதுபோல் நான் தயாராயிருந்தேன்.

நாங்கள், சீக்கிரத்தில், அவன் எங்களை வீணில் பயமுறுத்தவில்லை என்று கண்டுகொண்டோம். ஏனெனில், மறுநாட் காலையிலேயே, அவனுடைய காரியஸ்தன் வருஷாந்திர வாடகையைக் கொடுக்கும்படி கேட்டான். மேலே சொல்லப்பட்ட சம்பவத்தொடரினால் என்னால் கொடுக்க முடியவில்லை. நான் கொடுப்பதற்கு அசாத்தியமாயிருந்ததால், அதன் காரணமாய், என்னுடைய மாடுகள் அன்றைய சாயந்திரமே ஓட்டிப் போகப்பட்டன. மறுநாள் ஒரு விலை மதிப்புவைத்து, அவைகளின் விலையில் பாதிக்குக் குறைவாக அவைகள் விற்கப்பட்டன. என் மனைவியும், குழந்தைகளும், எப்பொழுதும் எவ்விதமான ஏற்பாட்டுக்கும் ஒத்துக்கொள்ளப் பிரார்த்தித்தார்கள். இல்லாவிடில் நிச்சயமாய், நாசத்தை எதிர்பார்த்தோம்.

அவர்கள் என்னை அவனுடைய வருகையை மறுபடியும் அனுமதிக்கக் கெஞ்சினார்கள். நான் அனுபவிக்கப் போகும் கஷ்டங்களை எவ்வளவு தூரம் வர்ணிக்க முடியுமோ, அவ்வளவு அவர்களுடைய எல்லா வாலிபச் சொற்பொழிவுகளையும் செய்தார்கள். அப்பொழுதுள்ள கடுமையான கால சீதோஷ்ண ஸ்திதியில் சிறையின் கஷ்ட நிஷ்டூரங்களையும், தீயினால் சற்றுமுன் ஏற்பட்ட என்னுடைய விபத்தின் காரணமாய், என்னுடைய தேக சௌக்கிய நிலைமைக்கு ஏற்படும் ஆபத்துக்களையும் விவரித்தார்கள். ஆனால் நான் கொஞ்சம்கூட இடங்கொடாமலிருந்தேன்.

"ஏன், என் செல்வங்கள், ஏன் இப்படி ஒழுங்கில்லாத வழியில் போக மன மாறுதலை உண்டாக்க முயலுகிறீர்கள். என் கடமை அவனை மன்னிக்கக் கற்றுக் கொடுத்தது. ஆனால் என் மனச்சாக்ஷி அவன் செய்ததை ஒப்புக்கொள்ள சம்மதிக்காது. என் மனது தனக்குள் நிராகரித்ததை உலகத்திற்குப் புகழ்ச் சொல்லுவீர்களோ? நம்மை ஏமாற்றின போக்கிரிப் பயலை நான் வணங்கும்படியும், சும்மா உட்கார்ந்துகொண்டு, அவனை முகஸ்துதி செய்துகொண்டும் இருக்கச் சொல்லுகிறீர்களா? சிறைவாசத்தைத் தவிர்க்க சதா காலமும் மனச்சிறையின் அதிகக் கொடிய பந்தங்களை நான் அனுபவிக்கிறதா? முடியாது, எப்பொழுதுமில்லை. நாம் இந்த வீட்டிலிருந்து வெளியேற்றப்பட்டால், நாம் சத்தியத்தைக் கடைப்பிடிப்போம். நாம் எங்கே தூரத்தப்பட்டாலும் மனச்சாந்தி கொடுக்கும் ஏதாவது ஒரு இடத்தில் போய்த் தங்கி, அப்பொழுதும நம்முடைய மனத்தீவரத்தில் தைரியத்தையும் களிப்பையும் அடையலாம்" என்றேன். இம்மாதிரியில், அன்று மாலையைக் கழித்தோம். பனி மிகவும் அதிகமாக இரவில் விழுந்திருந்தபடியால் மறுநாள் அதிகாலை, என் மகன் அவைகளை அப்புறப்படுத்தி கதவுக்கு முன்னால் ஒரு பாதையை ஏற்படுத்திக்கொண்டிருந்தான. அவன் இவ்விதமாக வெகுநேரம் கழிக்கவில்லை. அப்பொழுது உள்ளே ஓடிவந்து பயந்த முகத்தோடு, நியாயஸ்தலத்தைச் சேர்ந்தவர்களென்று அவனுக்குப் புலப்பட்ட இரண்டு அறியா முகமுள்ள மனிதர்கள், வீட்டை நோக்கி வந்துகொண்டிருக்கிறார்களென்று சொன்னான்.



அவன் சொல்லிக் கொண்டிருக்கும்பொழுதே, அவர்கள் உள்ளே வந்தார்கள். நான் படுத்திருக்கும் படுக்கையை அணுகி, தாங்கள் என்ன உத்தியோகம், எதற்காக அங்கே வந்தோமென்று எனக்கு முதலில் அறிவித்து, என்னை அவர்களுடைய கைதியாக்கினார்கள். பதினொரு மைல் தூரத்திலுள்ள அந்த ஜில்லா சிறைக்கு தங்களுடன் வரும்படி கட்டளை யிட்டார்கள். "என் நண்பர்காள், இந்தக் கடுமையான சீதோஷ்ண ஸ்திதியில், நீங்கள் என்னை சிறைக்குக் கொண்டுபோக வந்திருக்கிறீர்கள். இந்தச்சமயத்தில, வேறொரு விசேஷமான துர்ப்பாக்கியம் ஏற்பட்டிருக்கிறது; என் கைகளிலொன்று கொஞ்ச நாட்களுக்கு முன்னால் கடுமையான வழியில் சுடப்பட்டது. அதனால் எனக்குக் கொஞ்சம காய்ச்சல் ஏற்பட்டிருக்கிறது. எனக்கு, என்னை மூடிக்கொள்ள ஆடை வேண்டும். இப்பொழுது இந்த ஆழ்ந்த பனியில் நடக்க நான் சக்தியற்றவனாயும் வயோதிகனாயும் இருக்கிறேன்." ஆனால் அப்படிச் செய்ய வேண்டுமானால் நான் பிறகு என் மனைவி மக்களிருக்கும் பக்கம் திரும்பி, நமக்கு என்ன சொல்ப சாமான்கள் பாக்கி யிருக்குமோ, அவைகளை யெல்லாம் சேர்த்துவைக்கச் சொன்னேன். இந்த இடத்தை உடனே விடுவதற்கும் ஏற்பாடு பண்ணச் சொன்னேன். அவர்களை சீக்கிரப்படுத்தச்சொல்லி வேண்டினேன். என்னுடைய மூத்த மகள் இந்த எல்லாத் துன்பங்களுக்கும், தானே ஆஸ்பதமென்ற எண்ணத்தில் கீழே விழுந்துவிட்டாள். மூர்ச்சையில் துக்கத்தை மறந்துவிட்டாள. என் மகனை அவளுக்கு ஒத்தாசை செய்யும்படி ஏவினேன். நடுங்கிப்போன சிறுவர்கள் வந்த அன்னியர்களைப் பார்க்கப் பயந்து பேசாமல் தாயின் மார்பைக் கட்டிக் கொண்டார்கள். என் மனைவி வெளுத்து நடுங்கினவளாய் குழந்தைகளைத் தன் கையால் கட்டிக்கொண்டாள். நான் அவளை தைரியப்படுத்தினேன். இதற்குள் என் கடைசிப் பெண் எங்கள் புறப்பாட்டிற்காக வேண்டிய ஏற்பாடு செய்தாள். அவளை சீக்கிரப்படுத்தச் சொல்லி பல சமிக்ஞைகள் செய்யப்பட்டதால் ஏறக்குறைய ஒரு மணி நேரத்தில் நாங்கள் புறப்படத் தயாராய்விட்டோம.

# அத்தியாயம் 25

*எந்த நிலைமையும் எவ்வளவு கஷ்டமாய்த் தோன்றிய போதிலும், சிற்சில சௌகரியங்களைப் போற்றுகின்றன.*

நாங்கள் இந்த அமைதியான பக்கத்திலிருந்து புறப்பட்டோம். மெள்ள நடந்தோம். என் மூத்த மகள் விடாக் காய்ச்சலினால், அவளுடைய தேகம் கொஞ்ச நாளாய் மெலிவுற ஆரம்பித்து மிகவும் பலஹீனமடைந்திருந்ததால், வந்திருந்த ஆபீஸரில் ஒருவர், குதிரைச் சவாரி செய்துகொண்டு போகிறவர், இவளைத் தம் பின் ஏற்றிக் கொண்டார். ஏனெனில் இவர்களும்கூட ஜீவகாருண்யத்தை முழுமையும் விட்டுவிட முடியாது. என் மகன் சிறுவர்களில் ஒருவனையும் மற்றவனை, என் மனைவியும், கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு போனார்கள். நான் என் கடைசி மகள் மேல் சாய்ந்துகொண்டு போனேன். அவள் என் கஷ்டத்திற்காக கண்ணீர் வடித்தாளே ஒழிய, தன் துன்பத்திற்காகவல்ல.

நாங்கள் எங்கள் வாசஸ்தலத்தை விட்டு சுமார் இரண்டு மைல் வந்திருப்போம். அப்பொழுது எங்களுக்குப் பின்னால் ஒரு கூட்டம் ஓடிக்கொண்டும், கூப்பிட்டுக் கொண்டும் வருவதைப் பார்த்தோம். அவை சுமார் ஐம்பது பேர்கள்; என்னுடைய சிஷ்யகோடிகளில் மிக ஏழ்மைப் பட்டவர்கள். அவர்கள் கடும் சப்தத்துடன் அந்த இரண்டு நியாயஸ்தல ஆபீஸர்களை சீக்கிரம் பிடித்துக் கொண்டார்கள். தங்களுடைய புரோகிதர் விஷயத்தில் தங்கள் தேகத்தில் ஒரு சொட்டு ரத்தமுள்ள வரையில் அவரை ஜெயிலுக்குக் கொண்டுபோக ஒருக்காலும் விடமாட்டோமென்று சத்தம் போட்டார்கள். நான் உடனே தடுக்காவிட்டால் காரியமே விபரீதமாய் முடிந்திருக்கும். கொஞ்சம் சிரமத்தோடு ஆபீஸர்களை கோபம் கொண்ட



கூட்டத்தின் கையிலிருந்து விடுவித்தேன். என் குழந்தைகள் என்னை விடுவிப்பது நிச்சயமென்று எண்ணி சந்தோஷத்தால் பூரிப்புடையவர்களாய்த் தோன்றினார்கள். தங்களுடைய அபரிமிதமான களிப்பை அடக்க முடியாதவர்களாயிருந்தார்கள். ஆனால் அவர்கள் சீக்கிரத்தில் எனக்கு கைங்கரியம் செய்வதாக நினைத்துவந்த அந்த பரிதாபமான ஏமாற்றமடைந்த ஜனங்கள் நான் பேசினதைக் கேட்டு அந்த எண்ணத்தை ஒழித்தார்கள். "என்ன என் சிநேகிதர்களே, இப்படித்தானா என்னை நேசிப்பது? இந்தவிதமாகவா நீங்கள் நான் கோவில் மேடையிலிருந்து உங்களுக்கு பிரசங்கம் செய்வதை ஏற்றுக்கொள்வது? இப்படியா நியாயஸ்தலத்தின்பேரில் எதிர்த்து, எனக்கும்உங்களுக்கும் நாசத்தை வரவழைத்துக் கொள்வது? உங்களில் எவன் இப்படிச் செய்ய முதன்மையாக முன் வந்தான்? உங்களை இந்த வழிக்குத் தூண்டியவனைக் காண்பியுங்கள். அவன் உயிருடன் இருக்கிறது எவ்வளவு நிச்சயமோ அப்படி அவன் என்னுடைய கோபத்தையும் உணர்வான். ஐயோ, பரிதாபமான ஏமாற்றமுடைய என் சமூகமே, உங்கள் தெய்வத்திற்கும் உங்கள் நாட்டிற்கும் எனக்கும் செய்ய உரிமைப்பட்ட கடமைகளுக்காக திரும்பிச் செல்லுங்கள். ஒரு சமயம் நான் உங்களை ஒரு நாளைக்கு இதைவிட சௌகரியமான சந்தர்ப்பத்தில் பார்க்க நேரும். நான் அப்பொழுது உங்கள் வாழ்நாட்களை அதிக சௌக்கியத்துடன் கழிக்க உதவுவேன். ஆனால் இதாவது எனக்கு மனக்களிப்பைக் கொடுக்கட்டும். நித்ய வாழ்விற்கு என்னுடைய மந்தையைக் கூட்டும்பொழுது இங்கிருக்கிறவர்களில் ஒருவன்கூட இல்லாமல் இருக்கமாட்டான்" என்று சொன்னேன்.

அவர்கள் இப்பொழுது எல்லோரும் தப்பிதத்தை உணர்ந்து சரியான வழியில் திரும்பினவர்களாயிருந்தார்கள். கண்ணீர் பெருக, என்னை ஒவ்வொருவராய் க்ஷேமமாய்ப் போய்ச் சேர வேண்டுமென்று களிகூறிப் போனார்கள். நான் ஒவ்வொருவரையும் ஆதரவோடு கைகுலுக்கி, அவர்களுக்கு என் ஆசிர்வாதத்தைக் கூறி நாங்கள் புறப்பட்டு வேறொரு இடையூறும் சந்திக்காமல்

மேலே போனோம். அஸ்தமனத்திற்கு சில நேரத்திற்கு முன் அந்த நகரத்தை—அது ஒரு கிராமமென்று சொல்ல வேண்டும்—அந்தக் கிராமத்தை அடைந்தோம். ஏனெனில் அதில் சில கீழ்த்தரமான வீடுகள் மட்டுமே இருந்தன. அதனுடைய முன்கால ஐசுவரியமெல்லாம் இழக்கப்பட்டுள்ளன. சிறையைத் தவிர வேறொரு குறியும் அதனுடைய புராதன விசேஷத்தைக் குறிக்க நீடித்து நிற்கவில்லை. அந்த ஊரை யடைந்ததும் ஒரு சத்திரத்தில் தங்கினோம். அங்கே என்ன ஆகாரங்கள் வெகு சீக்கிரமாகக் கிடைக்கக்கூடுமோ அவைகளைப் பெற்றுக்கொண்டோம். என் குடும்பத்துடன் வழக்கமான உற்ஸாகத்தோடு நான் சாப்பிட்டேன். இரவுக்குத் தங்க சரியானபடி அவர்களுக்கு வசதி பண்ணிவிட்டு, நான் உடனே ஷெரிப்பினுடைய உத்யோகஸ்தர்களுடன் சிறைக்குச் சென்றேன். அது யுத்தம் நடந்த சமயத்தில் அவ்விஷயமாக உபயோகப் படுத்திக் கொள்ள கட்டப்பட்ட பழைய கட்டிடம். அதில் ஒரு பெரிய அறை இரும்புக் கம்பிகளால் பலமாய் அடைக்கப்பட்டுள்ளது. தரையில் கருங்கற்கள் பாவப்பட்டிருந்தன. இருபத்தி நாலு மணி நேரத்தில் சில சமயங்களில் அதில் தீங்கியற்றியதற்காக சாட்டப்பட்ட குற்றவாளிகளும், கடன்காரர்களும் சேர்ந்து பொதுவாகக் கூடுவது வழக்கம். இதைத் தவிர ஒவ்வொரு கைதிக்கும் தனி அறை உண்டு. அதில் இரவில் அவனை உள்ளே இருத்தி வைத்து வெளியில் பூட்டிக்கொண்டுபோவார்கள்.

நான் உள்ளே நுழைந்ததும், கதறுதலும் மற்றப்படியுள்ள கஷ்டங்களால் கூக்குரலும் தவிர வேறொன்றையும் நான் எதிர்பார்க்கவில்லை. ஆனால் அது மிகவும வேறு விதமாகவே இருந்தது. கைதிகளெல்லாம் ஒரு பொதுவான கருத்தோடு அதில் தீவிரமாக ஈடுபட்டிருந்ததாகப் புலப்பட்டது. அதாவது தங்களுடைய கவலையை மறக்க, குதூகலத்திலும், இரைச்சல் போடுவதிலும் ஆழ்ந்திருந்தார்கள். இந்தச் சமயங்களில் சகஜமாய் வழங்கப்படுவதென்னவென்று எனக்குக் கூறப்பட்டது. அப்பொழுது என் கையிலிருந்தது சொல்பத் தொகை. அவையெல்லாம் செலவழிந்து போகும் தருணமாக இருந்த போதிலும் அந்த



சொல்லப்பட்ட கட்டளையை நிறைவேற்றினேன். அது உடனே சாராயம் வாங்க அனுப்பப்பட்டது. சிறை முழுவதும், உடனே சண்டை, சிரிப்பு, நாணமில்லாத நடவடிக்கைகள் இவைகளால் நிரம்பிற்று. "எப்படி இவ்வளவு மிகக் கொடியவர்கள் களிப்புடன் இருக்கிறார்கள? நான் மட்டும துக்கப்பட்டுக் கொண்டிருக்கலாமா? அவர்களைப் போலவேதான் நானும் அடைக்கப்பட்டிருக்கிறேன்" என்று எனக்கும் ஒரே உணர்ச்சி. "ஆனால் அவர்களைவிட நான் சந்தோஷப்பட வேண்டிய முகாந்திரங்கள் அநேகம் இருக்கின்றன" என்று, எனக்குள்ளேயே நான் சொல்லிக் கொண்டேன்.

இப்போர்க்கொத்த எண்ணங்களுடன் நான் அதிகக் களிப்புடையவனாக இருக்க முயன்றேன். ஆனால் மனச்சாந்தி, பிரயத்தனத்தால் எப்பொழுதும் உண்டாவதில்லை. மேலும் அப் பிரயத்தினத்தினால் கஷ்டம் உண்டாகிறது. நான் இந்த யோசனையில் ஆழ்ந்து சிறையின் ஒரு மூலையில் உட்கார்ந்திருக்கும் பொழுது, அங்குள்ள கைதிகளில் ஒருவர் என்னிடம் வந்து பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு என்னுடன் பேச ஆரம்பித்தார். என்னுடைய இடைவிடாத கொள்கைகளில் ஒன்று என்னவென்றால், என்னுடன் பேசுவதற்கு இஷ்டப்படும் ஒரு மனிதனை நான் தள்ளிவிடுவதில்லை. அதில் குணமிருந்தால், அவனுடைய முறைகளால் நான் நன்மையைப் அடையலாம. கெடுதியா யிருந்தால், நான் அவரைச் சீர்திருத்த முயற்சிக்கலாம். நான் இவரை விஷயங்கள் அறிந்தவராகக் கண்டுகொண்டேன். தீவிரமான வாசிப்பில்லாதவர். ஆனால் உலக அனுபவம் முற்றிலு முடையவர் என்று சொல்வது போல், அதைவிடச சரியாய்க் கூறுவதென்றால், ஒழுங்கு தவறின முறையில் போகும் எல்லா மனித சுபாவத்தையும் அறிந்தவரென்று சொல்லலாம். என்னை அவர் நான் படுக்கைக்கு ஏற்பாடு செய்திருக்கிறேனோவென்று கேட்டார். ஆனால் அந்த விஷயத்தை எப்பொழுதுமே நான் கவனிப்பதில்லை.

'அது துர்பாக்கியமே" வென்று சொன்னார். "இங்கே செத்தையைத் தவிர வேறொன்றும் கொடுப்ப

இல்லை. உம்முடைய அறை மிகவும் பெரிது. சீதளமானது. ஆனால் நீர் ஒரு கனவான் போல் தோற்றுகிறீர். நானும் என் நாளில் ஒருவனாக இருந்தேன். ஆகையால் என்னுடைய படுக்கைத் துணிகளில் சிலவற்றை உமக்கு சந்தோஷத்தோடு அளிக்கிறேன்" என்றார். அவருக்கு நான் வந்தனம் அளித்தேன். துர்பாக்கியரிடத்தில் இவ்வளவு ஜீவகாருண்யம் சிறையில்கூட இருப்பதைப் பார்க்க எனக்கு ஆச்சரியத்தைத் தந்தது. அவர் என்னை படிப்பாளி என்று தெரிந்து கொள்ளும் பொருட்டு இவைகளையும் சொன்னேன். "புராதன தவஸ்விகள் கஷ்ட காலங்களில் பிறருடன் கூடி வாழ்தலின் ஆதரவை உணர்ந்தார்களென்று தோன்றுகிறது. அது இந்த வாக்கியத்திலிருந்து புலப்படுகிறது. 'ton koseman aire ei dos ton etarion' "உண்மையில், அது தனிமையை மட்டும் அளித்தால், இவ்வுலகால் ஆவது என்ன பயன்." "நீர் உலகத்தைப் பற்றியா பேசுகிறீர், ஐயா" என்றார் என் தோழக் கைதி. "இந்த உலகம் க்ஷீணத்திலிருக்கிறது. இருந்தாலும் இந்த உலகத்தின் சிருஷ்டியோ, இந்த விஷயங்கள் எல்லாக் காலங்களிலும் தத்துவஞானிகளை ஏமாற்றியிருக்கிறது. உலக சிருஷ்டியைப் பற்றி எவ்வளவு விதமான அபிப்பிராயங்களை பின்னல் போல் வெளிப்படுத்தவில்லையா? சான்கோனியாதன், மானிதோ, பெரோஸஸ், ஓஸல்லஸ் லுகானஸ் இவர்களெல்லாம் வீணாக அதில் பிரயத்தனப்பட்டார்கள். கடைசியில், சொல்லப்பட்டவர் இந்த வார்த்தைகளைச் சொன்னார். அதின் தாத்பரியம் 'Anarch on ara kai atitutain to pan' நான் இவ்வளவு படிப்பாளியைக் குறுக்கிட்டுப் பேச பதில் மன்னிப்புக் கேட்கிறேன். ஐயா, ஆனால் நான் இவையெல்லாவற்றையும் முன்னேயே கேட்டிருக்கிறேனென்று நினைக்கிறேன். உன்ன வெல்பிரிட்ஜ் சந்தையில் ஒரு தடவை பார்க்கக் கொடுத்து வைக்கவில்லையா? உமது பெயர் இப்ரைம் ஜென் இன்ஸன் அல்லவா?" இந்தக் கேள்விக்கு அவர் பெருமூச்சு விட்டுவிட்டார். "நீர் ஒரு டாக்டர் பிரிம்ரோஸ் என்பவரை ஞாபகப் படுத்திக் கொள்ள முடியுமென்று நினைக்கிறேன். அவரிடமிருந்து ஒரு குதிரை வாங்கவில்லையா?" என்று சொன்னேன்.



அவர் உடனே என்னை ஞாபகப்படுத்திக் கொண்டார். ஏனெனில் அங்குள்ள இருட்டினாலும் அஸ்தமன காலமாகையாலும் என்னுடைய அங்க அடையாளத்தை அவர் முன்னேயே தெரிந்துகொள்ளவில்லை. "ஆம் ஐயா" என்றார் ஜென்கின்ஸன். "நான் உம்மை நன்றாக ஞாபகம் வைத்திருக்கிறேன். ஆனால் அதற்குப் பணம் கொடுப்பதற்கு மறந்துவிட்டேன். உன்முடைய பக்க வீட்டுக்காரர் பிலாம்பரோ ஒருவரை மாத்திரம் அடுத்த (அஸ்ஸைஸில்) செஷன்ஸில் என் மேல் புகார் செய்யப் போவதாக பயந்துகொண்டிருக்கிறேன். ஏனெனில், அவர் சத்தியமாக ஆணை வைத்து, நான் பொன் நாணயங்களை போடுகிறவனென்று என் பேரில் குற்றம் சாட்டுவதாக உத்தேசித்திருக்கிறார். நான் மனப்பூர்வமாய் உம்மையோ வேறொருவனையோ எப்பொழுதாவது ஏமாற்றியதற்காக வருந்துகிறேன்' என்று அவர் தம் விலங்கைக் காண்பித்து "என்னுடைய தந்திரங்களெல்லாம் எங்கே என்னைக் கொண்டு வந்து விட்டிருக்கிறதென்று நீர் பார்க்கிறீர்" என்றார்.

"நல்லது ஐயா, என்னிடம் பிரதிப் பிரயோஜனம் எதிர்பார்க்க முடியாமலிருக்கும்பொழுதே, நீர் எனக்கு உதவி அளிக்க அன்பு கூர்ந்தீர். ஆகையால், மிஸ்டர் பிலாம்பரோவின் சாக்ஷியை அமைதிப் படுத்தியாவது; அல்லது அதை முழுமையுமே தவிர்க்கும்படி பண்ணினாலும் சரி, நான் அந்த விஷயத்தில் சிரமப்பட்டு உமக்கு மறுதளிப்பேன். நான் என் மகனை அதற்காக, சௌகரியம் ஏற்படும் முதல் தடவையே அவனிடம் அனுப்புகிறேன். அவர் என்னுடைய வேண்டுகோளுக்கு இணங்குவாரென்பதற்கு ஐயமேயில்லை. என்னுடைய சாக்ஷியத்தைப் பற்றி உமக்கு ஒருவிதமான மனதாங்கல் வேண்டியதில்லை" என்று பதிலுரைத்தேன்.

"நல்லது ஐயா, எவ்விதத்தில் நான் உமக்குப் பிரதி உபகாரம் செய்ய முடியுமோ அவ்விதமெல்லாம் செய்வேன். இன்றிரவு என்னுடைய படுக்கைத் துணியில் பாதிக்கு மேல் உம்முடையது. சிறையில் எனக்குக் கொஞ்சம் செல்வாக்கு உண்டு. நான் உம்முடைய

நண்பனாகவே இருக்க ஜாக்கிரதை எடுத்துக்கொள்ளுவேன்" என்று அவர் சொன்னார். அவரை நான் வந்தனம் செய்தேன். அவருடைய தோற்றத்தில் வாலிபத் தன்மை இருந்ததைப் பற்றி நான் ஆச்சரியம் கொண்டேன். ஏனெனில் அவரை முன் பார்த்தபொழுது வயது அறுபதுக்குக் குறையாமலுள்ள வயோதிகனாய்த் தோன்றினார். "ஐயா நீர் உலக அனுபவம் சற்றுமில்லாதவர். நான் அந்தச் சமயத்தில் பொய் மயிர் வைத்துக் கொண்டிருந்தேன். நான் பதினேழு வயது முதல் எழுபது வயது வரையில் எந்த வயதை வேண்டுமானாலும் தரித்துக் கொள்ளுவதற்குக் கற்றிருக்கிறேன். ஐயோ, ஐயா, போக்கிரியாயிருக்கக் கற்றுக்கொள்ளுவதில், பட்ட பரிசிரமத்தில், பாதியாவது ஒரு தொழிலைக் கற்க செலவிட்டிருந்தால் இன்றைக்கு நான் ஒரு தனவந்தனாக இருப்பேன். ஆனால் போக்கிரியாயிருந்தபோதிலும், நான் உமது சிநேகிதனாக இப்பொழுதும் இருக்கலாம. அதுவும் ஒரு சமயத்தில் நீர் அதை எதிர் பார்க்காமலிருக்கும் சமயத்திலே" என்று பதிலுரைத்தான்,

ஜெயிலருடைய வேலைக்காரர்கள் வந்ததால், நாங்கள் மேல் சம்பாஷணையை நடத்த முடியவில்லை. அவர்கள் கைதிகளின் பெயர்க் குறிப்பை வாசித்து இரவில் அவர்களை வைத்துப் பூட்டிப் போவதற்காக வந்தார்கள். ஒரு ஆள் சுமை வைக்கோல் என் படுக்கை நிமித்தம் கொண்டுவரப்பட்டு, நான் ஒரு இருண்ட குறுகலான நடை வழியாக ஒரு அறைக்குக் கூட்டிக்கொண்டு போகப் பட்டேன். அது ஒரு சாதாரண சிறையைப்போல், தரை பாவியிருந்தது. இதில் ஒரு மூலையில், என் படுக்கையை விரித்தேன். அதன்மேல் என் தோழக் கைதி கொடுத்த துணிகளைப் போட்டேன். இது முடிந்ததும் என்னை அழைத்து வந்தவர் மரியாதையுள்ள மனிதன்போல் தோன்றியது. அவர் திரும்பிப் போகுமுன் நல் இரவு என்று ஆசி கூறிப் போனார். என்னுடைய வழக்கம் போலுள்ள தியானத்திற்குப் பிறகு, பரம பதத்திலிருக்கும் லோக ரக்ஷகரை துதி செய்து, நான் கீழே படுத்துக் கொண்டு வெகு அமைதியுடன் காலை வரையில் நன்றாகத் தூங்கினேன்.

## அத்தியாயம் 26

*சிறையில் ஒரு சீர்திருத்தம்—சட்டங்களைப் பூர்த்தியாக்குவதற்கு தண்டனைகள் விதிப்பதுடன், பரிசளித்தல் வேண்டும்.*

மறு நாட் காலையில், சீக்கிரத்தில் என் குடும்பத்தினரால் எழுப்பப்பட்டு, அவர்களை என் படுக்கையண்டை கண்ணும கண்ணீருமாய்க் கண்டேன். எங்களைச் சுற்றிலும், பார்க்கப்படுவதெல்லாம், பயங்கரமாக இருந்ததால், அவர்கள் அதைரியப்பட்டார்கள். நான் சாந்தமாய் அவர்களுடைய துக்கத்தைக் கண்டித்தேன். இதுவரையில், அவ்வளவு அமைதியாக எப்பொழுதும் தூங்கியதில்லையென்று நம்பிக்கை கொள்ளும்படி சொன்னேன்.

பிறகு என் மூத்த மகள் அவர்களுடன் காணப்படாததால், அவளைப்பற்றி விசாரித்தேன். நேற்றையக் கவலையும், வழிச் சிரமமும் அவளுடைய காய்ச்சலை அதிகப்படுத்தியிருக்கிறது. ஆகையால், அவளை விட்டு விட்டு வருவதே தகுதியென்று நினைத்ததாகச் சொன்னார்கள். என்னுடைய அடுத்த கவலை, சிறைக்கு எவ்வளவு சமீபத்தில் கிடைக்குமோ, அங்கே சௌகரியமாய் என் குடும்பம் வசிக்கும் பொருட்டு, ஒன்று அல்லது இரண்டு அறைகள் வாடகைக்கு எடுக்க என் மகனை அனுப்புவதென்று தீர்மானிக்கப்பட்டது. அவன் அப்படியே செய்தான். ஆனால் ஒரே ஒரு அறைதான் கிடைத்தது. அதைச் சொற்பச் செலவில் தன் தாயாருக்கும் சகோதரிகளுக்குமாக வாடகைக்கு அமர்த்தப்பட்டது. ஜெயிலர் ஜீவகாருண்யத்துடன் என் மகன் மோஸஸ்ஸும் அவன் இரண்டு சிறு தம்பிகளும் சிறையில் என்னுடன் படுக்கச் சம்மதித்தனர். ஆகையால் அறையின் மூலையில் அவர்களுக்காக ஒரு படுக்கை செய்யப்பட்டது. இது மிகவும் சௌகரியமாக முடிந்ததென்று நான் எண்ணினேன்.

என் சிறு குழந்தைகள் அவர்கள் நுழையும்பொழுதே பயப்பட்ட அந்த இடத்தில் படுத்துக்கொள்ளுவதற்கு இஷ்டப்படுகிறார்களாவென்று முந்தியே கேட்டுத் தெரிய விரும்பினேன். "நல்லது என் புத்திசாலிப் பிள்ளைகாள், உங்களுடைய படுக்கை எப்படியிருக்கிறது? இருட்டாய்த் தோன்றினாலும் இந்த அறையில் படுத்துக்கொள்ள நீங்கள் பயப்படாமல் இருக்கிறீர்களென்று நான் நம்புகிறேன்" என்று சொன்னேன். "இல்லை, அப்பா. நீ எங்கேயிருந்தாலும் அங்கே படுத்துக்கொள்ள எனக்குப் பயம் கிடையா"தென்றான் டிக். "நானும், அப்பா. இருக்குமிடம் ஒவ்வொன்றையும் மிக நன்றாக நேசிக்கிறேன்" என்று இன்னும் நாலு வயதிற்குமேல் போகாத பில் சொன்னான். இதன் பிறகு என் குடும்பத்தில் ஒவ்வொருவருக்கும் அவர்கள் என்ன செய்வதென்று நான் ஏற்பாடு செய்தேன். என் மகள், அவள் தமக்கையின் குன்றிவரும் தேக சௌக்கியத்தைக் கவனிக்க பிரத்தியேகமாய் ஏவப்பட்டாள். என் மனைவி என்னைக் கவனிக்கவேண்டியது. என் சிறு பையன்கள் எனக்கு வாசிக்கவேண்டியது. "உனக்கோவென்றால் என் மகனே, உன்னுடைய புஜங்களின் பரிசிரமத்தால்தான் நாங்களெல்லாம் காப்பாற்றப்படவேண்டும் என்று நம்பியிருக்கிறோம். தினசரி வேலைக்காரனாக உன்னுடைய சம்பளம் சரியான கட்டும் செட்டுமாய் நம்மெல்லோருடைய ஜீவனத்திற்கும் பூராவாகப் போதும். அதில் சௌகரியமாக இருக்கலாம். உனக்கு வயது பதினாறாகிறது. புஜபலம் இருக்கிறது. என் மகனே அது உனக்கு மிகவும் பிரயோஜனமுள்ள காரியங்களுக்காகவே கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏனெனில், அது உன்னுடைய நிராதரவற்ற பெற்றோர்களையும் குடும்பத்தையும் வறுமையிலிருந்து காப்பாற்றவேண்டும். இன்றைய சாயந்திரமே நாளை வேலைக்காகப் பார்க்கத் தயார் செய். ஒவ்வொரு இரவும் எவ்வளவு பணம் சம்பாதிக்கிறாயோ அதை எங்களுடைய போஷணத்திற்காகக் கொண்டுவா" என்றேன்.

இவ்வாறு, அவனுக்குப் போதித்துவிட்டு, மற்றவைகளை சரிபண்ணிவிட்டு, அதிகக் காற்றும் விசாலமான



இடமும் அனுபவிக்கிறதற்காக பொதுச் சிறைச்சாலைக்கு நடந்து சென்றேன். ஆனால் நான் அங்கே அதிக நேரமிருக்கவில்லை. மல, ஜல விஸர்ஜனமும், நாணமில்லாமையும், மூர்க்கத்தனமும், ஒவ்வொரு பக்கத்திலும் என்னை எதிர்த்து, என் அறைக்குத் திரும்பிப் போகத் தூண்டியது. இங்கே நான் கொஞ்சநேரம் உட்கார்ந்து யோசிக்கலானேன். வழி கெட்டுப்போனவர்கள் அறியமுடியாத வண்ணம் மூடத்தனத்தில் ஆழ்ந்திருக்கிறார்கள். அவர்கள் எல்லா ஜன சமூகங்களும் தங்களுக்குப் பகிரங்கமாகவே விரோதமாயிருப்பதால் தங்களுடைய நடத்தையால், பிற்காலத்திற்கும், ஒரு பயங்கரமான சத்துருவைத் தேடிக்கொள்ளும் அவஸ்தையில் இருப்பவர்களாய்த் தோன்றியது.

அவர்களுடைய அறியாத்தன்மை, என்னுடைய இரக்கத்தை முழுமையும் கிளப்பிற்று. என் மனத்திலிருந்து என்னுடைய சொந்தக் கவலையும் ஒழிந்தது. அவர்களைத் திரும்பவும் சாதாரண மனிதராகச் செய்வதிலுள்ள பிரயத்தனம் ஒரு கடமையாக எனக்கு விதிக்கப்பட்டதென்று புலப்பட்டது. ஆகையால் இன்னொரு தரம் திரும்பிப்போக எண்ணினேன். அவர்களுடைய நிந்தையைக் கவனியாமல் என்னுடைய புத்திமதியை அவர்களுக்குச் சொல்லி, விடாமுயற்சியால், அவர்களை வெல்ல நான் தீர்மானித்தேன். அவர்களிடையில் மறுபடியும் அதே காரணமாய்ப் போய், நான் மிஸ்டர் ஜென்கின்ஸினிடம் என்னுடைய உத்தேசத்தைச் சொன்னேன். அவரும் அதைக்கேட்டுக் குலுங்கச் சிரித்தார். ஆனால் மற்றவர்களுக்கு அதைத் தெரியப்படுத்தினார். இந்த ஏற்பாடு அவர்களால், விசேஷமாய் நல்ல முகமனோடு வரவேற்கப்பட்டது. ஏனெனில் அது பொழுது போக்குக்கு ஒரு புதிய ஆஸ்பதத்தை ஏற்படுத்தியது. இதுவரையிலோ அவர்களுக்குப் பிறரைக் கேலி செய்வதாலும் அல்லது நாணம் கெட்ட முறையாலுமே அனுபவிக்கக்கூடிய களிப்பைத் தவிர வேறு வழியில்லாமலிருந்தார்கள். அதன் பிறகு, நான் அவர்களுக்கு திவ்ய சர்வீஸ் புஸ்தகத்திலிருந்து ஒரு பாகம் உருக்கமாயும், கொஞ்சம்கூட தத்தளிப்பில்லாத

குரலுடன் வாசித்தேன். என்னைக் கேட்பவர்கள் அந்த சமயத்தில் முழுக் களிப்போடு இருந்தார்கள். நாணமில்லா குசு குசுப் பேச்சும், பாபத்தின் உணர்ச்சியால் கள்ள அழுகை அழுதுகொண்டும், கண்ணடித்தும், கமறியும் இவற்றால் அடிக்கடி சிரிப்பு மூட்டப்பட்டன. எப்படியிருந்தபோதிலும், நான் என் வழக்கம்போல் தெய்வீக முறைக்கு ஏற்றபடி வாசித்துக்கொண்டு போனேன். நான் செய்வது சிலரை மாற்றக்கூடும். ஆனால் அதற்கு, இவ்விதம் செய்வதினால் ஒரு பழுதும் ஏற்படக்கூடியதல்ல. வாசித்த பிறகு, நான் பிரசங்கததை ஆரம்பித்தேன். அது அவர்களை முதலில் சந்தோஷப்படுத்துவதற்கே அன்றி அவர்களிடம் பிழை கண்டு பிடிப்பதற்கல்ல. முதலில் நான் இவ்விதம் செய்வதில் அவர்களுடைய நன்மையைக் கருதினேனே ஒழிய வேறொரு எண்ணமும் கிடையாதென்று சொன்னேன். நான் அவர்களுடன் கூடச் சேர்ந்த சகோதரக் கைதி. பிரசங்கம் செய்வதில் இப்பொழுது தனக்கு ஒரு லாபமும் கிடைப்பதற்கில்லை. அவர்கள் அவ்வளவு தெய்வ நிந்தையோடு பேசுவதில் நான் வருத்தப்படுகிறேனென்றேன். ஏனெனில் அப்படிச் செய்வதினால் அவர்கள் லாபம் ஒன்றும் அடையவில்லை. ஆனால் அதிக நஷ்டம அடையலாம். மேலும் சொன்னேன்: "என் சிநேகிதர்களே, ஏனெனில் நீங்கள் உண்மையில் என் சிநேகிதர்கள்தான். ஆனால் உலகம் உங்களுடைய சிநேகத்தைத் தவிர்க்கலாம். நீங்கள் பன்னிராயிரம் சத்தியங்கள் ஒரு நாளில் செய்த போதிலும், உங்களுக்கு ஒரு பைசா கூட கிடைக்கப் போவதில்லை. அபபடி யிருக்க ஒவ்வொரு நிமிஷமும், சாத்தானைக் கூப்பிடுவதிலும், அவனுடைய சிநேகததை விரும்புவதிலும் என்ன லாபம்? அவன் உங்களை எவ்வளவு தரித்திரமாக நடத்துகிறானென்று நீங்களே பார்க்கிறீர்கள். உங்களுக்கு இங்கே அவன், வாய் நிரம்ப சத்தியம், சபதம் பண்ணுவதும், வயிற்றுப்பசியும் கொடுத்திருக்கிறானே ஒழிய, இதைத்தவிர அவன் வேறொன்றும் கொடுத்ததாகக் கண்டீர்களா? எனக்கு விசேஷமாய் அவனைப்பற்றிக் கூறித் தெரிந்து கொண்டவரையில், அவன் இவ் வாழ்நாளுக்கு அப்புறம், உங்களுக்கு ஒன்றும் கொடுக்கப் போவதில்லை.



"நம்முடைய வியாபாரங்களில் ஒருவன் நம்முடன் சரிவர நடந்து கொள்ளாவிட்டால், நாம் அவனைவிட்டு சகஜமாக வேறொருவனிடம் போகிறோம். வேறொரு எஜமான் உங்களை நடத்துவது எப்படியென்று நீங்கள் தெரிந்து கொண்டால் உங்களுக்கு லாபமுண்டாகாதா? அவர் உங்களிடமிருந்து வேறொன்றும் கேட்கவில்லை. தன்னிடத்திற்கு வர உங்களை அழைக்கிறார். வருபவர்களுக்கு நல்ல பயன்களைத் தருவதாகச் சொல்லுகிறார். என் சிநேகிதர்களே, உலகில் எல்லா முட்டாள் தனத்தையும் விட, நிச்சயமாய், இதுதான் எல்லாவற்றிலும் அதிகமானது. எவனும் ஒரு வீட்டைக் கொள்ளையிட்டு விட்டு, தலையாரி வீட்டில் போய் ஒளிந்து கொள்வானா? இருந்தபோதிலும், அவனைவிட நீங்கள் எப்படிப் புத்தியுடையவர்கள். ஏற்கெனவே, உங்களையெல்லாம் மோசம் செய்தவனிடத்தில், நீங்கள் ஆறுதலை அடைய விரும்புகிறீர்கள். எந்தத் தலையாரியையும் விட மிக்கக் கெட்ட எண்ணமுடையவனிடம், உங்களுடைய வேண்டுகோளைச் சமர்ப்பிக்கிறீர்கள். ஏனெனில் அவர்கள் உங்களைப் பிடித்து தூக்கிலேற்றி விடுகிறார்கள். ஆனால் இவனோ உங்களைப் பிடித்துத் தூக்கிலேற்றிய பிறகு, எல்லாவறறிலும் முழு மோசமென்னவென்றால், கொலையாளி தன் வேலையை முடித்துக் கொண்ட பிறகு கூட, உங்களை இவன் உங்கஷ்டம்போல் விடமாட்டான். நான் பிரசங்கத்தை முடித்தவுடன் அந்தக் கோஷ்டியின் பாராட்டுதலைப் பெற்றேன். சிலர் என்னிடம் வந்து கை குலுக்கி நான் மிக்க சத்திய சந்தனென்று சபதம் கூறி, என்னுடைய நீடித்த பழக்கத்தையும் அவர்கள் விரும்புவதாகவும் சொன்னார்கள். ஆகையால், நான் என் பிரசங்கத்தை மறுநாள் செய்வதாக ஒப்புக்கொண்டேன். வாஸ்தவத்தில் இங்கே சீர்திருத்தம செய்யலாமென்று கொஞ்சம் நம்பிக்கை கொண்டேன். ஏனெனில் இது என் கொள்கை, எந்த மனிதனும், சீர்திருத்தமடையக்கூடிய நிலையை விட்டு எப்பொழுதும் தாண்டுவதில்லை. ஒவ்வொருவருடைய மனதும் எய்கிறவன் மட்டும் சரியாய்க் குறிவைத்து அடித்தால், சீர்திருத்தம் என்கிற அம்புக்கு திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. நான் இப்படி

என் மனதை திருப்தி செய்து கொண்ட பிறகு, என் அறைக்குத் திரும்பிப் போனேன். அங்கே என் மனைவி எனக்கு ஒரு மலிவான சாப்பாடு தயார் செய்து கொண்டு வந்திருந்தாள். மிஸ்டர் ஜென்கின்ஸன் தன்னுடைய சாப்பாட்டையும், எங்களுடன் சேர்த்து தானும் கூட சாப்பிட விரும்பினான். ஏனெனில், அவன் சொன்னபடி, என்னுடன் சம்பாஷிக்க வேண்டுமென்று ஆவல் கொண்டான. அவன் இதுவரையில் என் குடும்பத்தைப் பார்த்ததில்லை. ஏனெனில் அவர்கள், மேலே சொல்லப்பட்ட குறுகிய நடவாத வழியாக என் அறைக்கு வருவது வழக்கம். இதனால் அவர்கள் பொதுச் சிறையை ஒதுக்கி விட்டார்கள். ஜென்கின்ஸன் முதல் சந்திப்பில் என்னுடைய கடைசிப் பெண்ணின் அழகைக் கண்டு கொஞ்சமாகப் பிரமிக்கவில்லை. அவளுடைய சுபாவமான ஆழ்ந்த யோசனையுள்ள முகம் அதைப் பிரகாசிக்கச் செய்தது. என்னுடைய சிறுவர்களும் கவனிக்கப்படாமல் போகவில்லை. "ஐயோ, டாக்டர், இந்தக் குழந்தைகளின் அதி சௌந்தரியமும், அரிய நற்குணமும், இப்பேர்க்கொத்த இடத்தில் இருப்பது நன்றல்ல" என்று சொன்னான்.

"ஏன், மிஸ்டர் ஜென்கின்ஸன்? பகவான் போற்றப்படவேண்டும். என் குழந்தைகள் நன்னடத்தையில், ஏறக்குறைய வசதியுள்ளவர்கள். அவர்கள் நன்மையைக் கடைப்பிடித்திருந்தால், மற்ற சங்கதிகள் கவனிக்கத் தக்கவையல்ல" என்று பதிலுரைத்தேன்.

"உம்முடைய சிறிய குடும்பம் உம்முடைய பக்கத்தில் இருப்பது உமக்கு விசேஷ ஆதரவை அளிக்கக்கூடும் என்று நான் நினைக்கிறேன்" என்று என் நண்பன் கூறினான். "ஆதரவா, மிஸ்டர் ஜென்கின்ஸன், ஆம், அது ஒரு ஆதரவே. உலகம் முழுமையும் எனக்கு அளிக்கப் பெற்றாலும், நான் அவர்கள் இல்லாமல் இருக்கமாட்டேன்" அவர்கள் இருப்பதினால் ஒரு காராக்கிரகமும் ஒரு அரண்மனையாகப் பாவிக்கச் செய்யும். இவ்வுலகில் என்னுடைய சுகத்தைக் கெடுப்பதற்கு ஒரே ஒரு வழி இருக்கிறது. அதாவது அவர்களுக்குக் கெடுதி செய்வதே" என்று சொன்னேன்.



"சொற்ப அளவில் நான் குற்றவாளியாகிறேனென்று ஐயமுறுகிறேன். ஐயா, ஏனெனில் (என் மகன் மோஸஸைப் பார்த்துக் கொண்டே) இங்கே நான் துன்புறுத்திய ஒருவனைப் பார்க்கிறேனென்று நினைக்கிறேன். அவன் என்னை மன்னிக்கும்படி வேண்டுகிறேன்" என்றான் அவன்.

என் மகன், முன்பு மாறு வேஷத்தில் பார்த்திருந்த போதிலும், அவனுடைய குரலையும், அமைப்பையும் உடனே ஞாபகப்படுத்திக் கொண்டான். அவன் புன்னகையுடன் அவன் கையைப்பற்றி, அவனை மன்னித்துச் சொன்னான். "ஆனால், என்னை மோசம் பண்ணுவதற்கு ஒரு சரியான புள்ளியென்று என் முகத்தில் நீ என்ன கண்டாய் என்று நான் ஆச்சரியப்படாமலிருக்க முடியவில்லை."

"என் அன்புள்ள ஐயா, உன்னுடைய முகமல்ல, ஆனால் உன்னுடைய வெள்ளை ஸ்டாகிங்ஸ்களும், உன் தலைமயிரில் குத்தியிருந்த கறுப்பு ரிப்பாண்டும் என்னை இழுத்தன. ஆனால் உன்னுடைய சாமர்த்தியத்திற்கு ஒன்றும் அகௌரவமில்லை. என்னுடைய வாழ்நாளில் உன்னைவிட புத்திசாலிகளை ஏமாற்றியிருக்கிறேன. என்னுடைய தந்திரமெல்லாமிருந்தாலும், ஏமாற்றப்பட்ட முட்டாள்கள் என்னால் சமாளிக்க முடியாதபடி கடைசியில அவ்வளவு அதிகமாய்ப் போய்விட்டார்கள்" என்றான் ஜென்கின்ஸன். "உம்மைப் போலுள்ளவர்களுடைய வாழ்நாளின் சரித்திரம் மிகவும் போதனையுடையதாயும் விநோதமாயுமிருக்குமென்று நினைக்கிறேன்" என்றான் என் மகன். "இருவகையிலும் அதிகமில்லை. ஜனங்களின் தந்திரங்களையும் துர்க் குணங்களையும் மட்டும் வரையும் சரித்திரச் சொத்துக்கள், வர்ழ்க்கையில் சந்தேகத்தை அதிகரிக்கிறது. நம்முடைய வெற்றியை மந்திக்கிறது. சந்திக்கப்படுகிற ஒவ்வொரு மனிதனையும் சந்தேகிக்கும் பிரயாணியும், திருடனைப் போல் காணும் ஒவ்வொரு மனிதனைப் பார்த்ததும், திரும்பும் பிராணியும், தங்களுடைய யாத்திரையின் முடிவை, காலத்தில் அடையமாட்டார்கள்" என்று ஜென்கின்ஸன் சொன்னான்.

"உண்மையில் என்னுடைய அனுபவத்தி லிருந்து புத்தியுள்ளவன் சூரியமண்டலத்திலுள்ள முட்டாள்களுக்கெல்லாம், மேலே அதி முட்டாளென்று நான் கருதுகிறேன். என்னுடைய வாலிபத்திலிருந்து, நான் தந்திரசாலியென்று நினைக்கப்பட்டேன். ஏழு வயது மட்டுமாகுமளவில், ஸ்திரீகள் என்னை எல்லாம் அறிந்த மனிதனென்று சொல்லுவார்கள். பதினான்கு வயதில் நான் உலகை அறிந்தேன். என் தொப்பியை மறைத்து அணிந்தேன். பெண்களை நேசித்தேன். இருபதில், நான் சுத்த யோக்கியனாயிருந்தும், ஒவ்வொருவரும் என்னை மிக்க தந்திரசாலியென்று நினைத்து, ஒருவரும் என்னை நம்புவதில்லை. கடைசியில் என்னைக் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு இப்படி ஏமாற்றுகிறவனாக மாறும்படி ஏற்பட்டது."

அது முதல் என் மூளை ஏமாற்றும் யோசனைகளில் பட படவென்று அடித்துக் கொண்டும், என் மனது கண்டுபிடிக்கப்படுவோமென்று தத்தளித்துக் கொண்டும ஜீவித்து வந்தேன். நான் உங்களுடைய பக்கத்தியான் கபடற்ற சத்தியசந்தனை பிலாம்பரோலை கேலி பண்ணுவது வழக்கம். ஏதாவது ஒரு வழியில் சகஜமாய் வருஷத்திற்கு ஒரு தடவை அவனை ஏமாற்றி யிருக்கிறேன். அப்படி யிருந்தும், சத்தியசந்தன் சந்தேகம் கொள்ளப் படாமல் முன்னுக்கு வந்தான். தனவந்தனானான். நானோ ஏமாற்றுகிறவனாயும் தந்திரமுள்ளவனாயுமே வசித்து வந்தேன். சத்தியசந்தனாயிருக்கிறோமென்கிற ஆறுதலின்றி ஏழையாய் இருந்தேன். ஆனாலும் உம்முடைய கதையைச் சொல்லும். என் இங்கே வரப்பட்டீர்? ஒருவேளை, எனக்கு, சிறை வாசத்தை என் விஷயத்தில் மீட்டுவிட சாமர்த்தியமில்லா திருந்தாலும் என் சிநேகிதர்களை விடுவிப்பேன்" என்று ஜென்கின்ஸன் சொன்னான்.

அவனுடைய அவாவைத் தீர்க்க நான் இப்பொழுது சம்பவித்திருக்கிற கஷ்டங்களில் கொண்டு வந்து விட்ட தவறுதல்களையும், எதிர்பாராத சம்பவங்களின் தொடர்கள் முழுவதையும் நான் தெரிவித்தேன். அப்படியே விடுவித்துக் கொள்ள பூர்ண அசக்தியையும் தெரிவித்தேன்.



என் கதையைக் கேட்ட பிறகு, சில நிமிஷங்கள் கழித்து, அவன் ஏதோ ஒரு சூசகமான சங்கதியைக் கண்டு பிடித்தாற்போல், தன் உச்சி மண்டையில் தட்டிக் கொண்டு, போய் வர உத்தரவு பெற்றுக் கொண்டு, தன்னால் ஆகக் கூடியதைச் செய்ய முயலுகிறேனென்று சொல்லிக் கொண்டு போனான்.

# அத்தியாயம் 27

## அதே விஷயத்தின் தொடர்பு

மறுநாட் காலை, கைதிகளைச் சீர்திருத்த நான் ஏற்பாடு செய்திருக்கும் முறைகளை, என் மனைவிக்கும், குழந்தைகளுக்கும் அறிவித்தேன். அவர்கள் ஏகோபித்து, அதை ஒப்புக்கொள்ளவில்லை. அவர்கள் அது முடியாத காரியமென்றும், தகுதியற்றதென்றும் சொன்னார்கள். மேலும் என்னுடைய முயற்சி ஒருக்காலும் அவர்களைச் சீர்தூக்காது. ஆனால் அது என்னுடைய தெய்வீகத் தொழில் முறையை ஒருவேளை நிந்திக்கச் செய்யலாமென்றார்கள்.

“மன்னிக்கவேண்டும், இந்த ஜனங்கள் எவ்வளவு கெட்டுப்போயிருந்தாலும் இன்னமும் மனிதர்களே, அதுவே, என்னுடைய அன்பிற்குப் பாத்திரமாக்க ஒரு பெரிய அவமதிக்கக்கூடாத உரிமை. நான் மதியை ஏற்றுக்கொள்ளாவிடில், கொடுப்பவனின் மனதைப் பூர்த்தி செய்யத் திரும்புகிறது. நான் சொல்லும் புத்திமதிகள், அவர்களை நல்வழிக்குக் கொண்டுவராவிட்டாலும், நிச்சயமாக, அவை என்னை புனிதமாக்கும். கேடடைந்த இந்த ஜனங்கள், ராஜ குமாரர்களாயிருந்தால், ஆயிரக் கணக்கான பேர்கள் இவர்களுக்குத் தொண்டுபுரியத் தயாராயிருப்பார்கள். ஆனால் என் அபிப்பிராயத்தில், காராக்கிருஹத்தில் புதைந்திருப்பவனின் மனது, சிம்மாஸனத்திலே வீற்றிருப்பவருடைய மனதுபோல், அவ்வளவு மதிக்கத் தகுந்தது. என் ஐசுவரியங்களே, நான் அவர்களை சீர்திருத்த முடிந்தால் அப்படிச் செய்வேன். ஒருவேளை அவர்கள் எல்லோருமே என்னை நிராகரிக்காமலிருக்கலாம். ஒருவேளை படுகுழியிலிருந்து ஒருவனுக்காவது நான் கைகொடுத்து மீட்கலாம். அதுவே ஒரு பெரிய லாபமாகும். ஏனெனில் இப்புவியில், மனிதனுடைய ஆத்மாவைப்போல், அவ்வளவு விலையுயர்ந்த ரத்தினம் இருக்கிறதா?” என்றேன்.



இப்படிச் சொல்லிக்கொண்டு நான் அவர்களை விட்டு, பொதுச் சிறையில் இறங்கினேன். அங்கே என் வரவை எதிர்பார்த்தவர்களாய் கைதிகள் களிப்புடன் இருந்தார்கள். ஒவ்வொருவரும், டாக்டர் மேல் ஏதாவது ஒரு சிறை விளையாட்டுச் செய்யத் தயாராயிருந்தார்கள். அதற்கேற்றபடி, நான் ஆரம்பிக்கப் போகும்பொழுது ஒருவன் எதிர்பாராமல் பட்டாற்போல் என்னுடைய தொப்பியைக் கோணலாய்த் திருப்பினான். பிறகு மன்னிப்புக் கேட்டுக்கொண்டான். இரண்டாமவன் கொஞ்சத் தூரத்திற்கு அப்பால் நின்றுகொண்டிருந்தான். ஒரு மனிதன் அவன் பல்லை மூடிக்கொண்டு துப்பும் சாமர்த்தியமுள்ளவன். அப்படிச் செய்து, என் புஸ்தகத்தின்மேல் மழை பொழிந்தான். மூன்றாம் மனிதன் பிறருக்கு மிகவும் களிப்பை உண்டாக்கும் வண்ணமாய், “ஆமென்” என்று சொல்லும்பொழுது சுயமில்லாத குரலில் கத்துவான். நாலாவது மனிதன் என் பையை சோதித்து என் மூக்குக் கண்ணாடிகளைத் தந்திரமாய் எடுத்துக்கொண்டான். ஆனால் அதிலொருவன் செய்த வேடிக்கை மற்றவைகளைவிட எல்லோருக்கும் திருப்தியை அளித்தது. நான் மேஜைமேல் புஸ்தகங்களை வைத்திருக்கும் மாதிரியைக் கவனித்து, அவன் வெகு சாமர்த்தியமாக ஒரு புஸ்தகத்தை மாற்றிவிட்டான். அதற்குப் பதிலாக ஒரு நாணமற்ற விகடப் புஸ்தகத்தை வைத்தான். இருந்தபோதிலும், இந்த கேடடைந்த மனிதர்களின் விஷமத் தொகுதியின் செய்கைகளையெல்லாம் நான் கவனிக்கவேயில்லை. ஆனால் என்னுடைய முயற்சி பரிகசிக்கத் தகுந்தவையாயிருந்தபோதிலும், அது பரிகசிப்பை ஒரு தடவை இரண்டு தடவையே உண்டுபண்ணும் என்று நான் நன்கு அறிந்துகொண்டு, என் பிரசங்கத்தைத் தொடர்ந்து நடத்தினேன். அதில் எவை கவனிக்கத்தக்கனவோ, அவை ஊர்ஜிதமாகத் தழுவப்படும். என் ஏற்பாடு நலமடைந்தது. ஆறு நாட்களில் சிலர் மனக் கிளர்ச்சியடைந்தார்கள். எல்லோரும் கவனமாய்க் கேட்டார்கள்.

இப்பொழுதுதான் என்னுடைய விடாமுயற்சியையும், பேச்சுச் சாமர்த்தியத்தையும் கொண்டாடினேன்.

ஏனெனில், அவை ஒரு தர்ம சிந்தனைகூட இல்லாத கொடியவர்களுக்கு உணர்ச்சியை உண்டாக்கிவிட்டன. இப்பொழுது அவர்களுக்குப் பிழைப்புக்கு உதவியையும் புரியலாமென்று நினைக்க ஆரம்பித்தேன். அவர்களுடைய இருப்பைக் கொஞ்சம் சௌகரியமாகச் செய்வதே. இது காறும் அவர்களுடைய வாழ் நாட்கள் இல்லாமையிலும், அதிகத்திலும் மாறி மாறி கழிக்கப்பட்டன. அப்படியே சிறையில், அடி தடி சத்தத்தோடுகூடிய கலகத்திலோ, அல்லது நிர்வாகமில்லாத மனத்தாங்கலிலோ, கழிக்கப்பட்டது. அவர்களுடைய ஒரே அலுவல் ஒருவரோடொருவர் சண்டை செய்வது, நொண்டி விளையாடுவது, சுருட்டுக் குழாய்களை வெட்டுவது, பிரயோஜனமற்ற கடைசி விளையாட்டிலிருந்து நான் ஊகித்து யார் யார் வேலை செய்வதற்கு இஷ்டமோ, அவர்களை சுருட்டு கிடங்குக்கும் பூட்ஸ் தைக்கிறவர்களுக்கும் முனைகள் வெட்ட ஏற்படுத்தினேன். பொதுவில் சேகரிக்கப்பட்ட பணத்திலிருந்து சரியான மரத் துண்டங்கள் வாங்கப்பட்டன. தயாரானதும் நான் விரும்பி ஏற்பாடு செய்தபடி விற்கப்பட்டன. இதிலிருந்து ஒவ்வொருவனும் தினசரி ஏதாவது சம்பாதித்தான். அது சொல்பமாயிருந்தாலும் அவனவனைப் போஷிக்கப் போதுமானவையாயிருந்தன.

நான் இத்துடன் நிற்கவில்லை. நாணமற்ற கெட்ட நடவடிக்கைகளுக்கெல்லாம் அபராதம் விதித்தேன். விசேஷமான உழைப்புக்கு நன்கொடை அளிக்கப்பட்டது. இப்படிப் பதினைந்து நாட்களுக்குள்ளேயே, அவர்களை சுமாராய்ச் சேர்க்கைக்கு உரித்தானவர்களாகவும் ஜீவகாருண்ய முள்ளவர்களாகவும் செய்துவிட்டேன். மனிதர்களை இயற்கை முரட்டுத்தனத்திலிருந்து சிநேக பாவத்திற்கும் கீழ்ப்படிந்து நடக்கும்படியும் செயததால், என்னை ஒரு சட்ட நிருபாராகக் கருதி நானே சந்தோஷமடைந்தேன்.

சட்டம் அமைக்கும் அதிகாரி சட்டத்தை ஏற்படுத்தும் பொழுது, அதனுடைய கருத்து, ஜனங்களுக்குக் கடும் தண்டனை விதிப்பதைவிட, அவர்களை ஒழுங்கான வழிக்குக் கொண்டு வரும்படி இருக்க வேண்டும். குற்



றங்களை ஒழிப்பதற்குத் தண்டனையை சகஜமாக ஆக்காமல் தண்டனை விதிக்க வேண்டிய இடத்தில் அதைத் தாங்க முடியாததாகச் செய்ய வேண்டும். பிறகு நம்முடைய தற்கால சிறைச்சாலைகளோ, அதில் குற்றம் செய்தவர்களுமிருக்கிறார்கள். குற்றம் செய்யாமல் அடைபட்டுக் குற்றம் செய்யக் கற்றுக் கொள்பவர்களுமிருக்கிறார்கள். ஒரு குற்றம் செய்ததற்காக அதில் ஆதரவற்றவர்களை அடைக்கிறது. உயிர் பிழைத்திருந்து விடுதலை பெற்றால், இன்னும் ஆயிரக் கணக்காக செய்யத் தயாரிக்கப்பட்டு விடுதலை பெற்று, வெளியில் அனுப்பப்படுகிறார்கள்.

ஐரோப்பாவில், மற்ற தேசங்களில் போல், நாமும் சிறைச்சாலைகளை மனம் மாறும் ஸ்தலங்களாகவும், அதிக மனித ஸஞ்சாரமில்லாத தனி இடங்களாகவும், செய்விக்க வேண்டும். அங்கே குற்றஞ் செய்தவர்களை, அவர்களுடைய மனத்தைத் திருப்ப தகுதியுள்ளவர்கள், அந்த ஸ்தலங்களை பார்வையிடல் வேண்டும். உண்மையில் குற்றஞ் செய்யாதவர்களாயிருந்தால், அவர்களுக்குத் திரும்பவும் சன்மார்க்கத்தைக் கைவிடாது பின் பற்ற வேண்டிய நூதன நியாயங்களை எடுத்துக் காண்பிக்க வேண்டும். இப்படி அல்லவோ, ஒரு ராஜ்யத்தை சீர்திருத்த வேண்டும். தண்டனைகளை அதிகப் படுத்துவதால், பிரயோஜனமில்லை. சாதாரணக் குற்றங்களுக்குக்கூட தூக்குத்தண்டனை விதிக்க அதிகாரமிருக்கிறதென்று நினைக்கும், ஜன சமூகங்களின் அதிகாரத்தின் நியாயத்தை, நான் பிரச்னை செய்யாமலிருக்க முடியாது. கொலைபுரியும் இடத்தில், அவர்களின் அந்த உரிமை ஏற்கத்தக்கது. ஏனெனில் நம்மை நாம் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்ற விதிப்படி, அன்னியனின் உயிரை அவமதிப்புச் செய்யும் எந்த மனிதனையும் கொல்வது, எல்லோருடைய கடமையாகிறது. அவர்களை எதிர்க்க சிருஷ்டி முழுமையும் ஆயுதபாணியாய்க் கிளம்புகிறது. ஆனால் என் பொருளைத் திருடுகிறவன் மேல் அப்படியில்லை. இயற்கையின் பொது விளம்பரப்படி ஒருவன் குதிரையை மற்றொருவன் திருடினால், அது திருடப்பட்டவனுக்கு அதில் எவ்வளவு உரிமையோ அவ்வளவு திருடியவனுக்கும் உண்டு. ஆகை

யால் திருடியவனுடைய உயிரை வாங்க அது அவனுக்கு அதிகாரம் கொடுக்கவில்லை. இதில் எனக்கு ஏதாவது உரிமையுண்டோவெனில், அது நாங்களிருவரும் யார் மற்றவனின் குதிரையைப் போக்கடிக்கிறோமோ அவன் இறப்பானென்று உடன்படிக்கை பண்ணிக்கொண்டால் மட்டுமே. ஆனால் அது ஒரு தப்பான உடன்படிக்கையாகும். ஏனெனில் எந்த மனிதனுக்கும், தன் உயிரை, பொருளைப்போல் தன்னுடையது என்று பாராட்ட முடியாததால், எப்படி பிறர் உயிரைக் கொல்ல உரிமையில்லையோ, அப்படியே தன்னுடைய உயிரை அடகு வைக்கவும் தனக்கு உரிமையில்லை. மேலும் அந்த உடன்படிக்கை குறையுற்றது. தற்கால சமரஸக் கோர்ட்டாரே, அதைத் தள்ளி விடுவார்கள். ஏனெனில், ஒரு சிறிய அசௌகரியத்திற்காக, ஒரு பெரிய தண்டனையாகும். ஒருவன் குதிரை சவாரி செய்வதைக் காட்டிலும், இருவர் உயிரோடிருப்பது நலமல்லவா—ஆனால் இருவருக்குள் ஏற்படும் ஒப்பந்தம் எப்படி சரியில்லையோ, அப்படியேதான் நூற்றுக்கும்; அதுவே நூற்று ஆயிரத்திற்கும். ஏனெனில் ஒரு கோடி கோளங்கள சேர்ந்தாலும் ஒரு மட்டப்பொருளாகாது. அப்படியே லக்ஷக்கணக்கான மனிதர்கள் சேர்ந்து சொல்லும் வார்த்தை, ஒரு பொய்க்குக் கொஞ்சங்கூட பலம் கொடுக்காது. இப்படியல்லவோ நியாயம் உரைக்கிறது. அப்படி கற்பனை இல்லா இயற்கை சுபாவமும் அவற்றையே சொல்லுகிறது. காட்டுமிராண்டிகள், இயற்கை சுபாவத்தின் கோட்பாடினாலேயே, ஒவ்வொருவரும் மற்றவருடைய உயிரைப் பற்றிக் கருணையுள்ளவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் ஏற்கெனவே செய்யப்பட்ட கெடுதிக்கு பதிலளிப்பதைத் தவிர, வேறெவ்விதத்திலும் ரத்தத்தை அபூர்வமாய்த்தான் சிந்துவார்கள்.

நம்முடைய ஸாக்ஸன் முன்னோர்கள் சண்டையில் கடூரமாயிருந்தபோதிலும், அமைதிக் காலங்களில், கொலைத் தண்டனையை மிகவும் குறைவாய் விதித்தார்கள். எல்லா ஆரம்ப ராஜ்யத்திலும், எங்கெங்கே இயற்கைக்கு விசேஷமாய் ஒத்து இருக்கிறார்களோ, அவர்களில் எந்தக் குற்ற



மும் தூக்குத் தண்டனை விதிக்கக் கூடியதாய்க் கருதவில்லை.

நாகரிகம் மேலிட்ட வகுப்பின் அங்கத்தினர்களில் தான், தண்டனைக்குட்படுத்தும் சட்டங்களின் அமைப்பு தனிகர்கள் வசத்திலிருப்பதால், ஏழைகளின் மேல் அதிகமாகப் பிரயோகிக்கப்படுகிறது. ராஜாங்கங்கள் காலஞ் செல்லச் செல்ல, வயோதிகத்தின் சலிப்பை அடைவதுபோல் தோற்றுகிறது. நமது சொத்தானது அதிகரிக்க அதிகரிக்க அதன் அபிமானம் அதிகரிப்பது போல், நம்முடைய பொருள் மேன் மேலும் ஏராளமாய்க் குவிய, நம்முடைய பயமும் அத்துடன் வளர்கிறது. நம்முடைய சொத்துக்களெல்லாம் புதுச் சட்டங்களினால், ஒவ்வொரு நாளும் பந்தோபஸ்து செய்விக்கப்படுகின்றன. அதில் பிரவேசிக்கும் அன்னியனை பயமுறுத்த தூக்கு மரங்கள் எல்லாப் புறத்திலும் நாட்டப்பட்டிருக்கின்றன.

ஐரோப்பாவிலுள்ள பாதி நாடுகளெல்லாவற்றிலும் சேர்த்து, எவ்வளவு மனிதர்கள் தண்டிக்கப்படுகிறார்களோ, அவர்களைவிட இந்தத் தேசத்தில் தண்டிக்கப்படுபவர்கள் அதிகமாயிருப்பதின் காரணம் இதுவே. நம்முடைய தண்ட நீதிச் சட்டங்களில், பல எண்ணிக்கையினாலா, அல்லது நமது ஜனங்களின் கட்டுக்கடங்காத துர்நடத்தைகளாலா என்று என்னால் சொல்ல முடியவில்லை. ஒருவேளை இரண்டினாலும் அப்படி இருக்கலாம். ஏனெனில் அவை ஒன்றுக்கொன்று மற்றவைகளை உண்டு பண்ணுகின்றன. விதரணையில்லாத தண்ட நீதிச் சட்டங்களால் ஒரு தேசமானது வெவ்வேறு விதமான குற்றங்களுக்கு ஒரே தண்டனை விதிக்கப்படுவதாக அறியப்படுகிறது. தண்டனையில் வேற்றுமை வித்தியாசமில்லாமல் இருப்பதினால் ஜனங்களுக்கு குற்றங்களின் தாரதம்மியம் பாராட்டும் உணர்ச்சி இல்லாமல் போகிறது. இந்த தாரதம்மிய உணர்ச்சியே எல்லா நன்னடத்தைக்கும் அஸ்திவாரம். ஆகையால், சட்டங்களின் பெருக்கு புதுவிதமான துன்மார்க்கங்களை உண்டாக்குகின்றன. அவை புதிதான கட்டுப்பாடுகளைக் கோருகின்றன. ஆகையால் விரும்பப்படுவதென்னவென்றால் அதி

காரிகள் குற்றங்களைக் கண்டிக்க, புதுச் சட்டங்களை நிர்மாணிக்க வேண்டியதில்லை. ஜன சமூகம் சகிக்க முடியாத கோபத்தால் திமிறி அறுக்கும்வரையில் அவர்களின் கட்டுகளை இறுக்கிக்கொண்டே போகக்கூடாது. கொடியவர்களை எப்படியாவது பிரயோஜனப்படுத்த முடியுமாவென்று பார்க்கவேண்டும். பிரயோஜன மற்றவர்களென்று அவர்களைச் சிரச்சேதம் பண்ணிவிடக் கூடாது. அவர்களை சீர்திருத்தம் செய்ய முயலாமல் பழிக்குப் பழி வாங்கக்கூடாது. விரும்பப்படுவதென்னவென்றால் அரசியலில் முதலில் குற்றங்களைக் குறைப்பதிலேதான் முயற்சிகள் செய்யப்பட வேண்டும். அப்படியில்லாமல் கொடுங்கோல் அரசாகச் செய்வதில் பிரயோஜனமில்லை. அப்படிச் செய்வோமாகில், எந்த ஜீவன்களைத் தள்ளப்பட வேண்டிய களிம்பு என்று நினைத்தோமோ அவைகள் சுத்தி செய்யும் ரஸவாதியின் பார்வைபட வேண்டியவர்களே என்று நாம் அறிவோம். அப்பொழுது, தனவந்தர்கள் தங்களுடைய சுகத்தில் ஒரு திவலைகூட குறை ஏற்படக்கூடாதென்று பரிதாபம் செலுத்தவேண்டிய துர்பாக்கியர்களை நீடித்த சித்திரவதைக்கு ஆளாக்குகிறார்கள். அவர்கள் சரியானபடி சீர்திருத்தப்பட்டால், ராஜாங்கத்தின் ஆபத்துக் காலங்களில் வைரக் கட்டையாய் உதவுவார்கள். அவர்களுடைய முக லக்ஷணங்கள் எப்படி நம்மைப்போலிருக்கிறதோ, அப்படியே அவர்களுடைய மனதும் இருக்கிறது. விடாமுயற்சியால் சீர்திருத்தக் கூடாதபடி, அவ்வளவு கெட்ட மனிதர்கள் சொல்பமே. எந்த மனிதனும் தன் குற்றத்திற்காக உயிரிழக்கப்படுவதற்குமுன், அவர்களுடைய குற்றம் இதுதான், கடைசியாக இனிமேல் அப்படிச் செய்யோமென்று புலப்படும்படி அவர்கள் சீர்திருத்தப் படலாம். நம்முடைய பாதுகாப்பை பலப்படுத்த ரத்தம் சிந்த வேண்டியதில்லையென்பதாம்.

# அத்தியாயம் 28

*சுக துக்கங்கள் இம்மையில், அவரவர்கள் முன்யோசனையால் உண்டாகின்றனவே ஒழிய, கன்னடத்தையால் மட்டுமல்ல. தற்கால சுக துக்கங்கள் பகவானால் அவை பாராட்டப்படாதவையே, ஆகையால் அவற்றின் பங்கீட்டில் அவனுடைய பொறுப்பு அவசியமில்லையென்று கருதப்படுகிறது.*

நான் பதினான்கு நாளுக்குமேல் சிறையில் வைக்கப்பட்டிருந்தேன். ஆனால் என் அருமை ஒலிவியாவினால் நான் இங்கே வந்தது முதற்கொண்டு பார்க்கப்படவில்லை. நான் அவளைப் பார்க்க மிகவும் ஆவல் கொண்டேன். என் மனோபீஷ்டத்தை என் மனைவிக்குத் தெரிவித்த பிறகு, மறுநாட் காலை, பரிதாபமான ஸ்திதியிலுள்ள அந்தப் பெண் தன் தங்கையால் கைலாகு கொடுக்கப்பட்டவளாய் என் அறைக்குள் நுழைந்தாள். அவள் முகத்தில் ஏற்பட்டிருக்கும் மாறுதல் என் கவனத்தை இழுத்தது. எண்ண முடியாத வனப்புக்கள் அங்கே முன் குடிகொண்டிருந்தன; இப்பொழுது ஓடிவிட்டன. நமன அவளுடைய ஒவ்வொரு உறுப்பையும் தன் வசமாக்க ஏற்பாடு செய்வது போல் எனக்குத் திகில் உண்டாகியது. அவளுடைய புருவங்கள் அமுங்கியிருந்தன. அவளுடைய நெற்றி, சுருக்கம கொண்டிருந்தது. அவளுடைய வதனத்தில், ஒரு மரணக் குறியுள்ள வெளுப்பு இருந்தது. "நான் உன்னைப் பார்த்ததில் சந்தோஷம் கொள்ளுகிறேன். என் கண்ணே" என்று சொன்னேன். "ஏன் இந்த மனக் குன்றல், லிவி, என் உயிருக்கு சமானமாக மதிக்கும உயிரைப் போக்கடிக்கும்படி உன்னுடைய ஏமாற்றத்தை நீ ஏற்றுக் கொள்ளக்கூடாது. என் அன்பே, நீ என்னிடத்தில் அப்படிச் செய்யக்கூடிய விசுவாஸம் வைத்திருக்கிறாயென்று நம்புகிறேன். மன

மகிழ்ச்சியோடு இரு, குழந்தாய், நாம் இன்னும் அதிக சௌகரியமான நாட்கள் பார்ப்போம்." "நீங்கள் எப்பொழுதும் என்னிடத்தில் அன்பாய் இருக்கிறீர்கள். நீங்கள் எதிர்பார்க்கும் சௌக்கியத்தில், எனக்கு ஒருக்காலும் அதை அனுபவிக்க தருண மிருக்காதென்று எனக்கு மன வருத்தம் அதிகரித்திருக்கிறது. சுகம் என்பது இங்கே இனிமேல் எனக்கு ஏதாவது அனுபவிக்க இருக்கிறதென்பதில்லை. துன்பமொன்றையே கண்ட இவ்வுலகத்தை விட்டுப்போக நான் ஆவலுடனிருக்கிறேன். உண்மையில் நீங்கள் மிஸ்டர் தார்ன்ஹில்லுக்கு சரியான வணக்கத்தைச் சமர்ப்பிப்பீர்களென்று நான் விரும்புகிறேன். அவருக்கு உம்மிடத்தில் கொஞ்சம் பரிதாபம் உண்டாகலாம். நான் இறக்கும்பொழுது எனக்கு மன ஆறுதலைக் கொடுக்கும்" என்றாள் ஒலிவியா. "முடியாது குழந்தாய்," என்றேன். "நான் எப்பொழுதும் என் மகள் ஒரு விலைமகள் என்று ஒத்துக் கொள்ளும்படி செய்விக்கப்பட மாட்டேன். உலகம் உன்னுடைய தவறுதலை நிந்தையோடு கவனித்தாலும், நான் அதை குற்ற மென்று கொள்ளேன். அது எதையும் நம்பும் சுபாவமென்றுதான் நான் நினைப்பேன். என் கண்ணே, இந்த இடம் பார்ப்பதற்கு, எவ்வளவு மனத தாங்கலைக் கொடுத்தபோதிலும், நான் இங்கே எவ்விதத்திலும் கஷ்டப்படவில்லை. இதை நிச்சயமாக வைத்துக் கொள். நீ உயிருடனிருந்து என்னைக் களிப்பிக்கும் வரையில், அவன் வேறொருத்தியையும் விவாகம் செய்து கொண்டு, உன் மனக்கஷ்டத்தை இன்னம் அதிகரிக்க என்னுடைய சம்மதத்தை அடையமாட்டான்" என்றேன். என் மகள் போன பிற்பாடு, மேல் நடந்த சம்பாஷணைகளின் பொழுது பக்கத்திலிருந்த என் சிநேகிதக் கைதி என்னுடன் எனக்கு விடுதலை இயற்றக்கூடிய சமாதானத்தை மறுத்ததின் பிடிவாதத்தைப்பற்றி யுக்தமாய் எதிர் வாதமாடினார். ஒரு குழந்தையின் மனச் சாந்திக்காக, குடும்பத்திலுள்ள மற்றவர்கள் நிராகரிக்கப்படக் கூடாது. அந்தக குழந்தையோவெனில், குடும்பத்தில் அவள் ஒருத்தி தான் தீங்கியற்றியவள். மேலும் ஒரு மனிதனும் அவன் மனைவியும் விவாகம் செய்து கொளவதைத்



தடுப்பது நியாயமோவென்று எனக்குத் தெரியாது. ஆனால் நீர் அப்படி இப்பொழுது செய்கிறீர். நீர் நிறுத்த முடியாத ஒரு விவாகத்திற்கு ஒப்புக் கொள்ள மறுத்து அது அவர்களை துக்கத்தில் மூழ்கச் செய்யலாம்" என்று சொன்னார்.

"ஐயா, எங்களைத் துன்புறுத்தும் மனிதனோடு நீர் பழக்கமில்லாதவர். அவனுக்கு அந்தச் சமாதானத்தை சமர்ப்பித்தாலும் ஒரு மணி நேரம்கூட எனக்கு விடுதலை கிடைக்காதென்று நான் நன்றாய் அறிவேன். இதோ இருக்கும் இந்த அறையிலேயே அவனுடைய கடன்காரன் ஒருவன் போன வருஷத்திற்குள்ளேயே வறுமையினால் இங்கே உயிர் துறந்தானாம். ஆனால் என்னுடைய கீழ்ப்படிதலும் சம்மதமும் இங்கிருந்து என்னை அவனுடைய ஒரு மிக ரமணீயமான அரண்மனையில் சேர்ப்பிப்பதென்றாலும் நான் இரண்டையும் செய்யேன். ஏனெனில் அப்படிச செய்வதால், விபசாரத்திற்கு அனுமதி கொடுத்தது போலாகுமென்று என் மனதில் ஏதோ ஒன்று சொல்லுகிறது. என் மகள் உயிருடனிருக்கும வரையில் வேறொரு விவாகம் அவன் செய்து கொண்டால் அது என்னுடைய பார்வையில் சட்ட விரோதமாகும். அவள இறந்து போய்விட்டால், விவாகம் செய்ய இஷ்டப்படுகிறவர்களை நான் என் கோபத்தினால் அதைப் பிரிக்க முயன்றால், நான் மனிதப்பதராவேன். மாட்டேன். அவன் அயோக்கியனாயிருந்த போதிலும் நான் அவன் விவாகம் செய்து கொள்ள வேண்டுமென்றே விரும்புவேன். ஏனெனில், அது அவனுடைய மேலே தொடர்பான விபசாரத்தின் விபரீதங்களைத் தடுக்கும். இப்பொழுது எனக்கு சிறைவாச மில்லாமலிருப்பதற்காக என் குழந்தையை உயிர்விடச்செய்யக் கூடிய ஒரு ஒப்பந்தத்தை நான் கையெழுத்திட்டால், நான் பெறறோரில் மிகவும் கொடியவனாக மாட்டேனோ? ஒரு துன்பத்தைத் தவிர்ப்பதற்காக, என் குழந்தையின் மனத்தை அலைகளின் ஆயிரத்தால் பிளப்பதா? என்று பதிலுரைத்தேன்.

அவன் இந்தப் பதிலின் நியாயத்தை ஒத்துக்கொண்டான். ஆனால், என்னை அதிக நாள் கைதியாக இருக்க

ஒண்ணாதபடி அவள் ஏற்கெனவே மிகவும் மெலிந்துபோய் அவள் உயிர் வெகுநாள் தங்காது என்று அவன் அச்சப் படுவதாகச் சொன்னான். "இருந்தபோதிலும், நீர் அவர் அண்ணன் மகனுக்கு கீழ்படிய மாட்டேனென்றாலும், உம்முடைய குறைகளை, அவன் சிற்றப்பன்முன் சமர்ப்பிக்க உமக்கு ஆக்ஷேபணையில்லையே, இந்த இராஜ்ஜியத்தில், நியாயம், நன்மை என்கிற அந்த விஷயத்திலும, அக்கிராசனம் வகிக்கிறார். கடிதத்தின் மூலம், அவருக்கு அவருடைய அண்ணன் மகன் உங்களைக் கெடுதலாக நடத்தியதை யெல்லாம் விவரித்து ஒரு கடிதம் நீங்கள் அனுப்புவிக்க என் கோருகிறேன். என் உயிரையே பணயமாய் வைக்கிறேன். மூன்று நாளில் உமக்கு பதில் கிடைக்கும்" என்று அவன் மேலும் சொன்னான். நான் அவனுக்கு அந்த யோசனைக்காக வந்தனமளித்தேன். எனக்கு கடுதாசி வேண்டியதாயிருந்தது. கையிலிருந்த எல்லாப் பொருள்களும் அன்று காலை உணவு சாமான்கள் வாங்குவதற்காகச் செலவு செய்யப்பட்டன. இருந்தபோதிலும், அதை அவன் கொண்டுவந்தான்.

நான் அதன்பிறகு, மூன்று நாளைக்கு என் கடிதத்திற்கு எப்பேர்க்கொத்த வரவேற்பு இருக்குமோவென்று தெரிந்துகொள்ளக் கவலைப் பட்டுக்கொண்டிருந்தேன். ஆனால், இங்கே இருப்பதைக்காட்டிலும், அப்பேர்க்கொத்த உடன்படிக்கைக்கும் ஒத்துக்கொள்ள அடிக்கடி என் மனைவி வேண்டிக்கொண்டாள். ஒவ்வொரு மணி நேரமும் என் மகளின் தேகநிலையின் க்ஷீணத்தை அடிக்கடி சொல்லக் கேட்டேன். மூன்று நாளாயிற்று. நான்கு நாளாயிற்று. என் கடிதத்திற்கு ஒரு பதிலையும் காணோம். பிரியமாக வைத்துள்ள அண்ணன் மகன் பேரில ஒரு அன்னியனுடைய புகார் ஒரு விதத்திலும் பலம் பெறுமென்று தோன்றவில்லை. ஆகையால் இந்த நம்பிக்கையும், முன் நான் வைத்தவைகளைப்போல் சீக்கிரத்தில் மறைந்தன. சிறையடைப்பும், கெட்ட காற்றும் என் தேக சௌக்கியத்தில் வெளித் தெரியும்படியான மாறுதலை நான் அடைந்திருந்தபோதிலும், வீடு பற்றிக் கொண்ட தீயில் சுடப்பட்ட கை அதிகமான கேடடைந்



திருந்தபோதிலும், என் மனமானது இன்னும் தன்னையே போற்றிக்கொண்டு ஆதரவடைந்தது.

என் குழந்தைகள் என் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு நான் செத்தையின் மேல் படுத்திருக்கும் பொழுது மாற்றி மாற்றி எனக்கு வாசித்தார்கள். அல்லது நான சொல்லும் நன்மொழிகளைக் கேட்டு கண்ணீர் வடித்தார்கள். ஆனால் என் மகளுடைய தேக ஸ்திதி, என்னுடையதைக் காட்டிலும், சீக்கிரமாக கீழ் வாட்டடைந்தது. அவளிடமிருந்து வந்த ஒவ்வொரு சமாசாரமும், என்னுடைய பயத்தையுய், மனச் சங்கடத்தையும் அதிகரிக்கச் செய்தது. ஸர் வில்லியம் தார்ன்ஹில்லுக்கு அனுப்பிய கடிதம் எழுதிய ஐந்தாவது காலை அவள் பேச்சில்லாம லிருக்கிறாளென்பதைக் கேட்டு, திகில் கொண்டேன். இப்பொழுது தான் சிறை அடைப்பு, நிஜமாக துன்புறச் செய்தது. சிறையிலிருந்து பிச்சுக் கொண்டு போய், என் ஜீவன் கட்டுக்குள் இருந்த என் சரீரத்தை விட்டுக் கிளம்பி என் குழந்தையின் படுக்கைப் பக்கத்திலிருந்து கொண்டு ஆறுதல் சொல்லவும், தைரியப படுத்தவும், அவளுடைய கடைசி இஷ்டங்களைப் பெறவும, அவளுடைய ஆத்மாவுக்கு சுவர்க்கம போக வழியைப புகலவும் இச்சித்தது. அவள் உயிர் போய்க்கொண் டிருக்கிறதென்று பின்னொரு தகவல் வந்தது. உயிருடனிருந்தும், அவள் பக்கத்திலிருந்து அழுது, தேறுதலடையக்கூட சுவாதீனமில்லை. என் சிநேகிதக் கைதி கொஞ்சம் நேரம் கழிந்தபின் கடைசி சமாசாரத்தைக் கொண்டு வந்தான். அவன் என்னை பொறுமையுடனிருக்க வேண்டிக் கொண்டான். அவன் இறந்துபோய் விட்டாள். மறுநாட் காலை அவன் திரும்பி வந்தான். அவன் என்னை என் இரண்டு சிறுவர்களோடு இருக்கக் கண்டான். அவர்கள் மட்டும் தான், எனக்குத் தோழர்கள். அவர்கள் தங்களுடைய கபடில்லாத முயற்சிகளை யெல்லாம் எனக்கு ஆதரவு அளிக்க உபயோகித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் வாசிக்கும்படி சொல்ல என்னை வேண்டிக்கொண்டார்கள். என்னைக் கத்த வேண்டாமென்று வற்புறுத்தினார்கள். நான் அழுவதற்குக்கூட மிகக் கிழவனாகிவிட்டேன்.

"அப்பா, என் தமக்கை இப்பொழுது ஒரு தேவதையல்லவா?" என்று மூத்தவன் சொன்னான். "அப்படியென்றால், ஏன் அவளுக்காக வருத்தப்படுகிறீர்கள்? அப்பா, என்னுடன்கூட இருந்தால், நான் ஒரு தேவதையாக இருக்க விரும்புகிறேன். இந்த பயங்கரமான இடத்தை விட்டுப் போகவேண்டும்." "ஆம்" என்று என் கடைசிக் குழந்தை சொன்னான். "என் தமக்கை இருக்குமிடம் சுவர்க்கம். இதைவிட நேர்த்தியான இடம். அங்கே நல்லவர்களைத் தவிர வேறொருவருமில்லை. இங்கே இருக்கும் ஜனங்கள் கெட்டவர்கள்."

மிஸ்டர் ஜெங்கின்ஸன் அவர்களுடைய குற்றமற்ற கொச்சைப் பேச்சில் குறுக்கிட்டு, இப்பொழுது என் மகள் இறந்துபோய் விட்டபடியால், நான் குடும்பத்தில் மற்றவர்களைப்பற்றி கவலையோடு கவனிக்க வேண்டும். நாளுக்குநாள் சுத்த காற்றும் வேண்டிய சௌகரியங்களுமில்லாததால் க்ஷீணித்து வருகின்ற என் உயிரையும் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமென்று பிரேரேபித்தேன். என்னை அண்டினவர்களுடைய க்ஷேமத்திற்காக எனக்கு இருக்கும் கர்வம், கோபம், இவற்றை விட்டு விட வேண்டியது அவசியமென்றும், அதன்மேல் சொன்னான். இப்பொழுது நியாயமாயும், யுக்தமாயும் என் முதலாளியுடன் சமரஸப் படுத்த முயலவேண்டியதென்றான்.

"பகவான் புகழப்படட்டும்." என்று சொன்னேன். "இப்பொழுது என்னிடத்தில், ஒரு கர்வமும் மீதியில்லை." நான் என் மனதில் கர்வமோ அல்லது ஆக்ரோஷமோ ஒளிந்து கொண்டிருந்தால், அதை நான் நிந்திப்பேன். அதில்லாமலே, என்னைத் துன்புறுத்துகிறவர், ஒரு சமயத்தில் என்னுடைய சிஷ்ய கோடிகளில் சேர்ந்தவராதலால், கடைசி உலக முடிவில் சாஸ்வதமான நியாய சபையில் அவரை களங்கமற்ற ஆத்மாவாக ஒருநாள் நான் சமர்ப்பிப்பதாக நினைத்துக் கொண்டிருக்கிறேன். இல்லை, ஐயா, எனக்கு இப்பொழுது ஒரு கோபமுமில்லை. அவன் என்னிடத்திலிருந்து அவனுடைய பொக்கிஷத்தை எல்லாவற்றையும்விட அதிக மதிப்புடன், வைத்திருந்ததை என்னிடமிருந்து எடுத்துக்கொண்டு



போய் விட்டான். அவன் என் மனதை ஒடித்துவிட்டாலும்—நானே மூர்ச்சை போகும்படி கூட சௌகரியக் குறைவிலிருக்கிறேன். என் சகோதரக் கைதியே—இருந்த போதிலும், அது என்னை பழிக்குப்பழி வாங்க எப்பொழுதும் தூண்டாது. நான் இப்பொழுது அவன் செய்து கொள்ளப்போகும் விவாகத்தை ஒப்புக்கொள்ளுகிறேன். இந்த வணக்கம் அவனுக்கு சந்தோஷத்தைக் கொடுக்குமானால் அவனுக்கு ஏதாவது நான் தீங்கியற்றியிருந்தால் நான் அதற்கு வருத்தம் கொள்ளுகிறேனென்று அவன் அறியட்டும். மிஸ்டர் ஜெங்கின்ஸன் பேனா, மசிக் கூடு எடுத்து, என்னுடைய வணக்கத்தை ஏறக்குறைய நான் சொன்னபடியே எழுதினான். நானும் அதில் கையெழுத்துப் போட்டேன். என் மகன் இந்தக் கடிதத்தை தற்சமயத்தில் நாட்டுப் புறத்தில் அவர் விடுதியில் இருந்து கொண்டிருந்த மிஸ்டர் தார்ன்ஹில்லுக்குக் கொண்டுபோய்க் கொடுக்க நியமிக்கப்பட்டான். அவன் சென்று சுமார் ஆறுமணி நேரத்தில், வாக்கு மூலமான பதிலோடு திரும்பி வந்தான். அவருடைய வேலைக்காரர்கள் சந்தேகப்பட்டதாலும், அவமரியாதையாயிருந்ததாலும், முதலாளியைப் பார்வையிட கொஞ்சம் கஷ்டமாயிருந்ததென்றான். ஆனால் அவர் மூன்று நாளில் நடக்கப்போகும் தம் விவாகத்திற்கு ஏற்பாடு செய்ய ஒரு அலுவலுடன் போக வெளியே வந்தபொழுது தான் அகஸ்மாத்தாய் அவரைப் பார்த்தேனென்றான். இவன் மிக வணக்கத்துடன் முன் வந்து அந்தக் கடிதத்தைக் கொடுத்ததாகவும், மிஸ்டர் தார்ன்ஹில் வாசித்த பிற்பாடு அப்பொழுது எல்லாக் கீழ்படிதலும் அனாவசியமென்றும் காலதாமதமானதென்றும் சொன்னார். அவர் சிற்றப்பனுக்கு அனுப்பிய எங்களுடைய மனுவைப்பற்றிக் கேள்விப் பட்டதாகவும், தகுந்த நிந்தையோடு அது ஏற்கப்பட்டதென்றும், மேலும் இனி செய்யவேண்டிய மனுக்களெல்லாம் தம்முடைய அட்டார்னிக்கு அனுப்பப்பட வேண்டுமென்றும் தமக்கு அனுப்பக் கூடாதென்றும் சொன்னார். ஆனால் கடைசியாக அவர் இரண்டு சிறு சீமாட்டிகளின் யுக்தியில் அவருக்கு மிகவும் நல்ல அபிப்பிராயமுடையவனாதலால் அவர்கள்

ஆதுவாக வந்திருந்தால் ஏற்கப்பட்டிருப்பார்களென்றார் என்று சொன்னதாக என் மகன் சொல்லி முடித்தான்.

"நல்லது, ஐயா," என்று என் சிநேகிதக் கைதிக்குச் சொன்னேன். நீர் இப்பொழுது என்னைக் கஷ்டப்படுத்தும் மனிதனின் மனோபாவத்தை தெரிந்து கொள்வீர். அவன் ஒரே சமயத்தில் கொடியவனாகவும் விளையாட்டாகவும் இருக்கக்கூடும். அவன் இஷ்டப்படி என்னை நடத்தட்டும். அவன் என்ன தாழ்ப்பாள் போட்டு என்னை அடைத்து வைத்தாலும் நான் சீக்கிரத்தில் சுயேச்சை யடைவேன். நான் இப்பொழுது ஒரு இருப்பிடத்தை அணுகிக்கொண் டிருக்கிறேன். அதை அணுக அணுக அது மேன்மேலும் பிரகாசமாகத் தோற்றுகிறது. இந்த எதிர்பார்ப்பு என்னுடைய கஷ்டங்களில் எனக்கு மனத் தேர்ச்சியை அளிக்கிறது. நான் கதியற்ற ஒரு தகப்பனில்லாக் குடும்பத்தை விட்டு விட்டுப் போனாலும், அவர்கள் அடியோடு விட்டுவிடப் படமாட்டார்கள். ஒரு வேளை அவர்களுடைய பரிதாப கதியை அடைந்த தகப்பனாரின் பொருட்டு யாராவது ஒரு சிநேகிதன் அவர்களுக்கு உதவி புரிய முன் வருவான். சிலர் அவர்களுடைய பரமபிதாவின் பொருட்டு அவர்களுக்குக் கருணையினால் ஆதரவளிப்பார்கள்.

நான் பேசிக்கொண்டிருக்கும் பொழுது என் மனைவி அதற்கு முன் பார்க்கப்படாத பயங்கரமான பார்வையோடு வந்து பேச முயன்றும் பேச முடியவில்லை. "ஏன், என் அன்பே" என்று கூவினேன். "ஏன் என்னுடைய துக்கத்தை உன்னுடையதினால் இப்படி அதிகப்படுத்துகிறாய்? நம்முடைய கடுமையான எஜமானுடைய மனதை ஒரு விதக் கீழ்ப்படிதலும் திருப்பவில்லை. அவர் என்னை இந்த நிராதரவான இடத்தில் இறக்க விட்டு விட்ட போதிலும், நான் ஒரு பிரியமுள்ள குழந்தையை இழந்துவிட்ட போதிலும், என்ன சம்பவித்தாலும், நீ உன்னுடைய மற்றக் குழந்தைகளிடத்தில் நான் போனபிற்பாடு ஆறுதலடைவாய்" என்றேன்.



"நாம் நிஜமாக ஒரு பிரியமுள்ள குழந்தையை இழந்து விட்டோம்" என்றாள் அவள். "என் ஸோபியா, என் அத்யந்தப் பிரியமுள்ளவள் போய்விட்டாள்—நம்மிடமிருந்து பிடுங்கிக் கொண்டு போகப்பட்டாள்—கொலைகாரர்களால் தூக்கிக்கொண்டு போகப்பட்டாள்." "எப்படி அம்மா" என்று என் சிநேகிதக் கைதி கேட்டான். "மிஸ் ஸோபியா போக்கிரிகளால் தூக்கிக் கொண்டு போகப்பட்டாளா? அது இருக்காது—நிச்சயம்" என்றான்.

பதிலுரைக்க முடியாமல் அவள் ஒரு ஆழ்ந்த பார்வை பார்த்தாள். கண்ணீர் பெருக்கவிட்டாள். ஆனால் அப்பொழுது கூடவிருந்த ஒரு கைதியின் மனைவி அவளுடன் அங்கேகூட வந்திருந்தாள். அவள் அதைவிட தெளிவான தகவல் சொன்னாள். என் மனைவி, என் மகள், அவளும் சேர்ந்து உல்லாசமாக கிராமத்திற்குக் கொஞ்சம் எட்டியிருக்கும் பெரிய ரஸ்தாவில் நடந்து போய்க்கொண்டிருக்கும்பொழுது, இரட்டைக் குதிரை கட்டிய ஒரு பீட்டன் தங்களிருக்குமிடம் ஓட்டிக்கொண்டு வரப்பட்டது. எங்களண்டை வந்ததும் நின்றுவிட்டது. அதன் மேல் ஒரு நல்ல உடை உடுத்த மனிதன் (ஆனால் மிஸ்டர் தார்ன்ஹில் அல்ல) வெளியில் வந்து என் பெண்ணை இடுப்பில் பிடித்துக் கட்டி பலாத்காரமாய் உள்ளே தள்ளி குதிரை காஸாரியை உடனே ஓட்டச் சொன்னான். ஆகையால் ஒரே நிமிஷத்தில், மறையும் தூரத்திற்கப்பால் அவர்கள் போய்விட்டார்கள் என்று சொன்னாள்.

"இப்பொழுது என் கஷ்டங்களெல்லாம் பூரணமாய் விட்டன. இவ்வுலகில் இனி எதுவும் எனக்கு மறுபடியும் ஒரு திவலை துன்பம்கூட கொடுக்க சக்தியில்லை. என்ன—ஒருத்தி கூடவா பாக்கியில்லை. ஒன்றுகூடவா வைக்காமல் போனான் அந்தராக்ஷஸப்பயல்? நான் மிகவும் பாராட்டி வந்த அந்தக் குழந்தை! அவள் ஒரு தேவ கன்னிகையின் அழகு வாய்ந்தவள். ஒரு தேவதையின் புத்தியுடையவளென்றே சொல்லலாம். அந்த ஸ்திரீயைத் தாங்குங்கள். அவள் விழுந்துவிடப் போகிறாள்—என்ன ஒன்றுகூட விடாமலா?" என்று புலம்பினேன். "ஐயோ, என்

கணவரே! உமக்கு என்னைவிட அதிக ஆதரவு வேண்டியிருக்கிறது. நம்முடைய கஷ்டங்களோ மகத்தானவை. ஆனால் நான் இவையெல்லாம் பொறுத்துக் கொள்ளுவேன். அதிகமாய் இருந்தாலும் சரி, உம்மை மட்டும் சாந்தமுள்ளவராகப் பார்த்தால் போதும். என் குழந்தைகளெல்லாம் எடுத்துக்கொண்டு போகட்டும். உலகத்தையெல்லாம் எடுத்துக்கொண்டு போகட்டும். உம்மை மட்டும் என்னிடத்தில் விட்டு விட்டுப்போனால் போதும்" என்றாள் என் மனைவி.

என் மகன், அங்கிருந்தவன், அவளுடைய வருத்தத்தைக் குறைக்கப் பிரயத்தனப்பட்டாள். அவன் எங்களை ஆறுதல் கொள்ளச் சொன்னான். ஏனெனில் நமக்கு பகவானுக்கு வந்தனமளிக்க ஆஸ்பதமுண்டென்று நம்புகிறேனென்றான். "என் குழந்தாய், உலகெல்லாம சுற்றிப் பார். எங்கேயாவது ஒரு சுகம் எனக்கு பாக்கி இருக்கிறதா? சௌகரியத்திற்குள்ள எல்லா வழியும் சாத்தப்படவில்லையா? நம்முடைய சுகமான எதிர்பார்ப்பெல்லாம் இவ்வுலகை விட்டுப் போனபின்தான் இருக்கின்றன." "என் அன்புள்ள அப்பா, இன்னும் சிலது இருக்கிறது. அது உமக்குத் சமயத்திற்கு சந்தோஷத்தை உண்டு பண்ணலாம் என்று நினைக்கிறேன். ஏனெனில் என் சகோதரன் ஜார்ஜிடமிருந்து ஒரு கடிதம் கிடைத்திருக்கிறது." "அவனைப் பற்றி என்ன குழந்தாய்?" என்று நான் கேட்டேன். "நம்முடைய கஷ்டங்கள் அவனுக்குத் தெரியுமா? என் மகனும் அவனுடைய நிர்ப்பாக்கியமான குடும்பமும் அனுபவிக்கிறதில் அவனுக்கு ஒரு பங்குமில்லை யென்று நம்புகிறேன்." "ஆம், ஐயா அவன் பூர்ண சந்தோஷத்தோடும், சௌகரியத்தோடும், களிப்போடுமிருக்கிறான். அவன் கடிதம் நல்ல சமாசாரத்தைத் தவிர வேறொன்றும் கொண்டுவரவில்லை. அவன் அவனுடைய கர்னலுக்குப் பிரியப்பட்டவன். காலியாகும் அடுத்த லப்டினன்ஸியையே அவனுக்கு வாங்கிக் கொடுப்பதாக வாக்களித்திருக்கிறார்."

"ஆனால் இதைப் பற்றியெல்லாம் நீ நிச்சயமாய்ச் சொல்லுகிறாயா? என் பையனுக்கு கெடுதலொன்றும்



சம்பவிக்கவில்லையென்று நீ நிச்சயமாய்ச்சொல்லுவாயா?" என்று என் மனைவி கத்தினாள். "நிஜமாகவே, ஒன்றுமில்லை, அம்மா. நீயே இந்தக் கடிதத்தைப் பார்க்கலாம். அது உனக்கு அபரிமிதமான சந்தோஷத்தைக் கொடுக்கும். உனக்கு ஏதாவது சந்தோஷத்தைப் புகட்டுமென்றால் அது செய்யுமென்று நான் நிச்சயமாய்ச் சொல்லுவேன்" என்று என் பையன் சொன்னான். "ஆனால் நீ நிச்சயமாகச் சொல்லுகிறாயா? அந்தக் கடிதம் அவனிடமிருந்துதானா? அவன் உண்மையில் அவ்வளவு சந்தோஷமாயிருக்கிறானா?" என்று அவள் மறுபடியும் கேட்டாள். "ஆம் அம்மா, அது சந்தேகமில்லாமல் அவனுடையதே. அவன் ஒருநாள் நம்முடைய குடும்பத்திற்குக் கௌரவம் கொண்டு வருபவனாயும் அதைக் காப்பாற்றுகிறவனாயும் ஆவான்" என்றான் அவன். "அப்படியானால் என் கடைசிக் கடிதம் அவனைச் சேராது தப்பிப் போனதற்கு நான் தெய்வத்திற்கு வந்தனம் அளிக்கிறேன்" என்று சொன்னாள். "ஆம், என் பிரியரே" என்று என்னை நோக்கிச் சொன்னாள். "பகவானுடைய தண்டனை நம் மேல் பலமாக மற்ற விஷயங்களில விழுந்தபோதிலும் இந்த விஷயத்தில் நமக்கு சௌகரியமாக இருந்ததென்று நான் ஒப்புக்கொள்ளுவேன். கோபத்தின் ஆர்வத்தில் நான் என் மகனுக்கு எழுதிய கடைசிக் கடிதத்தில் நான் தாயின் ஆசீர்வாதத்தைக் கொடுத்து அவனை ஒரு மனிதனின் ஹிருதயத்தை உடையவனாயிருந்தால், அவனுடைய தகப்பனுக்கும் தங்கைக்கும் நியாயம் நடைபெறச் செய்து நம்முடைய குறைக்கு பதிலுக்குப் பதில் வாங்க வேண்டுமென்று விரும்பினேன். நான் எல்லா விஷயங்களையும் நடத்தி வைக்கும். அவருக்கு வந்தனம் அளிக்கிறேன். அது தப்பிப் போயிற்று. நானும் கவலையில்லாமலிருக்கிறேன்" என்றாள்.

"ஏ பெண்ணே, நீ மிகக் கெடுதி செய்துவிட்டாய். வேறொரு சமயமாயிருந்தால் என்னுடைய நிந்தை மிகவும் கடுமையாயிருந்திருக்கும். ஐயோ, எப்பேர்க்கொத்த பயங்கரமான நீராழியிலிருந்து தப்பித்தாய். அது உன்னையும், அவனையும் கதியில்லா நரகத்தில் ஆழ்த்தியிருக்கும்,

இவ் விஷயத்தில், நாம், நம்மிடத்திலுள்ளவர்களிடத்தில் இருப்பதைவிட தெய்வம் நம்மிடத்தில் கருணையோடு இருந்திருக்கிறது. நான் போன பிற்பாடு, என் குழந்தைகளுக்கு தகப்பனாகவும், காப்பாற்றுபவனாகவும் அந்த மகனை தனிப்படுத்தி யிருக்கிறார். அவன் சௌக்கியமாயிருக்கிறான். நம்முடைய கஷ்டங்களை யெல்லாம் அறியாமலிருக்கிறான் என்று இன்னமும் கேள்விப் படும்பொழுது சற்று முன்தான் எல்லா ஆறுதலும், பிடுங்கப்பட்டதென்று அநியாயமாய்த் தெய்வத்தின் மேல் குற்றஞ் சாட்டினேன். இன்னும் அவனுடைய விதவைத் தாயாரைப் போஷிப்பதின் பொருட்டும தம்பி தங்கைமார்களைக் காப்பாற்றுவதின் பொருட்டும் அவன் ஒதுக்கி வைக்கப் பட்டிருக்கிறான். ஆனால் எந்த சகோதரிகள் அவனுக்கு இப்பொழுது பாக்கி யிருக்கிறார்கள்? அவனுக்கு சகோதரிகள் ஒருவருமில்லை. அவர்கள் எல்லோரும் என்னிடமிருந்து திருடிக்கொண்டு போகப்பட்டு விட்டார்கள். நான் கேட்டை அடையப்பட்டவனா யிருக்கிறேன்" என்று சொன்னேன். "அப்பா, இந்தக் கடிதத்தை வாசிக்க நீங்கள் எனக்கு உத்தரவு கொடுக்க வேண்டுகிறேன். அது உங்களுகக்கு திருப்தி அளிக்குமென்று எனக்குத் தெரியும்" என்றான் என் மகன். அப்புறம் என் உத்தரவின் பேரில், அவன் பின்வருமாறு வாசித்தான்:

"பெருமை தங்கியவரே,

நான் என்னுடைய சிந்தனையை என்னைச் சுற்றி இருக்கும் களிப்புகளிலிருந்து அதைவிட அதிகக் களிப்பை ஊட்டும் விஷயங்களில் செலுத்த சில க்ஷணத்திற்குத் திருப்பி யிருக்கிறேன். வீட்டிலிருக்கும் ஆனந்தத்தை ஊட்டும் சின்னக் கணப்பின் பக்கம திரும்பினேன். என்னுடைய மனப்பான்மை அந்தக்களங்கமற்ற தொகுதி இதன் ஒவ்வொரு வரிசையும் மிக அமைதியோடு கவனிப்பதாக ஒரு சித்திரம் அமைக்கிறது. போராசை அல்லது துக்கம் இவைகளின் குரூரத்தால் எப்பொழுதும் தீண்டப்படாத அந்த முகங்களை களையில்லாச் சந்தோஷத்தோடு பார்க்கிறேன். ஆனால் அங்கே உங்களுக்கு சௌக்கியம் எவ்வளவிருந்த போதிலும், நான் இங்கே



ஒவ்வொரு விதத்திலும் சுகமாயும் என்னுடைய உத்தியோகத்தில் பூர்ண சந்தோஷத்தோடும் இருக்கிறேனென்பதைக் கேட்க அது உங்களுக்கு கொஞ்சம் அதிக சுகத்தைக் கொடுக்குமென்று நம்புகிறேன். எங்களுடைய பட்டாளம் மறுக்கப்பட்ட உத்தரவைப் பெற்று இந்த ராஜ்யத்தை விட்டு வெளியேறப்போவதில்லை. கர்னல் தன்னுடைய சிநேகிதனென்று சொல்லிக்கொண்டுதான், அறிந்த எல்லா கோஷ்டிகளுக்கும் தன்னுடன் என்னைக் கூட்டிக்கொண்டு போகிறார். நான் ஒரு தடவை அவர் போன இடத்தில் அங்கே மறுபடியும் போனால் பொதுவாக என்னை அதிக மரியாதையுடன் வரவேற்கிறார்கள். நேற்று இரவு சீமாட்டி ஜீயுடன் நடித்தேன். ஒருத்தியை உமக்குத் தெரியும். அவளை நான் மறக்க முடியுமானால் நான் ஒருவேளை சாதிக்கலாம். என்னுடைய கண் மறைவிலிருக்கும் சிநேகிதர்களெல்லாராலும் நான் மறக்கப் பட்டேன். இருந்தாலும் நான் மற்றவர்களை நினைத்திருப்பது என் தலைவிதி. ஐயா இந்தக் கோஷ்டியில்தான் உங்களையும் சேர்க்கும்படியா யிருக்குமென்று நான் ஐயமுறுகிறேன். ஏனெனில், வீட்டிலிருந்து வெகுகாலமாய், ஒரு கடிதம்கூட எதிர்பார்த்தும பயன்பட வில்லை. ஒலிவியாவும் ஸோபியாவும்கூட எழுதுவதாக வாக்களித்தார்கள். ஆனால் என்னையே மறந்துவிட்டார்கள்போல் தோன்றுகிறது. அவர்கள் இரண்டு சின்னப் போக்கிரி முடிச்சுகள். இச்சமயத்தில் அவர்களிடத்தில் கடுங்கோபத்துடனிருக்கிறேன். இருந்தாலும் நான் கோபத்தைத் தணித்துக்கொள்ள நினைக்கிறேன். எனக்கு எப்படிச் செய்வதென்று தெரியவில்லை. என் மனது பிரியமுள்ள எண்ணங்களுக்கேதான் இடங்கொடுக்கிறது. ஆகையால் அவர்களிடம் தெரிவியுங்கள், நான் அவர்களை என்ன இருந்த போதிலும் மிகப் பிரியமாய்ப் பாராட்டுகிறேன். நான் எப்பொழுதும் கோடு தாண்டாமலிருப்பேன் என்று உறுதி கூறும்.

உம்முடைய நன்றியுள்ள மகன்."

"நம்முடைய எல்லாக் கஷ்டங்களிலும் நம்முடைய குடும்பத்தில் ஒருவனாகிலும் நாம் படும் கஷ்டத்திற்கெல்

லாம் ஆளாகாமலிருக்கிறானென்று என்ன வர்தனம்தான் நாம் செலுத்தக்கூடாது? தெய்வம் அவனை ரக்ஷிக்கட்டும். என் பிள்ளையை சௌக்கியமாக வைக்கட்டும். அதனால் அவன் விதவைத் தாயாருக்குப் போஷகனும் இந்த இரண்டு குழந்தைகளுக்குத் தகப்பனாகவும் இருக்கட்டும். இதுதான் நான் அவனுக்குக் கொடுக்கப் போகும் பிதிரார்ஜித சொத்து. இல்லாமையினால் தூண்டப்படும் கெட்டவழிகளி லீடுபடச் செய்யும் அவர்களுடைய அறியாத் தன்மையிலிருந்து காப்பாற்றப்பட்டு சன்மார்க்க வழியில் நடத்துபவனாக இருக்கட்டும்." நான் இந்த வார்த்தைகளைச் சொல்லி முடித்ததுதான் தாமதம், அப்பொழுது கீழ்ச் சிறையிலிருந்து சச்சரவுபோல் ஒரு சத்தம் வருவதாகத் தோன்றிற்று. அது அதற்கப்புறம் சீக்கிரத்தில் மறைந்து போயிற்று. என் அறைக்கு வரும் வழிநடையின் வழியாக விலங்குகளின் உராசல் சப்தம் கேட்டது. சிறைப் பாதுகாப்போன் மூழு ரத்தக்களையாகவும், காயப்படப் பட்டவனாகவும் மிகவும் கனமான இரும்புச் சங்கிலியால் கட்டப்பட்டவனாகவும் ஒரு மனிதனைப் பிடித்துக்கொண்டு உள்ளே நுழைந்தான். அந்தக் கேடுண்டவன் என் அருகில் வந்துகொண் டிருக்கும் பொழுது நான் பச்சாதாபத்தோடு அவனைப் பார்த்தேன். ஆனால் என் மகன்தான் அவன் என்று தெரிந்ததும் பய நடுக்கம் கொண்டேன். "என் ஜார்ஜ்! என் ஜார்ஜ்! உன்னை இப்படியா பார்க்கிறேன்? காயப்பட்டு, விலங்கிடப்பட்டு! இதுதானா நீ கண்ட சுகம்? இம்மாதிரியாகவா நீ என்னிடம் திரும்புகிறாய்? இந்தக் காட்சி என் ஹிருதயத்தை உடனே பிளந்து விடும். நான் இறக்கட்டும்."

"ஐயா, உம்முடைய பொறுமை எங்கே?" என்று என் மகன் தைரியமாய்ச் சொன்னான். "நான் அனுபவிக்க வேண்டும். என் உயிர் பணயத்தில் கட்டுப்பட்டு பிடித்துக் கொள்ளப்பட் டிருக்கிறது. அவர்கள் அதைப் பலி கொடுக்கட்டும்."

நான் என் கலக்கத்தை அடக்க கொஞ்ச நேரம் பேசாமல் இருக்க முயன்றேன். ஆனால் அந்த முயற்சியில் நான் இறந்து விடுவேனென்று நினைத்தேன். "ஐயோ,



என் குழந்தாய், உன்னை இப்படிப் பார்க்க என் மனது கலங்கி அழுகிறதே. நான் அதைத் தவிர்க்க முடியவில்லை. எந்த க்ஷணத்தில் உன்னை வெகு நன்மையுடன் இருக்கிறாயென்று நினைத்து உன்னுடைய க்ஷேமத்திற்கு பிரார்த்தித்தேனோ, அதே நேரத்தில் உன்னை மறுபடியும் இப்படிப் பார்க்க வேண்டியதாயிற்றே? கட்டுண்டு காயப்பட்டு இருந்த போதிலும் சிறு வயதில் சாவு சௌக்கியமானது. ஆனால் நான் கிழவன். மிகக் கிழவன். நான் இந்த நாளைப் பார்ப்பதற்காகவா உயிரோடிருந்தேன்? என் குழந்தைகளெல்லாம் அகாலத்தில் என் முன் தட்டி விழும்படியாகவா நான் நாசத்தின் மத்தியில் பாபியாய் உயிருடனிருக்க! ஒரு ஜீவனை எப்பொழுதாவது நாசத்தில் வீழ்த்திய சாபங்களெல்லாம் என் குழந்தைகளின் கொலையாதகனின் மேல் விழட்டும்; என்னைப்போல் அவனும் இருந்து பார்க்கட்டும்."

"பொறும் ஐயா," என்றான் என் மகன். "இல்லாவிட்டால், நான் உமக்காக வெட்கப் படுவேன். என்ன இப்படி ஐயா, உம்முடைய தெய்வீகத் தொழிலையும் மறந்து, இப்படி தெய்வம் செய்யவேண்டிய நியாயத்தை நீரே இப்படி ஸ்வீகரிக்கலாமா? இந்தச் சாபங்களை தெய்வத்தினிடத்தில் சமர்ப்பித்து விட்டெறிந்தால், அவைகள் திரும்பி உம்முடைய சொந்த நரைத் தலையை உடைக்க கீழிறங்கி விழாதா? இல்லை ஐயா, உம்முடைய கவலை இனிமேல் நான் அனுபவிக்கப் போகும கொடிய மரணத்தை உத்தேசித்து என்னை அதற்குத் தயாரிப்பதே. எனக்கு தியானத்தையும், பின் வரப்போகும் நிலைமைக்குள்ள நம்பிக்கையும் காட்டியருளும். கூடிய சீக்கிரம் எனக்குச் சமர்ப்பிக்கப் போகும் அந்தக் கொடுமையை ஏற்றுக் கொள்ள வேண்டிய தைரியத்தையும் கொடுத்தருளும்."

"என் குழந்தாய், நீ சாகக்கூடாது. நீ செய்த குற்றம் என்னவாயிருந்தாலும், அவ்வளவு கொடிய தண்டனைக்கு உள்ளாகும்படி யிருக்கா தென்று நான் நம்புகிறேன். என்னுடைய ஜார்ஜ், அவனுடைய மூதாதைகள் அவனைக் கண்டு வெட்கிக்கும்படியான ஒரு தீச் செயல் செய்ததாக குற்றஞ்சாட்டப்படமாட்டான்," என்றேன்.

"என்னுடைய ஐயா, மன்னிக்கக் கூடாததென்று நான் ஐயமுறுகிறேன். நான் வீட்டிலிருந்து என் தாயாரின் கடிதத்தைப் பெற்றதும், உடனே நம்முடைய கௌரவத்தைத் தீண்டியவனைத் தண்டிப்பதென்று தீர்மானித்து இங்கே வந்தேன். நான் என்னைச் சந்திக்கும்படிக்கு ஒரு உத்தரவு அனுப்பினேன். அதற்குப் பதில் அவன் நேரே வாராமல் தன்னுடைய நாலு வேலைக்காரர்களை என்னைப் பிடிக்கும்படி அனுப்பினான். என்னை முதலில் எதிர்த்தவனை நான் காயம் பண்ணினேன். மூர்க்கமாகவேயென்று ஐயப்படுகிறேன். ஆனால் மற்றவர்கள் என்னைக் கைதியாக்கினார்கள். பயங்காளி, என் மேல் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவரத் தீர்மானித்திருக்கிறான். ருஜுக்கள் மறுக்க முடியாதவை. நான் ஒரு எதிர்ப்பு அனுப்பினேன். நான் சட்டத்தின்படி முதலில் சண்டையை ஆரம்பித்ததால் மன்னிப்புக்கு இடமில்லை. ஆனால் நீங்கள் அடிக்கடி பொறுமையைப் பற்றிச் சொல்லிய நல்லுரைகள் என்னை பரவசப்படுத்தி யிருக்கின்றன. இப்பொழுது அவைகளை உங்களுடைய நடத்தையில் நிரூபியுங்கள்."

"என் மகனே, நீ அப்படியே காண்பாய். நான் இப்பொழுது இவ்வுலகத்தினின்றும்மேல் உயர்த்தப்பட்டேன். அப்படி அவைகள் கொடுக்கக் கூடும் இன்பங்களிலிருந்துமே இக்கணத்திலிருந்தே, இவ்வுலகில் என்னை அதற்குட்படுத்திய எல்லாப் பந்தங்களையும் என் மனத்திலிருந்து பிடுங்கி எறிந்து விட்டேன். இப்பொழுது நம்மிருவரையும் அழியாப் பதவிக்கு தகுதியுள்ளவராகத் தயாரிக்கிறேன். ஆம், என் மகனே, நான் வழியைக் காட்டுகிறேன். என் ஆத்மா உன்னுடையதை மேலே ஏற வழி காட்டும். ஏனெனில் நாம் இருவரும் சேர்ந்தே உயரப் பறந்து விடுவோம். நான் இப்பொழுது அறிகிறேன். உனக்கு இங்கே மன்னிப்பு கிடைக்காதென்று எனக்கு நிச்சயமாய்த் தெரிகிறது."

எல்லாவற்றிற்கும், உத்கிருஷ்டமான நியாய சபையில் நாம் இருவரும் சீக்கிரத்தில் உத்தரவாளி யாவோம், நீ அங்கே அதைக் கெஞ்சிக் கேட்க நான் உன்னை வற்புறுத்துகிறேன். நம்முடைய பிரார்த்தனையில் நாம்



தரித்திரப் பட வேண்டியதில்லை. நம்முடைய சகோதரக் கைதிகள் எல்லோரும் கூடிக் கலந்து கொள்ளட்டும். தர்ம சிந்தனை யுள்ள ஜெயிலரே, நான் அவர்களை முன்னேற்றப் பிரயத்தனப்படும்பொழுது அவர்கள் இங்கே இருக்க உத்தரவு கொடுங்கள்." இப்படிச் சொல்லிக் கொண்டு, என்னுடைய செத்தைப் படுக்கையிலிருந்து எழுந்திருக்கப் பிரயத்தினப்பட்டேன். ஆனால் தேகத்தில் பலமில்லை. அவர் மேல் சாயத்தான் முடிந்தது. என்னுடைய வேண்டுகோளின்படி கைதிகள் வந்து கூடினார்கள். ஏனெனில், என்னுடைய நன் மொழிகளைக் கேட்க அவர்கள் இச்சித்தார்கள். என் மகனும் அவன் தாயாரும் என்னை இருபுறத்திலும் தாங்கிக் கொண்டார்கள். நான் கவனித்துப் பார்த்தேன். வாராதவர்களில்லை யென்று பார்த்துத் தெரிந்து கொண்டேன். பிறகு பின் வரும் விக்ஞாபனத்தோடு அவர்களிடம் மொழிந்தேன்.

## அத்தியாயம் 29

*இவ்வுலகில் சுகப்படுவோர் துக்கப்படுவோர் இவர்களிடத்தில் தெய்வத்தின் சமதிருஷ்டி நிரூபிக்கப்படுகிறது. இன்பம் துன்பம் இவைகளின் இயற்கையிலிருந்து துன்பப்படுகிறவர்கள் மறுமையில் தாங்கள் இங்கே அனுபவிக்கும் கஷ்டங்களுக்காக சுக ஈடு கொடுக்கப்பெறுவார்கள்.*

"என் சிநேகிதர்களே! என் குழந்தைகளே! என்னைப் போல் கஷ்டப்படுகிறவர்களே! நாம் இவ்வுலகில் நன்மை தீமை இவைகள் வழங்கியிருக்கப் படுவதைக் கவனித்தால், மனிதனுக்கு சுகானுபவம் நிறைய வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் கஷ்டங்கள் அதற்குமேல் அனுபவிக்கிறார்கள். நாம் இவ்வுலகம் முழுமையையும் பரிசோதித்தால், ஒரு மனிதனாவது அவ்வளவு சுகத்தோடு பொருந்தி அதற்கு மேல் தனக்கு சுகம் வேண்டியதில்லை யென்று சொல்லக் கூடியவன் கிடையாது. ஆனால் தினம் ஆயிரக் கணக்கான தற்கொலைகள் நேருவதிலிருந்து, அவர்களுக்கு இவ்வுலகில் எதிர் பார்க்கக் கூடியவை ஒன்றுமில்லை யென்று தெரிகிறது. இந்த வாழ்க்கையில் அதனால், நாம் முழுமையும், அநுகூலப்படுத்தப்பட்டவர்களாக ஆகமாட்டோம் என்று புலப்படுகிறது. ஆனால் நாம் முழுமையும் கஷ்டத்திற்குள்ளாகலாம். ஏன் இப்படி மனிதர்கள் துன்புறல் வேண்டும்? உலகத்தின் பொது சுகத்திற்காக, நம்முடைய கஷ்டங்கள் தேவையா? மற்ற எல்லா ஜீவன்களும் தத்தம் சில்லறை உறுப்புகளின் பழுதில்லா அமைப்பால், பூர்ணமாகச் செய்யப்பட்டுள்ளன. ஏன் இந்தப் பெரிய மனித ஜீவராசி மட்டும் தன்னுடைய பூரணத்திற்குப் பிறரிடம் அடங்கி யிருப்பதோடு தாங்களும் குணம் குன்றி யிருக்கும் அம்சங்களை தேவையுடையதாக வேண்டும்? இந்தக் கேள்விக்கு எப்பொழுதும் பதில் கிடையாது. தெரிந்தாலும் பிரயோஜனமில்லாமலிருக்கும். இந்த விஷயத்தில்



தெய்வம் நம்முடைய அவாவை சட்டை செய்யாமலிருக்க நினைத்தது போலும்! ஆனால் நமக்கு ஆறுதலுக்கு வேண்டிய முகாந்திரங்களை மட்டும் காண்பித்து அவ்வளவு மட்டும் தேவையானது என்று நினைத்தது போலும்!

இப்பேர்க்கொத்த நிலைமையில் மனிதன் தத்துவ சாஸ்திரத்தின் இணை பிரியா உதவியைத் தேடுகிறான். அவனுக்கு ஆறுதல் கொடுக்க அது சக்தியற்றதென்று தெய்வம் அவனுக்கு மதக் கொள்கையின் உதவியைக் கொடுத்திருக்கிறது. தத்துவ சாஸ்திரத்தின் ஆறுதல்கள் மிகவும் விநோதம். ஆனால் விசேஷமாக தப்புகளே. நாம் அனுபவிக்க சித்தமாயிருந்தால் வாழ்க்கையில் சௌகரியங்கள் நிரம்பி யிருக்கின்றன வென்று அது போற்றுகிறது. மற்றுமொரு மொழியில் நாம் இங்கே தட்ட முடியாத கஷ்டங்களை அனுபவிக்கிறோம். உண்மையே, ஆனால் வாழ்நாள் குறைவு கூடிய சீக்கிரத்தில் அவைகள் முடிவு பெறுகின்றன என்று போற்றுகிறது. இப்படி இருப்பதால், இந்த ஆறுதல்கள் ஒன்றையொன்று போக்கடிக்கின்றன.

ஏனெனில் இல் வாழ்க்கை, சுகத்துடன் கூடியதென்றால், அதனுடைய குறுகிய காலம் கஷ்டத்தை உண்டு பண்ணுகிறது. அது நீடித்திருந்தாலோ, நம்முடைய துக்கங்களெல்லாம் நீடிக்கப்படுகின்றன. ஆகையால் தத்துவ சாஸ்திரம் பயன்படாதது. ஆனால் மதக் கொள்கையோ மேல் ஸ்தாயியில் ஆறுதலைக் கொடுக்கிறது.

மனிதன் இங்கே இருந்து கொண்டு தன் மனதைச் சரிப்படுத்தி, இன்னொரு வாச ஸ்தலத்திற்காக அதை தயாரிக்கிறானென்று அது சொல்லுகிறது. நல்ல மனிதன் தன் தேகத்தைவிட்டு எல்லாப் பிரகாசமுள்ள ஆத்மாவாக மாறினதும், அவன் இங்கிருக்கும்பொழுது இவ் வாழ்க்கையை சுகத்தைக் கொடுக்கும் சுவர்க்கமாக இயற்றியதாகக் காண்கிறான். கெடுதல் செய்துகொண் டிருந்த மனிதனோ இங்கே தன் துர் நடத்தையால் அங்க ஹீனத்தை அடைந்தும் மனது துர் வாசனையால் பீடிக்கப்பட்டும் சரீரத்தினிடத்தில் பய நடுக்கம் கொள்ளுகிறான். தெய்வத்தின் தண்டனையை எதிர்பார்த்துக்கொண் டிருக்கிறான். ஆகையால் மதக் கொள்கைக்கே நாம் இப்பேர்க் கொத்த வாழ்க்கைக்

கும் நமக்கு நிஜமான ஆறுதல் கொடுப்பதாக அதைக் கைப்பற்ற வேண்டும். ஏனெனில், நாம் ஏற்கெனவே சுகமாயிருப்போமானால், நாம் அந்தச் சுகத்தை அழியாமல் செய்து கொள்ளலாம் என்று நினைக்கக் களிப்பை ஊட்டுகிறது. நாம் கஷ்டப்பட்டுக்கொண் டிருந்தால், இளைப்பாற ஒரு இடமிருக்கிறதென்று நினைக்க ஆறுதலைக் கொடுக்கிறது. ஆகையால், பாக்கியவான்களுக்கு மதம் சுகத்தின் நீடிப்பைக் காண்பிக்கிறது. கஷ்டப்படுவோர்க்கு துன்பத்தினின்றும் மாறுதலை அளிக்கிறது.

ஆனால், மதக் கொள்கை எல்லா மனிதர்களுக்கும், மிக ஆறுதலைக் கொடுப்பதென்றாலும், அது இங்கே சுகக் கேடடைந்தவர்களுக்கு விசேஷமான பரிசுகளை வாக்களித்திருக்கிறது. வியாதியால் பீடிக்கப்பட்டவர்கள், கட்டிக் கொள்ளத் துணியில்லாதவர்கள், வீடில்லாதவர்கள், கஷ்டச் சுமையை நிரம்பத் தாங்கிறவர்கள், கைதிகள், இவர்களுக்கு நம்முடைய திவ்ய முறையில் எப்பொழுதும் அடிக்கடி வாக்களிக்கப்பட் டிருக்கிறது. நம்முடைய மதத்தை ஸ்தாபித்தவர் எல்லாவிடங்களிலும் கஷ்டப்படுவோனின் நண்பனென்று சொல்லிக்கொண் டிருக்கிறார். இவ்வுலகில் ஏற்பட்டுள்ள போலிப் பிரசாரகர்கள் போல் இல்லாமல் கதியில்லாதவர்களிடத்தில் தம்முடைய எல்லாப் பரிவையும் காண்பிக்கிறார். யோசிப்பில்லாதவர்கள் இதைப் பாரபக்ஷமென்று கண்டித்திருக்கிறார்கள். ஏனெனில், தகுதியில்லாமல் பரிவுக்கு லாயக்கில்லையென்கிறார்கள். ஆனால் அழிவில்லா சுகானுபவத்தை கஷ்டப்படுகிறவர்கள் போல் சுகிக்கிறவர்களுக்கு அவ்வளவு பெரிய கொடையாக ஏற்கும்படி தெய்வம்கூட செய்ய சக்தியற்றது என்று அவர்கள் நினைக்கிறதேயில்லை. சுகிப்பவருக்கு நித்ய சுகம் ஒரே ஒரு நன்மையாகும். ஏனெனில், அது எவ்வளவானாலும் அவர்கள் ஏற்கெனவே அனுபவிக்கிறதை நீடிக்கிறது. கஷ்டப்படுவோருக்கோ, அது இருவித சௌகரியம். அது இங்கேயுள்ள துன்பத்தைக் குறைக்கிறது. பின்னால் ஸ்வர்க்கத்தில் ஆனந்தத்தை விசேஷமாக விளைவிக்கிறது.

ஆனால் போஷகர் இன்னொரு விஷயத்தில் தனவந்தர்களிடத்தைவிட ஏழைகளிடம் அதிக அன்பு கூர்ந்தவரா



யிருக்கிறார். இறப்பிற்கு பின்னுள்ள வாழ்க்கையை மிகவும் விரும்பக் கூடியதாக செய்வதோடு அது இங்கிருந்து அதற்குப் போகும் பாதையை கஷ்டமில்லாமல் செய்கிறது. கஷ்டப்படுபவன் ஒவ்வொரு விதமான பயங்கரத்தோடும் நீடித்த பழக்கமுள்ளவனாக இருக்கிறான். துக்கத்தில் மூழ்கியவன் மிகவும் சாந்தத்தோடு இறக்கத் தயார் பண்ணிக் கொள்ளுகிறான். அவனுக்கு வருத்தத்தோடு விட்டுப் போகும் பொருட்கள் ஒன்றுமில்லை. அவனுடைய புறப்பாட்டை தடை செய்ய பந்தங்கள் ஒன்றுமில்லை. கடைசி முடிவில், இயற்கையினாலுள்ள உபத்திரவத்தை மட்டும் உணருகிறான். இது எவ்விதத்திலும் இதற்கு முன் மூர்ச்சிக்கச் செய்தவைகளைவிட பெரியதல்ல. ஏனெனில், கொஞ்சம் வலியைக் கொடுத்த பிறகு இறப்பு சம்பவித்ததும் அது தேகத்தில் உண்டு பண்ணும் ஒவ்வொரு பிளவையும் இயற்கை அவைகளை உணர்ச்சி செய்யாமல் அன்புடன் மூடுகிறது.

இப்படி தெய்வம் கஷ்டப்படுகிறவர்களுக்கு சுகப்படுகிறவர்களைவிட இரண்டு விசேஷ சௌகரியங்களைக் கொடுத்திருக்கின்றன. இறக்கும்பொழுது அதிகக் களிப்பு, சுவர்க்கத்தில் வித்தியாசம் உணர்ந்து அனுபவிக்கும் சுகத்தினால் மேன்மையான களிப்பு. இந்த மேன்மை, என் சிநேகிதர்களே குறைந்த சௌகரியமல்ல. யேசு கிறிஸ்து சொல்லியிருக்கும் பாரபிள்ஸ் கதைகளில் குறிக்கப்பட்ட ஏழை மனிதனின் சுகங்களில் இவை ஒன்றாகத் தோன்றுகிறது. அவன் ஏற்கெனவே சுவர்க்கத்தில் இருந்த போதிலும் அது கொடுக்கும் எல்லா ஆனந்தங்களையும் அனுபவித்தபோதிலும் அவன் சுகத்திற்கு கூடுதல் ஒன்று சொல்லப்பட்டதென்னவென்றால், அவன் ஒரு காலத்தில் கஷ்டப்பட்டுக்கொண் டிருந்தான். இப்பொழுது ஆறுதல் பெற்றான். அவன் துக்கப்படுவதென்னவென்று அறிந்திருந்தான். இப்பொழுது சுகித்திருக்கிறதென்னவென்று அறிந்திருக்கிறான்.

ஆகையால், சிநேகிதர்களே, மதக் கொள்கை தத்துவ சாஸ்திரம் செய்ய முடியாததைச் செய்கிறது. அது இங்கே சுகப்படுபவர்க்கும் கஷ்டப்படுபவர்க்கும் தெய்

வத்தின் வித்தியாச மில்லாத நடவடிக்கையைக் காண்பிக்கிறது. எல்லா மனித இன்பங்களையும் ஒரே நிறையில் சமப்படுத்துகிறது. அது ஏழை தனவான் இருவருக்கும் பின்னால் அதே சுகத்தை அளிக்கிறது. சமமான எதிர் நோக்கத்தைச் சங்கல்பித்து ஆசைப்படச் செய்கிறது. தனவான்கள் இங்கே சுகம் அனுபவிக்கும் விசேஷம் பொருந்தினவர்களாயிருந்தாலும், ஏழைகளோ என்றால் பின்னால் அழிவில்லா சுகத்தோடு கௌரவிக்கப்படும் பொழுது ஒரு காலத்தில் கஷ்ட நிலையி லிருப்பதென்றாலென்ன என்று அறிந்த சாச்வதமான களிப்பிற்கும் பாத்திரமாகிறார்கள். இது ஒரு சிறிய சௌகரியமென்றாலும் சாச்வதமாயிருப்பதால் உன்னத ஸ்திதியிலுள்ளவர்களின் ஐஹிக சுகம் கனத்தால் விசேஷித்ததென்றாலும் அது சாச்சுவதான காலப் பிரமாணத்தால் அதற்கு ஈடாயிருக்கிறதென்று சொல்லலாம்.

கஷ்டப்படுகிறவர்கள் மேற் சொல்லப்பட்ட ஆறுதல்களை அவர்களுக்கு மட்டும் விசேஷமாக உடைததாயிருக்கிறார்கள். அதில் அவர்கள் மற்ற ஜனங்களைவிட உயர்ந்தவர்கள்; மற்றவைகளிலோ, அவர்களுக்குக் கீழே. ஏழைகளின் கஷ்டங்கள் எவ்விதமென்று தெரிந்து கொள்ள வேண்டுமானால், உலக வாழ்க்கையை அனுபவித்து அதைத் தாங்கல் வேண்டும். அவர்கள் இவ்வுலகில் அனுபவிக்கும் விசேஷ சுகங்களைப்பற்றிப் புகழ்ந்தால், அது ஒருவரும் நம்பாததும் அனுபவிக்காததுமான ஒரு விஷயமாகும். ஜீவனத்திற்கு வேண்டியவைகளை யுடைய மனிதர்கள் ஏழைகளல்ல. அவைகள் இல்லாதவர்கள் கஷ்டப்பட வேண்டியவர்கள். ஆம், என் சிநேகிதர்களே, நாம் கஷ்டப்படத்தான் வேண்டும். இவ்வுலகத்தில் வேண்டியவைகளின் இல்லாமையில் நுட்பமான மனோ தர்மத்தின் வீண் பிரயத்தனங்கள் ஆறுதலைக் கொடுக்க மாட்டா. அவை காராக்கிருஹத்தின் அடைப்புக் காற்றுக்கு, இனிப்பு வேண்டியபொழுது கொடுக்காது. ஒடிந்த மனத்தின் தத்தளிப்புக்கு சமாதானத்தைக் கொடுக்காது. தத்துவஞானி தன் பட்டு மஞ்சத்திலிருந்து இதையெல்லாம் தவிர்க்க முடியுமென்று சொல்



லட்டும். நான் என்ன சொல்லக் கூடும். அவைகளைத் தவிர்க்க முயலுவதின் சிரமமே எப்பொழுதும் மிகத் துன்பத்தைக் கொடுக்கிறது. இறப்பது மிக சுலபம். எந்த மனிதனும் அதைத் தாங்கலாம். ஆனால் மனத் துன்பங்கள் கொடியது. இவைகளை ஒரு மனிதனும் தாங்க முடியாது.

என் சிநேகிதர்களே நமக்கு ஸ்வர்க்கத்தில் கொடுப்பதாக வாக்களிக்கப்பட்ட சுகம் நாம் விசேஷமாகக் கௌரவிக்கத் தக்கது. ஏனெனில் நமக்குப் பரிசு இந்த உலகத்திலேயே என்றிருந்தால், நாம் எல்லா மனிதர்களைக் காட்டிலும் மிகத் துர்ப்பாக்கியர்கள். நான் நம்மை நிறைவைப்பதற்கும் அத்துடன் நம்மைப் பயப்படுத்துவதற்குமாகக் கட்டப்பட்ட இந்த இருட்டு சுவர்களைப் பார்க்கும் பொழுதும், இந்த இடத்தின் கோரத்தைக் காண்பிக்கிறதற்கு மட்டும் பிரயோஜனமாயிருக்கும். இந்த வெளிச்சத்தைப் பார்க்கும்பொழுதும் இந்த விலங்குகள் கொடுங்கோன்மை விதித்திருந்தாலும் அல்லது குற்றங்கள் செய்வதனால் அவைகள் அவசியமானதாகச் செய்யப்பட்டாலும், ரத்தம் குறைந்த இந்த முகங்களை நான் பார்க்கும் பொழுதும் இந்த வாய் விட்டலறலை நான் கேட்கும்பொழுதும் ஓ, என் சிநேகிதர்களே, இவர்களுக்கு ஸ்வர்க்கம் எப்பேர்க் கொத்த, வாழ்த்தப்பட்ட மாற்றிக் கொள்ளுதலாகும். காற்றைப் போலத் தடை படாமல், சுற்றுப் பிரதேசங்களில் பறப்பதும், அழிவில்லா ஆனந்தத்தைக் கொடுக்கும் ஒலியில் இளைப்பாறுவதும் முடிவில்லா புகழ்க் கீர்த்தனங்களைப் பாடிக்கொண்டும் நம்மை விரட்டவோ அல்லது நிந்திக்கவோ, யஜமானனில்லாமலும், கருணாமூர்த்தியே எப்பொழுதும் நம்முடைய திருஷ்டியில் புலப்படவும், இவ் விஷயங்களை நான் நினைக்கும்பொழுது இறப்பென்பது மிகவும் சந்தோஷமான சமாசாரங்களைக் கொண்டு வரும் தூதனாகிறது. இவ் விஷயங்களை நான் நினைக்கும்பொழுது அவருடைய மிகக் கூர்மையான அம்பு என்னைத் தாங்கும் தடியாக ஆகிறது. இவ் விஷயங்களைப் பற்றி நினைக்கும் பொழுது, இந்த ஜீவ நிலையில் வேண்டுமென்று இச்சைப் படக் கூடியவை என்ன இருக்கிறது. இவ் விஷயங்களை நான் நினைக்கும்பொழுது உலைத்துத் தள்ளக்கூடாததை

என்ன இருக்கிறது. அரண்மனையில் வசிக்கும் அரசர்கள் இப்பேர்க்கொத்த சௌகரியங்கள் கிடைக்க புலம்ப வேண்டும். ஆனால் நாம் சிறுமைப்பட்டிருப்பதால், அவைகளுக்காக ஆவல் கொள்ளவேண்டும்.

இந்தப் பொருட்கள், நம்முடையதாக இருக்குமா? அவைகள் நம்முடையதாக நிச்சயமாய் இருக்கும். நாம் அவைகளுக்காகப் பிரயாசைப் படவேண்டியது மட்டும் தான். நம்முடைய பிரயத்தனத்தைத் தடுக்கும் அநேக பாப உணர்ச்சிகளிலிருந்து நாம் நீக்கி வைக்கப்பட்டிருக்கிறோம் என்பது எப்பேர்க்கொத்த சௌகரியம். நாம் அவைகளுக்காகப் பிரயத்தனப்பட மட்டும் வேண்டும். அவைகள் நிச்சயமாய்நம்முடையதே. நமக்கு இன்னும் ஒரு ஆதரவு. அவை சீக்கிரத்திலேயே கிடைக்கும். ஏனெனில் நம்முடைய முன் வாழ்நாட்களைத் திரும்பிப் பார்க்கில் அது ஒரு மிகச் சிறிய அளவாகத் தோன்றுகிறது. பாக்கியுள்ள வாழ்நாட்களைப் பற்றி எப்படி உள்ளவாக நினைத்த போதிலும் அது இதைவிடக் குறைந்த அளவாகவே இருக்கும். நமக்கு வயது முதிர முதிர வாழ்நாட்கள் குறைவாகத் தோன்றுகின்றன. செல்லும் கால நிலையின், அறிவும் அதனுடைய தேர்ந்த பழக்கமும் செல்லவேண்டிய காலப் பிரமாணத்தின் உணர்ச்சியை எப்பொழுதும் குறைக்கிறது. ஆகையால், நாம் நம்முடைய பிரயாணத்தின் முடிவை சீக்கிரம் அடைவோம். தெய்வத்தால், நம் மேல் சுமத்தப்பட்ட பளுவான சுமையை நாம் சீக்கிரத்தில் கீழே இறக்குவோம். கஷ்டப்படுபவர்களின் ஒரே துணையான இறத்தல் களைப்படைந்த யாத்ரீகரை அதன் பார்வையால் கொஞ்சம் ஏமாற்றினாலும், அது அவர்களுடைய தோற்றத்தின் வானம் போல் முன்னாலேயே பிடிக்க முடியாதபடி நடந்து போய்க்கொண்டிருந்தாலும், நாம் நம்முடைய அலுவலிலிருந்து ஓயும் சமயம் நிச்சயமாகவும் சீக்கிரத்திலும் வரும். அப்பொழுது உலகத்திலுள்ள மகிமை தங்கிய உன்னத ஸ்திதியிலுள்ளவர்கள், நம்மைத் தரையோடு வைத்துத் தேய்க்கமாட்டார்கள். நாம் நம்முடைய கீழே பட்ட கஷ்டங்களைப் பற்றி களிப்போடு நினைப்போம். அப்பொழுது நம்முடைய சிநேகிதர்க



ளோடும் அல்லது நம்முடைய சிநேகத்திற்குப் பாத்திரமானவர்களோடும் சூழப்பட்டிருப்போம். அப்பொழுது நம்முடைய ஆனந்தம் சொல்லவொண்ணாது; மேலும் அது எல்லாவற்றிற்கும் சிகரம்போல் அழியாமலிருக்கும்.

# அத்தியாயம் 30

*இதைவிட சந்தோஷ சின்னங்கள் தோன்ற ஆரம்பித்தன. நாம் பிடி கொடுக்காமலிருப்போம். பாக்கியம் நம்முடைய பக்ஷத்தில் வந்து சேரும்.*

நான் இப்படி முடித்தபொழுது, என்னைக் கேட்க வந்தவர்கள் கலைந்துபோனதும், அப்பேர்க்கொத்த சிறைச்சாலை வேலைக்காரர்களில் மிகவும் ஜீவகாருண்யமுள்ள அந்த ஜெயிலர், நான் அதிருப்தி யடைய மாட்டேனென்று நம்புகிறதாகச் சொன்னார். ஏனெனில், அவர் செய்தது அவர் கடமை. என் மகனை இதைவிட ஒரு பலமான அறைக்கு மாற்றவேண்டுமென்று சொன்னார். ஆனால் ஒவ்வொரு காலையில் என்னை வந்து பார்க்க அவனுக்கு உத்தரவு கொடுக்கப் படுமென்றும் சொன்னார். நான் அவருடைய தாக்ஷண்யத்திற்காக வந்தனம் அளித்தேன். என் மகனுடைய கையைப் பிடித்துக்கொண்டு அவனுக்கு நல் ஆசி கூறி அவன் எதிர்பார்க்கும் மஹத்தான கடமையைப பற்றி ஞாபகப்படுத்தினேன்.

நான் மறுபடியும் படுத்துக்கொண்டேன். என் சிறுவர்களில் ஒருவன் என் படுக்கையண்டை உட்கார்ந்து வாசித்துக்கொண்டிருந்தான். அப்பொழுது மிஸ்டர் ஜென்கின்ஸன் நுழைந்து என் மகளைப் பற்றிய சமாசாரம் வந்திருக்கிறது என்று தெரிவித்தான். இரண்டு மணி நேரத்திற்கு முன் ஒரு அறியாச் சீமானின் சாரியில் ஒரு மனிதன் அவளைப் பார்த்ததாகவும் அவர்கள் பக்கத்துக் கிராமத்தில் சிற்றுண்டிக்காக தாமதித் திருக்கிறார்களென்றும் நகரத்திற்குத் திரும்பி வருகிறவர்கள் போலிருப்பதாகவும் அவன் சொன்னான். அவன் இந்தச் சமாசாரத்தை தெரிவித்தானோ இல்லையோ ஜெயிலரும் அவசரத்துடன் சந்தோஷ முகத்தோடு வந்து என் மகள் கண்டு பிடிக்கப்பட்டதாகச் சொன்னார். அடுத்த நிமிஷம் மோஸஸ்



தன் சகோதரி ஸோபி கீழே இருப்பதாகவும் எங்கள் பழய சிநேகிதர் மிஸ்டர் பர்ச்செல்லுடன் வந்து கொண்டிருப்பதாகவும் கத்திக்கொண்டு ஓடி வந்தான்.

அவன் அந்தச் சமாசாரத்தைச் சொல்லிக்கொண்டிருக்கும்பொழுது, என்னுடைய மிக அருமையான மகள் உள்ளே நுழைந்தாள். சந்தோஷத்தினால் பிரமித்த பார்வையோடு அன்பு ஸாகரத்தில் மூழ்கியவளாய் என்னை முத்தமிட ஓடிவந்தாள். அவளுடைய தாயின் கண்ணீரும் மௌனமும அவளுடைய சந்தோஷத்தைத் தெரிவித்தன.

“இங்கே, அப்பா,” என்று அந்த மனக்களிப்பைக் கொடுக்கும் பெண் சொன்னாள். “இங்கே இருக்கிறார் அந்த வீரன். அவராலே நான் விடுவிக்கப்பட்டேன். இந்தச் சீமானுடைய சுறுசுறுப்பான தைரியத்தால் நான் என் சுகத்திற்கும் க்ஷேமத்திற்கும் கடமைப்பட்டிருக்கிறேன். மிஸ்டர் பர்ச்செல் அவளைவிட அதிகமான களிப்போடு கூடியவராகக் காணப்பட்டார். அவர் அவளுக்கு ஒரு முத்தம் கொடுத்தார். அதனால் அவள் மேல் சொல்வது தடைபட்டது.

“ஆஹா, மிஸ்டர் பர்ச்செல்” என்று நான் சொன்னேன். “நீர் எங்களைப் பார்க்கிற வாசஸ்தலமானது மிகவும் திரஸ்கரிக்கப்படக்கூடியது. நாங்களோ, நீர் முன் பார்த்ததற்கு இப்பொழுது மிகவும் வித்தியாசமான ஸ்திதியில் இருக்கிறோம். நீர் எப்பொழுதும் எங்களுடைய நண்பர். உம்மைப்பற்றியுள்ள எங்களுடைய தவறை முன்னமேயே கண்டு கொண்டோம். எங்களுடைய நன்றியின்மைக்கு வருந்தினோம். நீர் எங்களிடத்தில் அப்பொழுது பெற்ற ஹீனமான நடப்பிற்கு நான் உம்முடைய முகத்தைப் பார்க்கவே வெட்கப்படுகிறேன். ஆனால் நீர் என்னை மன்னிப்பீரென்று நம்புகிறேன். நான் ஒரு ஹீன கருணையில்லாத பாவியால் ஏமாற்றப்பட்டு, சிநேகம் என்கிற வேஷத்தில் என்னையும் கெடுத்து விட்டான்.” “நான் உம்மை மன்னிப்பதென்பது ஏது. நீர் என் கோபத்திற்கு ஆளாகவேயில்லையே. நான் உம்முடைய ஏமாறுதலைக் கொஞ்சம் கண்டு கொண்டேன். அதைத் திருத்த எனக்குச் சக்தி இல்லாததால், நான்

அதைப் பற்றி வருத்தப்படுவதன்றி வேறொன்றும் செய்ய முடியவில்லை" என்று மிஸ்டர் பர்க்கெல் பதிலுரைத்தார்.

"உம்முடைய மனது உன்னதமானதென்று எப்பொழுதும் என்னுடைய அனுமானம். இப்பொழுது அப்படிக் கண்டு கொண்டேன். என் அருமைக் குழந்தாய் நீ எப்படி விடுவிக்கப்பட்டாய்? எந்தப் போக்கிரிகள் உன்னைத் தூக்கிக்கொண்டு போனது என்பதைச் சொல்லு?" என்று நான் கேட்டேன்.

"என்னைத் தூக்கிக்கொண்டு போன அயோக்யன் உண்மையில் யாரென்று இன்னும் எனக்குத் தெரியாது" என்று பதிலுரைத்தாள். "எங்கள் அம்மாவும், நானும் வெளியே நடந்து போய்க்கொண்டிருக்கும் பொழுது, அவன் எங்கள் பின்னே வந்து நான் உதவிக்காக கூப்பிடு முன்னமே வண்டிக்குள் என்னைத் தள்ளி, ஒரு கொடியில் குதிரைகளை விரட்டிச் சென்றான். நான ரஸ்தாவில் அநேகரைப் பார்த்து உதவிக்காகக் கூவினேன். அவர்கள் என் வேண்டுகோளைக் கவனிக்கவேயில்லை. இதற்குள், அந்தத் துஷ்டன் நான் கத்தாமலிருக்கும்படி ஒவ்வொரு பிரயத்தனமும் செய்தான். அவன் என்னைப் புகழ்ந்தான். திரும்பவும் பயமுறுத்தினான். இப்படி மாறி மாறிச் செய்தான். நான் சத்தம் போடாமலிருந்தால், அவன் ஒரு தீங்கும் இயற்றுவதாக உத்தேசமில்லை யென்று ஆணையிட்டான். இதற்குள் அவன் இழுத்துச் சாத்தியிருந்த கித்தான் துணியைக் கிழித்தேன். நான் வெளியில் பார்க்கும்பொழுது கொஞ்ச தூரத்தில் யாரைக் கண்டேன் தெரியுமா? உங்களுடைய பழைய சிநேகிதர் மிஸ்டர் பர்க்கெல் வழக்கம்போல் வேகத்தோடும், நாம் அவரை ஒரு பெரிய தடி வைத்துக் கொண்டிருந்ததற்காக அவ்வளவு பரிகாசம் செய்தோமே, அந்தத் தடியோடும் போய்க்கொண்டிருந்தார். நாங்கள் அவருடைய காது கேட்கும் தூரத்தில் வந்ததும், அவரை நான் பேர் சொல்லிக் கூவினேன். அதன் பேரில், அவர் உரத்த குரலோடு குதிரை காஸாரியை நிறுத்தக் கட்டளையிட்டார். ஆனால் அந்தப் பையன் அதைக் கவனிக்கவில்லை. இன்னும் அதிக வேகத்தோடு ஓட்டிக் கொண்டு போனான். நான் அப்பொழுது



அவர் எங்களைப் பின்பற்ற மாட்டாரென்று நினைத்தேன். ஆனால் ஒரே நிமிஷத்திற்குள், குதிரைகள் பக்கத்தில் மிஸடர் பர்க்கெல் ஓடி வருவதை நான் கண்டேன். ஒரே அடியால், குதிரை காஸாரியை கீழே வீழ்த்தினார். அவன் விழுந்ததுமே, குதிரைகள் அவைகளாகவே நின்று விட்டன. அந்தத் துஷ்டன் வெளி வந்து, ஆணையிட்டும், பயமுறுத்தியும், கத்தியை உருவிக்கொண்டு உயிருக்கு சேதம் வேண்டாமென்றால் போகும்படி பர்க்கெல்லுக்குக் கட்டளையிட்டான். ஆனால் மிஸ்டர் பர்க்கெல் ஓடிவந்து அவன் கத்தியைத் துண்டு துண்டாகப் பண்ணினார். அதன் பிறகு ஒரு சுமார் கால் மைல் தூக்கிக் கொண்டு போய் இருப்பார், ஆனால் அவன் தப்பி ஓடிவிட்டான். இதற் குள நானே வெளியில் வந்து, என் ரக்ஷகனுக்கு உதவி புரியத் தயாராயிருந்தேன். ஆனல் அவர் வெற்றியுடன் சீக்கிரம் திரும்பி வந்தார். குதிரை காஸாரி நான் எழுந்திருந்ததும் அவனும் ஓடித் தப்பப் பார்த்தான். ஆனல் மிஸ்டர் பர்க்கெல் அவனுடைய ஹானியில், திரும்ப எதி நகரத்திற்கு ஓட்டச் சொன்னார். அதைத் தவிர்க்க முடியாமல், அவன் மனதில்லாமல் ஒப்புக்கொண்டான். ஆனல் அவன் அடைந்த காயம் எனக்கு மட்டும் பயங்கரமானதாகத் தோன்றிற்று. நாங்கள போகும் பொழுது அவன் வலியினால் புகார் செய்து கொண்டே போனான். ஆகையால் மிஸ்டர் பர்க்கெல் கடைசியில் அனுதாபமடைந்து என்னுடைய வேண்டுகோளின் பேரிலும், திரும்புகையில் நாங்கள் இறங்கின ஒரு சத்திரத்தில் மற்றொருவனைக் கொண்டு அவனை மாற்றினோம்.

"நல்ல வரவு இப்பொழுது என் குழந்தாய், அவளை மீட்ட வீரனான உமக்கு ஆயிரம் நல் வரவுகள். எங்களுடைய வரவேற்பு எழ்மையாயிருந்தபோதிலும், எங்களுடைய ஹ்ருதய கமலங்கள் உங்களை வரவேற்க ஆவல் கொண்டிருக்கின்றன. இப்பொழுது மிஸ்டர் பர்க்கெல், நீர் என் பெண்ணை மீட்டதால், அவளை ஒரு பரிசாகக் கருதினால் அவள் உம்முடையவள். நீர் என்னைப் போலுள்ள ஏழைக் குடும்பத்தில் சம்பந்தம் செய்யத் துணிந்தால் அவள் உம்முடையவள். அவளுடைய அனுமதியைப் பெற்

றுக் கொண்டு அவளை ஸ்வீகரித்துக் கொள்ளும். உம்மிடத்தில் அவள் மனம் உகந்திருக்கிறது. என்னுடைய மனதும் அப்படியே. நான் உமக்குச் சொல்லுகிறேன். கேளும், ஐயா, நான் உமக்குக் கொடுக்கும் ஐசுவரியம் சின்னதல்ல. அவள் அழகுக்குப் பெயர் போனவள். வான்தவமே, ஆனால் என்னுடைய தாத்பரியம் அதல்ல. நான் அவளுடைய மனப்பான்மை என்கிற ஒரு ஐசுவரியத்தைக் கொடுக்கிறேன்'' என்று சொன்னேன்.

"ஆனால் ஐயா, உமக்கு என்னுடைய நிலைமையைப் பற்றியும், என்னால் அவளுக் கேற்றபடி போஷிக்கச் சக்தியில்லை யென்றும் நீர் அறிந்திருக்கிறீரென்று நான் நம்புகிறேன்.'' என்றார் மிஸ்டர் பார்க்கெல்.

"உம்முடைய தற்போது செய்யும் ஆக்ஷேபனை, என்னுடைய கொடையைத் தள்ளுவதென்றால் நான் ரத்துப் பண்ணிக் கொள்ளுகிறேன். ஆனாலும் அவளை அடைய உன்னைப் போல் தகுதியான மனிதன் ஒருவனையும் நான் அறியேன். நான் அவளுக்கு ஆயிரக் கணக்காய்க் கொடுத்தாலும் அவளை ஆயிரம் பேர்கள் என்னிடமிருந்து வரித்தாலும் என் சத்திய சந்தனை வீர பர்க்கெல என்னுடைய மிகவும் மனம் ஒப்பிய வரனவான்'' என்று நான் சொன்னேன்.

இதெல்லாவற்றிற்கும் அவருடைய மௌனம் மட்டுமே ஏமாற்றம் கொடுக்கும் மறுத்தலைப்போல் தோன்றியது. என்னுடைய கொடைக்கு ஒருவித பதிலும் அளிக்காமல் அடுத்த சத்திரத்திலிருந்து சிற்றுண்டி வழங்கச் செய்யலாமாவென்று அவர் கேட்டார். அப்படியே செய்யலாமென்று சொல்லப்பட்டதின்பேரில் அவர் எவ்வளவு சீக்கிரத்தில் செய்யக்கூடிய சிலாக்யமான சாப்பாடு அனுப்ப உத்திரவிட்டார். அவர்களிடத்திலுள்ள மிக சிலாக்யமான ஒயின் பன்னிரெண்டு குப்பிகள் கொண்டுவர ஏற்பாடு செய்தார். அப்படியே எனக்கும் சில மருந்துகள், புன் சிரிப்புடன் ஒரு தடவைக்குத்தான் கொஞ்சம் தாராளமாயிருக்கக்கூடு மென்றார். சிறையாயிருந்த போதிலும், அப்பொழுதுபோல், தான் அவ்வளவு களிப்புடையவராக எப்பொழுது மிருந்த



தில்லை யென்றார். உண்டிக்காக வேண்டிய சாமான்களோடு அதை வழங்குபவனும் சீக்கிரத்தில் வந்து விட்டான். ஜெயிலர் ஒரு மேஜை கடன் கொடுத்தார். அவர் விசேஷமான பக்கத்துடனிருந்தார். ஒயின் ஒழுங்காக வழங்கப்பட்டது. மிகவும் நன்றாகத் தயாரிக்கப்பட்ட இரண்டு அன்னங்கள் கொண்டுவரப் பட்டன. என் மகள் தன் பரிதபிக்கத்தக்க தமயனின் கஷ்டத்தை அவள் சொல்லிக் கேள்விப்படவில்லை. நாங்கள் அவளுடைய சந்தோஷத்தை, அதைத் தெரிவிப்பதால், குறைக்க மனமில்லாதவர்களாயிருந்தோம். ஆனால் நான் சந்தோஷத்தோடு இருக்க முயன்றது வீணாயிற்று. என் துர்ப்பாக்கியமுள்ள மகனின் காலவர்த்தமானங்கள் பாராமரிக்கும் எல்லாத் தீர்மானங்களையும் முறியடித்தது. ஆகையால், நான் கடைசியில், அவனுடைய துர் அதிர்ஷ்டத்தைச் சொல்லி எங்களுடைய சந்தோஷத்தைக் குறைக்கும்படி ஏற்பட்டது. என்னுடைய கொஞ்சம் நடுவில் ஏற்பட்டிருக்கிற இந்தச் சந்தோஷத்தில் அவனும் கலந்து கொள்ளப்படட்டுமென்று வேண்டினேன். என்னுடைய விருந்தினர்கள் என் தகவலினால் உண்டாக்கப்பட்ட பிரம்மிப்பிலிருந்து நீங்கினதும், நான் என் சேவகன் கைதி மிஸ்டர் ஜென்கின்ஸன் கூப்பிடப்படட்டுமென்று வேண்டினேன். ஜெயிலரும் வழக்கமில்லாத அமைதியுடன் என்னுடைய வேண்டுகோளுக்கு இணங்கினான். என் மகனைப் பூட்டப்பட் டிருக்கும் விலங்குகளின் சத்தம் வழி நடையில் கேட்டவுடனே அவனுடைய தங்கை அடக்க முடியாத ஆவலோடு அவனைச் சந்திக்க ஓடினாள். இதற்குள் மிஸ்டர் பர்க்கெல், என் மகன் ஜார்ஜ் என்னும் பெயருடையவனாவென்று கேட்டார். அதற்கு நான் ஆம் என்று பதில் சொன்னதும் அவர் அப்பொழுதும் மௌனமாகவே இருந்தார். என் மகன் அறைக்குள் நுழைந்ததும் அவன் மிஸ்டர் பர்க்கெலை ஆச்சரியத்துடனும் பெரியவர்களுக்கு இயற்றும் மரியாதையுடனுள்ள பார்வையோடும் பார்த்ததாக எனக்குத் தோன்றியது. "வா இங்கே என் மகனே'' என்று கத்தினேன். நாம் மிகவும் தாழ்மையை அடைந்திருந்த போதிலும், தெய்வம் துன்பத்திலிருந்து கொஞ்சம் சமனம் கொடுக்க ப்ரீதிகொண் டிருக்கிறது.

உன் தங்கை நம்மிடம் கொண்டுவந்து விடப்பட்டாள். இங்கே இருக்கிறவர் அவளை விடுவித்தவர். அந்த வீர புருஷனுக்கு இன்னும் ஒரு மகன் எனக்குக் கொடுத்து வைத்திருக்க நான் கடமைப்பட்டவனாகிறேன். என் மகனே, அவருக்கு ஸ்நேக பூர்வமாய் உன் கையைக் கொடுத்துக் குலுக்கிடு. அவர் நம்முடைய மன நிம்மதியோடு நன்றிபெறக் கடமைப்பட்டவர்.''

என் மகன் நான் சொன்னதையெல்லாம் கவனிக்காதவன்போல் தோன்றினான். மரியாதை காட்டக் கூடிய எட்டிய ஸ்தானத்திலிருந்து ஒரே பார்வையாய் நின்றுகொண்டிருந்தான். ''என் பிரியமுள்ள அண்ணா, ஏன் என்னைக் காப்பாற்றிய குணவானுக்கு வந்தனம் அளிக்கவில்லை? பராக்கிரம சாலிகள், ஒருவரை ஒருவர் எப்பொழுதும் நேசிக்க வேண்டும்'' அவன் மௌனமாயும் ஆச்சரியத்துடனும் அப்படி இருந்துகொண்டிருந்தான். கடைசியில் எங்களுக்கு விருந்தளிப்பவர், தான் கண்டுகொள்ளப் பட்டதாக அறிந்து தன்னுடைய சுயமான அதிகாரத்தை ஏற்றுக்கொண்டு, என் மகனை முன் வரும்படி அழைத்தார். இந்தச் சமயத்தில் அவர் ஏற்றுக் கொண்ட அப்பேர்க்கொத்த தோரணையைப்போல் அவ்வளவு நிஜ காம்பீர்யத்தைப் போல், எதையும் நான் முன் பார்த்ததில்லை. இந்த ஜகத்தில் எல்லாவற்றிலும் பெரிய வஸ்து என்னவென்றால் ஒரு நல்ல மனிதன் விபரீத காலத்தில் கஷ்டப்படுவது என்று ஒரு தத்வக்யானி சொல்லுகிறார். ஆனால் அதைவிடப் பெரிய வஸ்து என்னவென்றால் அதை நிவர்த்தி செய்ய வரும் நல்ல மனிதனே. அவர் என் மகனை கொஞ்ச நேரம் அதிகார தோரணையோடு பார்த்துவிட்டு பிறகு சொன்னார்: ''யோசனையில்லாப் பையனே, நான் அறிந்ததில் நீ அதே குற்றம்...'' ''இதற்குள் ஜெயிலரின் சேவகன் ஒருவன் நுழைந்து ஒரு அந்தஸ்துள்ள மனிதர் ஊருக்குள் பல பரிவாரங்களோடு ரதத்தில் வந்தவர் எங்களுடனிருக்கும் சீமானுக்கு மரியாதையைச் சமர்ப்பித்து எப்பொழுது அவர் வந்து பேட்டி காணலாமென்று தெரிந்துகொள்ள பிரார்த்திக்கிறா''ரென்று சொன்னார்.



''அந்த ஆஸாமியை நான் பார்க்கச் சந்தர்ப்பப்படும் வரையில் காத்திருக்கச் சொல்லு'' என்று எங்கள் விருந்தாளி பதிலுரைத்தார். பிறகு என் மகனிடம் திரும்பிச் சொன்னார்: ''நீ இதற்குமுன் என் தண்டனையை அடைந்த குற்றத்தை இப்பவும் செய்ததாக நான் அறிகிறேன். அப்பேர்ப்பட்ட குற்றங்களுக்கு சட்டமுறை மிகத் தகுந்த தண்டனையை விதிக்கத் தயார் செய்து கொண்டிருக்கிறது. உன்னுடைய உயிருக்கு நீ நிந்தனை செய்தால், அது பிறருடைய உயிரை வாங்க உனக்கு அதிகாரம் கொடுக்கிறதென்று நீ ஒரு வேளை எண்ணியிருக்கிறாப்போல் தோன்றுகிறது. ஆனால் எதிராளியைத் தனிச் சண்டைக்கு இழுக்கிறவன் பிரயோசனமற்ற தன் உயிரைப் பணயம் வைக்கிறான். கொலை செய்கிறவன் அதைவிட ஜாக்கிரதையாய் நடந்துகொள்ளுகிறான். இவர்கள் இரண்டுபேருக்கும் என்ன வித்தியாசம். சூதாடி தான் ஒரு பணயம் வைத்து விளையாடுகிறேனென்று சொன்னால், அவனுடைய மோசத்தைத் தணிக்கிறதா'' என்றார் அவர்.

''ஐயோ, ஐயா,'' என்று நான் சொன்னேன். ''நீர் பாவராயிருந்தாலும் சரி, பரிதாப நிலையிலிருக்கும் சரியில்லாத வழியில் தூண்டப்பட்ட ஜீவன்மேல் கருணை வையுங்கள். அவன் செய்ததெல்லாம் குழப்பத்திலிருந்த அவன் தாயின் கட்டளை மேல் செய்தது. அவன் தன் கோபத்தின் கடுமையில், தன்னுடைய விபத்தைத் தன்னுடைய ஆசீர்வாதத்தின்பேரில் மறுதலிக்க வேண்டினான். அவனுடைய தெரியாத் தனத்தை நிரூபிக்கும் கடிதத்தைப் பாரும். அது அவருடைய குற்றத்தைக் குறிக்கும்.'' அவர் அந்தக் கடிதத்தை எடுத்து வேகமாய் வாசித்தார். ''இது சரியான முகாந்திர மில்லாவிட்டாலும் அவனை மன்னிக்க என்னைத் தூண்டும்படியாக அவனுடைய குற்றத்தைக் குறைக்கிறது ஐயா, இப்பொழுது'' என்று என் மகன் கையைப் பிடித்துக் கொண்டு சொன்னார். ''நீ என்னை இங்கே பார்க்க ஆச்சரியப்படுவதாக எனக்குத் தெரிகிறது. ஆனால் நான் அடிக்கடி இதைவிட சாமான்ய காலங்களில்கூட சிறைகளைப் பார்வையிட்டிருக்-

கிறேன். இப்பொழுது மிகவும் நிஜமான மதிப்புள்ள ஒரு கௌரவமான மனிதருக்கு நியாயம் பிறப்பிப்பதற்காக இப்பொழுது இங்கே வந்திருக்கிறேன். உன் தகப்பனின் உதார குணத்தை நான் வெகு காலமாய் மாறு வேஷத்தில் பார்த்துக் கொண்டிருக்கிறேன். அவருடைய சிறிய வீட்டில் வீண் ஸ்துதியில்லாமல் மரியாதையை அடைந்திருக்கிறேன். அவருடைய கணப்பின் கூட்டத்தில் மனக்களிப்பு ஊட்டும் வெகுளித் தனத்திலிருந்து ராஜரீகம் கொடுக்க முடியாத சந்தோஷத்தை நான் அனுபவித்திருக்கிறேன். என் அண்ணன் மகன் நான் இங்கே வருவதைப் பற்றித் தெரிவிக்கப் பட்டிருக்கிறான். அவன் வந்து விட்டதாகவும் தெரிகிறது. அவனை விசாரிக்காது குற்றம் சாட்டுவது அவனுக்கும் உனக்குமே சரியான முறையல்ல. கெடுதல் நடந்திருந்தால் பரிகாரம் செய்யப்படும் நான் பெருமை பாராட்டாமல் செய்யக் கூடியது இது. ஸர் வில்லியம் தார்ன்ஹில் நியாயத்துக்கு விரோதமாய் இது வரையில் இருந்ததாக ஒருவரும் அவரைக் குற்றம் சாட்டினதில்லை."

இது வரையில் கபடில்லாத சரசமான தோழராக எங்கள் வீட்டில் ஆதரித்து வந்த மனிதன் பெயர்போன ஸர் வில்லியம் தார்ன்ஹில்லைத்தவிர வேறில்லையென்று இப்பொழுது நாங்கள் தெரிந்து கொண்டோம். அவருடைய குணங்களையும் தனிப் போக்குகளையும் கேட்டுத் தெரியாதவர்கள் ஒருவருமில்லை. எழ்மையான மிஸ்டர் பர்ச்செல் வாஸ்தவத்தில் பெரிய ஐசுவரியவந்தன். அபாரமான உற்ஸாகமுடையவர். அவரை சட்டசபைகள் புகழுடன் கேட்டன. கக்ஷியினர் நம்பிக்கையோடும் கேட்டனர். அவர் நாட்டுப்புற வாசிகளுக்கு ஒரு நண்பர். அரசனிடத்திலும் விசுவாஸமுள்ளவர். என் தத்தளிக்கும மனைவி முன்னர் தன்னுடைய சகஜமான நடவடிக்கைகளை ஞாபகப் படுத்திக் கொண்டு பயத்தினால் பின்வாங்கினவள் போல் தோன்றினள். ஆனால் ஸோபியா கொஞ்ச நிமிஷத்திற்கு முன் தன்னுடையவர் என்று நினைக்கப்பட்டவர் இப்பொழுது ஐசுவரியத்தால் அநாதமான உன்னதத்தில் அவர் ஏற்பட்டதால் தன்னுடைய கண்ணீரை மறைக்க முடியவில்லை. "ஆஹா! ஐயா" என்று என் மனைவி பரிதாபமுள்ள தோற்றமுடன் கதறினள். "உம்முடைய மன்னிப்பை



நான் எப்பொழுதாவது அடையலாமென்பது எப்படி சம்பவிக்கக்கூடும். உம்மைக்கடைசியாக எங்கள் வீட்டில் பார்க்கப் பெற்றிருந்த தருணத்தில் என்னிடமிருந்து நீர் பெற்ற அவமதிப்பையும், பரிகாசமான வார்த்தைகளையும் நான் பயமில்லாமல் உம்மிடத்தில் பிரயோகித்தேனே. இவைகள் மன்னிக்கப்படமாட்டாவென்று ஐயமுறுகிறேன்." "என் பிரியமுள்ள நல்ல சீமாட்டியே" என்று புன்னகையுடன் அவர் பதில் சொன்னார். "நீர் என்னை பரிகசித்ததில் நான் அதற்குப் பதில் கொடுத்தேன். என்னுடையது உன்னுடையதைப் போலில்லையா என்பதை இங்கே கூடியிருக்கும் எல்லோருடைய தீர்மானத்திற்கு விட்டுவிடுகிறேன். நிஜத்தில் இப்பொழுது நான் என் கோபத்தைச் செலுத்தக் கூடிய மனிதன், இந்த சின்னக் குட்டியை அவ்வளவு பயமுறுத்தினவனைத் தவிர இங்கே வேறொருவருமில்லை. எனக்கு அந்தப் போக்கிரிப் பயலின் உருவத்தை கவனிக்கக்கூட நேரமில்லை. இல்லாவிடில் அவனைக் குறித்து ஒரு பிரசுரம் செய்விக்கலாம். என் அருமை ஸோபியா, அவனை நீ மறுபடி பார்த்தால் அவனைத் தெரிந்து கொள்ள முடியுமா வென்று என்னிடம் நீ சொல்லுவாயா?"

"அப்படியே ஐயா" என்றான் அவன் "நான் நிச்சயமாய்ச் சொல்ல முடியாது. ஆனால் இப்பொழுது ஞாபகம் வருகிறது. அவன் கண் இமை மேல் ஒரு பெரிய காயம் இருந்தது." "என்னை மன்னிக்கவும் அம்மா" என்று பக்கத்திலிருந்த ஜென்கின்ஸன் குறுக்கு வெட்டினான். "ஆனால் அந்தப் பயலுக்குச் சிவந்த மயிர் இருந்ததாவென்று சொல்ல முடியுமா?" "ஆம், நான் அப்படித்தான் நினைக்கிறேன்." என்றான் ஸோபியா. "பெருமை தங்கிய நீங்கள் அவன் காலின் நீளத்தைக் கவனித்தீர்களா?" என்று ஸர் வில்லியம் பக்கம் திரும்பி அவரைக் கேட்டான். "நான் அவைகளுடைய நீளத்தைப் பற்றி நிச்சயம் சொல்ல முடியாது. ஆனால் அவைகளுடைய வேகத்தைப் பற்றி நான் சந்தேகப்படவில்லை, அவன் எனக்குமேல் வேகமாக ஓடினான். அது இந்த ராஜ்யத்தில் ஒருவருமே அப்படிச் செய்ய முடியுமென்று நான் நினைக்கவில்லை." என்றார் பாரனெட்

"மகிமை தாங்கியவருக்கு வந்தனம். அந்த மனிதனை எனக்குத் தெரியும் நிச்சயமாய் அவன்தான். இங்கிலாந்தில் ஓடும் பந்தயத்தில் முதல்வன். நீயூகாஸில் பின்பயர் என்பவனைத் தோற்கடித்திருக்கிறான். அவன் பெயர் திமோத்தி பாக்ஸ்டர்...அவனை நான் தீவிரமாய் அறிவேன். இச்சமயத்தில் அவன் ஒளிந்திருக்கும் இடமும் எனக்குத் தெரியும். மகிமை தங்கிய மிஸ்டர் ஜெயிலரை அவரிடமுள்ள இரண்டு ஆட்களை என்னோடு வரச் சொன்னால் அதிகமாய் ஒரு மணி நேரத்திற்குள் நான் அவனை இங்கே கொண்டு வந்து சேர்ப்பதாக ஒப்புக் கொள்ளுகிறேன்." என்றான் ஜென்ன்ஸன்.

இதன்மேல் ஜெயிலர் கூப்பிடப்பட்டான். அவன் உடனே வந்ததும் ஸர் வில்லியம் அவனுக்குத் தன்னைத் தெரியுமாவென்று கேட்டார். "ஆம், மகிமை தங்கியவரே. எனக்கு ஸர் வில்லியம் தார்ன்ஹில்லை நன்றாய்த் தெரியும். அவரைப் பற்றிக் கொஞ்சம் தெரிந்த ஒவ்வொருவனும் அவரைப் பற்றி அதிகம் தெரிந்து கொள்ள அவாக் கொள்ளுவான்." என்று ஜெயிலர் சொன்னான். "அப்படியானால் நல்லது என்னுடைய வேண்டுகோள் என்னவென்றால், இந்த மனிதனையும் உமமுடைய இரண்டு சேவகர்களையும் என் அதிகாரத்தின் மேல் ஒரு காரியமாய்ப் போக நீ அனுமதிக்க வேண்டும். நான் தேச அமைதிப் படையில் சேர்ந்தவனாதலால் நான் உனக்குக் கெடுதல் வராமல் பார்த்துக் கொள்ளுகிறேன்." என்று பாரனட் சொன்னார். "உங்களுடைய வாக்குறுதி போதும். நீங்கள் ஒரு கொடியில் எச்சரிக்கை செய்தால் இங்கிலாந்து முழுமையும் எங்கே மகிமை தங்கியவர் போக வேண்டுமென்கிறீரோ அங்கே அனுப்பலாம்" என்றான்.

ஜெயிலரின் இணக்கத்தின் மேல் ஜென்கின்ஸன் திமோத்தி பாக்ஸ்டரை கண்டு பிடிப்பதற்காக அனுப்பப்பட்டான். இதற்குள் எங்களுடைய கடைசிப் பையன் பில்லின் சாமார்த்தியத்தைக் கண்டு களித்தோம். அவன் அப்பொழுதான் உள்ளே வந்தான்....ஸர் வில்லியத்தின் மேல் ஏறி கழுத்தைக் கட்டிக் கொண்டு முத்தமிட்டான். அவனுடைய தாய் அவனுடைய சகஜமான பழக்கத்தை



உடனே கண்டிக்க ஆரம்பித்தான். ஆனால் புகழ் வாய்ந்த அவர் அவளைத் தடுத்தார். கிழிந்த துணியை உடுத்திக் கொண்டிருந்த போதிலும் அந்தக் குழந்தையை தன் துடையில் உட்கார வைத்துக் கொண்டு அவர் சொன்னார்." என்ன பில், நீ ஒரு குண்டுப் போக்கிரி. உன் பழைய சிநேகிதர் பர்க்கெலை ஞாபகம் வைத்திருக்கிறாயா. டிக் கூட, என் சத்திய சந்த சிப்பாய் நீ கூட இங்கே இருக்கிறாயா. நான் உங்களை மறக்க வில்லையென்பதை நீங்களே அறிவீர்கள்" இப்படிச் சொல்லிக் கொண்டு அவர் ஒவ்வொருவருக்கும ஒரு பெரிய துண்டம் ஜின்ஜர் பிரட் ரொட்டி கொடுத்தார். அதைப் பரிதாபமுள்ள பையன்கள் வயிறாரத் தின்றார்கள். அவர்களுக்கு அன்று காலையில் மிகவும் குறைந்த சாப்பாடுதான் கிடைத்தது. நாங்கள் இப்பொழுது சாப்பிட உட்கார்ந்தோம். சாப்பாடு மிகவும் குளிர்ந்து விட்டது. அதற்கு முன் என் கை இன்னும் வலியெடுத்துக்கொண்டிருந்ததால் ஸர் வில்லியம ஒரு மருந்து எழுதிக் கொடுத்தார். ஏனெனில் அவர் வைத்தியத்தின் அப்பியாசத்தைத் தனக்கு விளையாட்டுப் போக்காக வைத்திருந்தார். அந்த முறையில், சாதாரணத்திற்கு மேல் பாண்டித்திய முண்டு. இது அந்த ஊரில் வசிக்கும ஒரு வைத்தியருக்கு அனுப்பப்பட்டு என் கை சிகிச்சை செய்யப்பட்டது. எனக்கும் உடனே சௌகரியம் ஏற்பட்டது. சாப்பிடும் பொழுது ஜெயிலரே எங்களுக்கு வேண்டியவைகளை கவனிப்பதற்காக நின்று கொண்டிருந்தார். ஏனெனில் தன்னால் முடிந்த வரையில் எங்களுடைய விருந்தாளிக்கு எல்லா மரியாதையையும் செய்ய வேண்டுமென்று அவருடைய அபிப்பிராயம். ஆனால் நாங்கள் ஒன்றாய்ச் சாப்பிடும்முன் அவர் அண்ணன் மகனிடமிருந்து இன்னொரு தரம் தான் நேரே வந்து தன்னுடைய நிரபராதியாயிருக்கும் தன்மையையும் தன் கௌரவத்தையும் சரிவர நிலைநிறுத்துவதற்கு உத்தரவு கொடுக்க வேண்டுகோள் சமர்ப்பிக்கப்பட்டது. அந்த வேண்டுகோளை பாரனெட் அங்கீகரித்து மிஸ்டர் தார்ன்ஹில் நேரில் வருவிக்கும்படி தன் விருப்பத்தைத் தெரிவித்தார்.

## அத்தியாயம் 31

*முன் செய்த நன்மைகள் எதிர்பாராத வட்டியுடன் திருப்பிக் கொடுக்கப்படுவது.*

மிஸ்டர் தார்ன்ஹில், அவருக்கு வேண்டும் பொழுது கைகூடும் புன்சிரிப்புடன், உள்ளே வந்தார். தன் சித்தப்பனை ஆலிங்கனம் செய்யப் பிரயத்தனம் செய்தார். அவர் அதற்கு அருவெறுப்புடன் நிராகரிக்கப்பட்டார். "நடிப்பதெல்லாம், இப்பொழுது வேண்டாம், ஐயா. என் மனத்தை அணுக, கௌரவமென்கிற ஒரு வழிதான் இருக்கிறது. ஆனால் இங்கே பொய், சூது பிறரை ஹிம்சித்துக் கஷ்டப்படுத்துவது இவைகளின் பிணைக்கப்பட்ட திருஷ்டாந்தங்களைத்தான் நான் பார்க்கிறேன். இந்தப் பரிதாபமான மனிதருடன் நீ சிநேகம் பாவித்தது எனக்குத் தெரியும். ஏன் அவரை இவ்வளவு கடினமாக நடத்தினாய். அவர் செய்த உபசாரத்திற்குப் பதிலாக அவர் மகளை ஹீனமான வழியில் இழுத்துக்கொண்டு போய், அவளுடைய கற்பை அழித்து, அவரையும் சிறையில் வைத்தாய். ஒரு சமயம் அவர் அந்த அவமானத்தைக் கண்டித்ததற்காக அவர் மகனை நேரே எதிர்க்கப் பயந்து"—என்று பாரனட் கடும் கோபக் குறியோடு சொல்லிக் கொண்டிருக்கும் பொழுது அவர் தம்பி மகன் குறுக்கிட்டான். "என் சித்தப்பன். அவரே அடிக்கடி எச்சரிக்கை பண்ணின வார்த்தைகளாலேயே எதை நான் தவிர்க்க ஆள்பதமாயிற்றோ அதையே குற்றமாகச் சொல்லுவது சாத்தியமா; ஐயா?" "உன்னுடைய கோட்பாடு சரித்தான்," என்றார் ஸர் வில்லியம். "இந்த விஷயத்தில் நீ ஜாக்கிரதையாயும் நன்றாயும்தான் நடந்து கொண்டிருக்கிறாய். ஆனால் உன் தகப்பன் எப்படி செவ்வையாய்ச் செய்திருப்பானோ, அப்படிச் செய்யவில்லை. என் தமையனோ மரியாதையே உருவெடுத்தவன். ஆனால் நீயோ—ஆம், இந்த விஷயத்தில்



நீ முற்றும் சரியாய் நடந்து கொண்டிருக்கிறாய். அது என்னுடைய பூரணமான அங்கீகாரத்தைப் பெற்றது."

"என் நடத்தையில், மற்ற விஷயங்களும் நிந்திக்கத் தக்கவாறு இருக்காதென்று நான் நம்புகிறேன். ஐயா, நான் இந்த மனிதனுடைய மகளோடு சில பொது விளையாட்டு ஸ்தலங்களில் பார்க்கப்பட்டேன். ஆகையால், அடக்கமில்லாமையை, வம்புப் பேச்சு, அதற்கு கொடிய பெயரிட்டுக் கூப்பிட்டது. நான் அவளை வசப்படுத்தினதாகச் சொல்லிக் கொள்ளப்பட்டது. நான் அவள் தகப்பனாரை நேரில் பார்த்தேன். அவருடைய மனத்திருப்திக்கு அந்தச் சங்கதியை நிரூபிக்க சம்மதத்துடனிருந்தேன். அவர் என்னை அவமரியாதையோடும் வசவோடும் ஏற்றார். மற்றவைகளுக்கு அவர் இங்கிருக்கும் சங்கதிகளுக்கெல்லாம் என் வக்கீலும் காரியஸ்தனும் நன்றாகத் தெரியப்படுத்துவார்கள். ஏனெனில் என்னுடைய காரியங்களையெல்லாம் அவர்களிடத்தில் முழுமையும் ஒப்புவித்திருக்கிறேன். இவர் கடன்பட்டிருந்தால் அதைத் தீர்ப்பதற்கு முடியாமலோ, இஷ்டமில்லாமலோ இருந்தால் இந்த மாதிரி செய்யவேண்டியது அவர்களுடைய கடமை. சட்டத்திலுள்ள எவ்வளவு பரிகாரங்களோ அவைகளை அனுசரிப்பதில் ஒரு கஷ்டத்தையோ அநியாயத்தையோ, நான் பார்க்கவில்லை" என்றார் அவர் அண்ணன் மகன்.

"இவைகள் நீ சொல்லியவாறு இருந்தால், உன்னுடைய குற்றத்தில் மன்னிக்கக் கூடாதவை ஒன்றுமில்லை. உன்னுடைய நடவடிக்கை இந்தச் சீமானை கீழ்ச் சிப்பந்திகளால் கஷ்டப்படுத்தப்படாமல் அதிக கண்யத்துடனிருந்திருக்கலாமென்ற ஒரு விஷயத்தைத் தவிர மற்றப்படி என்ன இருந்த போதிலும் அது ஒப்புக் கொள்ளக்கூடியதாக இருக்கிறது" என்று ஸர் வில்லியம் கூறினார்.

"அவர் ஒரு தகவலும் மறுத்துச் சொல்ல முடியாது" என்றார் ஸ்குயர். "அவரை அப்படிச் செய்யும்படி நான் கட்டளையிடுகிறேன். என் வேலைக்காரர்களில் அநேகர் நான் சொல்வதை நிரூபிக்கத் தயாராயிருக்கிறார்கள்.

ஆகையால் ஐயா...'' என்று நான் மௌனமாயிருக்கிறதைப் பார்த்து இன்னும் தொடர்ந்து சொன்னான். ஏனெனில் அவர் சொல்வதை நான் மறுக்க முடியாததாயிருந்தது. ''ஆகையால் ஐயா, என்னுடைய குற்றமில்லாத்தன்மை இப்பொழுது ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. உங்களுடைய வேண்டுகோளினால் நான் இந்தச் சிமானை மற்றக் குற்றங்கள் எல்லாவற்றையும் மன்னிக்கத் தயாராயிருக்கிறேன். இருந்த போதிலும் உங்களுடைய மதிப்பில் என்னைக் குறைக்க இவருடைய பிரயத்தனங்கள் எனக்கு அடக்கமுடியாக் கோபத்தை உண்டு பண்ணுகிறது. இதுவும் இவருடைய மகன் என் உயிரை வாங்க நிஜமாகவே தயார்பண்ணிக் கொண்டிருந்த சமயத்தில் இதைச் செய்தார். இந்த விஷயத்தில் சட்டம் எப்படித் தொடருமோ அதைச் செய்ய நான் தீர்மானித்திருக்கிறேன். ஏனெனில் அது அப்பேர்க்கொத்த குற்றம். அவன் அனுப்பிய எதிர்ப்பை நான் வைத்திருக்கிறேன். அதை நிரூபிக்க இரண்டு சாக்ஷிகள் இருக்கிறார்கள். என் வேலைக்காரர்களில் ஒருவன் பயங்கரமாகக் காயப்படுத்தப்பட்டான். என்னுடைய சிற்றப்பன் என்னை வேண்டாமென்று சொன்னாலும், ஆனால் அவர் அப்படிச் சொல்லமாட்டாரென்று தெரியும், நான் பகிரங்கமாய் நியாயம் பிறக்கும்படி பார்ப்பேன். அதற்கு அவன் கஷ்டப்பட வேண்டியதுதான்.'' ''ஹே! ராக்ஷஸப் பயலே'' என்று என் மனைவி கத்தினாள். ''நீ வேண்டிய வரையில் இதுகாறும் உன் கோபத்தைத் தீர்த்துக் கொள்ளவில்லையா? என்னுடைய பரிதாபமுள்ள பையனும், அதற்காக உன்னுடைய ஹிம்ஸையை அனுபவிக்க வேண்டுமா? நன்மையைக் கைப்பற்றிய ஸர் வில்லியம் எங்களைக் காப்பாற்றுவாரென்று நம்புகிறேன். ஏனெனில் என் மகன் பிறந்த குழந்தையைப் போல் அவ்வளவு நிரபராதி. அவன் அப்படியேயென்று நான் நிச்சயமாகச் சொல்லுவேன். அவன் எப்பொழுதும் ஒரு மனிதனுக்கும் கெடுதல் செய்ததில்லை.''

''அம்மணி, அவனுடைய க்ஷேமத்தைப் பற்றி உங்களுடைய இச்சையானது என்னுடையதைவிட அதிக



மில்லை. ஆனால் அவனுடைய குற்றம் மிகவும் தெளிவாகத் தெரிகிறது என்று நான் வருத்தப்படுகிறேன். என் அண்ணன்மகன் ஊர்ஜிதமாய் நின்றால், இப்பொழுது ஜென்கின்ஸனும் ஜெயிலருடைய இரண்டு வேலைக்காரர்களுடைய வரவு அப்பொழுது எங்களுடைய கவனத்தை மாறச் செய்தது. அவர்கள் ஒரு உயரமான மனிதனைத் தள்ளிக்கொண்டு வந்தார்கள். அவன் கௌரவமான உடை உடுத்து என் மகளை தூக்கிக்கொண்டுபோன போக்கிரியைப் பற்றி ஏற்கெனவே கூறப்பட்ட அங்க ரூபத்திற்கு ஒத்த மனிதன். ''இங்கே இவனைக் கொண்டு வந்திருக்கிறோம். எப்பொழுதாவது டையர்ன் கழுவேற்றத்திற்கு அனுப்பக்கூடியவன் ஒருவன் இருந்தால், இவன் தான் அவன்'' என்று ஜென்கின்ஸன் கூறினார்.

எந்த நிமிஷம் மிஸ்டர் தார்ன்ஹில் கைதியையும் அவனைக் கைப்பொறுப்பில் கொண்டுவரும் ஜென்கின்ஸனையும் பார்த்ததுமே அவர் நடுக்கத்தோடு பின் வாங்குவது போல் தோன்றியது. அவருடைய முகம் தெரியப்படுத்தப்படக்கூடும் குற்றத்தால் வெளுத்தது. அவர் அங்கே விட்டுப் போயிருப்பார். ஆனால் அவருடைய அபிப்பிராயத்தை உணர்ந்த ஜென்கின்ஸன் அவரை நிறுத்தினான். ''நீர் பழைய பழக்கமான ஜென்கின்ஸன் பாக்ஸ்டர்.

இருவரையும் பார்க்க வெட்கப் படுகிறீரா? இப்படித்தான் எல்லாப் பெரிய மனிதர்களும் தங்கள் சிநேகிதர்களை மறந்துவிடுவது வழக்கம். நாங்கள் அப்படி உம்மை மறக்காமலிருக்கத் தீர்மானித்திருக்கிறோம்.'' ஸர். வில்லியம் பக்கத்தில் திரும்பி ''பெருமை தங்கியவரே, இங்கே நம்முடைய கைதி எல்லாவற்றையும் ஏற்கெனவே ஒப்புக்கொண்டு விட்டான். இவர்தான் மிகவும் பயங்கரமாகக் காயப்படுத்தப் பட்டதாகக் கூறப்பட்டவர். மிஸ்டர் தார்ன்ஹில்தான் இந்த விஷயத்தில் முதலில் அவனைப் பிரேரேபித்ததென்று அவன் சொல்லுகிறான் ஒரு சிமானைக் காணும்படி இப்பொழுது அவன் போட்டிருக்கும் உடைகளை அவர் கொடுத்து குதிரை பிட்டையும் அவரே தயார் செய்து கொடுத்தார். அவர்களுக்குள் ஒரு ஏற்பாடு செய்யப்பட்டது. அவன் அந்தச் சிறுசிமாட்டியை

ஒரு பந்தோபஸ்தான இடத்திற்கு கொண்டு போய்ச் சேர்த்துவிடுகிறது. அவனை அங்கே கட்டாயப்படுத்தி பயமுறுத்துகிறது. ஆனால் மிஸ்டர் தார்ன்ஹில் தற்செயலாய் இதற்குள் அங்கே வந்து அவனை விடுவிப்பது. அவர்கள் கொஞ்ச நேரம் ஒருவருக் கொருவர் சண்டை செய்வது. பிறகு அவன் ஓடிவிடுவது. இவ்வகை ஏற்பாட்டினால் மிஸ்டர் தார்ன்ஹில் அவனை விடுவித்தார் என்கிற வியாஜத்தால், அவளுடைய காதலைச் சம்பாதிக்க அதிக ஆஸ்பதம் ஏற்படுமென்று உத்தேசம்." ஸர். வில்லியம் தன்னுடைய அண்ணன் மகனால் அடிக்கடி போட்டுக் கொள்ளப்பட்ட கோட்டாக அவர் ஞாபகத்திற்கு வந்தது. மற்றவைகளை யெல்லாம் கைதியே அதிக சுற்றுமுற்றான தகவலினால் ஊர்ஜிதப்படுத்தினான். முடிவில் மிஸ்டர் தார்ன்ஹில் ஒரு காலத்தில் இரண்டு சகோதரிகளிடத்திலும் காதலுடன் கூடியதாகத் தன்னிடம் அடிக்கடி கூறியதாகவும் சொன்னான்.

"தெய்வமே! என் மார்பில் என்ன விஷப் பாம்பை போஷித்து வந்தேன்" என்று ஸர் வில்லியம் கூறினார். பகிரங்க நியாயத்தில் எவ்வளவு ஆஸக்தியுடையவனாகத் தோன்றினான். ஆனால் அவன் அதை அடைவான். மிஸ்டர் ஜெயிலர் அவனைக் கைதியாக்கும். ஆனால் கில்லும். அவனைக் கைது செய்ய சட்டத்தில் ஒப்புக்கொள்ளும் ருஜு இல்லை யென்று நான் ஐயமுறுகிறேன்."

இதன்மேல் மிஸ்டர் தார்ன்ஹில் மிக வணக்கத்துடன், இப்படி விவஸ்தைகெட்ட இரண்டு துஷ்டர்கள் தமக்கு எதிராக சாக்ஷியமாக ஒப்புக்கொள்ளக் கூடாதென்று வேண்டினார். வேண்டுமென்றால் அவருடைய வேலைக்காரர்கள் விசாரிக்கப்படலா மென்றார். "உன் வேலைக்காரர்களா" என்று ஸர் வில்லியம் பதிலுரைத்தார். "கொடியவனே இனிமேல், உன்னதென்று சொல்லாதே. ஆனால் வா, அந்தப் பயல்கள் என்ன சொல்லுகிறார்களென்பதை நாம் கேட்போம்." அவருடைய பட்லர் கூப்பிடப்பட்டான்.

அந்த பட்லர் உள்ளே வந்ததும், அவன் தன்னுடைய முன் யஜமானின் பார்வையிலிருந்து அவருடைய அதிகார



மெல்லாம் அப்பொழுது போய்விட்டதென்று கண்டு கொண்டான். ஸர் வில்லியம் ஆக்ரோஷத்தோடு கேட்டார்.

"உன் யஜமானனையும், அவனுடைய உடுப்புகளையும் போட்டுக்கொண் டிருக்கிறவனையும் சேர்த்து உறவாடிப் பார்த்து இருக்கிறாயாவென்று எனக்குச் சொல்." "ஆம், கனம் பொருந்தியவருக்கு வந்தனம். ஆயிரம் தடவை பார்த்திருக்கிறேன். அந்த மனிதன் இவருக்கு அவருடைய மோட்டிகளைக் கொண்டுவருவது" என்றான். "என்ன என் முகத்திற் கெதிராகவேயா?" என்று சின்ன மிஸ்டர் தார்ன்ஹில் குறுக்கிட்டார். "ஆம், எந்த மனிதன் முகத்திற்கு முன்னாலும் கூட, உண்மையைச் சொல்ல; மிஸ்டர் தார்ன்ஹில், நான் உம்மை நேசிக்கவுமில்லை; உம்மிடத்தில் இஷ்டமுமில்லை. இப்பொழுது என் மனத்திலிருப்பதை உமக்குச் சொன்னால், எனக்கு அதனால் கவலையில்லை" என்றான் பட்லர். "இப்பொழுது என்னைப் பற்றி ஏதாவது தெரியுமாவென்று நம்முடைய கனம் பொருந்தியவரிடம் சொல்" என்றான் ஜென்கின்ஸன். "உன்னைப் பற்றியும் ஏதாவது, நன்மையாக எனக்குத் தெரியுமென்று நான் சொல்லுவதற்கு ஒன்றுமில்லை" என்றான் பட்லர். "அந்தச் சிமானின் மகள் நம் வீட்டிற்கு ஏமாற்றிக்கொண்டு வரப்பட்டாளே, அந்த இரவில் அவர்களில் நீ ஒருவன்" என்று மேலும் சொன்னான். "அப்படி யிருக்க நீ உன்னுடைய குற்றமின்மையை நிரூபிக்க நீ ஒரு வெகு நல்ல சாக்ஷியைக் கொண்டு வந்திருக்கிறாய். உலகத்திற்கே நீ ஒரு வழு. இப்பேர்க்கொத்த போக்கிரிகளுடன் சேருவதா? ஆனால், மிஸ்டர் பட்லர், இந்த மனிதன்தான் அந்தக் கிழட்டு சிமானின் மகளைக் கொண்டு வந்தவன் என்று நீ எனக்குச் சொல்லுகிறாய் அல்லவா?" என்று விசாரணையைத் தொடர்ந்து கேட்டார்.

"இல்லை, பெருமை தங்கியவருக்கு வந்தனம். அவர் அவளைக் கொண்டு வரவில்லை. ஏனெனில், ஸ்குயர்தானே அந்த அலுவலை மேற்கொண்டார். ஆனால் இவன் அவர்களை போலி விவாகம் செய்துவைத்த புரோகிதனா

அழைத்து வந்தான்" என்று பட்லர் பதிலுரைத்தான். "அது நிஜம். நிஜமே. நான் அதை மறுக்க முடியாது. அந்த உத்தியோகம் எனக்கு அவரால் கொடுக்கப்பட்டது. என் மனம் குழம்ப நான் அதை ஒப்புக் கொள்ளுகிறேன்" என்று ஜென்கின்ஸன் கூறினான்.

"நல்ல தெய்வமே" என்று கௌரவம் பொருந்திய பாரனெட் உரக்கக் கத்தினர். "எப்படி அவனுடைய போக்கிரித்தனத்தின் ஒவ்வொரு புதிய தகவல்கள் என்னைத் திடுக்கிடச் செய்கின்றன! அவனுடைய குற்றமெல்லாம் இப்பொழுது வெட்டவெளிச்சமாய் இருக்கின்றன. இப்பொழுது அவன் நடத்தும் பிராஸிக்யூஷனும் கடுங்கோன்மையாலும் பயங்காளித்தனத்தாலும் சொன்னதைக் கேட்காத கோபத்தினாலுமே தூண்டப்பட்டது என்று எனக்குப் புலப்படுகிறது. என் வேண்டுகோளால் மிஸ்டர் ஜெயிலர் இப்பொழுது உன்னிடம் கைதியாயிருக்கும் இந்த வாலிப ஆபிஸரை விடுவியும். அதனால் சம்பவிக்கும் மற்றச் சங்கதிகளுக்கு நான் உத்தரவாதி. இவனை ஜெயிலுக்கு அனுப்பிய அந்த மாஜிஸ்ட்ரேட் என் சிநேகிதர். அவரிடம் இந்தச் சங்கதியை சரியான முறையில் விளக்க என்னுடைய அலுவலாக நான் வைத்துக் கொள்ளுவேன். ஆனால் எங்கே அந்தப் பரிதாபமான நிலையிலிருக்கும் சிறிய சீமாட்டி? அவள் இந்தக் கொடியவனை எதிர்க்க முன் வரட்டும். என்ன சாமர்த்தியத்தால் இவன் அவளை இணங்கச் செய்தானென்று அறிய விரும்புகிறேன். அவளை வரச்சொல்லி வேண்டுங்கள். அவள் எங்கே இருக்கிறாள்?"

"ஆஹா, ஐயா, அந்தக் கேள்வி என் மனதைப் பிளக்கிறது. நான் ஒரு சமயத்தில் ஒரு பெண்ணை உடையவனாக மிகவும் சந்தோஷத்தோடிருந்தேன். ஆனால் அவளுடைய கஷ்டங்கள்—இன்னொரு தடங்கல் இங்கே என்னை நிறுத்திவிட்டது. மிஸ்டர் தார்ன்ஹில்லுக்கு அடுத்த நாள் விவாகம் செய்விக்கப்படும் மிஸ் அரபெல்லா வில்மோட் அங்கே வந்தாள். தன் முன்னால், ஸர் வில்லியமும் அவருடைய அண்ணன் மகளையும் இங்கே பார்க்க அவளுடைய ஆச்சரியம் நிகரில்லாமலிருந்தது. எனெ



னில், அவளுடைய வரவு அங்கே அகஸ்மாத்தானது. அவளும் அவளுடைய கிழத் தகப்பனும் அந்த ஊரின் வழியாக அவளுடைய மாமியின் வீட்டிற்குப் போய்க் கொண்டிருந்தார்கள். ஏனெனில் அவள் மிஸ்டர் தார்ன்ஹில்லோடு தன்னுடைய ருது சாந்திக் கல்யாணத்தை அவள் வீட்டிலேயே நடத்தவேண்டுமென்று வற்புறுத்தினாள். ஆனால் சிற்றுண்டிக்காக தாமதித்து அந்த ஊரின் அடுத்தகோடியிலுள்ள சத்திரத்தில் அவர்கள் தங்கினார்கள். அதிலிருந்து ஜன்னல் வழியாய் சிறிய சீமாட்டி என் சின்னப்பிள்ளைகளில் ஒருவன் தெருவில் விளையாடிக்கொண்டிருப்பதைக் கவனித்தாள். உடனே ஒரு காலாளை அனுப்பி அந்தக் குழந்தையைத் தன்னிடம் கொண்டு வரும்படி செய்து, அவள் அவனிடமிருந்து எங்களுடைய துர்ப்பாக்கியங்களின் விவரங்களில் சிலவற்றைத் தெரிந்து கொண்டாள். ஆனால் வாலிப மிஸ்டர் தார்ன்ஹில் இதற்கெல்லாம் காரணமென்று தெரிவிக்கப் படவில்லை. அவள் தகப்பனார் ஒரு சிறையில்போய் எங்களைப் பார்ப்பதில் அசௌகர்யத்தை நினைத்து பல ஆக்ஷேபணைகள் செய்தும் அவைகள் பிரயோஜனமற்றவைகளாக ஆயின. அவள் அந்தக் குழந்தையை தன்னைக் கூட்டிக்கொண்டுபோகச் சொல்லி அவன் கூட்டிக்கொண்டு வரப்பட்டாள். இப்படித்தான் எதிர்பார்க்காத ஒரு தருணத்தில் அவள் எங்களைத் திடீரெனச் சந்தித்தாள். நான் இப்போர்க்கொத்த எதிர்பாராத சந்திப்புகளைப் பற்றி யோசிக்காமல் மேலே போக முடியாது. அவைகள் தினம் நடைபெற்ற போதிலும், நம்முடைய ஆச்சரியத்தை சில விசேஷ சமயங்களில் தவிர மற்றச் சமயங்களில் அவைகள் தூண்டுவதில்லை. நம்முடைய வாழ்நாளில் சுகம் சௌகரியம் ஒவ்வொன்றும் எதிர்பாராத வரவினாலல்லவோ நாம் அடைகிறோம். நாம் உண்டு உடுத்துவதற்குமுன் எவ்வளவு எதிர்பாராத சம்பவங்கள் ஒன்று சேரவேண்டும். குடியானவன் வேலை செய்ய உட்படவேண்டும். மழை பெய்ய வேண்டும். காற்று கப்பலின் பாய்மரத்தில் நிரம்ப வேண்டும். இல்லையெனில், கணக்கில்லாதவர்கள் வழக்கமாகப் பெருமைகளைப் பெற மாட்டார்கள்.

நாங்கள் எல்லோரும் கொஞ்ச நேரம் பேசாமலிருந்தோம். என்னுடைய சிலை இப் பெயரினால் தான் இந்தச் சிறு சீமாட்டியை நான் வழக்கமாய் அழைக்கிறது. அவளுடைய முகத்தில் பரிதாபமும் ஆச்சரியமும் சேர்ந்து தோன்றியது. அதனால் அவளுடைய அழகுக்கு நகாசு கொடுத்தாற் போல் இருந்தது. அவள், அவர் எங்களுக்கு உதவி புரிய வந்தவராக எண்ணினளே ஒழிய எங்களைக் கஷ்டப்படுத்துவதாக நினைக்கவில்லை. "நல்லது, என் பிரியமுள்ள தார்ன்ஹில், என்னையில்லாமல் நீ இங்கே வந்ததிலும், நம்மிருவருக்கும் மிகவும் பிரியமான குடும்பத்தின் கால நிலையைச் சொல்லாமலிருந்ததற்கும் நான் அதை கொஞ்சம் அன்பு குறைவாக பாராட்டுகிறேன். நான் எப்பொழுதும் போற்றுப், மரியாதைக்கிடமான என் வயோதிகக் குருவின் உதவிககாக நானும் உங்களைப் போலுள்ள அவாக் கொள்ளுவேனென்று உமக்குத் தெரியும். ஆனால் உங்கள் சிற்றப்பனைப் போல் ரகசியமாகவே நன்மை செய்வதில் இஷ்டமுள்ளவரென்று நான் தெரிந்து கொண்டேன்" என்றாள் அவள்.

"அவனா நன்மை செய்வதில் சந்தோஷிக்கிறவன்?" என்று ஸர் வில்லியம் குறுக்கிட்டுச் சொன்னார்: "இல்லை என் கண்மணி, அவனுடைய களிப்புக்கள் அவனைப் போல் இழிவானவைகள். அம்மணி இவ்வுலகில், இது வரையில் மனிதப் பூண்டை, அவமதிப்புக்குள்ளாக்கின அயோக்கியர்களில் எவ்வளவு அதிகமாய் ஒருவன் இருக்க முடியுமோ, இவனை அப்பேர்க்கொத்தவனாக நீ எண்ணிக்கொள். ஒரு கொடும்பாவி, இந்தப்பரிதாபமானமனிதனின் மகளை ஏமாற்றிவிட்டு, அவளுடைய தங்கையின் கற்பை அழிக்க சூழ்ச்சி செய்து, தகப்பனைச் சிறையில் தள்ளி மூத்த மகனை விலங்கில் மாட்டி இருக்கிறான். ஏனெனில் அவன் அவனை மோசம் செய்தவனை எதிர்க்கத் தைரியம் கொண்டதற்காக. அம்மணி, அப்பேர்க்கொத்த கொடிய மிருகத்தின் ஆலிங்கனத்திலிருந்து தப்பினதற்காக உன்னை இப்பொழுது பாராட்ட எனக்கு உத்தரவு கொடு" என்று முடித்தார்.



"ஓ நன்மைகளே, எப்படி நான் ஏமாற்றப்பட்டேன்?
மிஸ்டர் தார்ன்ஹில் இந்தச் சீமானின் மூத்த மகன்
காப்டின் பிரிம்ரோஸ் புதிதாய் விவாகம் செய்து கொண்டு
சீமாட்டியோடு அமெரிக்கா போய்விட்டாரென்று ஊர்
ஜிதமாய் என்னிடம் சொன்னார்" என்று அந்த அழகு
வாய்ந்த பெண் சொன்னாள். "என் மிகவும் இனிமையான
குமரியே" என்று என் மனைவி சொன்னாள். "அவன் உனக்
குப் பொய்யைத் தவிர வேறொன்றும் சொல்லவில்லை. என்
மகன் ஜார்ஜ் இந்த ராஜ்யத்தை விட்டு போகவுமில்லை.
அவனுக்கு எப்பொழுதும் விவாகமுமாகவில்லை. நீ அவ
னைக் கைவிட்ட போதிலும் அவன் எப்பொழுதும் உன்னை
அவ்வளவு நன்றாக நேசித்ததால் வேறொருத்தியைச் சிந்தனை
யில் கொள்ளவில்லை. உன் நிமித்தம் தான் மணம் செய்யாது
தனியாக இருந்து இறப்பேனென்று அவன் சொல்லிக்
கொண்டிருந்ததை நான் கேட்டிருக்கிறேன்." அவள்
அதன் பிறகு அவள் மகளின் களங்கமில்லாத் தன்மையை
விவரித்தாள். மிஸ்டர் தார்ன்ஹில்லுடன் அவன் தனிச்
சண்டைக்குக் கூப்பிட்டதின் மர்மத்தை சரியான வழியில்
எடுத்து விளக்கினாள். அதிலிருந்து அவள் ஸ்குயரும்
விடனாயிருப்பதையும் அவருடைய ஏமாற்றும் விவாகங்
களைப் பற்றியும் ஒரு வேகமான பாய்ச்சலில் விவரித்து
அவருடைய பயங்காளித்தனத்தைப் பற்றி மிகவும் இழி
வான சொற்பொழிவு செய்தாள்.

"நல்ல தெய்வமே! நாசமடைவதற்கு எவ்வளவு சமீபத்தில், வந்திருந்தேன்! ஆனால் அதை விட்டுத் தப்பினதில் என்னுடைய சந்தோஷம் எவ்வளவு அதிகம்! இந்தச் சீமான எனக்குப் பதினாயிரம் பொய்களை சொல்லியிருக்கிறார். நான் கௌரவித்த ஒரே மனிதனுக்கு நான் செய்திருக்கும் வாக்குத்தத்தம் இனிமேல் கட்டுப்படுத்தாது. ஏனெனில், அவர் நம்பிக்கை மோசம் செய்தாரென்று சொல்லி அவர் சாமர்த்தியமாய் கடைசியில் என் மனதைத் திருப்பிவிட்டார். அவருடைய பொய்களினாலெல்லாம் வீரமும் காருண்யமும் ஒன்றுக்கொன்று தாழாதவரை நான் தள்ளிவிடக் கற்பிக்கப்பட்டேன்" என்று மிஸ் வில்மோட் சொன்னாள்.

இதற்குள் என் மகன் நியாயஸ்தலத்தின் கட்டுகளிலிருந்து விடுவிக்கப்பட்டான். எந்த மனிதன் இவனால் காயப்படுத்தப்பட்டதாகச் சொன்னார்களோ அவன் பொய்யாக காயப்படுத்தப் பட்டதாகச் சொல்லிக் கொண்டானென்று கண்டுபிடிக்கப்பட்டது. ஜேன்கின்ஸனும், என் மகனைத் தயாரிப்பதில் ஆஸக்தி யுடையவனாகி அவன் தலைமயிரை சீவிவிட்டு அவனுக்கு கௌரவமாய்த் தோன்ற என்னென்ன வேண்டுமோ அவைகளை அவன் கொடுத்தான். அவன் இப்பொழுது கருப்பு உடையில் அழகாக உடுத்தவனாய் உள்ளே நுழைந்தான். வீண் பெருமையில்லாத (ஏனெனில் நான் அதைத் தாண்டியவன்.) அவன் பட்டாள உடை உடுத்து எவ்வளவு அழகாக ஒருவன் தோன்ற முடியுமோ அப்படித் தோன்றினான். அவன் நுழையும் பொழுதே, மிஸ் வில்மோட்டுக்கு மரியாதையுடன் கட்டியிருந்து கொண்டே வந்தனம் செய்தான். ஏனெனில் அவன் தாயாரின் வாக்குச்சாமர்த்தியத்தினால் அவன் விஷயத்தில் ஏற்பட்ட மாறுதல் அவனுக்கு இன்னும் தெரியாது. ஆனால் அவன் காதலி உடனே முகம் சிவந்து தான் அவனால் மன்னிக்கப்பட வேண்டுமென்கிற ஆவலை கூட்டம் இருப்பதினால் உண்டான கூச்சம்கூட அடக்கச் செய்ய முடியவில்லை. அவளுடைய கண்ணீர், அவளுடைய பார்வைகள், எல்லாம் தான் முன் செய்த வாக்குத்தத்தத்தை மறந்ததும் ஒரு ஏமாற்றுக்காரனால் ஏமாற்றப்படும்படி விட்டுவிட்டதும அவளுடைய மனதில் நிஜ பரிதவிப்புக்களை வெளியாக்க ஒன்று கூடின. என் மகன் அவளுடைய மன இரக்கத்தைக் கண்டு ஆச்சரியப்படுகிறவனாகப் புலப்பட்டான். அதை உண்மையென்று கொஞ்சம்கூட அவனால் நம்ப முடியவில்லை. "நிஜமாகவேயா அம்மணி?" என்று கூவினான். "இது, ஏதோ ஏமாற்றம்போல் தோன்றுகிறது. நான் இதற்கெல்லாம் தகுதி யுடையவனல்லவே. இப்படி கடாக்ஷித்தால் அளவில்லாச் சந்தோஷமே." "இல்லை, ஐயா, நான் ஏமாற்றப்பட்டேன். ஹீனமான வழியில் ஏமாற்றப்பட்டேன். வேறொன்றும் என்னுடைய வாக்குத்தத்தத்திற்கு விரோதமாக என்னை செய்திருக்க முடியாது. உனக்கு என்னுடைய நேசம் தெரியும்.



உனக்கு வெகுநாளாய்த் தெரியும். ஆனால் நான் செய்ததை மறந்துவிடு. நீ ஒரு காலத்தில் மாறாமலிருக்கும் என்னுடைய மனப்பூர்வமான ஆர்த்த சபதங்களை கொடுக்கப் பெற்றாய். இப்பொழுது அவைகளைத் திருப்பக் கொடுக்கிறேன். உன்னுடைய அரபெல்லா உன்னுடையவளாயில்லாமலிருந்தால் அவள் வேறொருவனுடையவளுமல்ல" என்று அவள் சொன்னாள்.

"உன் தகப்பனிடத்தில் எனக்கு ஏதாவது செல்வாக்கிருந்தால், நீ வேறு எவருடையவளுமல்ல" என்று ஸர் வில்லியம் கூறினார்.

இந்தக் குறிப்பை என் மகன் மோஸஸ் அறிந்து கொண்டு உடனே அந்த வயோதிக சீமான் தங்கியிருக்கும் ஹோட்டலுக்கு அவருக்கு சம்பவித்த ஒவ்வொரு சமாசாரத்தையும் சொல்லுவதற்கு ஓடினான். ஆனால் இதற்குள் அந்த ஸ்குயர்தான் எல்லா விததிலும் மடக்கப் பட்டவனாக அறிந்து வீண் புகழ்ச்சி செய்வதினாலோ ஏமாற்றுதலினாலோ ஒரு விதமான கரையேற்றத்தைப் பார்க்காதவனாய், தன்னைத் தொடரும் சத்ருக்களின் மேல் திரும்பிப் பார்த்து அவர்களை எதிர்ப்பதே யுக்தமான வழியென்று தீர்மானத்திற்கு வந்தான். இப்படி எல்லா அவமானத்தையும் தூரே தள்ளி அவன் பஹிரங்கமாகவும் பழகி, வலுத்த போக்கிரி போல் முன் வந்தான். நான் இங்கே ஒருவிதமான நியாயத்தையும் எதிர்பார்க்கக் கூடாதவனாகக் காண்கிறேன். ஆனால் அது எனக்கு நடத்தப்பட வேண்டுமென்று நான் கட்டாயப்படுத்துகிறேன்" என்று சொல்லி அவன் ஸர் வில்லியம் பக்கம் திரும்பி மேலச் சொன்னான்: "உம்முடைய தயவில் நான் இனிமேல் ஒரு ஏழை ஜீவனம்சக்காரனாக இல்லை என்று நீர் தெரிந்து கொள்ளும். அப்படி இருப்பதை நான் நிந்திக்கிறேன். மிஸ் வில்மோட்டின் சொத்துக்கள் என் வசம் வருவதை ஒன்றும் நிறுத்த முடியாது. அது அவளுடைய தகப்பனுடைய பிரயத்தனத்தினால் அநேகமாய ஏராளமானது. அதற்கு அவள் தகப்பனுக்கு வந்தனம் அளிக்கிறேன், வக்கீலைகளும் அவளுடைய ஸ்திரீதனத்திற்காக ஒரு பாண்டும் கையெழுத்தாகி

என் வசத்திலிருக்கின்றன. அவளுடைய தனமே ஒழிய அவளுடைய அழகுக்காக இந்த விவாகத்தை விரும்பவில்லை. ஒன்றை நான் வசப்படுத்தியாய் விட்டதால் மற்றொன்றை யார் வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளட்டும்" என்றான்.

இது ஒரு பயங்கரமான அடி. ஸர் வில்லியம் அவனுடைய கோட்பாட்டின் நியாயத்தை உணர்ந்தார். ஏனெனில், விவாக ஷரத்துக்களை வரைவதற்கு தானே காரணமாக இருந்தார். மிஸ் வில்மோட் தன்னுடைய ஐசுவரியமெல்லாம் மீட்கமுடியாமல் தொலைந்துபோய் விட்டதெனத் தெரிந்துகொண்டு என் மகனிடம் திரும்பி தன் தனத்தின் கஷ்டம், அவனுக்குத் தன்னிடத்தில் மதிப்பைக் குறைக்கிறதோ? எனக்கு ஐசுவரியம் கைவிட்டுப் போனாலும் என்னையாவது நான் சமர்ப்பிக்கத் தயாராயிருக்கிறேன்" என்றாள்.

"அதேதான், உண்மையில் நீ எப்பொழுதும் பாக்கியில்லாமல் கொடுக்கக்கூடியதாய் இருந்தது. எது எப்படியிருந்தபோதிலும், ஏற்றுக் கொள்ளக்கூடியதாக எப்பொழுதும் நான் நினைத்ததெல்லாம் அதுவே. என் அபெல்லாவே, சௌக்கியத்தைக் கொடுக்கக் கூடிய எல்லாவற்றாலும் நான் வற்புறுத்திச் சொல்லுகிறேன், உனக்கு தனமில்லாமலிருப்பது என்னுடைய மதுரமான குட்டிக்கு என்னுடைய உண்மைக் காதலை நிரூபிக்கச் செய்கிறதாய் இக்கணமே என்னுடைய களிப்பை அதிகரிக்கச் செய்கிறது" என்று அவளுடைய உண்மைக் காதலன் சொன்னான்.

மிஸ்டர் வில்மோட் அப்பொழுது நுழைந்தார். அவர் தன் மகள் அப்பொழுது ஆபததிலிருந்து தப்புவிக்கப் பட்டது பற்றி மிகவும் சந்தோஷமடைந்தார். உடனே அந்தச் சம்பந்தத்தை தவிர்க்க ஒப்புக் கொண்டார். ஆனால் அவருடைய ஐசுவரியம் மிஸ்டர் தார்ன்ஹில்லுக்கு பாண்டில் எழுதிக் கொடுக்கப்பட்டது. அதை அவர் திருப்பிக் கொடுக்க மாட்டாரென்று தெரிந்துகொண்டு அவருடைய மன வருத்தம் சொல்லி முடியாது. தன்னுடைய சொத்துக்களையெல்லாம் தனமில்லா ஒருவனை தனவந்தனுக்கப்



போகிறதென்று கண்டார். அவர், அவன் போக்கிரியாய் இருக்கிறதை சகிப்பார். ஆனால் தன் பெண்ணின் ஸ்திரீதனத்திற்குள்ள தனத்தை இழப்பது அவருக்குக் கடுக்காய் தின்றது போல் இருந்தது. அதனால் அவர் கொஞ்சக் காலம் மிகவும் தொந்தரவான யோசனைகளில் ஆழ்ந்திருந்தார். ஸர் வில்லியம் அவருடைய கவலையைக் குறைக்க முயன்றார். "உம்முடைய தற்கால ஏமாற்றம் எனக்கு முழுமையும் அதிருப்தியை அளிக்கவில்லை, என்று நான் ஒப்புக் கொள்ள வேண்டுமா?" என்றார் அவர். "உம்முடைய மிதமிஞ்சின பொருளாசை இப்பொழுது சரியாய்த் தண்டிக்கப் பட்டது. இந்தச் சிறிய சீமாட்டி பணக்காரியாய் இல்லாவிட்டாலும் அவளுக்குத் திருப்தி அடையச் செய்யக்கூடிய அவ்வளவு பொருளிருக்கிறது. இங்கே ஒரு சத்திய சந்தனான வாலிப ஸோல்ஜரைப் பார்க்கிறீர். அவன் அவளைப் பொருளில்லாமல் ஒப்புக் கொள்ளுகிறேனென்கிறான். அவர்கள் வெகு காலமாக ஒருவரை ஒருவர் நேசித்திருக்கிறார்கள். அவனுடைய தகப்பனாரிடமுள்ள என் சிநேகிதத்திற்குத் தகுந்தபடி அவனுடைய முன்னேற்றத்தில் என்னுடைய கருத்து இல்லாமல் இருக்காது. உம்மை ஏமாற்றும் அந்தப் பேராசையை விட்டுவிடும். உம்முடைய அங்கீகாரத்தை எதிர் பார்க்கும் அந்த சுகீகளை ஒரே தீர்மானமாய் ஒப்புக்கொள்ளும்."

"ஸர் வில்லியம், அவளுடைய மனப் போக்கை நான் எப்பொழுதும் பலாத்காரமாய் வேறு வழியில் திருப்பினதில்லையென்று நீர் தீர்மானமாய் அறிவீர். இப்போதும் அப்படிச் செய்யப் போவதில்லை. அவள் இந்த வாலிபச் சீமானை இன்னும் நேசித்துக் கொண்டிருந்தால், என் முழு அங்கீகாரத்தோடு அவள் அவனை அடையட்டும். தெய்வத்திற்கு வந்தனம் அளிப்போம். இன்னும் கொஞ்சம் பொருளிருக்கிறது. உம்முடைய வாக்களிப்பு அதைக் கொஞ்சம் அதிகப்படுத்தும். என்னுடைய பழைய சிநேகிதர் (என்னைக் குறித்துக் காட்டி) அவருடைய ஐசுவரியத்தை எப்பொழுதாவது திரும்பக் கிடைக்கப் பெற்றால், என் பெண் பேரில் ஆறாயிரம் பவுன்கள் எழுதி வைப்பதாக அவர் வாக்களிக்கட்டும். இன்று இரவிலேயே

அவர்களைச் சேர்க்க நான் தயாராயிருக்கிறேன்" என்று வயோதிகச் சீமான் சொன்னார்.

இனி அந்த வாலிப தம்பதிகளை களிக்கச் செய்வது என் பொறுப்பில் இருந்தபடியால், நான் உடனே அவர் வேண்டிய ஏற்பாட்டைச் செய்ய ஒப்புக்கொண்டேன். அது என்னைப் போல் ஒன்றும் எதிர்பார்க்கக் கூடாதவனுக்கு ஒரு பெரிய உபகாரமல்ல. நாங்கள் இதனால், அவர்கள் இருவரும் ஒருவரை யொருவர் பாய்ந்து ஓடி வந்து கட்டிக் கொண்டதைப் பார்த்து சந்தோஷித்தோம். "என்னுடைய எல்லா துர்ப்பாக்கியங்களுக்கப்புறம் இப்படி பரிசடைவதற்கு" என்றான் என் மகன் ஜார்ஜ். "நிச்சயமாய், இது நான் எப்பொழுதாவது எதிர்பார்க்கக் கூடியதைவிட அதிகமே, நன்மையே எல்லாம், ஒன்று சேர்ந்ததை நான் அடைவதென்பது; அதுவும் அப்பேர்கொத்த கஷ்டகாலம் நடுவில் சம்பவித்த பிற்பாடு, என்னுடைய மிகவும் ஆர்வமான இஷ்டங்களும் இவ்வளவு தூரம் போகவில்லை." "ஆம், என் ஜார்ஜ்," என்று அவனுடைய அழகிய வதூ சொன்னாள். "இப்பொழுதும் அந்த நிகிருஷ்டன் என் ஐசுவரியத்தை எடுத்துக் கொள்ளட்டும். நீ அதில்லாமல் சந்தோஷமாய் இருக்கிறதால் நானும் அப்படியே. என்ன ஆச்சரியம்! மனிதர்களில் நிகிருஷ்டமானவனைத் தள்ளிவிட்டு மிகவும் அன்போடு கூடியவனையும் மிகவும் சிறந்தவனையும் மாற்றிக் கொண்டேன். அவன் என் பொருளை அனுபவிக்கட்டும். நான் இப்பொழுது வறுமையிலும் சுகமாயிருப்பேன்." "நான் உனக்கு வாக்களிக்கிறேன்" என்று அட்டஹாஸ பரிகாசச் சிரிப்புடன் ஸ்குயர் சொன்னார்: "நீ எதைத் தள்ளிவிட்டாயோ அதை வைத்துக் கொண்டு நான் சுகமாய் இருப்பேன்."

"நில்லு, நில்லு, ஐயா," என்று ஜென்கின்ஸன் கத்தினான். "அந்த லாபத்தை அடைய இன்னும் இரண்டு வார்த்தைகள் பாக்கியிருக்கின்றன. அந்தச் சீமாட்டியின் தனத்தில், ஐயா, நீ, ஒரு காசு கூடத் தொட முடியாது. நமஸ்காரம். உங்கள் மகாகனம் பொருந்தியவருக்கு" என்று ஸர் வில்லியத்தினிடம் சொன்னான். "இந்த ஸ்குயர் ஏற்கெனவே வேறொருத்திக்கு விவாகமாகப் பட்டிருக்



தால், அவர் இந்தச் சீமாட்டியின் ஐசுவரியத்தை அடைய முடியுமா?" "நீ என்னமாக அப்பேர்க்கொத்த, வெட்ட வெளிச்சமான கேள்வியைக் கேட்கலாம்? சந்தேகமில்லாமல் அவன் அடையமாட்டான்" என்று பாரொனெட் பதிலுரைத்தார். "அதற்காக நான் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளுகிறேன். நானும் இந்தச் சீமானும் வெகு நாளான வேட்டைக் கோஷ்டியைச் சேர்ந்தவர்களாகையால், அவரிடத்தில் எனக்கு சிநேகமுண்டு. நான் அவரை நன்றாக நேசிக்கிறபடியால், அவருடைய உடன்படிக்கை இந்தப் புகையிலைக் குழாய் விலைகூடப் பெறாது என்று நான் நிர்மானமாகச் சொல்லுவேன். ஏனெனில் அவர் ஏற்கெனவே விவாகமானவர்" என்று ஜென்கின்ஸன் சொன்னான்.

"நீ போக்கிரியல்லவா? அப்படிப் பொய் சொல்லுகிறாய்" என்று ஸ்குயர் சொன்னார். இந்த அவமதிப்பினால் தூண்டப்பட்டவர் போலிருந்தார். "நான் ஒரு பெண்ணையும் எப்பொழுதும் சட்ட பூர்வமாய் விவாகம் செய்து கொள்ளவில்லை." "நிஜமாகவே கனம் பொருந்தியவருடைய மன்னிப்பைக் கோருகிறேன். நீர் விவாகமானவர். நீர் உம்முடைய சொந்தமுள்ள சத்திய சந்தனான ஜென்கின்ஸனுக்கு உமக்கு ஒரு பத்தினியைக் கொண்டுவந்து கொடுப்பதற்காக, நம்முடைய சிநேகத்திற்கு தகுந்த அளவு கைம்மாறு செய்வீரென்று நம்புகிறேன். இந்தச் சபையோர் கொஞ்சநேரம் உங்களுடைய ஆவலை அடக்கிக் கொண்டிருந்தீர்களானால் அவளை நீங்கள் பார்க்கலாம்" என்றான் ஜென்கின்ஸன். இப்படிச் சொல்லிக்கொண்டு அவன் அவனுடைய வழக்கமான சுறுசுறுப்போடு வெளியே போனான். அவனுடைய கருத்தைப்பற்றி நாங்கள் ஒருவிதமான சமயோஜித உத்தேசமும் பண்ணமுடியவில்லை. "ஏ, அவன் போகட்டும், நான் வேறெது செய்திருந்தாலும் இதில் அவனை நான் மறுக்கிறேன். நான் புதிர்களினால் பயப்படுகிற குழந்தையல்ல. எனக்கு வயதாகிவிட்டது" என்றார் ஸ்குயர்.

"அந்த மனிதன் இதனால் என்ன எண்ணியிருக்கிறானென்று நான் ஆச்சரியப்படுகிறேன். ஹீனர்களுடைய

வேடிக்கைகளில் இது ஒன்று என்று நினைக்கிறேன்" என்றார், பாரனெட். "ஒருவேளை ஐயா, அவன் யதார்த்தமாக இருக்கலாம்" என்று நான் பதிலுரைத்தேன். "இந்தச் சீமான் கபடில்லாத பெண்களை கைவசப்படுத்தச் செய்த அநேக சூழ்ச்சிகளைப்பற்றி நாம் கவனிப்போமானால் ஒருவேளை ஏதாவதொருவர் மற்றவர்களைவிட தந்திரமுடையவராய் இவரை ஏமாற்ற முடிந்திருக்கலாம். இவர் வீணாக்கினவர்களின் எண்ணிக்கையை நாம் நினைப்போமானால் எவ்வளவு பெற்றோர்கள் தங்களுடைய குடும்பங்களில் இவர் அபக்யாதியும் கலப்பும் கொண்டு வந்துவிட்டதை கஷ்டத்தோடு நினைத்துக்கொண்டு இருக்கிறார்களோ அவர்களில் யாராவதொருவர் — — — என்ன ஆச்சரியம், இறந்துபோன என்னுடைய பெண்ணைப் பார்க்கிறேனே! அதுதான்—அதுதான். என் உயிரே, என் ஆனந்தமே, என் ஒலிவியா, நீ இறந்துபோய் விட்டாயென்று நினைத்தேனே. ஆனால் இன்னும் உன்னை கையினால் பிடித்துக் கொண்டிருக்கிறேனே. நீ இன்னும் உயிரோடிருந்து என்னைச் சந்தோஷிப்பிப்பாய். நான் என் குழந்தையைக் கொண்டுவருவதைப் பார்த்த மாத்திரத்தினும், என் கையால் அவளைப் பிடித்துக்கொண்டிருந்த போதும், ஆருயிர் காதலர்களின் அரியப் பரவசம் என்னுடையதைவிட அதிகமாயிருந்திருக்காது. அவளுடைய மௌனமே அவளுடைய ஆநந்தத்தை விளக்கிற்று. "என் தங்கமே! என் கிழ வயதில் எனக்கு ஆதாரமாயிருக்க நீ திரும்பிக் கொடுக்கப்பட்டாயா?" என்று கத்தினேன்.

"ஆம், அவள் அப்படியே," என்று ஜென்கின்ஸன் கத்தினான். "அவளை நீங்கள் மிகவும் பாராட்டவேண்டும். ஏனெனில் அவள் உங்களுடைய சொந்தமான கௌரவமுள்ள குழந்தை. இந்த அறையிலுள்ள பெண்களில் எந்த ஸ்திரீயாயிருந்தாலும் சரி, எந்த ஸ்திரீயைப்போலும் இவள் சுத்தமான ஸ்திரீ. ஸ்குயர், உனக்கோவென்றால் நீ அங்கே நிற்கிறது, எவ்வளவு நிர்மானமோ அப்படி இந்தச் சிறிய சீமாட்டி உன்னுடைய சட்ட சம்மதமான விவாகம் செய்யப்பட்ட மனைவி. நான் உண்மையைத் தவிர



வேறொன்றும் சொல்லவில்லை என்பதை நிரூபிக்க இதோ இருக்கிறது லைசென்ஸ். இதன்படி நீங்கள் இருவரும் ஒருவருக்கொருவர் விவாகம் செய்விக்கப்பட்டீர்கள்." இப்படிச் சொல்லிக்கொண்டு ஜென்கின்ஸன் பாரனெட் கையில் லைஸென்ஸைக் கொடுத்தான். அவர் அதை வாசித்துப் பார்த்து ஒவ்வொரு தரப்பிலும் பூரணமாய் சரியாய் இருப்பதாகக் கண்டார். "இப்படி, சீமான்களே" என்று ஜென்கின்ஸன் தொடர்ந்து பேசினான். "நீங்கள் இதையெல்லாம் பார்க்க ஆச்சரியப்படுகிறீர்கள். ஆனால் கொஞ்சம் மொழிகள் இந்தப் புதிரை விளக்கும். பிரதாபமுள்ள ஸ்குயர் இருக்கிறாரே, அவரிடத்தில் எனக்கு மிகுந்த சிநேகமுண்டு. (ஆனால் அது எங்களுக்குள்ள விஷயம்) அவர் தனக்காக சில சில்லறையான சிடுக்குள்ள காரியங்களைச் செய்ய என்னை அடிக்கடி நியமித்திருக்கிறார். இவைகளில் அவர் என்னை ஒரு பொய் லைசென்ஸ் வாங்கிக்கொண்டு வரச்சொன்னார். அப்படியே இந்தச் சீமாட்டியை ஏமாற்ற ஒரு பொய்ப் புரோகிதர். ஆனால் நான் அவருடைய அத்யந்த நண்பனாதலால், நான் என்ன செய்தேன் தெரியுமா? நான் போய் ஒரு நிஜ லைசென்ஸுடன் ஒரு நிஜ புரோகிதரையும் கொண்டுவந்து அவர்களிருவரையும் அந்த லைஸென்ஸ் எவ்வளவு கட்டுப்படுத்துமோ அவ்வளவு தூரம் அவர்களுக்கு விவாகம் செய்துவைத்தேன். ஒருவேளை நான் இதெல்லாம் ஜீவகாருண்யத்தால் செய்ததாக நீங்கள் நினைப்பீர்கள். ஆனால் அப்படியல்ல. நான் சொல்லப்போவது என்னை அவமானப்படுத்தக்கூடியதுதான். ஆனால், நான் ஒப்புக்கொள்ளுகிறேன். என்னுடைய ஒரே எண்ணம் அந்த லைஸென்ஸை நான் வைத்துக்கொள்ளுகிறது. நான் எப்பொழுது அவசியமென்று நினைக்கிறேனோ, அப்பொழுது நான் இதை நிரூபிப்பேனென்று ஸ்குயருக்குத் தெரிவிக்கிறது. ஆகையால் எனக்கு பணம் வேண்டும்போதெல்லாம் அவரைக் கறக்கிறது என் உத்தேசம்" என்றான்.

ஒரு சந்தோஷக் கூச்சல் அப்பொழுது அந்த அறை முழுவதும் நிரப்பியது போல் தோன்றிற்று. எங்களுடைய களிப்பு பொது அறைக்குக்கூட எட்டியது. அங்கே கைதிகளும் சமகோஷம் செய்தார்கள்.

சந்தோஷம் எல்லோருடைய முகத்திலும் ஸ்பஷ்டமாய் நின்றது. ஒலிவியாவின் கன்னங்களும் சந்தோஷத்தினால் சிவந்தன. இப்படி கௌரவமும் ஐசுவரியமும் ஒரே சமயத்தில் திரும்ப அடையப்படுவதாலும், சிநேகிதர்களிடத்தும் முன்போல் சமாசப்படுத்தப் பட்டாலும் அவளடைந்த களிப்பு க்ஷீணத்தை நிறுத்த வல்லமை உடைத்தனவாம். அப்படியே, முன்போலுள்ள ஆரோக்கியத்தையும் சுறு சுறுப்பையும் முன்போல் திரும்பக் கொடுப்பதற்கும் சக்தியுள்ளவை. ஆனால் எல்லோரையும் விட என்னைப்போல் வாஸ்தவமான சந்தோஷத்தை அடைந்தவன் ஒருவனில்லை போலும். என் கரத்தில் அந்த பிரியமாய் நேசித்த குழந்தையைப் பிடித்துக்கொண்டு, நான் என் மனதை இந்த வைபோகங்க ளெல்லாம் தோற்றமாவென்று கேட்டேன். "நீ எப்படி, அவள் இறந்ததாக ஒரு கதையைச் சொல்லி, என் கஷ்டங்களை அதிகரித்தாய்? ஆனால் அது ஒரு பொருட்டல்ல. அவளைத் திரும்பப் பார்த்ததின் சந்தோஷம் அந்த துன்பத்தின் நடுக்கு மேலாகவே இருக்கிறது" என்று ஜென்கின்ஸன் பக்கம் திரும்பிக்கொண்டு அவனைக் கேட்டேன்.

"உம்முடைய கேள்வி சுலபமாய் பதிலுரைக்கப்படுகிறது" என்று ஜென்கின்ஸன் பதிலுரைத்தான். "உம்மை சிறையிலிருந்து விடுவிப்பதற்கு ஒரே ஏறக்குறைய பொருந்தும ஒரு வழி எனக்குத் தோன்றியதென்னவென்றால், ஸ்குயருக்கு வணங்கி இந்த வேறு சிறிய சீமாட்டியுடன் அவர் விவாகத்திற்கு உம்முடைய சம்மதத்தைக் கொடுப்பதே—ஆனால் இதை நீர் உம்முடைய மகள் உயிருடனிருக்கும் பொழுது கொடுக்க முடியாதென்று சபதம் செய்திருக்கிறீர். ஆகையால் காரியம் கைகூட வேறொரு வழியும் இல்லை. அது அவள் இறந்துவிட்டாளென்று உம்மை நம்பும்படி செய்தால்தான் உம் மனைவியையும் இந்த ஏமாற்றுவதில் உள்படச் செய்தேன். எங்களுக்கு இத் தருணம் வரையில் உமக்கு உண்மையைப் புகல சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

இந்த முழுக் கூட்டத்தில் இரண்டு முகங்கள் மட்டும் சந்தோஷப் பூரிப்புடையனவாகத் தோற்றவில்லை. மிஸ்டர்



தார்ன்ஹில்லின் மனச் சமாதானம் அவனை முழுமையும் விட்டுவிட்டது. அவன் அப்பொழுது அபகீர்த்தியும் வறுமையும் உள்ள ஒரு பாதாளம் தன்னை விழுங்கப் போவதைப் பார்த்தான். அதில் விழ நடுக்கமுற்றான். ஆகையால் அவன் தன் சித்தப்பன் காலில் விழுந்தான். ஊடுருவிப் பாயும் கஷ்ட குரலோடு தயை வேண்டினான். ஸர் வில்லியம் அவனை உதைத்துத் தள்ளுவதா யிருந்தார். ஆனால் என்னுடைய வேண்டுகோளின் பேரில் அவனைத் தூக்கினார். கொஞ்ச நேரம் சும்மாவிருந்து, அவர் சொன்னார்: "உன்னுடைய தீய ஒழுக்கங்கள் குற்றங்கள், நன்றியில்லாமை இவைகள் தயைக்குப் பாத்திரமானவை யல்ல. இருந்தாலும் நீ முழுமையும் விடப்பட மாட்டாய். சற்று அளவு காலக்ஷேப நிமித்தம் மாத்திரம் கொடுக்கப்படுமே யன்றி தீய செயல்களுக்காக வல்ல. இந்த வாலிபச் சீமாட்டி, உன் மனைவி வசத்தில் ஒரு காலத்தில் உன்னுடையதா யிருந்த ஐசுவரியத்தில் மூன்றில் ஒன்று ஒப்புவிக்கப்படும். அவளுடைய கண்யத்தினால்தான் இனிமேல் ஏதாவது உன்னுடைய எதிர்பாராத விசேஷச் செலவுகள் நடத்தப்படும்." அவன் தயார் செய்த ஒரு வாசகத்தால் அவ்வளவு கருணைக்காக தன்னுடைய நன்றியைக் காட்ட ஆரம்பித்தான். ஆனால் பாரனெட் அவனை அவனுடைய ஹீன ஒழுக்கத்தை ஏற்கெனவே வெட்ட வெளிச்சமா யிருப்பதை அதிகப்படுத்தாதே யென்று கட்டளையிட்டு நிறுத்திவிட்டார். உடனே அவனை அவ்விடத்திலிருந்து போகும்படி கட்டளை யிட்டார். அவனைத் தன்னிடத்தில் ஏற்கெனவே இருந்த வேலைக்காரர்களில் யாரையாவது ஒருவனை அவர் இஷ்டம்போல் எடுத்துக்கொள்ளச் சொல்லி அவ்வளவுதான் அவனைக் கவனிப்பதற்கு கொடுக்கப்படுமென்று கட்டளை யிட்டார். அவன் போனவுடனே ஸர் வில்லியம் தன்னுடைய புதிய மருமகளிடம் புன்னகையோடும் மிக மரியாதையுடன் சில அடிகள் நடந்து சென்று அவளுக்குச் சந்தோஷத்தை ஆசி கூற விரும்பினார். அவருடைய செய்கை மிஸ் வில்மோட்டினாலும், அவளுடைய தகப்பனாராலும் அனுஷ்டிக்கப்பட்டது. என் மனைவியும் தன் மகளை மிக்க அன்போடு முத்தமிட்டாள். அவளுடைய சொற்பொழிவுப் பிரகாரம்

அவள் இப்பொழுது ஒழுங்கான ஸ்திரீயாக ஆக்கப்பட்டாள். ஸோபியாவும், மோஸஸிடம், வரிசையாய்ப் பின்பற்றினார்கள். எங்கள் உபகாரி ஜென்கின்ஸனும் அந்த மரியாதைக்குப் பாத்திரமாகப்பட கேட்டுக் கொண்டார். எங்களுடைய சந்தோஷம் இனி அதிகரிக்க வழியில்லை போல் தோன்றியது. ஸர் வில்லியம் நன்மை செய்வதே அவருக்கு மிக்கக் களிப்பை அடைவிக்கிறதென்றே! அவர் சூரியனைப்போல் ஒளி மறைவில்லாத வதனத்தோடு சுற்றிப் பார்த்தார். ஸோபியாவைத் தவிர மற்றவர்கள் முகத்திலெல்லாம் சந்தோஷத்தைத் தவிர வேறொன்றும் பார்க்கவில்லை. ஸோபியாவோ நாங்கள் அறிய முடியாத சில காரணங்களால் பூர்ண சந்தோஷத்தை யுடைத்தவளாகக் காணப்படவில்லை. அவர் புன் சிரிப்புடன் சொன்னார்: "இப்பொழுது ஒருவர் இருவரைத் தவிர கூடியிருக்கும் மற்ற எல்லோரும் பூர்ண சந்தோஷத்தோடு இருக்கிறதாகத் தெரிகிறது. எனக்கு நியாயமான ஒரு காரியம் செய்வது பாக்கி இருக்கிறது" என்னை நோக்கிச் சொல்ல ஆரம்பித்தார். "நாமிருவரும் ஜென்கின்ஸனுக்கு அவனால் நற்செய்கைகள் செய்யப்பட்டு அவனுக்கு கடன்பட்டவராயிருக்கிறோம் என்று உமக்குத் தெரிந்த விஷயமல்லவா ஐயா, நாமிருவரும், அவனுக்கு அதற்காக மரியாதை செய்வது நியாயம். மிஸ் ஸோபியா அவனை மிக்கச் சந்தோஷிக்கச் செய்வாளென்று நான் நிச்சயமாய்ச் சொல்லுகிறேன். அவனுக்கு அவளுடைய ஸ்திரீதனமாக ஐநூறு பவுன் கொடுக்கப்படும். இதை வைத்துக்கொண்டு அவர்கள் இருவரும் மிக சுகமாக வாழலாமென்று நான் நம்புகிறேன். இங்கே வா, மிஸ் ஸோபியா. நான் ஏற்பாடு செய்கிற இந்த சம்பந்தத்திற்கு நீ என்ன சொல்லுகிறாய்? அவனை நீ பெற்றுக்கொள்ளுவாயா? "இந்த பயங்கரமான ஏற்பாட்டைக் கண்டு என் பரிதாபமான பெண் தன் தாயாரின் கரங்களில் மூர்ச்சித்து விழுபவள்போல் காணப்பட்டாள். "அவரைப் பெற்றுக் கொள்வதா ஐயா" என்று தீனக்குரலோடு சொன்னாள். இல்லை ஐயா இல்லவே இல்லை. "என்ன?" என்று அவர் கூவினார். "மிஸ்டர் ஜென்கின்ஸனை வேண்டாமா. உங்களுடைய உபகாரி. ஒரு வாலிப ரம்யமான பையன். அத்துடன் ஐநூறு பவுன்



இருக்கிறது. பின்னால் எவ்வளவோ வரக்கூடியவைகள் இருக்கின்றன. "நான் வேண்டிக் கொள்ளுகிறேன். ஐயா. இந்தச் சமாசாரத்தை நீங்கள் நிறுத்திவிடுங்கள். என்னை அவ்வளவு பஞ்சையாகச் செய்ய வேண்டாம்" என்று அவள் பேச முடியாமலே சொன்னாள். "இப்பேர்க்கொத்த பிடிவாதம் எங்கேயாவது தெரிந்திருக்கிறோமா" என்று மறுபடியும் கூவினார். "எந்த மனிதனுக்கு இந்தக் குடும்பம் எண்ணுதற்கரிய நன்றி செலுத்த வேண்டியதோ, அவனையா வேண்டாமென்கிறது? அவன் உன் தமக்கையைக் காப்பாற்றினான். அவனுக்கு ஐநூறு பவுன் உண்டு. என்ன அவனையா வேண்டாம்? "வேண்டாமய்யா, வேண்டவே வேண்டாம்" என்று கோபத்துடன் பதில் சொன்னாள். "அதைக் காட்டிலும் நான் முன் உயிர் துறப்பேன்."

"சமாசாரம் அப்படியிருந்தால், நீ அவனை வேண்டாமென்றால்—நான் உன்னை அடைய வேண்டுமென்று நினைக்கிறேன். இப்படிச் சொல்லிக் கொண்டு அவளை அன்புடன் மார்பில் கட்டி அணைத்துக் கொண்டார். "என்னுடைய மிகவும் அழகான, என்னுடைய மிகவும் புத்திகூர்மையுள்ள பெண்ணே உன்னை ஏமாற்றிவிடுவாரென்று நினைத்தாயா? அல்லது ஸர் வில்லியம் தார்ன்ஹில் தன்னுடைய தன்மைக்காகவே தன்னை நேசித்த காதலியை எப்பொழுதும் பாராட்டாமலிருப்பாரா? நான் சில வருஷங்களாக என்னுடைய உயர்ந்த பதவியை அறியாமல் என்னிடத்தில் ஒரு சாதாரண மதிப்பு வைக்கிற ஒரு பெண்ணைத் தேடிக்கொண்டிருந்தேன். விகார குரூபிணி நாணமில்லாதவர்களிடத்திலுங்கூட தேடி பிரயோஜனமில்லாமல் கடைசியில் இப்பேர்க்கொத்த புத்தி இப்பேர்க்கொத்த தெய்வீக அழகை நான் மனக் கவர்ச்சி செய்வதென்றால் என்னுடைய மகிழ்ச்சி எவ்வளவு அதிகமாக இருக்க வேண்டாம்." பிறகு ஜென்கின்ஸனிடம் திரும்பி "ஐயா, என் முக அமைப்பில் இவளுக்கு ஒரு மோகம் ஏற்பட்டிருக்கிறது. ஆகையால் இந்தச் சிறிய சீமாட்டியை நான் கொடுக்க முடியாது. உனக்கு செய்யக்கூடிய கைம்மாறு என்னவென்றால் அவளுடைய ஸ்திரீதனம் நீ நாளைக்கு

என் காரியஸ்தனை ஐநூறு பவுனுக்காக பார்க்கலாம். இப்படி நாங்களெல்லோரும், எங்களுடைய ஆசியை இன்னொரு முறை இவளுக்காக, கூறினோம். லேடி தார்ன்ஹில்லும் அவள் தமக்கை இதற்குமுன் செய்ததுபோல் எல்லா மரியாதைகளையும் செய்யும்படி ஆயிற்று. இதற்குள் ஸர் வில்லியத்தினுடைய சூத்ரதார்வந்து எங்களைச் சத்திரத்திற்கு அழைத்துப்போக அவருடைய பரிவாரங்களெல்லாம் தயாரா யிருக்கிறதென்றும் சொன்னான். அந்தப் பயங்கரமான துக்க விடுதிகளை விட்டு அகன்றோம். தாராள மனமுடைய பாரனட் கைதிகளுக்கு விநியோகம் செய்யும்படி நாற்பது பவுன் அளித்தார். மிஸ்டர் வில்மோட் அவர் வழி காட்டியதை அனுசரித்து தானும் அதில் பாதி பணம் கொடுத்தார்.

நாங்கள் கிராமவாசிகளின் கோஷத்தால் வரவேற்கப்பட்டோம். அவர்களில் சேர்ந்த என்னுடைய சத்தியசந்தரான இரண்டு மூன்று சிஷ்யர்களைப் பார்த்து கைகுலுக்கினேன். அவர்கள் சத்திரம் வரையிலும் எங்களைப் பின் தொடர்ந்தார்கள். அங்கே ஒரு புஷ்டியான விருந்து அளிக்கப்பட்டது. பொது ஜனங்களுக்கு கதம்பச் சாப்பாடு ஏராளமாக வழங்கப்பட்டது.

உண்டியின் பிறகு, பகலில் சுகம் துக்கம் இவைகள் மாறி மாறி அனுபவிககப்பட்டதில் என்னுடைய உத்ஸாகம் களைத்துப் போய்விட்டபடியால், நான் அந்தக் கூட்டத்திலிருந்து விலகிக்கொள்ள உத்தரவு கேட்டேன். அந்தக் கோஷ்டியை அவர்கள் களிப்பின் மத்தியில் விட்டுவிட்டு நான் தனியாய் வந்தவுடன், சுகம் அப்படியே துக்கங்கள் கொடுக்கும் பகவானுக்கு நன்றியோடு என் மனதைத் திறந்துவிட்டு அர்ப்பணம செய்தேன். பிறகு காலை வரையில் இடறின்றி தூங்கினேன்.

# அத்தியாயம் 32

## கடைசி அங்கம்

மறுநாட் காலையில், நான் விழித்துக்கொண்டவுடன் என் மூத்த குமாரன் என் படுக்கையண்டையில் உட்கார்ந்திருப்பதைக் கண்டேன். அவன் என் பக்ஷத்தில் ஐசுவரியம் இன்னொரு மாறுதல் கொடுத்திருப்பதைச் சொல்லி என் சந்தோஷத்தை அதிகரிக்க, அங்கே வந்திருந்தான். முதல் முதலில், நான் முந்தியநாள், அவன் விஷயமாக ஏற்பாடு செய்திருந்த உடன்படிக்கையினின்று என்னை விடுவித்தான். பிறகு நகரத்தில் நஷ்டமடைந்த என் வியாபாரி ஆண்ட்வர்ப் என்னும் அந்நிய தேசத்தின் ஒரு பட்டிணத்தில் கைது செய்யப்பட்டானென்றும் அவன் கொடுக்கவேண்டிய கடன் தொகையைவிட அங்கே மிகவும் அதிகமான தொகை பெறுமானமுள்ள பொருள்களை வைத்திருந்து அவைகளை சர்க்காரிடம் கொடுத்துவிட்டானென்றும் எனக்கு அறிவித்தான். என் மகனுடைய பெருந்தன்மை இந்த எதிர்பாராத நல்ல பாக்கியத்தைப்போலவே சந்தோஷிக்கச் செய்தது. ஆனால் அவனுடைய ஏற்பாட்டை நான் ஒப்புக்கொள்வது நியாயமாயிருக்குமா வென்ற சந்தேகம் பிறந்தது. இதைப் பற்றி யோசித்துக்கொண்டிருக்கையில், ஸர் வில்லியம் அறையில் புகுந்தார். நான் என் சந்தேகத்தை அவரிடம் தெரிவித்தேன். என் மகன் தன் விவாகத்தினால் மிகவும் சௌகரியமான பொருள் கிடைக்கப் பெற்றதால் அவனுடைய வேண்டுகோளை தடையில்லாமல் ஒப்புக்கொள்ளலாமென்று அவர் சொன்னார். அவர் அங்கே வந்த காரியமென்னவென்றால் அவர் முதல் நாள் இரவே விவாக லைசென்ஸுக்காக அனுப்பியிருக்கிறபடியால் அது எந்நேரமும் பெறக்கூடும். ஆகையால் அவர் அங்கே கூடியிருக்கிறவர்களையெல்லாம் அன்று காலை களிக்கச் செய்ய

தன்னுடைய உத்தேசம். அதற்கு என்னுடைய உதவியைக் கோரினார்.

நாங்கள் இப்படிப் பேசிக்கொண்டிருக்கும்பொழுதே ஒரு காலாள் உள்ளேவந்து, லைசென்ஸுக்காகப் போன மனிதன் திரும்பி வந்துவிட்டானென்று சொன்னான். இதற்குள் நான் வெளிக்கிளம்ப தயார் பண்ணிக்கொண்டுவிட்டபடியால் நான் கீழே இறங்கிப்போய் அங்கிருக்கிறவர்களையெல்லாம் களிப்புடன் இருக்கக் கண்டேன். பொருள் கபடின்மை இவ்விரண்டும் எவ்வளவு களிப்பு அளிக்க முடியுமோ அவ்வளவு களிப்புடனிருந்தார்கள். இருந்தபோதிலும், அவர்கள் இப்பொழுது ஒரு மிகப் பொறுப்பையளிக்கும் தெய்வீக ஸம்ஸ்காரத்திற்கு தயார் பண்ணிக்கொண்டிருப்பதால் அவர்களுடைய சிரிப்பு என்னை முற்றிலும் கோபிக்கச் செய்தது. இந்த அத்யாத்மிகமான தர்மத்தை அனுஷ்டிக்கும் வேளையில், அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டிய ஆழ்ந்த தக்க சாத்வீக பாவனையைப்பற்றி நான் ஞாபகப்படுத்தினேன். அவர்களை சரியான வழிக்குத் திரும்பும்பொருட்டு நானே எழுதின இரண்டு உபன்யாசங்களையும் ஒரு வியாசத்தையும் வாசித்தேன். முன் போலவே, அவர்கள் மிகவும் சொல்கேட்காதவர்களாகவும் கீழ்ப்படியாதவர்களாகவும் அப்படியே இருந்தார்கள்.

கோவிலுக்குப் போகும்பொழுதுகூட எல்லா வினயமும் அவர்களைவிட்டு ஓடிப்போயின. நான் முந்திப் போய்க்கொண்டிருந்தவன் அடிக்கடி கோபத்துடன் திரும்பிப் பார்த்து, வீட்டிற்கு திரும்பலாமென்றுகூட தீர்மானித்தேன். கோவிலில், ஒரு தர்ம சங்கடம் ஏற்பட்டது. அது சீக்கிரம் தீர்வதாய்ப் புலப்படவில்லை. இது என்ன வென்றால் எந்தத் தம்பதிகள் விவாகம் முதலில் செய்து கொள்வதென்பது. என் மகனுடைய வதூ கம்பீரத்துடன் லேடி தார்ன்ஹில் (ஆகப்போகிறவள்) முதன்மை பெற வேண்டியதென்று வற்புறுத்தினாள். ஆனால் இதை அவள் அதே காம்பீர்யத்துடன் மறுத்தாள். இவ்வுலகில் அப்பேர்க்கொத்த அவமதிப்பிற்கு இடம் கொடுக்கமாட்டேனென்று அவள் வாதித்தாள். கொஞ்ச நேரம் இந்த



விவாதம் ஒருவருக்கொருவர் பின் வாங்காதபடி இருவராலேயும் பிடிவாதத்தோடும் ஆனால் நன்னடக்கைக்கு விரோதமின்றி நடைபெற்றது. இன்னேரமெல்லாம் நான் என் சர்விஸ் புஸ்தகத்தைத் திறந்து வைத்துக் கொண்டு தயாராயிருந்தேன். கடைசியில் இந்த விவகாரத்தால் களைப்படைந்து நான் புஸ்தகத்தை மூடிவிட்டுச் சொன்னேன்: "உங்களில் ஒருவரும் விவாகம் செய்து கொள்ள இஷ்டமில்லை போல் நான் உணருகிறேன். ஆகையால் நாம் திரும்பிப் போவது நலமென்று எனக்குத் தோன்றுகிறது. ஏனெனில் இங்கே இன்றைக்கு ஒரு காரியமும் நடைபெறுதென்று உத்தேசிக்கிறேன்." இந்தப் பேச்சு அவர்களை உடனே வழிக்குக் கொண்டு வந்துவிட்டது. பாரனெட்டும் அவர் சீமாட்டியும் முதலில் விவாகம் செய்விக்கப்பட்டார்கள். பிறகு என் மகனும் அவனுடைய அழகுள்ள தர்மபத்தினியும்.

நான் முன்னமே அன்றைக் காலையில் என் சத்தியசந்த பக்கத்தியார் ப்ளாம்பரோலையும் அவர் குடும்பத்தையும் கூட்டிக் கொண்டுவர ஒரு கோச்வண்டி அனுப்ப உத்திரவு கொடுத்திருந்தேன். ஆகையால் நாங்கள் சத்திரத்திற்குப் போனதும் அங்கே இரண்டு ப்ளாம்பரோக்களும் நாங்கள் வந்துகொண்டிருக்கும்பொழுது இறங்கி வருவதைப் பார்த்தோம். மிஸ்டர் ஜென்கின்ஸன் மூத்தவளுக்கு கை கொடுத்தான். என் மகன் மோஸஸ் மற்றவளை இறக்கி அழைத்துக் கொண்டு வந்தான். அவன் அந்தப் பெண்ணிடம் நிஜமான காதல் கொண்டிருப்பதாக நான் அதற்கப்புறம் தெரிந்து கொண்டேன். என்னுடைய சம்மதியும் கொடையும் எப்பொழுது அவன் கேட்கத் தகுதியென்று நினைக்கிறானோ அப்பொழுது அவன் அதைப் பெற்றுக் கொள்ளலாம். நாங்கள் சத்திரத்திற்கு திரும்பினோமோ இல்லையோ என்னுடைய சிஷ்யகோடிகளில் அநேகர் என்னுடைய வெற்றியெல்லாம் அறிந்து எனக்கு நல்வாக்களிக்க வந்தார்கள். ஆனால் அதில் வந்தவர்களில் என்னை விடுவிக்க வந்தவர்களும் இருந்தார்கள்.

அவர்களை நான் கடுமையாகக் கோபித்துக் கொண்டேனல்லவா? இந்தக்கதையை நான் என் மரு

மகன் ஸர் வில்லியத்தினிடம் சொன்னேன். அவர் வெளியே போய் அவர்களை மிக்கக்கடுமையாகக் கண்டித்தார். அவர்கள் அந்தக் கொடிய கண்டனத்தால் மிகவும் மனம் தளர்ந்தவர்களாகக் கண்டு அவர்கள் ஒவ்வொருவருக்கும் அரைகினி தன் சுகத்திற்கு குடிக்கும்படி கொடுத்து அவர்களுடைய தளர்ச்சியடைந்த மனத்தை மறுபடியும் கிளர்ச்சி யடையச் செய்தார்.

இதற்குப் பிறகு மிஸ்டர் தார்ன்ஹில்லின் சமையற்காரனால் தயாரிக்கப்பட்ட ஒரு மிக கௌரவமான உண்டிக்கு அழைக்கப்பட்டோம். அந்தச் சீமானைப் பற்றி இப்பொழுது சொல்வது தகாததா யிருக்காது. அவர் இப்பொழுது ஒரு பந்துவின் வீட்டில் தோழனென்னும் முறையில் வசித்து வருகிறார். மிகவும் நன்றாக ஏற்கப்படுகின்றார். உண்டி வேளையில், பக்கத்து மேஜையில் அபூர்வமாய்த்தான் உட்காருவார். அப்பொழுது சம மேஜையில் இடமில்லாததொன்றே ஒழிய அவர்கள் அவரைப் பிறனாக நினைக்கவில்லை. அவருடைய போதெல்லாம் தன்னுடைய பந்து கொஞ்சம் மனத் தளர்ச்சி யடைந்திருப்பதால் அவரைத் தைரியப்படுத்திக் கொண்டிருப்பதிலும், பிரஞ்சு ஹாரன் என்னும் குழாய் வாத்தியத்தை வாசிக்கக் கற்றுக் கொடுப்பதிலும் ஏறக்குறைய செலவாகின்றன. ஆனாலும், என் மூத்த மகள் அவனை இன்னும் மன வருத்தத்துடன் நினைக்கிறாள். அவள் என்னிடம் இதைச் சொன்னாள். அதை நான் வெகு ரகசியமாய் வைத்திருக்கிறேன். அதாவது அவன் நடத்தையில் சீர்திருத்தம் உண்டானால் அவள் மனது திரும்பும்படி செய்யப்படலாம். முன் சொல்லியதைத் தொடர, ஏனெனில் ஒன்றைச் சொல்லும்பொழுது நான் பழக்கப்படி இப்படி வேறு விஷயங்களைப் பேசுவதில்லை. நாங்கள் சாயங்கால உண்டிக்காக உட்காரும்பொழுது, உட்காருவதில் மரியாதை விஷயங்கள் மறுபடியும கவனிக்கப்பட்டன. விவாதமென்னவென்றால் என் மூத்த பெண் ஏற்கனவே கிருஹிணியாயிருக்கிறபடியால் இரண்டு வாலிப வதுக்களுக்கு மேலாக உட்காருவதென்று இந்த விவாதம் சட்டென என் மகன் ஜார்ஜினால் தீர்க்கப்பட்டது. அவன் எல்லோரும் இஷ்ட



மான இடத்தில் கலந்து உட்காருகிற தென்றும் அவரவர்கள் பக்கத்தில் அவரவர் மனைவிகள் உட்காருவதென்று யோசனை கூறினான். இது என் மனைவியைத் தவிர மற்றவர்களால் மிக ஆதரவுடன் ஏற்றுக் கொள்ளப்பட்டது. என் மனைவி அதில் அதிகத் திருப்தி அடையவில்லை.

அவள் மேஜையில்தானே தலைமை வகித்து எல்லோருக்கும் மாமிசம் கீறிக் கொடுப்பதென்று உத்தேசித்திருந்தாள். ஆனால் இது இருந்தபோதிலும் அப்பொழுது எங்களுடைய மனக் கொந்தளிப்பை விவரிக்கவே முடியாது. எங்களுக்கு முன்னைவிட இப்பொழுது புத்தி கூர்மையான பேச்சு அதிகமிருந்ததென்று சொல்ல முடியாது. ஆனால் முன்னைவிட இப்பொழுது சிரிப்பு இருந்ததென்பதற்குச் சந்தேகமில்லை. இது அச் சமயத்திற்கு போதுமானது. ஒரு தமாஷ் என்னவென்றால் நான் ஞாபகத்தில் விசேஷமாய வைத்திருக்கிறேன். கிழ மிஸ்டர் வில்மோட் மோஸஸின் சுகத்திற்கு குடித்தார். அவனுடைய முகம் வேறொரு பக்கத்தில் திருப்பப்பட்டிருந்தது. என் மகன் பதிலுரைத்தான். "அம்மணி, உமக்கு வந்தனம்." இதன் பேரில் கிழச் சீமான் மற்றவர்களிடம் கண்ணடித்து அவன் தன் காதலியைப் பற்றி நினைத்துக்கொண்டிருக்கிறானென்று சொன்னார். இந்த தமாஷினால் இரண்டு மிஸ் ப்ளாம்ப்ரோக்களும் சிரித்துச் சிரித்து வயிறு கிழிந்து இறப்பார்களென்று நினைத்தேன். உண்டி யானவுடன் என் பழைய வழக்கப்படி மேஜையை எடுக்கப்பட வேண்டுமென்று வேண்டிக்கொண்டேன். நான் என் குடும்பத்தை களிப்பான கணப்புப் பக்கத்தில் மறுபடியும் கூடிப் பார்த்து களிக்க விரும்பினேன்.

என் இரண்டு சிறுவர்களும் என் இரண்டு துடை மேல் உட்கார்ந்தார்கள். மற்றவர்கள் தம்பதி சகிதமாய் உட்கார்ந்தார்கள். எனக்கு இப்புவியில் இப்பொழுது வேண்டக்கூடியது ஒன்றுமில்லை. என்னுடைய கவலைகள் பூராவாக ஒழிந்தன. என்னுடைய சந்தோஷம் சொல்வதற்கு அரிது. என்ன பாக்கி யிருக்கிறதென்றால்

நல் வாழ்வில் என்னுடைய நன்றி கஷ்ட நிலையிலிருந்த முன் வணக்கத்தைக் காட்டிலும் அதிகமாக இருக்க வேண்டியதொன்றே.

முடிவு

111677

Printed by Shakti Press Ltd., (Shanti Press)
Royapettah Madras—14

## சில விளக்கங்கள்

(விகார்) **Vicar:** இங்கிலாந்தில் ஒரு உயர்ந்த கோவில் ப்ரீஸ்டு. அவருக்கு ஒன்று அல்லது பல கோவில் ஆதீனங்கள் உண்டு. ப்ரீஸ்டு என்பவர் ஒரு கோயில் குருக்கள் வேலையும் குடும்ப புரோகித வேலையும் சேர்த்துப் பார்க்கிறவர். முக்கிய பாகங்கள் புரோகித வேலைகளே அதிகமானதால் ப்ரீஸ்டு, பார்சன், சாப்லன் என்று வருமிடங்களில் புரோகிதர் என்று உபயோகிக்கப்பட்டிருக்கிறது.

### 1-ம் அத்தியாயம்

(ஹோலி ஆர்டர்) **Holy Orders:** கிறஸ்தவ கோவிலில் உரிமை பெற புரோகித நிலைக்கு அளிப்பு

(காட் மதர்) **God Mother:** தெய்வத்தாய் (செவிலித் தாய்) கிறிஸ்தவர்களில் ஒரு குழந்தை ஞான ஸ்நாநம் பெறும்பொழுது அதன் மதப் பற்று, நன்னடத்தை விஷயங்களில் கவனிப்பு எடுத்துக்கொள்ள முன் வருபவர். புருஷக் குழந்தைக்கு தெய்வப் பிதா ஏற்படுவார். அவர்களை அபிமான தாய் தந்தையர் என்றும் சொல்லலாம்.

### 2-ம் அத்தியாயம்

(டயோஸிஸ்) **Diocese:** ஒரு பிஷப் ஆதீனத்துள்ள பிரதேசங்கள், பிஷப் என்பவர் அநேக புரோகிதர்களுக்கு மேல் அதிகாரி. ஆசாரிய பீடம் வகிக்கிறவர்.

**Hebe:** ஹீப். கிரேக்கர்கள் புராணங்களில் ரதிக்குப் பெயர்.

(சூட் ஆப் மோர்னிங்) **Suit of mourning:** துக்க உடுப்பு. ஐரோப்பியர்களில் இறந்தவர்களுக்கு துக்கம் காட்டும்பொருட்டு கறுப்பு உடை தரிப்பது வழக்கம். உடை இல்லாவிட்டால் கறுப்புப் பட்டி அணிவார்கள்.

**Preside at Dinner:** விருந்தளிப்பின் பொழுது விருந்தளிப்பவரோ அவரைச் சேர்ந்தவரில் முக்கியமான ஸ்திரீயோ தலைமை வகித்து முன் அணியில் உட்கார்ந்து பதார்த்தங்களை வழங்கச் செய்வது.

**Removal of Table clothes:** சாப்பாடு ஆனதும் ஸ்திரீகள் எழுந்து போய்விடுவார்கள். புருஷர்கள், மது, சுருட்டுக் குடிப்பார்கள். மேஜையை எடுத்துவிட்டால் ஸ்திரீ புருஷர்கள் சேர்ந்து உட்கார்ந்து சம்பாஷிக்கலாமென்பதற்கு அடையாளம்.

## 3-ம் அத்தியாயம்

(இன்) **Inn:** முற்காலங்களில் ஐரோப்பாவில் வழிப் போக்கர்களுக்கு இலவச வசதி யளிக்குமிடம். காலக்கிரமத்தில் வாடகைக்கு அளிக்கப்படும் விடுதிகளுக்கும் அந்தப் பெயரே வழங்கின. அவைகளை இப்பொழுது ஹோட்டல் என்று சொல்லுகிறோம்.

(ஸ்குயர்) **Squire:** சர் பட்டம் வகிக்கும் நைட்களுக்கு முக்கிய உதவி, அப் பதவிக்கு அடுத்த கீழ்ப்பதவி. இதிலிருந்து தான் எஸ்குயர் என்று பெயருக்கு அப்புறம் சேர்ப்பது வழக்கமாயிற்று.

## 4-ம் அத்தியாயம்

(ஸெயின்ட் வாலன்டயின் டே) **Saint Valentine's Day:** செயிண்ட் என்று கிறிஸ்தவ சித்தர்களுக்குச் சொல்வது. இந்த செயிண்டின் திருநாள் வருஷத்தோறும் பிப்ரவரி மாதம் 14-ந் தேதி கொண்டாடப்படும். அந்நாளில் சிறுவர்கள், சிறுமிகளுக்கு காதல் கடிதம் எழுதுவது வழக்கம்.

**Shrove Tide:** ஷ்ரோவ்டைட். இந்தத் திருநாளில் கிறிஸ்தவர்கள் தங்கள் பாபங்களை தங்கள் புரோகிதரிடம் ஒப்புவித்து பரிகாரம் பெறுவார்கள்.

எப்படி இந்தியாபோலுள்ள உஷ்ண தேசங்களில் குளுமை விசேஷமாக கருதப்படுகிறதோ அப்படியே இங்கிலாந்தைப் போலுள்ள குளிர் தேசங்களில் உஷ்ணம் விரும்பப்பட்டு கணப்புகள் வைத்துக் கொள்ளப்படுகின்றன. அல்லது அடுப்பங்கரை பக்கத்தில் கூடுவார்கள்.

(டிரெயின்) **Train:** உயர் வகுப்பு ஸ்திரீகளின் பாவாடையின் பின்புறத்தில் கொஞ்சம் நீளம் கீழே புரளும்படி துணியைத் தொங்கவிட்டு தைக்கப்படுகிறது. அதற்கு டிரெயின் என்று சொல்லுகிறது. அதைப் புரளாமல் தூக்கிக்கொண்டு போக சிறுமிகள் பின் வருவார்கள்.

## 7-ம் அத்தியாயம்

(லான்) **Lawn:** கிறிஸ்தவ பாதிரிகளும் கன்னிமாட ஸ்திரீகளும் வெள்ளைத் துணி அணிந்து கொள்வது வழக்கம்.

## 8-ம் அத்தியாயம்

(டேபில் கவர்) **Table Cover:** ஐரோப்பியர்கள் சாப்பிடும்பொழுது மேஜைமேல் துணியை விரித்து அதன்மேல் வட்டிகளை வைத்துக்கொண்டு சாப்பிடுவார்கள்.

(சாப்லன்) **Chaplain:** பெரிய வீடுகளிலும், அரண்மனைகளிலும் கலாசாலைகளிலும் தொழுவதற்கு பிரத்தியேகமான



சிறு ஆலயமுண்டு. அதன் அத்யக்ஷகருக்கு சாப்லன் என்று சொல்வது. அவர் புரோகித தீக்ஷை பெற்றவராயிருக்கலாம். இல்லாமலும் இருக்கலாம்.

(பால் டான்ஸ்) **Ball Dance:** ஐரோப்பியர்கள் சாயங்காலத்திற்கு அப்புறம் உண்டியின் பிறகு ஸ்திரீ புருஷர்கள் ஜோடி ஜோடியாய் (நாயகன் மனைவியா யிருப்பதில்லை) நடிப்பார்கள்.

## 10-ம் அத்தியாயம்

**Shakespeare:** ஷேக்ஸ்பியர் என்பவர் பெரிய ஆங்கில நாடகக் கவி, இந்தியாவில் காளிதாஸ மஹா கவியைப்போல் அங்கே பிரசித்தியுள்ளவர்.

**Gipsy:** ஜிப்ஸி என்பவர்கள் மத்திய ஐரோப்பாவிலிருந்து துரத்தப்பட்ட புராதன ஜாதியர். ஐரோப்பா முழுவதும் சுற்றிக்கொண்டே ஊர் ஊராய்த் திரிவார்கள். அவர்கள் மாதிரி இருப்பவரை இந்தியாவில் லம்பாடிகள், கம்பளத்தான் என்று சொல்வது.

(ஸன்டே ஸர்விஸ்) **Sunday service:** கிறிஸ்தவர்கள் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் தவறாமல் தொழுவதற்கு அவர்கள் ஆலயங்களுக்குச் செல்வது வழக்கம்.

## 11-ம் அத்தியாயம்

**Cockles:** காக்குல்ஸ் என்பது ஒரு விதமான நத்தை.

**Garters:** கார்டர்ஸ் என்பது பூட்ஸ்களுக்குள் அங்கிமாதிரி போட்டுக்கொள்ளும் ஸாக்ஸ், ஸ்டாகிங்கிஸ் இவைகளைக் கட்டுவதற்குள்ள ரப்பர் நாடா.

**Peeress:** பிரஸ் என்பவள் பியர் என்பவருடைய மனைவி. பியர் என்பவர் பரம்பரை பட்டம் வகிக்கும் பிரபுவுக்கு பொதுப் பெயர். அவருக்கு பாரன், கௌண்ட் முதலிய பிரத்தியேகப் பட்டங்களுண்டு.

## 12-ம் அத்தியாயம்

(ஆல்பபெட்) **Alphabet:** ரொட்டியை அக்ஷரம் விதம் பண்ணுகிறது. தற்காலத்தில் அக்ஷர பிஸ்கிட் பண்ணுகிறார்கள்.

## 14-ம் அத்தியாயம்

(ஸெயின்ட் கிரிகிரி) **Saint Gregory:** ரோமாபுரி போப்புகளில் (கிறிஸ்தவ பிரதமாசிரியர்) ஒருவர். அவர் சித்திகளுடையவராயிருந்ததால் இறந்த பிறகு செயிண்ட் என்று கூப்பிடப்பட்டார்.

## 15-ம் அத்தியாயம்

**Shooting of Horn:** கார்ன் என்பது தானியம், ஹார்ன் என்றால் கொம்பு. கார்ன் என்று சொன்னதை சிலேடையாய்

ஹார்ன் என்று கேட்டதாக பரிகாசம் செய்கிறாள். ஒருவன் பத்தினியை மற்றொருவன் ஸ்வீகரித்தால் அந்த புருஷனுக்கு கக்கோல்டு என்றும் அவனுக்கு கொம்பு முளைத்திருக்கிறதென்றும் சொல்வது.

## 16-ம் அத்தியாயம்

**Amazon:** அமெசான் என்ற ஜாதி கிரேக்கியர் கதைகளில் சொல்லப்படும் ஸ்திரீ வீர ஜாதி. ஆயுதபாணிகளாய் சண்டை செய்வார்கள்.

## 17-ம் அத்தியாயம்

**Drink to Health:** ஐரோப்பியர்களில் சேர்ந்து பானம் செய்யும் பொழுது ஒருவருக்கொருவர் அல்லது விருந்தாளியின் க்ஷேமத்திற்காக பெயரைக் குறித்து எல்லோரும் சேர்ந்து கையில் தூக்கி ஒரே காலத்தில் பானம் செய்வது.

## 18-ம் அத்தியாயம்

(செயிண்ட் பால்ஸ் காதிட்ரல்) **Saint Paul's Cathedral:** லண்டன் நகரில் உள்ள மிகப் பெரிய புராதன ஆலயம். அதன் மேல் சிகரம் நூற்றுக்கணக்கான அடி குறுக்களவு உள்ளது.

**Parliament:** பார்லிமெண்ட் என்பது இங்கிலாந்தில் பொது ஜனங்களின் பிரதிநிதி அரசியல் சபை.

## 19-ம் அத்தியாயம்

**Jesuit:** ஜெஸூட் என்பவர்கள் கிறிஸ்தவ சன்யாசிக் கூட்டம். இக்னேஷியஸ் லயோலா என்ற ஸ்பானிய தேசத்து சித்தரால் ஏற்படுத்தப்பட்டது. இவர்கள் தங்கள் காரியங்களை ரகசியமாக நடத்துவார்கள். ஆகையால் ஜெஸூட் என்ற பதத்திற்கு சூழ்ச்சி உடையவரென்று பெயர் வந்தது.

**Butler:** பட்லர். பெரிய வீடுகளில் சமையல் சாமான்கள், பாத்திரங்கள், மதுபான வகையருக்களின் பொறுப்பாளியை இந்தப் பெயரால் கூப்பிடுகிறது.

## 27-ம் அத்தியாயம்

**Saxon:** சாக்ஸன். முன்னோர் இங்கிலாந்திலுள்ளவர்கள் ஜெர்மன் தேசத்து சாக்ஸனியிலிருந்து வந்ததாக சரித்திரம். அதனால் ஆங்கிலோ சாக்ஸனென்று கூப்பிடுகிறது.

## 30-ம் அத்தியாயம்

(பாரனெட்) **Baronet:** பரம்பரையில் பட்டம் வகித்து ராஜ சபையில் அங்கத்தினர் உரிமையுள்ளவர்களுக்கு பாரென் என்று சொல்லுவது. பாரனெட் என்பவர்கள் பரம்பரையாக நைட் என்றும் பட்டம் வகிக்கலாம். ஆனால் சட்டசபைக்கு அங்கத்தினராக முடியாது.